

THE

FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

ஸ்திரீ சமூகத்தாரை ஒரு மாதாந்தப் பத்திரிகை

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டே
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்திராதிபர் :
ஸகோதரி ரே. தாயாரம்மாள்.

Vol. 3. தொகுதி 3. } பிரமாதீசவரு ஐப்பசிமீ, October 1913. { No. 1. பகுதி 1.

OUR THIRD YEAR

By

The Editor.

"பெண் கல்வியின் மூன்றும் வருஷப்பிறப்பு.

எல்லாம் வல்ல ஈசனருளால் நமது பத்திரிகைக்கு இரண்டாவது ஆண்டு முடிந்து மூன்றுவது ஆண்டு பிறக்கிறது. போன வருஷத்தைப் போலவே இவ்வருஷமும் ஸுபமாகவே செல்ல வேண்டுமென்று பரமாத்மாவை பலகாலமும் ப்ரார்த்திக்கிறோம். நமது பத்திரிகைக்கு உயிரும் உடலுமாக இருந்து ஆதரித்துவரும் போஷகர்களுக்கும், சந்தாதார்களுக்கும், ப்ரதி பலனை எதிர்பாராமல் விஷயதானம் செய்துவரும் ஸுகோதர ஸகோதரிகளுக்கும் நம் மனமார்ந்த கோடி நமஸ்காரம். நமது பத்திரிகாவிருத்தியில் அக்கரை

பெண் கல்வி

நாணுங்கால் கோணும் நடக்குங்காலிடறும்
நானிலத் தோருக்கென்பார்—இப்பிரேயர்
நாவுதவறினால் தானும் தவறுவார்
நஷ்டம் ஆருக்கென்பார். நல்ல (நாவை)
நாவை யடக்குவோனைக் கிறிஸ்தவர்
நற்புத்தி சாலி என்பார் — பைபிள்படி
நமக்குள் இருக்கும் ஆத்மாவைக்கூடக்
காத்துக் கொள்வானென்பார். நல்ல (நாவை)
நாவிற்பிறக்கும் நன்மையும்தீமையும்
நாமறிந்தோ மென்கிறார் - இந்துக்கள்
நாநாதேசத்தார் இப்படிச்சொல்வதை
நாடி நடப்போமே. நல்ல (நாவை
யாகாவாராயினும் நாகாக்கக்காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்காலே — என்று
நல்ல குறள்சொன்ன வள்ளுவருக்குப்பின்
நாம் சொல்வதேன் இனிமேலே. நல்ல (நாவை

மஹாராணி.

சங்கீதமுறை.

(விருத்தம்.)

சுதிலயங் கண்டுநவ ரசமுந் தெரிந்துவளர்
சுரமும்பயின்று நெடுநாட்
டொட்டுநற் குருமுகத் திற்சிக்ஷையாகியவர்
சுகிர்தகருணா விலாசம்
பதிவு பெர மகிமையாற் பாவித்த சாரீர
பாக்யமும் விர்த்தியாகிப்
பார்மெச்சு தீரகன பாடியானாலும்
பரிந்தங்க சேட்டையின்றி
விதிமுறையினமுத மென வினவுபவர் புளகமுற
மிகமனமும் நெகிழ நெகிழ
வேளைக்கிசைந்த யிசை நேமித்த சங்கீத
வித்தையே அருமையென்பார்
மதிமிகும் பாணபத்திரனிடஞ் சீடனென
வந்தபரமன் சிந்தைகூர்
வரை ராஜ குமரிமடிமீது விளையாடல்புரி
மணிகொண்ட வடிவேலனே.

வடிவேலர் சதகம்.

PROGRESS OF THE WORLD.

ப்ரபஞ்சப்போக்கு.

Women Medical Service.

ஸ்த்ரீ வைத்ய சர்விஸ்:—சென்ற செப்டம்பர்மீ-த்து பத்ரிகையின் ப்ரபஞ்சப்போக்கில் 'இந்திய ஸ்த்ரீகளுக்குவைத்யஉதவி' என்ற தலைப்பில் ஸ்த்ரீவைத்ய சர்விஸைப்பற்றி விபரமாய்க் கூறியிருந்தோம். இந்தசர்விஸுக்கு கவர்ன்மெண்டார் ப்ரதி வருஷம் ரூ. 1½-லக்ஷ ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இந்தசர்விஸில் உததியோகங்கள் வகிக்க இங்கலண்டிலிருந்து கவர்ன்மெண்டார் ஸ்த்ரீகளை வரவழைக்கப் போகிறார்களாம். இதைப் பற்றி பம்பாய் வாஸி மிஸ் N. M. ஜோஷி L. M, F. S, M. R. C. S. L. L. M. என்பவர் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்ரிகைக்கு எழுதுகிறார் :—"இப்போது இந்தியாவில் வைத்ய பரீக்ஷையில் தேர்ந்த இந்தியஸ்த்ரீகள் ஜாஸ்தியாக யிருக்கிறார்களாதலால் இந்திய ஸ்த்ரீகளை அலக்ஷ்யம் செய்துவிட்டு இங்கலண்டிலிருந்து வரவழைப்பது அவ்வளவு உசிதமல்ல. ஆங்கில ஸ்த்ரீகளுக்கு இத்தொழிலில் எள்ளளவேனும் இந்தியஸ்த்ரீகள் குறைந்தவர்களல்ல. முக்யமாக இந்திய ஸ்த்ரீகளுக்குவேண்டியது மருததுவ உதவி. சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய மெடிகல் காலேஜ்களில் ஐரோப்பிய போதகர்களிடம் ஐந்து வருஷகாலம் வைத்யம்கற்று பயிற்சிபெற்று வருகிற இந்திய ஸ்த்ரீகள் இங்கலண்டிலிருந்து வரும் ஸ்த்ரீகளைக்காட்டிலும் பதின்மடங்கு ச்ரேஷ்டமானவர்கள். இந்தியஸ்த்ரீகளின் பழக்க வழக்கங்கள் அவர்களுக்கே தெரியுமன்றி, புதிதாக இங்கலண்டிலிருந்து வரும் ஆங்கில ஸ்த்ரீகளுக்கு அவ்வளவாகத் தெரியாது. மேலும் வ்யாதியால் வருந்தும் இந்தியஸ்த்ரீகள் கங்கள் ஸகோதரிகளாயிருக்கிற இந்தியவைத்ய ஸ்த்ரீகளிடம் வ்யாதிகளைப்பற்றின விஷயங்களை ஒளிக்காமல் சொல்லுகிறார்கள். இது என் அனுபவம். நிற்க, இங்கலண்டில் ஆங்கிலஸ்த்ரீகள் ஸ்த்ரீஆஸ்பத்திரிகளில் பொறுப்பேற்ற உத்யோகங்கள் வகிக்கிறார்களா? இது அங்குபோய்விட்டு வந்தவர்களைக் கேட்டால் தெரியும். இங்கலண்டில் ஸ்திரீகள் ஒரு ஆஸ்பத்

ரியிலாவது தக்க உத்தியோகங்கள் வகிக்கிறதில்லை. பொறுப்புப் பெற்ற உத்தியோகங்களெல்லாம் புருஷர்கள் தான் வகிக்கிறார்கள் ஸ்த்ரீகள் எல்லோரும் (அபூர்வமாக இரண்டொருவரைத்தவிர) எல்லா ஆஸ்பத்திரிகளிலும் தாழ்ந்த உத்தியோகங்களேத்தான் வகிக்கிறார்கள். இங்கிலண்டில் ஒருஸாதாரண வைத்யசாலைக்கு புருஷர்களேத்தான வரவழைக்கிறார்கள். தங்கள் ஊரில் வைத்யத்துக்கு நம்பப்படாத ஸ்த்ரீகளே இங்கு வரவழைத்து, ஆயிரக்கணக்கான இந்தியஸ்த்ரீகளே எப்படி அவர்களிடம் வைத்யம் பண்ணிக்கொள்ளுகிறதற்கு ஒப்புவிப்பது? கவர்ன்மெண்டார் ஆங்கில ஸ்த்ரீகளுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்றால் இந்தியஸ்த்ரீகளே அவமதிப்பது ந்யாயமாகுமா? கவர்ன்மெண்டாருக்கு வைத்ய பரீக்ஷையில் தேர்ந்த ஸ்த்ரீகள் வேண்டுமென்றால் ஆங்கில ஸ்த்ரீகளுக்கும் இந்திய ஸ்த்ரீகளுக்கும் ஒருபோட்டிப் பரிக்ஷைவைக்கட்டும். அப்பரீக்ஷையில் தேறினவர்களே நியமிக்கட்டும் இதை விட்டுவிட்டு ஒன்றுமறியாத ஆங்கில ஸ்த்ரீகளே இச்சர்விஸுக்கு இங்கிலண்டிலிருந்து வரவழைப்பது ஏற்காது." நாம் மில் N.M. ஜோஷியின் அபிப்பிராயத்தைமுற்றிலும் தழுவுகிறோம்.

A Cry in the Wilderness.

கேள்வி முறையில்லாக் கூக்குரல்:—ஜூனாகாட்என்பது பம்பாய் ராஜதானியைச் சேர்ந்தது. இது பரோடா பவாநகர் சமஸ்தானங்களுக்குத்தெற்கே கூர்ஜர நாட்டிலிருக்கும் ஒரு சிறு மகம்மதிய ராஜ்யம். இந்த நவாப் 1911 வருஷத்தில் இறந்துபோனார். இப்போது இந்த ராஜ்யத்து நவாப் 13 வயதுள்ள மைனர். இவரை அந்த ராஜ்யத்து இங்க்லீஷ் ரிஸிடெண்ட் தாயிடமிருந்து பிரித்து இங்க்லீஷ் குடும்பங்களில் வளரவிட்டார். தாய்பீகம் சாஹேப் இதற்கு ஆக்ஷேபித்தாள். கேட்பாரில்லை. ரெஸிடெண்ட் மைனர் நவாபை இங்கிலண்டில்படிக்க ஏற்பாடுசெய்து அதற்குப்பயாய் கவர்ன்மெண்டின் சாங்க்ஷனையும் பெற்றுவிட்டார். ரெஸிடெண்ட் மைனர் நவாபை இங்கிலண்டுக்கு அனுப்புவதாக வதந்தி பீகம் சாஹேபுக்குவரவே, உடன் பீகம் சாஹேப் சென்ற மார்ச்சுமாதம் 4 தேதியிலும், 7 தேதியிலும் அடியில் கண்ட இரண்டு தந்திகளே கமது ராஜப்ரதிநிதிக்கு அனுப்பினர்.

"என் துக்கம் தாங்கமுடியாமல் இருக்கிறது என் ஹிருதயம் வெடித்துக்கொண்டிருக்கிறது. நாளையதினம் மைனர் நவாப் ஸாஹேபை இங்கிலண்டுக்கு அழைத்துக்கொண்டுபோகப் போகிறார்கள். நான்செய்து கொண்டிருக்கும் அப்பீல் பைஸலாகும் வரையில் சிறுவனின் பயணத்தை நிறுத்திவைக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமெனக் கோருகிறேன்."

"வாய்விட்டுச் சொல்லுவதற்கு முடியாத அவ்வளவு தூரம் விஸனஸாகரத்தில் நான் ஆழ்ந்திருக்கிறேன். தங்களுடைய ஸன்னிதானத்துக்கு என்னுடைய அப்பீல் பைசலாக வந்திருக்கிறது. என்னுடைய கதறல்களுக்குச் செவிசாய்க்கக்காணோமே! நாளே என்னுடைய புதல்வனுக்குச் செவிசாய்க்கக்காணோமே! நாளே மெய்ல் வண்டியில் மைனர் நவாபான என்புதல்வன் புறப்படப் போகிறான் இம்மாதிரியாய் என்சிறுவனை இங்கிலண்டுக்கு அனுப்புவது கொடூரம். தாங்கள் தயவுசெய்து சிறுவன் அழைத்துக் கொண்டு போகப்படுவதை நிறுத்தும்படி உத்தரவுசெய்ய வேண்டுகிறேன். பாதன்பூர் நவாபின் குடும்பத்தவரின் விருப்பத்திற்கு விரோதமாக அந்த நவாபை இங்கிலண்டிற்கு அனுப்பியதனால் ஏற்பட்டபரிதாபமான நிலைமையைத்தாங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவரும்படி வேண்டுகிறேன். ஈன்றெடுத்த அன்னையை எதிர்பார்க்கும் இளம்ப்ராயமுள்ள சிறுவனுடைய தாயின் மனோநிலையும் துக்கமும் எவ்வித மிருக்கும் யோசியுங்கள். அப்படிப்பட்ட நிலையிலே புதல்வனை அவளிடமிருந்து பிரித்துவிட்டால் எப்படி? நான் டெல்லிக்குப் பறந்தாவது வந்து என்னுடைய கேஸை சன்னிதானத்தின் முன்பாகத் தெரிவித்துக் கொள்ளலாமென்று விரும்புகிறேன்."

பீகம் சாஹேபின் தந்திகளுக்குப்பதில் இல்லை. தான் ஜீவனை பரித்யாகம் செய்துகொள்ளப் போகிறதாக சக்ரவர்த்திக்கு தந்தி யடித்திருக்கிறாள். முடிவு ஒன்றும் தெரியவில்லை. புத்ர வாஞ்சை ஸாமான்யமானதா? காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு. அதைத்தாய் காக்கை எவ்வளவோ அன்புடன்போற்றி வளர்க்கிறதே! ஐச்வர்யமும் பாக்யமுமுள்ள மானிடத்தாயிக்கு புத்ரனிடம் அன்புக்குக்கேட்க வாவேண்டும்? ஐயோ! தாயின் மனம் எப்படியிருக்குமோ! அவ்வாலிபன் படிக்க இந்தியாவில் காலேஜா கிடையாது? ராஜமன்னர்கள் பயிற்சி பெறும் காலேஜ்கள் இந்தூர்

ராஜகோட் முதலிய இடங்களில் இருக்கின்றனவே! அப்படித்தான் அந்த வாலிபருக்கு என்ன வயது.? ஐயோ! கேவலம் 13-வயது! பீகம் சாஹேபுக்கு ஒரே ஒருபிள்ளை. இவ்வாலிபருக்கு வயது வந்த பிறகாவது தாயைவிட்டுப்பிரித்து இங்கிலண்டுக்கு கூட்டிப்போகக் கூடாதா? எவ்வளவுதூரம் இது நியாயம் என்று நாம் சொல்ல மாட்டோம் ப்ரிட்டிஷ் துரைத்தனம் தர்ம ராஜ்யமென்றும் இந்தியாவுக்கு வாய்த்தது பூர்வஜன்ம பூஜாபலன் என்றும் ஜனங்கள் மனதார வாழ்த்துகிறார்கள். மேற்கூறிய விஷயத்தைக் கேட்டாலும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் நடந்ததாகச் சொன்னாலும் நம்புவதற்கிடமில்லாமலிருக்கின்றது. ஆனால் விஷயமென்னவோ உண்மைதான். தனது புத்ராளுடைய க்ஷேமத்தைக் கருதிச் செய்யப்படும் ஏற்பாட்டுக்கு, தாய் பீகம் ஏன் சம்மதியாமலிருக்கிறாளென்பதாவது தாய் சம்ரக்ஷணையிலும் அவளிஷ்டப்படியும் நவாப் வளர்க்கப்படுவதிலிருக்கும் தோஷங்களின்னதென்பதாவது ஒன்றுமே தெரியக் கூடாமலிருக்கிறது. கெருப்பில்லாவிட்டால் புகையாது என்பது மட்டும் நிச்சயம்.

The Seventh United Social Conferenet

ஏழாவது ஐக்யமாகாண ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸ்:— இந்த கான்பரன்ஸ் இம்மாதம் 6 தேதி பைசாபாத்தில் வெகு மும்முரமாய் நடந்தது. ஆசார சீர்திருத்தத்துக்குறிய ஸ்திரீகள் கல்வி, படுதாமுறை, விவாக வயது நிர்ணயம், விதவா விவாகம், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதல், கடல்யாத்திரை முதலிய விஷயங்கள் பேசப்பட்டு தீர்மானிக்கப்பட்டன. அநேக விஷயங்கள் தேசிய பாஷைகளில் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸ்களில் தங்கள் கல்வித்திறமைகளைக் காட்டி அநேக கனவான்கள் பேசுகிறார்கள். மேலும் இம்மாதிரி ஆசார கான்பரன்ஸ்களில் ஸ்திரீகள் வருகிறது கிடையாதுஎன்று அநேக கனவான்கள் வறுத்தமுறுகிறார்கள். ஒரு கான்பரன்ஸுக்கு வரும் புருஷர்கள் தங்கள், தங்கள் பத்னிகளைக் கூட்டிக்கொண்டு வந்தால் எவ்வளவோ கண்மை யுண்டாகும். புருஷர்கள தங்கள், தங்கள் பத்னிகளைக் கூட்டிக்கொண்டு வந்தாலன்றி ஸ்த்ரீகள் தாங்களே கான்பரன்ஸுக்கு வந்து கலப்பது பீகவும் துர்லபம்.

Our Special English Article.

WHAT IS THE EDUCATION THAT OUGHT TO BE GIVEN TO INDIAN WOMEN ?

By

Hon. Mr. T. V. Seshagiri Aiyer Avl, B. A., B. L.

Member, Legislative Council, Madras.

My disinclination to write on the subject is due to the fact that I consider that this question should be decided at a Conference of Indian ladies and gentlemen. However, as you desire that I should give some expression to my views, I shall deal with the subject under two heads:—

(a) Professional Education.

(b) General Education.

As regards (a) the question is what educational facilities should be afforded to those who desire to earn a living. It may perhaps be argued that if they desire to compete with men in serving the state or private employers, they should undergo the same training. I am not convinced this is the right attitude to take on the subject. The avenues of employment open to women will be necessarily limited. Education the Postal service and Medicine will be the chief occupations. I would suggest the establishment of a Ladies' College

where Higher Education in such special subjects could be given. The diploma of the College might specify the special subject in which proficiency has been shown. The examination conducted by the College authorities should be recognised by the University. The scheme may be elaborated ; I shall not do it at present. I want to give simply the bare outline.

(b) The question of general education to our sisters and daughters is more important. They should have religious education. They should have a knowledge of Sanskrit, and undoubtedly a wellgrounded knowledge of the Vernaculars. By the regulations of our University, our boy pupils are given every inducement to ignore the Vernaculars. I hope our mother tongue will be preserved and enriched by our girls. English should be taught, but it should take a secondary place. Hygiene, Painting, Needlework and Music should also find their place in the curriculum of studies. Some of them may be compulsory and others optional. The ideal aimed at should be to enable our ladies to understand all that is best in our religion, to bring home to them lessons connected with the managment of the house and the care of the children, and to make of them pleasant campanions to their husbands, capable of understanding and appreciating their work. I am afraid I cannot go into further details. I hope your initiative may lead to the solution of this problem at a not distant future.

இந்திய ஸ்த்ரீகளுக்கு எந்த விதமான கல்வி கற்றுக் கொடுக்கவேண்டும்? *

சென்னை லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மெம்பர் ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் எழுதியது.

இந்திய ஸ்த்ரீகளும் இந்திய புருஷர்களும் சேர்ந்துகூடும் ஒரு கான்பரன்ஸில் (மகாஜனக்கூட்டம்) இந்த விஷயம் ஆலோசிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டுமென்பது என் அபிப்பிராய மாகையால் இந்த விஷயமாக எழுதப் பின்வாங்குகிறேன். இருந்தாலும், தாங்கள் இந்த விஷயமாக என்னுடைய அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறபடியால் கூடியவரையில் சொல்லுகிறேன். இந்த விஷயத்தை இரண்டு பாகமாகப்பிரித்து விவகரிக்கலாம் :—1. உத்தியோகத்துக்கு அனுகுணமான கல்வி 2. பொதுக்கல்வி

(1) உத்தியோகத்துக்கு அனுகுணமான கல்வி.

உத்தியோகம் செய்து சம்பாதித்து வாழப்பிரிய முள்ள ஸ்த்ரீகள் எந்த விதமான கல்வி கற்கவேண்டும்? புருஷர்கள்போலவே சர்க்கார் உத்யோகம் செய்யவோ, அல்லது கவர்ன்மெண்டல்லாத கம்பனி முதலிய ஸ்தாபனங்களில் உத்தியோகம் செய்யவோ விரும்பும் ஸ்த்ரீகள் புருஷர்களைப்போலவே கல்வியில் தேர்ச்சிபெறவேண்டுமென்று சிலர் வாதிக்கக்கூடும். இவ்விஷயமாய் இப்படி நினைப்பது ஸரியல்ல வென்று எனக்குத் தோற்றுகிறது. ஸ்த்ரீகளுக்கு ஏற்ற உத்யோகங்கள் சிலவே. முக்கியமாய் உபாத்திமை, தபாலாபீஸ் உத்தியோகம், வைத்யம், ஆகிய இவைகள் தான் ஸ்த்ரீகளுக்கு ஏற்ற

* [ஆனரபிள் மிஸ்டர் சேஷகிரி ஐயர் சென்னை லெஜிஸ் லேடிவ் கௌன்ஸிலில் வித்தை ஸம்பந்தமான ஜன ப்ரதிநிதியாயிருப்பதை உத்தேசித்து, அவர் அநுபவஞானம் விசேஷமா யிருக்குமென்று, அவரை மேலே கூறிய ப்ரச்னையைப்பற்றி அபிப்ராயம் தெரிவிக்கவேண்டிக்கொள்ள, அவர் தயவாய் எழுதி உடனே அனுப்பியதற்கு வந்தனம். இந்த விஷயமாக அபிப்ராயங்கள் யாரெழுதியனுப்பினாலும் வந்தனத்துடன் அங்கீரித்து ப்ரசுரிப்போம்.—ப-ர்.]

தொழில்கள். ஆகையால் ஸ்த்ரீகளுக்கு இந்த விஷயங்களில் உயர் தரப்படிப்பைச் சொல்லிக்கொடுக்ககூடிய ஸ்த்ரீ காலேஜ் ஒன்று ஸ்தாபிப்பது நல்லதென்று எனக்குத் தோற்றுகிறது. இந்தக் காலேஜில் படித்துத் தேறிய ஸ்த்ரீகளுக்கு அவர்கள் இன்ன தொழிலில் விசேஷத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களென்று குறித்து அவர்களுக்கு சர்ட்பிகெட்கொடுக்கலாம். காலேஜ் அதிகாரிகள் நடத்தும் பரீக்ஷையை சர்வகலா ஸங்கத்தார்(யுனிவர்ஸிடி) அங்கீகரிக்கவேண்டும். இவ்விதமான காலேஜ்களை ஸ்தாபிக்கும் ஏற்பாட்டை இன்னும் விஸ்தரிக்கலாம். அதைப்பற்றிப் பொதுப்படையான அம்சங்களை மாத்திரம் கூறி நிறுத்துகிறேன்.

(2) பொதுக் கல்வி.

மேற்சொன்ன உத்யோகப்படிப்பை விட நமது ஸகோதரிகளுக்கும், புத்திரிகளுக்கும், பொதுக் கல்வி கற்பிப்பது முக்யமானது. இவர்களுக்குக் கட்டாயமாய் மதஸம்பந்தமான கல்வி போதிக்கவேண்டும். மேலும் ஸம்ஸ்க்ருதம் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது அவச்யம். தேச பாஷைகளிலும் ஆழ்ந்தபடிப்பு இன்றியமையாதது. நமது யுனிவர்ஸிடி சட்டதிட்ட ஏற்பாடுகளால் நமது ஆண் பிள்ளைகள் தேசீயபாஷைகளை அலக்ஷ்யம் செய்ய நேரிடுகிறது. நம்முடைய தாய் பாஷை நம்முடைய பெண்களால் பாதுகாக்கப்பட்டு அபிவ்ருத்தி யாகவேண்டுமென்பதே என் நோக்கம். இங்க்லீஷ் கற்றுக்கொடுக்கவேண்டியது அவசியம் தான். இருந்தாலும் முன் கூறியுள்ளதுபோல இது அவ்வளவு முக்யமில்லை. ஸங்கீதாதாரம், சித்ரம் எழுதல், தையல்வேலை, ஸங்கீதம் இவைகளையும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். ஸமயோசிதமாய் இரண்டொன்றை கட்டாயம்மாய்ச் சொல்லிவைக்கவேண்டும். பாக்கியுள்ளதை சௌகர்யமும் ப்ரியமும் இருந்தால் சொல்லிவைக்கலாம். முக்யமாய் ஸ்த்ரீகள் நம்முடைய மதங்களிலுள்ள முக்கிய அம்சங்களை அறிந்து கொள்ளவும், குடும்ப சம்ரக்ஷணை, குழந்தைகளை வளர்த்தல் ஆகிய இவைகளை நன்றாயறியவும், புருஷர்களுடைய ஸுகதுக்கங்களையும், லாப நஷ்டங்களையும் மறிந்து ஸமயத்துக் கேற்றவிதமாய் அவர்களுக்குத் தகுந்ததுணைவிகளாய் இருக்கப்பழக்கவும் செய்வதே இப்படிப்பின் லக்ஷியமாயிருக்கவேண்டும்.

இன்னும் விஸ்தாரமாய் இப்போது சொல்வதற்கில்லை. தாங்கள் முன்னின்று உழைப்பதால் கூடிய சீக்ரத்தில் இந்த விஷயத்தைப்பற்றி ஒரு வித தீர்மானத்துக்கு நாம் வரக்கூடுமென்று நான் நம்புகிறேன்.

(மொழிபெயர்ப்பு).

WOMEN AND INDUSTRY.

By

The Editor.

ஸ்த்ரீகளும் கைத்தொழில்களும்.

உலகத்தில் எல்லா பாகங்களிலுமுள்ள ஸ்த்ரீகள் பயிர்த்தொழில், நெசவுத்தொழில், மருத்துவத்தொழில ஆகிய மூன்று விதமான தொழில்களைமட்டுமே அநேக காலமாக செய்துவருகிறார்கள் புருஷர்கள் செய்யும் பற்பலவிதமான கைத்தொழில்களை ஸ்த்ரீகள் புருஷர்களுக்குச் சமமாய்செய்யமுடியுமென்று ஸமார்நூறு வருஷங்களுக்குமுன் யாராவதுசொன்னால் ஒருவரும் நம்பமாட்டார்கள். இதற்குக்காரணத்தை யோசிக்கும்போது ஸ்த்ரீகள் மேற்கூறிய தொழில்களை தங்களுக்குத் தகுந்ததென்றும் கௌரவமானதென்றும் எண்ணியிருந்தார்கள். மேலும் வேறு தொழில்களில் ப்ரவர்த்திப்பது தங்கள் சக்திக்கும் புத்திக்கும் எட்டாதென்றும்கூட எண்ணியிருந்தார்கள். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் நவீனநாகரீகம் முதிரவும் கல்வி அபிவ்ருத்தியாகவும் ஸ்த்ரீகள் ப்ரவர்த்திக்காத தொழில்களே வெகு சிலவாயிருக்கின்றன. ஸ்த்ரீகள் புருஷர்களோடு தொழில்களை ஸுலபமாய் செய்யும் ஸாமர்த்தியத்திலும், யந்த்ரங்களைக்கண்டு பிடிப்பதிலும் யுக்தியான முறைகளை அநுசரிப்பதிலும் புருஷர்களுக்கு எவ்விதத்திலும் தாழ்மைப்பட்டவர்கள் அல்லவென்று மேன்மேலும் ரூபிக்கப் பலகாரியங்களைச்செய்து வருகிறார்கள். தற்காலத்தில் கைத்தொழில் முயற்சிகளில் ஸ்த்ரீகள் முற்பட்டு எண்ணிக்கையில் அதிகமாகி வருகிறார்களென்பது பலதேசஸென்ஸஸ் ரிபோர்ட்டுகளால் தெரியவருகிறது. 1841 வருஷத்தில் லிருந்த கைத்தொழிலாளிகளைவிட 1891 வருஷத்தில், அதாவது 50 வருஷகாலத்தில் புரு

ஷர்களில் நூற்றுக்கு 53 பேர் விகிதமாகவும் ஸ்த்ரீகளில் நூற்றுக்கு 221 பேர் விகிதமாகவும் இங்கிலண்ட் தேசத்தில்மட்டும் அதிகமாக இருந்தார்களென்று தெரிகிறது.

இப்படி ஸ்த்ரீகள் கைத்தொழில்களில் அதிகமாய்க் கொண்டு வருவது இங்கிலண்டில் மட்டுமல்ல. உலகத்திலுள்ள எந்த தேசத்திலுமிப்படியே. 1911வது ஸென்ஸஸ் ரிபோர்ட்டிப்படி இந்தியாவில் நெசவுத் தொழிலில்மட்டும் வேலைசெய்த புருஷர்கள் 1000. ஸ்த்ரீகளோ 5639. இந்தியாவில் ஸ்த்ரீகள் இன்னுமதிகமாக கைத்தொழில்களில் முற்படாமைக்குக் காரணங்களாவன :—

(1) ஸ்த்ரீகளுக்குக் கல்வியின்மை.

(2) ஸ்த்ரீகளுக்குள்ள ஸ்வபாவ துர்பலம்.

(3) சில ஆசாரமுறைகளும் ஜனசமூகத்தப்பு அபிப்பிராயங்களும். அதாவது ஸ்த்ரீகள் புருஷர்களோடு பேக்டரிகளிலும் மில்லுகளிலும் வேலை செய்வதிலிருக்கும் ஆக்ஷேபணைகள்.

(4) ஸ்த்ரீகள் கைத்தொழில்களில் ப்ரவேசிப்பது ஜனசமூக க்ஷேமத்துக்கு ஆஸ்பதமாயிருக்குமென்ற எண்ணம்.

(5) வ்யாபாரச் சரக்குகளின் மார்க்கெட்விலைகளை ஸ்த்ரீகள் அறியாமலிருப்பது.

(6) ஸ்த்ரீகள் தங்களுக்கு ஏற்றதும் லாபம் வரக்கூடியதுமான தொழில்களை தெரிந்தெடுக்கத் தெரியாமலிருப்பது.

(7) தேகதுர்பலத்தினால் ஊர்விட்டு ஊர்போய் தொழில்கள் செய்யமனமின்மை.

(8) தேர்ந்த ஸ்த்ரீ தொழிலாளிகள் ஜீவனத்துக்கு வேண்டியபணம் சம்பாதிக்கத் தகுதிப்பட்டவுடன் போட்டிபோட்டு மேலும் மேலும் சம்பாதிக்க முயலாமலிருத்தல்.

(9) ஸ்த்ரீ தொழிலாளிகளுள் ஐக்கிய மின்மை.

(10) (வரையரை)ஒழுங்குமணக்குமில்லாமல்வேலைசெய்தல்.

இத்தியாதி காரணங்கள் கைத்தொழில்களின் அதிக அபிவ்ருத்திக்குத் தடையாயிருந்தபோதிலும் காலக்ரமேண இந்திய ஸ்த்ரீகள் ப்ராபல்யத்தை யடைவார்களென்று எதிர்பார்க்கக் காரணமிருக்கிறது. நமதுதேசத்து வறுமையும் ஸ்த்ரீகளின் முற்போக்குக்கு ஒருவிதத்தில் காரணமாயிருக்கிறது.

OFFICE OF TH... MAD...

குடும்பங்களில் இதுபர்யந்தம் புருஷர்கள் சம்பாத்யத்திலேயே திருப்திகொண்டு ஸ்த்ரீகள் யாதொரு சம்பாதியமுமில்லாமல் ஸுகஜீவியாயிருப்பது இனிமேல் அசாத்தியமென்ற உணர்ச்சி அவர்களுக்குள் பலப்பட்டுவருகிறது. குடும்பசம்ரக்ஷணை கஷ்டமின்றி நடப்பதற்கு ஸ்த்ரீகளும் கௌரவமான தொழில் ஏதாவது ஒன்றுசெய்து குடும்பச்செலவை ஒருவிதமாய் லகுப்படுத்துவது அவச்யமாக விருக்கிறது. இப்போது ஸ்த்ரீகள் படிக்கவும், படிப்பதால் அறிவு விசாலிக்கவும், அதனால் உலகவிவகார ஞானம் அதிகப்பட, தங்கள் சம்பாதயம் கௌரவமாயிருக்கவேண்டுமே யொழிய, தாங்கள் சம்பாதிப்பதே கூடாதென்ற தப்பான அபிப்பிராயம் மாறிவருகிறது. இதனாலும் ஸ்த்ரீவித்யை அதிகமாகிப் பரவிவருகிறது என்று நினைக்கவேண்டும். இந்திய ஸ்த்ரீகள் தங்களைப்பற்றி புருஷர்கள் கொண்டிருக்கும் தப்பு அபிப்ராயங்களை களைபிடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். நம்தேசத்திலும் அநேகம்பேர் இல்லாவிட்டாலும் சிலராவது பற்பலவிதமான கௌரவமான தொழில்களில் இருந்து வருகிறார்கள். இன்னும் ஒரு தலைமுறைக்குள்ளாகவே ஸ்த்ரீபுருஷ சமத்துவம் பூர்வம்போல் மற்ற எந்த தேசங்களைக்காட்டிலும் இந்தியாவில் உண்டாகுமென்று எதிர் பார்க்கலாம். அடுத்த பத்திரிகையில், கைத்தொழில்களைப் பற்றியும் அத்தொழில் அபிவ்ருத்தியால் ஜனசமூகத்துக்கு விளையக்கூடிய க்ஷேமலாபங்களைப்பற்றியும் ஆராய்வோம்.

பத்ராதிபர்.

ஜனனமெடுத்தால் மரணம் என்பது நிச்சயம். பயங்காளிகளுக்கும் வீரர்களுக்குமப்படியே. ஆனால் உத்தமவீரர்கள் மாத்திரம் ஸுகமாகவீர ஸ்வர்க்கத்தை யடைவார்கள் :—டைஞ்ஷியஸ்.

* * *

வீண்கர்வம் பால்யர்களிடத்திலும் பணக்காரர்களிடத்திலுமிருந்தால் மிகவும் தக்கிக்கத்தக்கது. ஏழைகளிடத்திலும் விருத்தாப்பியர்களிடத்திலுமிருந்தால் வெறுக்கத்தக்கது :—ஹோமர்.

* * *

ஜாஸ்தி சினேகிதர்கள் ஒருவனுக்கு இருந்தால் அவன் கடன் வாங்கலாம். கடன் வாங்கிவந்தால் கூடிய சீக்கிரம் க்ஷயம் கெட்டுப்போகவும் அவனுடைய சினேகிதர்கள் குறைத்துவிடுவார்கள்.

MY DAILY ROUTINE

BY

A Brahmin Lady.

எனது தின க்ருத்ய க்ரமம்.

காலை 5 மணி.—துயிலெழுந்து காலைக்கடனை முடித்தல். பல் தூலக்குதல். வீட்டுவாசலைப் பெருக்கி குப்பைதள்ளி சாணத்தால் மெழுகுதல். கோலம் போடுதல்.

காலை 6 மணி.—சமையலான பத்துப் பாத்ரங்களையும் வேறு 2 பாத்ரங்களையும் விளக்கித் தூலக்குதல். சமையலடுப்பை சாணத்தால் மெழுகிவிட்டு அந்த அறையிலுள்ள குப்பைகளைப் பெருக்கிவிட்டு தூலக்கின பாத்ரங்களை அவைகளுக்கு ஏற்பட்டுள்ள இடங்களில் கொண்டுபோய் வைத்தல். தினச்செலவிற்கு வேண்டிய ஜலத்தைபாத்ரங்களில் நிரப்புதல். குழந்தைகள் ஆறுமணிக்குமேல் தூங்கிக்கொண்டிருந்தால் அவர்களை எழுப்புதல்.

காலை 7 மணி.—பால்காரன்வந்து மாடுகறப்பதற்குள் காப்பி டிகாக்ஷன்போட்டு தோசையோ உப்புமாவோ செய்து தயார் படுத்தல். பால் வந்ததும் அதில் கொஞ்சமெடுத்துக் காய்ச்சி காப்பி டிகாக்ஷனோடு கலந்து என் கணவருக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல். அவர் சாப்பிடும்பொழுது பரிவாய்க்கொடுத்து சந்தோஷமாய்ப் பேசுதல். சமையலென்ன செய்யவேண்டுமென்பதை அவரோடு கலந்து தீர்மானித்தல். பள்ளிக்கூடம் போக இருக்கும் ஆண் பெண்பிள்ளைகளுக்குத் தலையைவாரிப் பின்னுதல்.

8 மணி.—பிள்ளைகள் வீண்காலம் போக்காதபடி. அவர்களை ஸ்கூல் பாடங்களை படிக்கச்செய்தல். காலை 8½ மணிக்கு அவர்களை அழுக்குப்போக குளிக்கச்செய்து பழையதைப்போட்டுச் பாடசாலைகளுக்கு அனுப்புதல்.

9 மணிமுதல் 11 மணிவரை—சமையலையும் பிள்ளைகள் துணியையும் துவைத்துக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டு ஜலமெடுத்துக்கொண்டு வருதல். பெண்பிள்ளையால் மூட்டப்பட்டு எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் உலைநீர் வைத்து பருப்பு வேகப்போடு

தல். சரத்[illegible]களைக் கொடிகளில் உலர்த்துதல். உலர்ந்துள்ள சமையலைக் கூடைக்கொண்டு அடுப்பங்கரைக்குச் சென்று காய் கறிகளை நறுக்குதல். ஜபதபங்களைச் செய்தல். பாராயணம் செய்தல். பிறகு சமையல்மீது கண்ணையிருந்து அரிசியைக்களைந்து போட்டு, பதினாறாத்து நன்றாய் பக்குவமானபின் கஞ்சி வடித்து நிமிர்த்தல். பதார்த்தங்களைப் பக்குவமாகச் செய்தல். என் கணவருக்கு ஸ்நானத்துக்குத் தயார்செய்தல் சந்தனம் அறைத்து விபூதி பாத்ரம், உட்காரப் பலகை முதலியவைகளைப்போட்டு தயாராகவைத்தல். இலைகளைப்போட்டு ஜலம்தெளித்து காத்திருத்தல். குழந்தைகளிடம் அவருக்கு வேண்டியதை பரிமாறி திருப்தி செய்தல். போஜனமானதும் கை அலம்பிக்கொள்ள ஜலம் மொண்டுவைத்திருத்தல். மத்தியானத்துக்கு மூபன் கட்டிக் கொடுத்தல். அவர் ஆபீஸ் போகிறவரை காத்திருந்து அவர் ஆபீஸுக்குக்கொண்டு போகவேண்டியவைகளை மறக்காமல் எடுத்துக் கொடுத்தல். அவர் ஆபீஸுக்குப் போனபிறகு நான் சாப்பிட்டு எழுந்திருக்கும்பொழுது ஸரியாக 11 மணி அடிக்கும். பிறகு சாப்பிட்ட இடங்களை சுத்தம் செய்தல்.

11 மணி முதல் 2-மணிவரை.—சமையல் வகைகளில் மீதியுள்ளவைகளை எடுத்துச் சிறியபாத்ரங்களில்வைத்துவிட்டு பெரிய பாத்ரங்களைத்தேய்த்தல். கைகால்களை ஸுத்தமாய்அலம்பிக்கொள்ளுதல். பிறகு வீட்டுக்கணக்குகளைப் பிழையில்லாமல் எழுதுதல். புடவையாவது ரவிக்கையாவது குழந்தைகளின் துணியாவது தைத்தல். ராமாயணம், மஹாபாரதம், பாகவதம் இழுத்திருந்தால் முதலிய க்ரந்தங்களையாவது பத்திரிகைகளையாவது படித்தல். புஸ்தகங்களைப் படித்துமுடிக்கவும் பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகள்வரவும் ஸரியாயிருக்கும். வந்தகுழந்தைகளுக்கு ஆதரவுடன் அன்னமளித்தும் மறுபடியும் அவர்களை பள்ளிக்கூடம் அனுப்புதல்.

2 மணிமுதல் 4½-மணிவரை.—சாப்பாட்டுக் கவச்யமான மாவரைத்தல், பயிரொடைத்தல் முதலிய கார்யங்களை வீட்டு வேலைக்காரியைச் செய்ய ஏவுதல். சமையல் ஸாமான்களை வெய்யிலில் உலர்த்துதல். எனது சிநேகிதிகளிடம் பத்திரிகைகளில் படித்தவிஷயங்களைச் சொல்லுதல். நானும் எங்கள் சிநேகிதிகளும் போட்டிபோட்டு பூப்போடுதல். சித்திரமெழுதல். மணி 4½ அடிக்கவும் குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிடும்.

4½ மணிமுதல் 6-மணிவரை.—அவர்களை ஸந்தோஷமாய்க்கூட்டிக்கொண்டு கொல்லைத் தோட்டங்களுக்குப்போய் செடி மரங்களுக்கு ஜலம் பாய்ச்சுதல். குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருத்தல். புஷ்பங்களைப்பரித்து படங்களுக்கு மாலை தொடுத்து வைத்துக்கொள்ளுதல். இருட்டுவதற்கு முன் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு கைகால்களை ஸுத்திசெய்து வீட்டுக்கு வந்து தீபம் ஏற்றி படங்களுக்கு மாலைபோட்டு நாலும் சூட்டிக்கொண்டு குழந்தைகளுக்கும் சூட்டுதல். ஸரஸ்வதி ஸ்தோத்ரம் தேவீஸ்தோத்ரம், முதலியவைகளைப் பாடுதல். குழந்தைகளையும் பாடச்சொல்லுதல். குழந்தைகளுக்கு விளக்கு ஏற்றிக்கொடுத்து பாடங்களைப் படிக்கச்செய்தல்.

6 மணி முதல் 10 மணிவரை.—ராப்போஜனத்துக்குத் தயார்செய்தல். கணவர் ஆபீஸிலிருந்துவந்ததும் அவருக்கு கைகால் அலம்ப ஜலம்கொடுத்து ஜபதபங்களுக்கு சிச்ரூஷை செய்தல். முடிந்தபிறகு குழந்தைகளுக்கும் கணவருக்கும் சாப்பாடுசெய்வித்தல். பாத்ரங்களை எல்லாம் ஒழிந்து, எலிக்கிரையாகாதபடி பதார்த்தங்களை மூடிப் பதனப்படுத்தி சமையலறையைச் சாத்திக்கொண்டு தோட்டப்புறத்துள்ள கதவுகளை எல்லாம் தாளிட்டுவருதல். குழந்தைகளுக்கெல்லாம் படுக்கை முதலியவைகளை விரித்து அவரவர்கள் ராக்காலத்தை ஸரியாய்க்கழிக்கஏற்பாடுசெய்தல். என்கணவருக்குத் தாம்பூலாதிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும்பொழுது அவர் படிக்கும் இங்க்லீஷ் சமாசாரப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை சொல்லக்கேட்டல். பகலில் படித்தவைகளில் எனக்கு ஸந்தேகமுள்ளவைகளை அவரிடம் கேட்டு ஸந்தேகநிவர்த்தி செய்துகொள்ளுதல். க்ரகவிஷயங்கள், குடும்பநிர்வாகம், கல்யாணம், பண்டிகை பருவம் முதலிய விஷயங்களை அவரோடுகலந்து யோசித்தல்.

இரவு 10-மணிக்கு.—படுக்கையை எடுத்து உதரி நன்றாகவிரித்து ஜன்னல் கதவுகளைத் திறந்துவைத்து காற்றுவரவும் போகவும் சௌகர்யமாயிருக்கும்படிச் செய்தல். குழந்தைகள் எல்லாரும் படுத்துக்கொண்டார்களா என்று பார்த்து அவர்கள் நெற்றியில் விபூதியை இட்டு நாலுமிட்டுக்கொள்ளுதல். வாயற் கதவுகளை பதரமாய்த் தாளிட்டுப் படுத்துக்கொள்தல். கவலை யாதொன்றுமின்றிவாழ்க்கை ஸுகமாய்க்கழிய அனுக்ரகம் செய்யும்படி இஷ்டதேவதையை ப்ரார்த்தித்து சயனித்தல்.

ஒரு ப்ராமணி.

A MOTHER'S DUTY TOWARDS HER CHILDREN.

By

K. Minakshi Ammal.

தாய் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமை.

ஒரு தாய் தன்குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய முக்கிய கடமை யென்ன? ஆணாயிருக்கட்டும், பெண்ணாயிருக்கட்டும். அவள் தன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய தென்ன? குழந்தைகள் வாழ்க்கை யென்னும் சமுத்திரத்தில் மரக்கலமேறி கஷ்ட ஸுகமிரண்டையும்ஸமமாக அனுபவித்துத்தாங்கள் பிறந்த தேசத்துக்கு அபாத்திரர்களாகாமல் செய்யவேண்டியதே தாயின் முக்கிய கடமையாகும். அதையே தான் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். குழந்தையின் வாழ்க்கையில் கஷ்டங்கள் வந்தேதீரும். உதாரணமாக ஒரு குழந்தை அற்ப நோயினால் வருந்துகிறதாக வைத்துக்கொள்ளுவோம். தாய் அக்குழந்தையை தைரியப்படுத்தி அந்நோயின் வலி தெரியாமல் நல்ல வீரக்கதைகளைச் சொல்லி அதை முற்றிலும் மறக்கடிக்கும்படி செய்யவேண்டும். தாய் அவ்வற்ப வலியைப் பெரிதாகப்பாவித்து பக்கத்திலுட்கார்ந்து அழுது ஆரவாரம் செய்யக்கூடாது. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பது போலவும், ஐந்தில் பழகினது ஐம்பதிலும் வரும் என்பது போலவும் குழந்தைகளைப் பால பருவத்தில் மனோதிடம், உத்தம வீரம், உண்மையையே பேசுதல், எடுத்த காரியத்தை முடிக்கும் திறமை, பொது நலம் முதலிய அருமையான குணங்களில் பழக்கவேண்டும். தாய் ஒரு குழந்தைக்குப் பால பருவத்தில் பழக்க வேண்டிய குணங்கள் அனேகம். இக்குணங்களில் பழக்கப்பட்ட குழந்தை வயதான பிறகு எக்காரியத்தை எடுத்தாலும் செவ்வையாய் முடித்தேதீரும். இக் குணங்களெல்லாம் மன அடக்கத் (self-control) துக்கு மிகவும் சாதனமாயிருக்கும். நெப்போலியன், சிவாஜிபோன்ற வீரர்கள் இக் குணமாகிற பாலில் வளர்ந்தவர்கள். இவ்வீரர்களின் தாய்மார்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்று நினைக்கிறீர்கள்? இத்தாய்மார்களால் அக்குழந்தைகள் நற்பழக்கத்தில் பழக்கப்படாவிட்டால் நாம் இவ்வீரர்களைக் கொண்டாடுதல் எப்படி? நிற்க, ஒரு பிள்ளையை புத்திசாலி என்கிறோம். ஒரு பிள்ளை

அசடு என்கிறோம். ஏன்? பாருங்கள். தாய் அப்பிள்ளையை புத்திசாலித் தனத்தில் பழக்கா விட்டால் எப்படி புத்திசாலி ஆவான்? அப்பிள்ளைப் புத்திசாலியானதற்குத் தாயார்தான் காரணம். ஒரு பிள்ளை அசடு வழிகிறதற்குத் தாய் தான் முக்கிய காரணம். அசட்டுப்பிள்ளைகளை ஆயிரம் பெற்று வளர்ப்பதிலும் சமத்தான ஒரு பிள்ளையைப்பெற்று சாகக்கொடுப்பது நலம் என்பது ஆன்றோர் மொழி. தாய் மார்களே! வேறு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

தற்காலம் நமது இந்துக் குடும்பங்களில் பெண்கள் புக்ககம் போகிறார்கள். ஒரு பெண் நல்லவள், அடக்கமுடையவள் பொறுமைசாலி, புத்திசாலி, என்று நாலு விதமாக மாமி மாமனார்களாலும் சுற்றத்தார்களாலும் போற்றப்படுகிறாள். இதையும் நாம் கேட்கிறோம். ஒரு பெண் புக்ககம் போய் சில மாதங்களுக்குள் கெட்டவள், வாயாடி, அதிகப்ரஸங்கி என்று தூற்றப்படுகிறாள். மாமியார் ஒன்று சொன்னால் பத்தாக எதிர்த்துச் சொல்கிறது. சமையல் சரியாய் பண்ணத் தெரியாது. அகமுடையானிடம் அடக்கம் கிடையாது. மரியாதைகிடையாது. விதரணை தெரிகிறதில்லை. ஏழை எளியவர்களிடத்தில் அன்பு விச்வாசம் கிடையாது. வாயாடியாயிருக்கிறது. இப்மாதிரி குணமுள்ள பெண்களையும் நம் அனுபவத்தில் காண்கிறோம். இதற்கும் காரணத்தை யோசியுங்கள்.

இதற்கு யார் முக்கியகாரணம் என்கிறீர்கள்? பெண்களா? தாய்மார்களா! ஒரு பிள்ளை நல்லதாகிறதற்கும், கெட்டதாகிறதற்கும் தாய்தான் காரணம். 'தாயைப்போல பிள்ளை நூலைப் போல சேலை' ஆகையால் குழந்தைகளுக்கு பால பருவத்தில் ஆபாசமான கட்டுக்கதைகளையும், பயத்தை விளைவிக்கக் கூடிய கதைகளையும் சொல்லிவைக்காமல் நமது தேச சரித்திரத்திலுள்ள மகாவீரர்களின் சரித்திரங்களையும், மகாத்மாக்களைப்பற்றியும் சொல்லிவைக்கவேண்டும். கஷ்ட சுகம் என்கிறது மானிட ஜன்மத்துக்கு சகஜமாகையால் அலைகள் கோரும்பொழுது எற்றத் தாழ்வு இல்லாமல் சமமாக அனுபவித்தே தீரவேண்டும். சில பிள்ளைகள் கொஞ்சம் காயம் பட்டுவிட்டால், ஐயோ! அம்மா! அப்பா! என்று கதறி என்னால் பொறுக்கமுடியாது என்கிற சாக சம்செய்கிறார்கள். இதற்குத் தாய்மார்கள் இடங்கொடுக்கக்

கூடாது. இந்த ஸமயத்தில் தாயானவள் பிள்ளைகளுடைய மனதை வேடிக்கையாக ஏதாவது சொல்லி நகைக்கவைத்து வேறெக்காரியத்திலாவது திருப்பிவிட வேண்டும். மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். மனமானது ஏதாவதொரு கார்யத்தை நாடிவிட்டால் வலியொன்றும் தெரியாது. ப்ரமாதமான கஷ்டம் வரும் காலத்தில் கூடதாயானவள் குழந்தைகளுக்கு அதைர்யத்தை புண்டாக்கும்படி அடித்துக்கொள்ளவும் அழவும் கூடாது. அடக்கமாய் பொறுமையாய் மேல் நடக்கவேண்டிய கார்யங்களை யோசிக்கவேண்டும். குழந்தைகளுக்கு ஜ்வரமாவது வேறு ஏதாவது தேக அசௌகரியமாவது உண்டானால் சிகித்ஸை செய்து குணப்படுத்துவதை யோசித்துச் செய்யவேண்டும். சில தாய்மார்கள் அழுது புரண்டு தம்மை வருத்திக்கொள்வது மல்லாமல் குழந்தைகள் மனதிலும் அனுவச்யமான பீதியை புண்டாக்கி விடுகிறார்கள். பிள்ளை கஷ்டப்படுவதற்கும் சுகப்படுவதற்கும் மூல காரணம் தாய். தாய் தன் கடமையைச் சரிவரச்செய்ய வேண்டும். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு அப்பருவத்திலேயே நற்குணம் என்கிற பாலை ஊட்டவேண்டும். அஜாக்ரதையினால் செய்யாமலிருந்து விட்டு குழந்தைகள் வயதான பிறகு ஏதாவது கஷ்டத்தை அனுபவிக்கும்போது தாங்களும் வருந்துவது யாருக்கு சுகம்?

கா. மீனாக்ஷி அம்மாள்

அன்றாடு சம்பாதித்துச் சாப்பிடக் கஷ்டப்படுகிறவர்களிடம் உதாரகுணமும் பெருந்தன்மையும் வாசம்செய்வது அரிது:—டைனஷ்யஸ்.

* * *

தனவந்தர்களை சுகபுருஷர்களென்று கூப்பிடுவது தோஷம். எவனொருவன் விசாரமின்றி யிருக்கிறானே அவன்தான் சுகபுருஷன்:—ஆடஸ்.

* * *

மனிதர்களுக்கு கஷ்ட சுகம் இரண்டு சகஜம். கஷ்ட மனுபவிக்கும் போது மனதை தளரவிடக்கூடாது. நல்லகாலம் வருமென்று எதிர் பார்ப்பதுதான் புத்திசாலித்தனம்:—டெமாஸ்தினஸ்.

* * *

படிப்பினால் ஒருவன் நல்ல மனுஷனாகி விடுவானா? படிப்பும் ஒழுக்கமும் நல்ல மனுஷனுக்கு அவச்யம். இவ்விரண்டு குணங்கள்தான் ஒருவனை ராஜதந்திரியாயும், தியாகிபதியாயும் செய்கிறது:—அன்டோனியஸ்.

Miss RATNAM APPASAWMY, B A.

By

The Editor.

மிஸ் ரத்னம் அப்பாசாமி பி. எ.

தீற்காலம் உபாத்தாப்படிப்புப் படிக்கும் ஸ்த்ரீகள் அதிக மாய் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் மிஸ் ரத்னம் அப்பாசாமி என்னுமஸ்த்ரீ ரத்னம் சென்ற வருஷம் பி. எ. பரீக்ஷை பாஸ்செய்தார். இவர் பாலையங்கோட்டையில் ப்ரபல வக்கீலும் இந்திய கிறிஸ்தவ கூட்டத்தார்களுள் தலைமை வஹித்திருப்பவருமான அப்பாசாமி பிள்ளை அவர்களின் குமாரத்தியாகும். இவர் சென்னை லாகாலேஜு வைஸ்பிரின்ஸ்பால் பால் அப்பாசாமி M. A. LL. B. அவர்களின் ஸகோதரியுமாவர். பாளையங் கோட்டை சாரதக்கூர் காலேஜில் படித்து எப். எ. பாஸ்செய் தார். தக்கமெடல்கள் படிப்புதிறமைக்குப் பெற்றார் பிறகு லிலோங்பானர். அங்கு ஸங்கீதத்தில் பயிற்சி பெற்றார். பி. எ. படித்து முடிக்கவேண்டுமென்று இவருக்கு அவா இருந்ததால் சென்னை வந்து ப்ரிஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து படித்து வந்தார். போன வருஷம் பி. எ. பரீக்ஷைக்குச்சென்ற ஸ்த்ரீகளுள் இவர் தான் ஆங்கில பாஷையில் முதன்மையாகத்தேறினார். ஆங்கில பாஷையில் முதன்மையாகத் தேறினதால் 'க்ரிக்மெமோரியல் மெடல்' பெற்றார். தாவர சாஸ்த்ரத்தில் இவருக்கு மிகப்ரியம். தாம் படித்தபடிப்பை தம்மைப்போன்ற இந்திய ஸகோதரிகளுக் கும் ப்ரயோஜனப்படுத்த வேண்டுமென்ற பூர்ண அவா இருந்த தினால் காலத்தை வீணுக்காமல் சென்னை இந்திய கிறிஸ்தவ ஸ்த்ரீ ஸங்கத்து காரியதரிசி வேலையை ஒப்புக்கொண்டார். அங்கு கல்ல பெயர் எடுத்து அச்சங்கத்துக்கு மிகுந்த கண்மை செய்துவந்தார். இவரின் வேலையைக்கண்டு இப்போது புதிதாக இந்திய கிறிஸ்தவ ஸ்த்ரீகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பெண்கள் பள்ளிக் கூடத்து தலைமை அதிகாரிகள் இவரை தேர்ந்து எடுத்திருக்கிறார் கள். இவரால் முக்யமாக இந்திய கிறிஸ்தவ ஸ்த்ரீகளுக்கு மிகுந்த கண்மையுண்டாகும். இவருக்கு தீர்க்காயுஸையும் ஐச்வர் யத்தையும் கடவுள் அளிக்கப்ரார்த்திக்கிறோம்.

ப-ர்.

MISS RATNAM APPASAMY, B. A.

மிஸ் ரத்னம் அப்பாசாமி, பி எ.

Through the kind courtesy of the Editor the 'Indian Ladies' Magazine,' Madras.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்

Wholesome Advice.

ஸுகிர்தயாஸ புத்திமதி :— ஷேக்ஸ்பியர் நாடகக்கவி எழுதியுள்ள ஹாம்லெட் என்னும் நாடகத்தில், ஒரு பாத்திரமான பொலோனியஸ் என்ற மந்திரி தன்புத்ரன் லேயார்டிஸ் என்பவன் படிக்கவேற்றார் போகவேண்டிய காலத்தில் சில புத்திமதிகளைச் சொன்னதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது பிள்ளைகளுக்கு ஸுகிர்தம் பயக்குமென்று நினைத்துக்கீழே மொழிபெயர்த்துத் தருகிறோம் :—மனத்தில் உதிக்கும் எண்ணங்களெல்லாவற்றையும் வாய் திறந்து வெளியிடாதே. நன்றாய் ஆழ்ந்து நிரூபியாது எந்தக் காரியத்தையும்செய்யாதே. நீ நேசிதர்களோடு அன்யோன்யமாயிருக்கலாம். ஆனால் அநாகரீகமாயிராதே. நன்றாய்ப்பரிக்ஷைசெய்யாது ஒருவரோடு நட்புக்கொள்ளாதே. நட்பு செய்தபின் நண்பரை எந்தாலும் விட்டகலாதே. ஆய்ந்தறியாமல் சண்டவினையெல்லாம் நிகேதனைக்கொண்டு உன் காரணயத்தைக் கெடுத்துக்கொள்ளாதே. வீண் வம்புக்குப்போகாதே. தலையிட்டுவிட்டால் பிறகு பின்வாங்காதே. உன் எதிரி ஏங்கிப்போகும்படி அவனை எதிர். யார் என்ன சொன்னாலும்கேள். நீ மட்டும் வாய் விட்டாதே. யாராவது குற்றங்குறைகள் கூறினால் ஏற்றுக்கொள். உன் நிர்மாணத்தை வெளியிடாதே. கையிருப்புக்குத் தகுந்தபடி உடைகளை வாங்கித் தரித்துக்கொள். ஆடம்பரமாய் உடுக்காதே. உடை அந்தஸ்துக்கும் யோக்யதைக்கும் தக்கபடி இருக்கவேண்டும். ஏனென்றால் உடையிலுஸ்தான் உலகத்தார் உடுப்பவனை நிதானித்தறிந்து சொல்கிறார்கள். நீபோகும் ஊரில் பெரிய மனுஷ்யன் என்றால் தாராளமாய்ச் செலவழித்து உடைவாங்கித் தரிப்பவருக்கும். கடனும் வாங்காதே. கடனும் கொடுக்காதே. கடன்கொடுப்பாயானால், கொடுத்ததையும் சிநேகிதனையும் இழந்து போவாய். கடன் நீ வாங்கு வாயானால் உன் ரோஷம் மழுங்கிப்போகும். எல்லாவற்றையும்விட முக்யவிஷயம் உன்றனுக்கு நீ உண்மையாயிரு. இப்படி இருப்பாயானால், எப்படி இரவு பகலுத்தொடர்ந்து வருகிறதோ, அப்படி நிச்சயமாய் உலகத்தில் நீ யாருக்கும் உண்மையாயிருப்பாய். இந்த புத்திமதிகள் உன்மனதில் தங்கும்படி ஆசீர்வதிக்கிறேன்.

How Much Sleep is Needed.

எவ்வளவு மணிநேரம் தூங்கவேண்டும் :—தூங்கும்பொழுது மூளையானது விசேஷமாய் வளர்கிறது. அதிக தூக்கமும்கூடாது, அதிக விழிப்புங்கூடாது. ஒரு ப்ரபலமான வைத்தியர் மனிதர்கள் ஸுகவீனமில்லாமல் எவ்வளவு மணிநேரம் தூங்கவேண்டுமென்பதை பரீக்ஷைசெய்து ஒருவித மான தீர்மானத்திற்கு வந்திருக்கிறார். அவரபிப்பிராயமாவது நாலு வயதிலிருந்து ஆறுவயது வரையிலுள்ள குழந்தைகள் 15 மணி நேரமும், 7 வயதுலிருந்து 9வயது வரையிலுள்ளவர்கள் 11 மணி நேரமும் 9 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ளவர்கள் 10½ மணி நேரமும் 14 வயதிலிருந்து 17 வயது வரையிலுள்ளவர்கள 10 மணிநேரமும் 17-வயதிலிருந்து 21 வயது வரையிலுள்ளவர்கள் 9½ மணிநேரமும் 21 வயதி

லிருந்து 27 வயது வரையிலுள்ளவர் கள் 9 மணிநேரமும் 27 வயதிற்கு மேற்பட்டவர்கள் 8 மணிநேரமும் தூங்கவேண்டுமாம். இதற்கு குறை ந்து தூங்கினால் மூளைவளர்வது கெட் டுப்போக தேகஸௌக்கியம் கெட்டுப்போ வதோடு அறிவும் குன்றிப்போகுமாம். படிக்கிறபிள்ளைகள் இந்த விஷயத் தை கவனிக்கவேண்டும்.

Should Children be Punished.?

குழந்தைகளை தண்டிக்கலாமா? குழந்தைகள பிழைகள்செய்வது சகஜ மாம். சிறியோர்செய்த சிறு பிழை யெல்லாம் பெரியோராயில் பொருப் பதுகடனே. அதாவது குழந்தை களை அல்பஸ்வல்ப தப்பிதங்களுக் காகவாவது குற்றங்குறைகளுக்காக வாவது தண்டிக்கக்கூடாது. அவர்க ளுக்கு பிசகுகளை எடுத்துச்சொல்லி தப்பிதமென்று ஒத்துக்கொள்ளும் படி ந்யாயமாயும் சாந்தமாயும் சொ ன்னேமானால் அவர்கள் மறுபடியும் அந்தப்பிசகுகளைச்செய்யார்கள். இப் படிசெய்யாது அவர்களை தண்டிப்போ மானால் நம்மிடத்திலுள்ள அத்து கெட்டுப்போகும். தண்டனை ஸகஜ மென்ற அபிப்ராயம் அவர்கள் மனத் தில் எக்காரணத்தாலும் உதிக்கக் கூடாது. உதித்ததோ அவர்கள் தப் பிதங்களும் ஸகஜமாய்விடும்.

Rules for Reading.

வாசிக்கும்போது கவனிக்கவேண் டிய விதிகள் :—அமெரிக்காவிலுள்ள ந்யூயார்க்குப் பள்ளிக்கூடங்களில் பின்வரும விதிகள் அச்சிட்டு ஒட்டப் பட்டிருக்கின்றன :—

"மங்கலான வெளிச்சத்தில் ஒரு பொழுதும் படிக்காதே. படிக்கும போதெல்லாம் தலையை நிமிர்ந்துக் கொண்டு படி. குனிந்து படியாதே.

உனக்கு உன் கண்கள் புஸ்தகங் களைக்காட்டிலும் மேலானவைகள். நீ படிக்கும் புஸ்தகத்தை உன் முக த்தினின்று பதினைஞ்சு அங்குலதூரத் தில் பிடித்துக்கொண்டுபடி. வெளிச் சம் உனக்குப்பின் பக்கத்திலிருந்து இடதுபக்கமாக புஸ்தகத்தில் விழும் படியிருக்கட்டும்.

உனது பாதுகாப்பும் நீ மேலான நிலைமைக்கு வருவதும் உன் கண் ணைச் சார்ந்திருக்கின்றன. ஆகை யால், நீ கண்களைப் பேணவேண்டும். நீ வாசிக்கும்போது இடையிடையே உன் முகத்தைச் சிறிது நேரம் புஸ்த கத்தினின்றுதிருப்பி இளைப்பாறச் செய். வெயில் நேராகப் புஸ்தகத் தில் விழும்படியாக வைத்து ஒரு பொழுதும் வாசிக்காதே.

ராத்திரிப் படுக்கப் போகையிலும், விடிபற்காலத்திலுங் கால்களை ஜல த்தினுற்கழுவு. நல்ல தெளிவான வெளிச்சத்திலேபடி. படிக்கும்போது வெளிச்சத்தை எதிர் நோக்கிக்கொ ண்டு படிக்காதே."

Tastes of Children.

குழந்தைகளின் விருப்பு வெறுப்பு கள் :—தற்காலத்தில் நெய், எண் ணெய் இவைகள் அப்பட்டமாய்க் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் வ்யாபாரிகள் லாபத்துக் காசைப்பட்டு கொழுப்புபோன்ற அந்யவஸ்துக்களை நெய் எண்ணெய்க ளோடு கலந்துவிடுகிறார்கள். இவை கள்தான் கடைகளில் விற்கின்றன. இவைகளால் செய்யப்படும் பக்ஷண வகைகளை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கக்கூடாது. அவர்களுக்குப் பலவிதமான வ்யாதிகளுண்டாகும். ஆகையால் குழந்தைகளுக்கு பண்டங் கள் மீதுள்ள விருப்பு வெருப்புகளை பால்யம் முதற்கொண்டே பழக்கி வரவேண்டும். இச்சிலி, பேரி, ஆப் பிள்போன்ற பழவகைகளில் அவர் களுக்கு ருசியுண்டாகும்படி செய்ய வேண்டும். ஜீரணமுண்டாகும். மல பந்தம் உண்டாகாது. ஆரம்பத்தி லிருந்து பழருசிகண்ட குழந்தைகள் பக்ஷணங்களிலும் பலகாரங்களிலும் ப்ரீதியுள்ளவைகளாயிரா.

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

To Wash Glass Chimneys.

கண்ணுடி சிம்ணியை ஸுத்தம் செய்யும்விதம் :—கொஞ்சம் சூடான ஜலத்தில் கொஞ்சம் உப்பைக்கரைத் துப் புகையும் அழுக்குமடைந்திருக் கிற சிம்ணியைக் கழுவினேமானால் சிமணி அழுக்குப்போய் பளிச்சென் றிருக்கும்.

Polishing Boots.

ஜோடு மினு மினுப்பாயிருக்க:— பூட்பாலிஷை கொஞ்சம் பழைய டீ டிகாக்ஷனேடு கலந்து ஜோடுகளுக்கு த்தடவினால் அது அதிக பளபளப்பா யிருக்கும்.

To Keep out Flies.

ஈக்களின் உபத்ரவத்தை போ க்க வழி:-படுக்கையறைகளில் ஈக்கள் மேலே வந்துட்காருவதால் தூக்கத் திற்கு பங்கம் ஏற்படுகிறது. லவண்ட ராயில் என்னும் ஒருவிதமான வாசனை எண்ணெயில் கடல்பஞ்சை நனைத்து கூற்றில் கட்டி படுக்கைக்கு மேல் தொங்கவிட்டு விட்டால் ஈக்கள் ஓடி ப்போய்விடும். இந்த எண்ணெயின் வாசனை ஈக்களுக்கு ஆகாதில்லையோ?

To Mitigate Heat.

உஷ்ணத்தைத்தணிக்கும் வழி:— கோடைகாலங்களில் தாபம் பொறுக் கமுடியாமல் உடலெல்லாம்வியர்த்து ப்போய் கஷ்டப்படுகிறோ மல்லவா? உஷ்ணம் சகிக்க முடியாமலிருக்கும் பொழுது மணிக்கட்டுகளில் யாரை யாவது குளிர்ந்த ஜலம் கொஞ்ச நேரம் வார்த்துக்கொண்டிருக்கும்படி சொன்னால் இரண்டொரு நிமிஷத் திற்கெல்லாம் தேக உஷ்ணம் தணி ந்து தாபம் குறைந்து போகும்.

Sun burn.

வெக்கை:—ம்ருதுவான சரீரமும் மினுமினுப்பான நல்ல தேஜஸும் வெய்யில் தாங்காமல் தேகம்வாடி யும் நிறம் வெக்கியும்போகிறது. வெள்ளரிரஸம் பிழிந்து அதோடு கொஞ்சம்பால் சேர்த்துக்கலந்து வைத்துக்கொண்டு வெக்கையுள்ள இடத்தில்போட்டால் வெக்கை லகு வாகும். வெக்கிக்கறுத்துள்ள இடங் களுக்கு எலுமிச்சை ரஸத்தில்கொஞ் சம போரேக்ஸ் என்ற வெங்கார பஸ் மத்தைக்கலந்து தடவினால் கறுப்புப் போய் பழைய நிறமுண்டாகும்.

To Keep Brass Vessels Bright.

பித்தளை பாத்திரங்கள் பாசிபிடி யாமலிருக்க:— நமது வீடுகளில் சொம்புகளாகவும் ஜலபாத்திரங்களா கவும், சிப்பலாகவும் சில பித்தளை ஸாமான்களை உபயோகித்து வருகி றோம். இவைகளின்மேல் புளி உப்பு முதலியவைபட்டால் கறைகள் உண் டாகின்றன. இவைகள் போகவும் ஸாமான்கள் பளபளப்பாயிருக்கவும் நாம் செய்யவேண்டுவதென்னவென் றால்:—இந்த ஸாமான்களை புளி தட வி சாம்பல் தேய்த்து ஜலம் விட்டு கழுவிய பிறகு சிறிய துணி எடுத்து ஆல்கஹால் அல்லது மிதலேடெட் ஸ்பிரிட் என்று சொல்லப்படும் மண் ணெண்ணெய்போல் எரியும் ஒரு வகையான ஜலமயமான பொருளில் ஒத்தி பாத்திரங்கள் மீது தடவி சில நிமிஷங்களுக்குப் பிறகு தண்செய்த சீமைச் சுண்ணும்பு எடுத்துதேய்த்து விட்டால் பாத்திரங்கள் பளபளப்பாய் விடும். கறைகளெல்லாம் போய்விடும்.

Copper Vessels.

தாமிரப் பாத்திரங்கள்:—நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலும் தேகத்தில் விஷத்தைக் கொடுக்கக் கூடியவுமான க்ருமிகள் தீர்த்தத்தில் இருக்கின்றன. அந்தத் தீர்த்தத்தைத் தாமிரப் பாத்திரத்தில் எடுத்தால் க்ருமிகளெல்லாம் செத்து ஜலம் ஸுத்தமாய்ப் போய்விடுகிறது. மேலும் தாமிரத்தில் தீர்த்தம் அருந்தினால் காலரா, மலேரியா முதலிய வ்யாதிகள் அணுகா. இங்கிலண்டில் அநேக சாஸ்த்ர விற்பன்னர்கள் தாமிரச்செம்புக்கு இன்னும் என்ன சக்தியிருக்கிறதென்பதைபார்க்கவேண்டி இன்னும் அநேக விதமான வ்யாதிகளுக்கு கூடஅதில் தீராவகம் செய்துகொடுத்து அதற்குண்டான குணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு கோடி காலன் ஜலத்தில் இங்கிலீஷ் நாணயமாகிய $\frac{1}{4}$ கிரௌன் எடை செப்புத தீராவகத்தைக் கலந்தால் ஸுத்தமாய்ப் போய்விடுகிறதாம். ஓர் ஊரில் காலரா அதிகமாய் நடமாடிக்கொண்டிருந்தது. அந்த ஊரின் தெருக்களில் மேற்சொல்லிய தீராவகத்தைத் தெளித்தவே காலரா பின்னுபோய்விட்டது. சீனர்கள் என்ன அசங்கியமாய்க் குடியிருந்தபோதிலும் அவர்களைக் காலரா அணுகாததற்குக் காரணம் அவர்கள் தீர்த்தத்தைத் தாமிரப் பாத்திரங்களில் வைத்துக்கொள்வதேயாம்.

Is Coffee Drink Advantageous to Brain?

காப்பிக்குடியால் மூளைக்குநன்மையுண்டா?:—நியூயார்க்கிலுள்ள கொலம்பியா யூனிவர்ஸிடியில் மநோதத்துவ ஆராய்ச்சி இலாகாவில் காப்பிக்குடியால் தீமை யுண்டாவென்றும் அதனால் மூளைக்கு ஏதாவது உதவியுண்டா என்றும் கண்டறியப் பல பரீக்ஷைகள் செய்யப்பட்டன. பதினைறுபேர் ஸ்த்ரீகளும் புருஷர்களுமாகப் பரீக்ஷைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் வெவ்வேறு வயதுடையவர்களாயு மிருந்தார்கள். வெகு ஜாக்ரதையாய்ப் பரீக்ஷை செய்தானபிறகு காப்பிக்குடியால் முதலில் மிகுந்த உத்ஸாகம் உண்டாகிச் சிறிது நேரமான பிறகு களைப்புண்டாகிவிடுகிறது என்று சொல்லும்வதந்தி உண்மை யல்ல வென்றும், அளவுக்குமிஞ்சி காப்பி குடித்தால், உத்ஸாகம் உண்டாகாது மந்தமே உண்டாகிறதென்றும், முடிவு சொல்லப்பட்டது பிற்பகலில் வேறு ஆகாரத்தோடில்லாமல் காப்பிமாத்திரம் அதிகமாய்க்குடித்தால் தூக்கமின்மையும் உடம்பில் ஒரு படபடப்பும் உண்டாகின்றன. சிற்றுண்டியோடு ஒரு கப் அல்லது இரண்டுகோப்பி யாத்திரம் குடிப்பதால் மூளைக்குச் சிறிது உதவியேயாகும். வேலை செய்வோருக்கும் சிறிது சுறுசுறுப்புக் கொடுக்கும்.

Maxims on Hygiene.

ஸுகாதார நீதிகள்:—கௌண்ட் டால்ஸ்டாய் ருஷியாதேசத்துப் பேர் போன தத்துவ ஞானி. இவர் ஸம்பூர்ண ஆயுள் உடையவராய் தேகாரோக்கியத்துடனிருந்து ஸமீபகாலத்தில் இறந்து போனார். இவர் தேகாரோக்கியமாயிருந்ததற்கு அவர் அனுசரித்துவந்த சில முறைகளை கீழ் எழுதுகிறோம்.

1. இரவிலும் பகலிலும் ஸுத்தமான ஆகாயத்தை ஸ்வாசித்தல்.
2. பிரதினமும் தேகாப்யாஸம் செய்தல்.
3. உண்பதிலும் பானஞ்செய்தலிலும் மிதமாயிருத்தல்.
4. பிரதினமும் குளிர்ந்த ஜலத்தில்ஸ்நானஞ்செய்தலும்வாரத்திற்கு ஒரு முறைவெந் நீர்ஸ்நானஞ் செய்தலும்.
5. அவச்யமானதும், லேசானதுமான உடைகளைப் போட்டுக்கொள்ளுதல்.
6. விசாலமானதும், ஈரமில்லாததும் வெய்யில் கன்றாய் படக்கூடியதுமான வீடுகளில் குடியிருத்தல்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

Chakkarai Pongal.

சக்கரைப் பொங்கல்:—அரைச் சேர் கல்ல பச்சரிசியும் சிவக்கவறுத்த பாசிப்பயிறு அரைக்கால் சேரும் எடுத்துக்கொள். இரண்டையும் கலந்து நன்றாய்த்தண்ணீரில் களைந்து நீரை வடித்துவிடு. ஒரு அணு எடையுள்ள குங்குமப் பூவை இரண்டு தோலா அளவுள்ள தண்ணீரில் அரைத்துப் போட்டு அரிசியோடு கொட்டிவிடு. பிறகு இரண்டரைச் சேர்கொள்ளும் படியான வெங்கலப் பானையில் கொட்டி ஒருசேர் சுத்தமான தண்ணீரை வார். நிதானமாக நாற்புறமும் எரிகிற அடுப்பில்வைத்து நன்றாகக் கொதிவருகிறபோது இளறு. முக்கால் பதத்தில் 4 தோலா வெண்ணெய், 30 தோலா வெள்ளைச் சர்க்கரை, 24 தோலா நெய் முதலியவைகளைப்போட்டு இளறி 5 நிமிஷம் அடுப்பின்மேல் வைத்திருந்து கீழே இறக்கு. மறுபடியும் 3 தோலா பாதம் பருப்பு, 21 தோலா முந்திரிப்பருப்பு இரண்டையும் 4 தோலா நெயில் வறுத்து, $\frac{1}{2}$ தோலா ஏலம், 2 தோலா ஜாதிப்பத்திரி இவைகளையும் சேர்த்து தயாராக வைத்துக்கொண்டு வடித்து கீழ் இறக்கினதுடன் கலந்து இளறிவிடு. இரண்டு அணு எடையுள்ள பச்சைக் கற்பூரத்தைப் பொடி செய்து போட்டுக் கலந்துவிடு. இதை சாப்பிட்டுப் பார்த்தால் அப்போது கை அளவின் பேரில் சக்கரைப்பொங்கல் செய்கிறதற்கும் அளவின்பேரில் செய்கிறதற்கும் வித்தியாசம் தெரியும். இதன் ருசி இப்படிப்பண்ணிச் சாப்பிட்டவர்களுக்குக்கு தெரியுமேயன்றி எல்லோருக்கும் தெரியாது.

A Few Hints.

சில தூறிப்புகள்:—சமையல் அறை சுத்தமாயிருக்கவேண்டும். புகைபோக்கி இருக்கவேண்டும். சுத்தமான காற்று உள்ளேவரவும் கெட்டகாற்று வெளியேபோகவும் சாளரங்கள் ஜன்னல்க ளமைக்கவேண்டும். நல்ல வெளிச்ச மிருக்கும்படி கூரைகளில் கண்ணுடிவைத்தல் நலம்.

* * *

சமையல் பாத்ரங்களை அன்றுடம் சுத்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் பாத்ரங்களிலுள்ள பதார்த்தங்கள் அழுகிக்கெட்டு விஷமுள்ளவைகளாய் மாகிவிடும். சாப்பிடுகிறவர்களுக்கு வ்யாதியை உண்டாக்கும்.

* * *

பதார்த்தங்கள் அழுகியாவது கெட்டாவது புழுத்தாவது இருந்தால் உடனே தீக்கி விடவேண்டும். ஜலமூற்று அசுத்தப்படாமலிருக்கிறதா என்று பார்த்து பின் அதிலிருந்து சமையலுக்கும் குடிப்பதற்கும ஜலம் கொண்டு வரவேண்டும்.

Qualities of Food Stuffs.

உணவுகளின்தணங்கள்:—நெல்லரிசி உழைப்புக்கும் தேகச்சூட்டிற்கும் அவசியமான அணலையும் உண்டாக்குகிறது. மாம்ஸபதார்த்தம தசைநார்களுக்குவலுக்கொடுக்கின்றன. பயிறுவகை ஆகிய தான்யவகைகளில் அனலைக்கொடுக்கும் தன்மையும் தசை நார்களுக்கு வலுவுண்டாக்கும் தன்மையும் அமைந்திருக்கிறது.

IV

ART & MUSIC.

கலையும் ஸங்கீதமும்.

நுண்கலை (Fine arts) என்பது உணர்ச்சி நுட்ப இயற்கையை விளக்கும் கலைகளாம். இவை நற்கலைகளென்றும் பெயர் பெறும். இவை ஸங்கீதம் ஓவியம் (சித்திரமெழுதல்) சிற்பம் (கற்சிலை உண்டு பண்ணல்) வாசாலகம் (சொல் வன்மை) செய்யுள் இயற்றல் (கவித்வம்) நாடகமியற்றல் முதலியனவாம்.

* * *

மேனாடுகளில் எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஸங்கீதத்தை ஒரு பாடமாகவைத்து வருகிறார்கள் அதனால் மிகுந்த ப்ரயோஜனத்தை மேனாட்டார் அடைகிறார்கள். இந்தியாவில் ஏன் பள்ளிக்கூடங்களில் ஒரு பாடமாகவைக்கக்கூடாதென்று ஒரு ஸங்கீத வித்வான் கேட்கிறார்.

* * *

இவ்வுலகில் வீணை, ஹார்மோனியம் பிடில், தம்பூர், பியானோ முதலிய அநேக ஸங்கீதக்கருவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் மனிதக்குரலுக்கு ஸமானமாகுமா? மனிதக்குரல் சிரேஷ்டமானதென்று சொல்லவும்வேண்டுமா? பழமொழி கூட குரல் இல்லாதவனுக்கு விரல் என்றிருக்கிறது. இதற்குதாள்போலிருக்கிறது.

* * *

மிஸ்மாட் மெக்கார்த்தே என்னும் ஆங்கிலேயஸ்த்ரீ இந்தியஸங்கீதத்தையும் ஐரோப்பிய ஸங்கீதத்தையும் நன்றாகக்கற்றவர். இவர் இங்கிலண்டில் சில ஸங்கீத ப்ரஸங்கங்கள் செய்தார். அப்போது மேனாடுகளில் இந்திய ஸங்கீதக்கருவிகளை உபயோகித்து மேனாட்டுக்கருவிகளின் பேரிரைச்சலை ஒழித்து விட்டால் தான் ஐரோப்பிய ஸங்கீதம் ஸுகப்படுமென்று சொன்னார்..

உலகத்தில் ஸங்கீத ஞானமில்லாதவர்களாவது அல்லது ஸங்கீதத்தில் அபிருசி யில்லாதவர்களாவது கிடையாது. அப்படி யாராவது இருந்தால் கொம்புகள் இல்லாத ரிஷபம்போலும்; வாலு இல்லாத மிருகம போலும். படிப்பு ஸுகத்தைக்கொடுக்கும். தனம் டாம்பீகத்தைக் கொடுக்கும். ஆனால்ஸங்கீதமிருந்தால் கல்நெஞ்சர்களையும் கரைத்து ஸுகத்தையும் கொடுக்கும். மகா துஷ்ட மாம்ச பக்ஷண மிருகங்கள்கூட ஸங்கீதத்தினால் சாதுவாக்கப்பட்டிருக்கின்றன.

* * *

ஸங்கீத உபாத்தியாயர்களாக பயிற்சி பெற வேண்டுமென்றால் ஆண்களுக்காகட்டும் பெண்களுக்காகட்டும் முதன் முதல் தேகதிடம் அவசியம். இரண்டாவது பொறுமை. அத்தியாவச்யம். இவ்விரண்டுமுக்கியமானகுணங்கள் இல்லாதவர்கள் அபூர்வகலைகளுக்கு உபாத்தியாயர்களாக முடியாது. இக்குணங்கள் இல்லாதவர்களை இங்கிலண்டில் ஸங்கீத உபாதியாயர்களாக மதிக்கமாட்டார்கள். ஆயிரம் ஸங்கீதத்தில் பாண்டித்யம் அடைந்தவனாயிருந்தாலும் ப்ரயோசனமில்லை. சில ஸமயத்தில் இவ்வுபாத்திமைத் தொழிலை விட்டு ஓடிப்போய் விடத்தோன்றும். சொல்லிக்கொடுக்கப்பட்டபிள்ளைகள் எவ்வளவு மக்காயிருந்தாலும் அல்லதுஎவ்வளவு துஷ்டத்தன முள்ளவர்களாயிருந்தாலும் கொஞ்சங்கூட தன் முகத்தில் அதிருப்தியாவது அல்லது எரிச்சலாவது வரக்கூடாது. மன உறுதி பொறுமை, தேகதிடம் முதலிய குணங்களைகைக்கொண்டு பாடுபட்டு உழைத்துவந்தால் வெகுசீக்கிரத்தில் நல்ல பேரும் எடுத்து நல்ல சம்பளமும் கிடைக்கும்.

V

VIEWS AND REVIEWS.

அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Bathing in Rivers.

ஆற்றில் ஸ்நானம் செய்தல்:—நதிகளிலும், கடாகங்களிலும் ஆண்கள் பெண்கள் என்ற இருபகுதியாரும் சென்று ஒருவர்காண ஒருவர் ஸ்நானம் செய்வது ஹிந்துக்களுக்குள்ளே மரபாக இருக்கின்றது. அதுவும் ஏதாவது புண்ணிய காலங்களிலே மாதர்கள் ஸ்நான கட்டத்திற்குச் செல்லும்போதும் ஸ்நானம் செய்யும் போதும் காணப்படும் காட்சிகள்எழுதவொண்ணுதன. இவ்வழக்கம் மிகவும் தப்பென்றதைக் குறிப்பிட்டு(லக்னவ் அட்வொகேட் பத்திரிகையிலே ஒரு கிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:— "அன்றையதினம் கண்டதை எழுதுவதற்கு நான் ஹிந்துவாதலால் எனக்கு மனம் சகிக்கவில்லை. நாம்நமது சிறு பெண்களைப் பாடசாலைக்குப் போக விடுவதில்லை. நமது அரிய மித்திரர்களையும் சமீப பந்துக்களையும் சந்திக்கும்படி நாம் நமது மாதர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை. மாதர்கள் சபைக்குக் கூடப்போகக் கூடாதென்று சிலர் நமது மனைவியரைத் தடை செய்கிறார்கள். இப்படியெல்லாமிருப்பினும் அவர்களை ஸ்நானக்கட்டத்திற்கு அழைத்துச்சென்று மூர்ட்டித்தனமான கூட்டங்களில் இடிபடுவதைப் பார்த்திருப்பது தர்மமா? அவர்கள் ஓர் பொது இடத்திலே ஸ்நானம் செய்யும்போது அயோக்கியர்களெல்லாம் வெறித்து நோக்கும் படியாயிருப்பதை நாம்சகிப்பது பொருத்தமா? ஐரோப்பிய மாதர்கள் தமது மாலையுடுப்பில் உடல்முழுவதையும் நன்றாக மறைத்துக்கொள்வதில்லை யென்று அனேக ஹிந்துக்கள் குறைகூறமுன் வருகின்றார்கள். அது நியாயமே. ஆனால் பொது இடத்தில் மதிப்புள்ள மாதர்கள் வந்து ஸ்நானம் செய்யும் வழக்கம் மேற்படி ஐரோப்பிய வழக்கத்தைக்காட்டிலும் அதிக தப்புகொண்டதல்லவா? இதை நமது தேசத்துமாதர்களும் ஆடவரும் நன்கு ஆலோசனை புரியுமாறு பிரார்த்தனை செய்கின்றேன். இதனால் நம்மவரை அன்னியதேசத்தவர்கள் அநாகரீக ஜனங்கள்என்றுகருதுகிறார்கள்" என்கிறார்.

The English Women in India.

இந்தியாவிலுள்ள இங்கிலீஷ் ஸ்த்ரீகள்:—இந்தியர்களுக்கும்இங்கிலீஷ்காரர்களுக்கும் அன்யோன்யம் இப்பொழுது இல்லாமலிருக்கிறது. இதைக்குறித்து இங்கிலீஷ் ஸ்த்ரீகள் இந்திய ஸஹோதரிகளுடன் அடிக்கடி கலகது அவர்கள் விஷயங்களை அறிந்துகொண்டுஹிந்துக்களை எடுத்துச்சொல்லி அவர்கள் முன்னேற்றத்துக்கு துணையாயிருக்கவேண்டும். ஏஷியாடிக் ரீவ்யூ.

Music.

ஸங்கீதம்:—இந்து ஸங்கீதத்துக்கும் ஐர்லாந்து ஸங்கீதத்துக்கும் பொதுப்பட உள்ள தன்மைகளிருக்கின்றன. இந்துகோவில்களில் வாத்யம்வாசிக்கவும், பாட்டுப்பாடவும் மனுஷ்யர்கள் ஏற்பட்டிருப்பதுபோல் ஐர்லாந்து தேசத்திலும் முன்காலத்தில் கோவில்களில் மனுஷ்யர்கள் சேவகத்திலிருந்தார்கள் பாடுவதற்கு ஸ்த்ரீகளுமிருந்தார்கள். மேலும் ஐர்லாந்து அரண்மனையிலும் ஸமஸ்தான ஸங்கீத வித்வான், கவிராயர், விதூஷகன் முதலியவர்கள் இருந்தார்களாம். அந்த தேசத்து பாட்டுகள் அமைப்பும் இந்துப் பாட்டுகள் அமைப்பும் ஒரே மாதிரி. ஈஸ்ட், அன்ட் வெஸ்ட்.

Women's Education.

ஸ்த்ரீகள் கல்வி :—இந்தியாவில் பெண்கள் படிக்காதிருத்தல், ஒரு பெருந்தேருக்கு ஒரு பக்கத்து சக்ரங்கள்உயர்ந்தும் மறுபக்கத்து சக்ரங்கள் தாழ்ந்துமிருப்பது போலிருக்கிறது. தேர் நகர்ந்தால் எப்படி அது குப்புற விழுமோ அப்படி ஜன சமூகத்தேரானது சீர் குலைந்துபோம். சிலோன்ஆனரபில் மிஸ்டர் பி. ராமனாதன்.

* * *

ஸ்த்ரீகள் படித்தவர்களாகி, புருஷர்கள் செய்யும் முயற்சிகளில் அநுதாபம் வைத்து அவர்களுக்குத்துணையாக நிற்கக்கூடியவர்களாகிற வரையில் இந்தியாவின் முன்னேற்றம் அரைகுறையாகத்தானிருக்கும். ஸ்த்ரீகள்படிப்பில்லாத மூடர்களாயிருப்பதோடு கூட புருஷர்களின் படிப்பும் நமக்குப் பொருந்தியபடியில்லாமல் அந்யர் வழிகள் ப்ரகாரம் அமைக்கப் பட்டிருப்பதால் குறைபட்டிருக்கின்றது. நமது தேசராஜரீக நிலைமையில் இவ்விதமான கல்வி தான் நமக்குசாத்யமாயிருக்கிறது. ஒரு ஜன சமூகத்தின் கல்வி அவர்களுடைய க்ஷேமத்தை மாத்திரம் நோக்க கொண்டதாக இருக்க வேண்டுமேயன்றி இதரஜன சமூகத்தின் நன்மையையும் விருப்பத்தையும் சார்ந்ததாயிருக்கக் கூடாது. இருந்தாலும் நம்முடையயுனிவர்ஸிடிகளும் காலேஜ்களும் அந்யர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.—ஹைகோர்ட் ஜட்ஜ்ஆனரபிள் மிஸ்டர் சதாசிவஐயரின் பார்யை.

A Test for Civilisation.

நாகரீகத்துக்குச் சோதனை :—நுண்கலைகளில் (Fine Arts) மற்ற கலைகளில் நிகழுவதைவிட அதிக நேர்மையும், நுட்பமும் இயைந்த புத்தியைச் செலுத்தினாலொழிய புலமை கிடைப்பது அரிது. மற்ற கலைகள் புத்தியின் வல்லமையைக் காட்டும். இவை புத்தியின் நுண்மையைக் காட்டும். இவைகளுக்கு இயற்கை வாசனை முக்கியமாயிருக்கவேண்டும். உலகத்தில் புத்தியில் வல்லவரும் நாகரீகத்தில் மிகுந்தவரும் ஆகிய ஜாதியாரெல்லாம், இந்நுண்கலைகளில் மிகுந்த சிறப்புடையவர்களாகவே சரித்திரத்தாலும் மற்ற லக்ஷ்யங்களாலும் காணப்படுகின்றார்கள். ஆதலால் இந்நுண்கலைகளில் ஒரு ஜாதியார் எவ்வளவு அபிவ்ருத்தி யுடையவர்களோ அவ்வளவுக்கு அந்த ஜாதியார் எல்லாம் நாகரீகத்திலும் சிறப்புடைய ஜாதியாரெனயென்று கணிப்பதற்கு ஒரு காரணமிருக்கிறது. 'தமிழனி'ல் டி. லக்ஷ்மண பிள்ளை.

Kanyasulkam.

கன்யாசுல்கம் :—முற்காலத்தில் நம்மவர்கள் வரனிடமிருந்து ரூபாய்கள் வாங்கி கன்னிகையின் நகைக்கும் ஆடையாபரணத்திற்கும் அவ்விவாகச் செலவுக்கும் செலவு செய்தார்களேயன்றி தாம் ஒரு பைசாவேனும் அடைந்தாரில்லை. அவ்விதமே கன்னிகையிடமிருந்து ரூபாய்கள் வாங்கி விவாகச் செலவுக்கும், வரனின் வித்யாவிஷயத்துக்கும் செலவு செய்து வருகிறார்கள். இவ்விரண்டு விவாகமும் சாஸ்திரியமானது தான். ஆனால் கலிகாலக் கொடுமையால் கன்னிகையின் பிதாவை உயிரைவாட்டி அவனுடைய தாயார் புகட்டின செவ்வெண்ணெய் முதல் பிடுங்கவரனைவியாஜமாகவைத்துக்கொண்டுசில பாபிகள் முயற்சித்து வருகிறார்கள். இதைத் தடுக்க சாஸ்திரத்தையொட்டி முயற்சிசெய்து அக்கொடிய காரியத்தினின்றும் நிவ்ருத்தி செய்யவேண்டும். இக்கொடிய காரியம் செய்யும் சிலருக்குவேண்டிய நமது பெருமைபொருந்திய சாஸ்திரத்தை நிந்திப்பது நியாயமாகாது. லோகோபகாரியில் ஒரு நிருபர்.

VI
WIT & HUMOUR.

தமாஷ்.

பிள்ளை:—ஒரு சந்தேகம் கேட்க வேண்டுமென்றிருக்கிறேன். கேட்கட்டுமா, அம்மா?

தாயார்:—என்னப்பா, சொல்,

பிள்ளை:—அம்மா, நீ படிக்கும் பொழுது கருப்பாயிருக்கிறதை பார்க்கிறாயோ வெளுப்பாயிருக்கிறதைப் பார்க்கிறாயோ?

* * *

ஒருகனவான்:—ஐயா, என்ன இது தயிர்வடையில் பல்லி? புதியபதார்த்தங்கள் எல்லாம் இந்த ஓட்டலில் செய்கிறாப்போலிருக்கிறதே.

ஓட்டல் சொந்தக்காரர்:— இருக்கவே இருக்காதையா கொத்தமல்லித்தழை.

* * *

புருஷன்:—ஸ்த்ரீகள் தற்காலத்தில் புருஷர்களைக் காட்டிலும் இரண்டு பங்கு சாப்பிடுகிறார்கள் இதனால் தான் கலிகால சம்பவகளெல்லாம் உண்டாகின்றன. ஔவையார் "உண்டி சுருங்கல் பெண்டிர்க்கழகு" என்று சொல்லியிருக்கிறார். இனி நீ உன் சாப்பாட்டைக் குறைத்துவிடு.

மனைவி :—தாங்கள் ஔவையார் புஸ்தகத்தைச் சரியாய் வாசிக்கவில்லை. இவ்வாக்கியத்துக்குமுன் "அன்னம் சுருங்கல் ஆடவர்க்கழகு" என்று சொல்லப்பட்டிருக்கிறதே.

* * *

தாய் :—அப்பா மகனே, நீ அடுத்த அகத்து கோபாலனுடன் சேராதே. அவன் மகா துஷ்டனாம் திருடனாம். சேர்ந்தால் நீயும் கெட்டுப்போவாய்,

மகன் :—அவன் கெட்டவன், ஏன் நல்லவன், அல்லவா அம்மா?

தாய் :—ஆம்.

மகன் :—அவன் என்னுடன் சேர்ந்தால் நல்லவனாக மாட்டானா?

ஒருபெண் பள்ளிக்கூடம் சேர்ந்தது முதற்கொண்டு நிரைய மார்க்குகள் வாங்கிவந்தாள். ஒருநாள் வாத்திச்சி அப்பெண்ணின் தாயிடம் மார்க்குகளை காண்பித்தாள். தாய் சந்தோஷப்பட்டாள்.

சில நாளைக்குப்பிறகு அப்பெண் சைபர் வாங்கிவந்தாள்.

தாய் :—காரணம் என்னவென்று பெண்ணைக்கேட்டாள்.

பெண் :—வாத்தியார் அம்மா பண்ணின தப்பிதம் என்றாள்.

தாய் :—என்ன சங்கதி என்றாள்.

பெண் :—என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அடுத்தாத்து கமலத்தை வாத்தியார் அம்மாள் வேறு இடத்தில் உட்கார வைத்துவிட்டாள்.

* * *

பெண் :—என்னுடன் இரண்டாம் கிளாசில்படித்த ஐந்து குட்டிகளுக்கும் கல்யாணம் ஆய்விட்டது. எனக்கு எப்போது அம்மா கல்யாணம் செய்யப்போகிறாய்.

அம்மா :—அப்பா தான்தோளில் பணத்தை கட்டிப்போடுக்கொண்டு ஊர் ஊராய் தேடித்தான் வருகிறார். மனதுக் கிசைந்தபிள்ளை கிடைக்கவில்லையே ? குழந்தை.

பெண் :—ஏன் அம்மா வயதுகாலத்தில் அப்பா கஷ்டப்படவேண்டும். நம்பண்ணா அழகா யில்லையா அம்மா !

அம்மா :—நல்ல அழகாத்தானிருக்கிறான்.

பெண் :—எனக்கு ஏன் அண்ணாவை கல்யாணம் பண்ணிக்கொடுக்கக்கூடாது.

EVENTS OF THE MONTH

மாஸ வர்த்தமானம்.

அக்டோபர் '13.

3-ந்தேதி.—ஸ்த்ரீகளுக்கு வைத்யத் தொழில்:—ஸர்ஜன் ஜெனரல் லூகிஸ் என்பவர் இங்கிலண்டில் பிரஸங்கம் செய்ய நேரிட்டபோது ஸ்த்ரீ வைத்ய ஹர்விஹின் ப்ளானைப்பற்றி சொன்னார்.

6-ந்தேதி.—மிஸ் ஜோஷி, L. M. S.—மிஸ் ஜோஷி டைம்ஸ் ஆப் இந்தியாப் பத்திரிகைக்கு கவர்ன்மெண்டார் இங்கிலண்டிலிருந்து ஸ்த்ரீகளை வரவழைக்கப் போகும் எண்ணத்தைக் கண்டித்து எழுதியிருக்கிறார்.

வெள்ளம்:—கொழும்பில் கிலானி ஆற்று வெள்ளத்தால் ரத்னபுர பட்டணத்திலுள்ள நூற்றுக் கணக்கான வீடுகள் வெள்ளத்தில் போய் விட்டதாம். ரொம்ப ஜனங்கள் சேதமாம்.

9-ந்தேதி.—குழந்தைப் பாதுகாப்பு ஸங்கம்:— சென்னை குழந்தைப் பாதுகாப்பு ஸங்கத்திக்கு சென்னை கவர்ன்மெண்டார் அதன் அபிவ்ருத்தியை உத்தேசித்து 1000 ரூ. சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

10-ந்தேதி.—லேடி டப்ரீன்:—லேடி டப்ரின் லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு இங்கிலாண்டுக்கு வைத்ய பரீக்ஷைக்குப்படிக்க வரும் இந்திய ஸ்த்ரீகளும் ஆங்கிலோ இந்திய ஸ்த்ரீகளும் காட்டுகிற உத்சாகத்தினாலும் ஊக்கத்தினாலும் இந்தியாவுக்கு மிகுந்த ப்ரயோஜன மாயிருப்பார்கள் என்று எழுதியிருக்கிறார்.

மிஸஸ் பெஸண்ட்:—பெஸண்ட் அம்மையார், கடல்யாத்ரையைப்பற்றி சென்னை விக்டோரியா ஹாலில் பேசினார். நம் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த கடல் யாத்ரையை நாம் இப்போது அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது அவச்யமென்றார். அக்ராசனம் வஹித்த ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களும் அதை ஆமோதித்துப் பேசினார்.

15-ந்தேதி.—மிஸ் பாங்கர்ஸ்டு:—ஸத்ரீ ஸ்வதந்திர வாதிகளுள் தலைமைவஹித்து ஒரு தடவை ஜெயிலிலிருந்து விடுதலை யடைந்த மிஸ் பாங்கர்ஸ்ட் இன்று ஸ்த்ரீ ஸ்வதந்திர வாதிகளின் மீட்டிங்குக்குப் போனபோது லண்டனில் அரெஸ்ட் செய்யப்பட்டாள்.

16-ந்தேதி.—ஸ்ரீமதி கனகம்மாள்:— தெல்லூர் இந்துப்பெண்பாட சாலையில் இரண்டாவது அஸிஸ்டெண்டாயிருந்த கனகம்மாள் என்பவர் சென்னை எழும்பூரில் R. S. சுப்புலட்சுமி அம்மாள் அவர்களால் நடத்தப் படும் விதவாச்ரமத்தில் சேர்த்து பி. ஏ. பரிட்சைக்கு வாசிக்கப்போகிறார்.

17-ந்தேதி.—ஸாஸ்வதி ஸங்கம்:—ஸரஸ்வதி ஸங்கத்தையொட்டி நடந்துவரும் ஸரஸ்வதி பாலிகா பாடசாலையின் கட்டட பண்டுக்கு மிஸ்ஸஸ் பெஸண்டு ரூ. 50, ஜட்ஜ் சதாசிவ அய்யர் ரூ. 25, ஒரு அநுதாப பாரிஸ்டர் ரூ. 15 உதவிசெய்திருக்கிறார்கள்.

Our Serial Novel.

LIGHT LITERATURE

நாவல், நாடக மஞ்சரி

MALATHI

or

The Paternal Love

Mr- K. K. Sreenivasa Chariar, Avl M. A. M. L.,

High Court Vakil, MADURA.

மாலதி

அல்லது

பிதுர் வாத்ஸல்யம்.

(ஒரு நாவல்.)

மேன்மாடியில் ஒரு விஸித்ரமான அறையில் தன் படுக்கையில் படுத்த படியே ஏதோயோசனை செய்துகொண்டிருந்த ராஜு தனக்குப் பின்புறத்தை காட்டி குறிச்சியில் சாய்ந்துகொண்டிருந்த ஸுந்தராபாயைப்பார்த்து, 'அத்தையம்மா, அக்காவுக்கு அம்மா வைத்துப்போன பத்திலட்சரூபா ஆஸ்தியும் இன்றைக்கு கிடைத்து விடுமல்லவா?' என, ஆழ்ந்த யோசனையிலிருந்த ஸுந்தராபாய் தன்னை யறியாமல் வடித்தகண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுமுறை வினவிக் கேள்வியை அறிந்துகொண்டு,

'ஆம, கிடைக்கும் என்பதைப்பற்றி இப்பொழு தென்ன?' என்றாள்.

ராஜு:—இல்லை. நம் டிரஸ்டியின் பாங்கில் கொள்ளைபோய் விட்டதாயும் அதுவிஷயமாய் அவரைக்கண்டு கேட்கும்பொருட்டு அப்பா சென்னைக்குப் போயிருப்பதாயும் புஜங்கதாஸ் சொன்னதே. அதுதான் கேட்டேன்.

ஸுந்தராபாய்:—கொள்ளைபோனது உண்மைதான். ஆனால் இந்த வாதுவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

அவள் குரலிலிருந்தும் முகத்திலிருந்தும் அவள் நிராலருத்தத்தையறிந்த ராஜு அவள் பக்கத்திலுட்கார்ந்து காரணம் வினவி தன்தாயை நினைத்தே யவள் வருந்துவதாகச் சொல்லக்கேட்டு வெகு நேரம் யோசனையிலாழ்ந்திய

பின், பெருமூச்சுடன் ' அத்தையம்மா, இன்று விருந்துக்கு வந்தவர்களிலிருவர் ஒருவர்க்கொருவர் மெதுவாய் நாங்களிருவரும் அந்த கடுந்துரோகி வசீகரன் அச்சாக விருப்பதாயும், அப்பா அவளைக்கெட்டவளென்று தெரிந்தும் அழகின் மயக்கத்தினால் நரகத்தில்வீழ்ந்து எங்களைப்பெற்று, மானக் கேடுற்றதாகப் பேசிக்கொண்டது என்காதில் விழுந்தது. அதுமுதல் என்மனம் எரிகின்றது. அக்காளிடம்சொல்லி யவள் மனதையும் பண்படுத்துவானேன் என்றிருந்துவிட்டேன் ' என்றுசொல்லும் பொழுதவன் கண்கள்சிவந்தது, நீர் பெருகிற்று. இதைக்கண்ட ஸுந்தராபாய்துடித்து, ' ஹா ! தெய்வமே அடே குழந்தாய் உன் காதிலுமித்தீச் சால் விழுந்துவிட்டதா?'என்று கூவிப் பிறகு அவனை யன்புடனோக்கி, 'இந்தா தங்கமே உலகமென்ன சொன்னாலும் அதைப்பற்றி நீ நம்பாதே. அவள் உன்னைப்பெற்றவளல்லவா?' என்றாள்.

ராஜு :—அத்தையம்மா. பெற்றதனால் மட்டும்தாய் நல்லவளாய் விடுவாளா! மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே. உலகில் பத்னி பெண் ஸகோதரி முதலினோரினால் இழிவு ஏற்பட்டால் அவர்களை நீக்கிவிடலாம். பெற்றதாயினால் இழிவு ஏற்படுமாயின்,உயிர்போனாலும் வசை நீங்காதல்லவா?

ஸுந்தராபாய்:—அப்பா. நான் சொல்லுகிறேன் கேள். அவளை உத்தமி என்று நம்பு.

ராஜு :—அத்தையம்மா. என்னை ஏமாற்றவேண்டாம். உண்மையென்பதற்கு எனக்கு அத்தாட்சியிருக்கிறது. அதைச்சொல்லுகிறேன் கேளும் :—

சில நாளைக்குமுன் இதே அறையில் அப்பாவும் புஜங்கதாஸும் இரகசிஸமாய் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வசீகரன் கேஸ்விஷயமாயும் நர்மதையின் கொலைவிஷயமாயும் மற்றும் ஊர்களில் நடக்கும் கொலைகளவுகள் விஷயமாயும் துப்புதுலங்கும் மார்க்கத்தைப்பற்றிப்பேசுவது வழக்கமாதலால் அவ்விஷயங்களை யறியவேண்டி அறையில் எட்டிப்பார்த்தேன். புஜங்கதாஸ் அம்மாவின் படத்தை யொருகையிலும் அந்தப் படுபாவி வசீகரன் படத்தை மற்றொருகையிலும் பிடித்துக்கொண்டு மாறிமாறி பார்த்த பிறகு, 'ஆஹா ! இதிரண்டுந்தான் ஜோடி. இவன்நிரம்ப நைஸான பயல், அம்மாணிக்கம் அவனுக்குத்தான் தகுமேயன்றி உனக்கா தகும்?' என்று அப்பாவின் முகத்தைச் சுட்டிச்சிரித்தார். அப்பா வருத்தத்துடனும் பயங்கரமான முகத்துடனும் பெருமூச்செறிந்து, பிறகு கோபத்துடன், 'அடே பாவி. ஏற்கனவே, புண்பட்டிருக்கும் ஹிருதயத்தை ஊசிகொண்டு கிளறாதே. தவிர அறிந்துசெய்யின் அழுதாயினும் யனுபவிக்கவேண்டும்' என்று நொந்தமனதுடன் கூறினார். நானிருப்பதை இதற்குள் புஜங்கதாஸ் அறிந்துகொண்டு என்னையப்பாவியிட மழைத்துப்போய் நான் ஒளிந்து கேட்பதாகச்சொல்ல, அப்பா கண்டித்தார். இனி எனக்கு என்ன அத்தாட்சிவேண்டும்?

ஸுந்தராபாய் பெருமூச்சுடன் ஸோபாவில் சாய்ந்தாள். இது நிற்க மாலதி சாளரவாயிலில் வெகுநேரம் தந்தப்பதுமையென நின்றாள். அவள் முகத்தைப்பார்த்தால், அவள் யாரையோ ஆவலுடன் வெகுநேரமாய் எதிர் பார்த்திருப்பதாகத்தோன்றும். இவள்நிலையை வீட்டுமேற்பார்வைக் காரியாகிய பாரதியென்பவள் கவனித்து, மாலதியையணுகி, ஏதோகேட்க முயலுமுன் வாயிலில் சடசடவென்று மோடர் பைசகில் சப்தமும் இரட்டைக்குதிரைக் காலடியின் சப்தமும்கேட்க வாயில்பக்கம் ஆவலுடன் ஒருமுறை பார்த்துவிட்டு, 'பாரதீ, ஒருபிரபு வருவார். போஜனத்துக்கு லாகிரி வஸ்துக்களையும் பானங்களையும் விலக்கிவிட்டு, ஸுருசியான போஜனம் தயாராகவை போ' வென்றாள். மேலும் அவள் 'என் ஆச்ரமத்தைச் சேர்ந்த பிரபுக்கள் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட வாலிபர்கள், அதாவது தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளும்வரை வாலிபர்கள்.ஒருமணம் செய்யாமலும் அவ்வயதில் ஒழுக வேண்டிய ஒழுங்காகும் தேகப்பயிற்சியையும் பரோபகார சிந்தனையையும் பற்றி உபந்யசிக்கும் ஓர் ஆசிரமம், யாராகிலும் வருகிறார்களோ ?' வென்றாள்.

மாலதி :— ஆம். அதற்குத் தலைமையான பிரபுதான் வருகிறார்போல் தோன்றுகிறது. நீபோய், நான் சொல்லியபடி செய்துவிட்டு, அத்தையம்மாவை யழைத்துக்கொண்டுவா.

பாரதி அவ்விடம் விட்டகன்றாள். அவள் சென்றதும் மாலதி சற்று உலாவிக்கொண்டிருக்கையில் கடிகாயந்திரத்தில் ஒன்பதரை மணி யடித்தது ஆகாயத்தில் மேகங்களினிடையே சென்று மங்கலான மதி மேகங்களை விட்டு வெளி வந்தது போல மாலதியின் முகம் திடீரென மலர்ந்து ஒளிவீசியது ஏன் ? கறுத்துக் குழல்குழாலாகத் தொங்கும் குஞ்சியும்,பளீரென தள தளப்புடன் ஒளியிடும் நெற்றியும், கன்னமும், அப்பொழுது தான் தாம்பூலம் தரித்தது போலுள்ள மெல்லிய உதடும், சுமார் $5\frac{3}{4}$ அடி உயரமும், வலுவுற்ற புஜங்களும், மனதில் துர் எண்ணம் கபடம் உள்ளவர்கள் கண்டதும் அஞ்சத்தக்க பெருந்தன்மையும், காருண்யமும் கூடிய கண்ணும் அமைந்து 25–வயதுக்குட்பட்ட தீரனொருவன் மெல்ல நடந்து அவள் முன் வந்து நின்றான். மாலதி தன் இயறகைப் பேதமையிற் சற்று அடக்கமும் புன்முறுவலும் சேரப் பணிவுடன் "வாருங்கள். வரவேண்டும்." என்று கூறி சற்று வருத்தக் குறிப்புடன், "ஆனந்தமோஹன், ஏன் இவ்வளவு தயவு பிறந்தது. நான் 2-மணி நேரமாய் இங்கு எதிர் பார்த்து நிற்கிறேன். இதுவரையில் வராமல் நின்றவர்கள் நீங்கள் தான்." என்றாள். வந்தவர் முகத்தில் புன்னகை யென்பதே யில்லை. கம்பீரமாய் நாற்புறமும் சுற்றிப் பார்த்துவிட்டு "மன்னிக்கவேண்டும் பகல் 3–மணிக்கே புறப்பட்டேன். பலமான சில அஸௌகரியங்களினால் தாமத மாயிற்று." என்றார்.

மாலதி.—" அப்படி யென்ன பலமான அஸௌகரியமோ?"

ஆன.—அவ்வளவு சீக்கிரத்தில் சொல்லக்கூடியதல்ல. 10-மைலுக்கப் பாலுள்ள கிராமத்தில் ஒரு வேலையாகப் போயிருந்தேன். சீக்கிரம் போய் 7-மணிக்குள் திரும்பி வந்து சேரலாமென்று பைசகிளில் ஏறிப் போனேன். வழியில் அசந்தர்ப்பம் சேரிட்டது. என் முழு முயற்சியினால் தான் இப் பொழுதாவது இங்கு வர முடிந்தது.

மால.—ஏதாவது ஆச்ரமத்தைச் சார்ந்த விஷயமோ.

ஆன.—அதுவும் தான். மற்றொன்றும்...மாலதி. எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது. வரும் வழியில் என் நண்பர் இராப்போஜனம் செய்யும் படி என்னை வற்புறுத்தினர். மறுத்து விட்டேன். நீ ஊண் சுழித்தாகி விட்டாதோ?

மால.—இன்று மில்லை.

ஆன.—என்.

மால.—இல்லை. இன்னு மில்லை. இனிமேல்தான்; தங்களுக்கு யாவும் தயாராயிருக்கிறது. போஜனம் செய்யவாருங்கள். அத்தையைக் கூப் பிடவா?

ஆன.—என். வேண்டாம். போஜனத்திற் கென்ன. உன் இஷ்டப் படியே யாகட்டும். இருவரும் போஜனத்துக்குச் சென்றனர். பிறகு தோட்டத்துக்குச் செல்லும் கதவினருகிலுள்ள ஓர் அறையில் இருவரும் நுழைந்தனர். அங்கு மேஜையின்மேல் இரண்டு கம்பங்களில் ஒரு நிலைக்க ண்ணாடி நின்றது. எலக்ட்ரிக் லேட்கள் பிரகாசித்தன. ஆனந்த மோஹன் ஒரு வோபாவில் அமர, மாலதி ஒரு நாற்காலியில் இருந்தாள். ஓர் பணிப் பெண் வாசனை கலந்த நீருடன் தாம்பூலம் தட்டுடன் கொண்டு வந்து சற்குணதாஸ் இடம் வைக்க அவர் மாலதியை நிமிர்ந்து பார்த்தார். மாலதி உடனே நகைத்து "அவளுக்கு தங்கள் குணம் தெரியாது. எல் லாரையும் போல் எண்ணி மரியாதைக்கு எடுத்து வந்தாள்." என அவர், "அதனால் பாதக மில்லை." என்று தாம்பூலத்தை மேஜைமேல் எடுத்து வைத்தார்.

மாலதி.—தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டும் அறிந்து மிருக்கிறேன். ஆயினும் தாம்பூலம் கூடத்தரிக்கக் கூடாதென்ற கொள்கை தங்களுக்கிருப்ப தாக நான் எண்ணவில்லை.

ஆன.—எல்லாரையும்போல நீயும் சொல்கிறாயே. நான் எதையும் வெறுப்பதுமில்லை, தரிப்பதுமில்லை. பிறர் என் எனக்கு இப்படிபட்டம் கட்டுகிறார்களோ? அவர்கள்போல கேவலமாக ஆத்திரப்படாவிட்டால் வெறுப்பு என்று அர்த்தம் செய்கிறார்களே. நான் அவ்வளவு மனிதனல்லவே யன்றி இழிவாக எண்ணுவதில்லை. என்னை ஞானியென்றும் துறவியென் றும் உலகோர் நினைப்பது வேடிக்கைதான்." (பணிப்பெண் தட்டை யெடுத் துச்செல்ல) "உன் தந்தையின்னும் வரவில்லையா?" என, மாலதி கண்களில்

GAJAPATHI
or
The New Robin Hood
By
Mr. K. K. Sreenivasa Chariar Avl M. A. M. L.
High Court Vakil, MADURA.

கஜபதி
அல்லது
நவீன ராபின் ஹூட்

(ஒரு நாடகம்.)

அங்கம்—I. களம் I.

இடம் :—போலீஸ் ஸ்டேஷனில் ஒரு அறை. காலம் :—பகல்

ராஜநாதன்.—(ராஜநாதன் பெஞ்சியில் சாய்ந்த வண்ணம் கடிதத்தைப் படிக்கிறான்.) பெற்ற தாயினும் உற்ற பந்து உலகிலேது? "அன்னையும் பிதா வும் முன்னெறி தெய்வம்" இதில் அன்னையையே முன்பாகக் கூறியுள்ளது. பெற்ற தாயை நான் அறியேன். ஆனால் பெற்றவளிலும் உற்ற தாயாக என்னைப் போற்றி வளர்த்ததால் தற்காலம் எதிரி ஸ்தானத்தில் விளங்கினும் என்மேல் குன்றாத அன்புடைய அம்மணீ! உன் கடிதத்தைப்படிக்க என் னதில் அன்பொரு பக்கமும் மனச்சோர்வு மற்றொருபக்கமும் உண்டாகின் றதே! நான்குழந்தையாய் உன் மடியிலிருந்து வளரும்போது, அம்மா! நீ எனக்கு சன் மார்க்கம் உபதேசம் செய்ய, நானும் உலகில் நான் எண்ணுகிறபடி யெல் லாம் நடக்குமென்று எண்ணி, "அம்மா, நான் பெரிய பதவியடைவேன். உன்னை ஆனந்தமர்த்தி உன் பொன்னடியை வணங்கி வாழ்வேன்." என்று நான் பிதற்ற நீ மகிழ்வாயே. அம்மா, அக்காலம் ராஜபோகத்திலிருந்த நீயும் உன் கணவனும், ஐயோ, கேவலம் கொள்ளைக்காரர்களாய் காடு மலைக ளில் திரிய, நான் உங்களைப்பிடித்துக்கொடுக்கும் போலீஸ் உத்தியோகஸ்த னாயிருக்க, நேரிடுமென்று கனவிலும் எண்ணினேனே! இவ்வுலகத்தி க்கு நீங்கு நினைத்தவரும் ஓர் கதியடைவார். உனக்குத் தீங்கியற்றுபவர்க்கு எக்கதியுமில்லையே. உத்தமியே, உன்னை நான்தப்பிவித்து விட்டேனென்று போலீஸார் சாற்றியபழி பொய்யாயினும், அது மெய்யாயிருப்பின், என் மனதுக்காவது சமாதானமாக விருக்குமே! என் தந்தையினும் பதின் மடங்காய் வளர்த்த! அவரும் (கஜபதி) என்னைச் சத்துருவாக பாவிக்க நேரிட் டதே. காலத்தின் கோலம் தான் என்ன? (கடிதத்தைப்பார்த்து) "உனை தருமைத் தாய் சுபத்திரா" ஐயோ! அம்மா. (சோபாவில் சாய்கிறான்.)

(துணைபூஷணனும் ஸப்மாஜிஸ்ட்ரேட்டும்
சம்பாஷித்துக்கொண்டு வருகிறார்கள்.)

துண.—ரானும் திவான்ஜியும் ஜாமீன் கொடுக்கவில்லை. அவன் வாக்கு மூலம் கொடுத்தது நம்பத்தகும் என்றோம். ஏன் அவன் படித்த கலாசாலை அதிகாரிகளும் அவ்வாறே சாட்சி சொன்னார்கள். அதின்மேல் அவனை நம்பினார்கள்.

மாஜீ.— அவர் என்ன வாக்கு மூலம் கொடுத்தார்?

துண.—அவர் தகப்பனார் சுந்தராம். இறக்கும் பொழுது தம் ஆஸ்தி 10,000-ரூபாயையும் இவரையும் கஜபதியிடம் ஒப்பு வித்தாராம். இவர் அப் போது 11-மாதம் நிறைந்த தாயில்லாச்சிசு. கஜபதி அக்காலம் எங்கும் புகழ்பெற்ற பிரபு. அவரிடம் வளர்ந்து வருகையில் அவர் சொத்துக்கள் மூலத்தார் ஜமீன்தாருடன் கூடிக் கொள்ளையிட்டவைகளென்று தெரிந்து அவரைத் தடுக்க முயன்றதில் கஜபதி கேட்கவில்லை. போலீஸ் ஆபீசர் அமீர் ஜமீன்தாரைப் பிடிக்க, அவன் கஜபதியை காட்டிக் கொடாமல் தற் கொலை செய்து மானத்தை காப்பாற்றிக்கொண்டான். கஜபதி திருநெல்வேலியில் பங்களாக் கட்டிக்கொண்டு வசித்தான். இவன் ஆயுதங்களைத் திருட்டுத்தன மாக தென்காசிக்கடுத்த மலைகளில் சேகரித்து வருகையில், அமீர் இவனை க்கண்டுபிடிக்க, இவன் ஓடி மலைக் காடுகளில் ஒளிந்துகொண்டான். ரகு நாதன் அப்போது பி. ஏ. பரீட்சை தேறினான். கஜபதிகூட சில காலம் இருந்துதன்னுயிரன்றவரை அவனைத்திருத்தமுயன்று பயனில்லாமல் போக வும் விலகிக்கொண்டான். பிறகு கான்வொகேஷனில் இவன் பெற்றபரிசு களையும் மெடல்களையும் கண்டு மகிழ்ந்து கனம் பொருந்திய கவர்னர் அவர்கள் ஸமயம் பார்த்து போலீஸ் டிப்டி சூப்பரின்டென்டெண்ட் வேலையை இவனுக்குக்கொடுத்தார். அது முதல் கஜபதிக்கும் இவனுக்கும் சம்பந்தமே கிடை யாது. தெய்வம் கஜபதியைப்பிடிக்கும்பார்ட்டியில் இவனைத்தலைவனுக ஏற்ப டுத்த,இவன்வேலையை ராஜினாமா கொடுப்பதாகச்சொன்னான். ஆனால் கவர்ன் மெண்டார் அவனுக்கு எவ்வளவோ புத்திமதி சொல்லி வாக்குத்தத்தங்களும் செய்து கஜபதியைப்பிடிக்க இவன் உள வறிந்த வனுதலால், இவனால் தான் முடியு மென்றும், பிடித்தால் இவனுக்காக கஜபதியைத்தயவாய் நடத்துவதா கவும் சொல்லிக் கண்டிப்பாக ராஜினாமாவை ஒப்புக் கொள்ளவில்லை.

மாஜி.—ஆம், எதோ சில மாதங்களுக்கு முன் கஜபதி மனைவியை ரகசியமாய்த் தப்பித்து விட்டாராமே! கேஸ் நடந்த தல்லவா?

துண.—ஆய, அந்த அம்மணிக்கு இவர் பேரில் புத்திர வாத்ஸல்யம். ரகுநாதன் வேண்டுகோளின்படி கஜபதியில்லாத வேளையில் இவரைக்கண்டு பேசுவதற்காக வந்தனள். அமீர் அச்சமயம் மரியாதையாக அவளைச் சிறை யிட்டனன். சிறைச்சாலையில் ஒரு நாள் இவர் அவளைக்கண்டு பேசிவிட்டு வந்ததும் அவளைப்பிறகு காணவில்லை. கஜபதியே சுரங்கம் வைத்து அவளை மீட்டுக்கொண்டுபோய் சிறைச்சாலையையும் கொளுத்தி விட்டுப் போய் விட்

டான். கஜபதி ரகுநாதனே தன் மனைவியைச் சிறைபிடித்ததாக மாதுர் துரோகி யென்று வர்மித்து சித்திரவதை செய்வதாக சபதம் செய்திருக்கி ருன். அமீருக்கு ரகுநாதன் பேரில் த்வேஷம். பொய்க் கேஸ் ஏற்படுத்தி னன். ஆனால் கஜபதி 10-நாளில் அமீரைக் குத்தி விட்டான்.

மாஜி.—கஜபதியிடம் நெருங்குகிறவர்கள் உயிரைப் பொருட்டாக எண் ணக்கூடாது. நீங்கள் இருவரும் இதில் பிரவேசித்திருப்பது அதிசாகசமான வேலை. ஏற்று திவான்ஜி, இந்த வேலைக்குத்திருவாங்கூர் காட்டில் இருப்பவ ரில் உத்தமமானவரும் இவனைப்பிடிக்க லாயக்கானவரும் நீர் ஒருவர் தான் என்று புகழ்ந்தார்.

துண.—அல்ல, என்னால் கூடியவரை முயற்சி செய் யலாமென்று தான் ஒப்புக்கொண்டேன். எனக்கு உயிர் பொருட்டல்ல, ரகுநாதன் நற்குணமு டையவனுதலால் அவன் பேம்பாடு தர்ம சங்கடமாயிருக்கிறது. கடமை யொரு பக்கமும் நன்றி வாஞ்சை மறு பக்கமும் இழுக்க அவன் இருதலைக் கொள்ளி எரும்புபோல் தயங்குகிறான்.

மாஜி.—ரகுநாதனுக்கு நீங்களே உதவி புரிந்து கெட்டபெயரை தீக்கி னதாக வதந்தி. நீங்கள் இருவரும் அத்யந்த நேசர்களல்லவா, சரி. நான் வரட்டுமா? குற்றாலத்தில் எங்கே, நாகைகுமாரபுவனமா? (புன்னகை செய்து தலை குனிகிறான்.)

துண.—(தனக்குள்) சாவித்திரியை நான் விவாகம் செய்து கொள்ளப் போவது தனக்குத் தெரியுமாம். முகத்தில் அசடு தட்டுகிறது. (வெளிப் படையாய்) அங்குதான் இறங்குவேன். நேரமாய் விட்டதே.

மாஜி.—இல்லை, மன்னிக்கவேண்டும். குமாரம் தங்கள் மாமனார் வாராமே. விவாகம் மதுரையிலா?

துண.—ஆம், நடந்தால் அங்குதான். கூட்மார்னிங்.

மாஜி.—குமாரம் ஆசாரச் சீர்த்திருத்தக் காராமே! பெண் 16-வயது நிறைந்து விட்டாளாமே.

துண.—சரி, நேரமாகிறது. குற்றாலத்தில் சந்திக்கும்போது பேசிக் கொள்ளலாம்.

மாஜி.—சரி நான் வருகிறேன். (போகிறார்).

துண.—(உள்சென்று ரகுநாதனை ஒருகையால் பிடித்துக்கொண்டு மற்ற கையால்கடிதத்தைப் பிரித்து படிக்கிறான்.)

ரகுநாதா,
நான் பத்திரமாய் போய்சேர்ந்தேன். உன் கேஸ் விஷயம் தெரிந்தது. இவர் உன்னை அத்தான்வஞ்சகனென்றும் வெளி வேஷம் போடுகிறானென்றும் உறுதியாக நம்பி வர்மிக்கிறார். நான் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். நீ அவர் உளவைத் தெரிவிக் காமல் ஒதுங்கிப் போகும்பட்சத்தில் உன்னை ஒன்றும் செய்ய

மாட்டார் என்றும்ஆஞல் உன்னை மன்னிக்கமாட்டார் என்றும் வாக்களித்தார். யுக்தப் படி செய். ஆஞல் தனியாய் இவர் கையில் அகப்பட்டுக்கொள்ளாதே. என் பாவிகையினுல் வளர்த்தகொடுமையோ நீ கஷ்டப்படுவது? எங்கேயாவது சுகமாயிரு. என் வாழ்காளில் முக்காலும் துன்பத்துக்கிரையானேன். இனி இருப்பதுகொஞ்சம். எப்படியாயினும் என்பதியிடமே எனக்குக் கதி. அதுவே கற்புடைப்பெண்டிருக்கு சுவர்க்கம். பகவான் உன்னை ரட்சிப்பார். காளீசன் புண்யம் இதை உனக்கு ஜவாறியா மல் அனுப்பினேன். இதைப்படித்து கிழித்தெறிந்து விடு.

உன் அருமைத்தாய்,
சுபத்ரா.

ரகு.—(பெருமூச்சுடன்) ஆம். அவர் வர்மிப்பது நியாயமே. அவர் உளைவை நான்! தெரிவிப்பது துரோகம்தானே இப்படி அகப்பட்டுக்கொண் டேனே. எதோ கவர்னரே வலலில் அளித்த வேலையென்று எல்லாரும் என்னை மெச்சினர்களே. இப்படி பெற்ரோருக்கு தீங்கிழைக்க நேரிடு மென்று தெரியாதே! வேலையை ராஜினுமாக் கொடுத்தாலும் வாங்கமாட்டார் களே. ஜயிலுக்குப் போயிருந்தாலும் நல்லது. ஆஞல் எதோ இவரைப்பிடிப் பது நியாயம் நிறைவேறுமதற்காகவென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆம். கொலைகளவு செய்யும் திருடர்களைப்பிடிப்பது தேசத்தின் நன்மைக்காகவே. அதிகாரிகள் வேறு ஆசைகாட்டுகிறார்கள். "வேறு எவனையேனும்பிடிக்க நிய மிக்கப்பட்டால், அம்மாளுக்கு அவமானம் நேரிடலாம். அல்லது அவரை கஜபதி அவமானப்படுத்துவான், அல்லது உயிர்ச்சேதம் செய்வான். நாளு ஞல் அவமானம் உயிர்ச்சேதம் நேரிடாமல் பிடிக்கலாம். என்னிடம் அவர்கள் ஒருக்கால் பிடிபட சம்மதிக்கலாம்" என்கிறார்கள். இது உறுதியாவென்று யோசித்தேன். அவரையும் என்தாயையும் மன்னித்து விடுவதாக கவர்னர் எனக்கு உறுதிமொழி கொடுத்துவிட்டார். நான் பிடிக்கா விட்டால் பலவித இம்சைகள் எனக்கும் என் பெற்ரோர்க்கும் நேரிடலாம்! ஆகையால் நான் இப்படி நடப்பதே நலம். அதுதான் விதி. பூஷணம்! என் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கும்படி செய்தது நீயல்லவா? உன் நிநேகத்தினுல் கட்டுப்பட்ட எனக்கு நீ உபதேசிக்குமபோது எல்லாம் நியாயமாயும் புத்தியுள்ளதாயும் தோன்றுகிறது. மற்றவேளைகளில் என் மனம் என்னை வளர்த்தவர்களுக்கு துரோகியென்று சுடுகிறதே.

சுன.—"ஐயோ, நாள்முழுதும் இதுதான் வேலையா? முடிவாகக்கேள். நான்சொல்லும் புத்திமதி சரியானது. அதை ஒப்புக்கொள். நீ என் உயி ருக்குயிரான நண்பன். இப்போது செய்வதுதான் சரியென்று உறுதிகொ ள். அன்றேல் என்னை கொலை செய்துவிட்டு கஜபதியுடன் கூடச்சோந்து கொலைகளவுகளை மும்மரமாய் நடத்து. இரண்டிலொன்று செய். இவ் விஷயத்தில் நடு நிலைமை அசாத்தியம். இருதிறத்தாரும் உன்னை நம்பார்.

Supplement to 'Female Education'. 'பெண்கல்வி'க்கு அனுபந்தம்.

November, 1913. நவம்பர், 1913.

The Hon'ble P. RAMANATHAN, K.C., C.M.G., M.L.C.,
Elected to represent the Educated Ceylonese in the Legislative Council of Ceylon.

ஆனரபிள் மிஸ்டர் பி. ராமநாதன்,
சிலோன் லெஜிஸ்லேடிவ் சவுன்சிலில் வித்தை இலாசார ஜன ப்ரதிநிதி.

44

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

THE FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்ராதிபர் :
ஸகோதரி ரேவு. தாயாரம்மா.

Vol. 3. தொகுதி 3. } ப்ரமாதீசஹு கார்த்திகை, Nov., 1913. { No. 2. பகுதி 2.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண்கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடல் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

45

BENEDICTION VERSE.

பெண் கல்விச் சதுரங்க பந்தனம்.*

ற	ன்	சா	ச்	ன	ன்	வெ	வா
னி	து	பே	ணி	ம	தா	ணி	ய
னி	றி	பெ	லை	சா	து	லோ	நா
யே	ணி	வி	ண்	ணை	த்	தொ	ட
மா	க	ச	யா	க	க்	றி	ர்
ற	பு	ண்	ணை	லொ	ல்	கு	வீ
ன்	கி	டு	ணி	வீ	தி	வி	ச
ளை	ம	ட்	டி	லோ	ம	கி	யே

கட்டளைக் கலித்துறை.

வாணி துணையாண் கிளாமட்டி லோமகி யேசவிதி
வீணிடு கின்றபுண் ணுலோல்கு வீர்மிக்க யாசகமா
யேணிவிண் ணைத்தொட நூலோது சாலை பெழினினிது
பேணி மதாணி யவாவேன்னச் சான்றது பெண்கல்வியே

* இஃது சென்ற மாஸப் பத்திரிகையில் ப்ரசுரிக்கமுடியாதபடி தாமதமாய் வரப்பெற்றதால், இந்த மாஸத்தில் ப்ரசுரிக்க நேரிட்டது. இதன் பொருள் 5-வது பக்கம் பார்க்க.—ப-ர்.

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

RAMANATHAN COLLEGE GITAMS.

ராமநாதன் காலேஜ் கீதங்கள்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. ஓலையெழுத் துக்கணக்க ரிந்தியர்தம் முயிர்மான மொப்புமாதர் [பாட
மூலைதொறுஞ் சிறையடிசில் வேலையெல்லாஞ் சகித்தாலும் முறைமைப்
சாலையிலே சிறுவயதிற் சாதகஞ்செய் கல்வியொன்று சார்வாராயின்
மேலைவரு மில்லறத்து விளங்குமணி விளக்காவார் மெய் மெய்தானே.

2. தானேநேர் கண்டுகொண்ட தடம்பொதுவா யிந்தியமா தருக்குச்செய்ய [பாணப்
நானேயென் றன்புமுன்பு நல்கவரு சிவராம நாதா மெச்சுங்
தேனேபோற் செந்தமிழுந் தெய்வவணக் கமுங்கற்புஞ் சிலோன் யாழ்ப்
பாணேரப் பெரும்பலனைப் பாலித்தாய் வாழியநீபல் லாண்டுக்கே.

3. ஆண்டுக்காண் டபிவிர்த்திப் பெண்களெல்லாந் தாய்மார்களாஞல் மற்றை
வேண்டுற்சா கந்தேச மீதென்ஞே வாத்திமையாய் வீற்றிருந்து
மாண்டுற்ற காலுமரு வைத்தியன்தேர் புகழ்ந்து மாதர்மேன்மை
ஈண்டுய்த்த யாழ்ப்பாணத் திராம நாதன்கா லேஜென்பாரே.

4. பாருக்குட் புகழ்பெணும் பாரிஸ்ட ரட்லாவாய்ப் பரிட்சைதேர்ந்தாய்
ஊருக்குட் கவர்ன்மெண்டார் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்கும் உற்ரு
[யாலின்
வேருக்கும் விழுதுக்கும் பேருக்குப் பேரோங்கும் விதமே லங்கை
நாருக்கு மணங்கொடுத்தாய் பூராம நாதசைவ ஞானவானே.

5. வானேறு முகில்வழக்கு ரினதுகொடை யெல்லார்க்கு மகிழ்ச்சி மொய்த்
[துப்
பேனேறு தலைச்சமணப் பெண்களுரன் ணடைச்சுமெயிற் பிறங்கக் காலக்
தானேறுங் கூழ்ப்பண்ணை யாழ்ப்பாண ராமநா தாதின் காலேஜ்
ஆனேறு மரணருளா லரங்கேறி வரங்கோரு மழகு வாய்த்தே.

கட்டளைக் கலித்துறை.

ஆணைப்பிறந்தவர் புண்யரென்றும் பெண்க ளாகவந்து
வீணைப்பிறந்தவர் பாவிகளென்றும் விதிவிதித்த
காணைப்புதுமை கண்டாரிர்து தேசத்துக் காரிகைமார்
பூணைப்பிறங்குஞ் சிவராமநாதன் புதுமடமே.

ஜல்பலகே நாரிதோரி என்கிற மெட்டு.

கானரச மேவிலீலை
காலேஜில் வாசிக்கும்
காணுமிந்தி யாமாதர்
கற்புநெறி மெய்க்குமணு
காரியஞ்சீர் பெறும்
கட்டடச்சுகாகூடி யாழ்ப்
லாவாணியிஷ்டப்ர
காண்டா யிரத்துத்தெரி
ஆல்டுச் சனவரியின் பதினைழில்—மீதுதி பதினைழில்

ஆனரபில் ராமநாதன்
காலந்தான்
பேணுபுதா சாரங்கள்
கூலந்தான்
வீரியம் போர்பெறும்
பாணத்திலே—க
மாணத்திலே
ளாயிரப்பதின் மூன்றும்

ஜப்தகலந்தரு மெட்டு.

1. சங்கஜனமகா மண்டபமழகாச்
சமைந்தமேத புதுமை இனியபடி
தனி நடிமுற்றம் கனிவொடு பெற்றம்
சரி நூற்றைம்பது சதுரவடி
தாக்குள்ள சுண்ணை ரயில் மார்க்கத்தேத மேலால்
பார்க்கையிலிருபத்தைந்தா மேக்ரா விசாலம்
பாடசாலே பெண்கட் காகவே இனிய
பாடசாலே பெண்கட்காகவே
சாப்பாட்டுடன்-யாழ்ப்பாணத்தி லேற் பாடென்பது
சார்வபூமன் ராமநாதன் காலேஜ் அன்பது (

2. உத்தமசுந்தரி யுனதிட மெனதொரு
சித்த பகிழ்ச்சியைச் செப்புவனே
உய்த்தமுயற்சித்தித் திக்குங் கரும்புதின்னக்
கைக்கூலி யுந்தரின் ஓப்புவனே—நீ
ஓ தினதில் யாதுமொரு தீ தில்லையடி—என்
காய் தகப்பன் மார்களுக்கே கா தில்லையடி—நாம
ஊக்கந் தரவேணுமே இனிமேலே நாம்
ஓமென்ற சிவாயநம மூலமந்திரம்
ராமநாதன் காலேஜிலே நாமுறுமவரம் (

3. அன்னவஸ்திரங்களிற் பின்னமில்லாம
லாதரித்தவர் கண்டோலே
உன்னதக்கல்வியு முதவிடுதருமம
முலகிலெவர்செய்தா மன்பாலே



(அ)

(ஒ)

(ஓ)

(ஔ)

நள்.
விதி
ணை
சகா
யாச
தாட
மாய்
னல்
றது
தில்
ல்வி
றது

November, 1913. நவம்பர், 1913.



'பெண்கல்வி'க்கு அனுபந்தம்.

3.

ஒப்புவமையற்றகொடை யிப்புவிமேலே - இனி
ஓங்கு மிந்தி யாமுழுதுந் தாங்கு செங்கோலே - போ
லூன்றுங் கல்வி வாழியே பெண்கள் கருத்தி
உற்றமுத்து ஸாமி கவி கற்று வழியே சீர்
பெற்ற ராமநாதன் காலேஜ் முற்றும் வாழியே (அ)

ஓம் சிவாயநம கீர்த்தனம்.

தோடிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஓம் சி வாயநம வெனவே நீ
உச்சரி மனமே (ஓ)

அனுபல்லவி

நேமவிரதமொடு ராமநாததுரை
நேசபூஷணவி பீஷணாதி கவி (ஓ)

சரணம்.

சாதிமதம் போதிக்குஞ் சற்குருபீடம்
சற்புருஷ ஸ்திரீகள் கற்பகப்பாடம்
ஆதியமைத்தகுடி யரசுவிசேடம்
அறிவுக்கறிவுதரும் அமிர்தலலாடம் (ஓ)

'பெண் கல்வி'ச் சதுரங்கபந்தன வாழ்த்தின் பொருள்.

விதி வீணிடுகின்ற புண்ணால் ஒல்குவீர் = வீணாக விதி விதி
யென்று (மிடிப்) புண்ணால் தளர்கின்றவர்காள்! வாணிதனை
ஆண்கிளை மட்டிலோ = நீங்கள்சொல்லும் சரஸ்வதியின் சகா
யம் ஆணாகப்பிறந்த வகுப்புக்கு மட்டுந் தானோ? மிக்க யாச
கமாய் = யாவருக்கும் பரோபகாரமாக, ஏணிவிண்ணைத் தொட
நூலோது சாலைபெறின் இனிது = படிக்குப்படி உன்னதமாய்
நூலோது பாடசாலையிற் பெண்கள் கல்வி பெறுவாரானால்
அது இனிதுதான். பேணிமதாணி யவாவென்னச் சான்றது
பெண்கல்வியே = விரும்பி மார்பிலணியும் ஆபரணத்தில்
வைக்கும் ஆசையென்னும்படி பெண்களுக்கு பெண்கல்வி
யென்னும் பத்திரிகை (பெண்கல்விப் பத்திரிகை) சான்றது
தான்.

உ. முத்துஸாமி கவி.

PROGRESS OF THE WORLD.

ப்ரபஞ்சப்போக்கு.

Indians in South Africa.

தென்னப்ரிக்கா இந்தியர்கள் :—இப்போது எங்குபார்த்தாலும் ஓரே கூக்குரலாயிருக்கின்றது. படித்தமனிதர்கள் முதற்கொண்டு பாமரர்வரையில் தென்னப்பிரிக்கா இந்தியபுருஷர்களும் ஸ்த்ரீகளும் படும்கஷ்டங்களைப் பற்றிப்பேசியும் கண்ணீர்விட்டும் துயரத்தில் அழுந்திருக்கிறார்கள். அப்படி நம்ஜனங்கள் தென்னப்ரிக்கா இந்தியர்களைப்பற்றி வருத்தப்பட பலத்த காரணமிருக்கவேண்டும். தென்னப்ரிக்காவில் வசிக்கும் இந்தியர்களை அவ்வூர் வெள்ளையர்கள் காலாவித சங்கடங்களுக்கு உட்படுத்துகிறார்கள். படிக்கிறவர்களுக்கு ஏன் இந்தியர்கள் அங்குபோனார்கள். அவர்கள் திரும்பி இந்தியாவுக்கு வரக்கூடாதா என்ற சம்சயம் உண்டாகலாம். அறுபது வருஷங்களுக்குமுன் தென்னப்ரிக்காவில் அநேக இடங்கள் தரிசாகக்கிடந்தது. அவைகளை செம்மைப்படுத்த தகுந்த ஆட்கள் கிடைக்காததால் தென்னப்ரிக்கா கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாரை இந்தியக்கூலிகளை ஒப்பந்தத்தின்பேரில் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்கி இந்தியா கவர்ன்மெண்டார் அநேக இந்தியக் கூலிகளை அனுப்பித்தார்கள். இந்தியக்கூலிகள் அந்த நாட்டிலேயே தங்கத்தக்கவசதிகள் செய்யப்பட்டன விலையன்னியில் நிலமும் கொடுக்கப்பட்டது. எல்லாவற்றையும் பெற்றுவாழ்ந்தனர். சொற்பகாலத்துக்குள் அங்கு வசிக்கும் வெள்ளையர்கள் இந்தியர்களைக்கண்டு பொறுமைகொண்டு இந்தியக்கூலிகள் வரவழைப்பதை நிறுத்திவிட்டார்கள். அநேக தொழில்கள் நாசமடைந்தன.

பிறகு 1874-ம் வரு இந்தியக்கூலிகளை வரவழைக்க ஆரம்பித்தார்கள். இது வெகுகாள்வரையில் நடந்துவந்தது. 1887 வருஷத்தில் இந்தியக்கூலிகள் வரக்கூடாதென்று முறையிட்டார்கள். இதைப்பற்றி ஓரு விசாரணை நடந்தது. இந்தியக் கூலிகளை வரவழைப்பதைமாத்திரம் நிறுத்தவில்லை. அதற்குப் பதிலாக அநேக ஆபாசமான வரிகளை இந்தியர்கள்மேல்போட தலைப்பட்டார்கள். தென்னப்ரிக்காவில்வசிக்கும் ஒவ்வொரு இந்தியனுக்கும் ஆணையிருந்தாலும் பெண்ணையிருந்தாலும் தலைக்கு வருஷம் 1-க்கு 3-பவுன் வரி

போட்டார்கள். அவர்களுடைய சந்ததிகளும் பெண்களுக்கு 18-வயதுக்கு மேலும் பிள்ளைகளுக்கு 16-வயதுக்கு மேலும் செலுத்தவேண்டும். இவ்வரிச்சட்டத்தை வெள்ளையர்களில் அநேகர் கண்டித்துப் பேசினார்கள் பயனில்லை. இந்தியர்களுக்கு விரோதமாக அநேக ஆபாஸமான சட்டங்கள் ஏற்படுத்தினவைகளில் முக்யமானது இந்துமத தர்மப்படி விவாகமான ஸ்த்ரீகள்வைப்புகளாகக்கருதப்படுகிறார்கள். 1911 வருஷத்தில் தென்னப்ரிக்கா கவர்ன்மெண்டார் 3 பவுன்வரியை எடுத்து விடுகிறோமென்று வாக்களித்திருக்கிறார்கள். இந்தி இப்போது சாக்குப்போக்குச் சொல்லுகிறார்கள். இந்தியர்கள் தென்னப்ரிக்கா கவர்ன்மெண்டார் சொன்னவாக்கைக்காப்பாற்றவேண்டுமென்று எதிர்க்காமலெதிர்க்கும் முறையை அனுஷ்டித்து வருகிறார்கள். சுரங்கங்களில் வேலைசெய்யும் கூலிகளை கசையடி யடிக்கிறதும் பட்டினிபோடுகிறதுமாகச் செய்கிறார்கள். இந்தியர்கள் ஆயிரக்கணக்காக ஜெயிலி லடைக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னப்ரிக்காவில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தலைமை வகித்து மகா உத்தமவீர சிங்கமான ஸ்ரீமான் காந்தி யென்பவரையும் அவருக்குத் துணையாயிருந்த அநேகர்களையும் ஜெயிலி லடைத்துவிட்டார்கள். எதிர்க்காமல் எதிர்க்கும் புருஷர்களுடன் அநேக ஸ்த்ரீகளும் தங்கள்குழந்தைகளுடன் ஜெயில் வாசம்செய்கிறார்கள். இந்திய புருஷர்களும் ஸ்த்ரீகளும்படும் கஷ்டங்கள மனதிரலும் நினைக்கமுடியதென்று தினம் தந்திமேல் தந்தி வந்துகொண்டிருக்கின்றன. இவர்களின் கஷ்ட நிவர்த்திக்காக இந்தியாவில் அநேக இடங்களில் புருஷர்களும் ஸ்த்ரீகளும் கூட்டங்கூடி அனுதாபத்தையும் தெரிவிக்கிறதும் பணவுதவியை யனுப்புகிறதுமாகயிருக்கிறார்கள். சில ஆங்கில பத்திரிகைகள் இந்தியர்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டாலே என்று முட்டாள்தனமாகப் பேசுகிறது. அப்படி வருகிறது ஆண்மைத்தனமுமன்று நியாயமுமன்று. சர்வேச்வரன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். தர்மம் தலைகாக்கும் என்கிற வாக்கை ஓழுகி நடக்கும் ஸ்ரீமான் காந்தி முதலான சகோதர சகோதரிகளுக்கு பகவான் துணைநின்று நியாயத்தை நிலை நாட்டுவார்.

Hon. Mr. P. Ramanathan College

ஆனரபிள் ராமனதன் காலேஜ் :—ஆனரபிள் மிஸ்டர். பி. ராமனதன் அவர்களால் யாழ்ப்பாணத்தில் மருதயினர் மடத்தடியில்

இந்தியஸ்த்ரீகளுக்காக ப்ரத்தியேக காலேஜ் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இவ்வருஷம் ஜனவரிமீ 17உ முதல் நடைபெற்று வருகிறது என்று நம் பத்திரிகையில் கூறியுள்ளோம். இக்காலேஜுக்காக விடப்பட்டிருக்கிற பூமி விஸ்தீர்ணம் 25 ஏகரா. இக்காலேஜ் சுன்னகம் ரயில்ஸ்டேஷனிலிருந்து ஒருமைல் தூரமுள்ளது. காலேஜ் கட்டடம் 150 சதுரடி முற்றம்விட்டு கட்டப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீ வித்யார்த்திகள் இக்காலேஜில் தாராளமாய் தங்கிப்படிக்கவும் [illegible] ணம் செய்யவும் உரங்கவும், சாப்பிடவும் முதலிய சகல களும் மிகவும் நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பூர்வ குலவாசத்தில் எப்படி ஒழுக்கம், கல்விப்பயிற்சி முதலியவைகளில் தேர்ந்தவித்வ சிரோமணிகள்கூட ஒருங்கிப்பழகி ஸேவாசமாக இருந்து வித்யார்த்திகள் கற்றுத்தேர்ந்து வெளிவந்தார்களோ அப்படியாக ஒழுக்கத்திலும் கல்வியிலும்தேர்ந்து இருக்கிற உபாத்தினிகளுடன்சேர்த்து நம்பெண்களை குடும்பத்துக்கும் பொதுக் காரியத்திற்கும் உபயோகமாயிருக்கும் படிச்செய்வதே இக்காலேஜின் முக்யோத்தேசம். ஸ்ரீமான் ஆனரபிள் ராமஞதன் ஏற்படுத்தியிருக்கும் காலேஜைப்பற்றியும் அது நடத்தப்படும் முறையைப் பற்றியும் தேசங்களாக அமைத்து தேசத்திரட்டில் வெளியிட்டிருக்கிறோம். குழந்தைகள் மிகவும் எளிதாகப்பாடலாம். காலேஜ் ஸ்தாபகராகிய ஆனரபிள் ராமஞதன் அவர்களின் படமும் காலேஜ் படமும் நமது பத்திரிகையில் சித்ரப்படங்களாக வந்திருக்கிறது. அக் காலேஜில் பெண்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள் அநேக பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமாயிருக்குமாதலால் அடுத்தப் பத்திரிகையில் விபரமாக வெளியிடுகிறோம்.

Viceroy's Visit.

வைசராய் விஜயம்:—நமது ராஜப்ரதிநிதி லேடி ஹார்டிஞ்சு சமேதராக சென்னை விஜயம் செய்ததற்காக அவர்பேரிலும் லேடி ஹார்டிஞ்சுபேரிலும் வாழ்த்து தேசங்கள்பாடி அச்சு செய்திருக்கிறதை சந்தாதார்களுக்கு ஒவ்வொரு ப்ரதி இதோடு அனுப்பியிருக்கிறோம். மிகவும் எளிய நடையில் தேசங்கள் அமைக்கப்பட்டிருக்கிறதால் நமது சகோதர சகோதரிகள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து பாடச்செய்வார்களென்று நம்புகிறோம்.

THE EDUCATION OF INDIAN GIRLS

By

Mrs. Annie Besant,

President, Theosophical Society, Adyar.

THE education which is to be given to Indian girls must neither despiritualise nor denationalise them; it must leave them devoted to God, to the husband, to the child, while adding an intelligent understanding of religion to their devotion to God, a sympathetic comradeship in the following of national ideals to their devotion to the husband, a wise and well-considered guidance to their devotion to the child. They must become strong in patriotic as well as in family self-sacrifice; they must be workers for the nation's good as well as for family happiness; they must preserve the ancient ideals of womanly perfection and reproduce them in modern days, instead of accepting the dwarfed conception of womanhood which has replaced these in the India of the present.

May I suggest for the consideration of the Indian public a tentative scheme of education which may serve as a basis for discussion?

General (1). Religious and moral instruction, on the lines laid down in the *Catechism* and the *Sanatana Dharma Elementary Text-Book* for Hindu girls. For Musalmans, Christians, and other religious bodies equivalent instruction on their own lines. The morning school should open with a short service—consisting of a hymn and a very brief address on some virtue—in which all could join; the special religious lessons may be given twice a week to the girls classified by their faith and knowledge. In a very liberal school, this lesson might be shared in by all, being confined to the great religious doctrines on which all religions are agreed, and illustrated by passages from the various great Scriptures.

(2) A thorough literary knowledge of a vernacular—their own of course. This is necessary for the preservation and enrichmen

The valuable contribution on this subject by Hon. Mr. T. V. Seshagiri Aiyar in our last issue has elicited from Mrs. Besant the present article. We are much indebted to our dear mother who had ample opportunities to study the subject at first hand for giving us the benefit of her long experience.—*Ed. B. B.*

of the Indian vernaculars, in which so much fine literature already exists. A fair knowledge of Sanskrit or Arabic, according to religion for Hindu and Musalman girls; of Gurumukki for Sikhs. A knowledge of English, sufficient for fluent speech and for reading without any sense of difficulty, so that any who desire to become acquainted later with English literature may find the way open and all may be able to understand and sympathise with their husband's public work.

(3) Scientific instruction, sufficient to convey a working knowledge of sanitation, hygiene, the value of food-stuffs, simple household remedies, how to deal with a cut, a burn, a sprain, a bite, a fainting fit, and slight childish ailments. The elder girls should have a class for first aid, and if possible, of cookery for the sick.

(4) Teaching in some art for which a natural taste exists—music, drawing, embroidery (on Indian models) and other forms of needle-work.

(5) Physical exercises, for the development of the body in strength, flexibility and grace.

Such a course could be passed through without any undue strain in eight years, from seven to fourteen years of age, both years included, and a solid foundation would thus be laid for future progress. Girls of fifteen and sixteen may then remain in the house entering on married life at seventeen.

Higher Education. The education for teachers, for medical women, so skilled nurses—all so much needed in India would be built on the foregoing, and would have to be provided in Women's Colleges. This would be taken up by girls who had a vocation in any of these directions, or a wish to pursue their studies further. They would necessarily pass into the ordinary training for these professions, established for men. At present, few would enter on these careers, but a yearly increasing number in the more advanced sections of the community will be likely to graduate, even if they pass into married life. School might have classes for Matriculation but Women's Colleges must be established for the further education of the elder girls who study for University degrees.

இந்தியப் பெண்களின் கல்வி.

மாது ஸ்ரீ அன்னி பெஸன்ட் அம்மையவர்கள் எழுதியது.

இந்திய பாலிகைகளுக்கு போதிக்கப்படும் கல்வி அவர்கள் நாஸ்திகர்களாகும்படியாவது, விஜாதியர்களாகும்படியாவது செய்யக்கூடாத தன்மையதாயிருக்கவேண்டும். இக்கல்வியானது இந்திய பாலிகைகளிடம் தெய்வபக்தி, புருஷபக்தி, குழந்தைகளிடம் வாஞ்சை, இவைகளை உண்டாக்கவேண்டும். அதாவது, தெய்வபக்திக்குச் சாதகமாய் அவர்கள் தங்கள் மதங்களைப்பற்றி அறிந்துகொள்ள அவர்களுடைய அறிவு வருத்தியாகவேண்டும். இந்திய ஜாதிய இலக்ஷ்யங்களாகிய புருஷனிடத்தில் பக்தியிலும் குழந்தைகளிடம் காட்டவேண்டிய வாஞ்சையிலும் இவர்கள் மனமொத்து வாழவேண்டும். தேசாபிமானத்திலும் குடும்பத்திலும் த்யாகம் செய்ய திடமனதுள்ளவர்களாகும்படி கல்வி அவர்களைச் செய்ய வேண்டும். ஜனசமூக நன்மையிலும் குடும்பம் குதூகலமா யிருக்கவிலும் இவர்கள் உழைப்பவர்களா யிருக்கவேண்டும். நம் பூர்வ ஸ்த்ரீகளாகிய சாவித்ரீ சீதா போன்ற உத்தம ஸ்த்ரீகள் முறைகுபோகாதபடி அவர்களின் மேலான இலக்ஷ்யங்களைப் பின்பற்றி நற்காலத்தில் இவர்கள் ஒழுகிக் காட்டவேண்டும். நற்காலத்தில் நம் தேசத்தில் ஸ்த்ரீகளைப்பற்றிக் கொண்டிருக்கும் குறுகலான நோக்கத்தைப் பின்பற்றி நடக்கக்கூடாது.

கல்வி சம்பந்தமாய் அனுபவப் பரீக்ஷைபார்த்துத் தீர்மானிக்கவேண்டிய ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன். இதை ஆதாரமாகக் கொண்டு இந்தியர்கள் ஆராய்ந்து யோசித்துத் தீர்மானத்துக்கு வரலாமென்று நினைக்கிறேன்.

(1) போது :—இந்து பாலிகைகளுக்காகதயார் செய்யப்பட்டு வருவிடையாகவுள்ள சகாதன தர்ம ப்ரதம டெக்ஸ்ட் புஸ்தகத்தில் வருத்தக் கூறப்பட்டுள்ளபடி மத சம்பந்தமாயும் ஒழுக்க சம்பந்தமாயும் கல்வி கற்றுக் கொடுக்கப்படலாம். மகமதியர்கள், கிறிஸ்தவர்கள், இன்னும் புறமதஸ்தர்கள் அவரவர்களுடைய முறைப்படி மேற்கூறிய மாதிரியில் கற்றுக்கொடுக்கப்

படலாம். ப்ரதி தினமும் காலையில் பள்ளிக்கூடம் கூடும்பொழுது தேவ ப்ரார்த்தனை செய்து தேசம் பரடி, சுருக்கமாய் ஒழுக்கத்தைப் பற்றிச்சொல்லி முடிக்கவேண்டும். இதில் சர்வத்ராலும் சேரலாம். ப்ரத்யேகமான மத போதனை வார மிருமுறை அவரவர்கள் மதப் ரகாரமும் புத்திக்குத் தக்கபடியும் ஏற்பாடுசெய்யப்படலாம். சர்வ சமய உண்மைகளை அங்கீகரிக்கும் தாராளமான மனதுடை யவர்கள் நிர்வாகத்திலிருக்கும் ஸ்கூல்களில் மதபோதனை எல்லோ ருக்கும் ஒருங்கே யாதொரு வேறுபாடுமில்லாமல் கற்றுக் கொடுக் கப்படலாம். இதில் சகல மதங்களாலும் அங்கீகரிக்கப்படும் உண் மைகளும் கொள்கைகளும் அனேக மத க்ரந்தங்களிலிருந்து ஆதா ரங்களும் மேற்கொள்களும் எடுத்து ஓதி போதிக்கப்படலாம்.

(2) இந்தியதேச பாஷைகள் வழக்கத்திலிருக்கவும், வரு த்தியாகவும் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் தேசபாஷை யில் சம்பூர்ணஞானம் அவச்யம். இத்துடன் இங்க்லீஷ் களா யிருந்தால் சம்ஸ்க்ருதத்திலும், மகம்மதியர்களா யிருந்தால் அரபியிலும், சாதாரண ஞானம் இருக்கவேண்டும். இங்க் லீஷ் தாராளமாய்ப்பேசவும், ச்லமின்றி எடுத்த புஸ்தகத்தைப் படிக்கவும் இந்த பாஷையில் தேர்ச்சியிருந்தால் போதுமானது. இவ்வளவு தேர்ச்சியிருந்தால்தான் ஒருவேளை பிரியப்படுகிற வர்கள் பிற்காலத்தில் இங்க்லீஷ்கல்லிக் களஞ்சியத்தை அறிய சாத்யமுள்ளவர்களா யிருப்பார்கள். மேலும் இவ்வளவு அறி வில்லாவிட்டால் ஸ்த்ரீகள் தங்கள் புருஷர்களுடைய பொது நன் மையைகாடிய உழைப்புகளை பாராட்டுவதும் அனுதாபப்படுவதும் முடியாது.

(3) சாஸ்த்ரீயக்கல்வி :—சுகாதார சம்பந்தமாய் வாழ்க்கைப் பழக்கத்துக்குத் தேவையான ஞானமும், ஆகாரவகைகளின் குணம், ப்ரயோஜன ஞானமும், வெட்டுகாயம், தீக்கொப்புளம், களுக்கு ஜ்வத்துக்கடி, மூர்ச்சை, குழந்தைகளுக்கு சகஜமாய் உண்டாகும் வ்யாதிகள் முதலானவைகளை வைத்ய சகாயமின்றி சுலபமாய் சிகித்ஸைசெய்து குணப்படுத்தும் ஞானமும் உண்டாகும்படி சாஸ் த்ரீயக்கல்வி இந்த வழிகளில் கற்றுக்கொடுக்கப் படவேண்டும்.

(4) அவரவர்கள் ஸ்வபாவத்துக்கு தக்கப்படி, லஸ்தேதம், சித் ரம் வரைதல், (இந்தியன் மாடல்) தூவேலை, மற்றும் தையல்வேலை

இவைகளில் எதில் ப்ரியமிருக்கிறதோ அதை அறிந்து அவர்க ளுக்கு அதைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

(5) தேகமானது வலுவுள்ளதாயும், வளையும் தன்மையுள்ள தாயும் அழகுள்ளதாயும் வளரும்படி தேகாப்பாஸங்களை பெண் கள் செய்யவேண்டும். இத்தனிதம் மேற்சொன்ன வழிகளில் ஏழிலிருந்து 14 வருஷம்முடிய எட்டு வருஷகாலம் அனுவச்ய மான ச்ரமமின்றி பழக்கப்படலாம். இத்தப்பயிற்சி பிற்கால சு வாழ்வுக்கும் வ்ருத்திக்கும் உரப்பான அஸ்திவாரம் போலுதவும். 15, 16 வயதுள்ள பெண்கள் க்ரகத்திலிருக்கலாம். 17 வயதில் புருஷனோடு வாழத்துவக்கலாம்.

உயர்தரக் கல்வி :—இந்தியாவில் தற்காலத்தில் அவச்யமா யுள்ள உபாத்தினிகள், வைத்யஸ்த்ரீகள், தேர்ந்த மருத்துவத்தாதி கள் இவர்களுடைய தொழிற்கல்வி மேலேகூறிய கல்வியை ஆதா மாகக்கொண்டு கற்றுக்கொடுக்கமுடியும். இவைகளை ப்ரத்யே மான ஸ்த்ரீகள் காலேஜ்களில் கற்றுக்கொடுக்க ஏற்பாடாகவேண் டும். அப்பொழுதுதான் ஏதாவதொரு தொழிலில் ப்ரவர்த்திக்க அபிலாஷையுள்ளவர்களுக்கும் மேன்மேலும்படிக்க விருப்பமுள்ள வர்களுக்கும் ஒரு வழியுண்டாகும். இப்பொழுது இந்த விதத் தொழிலில் ப்ரவேசிக்கிறவர்கள் அற்பம். ஆனாலும் உயர்தரச் சுபம்பங்களிலுள்ள ஸ்த்ரீகள் கல்யாணமாயிருந்தாலும் பி. ஏ பட்டம் பெறுகிறவர்கள் வருஷவருஷம் அதிகமாகிக் கொண்டு வரும். ஸ்கூல்களில் மேட்ரிகுலேஷன் வகுப்பிருக்கலாம். இருந் தாலும் யுனிவர்ஸிடி பட்டங்களை அபேக்ஷித்துப் படிக்கவிரும்பும் வயதுசென்ற பெண்களுக்காக ஸ்த்ரீகள் காலேஜ்கள் கட்டாய மாய் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

(மொழிபெயர்ப்பு.)

ஒருவனுக்கு வாழ்க்கையிலுண்டாகும் துர்திஷ்டங்களை அவன் தன் வாழ்க்கையின் ஏணிப்படிகளாக பாவித்து வாழ்க்கை யின்பேற்றை அடைய மேலேறிச் செல்வதுதான் வாழ்க்கையின் கோக்கத்தை அறிவதாம்.—மிஸ்டர் ட்ரீ.

INSTRUCTIONS TO WOMEN.

A Catechism.

By

Mrs. K. Balarama Aiyer.

பெண்மதிபோத விளுவிடை.

ஒன்பதாவது அதிகாரம்.

சமையல், பருப்பு, காய், குழம்பு, ரசம்.

(தொகுதி 2, பகுதி 11—22 வது பக்கத்தின் தொடர்ச்சி).

வினா.—பருப்பு வேகவைப்பது எப்படி?

விடை.—அன்னம் சமைப்பதற்காக அடுப்பில் உலை நீர் வைக்கும் பொழுது கொடியில் பருப்புக்காக ஒரு குழிவான வெண் கலக் குண்டான், அல்லது கற்சட்டியில் சுத்தமான நீர் வைத்து அது நன்றாய்க் காய்ந்ததும் அதில் பருப்பை போடவேண்டும். பருப்புக்காக வைக்கும் நீர் உவர்த் தல், கடுத்தல் முதலிய குணதோஷங்களுடன் இருக்கு மாயில் பருப்பு வேகமாட்டாது. பருப்புவேகும் சமயத் தில் இளறலாகாது. பக்குவமாய் வெந்ததும் கறி, கூட்டு குழம்பு, ரசம் இவைகளுக்கு வேண்டியபருப்பை எடுத்து வைத்துக்கொண்டு மிகுதியில் கொஞ்சம் மஞ்சள்பொடியும் தக்க உப்பும்சேர்த்து வைத்தல்வேண்டும். அது முதலில் அன்னத்துடன் கலந்து நெய்சேர்த்து புசிக்கத்தக்க ஹரோக் கியமான உணவாகும். வேகாதபருப்பை ஒருபோதும் புசி க்கலாகாது.

வினா.—காய்களை சமைப்பதெப்படி?

விடை.—காய்களை காம்பு நார் முதலியவைகளை சீக்கி சீவி, புழு இல்லாமல் சோதித்து அதை நீரில் அலம்பி கல் சட்டிமுதலிய பாத்திரங்களில்போட்டு தகுந்த உப்புசேர்த்து பக்குவமாய் வேகவைத்து நீர் வடித்தல்வேண்டும். சிலகாய்களை வேக

வைத்து நீர் வடிப்பதினால் அவைகளின் ருசியும் குணமும் போகும். இன்னவகை காய்களை நீர் வடிக்கலாம், இன்னவ கைகளை வடிக்கக்கூடாதென்று சமையலில்தேர்ந்த பெரியோ ரிடத்துகேட்டுத் தெளியவேண்டியது.

வினா.—வேகவைத்து எடுத்துக்கொண்ட காய்கிழங்கு முதலிய வைகளை எவ்விதம் கறி செய்கிறது?

விடை.—இரும்புச்சட்டி அல்லது கல்சட்டியில் நெய் அல்லது எண்ணெய்வார்த்து அது காய்ந்த உடனே கடுகும், உளுத் தம் பருப்பும் சேர்த்து தாளித்து உளுத்தம்பருப்பு சிவந் ததும் அதில் முன்வெந்து எடுத்தகாயையும், பருப்பை யும் புரட்டிவேறு பாத்திரத்தில் எடுத்து வைத்தல்வேண்டும். கடுகு உளுத்தம்பருப்பு முதலியவைகள் கருகிப்போனால் விஷத்துக்கு ஒப்பாகும். இந்தகாய் கிழங்குகளை புரட்டும் போது தேங்காய் சேர்ப்பதுமுண்டு. பதார்த்தங்களில் சேர்க்குந்தேங்காய் நன்றாக அவண்டிருக்கவேண்டும். தேங் காயை பச்சையாக சமையலில் சேர்ப்பதனால் புசிப்பவர்க ளுக்கு வயிற்றில்பூச்சி, புண்டாவதுடன் வயிற்று வலியு முண்டாகும். தேங்காய்ப்பாலை சமையலில் உபயோகிப்பது நலமாகும்.

வினா.—குழம்பு எத்தனை வகைப்படும்?

விடை.—கடும்பொரித்த குழம்பு, புளியிட்ட குழம்பு, வற்றல் குழம்பு, கொட்டைக் குழம்பு பருப்புக்குழம்பு, மோர்க் குழம்பு என பல வகைப்படும்.

வினா.—குழம்புகள் செய்யும்விதமும், அவைகளில் உப்பு புளி காரம் எப்படி கலந்திருக்கவேண்டும் என்பதையும் பெண்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விதமெப்படி?

விடை.—சமையல் பதார்த்தங்கள் ஒவ்வொன்றையும் பெண்கள் பெரியோரிடத்து விசாரித்து அனுபவமாய்த் தெரிந்து கொள்ளுவதுடன் பாகசாஸ்திர முதலிய நூல்களின் மூல மாய் விஸ்தாரமாய் அறிந்துகொள்ளலாம் இந்நூல்பொது நூலானபடியால், ஒவ்வொரு விஷயத்திலும் புத்தி நட்

பத்தை உண்பெண்ணும். அதைக்கொண்டு மேன்மேலும் விருத்திசெய்து கொள்ளவேண்டியது. பொதுவாக, கூட்டு குழம்புகளில் உப்பு, புளி, காரம் இவைமூன்றும் ஒத்து ஒன்றுக்கொன்று தலை யெடுக்காமலிருந்தால் குழம்பு சரீரத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். புளி, காரம் அதிகமானால் ஜீர்ணக்கருவிகளுக்கு தளர்ச்சியும், வயிற்றுக் கடுப்பு முதலிய வியாதிகளும், உப்பு அதிகமானால் தாகமும், முதலிய ரோகமும் உண்டாகும்.

வினா.—கூட்டு, குழம்பு இவைகளுக்கு சேர்க்கவேண்டிய காரம் செய்துகொள்ளும் விதம் எப்படி?

விடை.—காரம் இரண்டு விதம்செய்து கொள்ளலாம். ஒன்று கடுகு, மிளகாய், மஞ்சள் கொத்தமல்லி விதை முதலிய சம்பார சாமான்களை நெய் அல்லது எண்ணெயில் வறுத்துக் கொண்டு நீர் விட்டரைத்து உடனே குழம்பில் சேர்ப்பது. மற்றொன்று இரண்டொரு மாதத்திற்கு வேண்டிய சம்பார சாமான்களை வறுத்து இடித்து தென்னிப் பொடிசெய்து ஒரு பாணியில் வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது குழம்பில் சேர்ப்பது.

வினா.—ரசம் என்றால் என்ன?

விடை.—ரசம் என்பது நீர்ரூபமான ஆஹாரபக்குவம். சமையல் பதார்த்தங்கள் எல்லாவற்றிலும் இது மிகச்சிறந்தது. சரீரம் ஸ்வபாவ நிலைமைதப்பி நலிந்தியிருக்கும் சமயத்தில் ரசத்தை அன்னத்தில் கலந்துபுசித்தல் ஆரோக்கியத்தை கொடுத்து சரீரத்தை நல்ல நிலைமைக்கு கொண்டுவரும் திறமையுடையது. இந்தக் காரணத்தினால் வைத்தியர்கள் இதை பத்திய பதார்த்தங்களுள் சிறந்ததாக எடுத்திருக்கிறார்கள்:

வினா.—ரசம் எத்தனை வகைப்படும்?

விடை.—மிளகுரசம், சீரகரசம், கொத்தமல்லி விதைரசம், வெந்தயரசம், வேப்பம்பூ ரசம், கண்டத்திப்பிலி ரசம், தூண்டு ரசம், பொரித்த புளியில்லாரசம், எலுமிச்சம்பழ ரசம் பருப்புரசம், எனப் பலவகைப்படும்.

—ரசங்களில் ஒவ்வொன்றின் குணங்களென்ன?

—சரீர நிலைமைக்குத் தக்கவாறு ரசம் உபயோகிக்கத் தக்கதாயும், பலவியாதிகளை குணமாக்கக் கூடியதாயும் இருப்பதால் இது பலவகைப்பட்டு ஒவ்வொருபோன உணவாக உபயோகப்படுகிறது. மிளகுரசம் வாதரோகத்தையும், குளிர்காய்ச்சலையும், சீரகரசம் பித்தரோகத்தையும், வயிற்றுக் கடுப்பையும், கொத்தமல்லி விதைரசம் சரீர உஷ்ணத்தையும் அது சம்மந்தமான பித்தத்தையும், வெந்தயரசம் ஆரோக்கியத்தையும், வேப்பம்பூரசம் வாய்க்கசப்பு, சரீர இளைப்பு இவைகளையும், கண்டத்திப்பிலி ரசம் சரீரத்தில் வாயு, சித்தளம் இவைகளினால் உண்டாகிய வலியையும், தூண்டுரசம் கருப்பினிகளுக்குண்டாகும் சரீரவலியையும், புளியில்லா ரசம்வாத சுரத்தையும் எலுமிச்சம் பழரசம் பித்தரோகங்களையும் நிவர்த்திசெய்யும். பருப்புரசம் சரீரவலிமையுள்ளவர்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

வினா.—ரசம் செய்யவேண்டிய விதமெப்படி?

விடை.—உப்பு, புளி, காரம் இவைமூன்றும் ஒத்திருக்கவேண்டும். மிளகுரசத்தில் மாத்திரம் மிளகுகாரம் அதிகரித்திருந்தால் சரீரத்துக்கு சுகத்தைக்கொடுக்கும். ரசத்தில் புளியாவது காரமாவது உப்பாவது அதிகப் படக்கூடாது. பலவகை ரசம்செய்யும் முறையை பெரியோரிடத்துக்கேட்டு தெரிந்து கொள்ளுவது நலம்.

காட்டர் ஹவுஸ்,
எழும்பூர்.

மிஸ்ஸஸ். கே. பலராம அய்யர்.

ஆர்டிஸ்ட் அதாவது சித்ரகலை ஞானிக்கு எவ்வளவு இயற்கை ஞானம் அத்யாவச்யமோ அவ்வளவு குடும்ப ஸ்த்ரீக்கு சாதுர்யம் அவச்யம்.—ரியூயார்க் ஜர்னலில் க்ளோமாரிஸ்.

* * *

ஜனசமூகம் வ்ருத்தியடைய வேண்டுமானால் புருஷர்கள் ஸ்த்ரீ உடனிருந்து உழைப்பதோடு தானும் வ்ருத்தியின் பலனை யனுபவிக்கவேண்டும்.—மிஸ்ஸஸ் ஸௌத்ரி.

RECREATIONS.

By

K. Pankjammal.

பொழுது போக்குகள்.

தொழில் செய்கிறவர்கள் ச்ரமபரிகாரம் செய்துகொள்ள வேண்டியது அவச்யம். சதா ஸர்வகாலமும் தொழில் செய்து கொண்டே இருந்து தேகத்துக்கு ச்ரமசாந்தியான வழிகளை கவனிக்காவிட்டால் தேக உபாதிகள் உண்டாகும். இவ்விஷயத்தை சிலர் அறிந்திருந்தும் கவனிக்கிறதில்லை. இது சோம்பேரித்தனம். ஜீவனோபாய மார்க்கங்கள் பலவிருப்பதால் ஒருவர் அனுஷ்டிக்கும் விளையாட்டை மற்றவர் அனுஷ்டிப்பதில்லை. இருந்தாலும் விளையாட்டு ஸகலருக்கும் இன்றியமையாதது என்பது நிச்சயம். ஜீவனோ பாயக்காரர்களில் சிலருடைய அபிப்ராயத்தைக் கீழே வரைகிறேன்.

(1) மிஸ் வைலட்வான்ப்ரூக், க்யாதி வாயந்தநடி. "நான் ஏன் திறந்த வெளியில் உட்கார்ந்து பொழுதுபோக்குகிறேனென்றால் இதனால் நல்லகாற்று ஸ்வாசிக்கவும், நிம்மதியாயிருக்கவும், ஓய்வாயிருக்கவும் சாத்யமாகிறது. தேகசௌக்யத்திற்கு ஓய்வும் நிம்மதியாயிருத்தலும், நல்லகாற்றை ஸ்வாசித்தலும்போன்று உலகத்தில் உத்கிருஷ்டமான மருந்துகள் வேறு கிடையா."

(2) மிஸ்ஸஸ் ஹம்ப்ரீஸ், பேர்போன ஒரு நாவலிஸ்ட். "நாடகத்தைப்போல் வேறெந்த பொழுதுபோக்கும் எனக்கு அவ்வளவு பிடிக்கிறதில்லை. நாடகம் உற்சாகப்படுத்துவதுடன் ஊக்கத்தையும் தூண்டிவிடுகிறது."

(3) மிஸ்டர் கீர்ஹார்டி எம், பி பார்லிமெண்ட் மெம்பர். இவர்பேலட் என்னும் கிஞ்சிற்பாட்டுப்புஸ்தகங்களையும், விலைமலிந்த புஸ்தகங்களையும் வாங்கிச்சேர்த்து வைப்பதைப் பொழுது போக்காக் பாவிக்கிறார். "இவைகளிலுள்ள பேதமையையும் உண்கருதியும் நான் இதில்யும், ஜனங்களின் இலக்கியமா யிருப்பதைக் மையையும் கருதி ப்ரியமாயிருக்கிறேன்."

(4) லேடிகாலின் கேம்பெல், ஒரு பத்ராதிபர். "சிலம்பு விளையாட்டு ச்ரேஷ்டமான பொழுதுபோக்கென்று நினைக்கிறேன்.

ஏனென்றால், இந்த விளையாட்டால் தசை நார்களுக்கெல்லாம் நன்றாக அப்பாஸம் உண்டாகிறது. ஒன்றுக்கும் மிதமிஞ்சின களைப்புமில்லை, ஓய்வுமில்லை."

(5) டாக்டர் ரீக் தத்வசாஸ்திர ப்ரசங்கி. "நான் ரொம்ப தூரம் உலாவச்செல்கிறேன் உபந்யாசகர், க்ரந்தகர்த்தா இவர்கள் மூளைக்குவேலை கொடுக்கிறவர்களாயிருப்பதால், நடக்கும் பொழுதும் கை கால்களுக்கு அப்யாஸ முண்டாகும்பொழுதும் இருவிதவேலைகளும் ஒன்றுக்கொன்று அனுசரணையாயிருந்து மூளையும் தேகமும் ஸரிஸமமாய் வ்ருத்தியடையச் செய்கின்றன."

கே. பங்கஜம்மாள்.

KINDERGARTEN TABLES.

By

A Trained Head mistress.

கிண்டர்கார்டென் மேஜைகள்.

கிண்டர்கார்டென் பாடத்துக்குவேண்டிய முக்யமானவும் சிறந்ததானவும் சாமான்களைப்பற்றியும் அவைகளின் லட்சணங்களைப்பற்றியும் மாத்திரம் எழுதுகிறேன்.

1 டெஸ்குகளின் மேற்பலகையைப்போல கிண்டெர்கார்டென் மேசைகளின் மேல்தட்டுகள் சாய்வாயில்லாமல் தட்டையாயிருக்கவேண்டும்.

2. கிண்டெர்கார்டென் தொழிலை மேசைகளின்மேல் செய்யும்போது சிறுவர்கள் நின்றுகொண்டு செய்வதே உத்தமமாகையால், அம்மேசைகளின் உயரம் அதற்குத் தகுந்தாப்போல் இருக்கவேண்டும். சாதாரணமாய் சுமார் 2 அடி உயரம் பொருந்தும்.

3. அவை 2½ அடி அகலமும் 6 அடி நீளமுங் கொண்டிருப்பது நலம், கிண்டெர்கார்டென் தொழில் நடத்தும்போது சிறுவர்கள் அடர்த்தியாய் நிற்பது குற்றம். ஆகையால் தலைக்கு 2 அடி பிழுக்காடு எதிரெதிராக இருபுறங்களிலும் 6 சிறுவர்கட்கு இட

மூண்டு. அதற்குமேல் ஒரே மேசையினிடம் பிள்ளைகள் நின்றால் மேசை அடிக்கடி அசைவுற்றுச் செய்யுந் தொழிலுக்கு இடையூறு நேரிடும்.

4. இம்மேசைகள் செய்யும் மரம் ஈரம் ஆறினதும், சுலபத்தில் சக்கைபோராததும், தேய்வுறாததும், நயமான இழைப்புக் கொள்ளத்தக்கதுமாயிருக்கவேண்டும்.

5. இம்மேசைகளை பிரமாண்டப் பிசகு சிறிதும் இல்லாமல் கால்களில் ஏற்றக் குன்றவுகள் இல்லாமல் முற்றிலும் சமமான மேல் தட்டை யுடையதாய்ச் செய்விக்கவேண்டும்.

6. மேற்பலகை சீரான இழைப்புண்டு வார்னீஷ் பூசப்பட்டிருக்கவேண்டும். மற்றப் பாகங்களுக்கும் பூசுவது அழகு.

7. இம்மேசைகளின் மேற்புற முழுவதிலும் ஒரு அங்குலச் சதுரங்களை வர்ணக்கீற்றல் அமைத்திருக்கவேண்டும். உளியால் பள்ளமாய்க் கீறிவிடலாகாது. கீறிவிடில் மேற்புறத்தில் மேடு பள்ளங்காட்டும். அது கிண்டெர்கார்டென் சம்பந்தமான நுண்ணிய தொழில்கட்கு விரோதமாகும்.

8. அன்றியும் இப்படிக் கோடிட்ட மேற்புறத்தை வேறு வர்ணத்தைக்கொண்டு ஆறு பெரிய சமபாகங்களாகப் பிரிக்கவேண்டும்.

9. இம்மேசை அதிக பெலமானதாயும், சுலபத்தில் அசைக்கக் கூடாததாயும் இருக்கவேண்டும். இது கைகூடும் பொருட்டுச் சாமானை உறுதியாய்ச் செய்வதுடன் அதைத் தரையில் நிறுத்தும்போது சமமாய் நிறுத்தவேண்டும்.

10. கிண்டெர்கார்டென் மேசைகளை வெகு நேர்த்தியாயும் சாக்ரதையாயும் உபயோகிக்கவேண்டும்.

11. கிண்டெர்கார்டென் தொழிற்கென்றே தனியறை ஒன்றிருந்து அதில்வேண்டிய வகுப்புகள் போய் இருந்து தம் வேலையை முடித்துக்கொண்டு வந்துவிடுவது உத்தமம்.

12. மேற்கூறிய இலட்சணங்கள் அமைந்த சிறிய மேசையொன்று உபாத்தியாயருக்குத் தனியாயிருக்கவேண்டும். அதன் மேல் அவர்செய்து காட்டவேண்டிய மாதிரித் தொழில்களை யெல்லாம் காட்டவேண்டும்.

கிண்டெர்கார்டென் மேசைகட்குப் பதில்கள்.

திரவியசகாயம் இல்லாமையால் மேல்விவரித்த கிண்டெர்கார்டென் மேசைகளைச் செய்விக்கக் கூடாவிடில் அடியிற் கூறுமாறு வேறு சாதனங்களை அமைத்துக்கொள்ளலாம்.

1. மேல்விவரித்த இலட்சணங்களுக்குக் கூடியமட்டில் பொருந்திய மணைகளைத் தரையில் அமைத்துக்கொள்ளலாம். அப்போது இயற்றவேண்டும் பிள்ளைகள் மணைகளைச்சுற்றி உட்கார்ந்து இயற்றவேண்டும்.

2. இதுவுங் கூடாவிடில் பாடசாலையில் தகுந்த இடமாய்ப் பார்த்துக் கருமைகலந்த சண்ணகாரை யாட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தரையின்மீது கடமாட்டம் கூடாது. இந்தக் கருங்காரைத் தரையில் சுண்ணாம்பு தேய்த்த நூலால் கீற்றிட்டுக் கொள்ளலாம். வாள்காரர் கீற்றிடுவதே இதற்கு மாதிரி.

3. இதுவும் முடியாவிடில் களிமண், பசுவின் [illegible] முதலியவற்றைச் சேர்த்துத் தரையை ஒப்பமாய்த் திருத்திக் கொண்டு அதன்மேல் கிண்டெர்கார்டென் தொழில்களை விக்கலாம். இந்தத் தரையை அடிக்கடிப் புதுப்பித்துக்கொள்ள வாவேண்டும். இந்தத் தரையிலும் காரைத் தரையிற்போல் கீற்றிட்டுக் கொள்ளலாம்.

ஒரு தலைமை உபாத்தினி.

சாட்டையும் சவுக்கடியும் பொறுக்கலாம். மூட்டப்பூச்சி கடியும் முணுப்பும் ஆகாது.

* * * * *

அவிசாரிபுருஷன் ஆபத்துக்குதவுவானு. கடையில் அரிசி களஞ்சிக் குதவுமா. கண்ணுடியிற்கண்ட பணம் கடனுக்குதவுமா.

* * * * *

தாரமும் குருவும் தலைவிதி. பெண்ணெனாய்க்கும் புண்ணியவானுக்கு பண்டம்வாய்க்கும் பாக்கியவானுக்கு.

* * *

குடி, சூது, விபசாரம் குடியைக் கெடுக்கும்.

HISTORY, BIOGRAPHY

சரித்ரம், ஜீவ்ய சரித்ரம்

NURJAHAN OR THE LIGHT OF THE WORLD.

By

The Editor.

நூர்ஜஹான் அல்லது ஜகத்ஜோதி.

(சென்ற செப்டம்பர் மீ பத்திரிகையின் 10-வது பக்கத் தொடர்ச்சி.)

முகமதிய அரசாட்சியில் செங்கோல் செலுத்தி ராஜ்யத்தை யாண்டுவந்த பெண்ணரசி ஜகத்ஜோதிஎருத்திதான் என்று சொல்லுமல்லவா? இப்படி நூர்ஜஹான் பெருமைதங்கி சுகமாக இருந்த சில காலத்திக்குள் ஜிஹாங்கீரின் மூன்றுவது குமாரனை கூரம் என்பவன் ராஜாங்கத்தில் கலகங்களை உண்டாக்கினன். அவன் தன் தகப்பனுக்குப் பிறகுப் பட்டத்துக்கு வரவேண்டுமென்ற முக்கிய நோக்கத்தோடு சேனைகளைத் திரட்டினன். அவன் யுத்தத்தில் பயிற்சிபெற்றிருந்தான். மூத்தகுமாரன் இருக்கிறதனால் பட்டம்கிடைப்பது அறிது என்று எண்ணி அவனைக் கொன்று போட்டான். இச்சங்கதி வெளியாய்விடவேஜஹாங்கீருக்கும் நூர்ஜஹானுக்கும் மகா கோபமூண்டது கூரம் என்பவனின் கடவடிக்கைகள் எல்லாம் நூர்ஜஹானுக்கு முன்னமேயே தெரியும் அவைகளை யெல்லாம் தனது கணவருக்குத் தெரிவித்திருந்தாள். நூர்ஜஹான் கூரைப்பற்றிச் சொல்லிய விஷயங்கள் நம்பக்கூடியதாயிருந்ததால் அவள் புத்திமதிப்படியே ஜிஹாங்கீர் தமது மகனின் கொட்டத்தை யடக்க முயன்றார். இத்தனைக்கும் நூர்ஜஹான் மருமகள்தான் கூரத்தின் மனைவி. கூரம் பண்ணுகிற விஷயங்கள் ராஜாங்க அமைதிக்கு மிகவும் பாதகமா யிருக்கிறதென்பதை அப்போதப்போது தனது கணவருக்குப் போதித்து வந்தாள்.

ஜிஹாங்கீர் தமது சேனைத் தலைவனின் உதவியால் இரண்டு தரம் கூரம் என்பவனையும் அவன் சைன்யத்தையும் அடியோடு தோற்கடித்து அடக்கிவிட்டார். கூரம் தப்பிக்கொண்டு ஓடிப் போய்விட்டான். ஜகத்ஜோதிக்கு திருப்தியில்லை. அவனை அடியோடு நாசம் பண்ணவேண்டும் அல்லது சிறைப்பிடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டாள். கூரம் மறுபடியும் ஒரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு படையெடுத்து வந்தான். மொகலாயர் கான் கூரத்தை முற்றிலும் தோற்கடித்து ராஜ்யம்வந்து சேர்ந்தான். கூரம் ஊரெல்லாம் திரிந்தான். கெட்டவன் என்று பெயர் எடுத்தான். ஒருவரும் நம்பவில்லை. கடைசியாக, தன் தகப்பனுக்கு தன் குற்றங்களை மன்னிக்கும்படி கடிதம் எழுதினன். கடைசியாக கடிதத்தைக் கண்டவுடன் தமது பிள்ளைக் கஷ்டப்படுவதை சகிக்கமாட்டாமல் மன்னித்துவிட்டார் கூரம் தனது குமாரர்களை டோரா, அரங்கசீப், மோராட் இவர்களை தன் தகப்பனிடம் ஒப்புவித்துவிட்டு நூர்ஜஹானுக்குப் பயந்துகொண்டு ராஜசபையில் தலைகாட்டாமல் ஊர்ஊராய்த் திரிந்துகொண்டு காலம் கழித்தான். மொகலாய ராஜ்யத்துக்கே பெரும் கலகம் கொடியதாய் உண்டாகி இம்மாதிரியாக முடிவுபெற்றது நமது கதாநாயகியின் முன் எச்சரிக்கையினாலும் புத்திமதியாலுமேயொழிய வேறொன்றினாலுமல்ல. மொகலாயராஜ்யத்தை இப்பெரும் ஆபத்தினின்று காப்பாற்றி ஒரு கேடுமில்லாமல் மிகுந்த சாமர்த்தியத்தோடு தன் கணவருக்குப் போதித்து நடத்திவந்தவள் ஜகத்ஜோதியே.

ஜகத்ஜோதியின் ஆயுள் காலத்தில்செய்த கார்யங்களுள் குறிப்பிடத்தக்க காரியமொன்றுண்டு. அவள் மகாசூரனை மொகபெத் கானை ஆட்டிவைத்த ஆட்டமொன்றே அவளுடைய பெருமைகளை விளக்கப்போதுமானது. ராஜாங்கத்துக்கு விரோதமாய் இளம் பின ஆசை பெருங்கலகங்களை அடக்கி அமைதியுண்டாக்கினது பற்றி அவனிடத்தில் மிகவும் விச்வாசமும் நம்பிக்கையும் வைத்தார்கள். ராஜாங்கத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவனென்று இவனுக்கு இவ்வளவு ஸ்வாதீனம் கொடுத்தால் ராஜாங்கத்துக்கே மோசம் வருமென்று தினந்தினம் மொகபெத்கானின் செல்வாக்கை குறைக்கவேண்டுமென்று சக்கரவர்த்தியிடம் சொல்ல அவரும் அதற்கு இணங்கினர். இவ் யோசனையை மொகபெத்கான் அறிந்தவே மிகவும் வருத்தமுடையவனா யிருந்தான். ஜனங்கள்கூட

மொகபெத்கான்பேரில் அவதூறு சொன்னார்கள். எல்லாம் சக்ரவர்த்திக்கு அறிவிக்கவே வங்காளத்திலிருந்த மொகபெத்கானை ராஜசபைக்கு வரும்படி ஒரு கடிதமெழுதினார். இக்கடிதத்தைக் கண்டு துக்கசாகரத்தில் முழுகி சக்கரவர்த்தியைப் போய்ப் பார்ப்பதென்றால் தகுந்த காவலோடு போகவேண்டுமென்று யோஜித்து ஐந்நூறு வீரர்களோடு சென்றான். நூர்ஜஹான் இவன் சேனைகளைக் கூட்டிக்கொண்டு வருவது தெரியவே சக்ரவர்த்தியிடம் இவன் இப்படி வருவது ராஜாங்கத்துக்கு அபாயமுண்டாகுமென்று யோஜித்து அவன் ஆதீனத்தில் சேனைகள் இருக்கக் கூடாதென்று சக்கிரவர்த்திக்குப் போதித்தாள். மொகபெத்கான் சக்ரவர்த்தி இருக்கும் இடத்திற்கு சமீபத்தில் வந்தவுடன் வங்காளநாட்டுத் தீர்வைகளுக்கும், காசிச் சண்டையில் கொள்ளையடித்த பொருளுக்கும் சரியாய் கணக்குஒப்பிவித்தாலொழிய அரசன் முகத்துக்கு வரக்கூடாதென்று கடிதம் வந்தது. இப்படியாக அவமானப்படுத்தலாமோவென்று அரசனிடம் தோராய்த் தெரிவிக்கத் தன் மருமகனை அனுப்பினான். அவனை நிர்வாணம்செய்து கழுதைமேலேற்றி கன்னத்தணிகளைக் கட்டி அவன் மாமனிடம் அனுப்பினார்கள். மகா கோபமுள்ளவனாக மொகபெத்கான் தகுந்த யோசனைசெய்துகொண்டிருந்தான்.

மறுநாட் காலையில் காபூலுக்கு அரசன் ப்ரயாணமாய் சைன்யத்தோடு சென்றார். அங்கு ஒரு ஆற்றங்கரையில் அன்று தங்கியிருந்தார்கள். பொழுது விடிந்ததும் சைந்யங்கள் புறப்பட்டு அவ்வாற்றைக் கடந்தன. அரசன் சாவதானமாகப் போகலாமென்று யோஜித்திருந்தான். மொகபெத்கான் இதற்குள் தந்திரமாக வந்து அப்பாலத்தைக் கொளுத்திவிட்டு அரசனைப் பிடித்துக்கொண்டான். மொகபெத்கான் அரசனை யானைமேலேற்றிக்கொண்டு தன் கூடாரம்போய்ச் சேர்ந்தான். மொகபெத்கான் அரசனைப்பிடித்துக்கொண்டாலும் அரசனின் உயிரையாவது, ராஜ்யத்தையாவது அபகரிக்கச் சிறிதும் எண்ணவில்லை. தன்னிடத்திலிருக்கிற விரோதத்தைப் போக்கடிக்க வேண்டுமென்றே இவ்வளவுதூரம் செய்தான்.

அங்கத்தைக்கட்டியே தங்கத்தைச் சேர்க்கவேண்டும். உதாரிக்குபொன் திரும்பு.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Baby Superstitions.

குழந்தைகளைப்பற்றிய மூட நம்பிக்கைகள்:—லண்டனிலுள்ள சாய்மார்கள் குழந்தைகளின் தலைப்பக்கம் ஒரு புஸ்தகத்தை வைப்பார்கள். இதனால் அந்தக்குழந்தை சீக்ரம்படிப்பில் அபிவ்ருத்தி யடையுமென்ற மூடபக்தி தாயிக்குண்டு. மேலும் அதை ஸ்நானம் செய்விக்கும் ஜலத் தொட்டியில் அது வாழ்க்கையில் ஐச்வர்யமாயிருக்க, சில நாணயங்களைப் போடுவதுமுண்டு.

க்ரீக் தேசத்திலுள்ள தாய்மார்கள் குழந்தைகளைத் தொட்டிலில் படுக்க வைப்பதற்குமுன் அக்னிமுன்பாக மூன்று முறை தங்களைத் தங்கள் ப்ரதக்ஷணம் செய்வார்கள். இந்த ஸமயத்தில் குழந்தைக்குக் காற்று தோஷ முண்டாகாதபடி பாட்டுப் பாடுவார்கள்.

Consumption of Children.

குழந்தைகளுக்கு க்ஷயரோகம்:—க்ஷயரோகத்தால இறந்துபோகும் குழந்தைகளுக்கு கணக்கு வழக்கில்லை. க்ஷயரோகம் குழந்தைகளுக்குப் போட்டப்படும் பாலிலிருந்துதான் உண்டாகிறது. பட்டணங்களில் அசுத்தமான இடங்களில் கட்டப்பட்டு, சுகாதாரமுறையில் கவனம் செலுத்தாத பால்கறக்க ஆனுஷ்டிக்கும் முறையால், விற்பனைக்கு வெளிவரும் பாலில் க்ஷயரோகத்தை யுண்டாக்கும் க்ருமிகளிருக்கின்றன. இந்த க்ருமிகள் குழந்தைகள் நீராரோயிக்கு இறையாக்குகின்றன. கூடியவரையில் கன்றுய்க்கழுவிய பாத்ரங்களில் மாட்டின்மடியை ஜலம்விட்டு அலம்பி பால் கறக்கப் பார்த்துவாங்கவேண்டும். பாலைகன்றுக் காய்ச்சுவதால் க்ருமிகள் இறந்துபோகின்றன. தாய்மார்கள் ஜாக்ரதையால் க்ஷயரோகம் குழந்தைகளுக்குவராமல் கூடியவரையிலும் காக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சர்க்காரும் டைரிகள் ஏற்படுத்தி ஜனங்களுக்கு விஷக்ருமியில்லாதபாலை சப்ளைசெய்ய ப்ரயத்தனம் செய்துதான் வருகிறார்கள்.

Nature of Children.

குழந்தைகளின் ஸ்வபாவம்:—ஸாதாரணமாய் குழந்தைகளுடைய முகத்தைப் பார்த்தாலே இது 'சுடி' யான குழந்தை இது 'மக்தமான' குழந்தையென்று சொல்லிவிடலாம். சில குழந்தைகள் விஷமம் செய்துகொண்டேயிருக்கும். பண்டங்களை உடைக்கவோ, கவிழ்த்தவோ, கொட்டவோ செய்யும். வீணாபாட்டுக் கருவிகளை சக்குசக்காய் உடைக்கும். இதமாதிரிசெய்யும் குழந்தைகள் வெகு விலதான். இவைகளை சுருசுருப்பும் தீக்ஷ்ணய புத்தியுமுள்ள குழந்தைகளையறிய வேறு சாக்ஷ்யங்கள் வேண்டியதில்லை. பெற்றோரும், உபாத்தியாயரும் குழந்தைகளின் ஸ்வபாவத்தை அறிந்து அவைகள்செய்யும் தொழில்கள் அவர்களுக்கு உபயோகமுள்ளவைகளாகும்படி திருப்பவேண்டும். இப்படிக் குழந்தைகள் விஷமத்தொழில்களை உபயோகமாக்குவதை முதல் முதல் அனுசரித்து ப்ராபல்யத்துக்குக்கொண்டு வந்துமுறையான வழிகளைக் காட்டவேண்டும்.

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Is it pure milk?

பால் அப்பட்டமா? இதை சுலபமாய் அறிந்துகொள்ள காம் செய்ய வேண்டியது என்னவென்றால் ஒரு துளி பாலை எடுத்து கத்தில் வைத்தால் அப்பட்டப்பால் அதாவது ஜலம் கலக்காதபால் அப்படியே பொட்டாயிருக்கும். ஜலம் கலந்ததானால் வழிந்து போகும்.

Use of Turpentine.

கற்பூரத்தைலத்தின் குணம்:—யூகலிப்டஸ் என்கிற கற்பூரத்தைலம் திறந்துவைத்திருந்தாலே ஆவியாய் மாறும் சக்தியுடையது. இதில் இரண்டொரு 'துளி'யை சர்க்கரையில்விட்டுக் கலக்கி உட்கொள்ளவும் கொடுக்கலாம். இதைக் கொஞ்சம் எடுத்து கையில் தேய்த்து மார்மீது தடவலாம். இந்த ஆவியை சுவாசிப்பதால் இருமல், தொண்டைச்சளி, கபம், ஜுரம் குணப்படுகிறது.

Coconut milk in a Bell metal Vessel.

வெண்கலப் பாத்திரத்தில் இளநீரைவைத்தல்:—இளநீரை வெண்கலப் பாத்திரத்தில் ஊற்றிவைப்பதால், அது உடனே 'கச்சி'ப்போகிறது. அதைக் குடிப்பதால் வாயிலெடுக்கவேண்டி வரும். காரணம் என்னவென்றால் இளநீருக்கு வெண்கலத்தில் சேர்ந்துள்ள தகரம் தாம்ரம் ஆகிய உலோகங்களை கரைக்கும் சக்தியிருக்கிறது. இந்த உலோகம் கரைந்த இளநீர் ஜீரணிக்கமுடியாத வஸ்து. தேகத்தில் தங்குமானால் தொந்தியை விளாவிக்கும். ஆகையால் வெண்கலப் பாத்திரத்தில் தேங்காய் ஜலத்தைப் பிடிப்பது கூடாது.

How to avoid Taking Cold.

ஜலதோஷத்தைப்போக்குஉபாயம்:—எவனொருவனுக்கு ஜலதோஷமுண்டாய் மூச்சின் உட்புறம் சிறிது சுருக்கங்கொண்டு இருப்பதாக் உணர்ச்சியுண்டானால், தலை தன்னுடைய பூமியில் படும்படி நின்றவாறே குனிந்துகொண்டு, முகம் தன்னுடைய இலக்கும் வரையில் அந்நிலையிலேயே இருக்கவேண்டும். பிறகு நிமிர்ந்து மூக்கு வழியாகவும், சிறிது வாய் வழியாகவும் இழுத்திழுத்து மூச்சுவிடவேண்டும். மூக்கின் துவாரங்கள் தன்னுடைய தத்திறத்து, மூக்கு வழியாகவே மூச்சுவிடும் நிலைமை ஏற்படும் வரையில் அடிக்கொருமுறை குனிந்து நிமிரவேண்டும். ஜலதோஷம் போய்விடும்.

To Bandage the Fore Finger.

ஆள்காட்டி விரலை பாண்டேஜ் செய்ய:—சத்திரசாயம், வெட்டுகாயம் ஆள்காட்டிவிரலில் படுகிறபடியால் அதை தன்னுடைய, கட்டினது தளர்ந்து போகாமலும் இருக்கும்படி கட்டவேண்டும். வெட்டுகாயத்தை பாண்டேஜ் கட்டவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் தூசு தும்புகள் அல்லது அன்னிய வஸ்துக்கள் அதில் படிந்து காயம் ஆறுவதை நீடிக்கும். 'காஸ்'ஐ கெட்டியாய் உருட்டிச் சுற்றிக்கொள்ளவேண்டும். பிறகு காயத்தை தன்னுடைய லோஷனில் கழுவி சுத்தம் செய்து மருந்து போட்டபிறகு காஸை (வலைத்துணி)ல் விரலைச்சுற்றும்போழுது மணிக்கட்டையும் சுற்றும்படி விட்டு பிறகு இரண்டுமுறை சுற்றிக் கடையாய் மூடிபோட்டுவிடவேண்டும். இப்படிச் செய்வதால் சற்றும் கட்டு தளராது.

Onion Odour.

வெங்காய வாசனை:—வெங்காயத் தோலை உரித்தால் கையில் வெங்காயவாசனை பிடித்துக்கொள்கிறது. கழுவுகிறத்த ஜலத்தில் கைகழுவினால் வாசனைபோய்விடும். அல்லது கையை சோப் தேய்த்து அலம்பி, காபித்தைக் கொளுத்தி, கையை மேலே பிடிப்போமானாலும் வாசனை போய்விடுமே.

Purifying Water.

ஜலத்தை சுத்தமாக்கும் முறை:—சாதாரணமாய் ஜலத்தில் விஷக்கிருமிகள் இருக்கின்றன. இந்த ஜலத்திலுள்ள கிருமிகளைப் போக்காமல் அப்படியே சமையல் செய்வதற்கும், குடிப்பதற்கும் உபயோகப் படுத்துவதால் அநேக விதமான வ்யாதிகள் மனிதர்களுக்கு உண்டாகின்றன. ஜலத்தை தானத்தாலும் செய்து உபயோகிப்பது அவசியம். சுத்தஞ்செய்யும் சுலபமான ஒரு முறையைச் சொல்லுகிறோம். மருந்துகடைகளில் அல்லது ஷாப்புகளில் குளோரைட் ஆப்லிம் என்கிற பஸ்மம் விலைக்கு அகப்படும். இதில் ஒரு கஸ்தூரிளவு எடுத்துக் கொண்டு ஓர் லோடா ஜலத்தில் போட்டு கரைத்துவிடவேண்டும். பிறகு இந்த ஜலத்தோடு இன்னும் ஒரு லோடா ஜலம் கலந்து அதை நன்றாகக் குலுக்கவேண்டும். இவ்விடங்கள் பொறுத்து தெளிந்திருக்கும் ஜலத்தை புட்டியில்விட்டு காற்று நுழையாமல் கண்ணுடி மூடி போட்டுப் பத்திரமாய் வைத்து விடவேண்டும். இந்த சோலியுள்ள ஒருகஸ்தூரிளவு ஜலம் இரண்டு காலன் ஜலத்திலுள்ள விஷக்கிருமிகளைக்கொன்று ஜலத்தை சுத்தப்படுத்திவிடுகிறது. சோலியுள்ள ஜலம் ஒரு நாள்வரை தான் தெளிவுமெலிருக்கும். ஆகையால் அவசியம் உபயோகத்திற்கு வேண்டியளவு அப்போதைக்கப் போது செய்துகொள்ளவேண்டும்.

Bones of a man.

மனிதனுடைய எலும்புகள்:—நமது சரீரமாகிய வீடு 206 எலும்புகளென்கிற செங்கல்களால் கட்டப்பட்டிருக்கின்றன.

முதுகெலும்புகள்	26	
முகம்	14	
தலை	8	
மார்பு	26	
காது (2)	6	
தோள்பட்டை	2	32+32=64 இரண்டு பக்கத்திலும்
மேல்கை	1	
முன்னங்கை	2	
மணிக்கட்டு	8	
உள்ளங்கை	5	
விரல்கள்	14	
இடுப்பு எலும்பு	1	31+31=62 இரண்டு பக்கத்திலும்
தொடை	1	
கால்	2	
கணுக்கால்	7	
பாதம்	5	
விரல்கள்	14	
முழங்கால் சிப்பி	1	
	206	

Feeding Bottle.

பாலூட்டும் பாட்டில்:—தாய்ப்பால் சாப்பிட பாக்கியமில்லாத குழந்தைகளுக்கு புட்டிப்பாலைக் கொடுப்பதிலும் நிவர்த்தியில்லை. புட்டிகளை ஸுத்தமாய் வைத்திருப்பதில் அஜாக்ரதையாயிருப்பதால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போருமலும், குடல்வீக்கமும் உண்டாகின்றன. பாட்டிலை யும் அதைச்சேர்ந்த ரப்பர்க் காம்பு முதலியவற்றையும் ரொம்ப ஸுத்தமாய் வைத்திருக்கவேண்டும். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு தொந்தியானதை தடுக்கும் இயற்கையான சக்தி மிகவும் குறைவு. சுவாஸாயு ரோகங்கள் அக்குழந்தைகளுக்கு ஸாதாரணமாய் உண்டாகக் கூடும்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

A Charcoal Oven.

கரியடுப்பு :—விறகுகளின் விலை ஏறிக்கொண்டே போகிறது. 5-வருஷங்களுக்கு முன்னிருந்த விலைக்கு இப்பொழுது இரட்டிப்பு விலையாக உயர்ந்துவிட்டது. இருந்தாலும் சில விறகுகள் புகைந்து சமையல் செய்கிறவர்களுக்கு அவஸ்தைகளை உண்டாக்குகின்றன. அதிக பெரிய குடும்பமில்லாதவர்கள் கடையில் கும்மட்டி என்னுமிடத்தில் இரும்புக் கரியடுப்புகளை வாங்கிக்கொள்ளலாம். ஒரு கரிமூட்டையின் விலை சென்னையில் அணா 13; விறகின் விலை குண்டு அணா $6\frac{1}{2}$; விறகை விடக்கரி அதிகநாள் வருகிறது. புகையில்லை. பாத்திரங்களுக்கும் கரி பிடிக்கிறதில்லை. இந்தக்கரி அடுப்புகள் 10-அணா விலையிலிருந்து 2-ரூபாய் வரையிலுமிருக்கிறது.

From bad to worse.

வரவரமாமியார் கழுதையானாள் :—நமது ஸகோதரிகள் சிலர் வரவர சோம்பேரிகளாக வருகிறார்கள். வீட்டில் என்ன நடக்கிறது, என்ன அவசியம் என்பனபோன்ற விஷயங்களை கவனிப்பதேயில்லை. எல்லாவற்றிற்கும் வேலைக்காரிதான். நம்முடைய கார்யங்களை நம்மைப்போல் சிரத்தையாய் பிறத்தியார் செய்வார்கள் என்று நினைப்பதிலும் மௌட்டீகம் வேறில்லை. ஒவ்வொரு ஸ்த்ரீயும் கூடியவரையில் தன்னுடைய கார்யங்களைத்தானே செய்துகொள்ளவேண்டும். இதுதான் ஸ்வதர்மம். இதைச்செய்யத் தவறுகிறவர்கள் தர்ம நிரந்தரர்கள் என்று கூறுவது அனுசியம்.

74

Varietis in Eatables.

பலகார தினுசுகள் :—நம்பாக சாஸ்த்ரம் சிரஞ்சீவியாய் அன்று கண்டமேனிக்கு அழிவில்லாமலிருக்கிறது. நமது தேசத்தில் பலவகையான ஜனங்களிருக்கிறார்கள். சமையல் தின்பண்டங்கள் வடக்கேசெய்கிற மாதிரிவேறு, தெற்கேசெய்கிற மாதிரிவேறு. கோதுமை ரவை அரிசிமாவுசர்க்கரைசேர்த்து அனேக விதபலகாரங்கள் வடக்கத்தியார் செய்கிறார்கள். தெற்கே மிட்டாய்க் கடைகளில் செய்துவிற்கும் பக்ஷண தினுஸ்கள் வெகு சில. எந்தத் தொழிலாகட்டும் ஊக்கம் அவசியம். ஊக்கமில்லாவிட்டால் எந்தத்தொழிலும் வ்ருத்தியாகாமல் நஷ்டத்துப்போகும். பதார்த்தங்களைப் பலவிதமாய்ச் சேர்த்துப் பக்குவம்செய்து புதிதுபுதிதான தினுஸ்கள் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் புத்தி அவசியம். ஸ்த்ரீகள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக்கொள்ளும்பொழுது புதிது தினுஸ்பதார்த்த வகையைப் பற்றி ப்ரஸ்தாபித்து பதார்த்தங்கள் பக்குவங்கள் முதலியவைகளைப்பற்றிய அறிவை வ்ருத்திசெய்து கொள்ளலாம். ப்ரஞ்ச்சமையல் இங்கிலீஷ்சமையலைவிட ச்ரேஷ்டமாயிருப்பதற்குக்காரணம் ப்ரஞ்ச்காரர்கள் சமையல் விஷயத்தில் எடுத்துக்கொள்ளும் ச்ரத்தையும் ஊக்கமும்தான். ப்ரெஞ்சுச்ஸ்த்ரீ சமையல் செய்வதை க்ருதர்மமாக பாவிக்கிறாள். பாகசாஸ்த்ரம் வ்ருத்தியாக ச்ரத்தையைவிட வேறென்னவேண்டும்?

IV

ART & MUSIC.

கலையும் வாத்தியமும்.

---

1. பிடாரன் ஊதும்போது பாம்பு படம் விரித்துக்கொண்டு ஆனந்தமாயாடும். துஷ்டத்தனத்திற் சீறிக்கொத்துகிற ஜென்மவாசனையையும் மறக்கடிக்கப்படுகிறது.

2. [redacted] இறைக்கிற ஏத்துக்காரர்கள் புறங்களில் பாட்டுப் பாடிக்கொண்டே ஏத்து இறைக்கிறார்கள். அவனுக்கு அதுசரமப் பரிகாரம்.

3. பெரிய பாறைக்கல்லுகளைப் புரட்டிக் கொண்டுபோகிற கூலியாட்கள் ஆ ஊ என்று பாடிக்கொண்டு உந்தித் தள்ளிக்கொண்டுபோகையில் அசைந்துவருகிற அந்தக் கருங்கல்லும் இசைகேட்கிறதாம்.

4. புல் வெளிகளில்மேய்கிற மாடுகள் இடைவில் ஊதுகின்ற புல்லாங்குழலின் இனியகீதத்தைச் செவிகூர்ந்து கேட்டு மகிழ்கின்றன.

5. அழுகிற குழந்தையும் தாலாட்டுப் பாட்டுக்குச் செவிப்புலன்கொடுத்து குரலடங்கி இன்பமாயுறங்கும்.

* * *

சுத்தமான பட்டுப்புடவைகளில் பூப்போட்டுச் சித்ரம்செய்கிற சாதுரியம் தற்காலப் பெண்பாட சாலைகளில் கற்பிக்கிற மாக்கத்தில் அதிகமாக இந்து ஸ்த்ரீகள் பழகி வருவார்களானால் பொழுதுபோக்கும் வினோதமும் அன்னவயலாபத்தையும் சிலவேளை உண்டாக்கும்.

* * *

ஸ்த்ரீகள் சங்கீதத்தில் புருஷர்களை ஜெயித்து விடுவார்கள். ஆனால் புருஷர்களோடு வியாசம் எழுதமுடியாது.

சங்கீதத்தை எவ்வளவு உறுப்போட்டாலும் வராது. சங்கீதத்தைக் கரைத்துக் குடிக்கிறது என்பது மூடியாத காரியம்.

* * *

ஐரோப்பிய சங்கீதமும் இந்திய சங்கீதமும் :—ஐரோப்பாவில் சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறதற்கு பணத்தையும் சமயத்தையும் பார்க்கிறது கிடையாது. முக்கால்வாசியும் சங்கீதம் பயிலுகிறவர்கள் உயர்தர வகுப்பையும் மத்தியவகுப்பையும் சேர்ந்தவர்கள். சங்கீதகாலேஜ்களில் சேர்ந்து பயிற்சிபெற்று சங்கீதத்தை நன்னிலைமைக்குக் கொண்டுவர முயற்சி செய்து வருகிறார்கள். கல்வியிலாகாத தலைவர்களும் ஆதரிக்கிறார்கள். இந்தியாவில் காலேஜ்களில் சங்கீதத்தைப் பாடமாகவைத்து உயர்தர வகுப்பாரும் ராஜாங்கத்தாரும் ஆதரித்தாலன்றி இந்திய சங்கீதத்தின் பெருமை ப்ராபல்யத்துக்கு வராது.

* * *

அமெரிக்கர்கள் ப்ரதிவருஷம் சங்கீதத்தில் 120,000,000 பவுன்கள் செலவழிக்கிறார்களாம். பியானோபெட்டிகள் 27000,000 பவுன்களுக்கு விற்கப்படுகிறதாம். கிராமோ போன்களும் ரிக்காடுகளும் 13,000,000 சங்கீதப் புஸ்தகங்களின் விற்பனை 2,100,100 பவுன்கள். சங்கீதத்துக்கு முக்கால்வாசியும் ஸ்த்ரீகள்தான் செலவழிக்கிறார்கள். சங்கீதத்தை விருத்தி செய்கிறதற்கு முயற்சியெடுத்து அதை முன்னுக்குக் கொண்டு வருகிறவர்களும் ஸ்த்ரீகள்தான்.

75

V

VIEWS AND REVIEWS.

அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Unmarried men and women in America.

அமெரிக்காவில் கல்யாண மில்லாதவர்கள் :—அமெரிக்காவில் 80-லட்சம் புருஷர்களும் 90 லட்சம் ஸ்த்ரீகளும் கல்யாண மாகாதவர்களா யிருக்கிறார்களாம். இதில் 20 வயதுக்குமேல் 44 வயதுக்குட்பட்ட புருஷர்கள் 72½-லட்சம். 90-லட்சம் ஸ்த்ரீகளும் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்கள் இப்படி யிருக்கிறது. கலியாண மெண்டாருக்கும் சமூக சீர்திருத்தக்காரருக்கும் கவலைக்கிடமா யிருக்கிறது.—அமெரிக்கன் மிரர்.

Prices of food Stuff.

உணவுப் பொருள்களின் விற்பனை :—சுமார் பத்து வருஷங்களுக்குமுன் உணவு பொருள்களின் விலையையும் இப்போதுவிற்கிற விலையையும் கவனிக்கும்போது ஒன்றுக்கு மூன்றாக இருக்கிறது. அப்படி அதிகவிலைக்கொடுத்து வாங்கியும் நல்லபொருள்கள் கிடைப்பது அரிதா யிருக்கிறது. நமக்குமுக்கிய உணவு பொருள்களாகிய அரிசி, பருப்பு பால், நெய், எண்ணெய் இவைகள் சுத்தமாகக் கிடைக்காததால் அவை களைச் சாப்பிட்டு ஜனங்கள் அநேகம்பேர் வியாதிக் குள்ளாகிறார்கள். இவ்வுணவு பொருள்களை பரிகஷிக்க ஒரு சோதனைச்சாலையும் அதைப் பரிஷ்கரிக்க செய்ய ஒரு மேதாவியும் வேண்டுவது அவசியமென்றும் இந்தவேலை முனிசிபாலிடியின் கீழ் நடத்தப்படவேண்டுமென்றும் இப்போழுது உணவு பொருள்களை பரிகஷிக்க நியமிக்கப்பட்டிருக்கும் இரண்டு இன்ஸ்பெக்டர்கள் போதாதென்றும் விலைபொருள்கள் இன்னவிலைக்குத்தான் விற்கப்பட வேண்டுமென்றும் வியாபாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்.—டாக்டர் டி. எம். நாயர்.

Seavoyage.

கடல்யாத்திரை :—இந்தியர்களுக்குக் கடல் யாத்திரை மிகவும் அத்யாவச்யம். ஒவ்வொரு தேசங்களுக்குச் சென்று அங்குள்ள ஜனங்களின் நடை உடைபாவனை முதலியவைகளைக்கற்று சத்தானவைகளை அங்கீகரித்து நடத்தலே உத்தமம். வியாபார விஷயமாகவோ அல்லது [illegible] போய் திரும்பும் காலத்தில் [illegible] பூர்வீக சிஷ்டாசாரங்களை விடாதி அநுஷ்டித்துவருவதுதான் விவேகம்.—அலர்மேல் மங்கையம்மாள்.

The Presidency Training School for mistresses :

பிரிசிடென்ஸி ஸ்த்ரீகள் ட்ரெயினிங் ஸ்கூல் :—'இந்தியன் பேடிரியட்' பத்ரிகைக்குப் பின்வருமாறு ஒரு நிருபர் எழுதுகிறார். எழும் பூர்ட்ரெயினிங் ஸ்கூலில் தலைமை வாத்தினியாயிருந்துவந்த மிஸ் பாட்டர்சன் அம்மாளுக்குப்பதிலாக ஐரோப்பாவிலிருந்து புதிதாக ஒரு வாத்திச்சியை வரவழைத்து நியமனம் செய்திருக்கிறதானது ஆங்கிலோ இந்தியன் கூட்டத்தாரில் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறதென்று ஆனரபிள் ரிச்மாண்ட் இம்மாதம்கூடின கவர்னர் சட்டசபை மீட்டிங்கில் கேட்டது நமக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. ஏன் நானூற்றுமுப்பது இம்மாதிரியாகவே வெப்பரியிலிருக்கும் டவடன்காலேஜ் பிரின்ஸ் பாலாயிருந்த ஒரு ஆங்கிலோ இந்தியருக்குப்பதிலாக ஐரோப்பாவிலிருந்து ஒருபுதிய போதகரை வரவழைத்து நியமனம் செய்திருக்கிறார்கள். அப்போது ஆங்கிலோ இந்தியக்கூட்டத்தில் அதிருப்தியை உண்டாக்கவில்லை போலும். 'கரிக்குக்கொண்டாட்டம் கண்கெடுக்கத் தண்டாட்டம்.'

VI

WIT & HUMOUR.

தமாஷ்.

தாயி :—மீனு நீ இனிமேல் புக்ககத்துக்குப்போனால் கட்டுசெட்டுமாகக் குடித்தனம் செய்யவேண்டும். சின்ன பின்னமாகச் செலவழிக்கக்கூடாது.

மீனு :—இல்லையடி அம்மா. நேற்றுகூட வாசலில் பட்டணம் ரவிக்கைச் சிட்டிவந்தது. நான் வாங்கவேயில்லையே.

* * *

சரஸ்வதி—பத்மாவதி.

ச.—கூட்டல் கழித்தல் பெருக்கல் உனக்குத் தெரியுமே ஐந்தையும் ஐந்தையும் பெருக்கு.

ப.—இருபத்தைந்து.

ச.—ஐந்தையும் ஐந்தையும் கூட்டு.

ப.—பத்து.

ச.—எப்படி பெருக்குவதும் கூட்டுவதும் ஒன்றுதானே எடுடி விளக்கு மாற்றை—இந்தக் குப்பை எல்லாம் கூட்டடி பெருக்கடி.

* * *

புருஷன்—மனைவி.

புரு.—இந்தப் புதையலைக் குழி தோண்டியதில் வைக்கப்பட்டபடியே எடுத்தேன். நீ பத்திரமாய் வைத்திரு. நான் கேட்டபோது தோண்டிஎடு.

மனைவி.—அப்படியே செய்கிறேன். நம்முடைய கொல்லைத் தோட்டத்தில் சமைக்கிற அடுப்பாரை ஓரத்தில் ஐலம் இறைக்கிற தோண்டி எடுத்துக்கொண்டு வந்து வாசலில் வைத்தால்தானே நான் உன்னைக் கேட்டேனே.

புரு.—தோண்டி எடுத்துக் கொடுத்து விடுகிறதா என்று கேட்டாய்.

மனைவி.—நான் குழியைத்தோண்டி எடுத்துக் கொடுத்துவிட்டேனே.

புரு.—ஐயோ சண்டாளி! தோண்டியை இனற்றுக்கு எடுத்துக் கொடுக்கச்சொன்னேன். புதையலைத்தோண்டி எடுத்துக்கொடுத்துவிட்டாயே.

* * *

தகப்பன்—தாயி—மகன்.

தகப்.—அட பயலே வீரபத்திரா எங்கே ஓடுகிறாய்; இங்கே உட்கார்? கேற்றைப் பாடத்தைச் சொல்லு.

மகன்.—(மேலுங் கீழும் மூழிக்கிறான். கைகட்டி உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.)

தாயி.—வாத்தியாரிடம் பாடம் ஒப்பித்துவிட்டதாக என்னிடம் பையன் சொன்னானே அவனை ஏன் நீங்கள் பிரட்டுகிறீர்கள்.

தகப்.—என்டா நேற்று வாத்தியாரிடம் ஒப்பித்தாயா?

மகன்.—வாத்தியாரிடம் ஒப்பித்திட்டேனே.

தகப்.—இப்போது சொல்லு கேட்கலாம்.

தாயி.—வாத்தியார் கொடுத்தபாடத்தை வாத்தியார் இடம் ஒப்பித்த பிறகு அது வருமோ. இன்னொரு முறை வாத்தியார் பையனிடம் கொடுத்தால்லோ பையனிடமிருந்து நமக்கு ஒப்பிக்கப்படும்.

VII

EVENTS OF THE MONTH

மாஸ வர்த்தமானம்.

நவம்பர் '13.

7-ந்தேதி.—மிஸஸ் சரோஜனி நாயுடு :—இவருக்கு 'ஹோட்டல் விவிலில்' என்னுமிடத்தில் லண்டனிலுள்ள படித்த வகுப்பார் ஒரு உபசார விருந்து வைத்தார்கள். மிஸ்டர் வில்லியம் ஏட்ஸ் என்பவர் அக்ராசனம் வகித்தார். இவ் வம்மையாரின் கல்வி திறமையையும் கவிகளியற்றும் சாதுர்யத்தையும் புகழ்ந்து பேசினார்கள்.

8-ந்தேதி.—லார்ட் ஹார்டிஞ்சு :—இன்று ராஜப்ரதிநிதியும் லேடி ஹார்டிஞ்சும் ஸ்ரீரங்கப்பட்டணத்தைப் பார்வையிட்டார்கள்.

10-ந்தேதி.—சிதம்பரத்தில் கனத்த மழை :—மழைவெள்ளத்தில் 1000 வீடுகள் அழிந்துவிட்டன. சிதம்பர தீக்ஷிதர்கள் வீடுவாசல் இல்லாமல் கலங்கி பட்டினியால் வருந்தின ஜனங்களுக்கு சாப்பாடுபோட்டு ரக்ஷித்தார்கள்

11-ந்தேதி.—தென்னப்பிரிக்கா இந்தியர்கள் :—நெட்டாலுக்கு கடந்து ப்ரயாணம் செய்ததற்காக பால்போர் என்ற இடத்தில் 2000 இந்தியபுருஷர் களும் ஸ்த்ரீகளும் அரெஸ்டு செய்யப்பட்டார்கள்.

12-தேதி.—ஸ்த்ரீ சுதந்திரவாதிகள் :—மான் செஸ்டர் நகரில் ஒரு பெரிய மாளிகையையும் நந்தவனத்தையும் வெடிகுண்டினால் ஸ்த்ரீசுதந்திர வாதிகள் கொளுத்திவிட்டார்கள். நிரம்ப சேதமாம்.

23-தேதி.—மிஸஸ் டி. வி. சேஷகிரி அய்யர் :—மிஸஸ் டி. வி. சேஷகிரி அய்யர் தமது பங்களாவில் தென்னப்பிரிக்கா இந்தியர்கள் விஷயமாக ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார். அனேக மோட்டிகள் அவ்விடத்திலேயே கஷ்ட நிவருத்திக்காக ரூ. 219 வசூலாயிற்று.

24-ந்தேதி.—வைசராய் விஜயம் :—இன்று 12-30 மணிக்கு லார்ட் ஹார்டிஞ்சும் அவர் மனைவியாரும் பரிவார சகிதமாக சென்னை விஜயம் செய் தார்கள்.

25-ந்தேதி.—ராமனாதபுரம் ராணி :—ராமனாதபுரம் ராணி இன்று 11-30 மணிக்கு லேடி ஹார்டிஞ்சை பேட்டிகண்டார். பேட்டி கொடுத்துப் பேசியபிறகு ராணிக்குப் பூமாலையிட்டு தாம்பூலம் கொடுத்து அனுப்பினர்.

26-ந்தேதி.—லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப் :—இன்று 4 மணிக்கு லேடி ஹார்டிஞ்சு லேடி பெண்ட்லண்டோடு லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப்பைப் பார் வையிட்டார். இந்திய சீமாட்டிகளும் ராணிகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

27-ந்தேதி.—லேடி ஹம்தில் நர்ஸிங் இன்ஸிடிடியூட் :—இன்று மாலை கவர்ன்மெண்டு ஹவுஸில் லேடி ஹம்தில் நர்ஸிங் இன்ஸிடிடியூட்டின் வருஷாந்த ர மீட்டிங் நடந்து ரிப்போர்டு வாசிக்கப்பட்டது. லேடி பெண்ட்லாண்டு அக்ராசனம் வகித்தார்.

29-ந்தேதி.—தென்னப்பிரிக்கா அனுதாப மீட்டிங் :—பம்பாய் ஸ்திரீ கள் தென்னபிரிக்காவில் இந்திய சகோதராகளும் சகோதரிகளும் படும் கஷ்டங்களைப்பற்றி ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார்கள். லேடி டின்ஷா பெடிட் அக்ராசனம் வகித்தார்.

31-ந்தேதி—ராணி அலெக்சாண்ட்ரா :—நமது சக்ரவர்த்தியின் தாயார் அலெக்சாண்ட்ரா ராணியின் பிறந்த காளின் அதிகுறியாக 31 குண்டுகள் போடப்பட்டன.

கீர்த்தனம்ப, "இல்லையே" என்றாள். சற்குணதாஸ் மேஜைமீதிருந்த ஒரு பத்திரிகையை எடுத்துப்பார்த்தார். மாலதி மேஜையில் ஒருகையும் கன்னத்தி லொருகையுமாக இடை தவள சாய்ந்துகொண்டிருந்தனள். அப்போது அவன் அழகில் கோபித்தானென சொல்லலாம். மாலதி தீர்ந்த அழகுள்ளவ னல்ல. ஆனால் அழகியல்லவென்றும் சொல்லமுடியாது. அவள் பார்வைக்கு சிறிது கெட்டையாயும் கொடிபோல்தேக முள்ளவளாயுமிருந்தனள். அவ ளைக்கண்ட புருஷர் மாதர் யாவரும் சற்று நிகைப்பார். இவளைப்பார்த்து உடன் இவள் ஒன்றுமறியாத பேதையென்பார். ஆனால் சற்றுப்பழகினால் அவளறியாத தொன்றுமில்லை யெனவிதமாகும். தன்னைவிட அறிக்தவ ளில்லையெனப் பகட்டி புருஷனைத் தன்வலையில் சிக்கச்செய்யும் ஸ்த்ரீகளைப் போலல்லாது அறிந்து மறியாதார்போன்ற பாவமுற்று பேதமையென்பது மாதர்க்கணிகலமென்ற வாய் மைக்குகந்திருந்தனள். மாலதிக்கு வெகு காளாக சற்குண தாவின்மேல் அளவற்றவிருப்பம். ஆனால் ஒரு தினமாயி னும் தன் ஆசையை வெளிகாண்பிப்பதில்லை. இதற்குக்காரணம் கூச்சமும் இயற்கையான ஆழக்த சுபாவமுமாத்திரமல்ல. சற்குணதாஸ் யாருடனும் அளவளாவிப் பேசுபவரல்ல. எவருடனும் கண்யமாய்த்தான் பேசுவார். அவரைக் கண்டவுடன் எப்பேர்ப்பட்ட ரவிகளிகாமணியுமடங்கி யோசித்தே வார்த்தை யாடுவாள். விளையாட்டு சங்கீதம் தோட்டக்கச்சேரி முதலிய விடங்களுக்கு இவர்சென்று யாரும் பார்த்ததில்லை. இரவும் பகலும் வேலை செய்வார். இவர் குழந்தையிலேயே இங்கிலாந்துசென்று சட்டப்பரீட்சை கள்கொடுத்து பாரிஸ்டராகி மும்பா நகரத்தில் ப்ரமுகராக விளங்கினர். இவர் மற்றதை கவனியாது வதா பொது கண்மைக்காகவே பாடுபட்டுவர எல்லாரும் இவரை ஞானியென்று மதித்தனர். யோக்கியதை கண்யம் பொருந்திய பெரியோர் பிரபுக்களனைவரும் இவரைத்தம் கண்ணைப் பாலித்தனர். வாலப்பருவத்திற்கேற்ற செய்கைகளொன்றுமே இவரிடம் காணப்படவில்லை. இவ்வகையான புருஷனைக் காதலித்த மாலதி எவ் விதம் தன் ஆவலைத் தெரிவிக்கமுடியும். தெரிவித்தும் அவன் மாறாரி விடா கத்தக் கேற்றபடியாக இல்லையே. மென்மேலும் இவற்றையோசனை செய்தாள் மாலதி. இவர்கள் இவ்வாறு மௌனமாயிருக்கையில் சுந்தரா பாய் வந்து சற்குணதாஸைக் கண்டு கல்வரவுகூறி "என் இவ்வளவு நேரம் மாலதி அவர் வந்ததும் எனக்குத் தெரியப்படுத்தக் கூடாதா" என.

ஸற்குண "பாதகமில்லை. உங்கள் பெண்ணின் வருஷோற்சவம் வைபவமாய் நிறைவேறிற்றல்லவா. உங்கள் சகோதரர் இவ்விடத்திலில்லை யாமே. நீர்தின்றீர்களே. உட்காருங்கள் சுந்தராபாய் உட்கார்ந்து சற்று மௌனமாயிருந்து பிறகு "இன்றினம் சட்டர்ஜியவர்களும் காணும் தங் களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம்.

ஸற்குண:—என்ன விசேஷம்.

சுந்தரா:—காருண்யதாஸ் அவர்கள் தங்களை ஏதோ கோபித்துக்கொண்டதாகத்தெரிவித்தார். என்அம்மாள் பிரியவதனு இங்குதானேஇருக்கிறாள்.

ஸற்குண:—ஆம். கனகபவனத்தில் தான் இருக்கிறாள்.

சுந்தரா—கனகபவனமா! அக்கட்டடம் உம்மைச்சேர்ந்ததல்லவோ.

ஸற்குண:—"ஆம். நான் என்னுடைய ஆபீஸில் தான் அனேகமாய் வசிப்பது அல்லது மேதாவிலாஸ் ஹோட்டலில் என்னுடைய அறையில் இருப்பேன்."

சுந்தரா:—உம்முடைய தாயும் சகோதரனும் எங்கிருக்கின்றார்கள்.

ஸற்குண:—கனகபவனத்தில் தான்.

சுந்தரா:—அங்கின்னும் வேறு யார் வசிக்கிறார்கள்.

ஸற்குண:—என் தந்தை யிறந்த காலம் முதல் என் பிதாவிலும் பரிவு மடங்கதிகமாக ஆதரவுடன் எங்களைக்கார்த்து வந்த வயோதிக பிரபு காருண்யதாஸ். அவர் செல்வமகள். அவர் சகோதரியின் புத்திரன் புஷ்பவனம் வேலைக்காரர்கள்.

சுந்தரா:—"மற்றொரு விசேஷம் கேள்வியுற்றேன். ஆனால் முழுதும் நம்பிக்கையில்லை அதைக்குறித்து நான் கேட்கலாகுமோ."

ஸற்குண:—சற்று யோசித்து, "ஏன். கேட்கலாம்."

சுந்தரா:—உமக்கு கூடிய சீக்கிரம் விவாகம் ஆகுமென்றும் காருண்ய தாவிடம் அவ்வாறு நீர் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கேட்டேன் ஆச்சரியமாயிருந்தது. சட்டர்ஜீ சொன்னது நியாமல் அலட்டும் காருண்யதாஸ் தொந்திரவுக்காக ஒப்புக்கொண்டிருக்கக்கூடும் என்றார்.

ஸற்குண:—என் தந்தை போன்ற பிரபு அலட்டுவது உண்மையென்றிருந்தாலும் அதற்காகத்தான் ஒப்பினேன் என்பதில்லையே. ஆச்சரியமேன்.....அதென்ன அம்மணீ 'எனக்கு நம்பிக்கையில்லை யென்றீர்கள். நானென்ன வைராக்கியம் பூண்ட ஞானியா இனிவிவாகமேவேண்டுவதில்லை யென்று பத்திரிகையில் அச்சிட்டதுபோலல்லவோ நினைக்கிறீர்கள்' என்று புன்னகை செய்தார். "பத்திரிகையில் அச்சிடவாவேண்டும் நீங்கள் நடந்துவரும் நடவடிக்கையே அப்படி நினைக்க ஏதுவாக இருக்கிறது."

"ஆயின் விவாகம் செய்துகொள்பவன் எவனும் முன்னதாகவே சொல்லிக்கொண்டேயிருப்பான் போலிருக்கிறதே" இதைக்கேட்ட மாதர்களிரு வரும் நகைத்தார்கள்.

சுந்தரா:—அதென்னவோ நான் மாத்திரம் அவ்வாறு நினைத்தால் ஸரியாவரும் அப்படித்தான் எண்ணுகிறார்கள். ஏன், மாலதீ நீ என்ன நினைக்கிறாய்.

மாலதி:—எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

ஸற்குண:—தொந்தரவில்லை அப்படி விடையளித்தால் மேற்கேள்விகளுக்கிடமுண்டாகாது.

சுந்தரா:—இன்று வெகு நேரம் உங்கள் வரவை எதிர்பார்த்திருந்தேன். குழந்தையும் வெகுநேரம் சாளரத்தண்டையே கார்த்திருந்தாள். இத்தனை பேர்கள் வந்தும் அவள் மனதிற்கு திருப்தியில்லை. நீர் ஒருவர்தான் அவளுக்கு மனதுக்கிசைந்த நண்பர் வேறுயாரிடமும் இவ்வளவு ப்ரியமாய் அவள்பேசியதில்லை." சற்குணதாஸ் கையிலிருந்த பத்திரிகை நழுவிவிழுந்தது. அவர் அதைக் குனிந்தெடுக்க அவர் சட்டைப்பையிலிருந்து ஓர் கடிதம் கீழேவிழுந்தது. சுந்தராபாய் அதையெடுக்க 'காருண்யதாஸ் அவர்களுக்கு' என்றிருந்தது. சுந்தராபாய் அதையெடுக்க 'காருண்யதாஸ் அவர்களுக்கு' என்று விலாசம்மேல் எழுதியிருக்கக்கண்டு அதைக்கையில் பிடித்தவண்ணம். "ஸற்குணதாஸ் நீர் பிரியவதனையைகூடிய சீக்கிரத்தில் மணம் புரிவதாகச்சொல்லி கொள்ளுகிறார்கள். எங்களுக்கு நிரம்ப சந்தோஷம்" என அதிவரை புன்முறுவலுடன் அங்குமிங்கும் நோக்கிக்கொண்டிருந்த மாலதியின் வதனம் பொழுதுவிடியும் சமயத்தில் பிரகாசிக்கும் சந்திரன்போல வெளுத்தது. சுந்தராபாய் அவள் முகமாறுபாட்டினுல் மனதை யறிந்துகொண்டனள். அவள் சில நிமிஷநம்வரை நிறுத்திட்டு நின்றாள்.

ஸற்குண:—"ஏன் நீங்கள்.....என்னவிசேஷம் ஏன் நீங்கள் இருவரும் பிரமித்து நிற்கிறீர்கள்." சற்குணதாஸ் விவாகத்தைப்பற்றி சம்பாஷணையுண்டானதும் திடீரென மாலதி முகம் மாறியதைக்கண்டு சுந்தராபாய் அவன் சொல்லியதைக் கவனிக்காமல்; தன்னுள் மாலதி இவனை மணக்க விரும்புகிறாள். சந்தேகமில்லை முகம் வாடியதற்கு காரணம் அதிதான். முன்னமேயே நாம் இதைத் தெரிந்துகொள்ளாமற்போனோமே. பிரியவதனையைத்தான் அவன் மணம் செய்துகொள்வான். வேறு பெண்ணை நியாயமே தம் அருமை மகனை காருண்யதாஸ் ஒப்புக்கொள்ளமாட்டார். விட்டு மற்றவரை மணம் செய்துகொள்ள யார்தான் சம்மதிப்பார். மாலதியிதைப்பற்றி ஒன்றும் என்னிடம் சொல்லவில்லையே" என எண்ணி, மாலதியின் முகத்தைப்பார்த்தான். அவள் புன்னகை புரிந்தனளாயினும் இவள் நமது எண்ணத்தை யறிந்தனளேயென்ற வெட்கத்தை மறைப்பதற்காக வந்ததென்று சுந்தராபாய் அறிந்துகொள்ளாமற் போகவில்லை. தான் கேட்டதற்குப் பதிலளிக்காத சுந்தராபாயின் திகைப்பைக்கண்ட சற்குணதாஸ்.

பெண் கல்வி

என்ன அம்மணி என்று சொல்லும்முன் சுந்தராபாய் தன்னை மறந்த வளாய் 'இக்கடிதம்' என்று சற்குணதாஸ். 'ஏன் நீங்கள்பிரித்து பார்க்கலாமே என்றார். அப்படியே பார்த்ததும் அவள் அதிக ஆச்சரிய முற்று எதோபேச ஆரம்பித்து நாவெழாமல் சற்குணதாஸ் வதனத்தை நோக்கினாள். அவர் யோசனையாய் கீழ்நோக்கினர். மாலதி இதென்ன விபரீதமென சந்தேகிக்க, சுந்தராபாய் கடிதத்தை மறுபடி அவரிடம் கொடுத்துதான் பிறகு வருவதாகச்சொல்லி வெளியே சென்றனள்.'

மாலதி :—"மோகன். அக்கடிதத்தில் என்னவிசேஷம். நான் அறிய லாமோ"

சற்குண :—"நான் விடைபெற்றுச் செல்லுமுன் உனக்கு காண்பிக்கி றேன். மாலதி தயவுசெய்து தோட்டப்பக்கம் போகலாம் உன்னால் கூடுமோ."

மாலதி :—"ஆம், வருகிறேன். ஆனால் இருள் சூழ்ந்திருக்கின்றதே."

சற்குண :—"அதினாலென்ன இக்கதவைத் திறந்துவைத்தால் சூரியன் போன்ற இவ்வெளிச்சம் அங்குதெரியும்."

இருவரும் தோட்டத்தில் சுத்தமான ஓரிடத்தில் இனிமையான தென் றல்வீச நின்றனர். காந்தவிளக்கொளி துளிர்களில்தாங்கி தங்கம்போன்று பிரகாசிக்கச்செய்தது. இவர்கள் இதை கவனியாது தத்தம் யோசனையி லிருந்தனர்.

சற்குண :—"மாலதி இன்று காலைமுதல் இதுவரை மூச்சுவிட முடியா மல் வேலையிருந்தது. களைப்பு மேலிட்டாலும் உன்னைக்கண்டு வாரத்தை யாடிப் போகலாமென்று வந்தேன். முடிவாக விடைபெற வேண்டிகேட்கி றேன்."

மாலதி :—"முடிவாகவா; விடைபெறவா." அவள் திடுக்கிட்டாள். நாம்கொண்ட அன்பைக்கண்டு கொண்டாரோ. பிரியவதனாவை உத்தேசித்து என் அன்புக்குதான் பாத்திரமில்லையென்று மறுத்துவிடப் போகிறாரோ. அதைத்தெரிவித்து வீணாகவருந்தாதே என்று சொல்வாரோ; என்று அச்ச மும் வெட்கமும்கொண்டு, "தாங்கள்சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என

சற்குண :—"அர்த்தமாகவில்லையா சரி. என் கேள்விகளுக்கு விடை யளிப்பாயா."

மாலதி :—"ஆகட்டும்."……இருண்ட தோட்டத்தின் இலைச்சருகுகள் சலசலவென ஒலித்ததுபோல கேட்டதும் இருவரும் அத்திசை நோக்கினர். ஆனால் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

சற்குண :—"மாசற்றமாலதி உனக்கு இன்று வயதுநிறைந்து சுதந் திரையாய் விட்டபடியால் உன்தந்தை சீக்கிரம் உனக்குவிவாகம் நடத்தி

இருவரும் உன்னை வர்மிப்பார். என்ன மூடத்தனம். என்ன சஞ்சலப்படுகி றாய். கஜபதியால் வளர்க்கப்பட்டவனுக்கு மனசஞ்சலமும் உண்டோ? என்ன ஆச்சரியம!

ரகு.—பூஷணம், என்ன சொன்னாய்? கொலைகளவுகளை கைக்கொண்டு உன்னைச்சுட்டுவிடவா? என் இயற்கை சாத்வீகமென்பது தெரியாவிட்டா லும் நான் பி. ஏ. தேறினபிறகும் இவ்வித தொழில்கள் புரியக்கூடியவனா என்பதை யோசிக்காமல் பேசினாய். இதைவிட என் ஹிருதயத்தை கத்தி யால் பிளந்திருக்கலாம். பூஷணம், நான் அதைரியத்தால் சஞ்சலப்படுவதாக எண்ணாதே. அவரைப்பிடித்தால் என் தாய்கதி என்ன ஆவது? ஐயோ! நினைக்க பயங்கரமாயிருக்கிறதே! அவரை விலங்கிட்டு நிறுத்தினவன் பெற்ற புத்திரனாயிருப்பினும் அவன் வயிறெரியாதா?

குண.—இத்தகைய ஸ்த்ரீகள் கதைகளில் கூறிய ராஜ ஸ்த்ரீகளையன்றி கிடையாது என்றெண்ணி யிருந்தேன். இம்மாது பிரம்ம ஜாதியன்றோ? இவ்வித தைர்யமும் பதிபக்தியும் தீட்சண்ய புத்தியும் வாய்ந்திருப்பது ஆச்சரி யமே. காடுமலைகளில் விஷஜந்துக்கள் கொடிய மிருகங்கள் மூர்க்கமான திரு டர்கள் நடுவில் தனியாக உலக இன்பங்களையும் சௌகரியங்களையு மிழந்து வாழும் ஸ்திரீ, முக்கண்ணன் நேசியாகிய அம்பிகைக்கும் நரசிங்க மூர்த்தியி னிடம் நின்ற திருவுக்கும் சமமென்றே சொல்ல வேண்டும்.

ரகு.—ஐயோ! நல்லொழுக்கம் நற்குணம் நிறைந்த காளீசன் அவ ரிடம் பணிந்து வாழவில்லையா? நான் ஏன் அப்படியே விசுவாசமாய் அவரி டம் இருக்கக்கூடாது? என் தாயைப் பிரிந்து வாழ என்னால் எப்படி முடி யும்? என் பதவியை அவள் மெச்சுவதற்காக வென்றே வாங்கினேன்.

குண.—காளீசன் யார்.?

ரகு.—சுபத்திரையின் சகோதரியின் புத்ரன். கஜபதியின் அந்தர ங்க விசுவாசி. அவருக்கு இவன் வலதுகை யென்னலாம். அவன் நன்மைக்காக அவனை விலகிப்போகும்படி சுபத்திரை கூறினாள். அவன் தன் கடமை அவர்களிருவருமிருக்கு மிடமேயென்று மறுத்துவிட்டான். (பல்லக்குப்போ யிகள் சத்தம் வெளியில் கேட்கிறது.) ரங்கையா (கான்ஸ்டேபிள் வருகிறான்) என்ன சப்தம் அது?

ரங்கையா.—அக்ரமமிஞ்சி ஜமீன்தார் (பலவந்தக்கேஸில் போன வருஷம் எதிரியாயிருந்தவர்). பரிவாரத்துடன், குற்றாலம் போகிறார்.

குர.—சரி! நீ போகலாம். (ரங்கையா போகிறான்) பூஷணம், நேற்று 'பேபர்' பார்க்கவில்லையோ? விரகதியானந்த ப்ரம்ம யோகியாரும் ஜீவானந்த யோகினியாரும் தீர்த்தயாத்திரையில் குற்றாலம் வருகிறார்களாம். அவர்கள் தான் பல்லக்கில் வருகிறார்களென்று எண்ணினேன்.

குண.—ஆ! ஆனால் தெரிந்துகொண்டு அவர்கள் இருப்பிடமறிந்து காணவேண்டும். வெகு காலமாயிற்று அவர்களைக்கண்டு.

ரகு.—ஜீவானந்தா! உங்கள் பாட்டியாரல்லவோ?

குண.—ஆம் விரக்தியானந்தர் அவள் சகோதரன். அவளுக்கு என் மேல் இன்னும் பாசம் விடவில்லை. கஜபதிவிஷயத்தில் என்னைத்தலையிடக் கூடாதென்று கண்டித்தாள். நானும் சரியென்று சில காலம் இருந்தேன். ஆனால் மகாராஜா என்னை முன்னுக்குக் கொண்டுவந்தவர். அவர் நேரில் என்னை வேண்டிக்கொண்டார். நான் தடைசொல்ல முடியவில்லை. இதற்காக, என்மேல் பாட்டியாருக்கு சிறிது வெறுப்பும் வருத்தமும் உண்டு.

ரகு.—ஆகா! இப்பேர்ப்பட்ட மகாத்மாக்களைப்பற்றி நினைக்கும்போது நாமும், மனதை ஒரு வழி நிறுத்தி உலகத்தை ஏன் வெறுக்கலாகாது என்று தோன்றுகிறது.

குண.—உன் சித்தம் நிலையற்றது. இப்பொழுது யோகியாய் விட எண்ணுவாய். தமாஷ் பேர்வழிகளைக்கண்டால் இல்லாத ஆடம்பர மெல்லாம் செய்ய எண்ணுவாய். ஆசாரசீர் திருத்தக் காரர்களைக்கண்டால் விதவா விவாகமவசிய மென்று பிரசங்கிப்பாய். ஊக்கமாய் வேலை செய்பவரைக் கண்டால் நீயும் அப்படியே செய்வாய். உன் குணத்துக்கும் என் குணத்துக்கும் நேர்விரோதம். ஆனால் நம்மிருவருக்கும் இப்படி நேசமும் ஒற்றுமையும் ஏற்பட்டது ஆச்சரியமே!

ரகு.—காரணம். காந்த சக்தியின் மகிமை (ஹ்யுமன் மாக்னெடிஸம்) காந்தரீதிப்படி விரோத சுபாவங்கள்தாமே ஒன்று சேருகின்றன. ஒரே விதமான காந்தங்கள் ஒன்றை யொன்று விட்டு விலகுகின்றன.

குண.—சரி. குற்றாலத்தில் நமக்கு கூடாரங்களடித்து தயார் செய்ய ஆளனுப்பினேன். ஆனால் வக்கீல் குமாரம். நம் பக்கம் ஜமீன்தார் கேஸ் பிராசிகியூட் பண்ணவில்லையா? அவர் தம் பங்காளாவிலேயே இருக்கும்படி யழைத்தார்.

ரகு.—ஓர் குடும்பஸ்தன் கிரகத்தில் நம்மைப்போன்ற வெறுங்கட்டைகள் போகலாமா? அவர் மனைவி மக்களுக்கு நம்மால் இடைஞ்சல் அல்லவா?

குண.—அவருக்கு மனைவியில்லை. அவருக்கு 25-வயதிருக்கும். அவள் இறந்தாள், அதுமுதல் மறுவிவாகமும் செய்து கொள்ளவில்லை. யோக்கியதை கெடவு மில்லை. வக்கீலா என்று ஏளனம் செய்பவர்கள் இவரைக் கண்டால் மெச்சி மரியாதையாயிருப்பார்கள். நமக்குத் தனியாக இருக்க இடம் கொடுப்பார் பங்காள மிகவும் விசாலமானது. நேற்று திவான்ஜி சொன்னதில் நீ ஜமீன்தார் கொடுத்த லஞ்சத்தை நிராகரித்து, கேஸை

[illegible]யமாய் நடத்தினது போலீஸ்க்கு நல்ல பெயர் உண்டாக்கினதென்றார். நான், தொழிலைப்பற்றி பொதுவாக இகழ்வது பிசகு. வக்கீல்களில் குமரம் போன்ற அனேக யோக்கியர் இருக்கின்றனர். அவ்விதமே போலீஸில் எத்தனையோ பேர்களிருக்கின்றனர்.

(கிழவன் வருகிறான்).

கிழ —குதிரை தயாராயிருக்கு. வெய்ய லாயிற்று.

குண.—இக்கிழவனுக்கு உன்மேல் எவ்வளவு வாஞ்சை? கிழவா. நீ வண்டியிலேறிப்போ. (கிழவன் போகிறான்) ஏன் தாமதம்? புறப்படு.

ரகு.—"வருகிறேன். எனக்கு அன்னியர் வீட்டில் இறங்குவதென்றால் சங்கோஜமாக இருக்கிறது. சுதர்சனத்தின் மனைவி சண்பகம்மாள் குழந்தை முதல் என்னை யறிவாள். அவளை என் மூத்த சகோதரியாகவும், சுதர்சனத்தை அத்திம்பேராகவும் பாவிப்பதுண்டு. அவர்கள் வீட்டிலாவது இன்ஸ்பெக்டர் பத்மநாபன் ஜாகையிலாவது தங்குகிறேன்.

குண.—"சௌகரியப்படி செய். உன்னை ஒருவரும் பிடித்துக்கொள்ளமாட்டார்கள் நான் பார்த்துக்கொள்கிறேன். சுதர்சனமும் அப்பங்களாவில் தான் இருப்பார். உன்னிஷ்டப்படியே வா. சீக்கிரம் உடைதரித்து வா. (ரகுநாதன் போகிறான், உலாவுகிறான்.) அந்தரங்க நண்பனாயிருந்தும் சாவித்ரிமேல் நான் காதலுற்றிருப்பதை இவனிடம் சொல்ல வெட்கமாயிருக்கிறது. உலகத்தில் இவை யெல்லாம் சகஜமாயிருப்பினும் எனக்கு இதைப்பற்றி வெளியில் அயலாரிடம் பேசுவ தென்றால் கௌரவக் குறைவாகத்தோன்றுகிறது. சொல்லவும் கூச்சத்தால் நாவெழவில்லை. ரகுநாதன் என்னை இருதயமற்றவன் என்றெண்ணுகிறான். தெரிந்தால் பரிகாசம் செய்வானே! என் சட்டைப்பையிலிருந்த என் காதலியின் படத்தைப்பார்த்து விடுவானோ என்று எவ்வாறு நான் நடுங்கினேன் (படத்தை எடுக்கிறான்). எவ்வளவு கஷ்டப்பட்டு நான் வரைந்தது இப்படம். இவ்வளவுதூரம் இதுசரியாய் வாய்த்தது என் அதிர்ஷ்டமே. அவள் உரு நன்றாய் என் மனதில் பதிந்ததனாலல்லவோ அவள் நேரிலில்லாமல் நான் படம்வரைய முடிந்தது. ஆ! கண்ணே! சாவித்ரீ, உன்கம் பீரமும், கடைக்கண்ணோக்கமும், இணையில்லாவழகும், ஸரஸ்வதி நர்த்தனமாடும்உன்வதனமும் அடக்கமான புன்சிரிப்பும் [illegible] பெண்களே பெண்ணாசைகொள்ளும் பெருமாட்டி, நான் உலகப்பற்றற்று எதையும் பொருட்டாக மதியாதிருக்க, உன்வடிவமும் உன் பேதைமையும் என்னை யாட் கொண்டனவே. உன்னைக்கண்டு களிக்கும் நேரம் எப்போவென்று ஆவலாயிருக்கிறேன். நீ முற்றும் பதினாறுவயது நிறையாதவளாயினும் உன்னைச் சிறுபெண்ணென மதித்துப்பேச எனக்கச்சமாயிருக்கிறது. எவ்வளவோ ஆவலுடன் உன்னை யணுகும்போது, நீ அடக்கமில்லாத புருஷன் கேவலம்

என்று இகழ்வாயோ என்றஞ்சி, கௌரவமாய் அடங்கி நடக்கிறேன். இதனால் நான் ஆழ்ந்த காதலுள்ளவனல்ல மேனியைக்கண்டு மயங்குபவன் என்று எண்ணுவாயோ ஆற்றேன். நான் உன் அகத்தழகையேகண்டு காதலுற்றேன். நீ என்னை வெறுக்கவில்லை. ஆயினும் கண்ணே! ஒருதரமாவது என்னைப்போல விருப்பத்துடன் என்னை நோக்கியதில்லையே. மேலெழும் நாணமோ, அடக்கும் கௌரவமோ இதன்காரணம். மனோரஞ்சிதம் உன் பொன்னிறமான முன்கையை அலங்கரிக்க இவ்வஞ்சவாயல் வாங்கி இருக்கிறேன். கேவலமா யெண்ணுவாயோ என்று பயமாயிருக்கிறது. நீ இதை யணியக்கண்டு என்கண்கள் களிக்கவேண்டும். ஈடற்ற அழகுவாய்ந்த சாவித்ரீ.

நாவினிலமர்ந்த கலைமங்கையு நலமனைம்சேர்
பூவினில்வளர்ந்த திருமகளையும் புலவர் தம்மால்
பாவினிலமைத்த உயர்பாவையர் பலரையுமென்
சாவித்திரீ நினக்குவமை சாற்றுதல் சரியாரோ.

(காண்ஸ்டேபில் வருகிறான். பூஷணம் தீடீரெனப் படத்தை மறைத்துக் கொள்கிறாள்.)

காண்.—"யசமான் காத்திருக்காகோ. தங்களை யழைக்கிறாகோ?

தூண.—"சரி. போ! வந்துவிட்டேன். (காண்ஸ்டேபில் போகிறான்). நல்லவேளை ராகுநாதனுயிருந்தால் நான் படத்தை மறைத்ததை கண்டு பிடித்திருப்பான். என்கௌரவம் போயிருக்கும் (கண்ணாடியில் முகத்தைபார்த்து) என்ன என் முகம் இப்படி இருக்கிறது? என் இகத்தின் ரகசியங்களை விதமாக என் முகத்தில் எழுதியிருக்கிறதே. சே! இவனைக்காணும் முன்முகத்தைச் சீர்படுத்திக்கொள்கிறேன். இதுதான் ஸ்வபாவமுகம். (போகிறான்).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 FEB 1914
MADRAS.

THE
FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதாந்தப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டே
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்ராதிபர் :
ஸகோதரி ரே. தாயாரம்மாள்.

Vol. 3. தொகுதி 3 } ப்ரமாதீசவரு கார்த்திகை, Dec. 1913. { No. 3, பகுதி 3.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors,

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. தெளிவுடனும் மாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல் யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதிவருகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

மடியில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

Supplement to 'FEMALE EDUCATION' Dec, '13. "பெண் கல்வி"க்கு அநுபந்தம். டிசம்பர் 1913.

தென்னிந்தியா கவர்ன்மெண்ட வெள்ளை எதிர்க்காமல் எதிர்க்கும் ஸ்த்ரீ தீரர்கள்.

அக்டோபர் மாதம் 21-ந்தேதி யன்று நியூகாவில் என்ற இடத்தில் 3 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

Through the kind courtesy of the Editor,
The "Swadesamitran" Madras.

திரு.வேங்கடசாமி:—மிஸ்ஸஸ் M. டாபி, மிஸ்ஸஸ் K முருகேச பிள்ளை, மிஸ் பாக்யம் முருகேச பிள்ளை, மிஸ்ஸஸ் P. K. ராயடு உடகாவந்திருக்கிறவர்கள்:—மிஸ்ஸஸ் பெருமாள் ராயடு, மிஸ்ஸஸ் ரெங்கசாமி பிள்ளை, மிஸ்ஸஸ் தம்பி ராயடு மிஸ்ஸஸ் N. பிள்ளை, மிஸ்ஸஸ் N. S. பிள்ளை, மிஸ்ஸஸ் பவானி தயார்.

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

GITAMS

on

Miss C. M. LYNCH,

Inspectress of Schools, Central Circle, Madras.

By

Mr. U. A. Muthuswami Kavirayer.

இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ். ஸி. யெம். லிஞ்சம்மை யவர்கள்பேரில் பிரதாப கீதங்கள்.

நோட்-விருத்தம்.

1. கருணைத்துரைமார் கவர்ன்மெண்டார்
கண்பெண் பாட சாலையிலே
தருணப்பெண்கள் வாசித்துத்
தலைமைபெருகுங் காலையிலே
வெருவுற்றிருக்குந் தனியிந்து
விதவை மாதர் மூலையிலே
பொருளற்றழுவார் கலிவெயிற்கு
புகல்போல் வளருஞ் சோலையிலே.

2 வந்து முளைத்த கற்பகமே
வளர்தென்னிந்தியா தேசந்
தந்துவைத்த பொக்கிஷமே
தாயே சென்ட்றல் சர்க்கிளுக்கு
வெந்துயரந் தீர்த்த விதவை
விடுசமைக்கும் பெருமாட்டி
அந்தணீ மிஸ். வி. யம். லிஞ்ச்
அம்மா யாமுன் அடைக்கலமே.

சுருட்டி : ஆதிதாளம்.

பல்லவி.

2. எங்கள் மிஸ் வி. யெம் லிஞ்சம்மா இந்து
தேச தருமவிச்வாசி
எங்கள் வி. யெம். லிஞ்சம்மா.

அனுபல்லவி.

ஆயும்வேளை யிந்தியா மனராசி
ஆக நீதி பேசி
வருகிற மோகனப்ர காசி (எங்கள்)

சையிந்தியர்வித வைகளை வதைத்த
தாமென்றுங் கைத்த
கல்*விடோஸ் ஹோமொன்று வைத்த (எங்கள்)

சத்ய சாரதா பீடமுடி
முத்துஸாமி பாடி
புகழவே வைத்த புண்யங்கோடி (எங்கள்)

EDUCATION OF WIDOWS.

விதவைகளின் கல்வி.

(விதவைகளுக்குக் கல்வித்தினையிருந்தால் இறந்துபோன புருஷன் இருக்கிறமாதிரி ஆதரவாகும்; ஜீவனோர்த்த விஷயம் பாடசாலை வேலைகளைச் செய்து உய்யலாமன்றே என்ற கருத்துகள் அடங்கியுள்ள தேம்).

நாதநாமக்கிரியை.

பல்லவி.

3. கல்விக் கணவனன்றே கணவன் - இந்தக்
கண்ணுக்கழகான கணவனேகணவன்.

அநுபல்லவி.

செல்வக் கணக்குப்பிள்ளைமாரே—உங்கள்
சிமாட்டிகளெல்லாம் சீர்சேர் தேர்வாரே
ஒல்லிக்கடிதம் எழு தாரே—அது
உங்கள்பிழையோ அவர்பிழையோ சொல்வீரே (கல்)

---

* Widow's Home.

* அதாவது விதவாச்ரமம்.

பெண் கல்வி

ஏழைப்பெண்களுக்கில்லை வசதி—நிலை
யென்றாலு மடிமைப்பட் டெழுத்துகளெழுதி
வாழிக்கணவனுடன் நியதி—படி
வாழ்வதுந்தெரியாத வயணமே அவிதி (கல்)

கூலிவேலையிலுழைத்தாலும்—அதில்
குறிப்பிட்டகணக்குகள் வெளிப்படமேலும்
தாலிகட்டினவனைப்போலும்—துணை
தருவதுவிதவைகட் கருமை யெக்காலும். (கல்)

சரபகவிமாமுத்து ஸாமி—சொன்ன
தைரியத்தாலே சம்பளம் பெற்றமாமி
அருமை மருமகட்குப் பூமி—நிதி
அமைத்த வுதாரணி நீ அடிசிவகாமி. (கல்)

PROTECTION OF WIDOWS.

விதவா பரிபாலனம்.

ஏகசக்ராதிபதி என்தெய்வமே மெட்டு—கண்ணிகள்.

4. ஆண்கள் சகவாசமிலை அனைவரும் பெண்கள்
அப்பாடசாலையிற் கற்கிறோ மெண்கள்

வீண்கால மில்லைநித மேலானபாடம்
வெகுமானமே கல்வி திகழ்வாணி பீடம்

விதவைகளை யீடேற்ற வேண்டுவது கடமை
விட்டு விடுவதுதேச குக்கிராம மடமை

சிதையாத கீர்த்திமிஸ் ஸீ. யெம்லிஞ்சம்மை
சேர்த்தவிதவா சிரமம் பார்த்தவரை செம்மை

வித்தைகள் படித்துவரின் விதவைகளதிஷ்டம்
விடியாமல் வளருமோ மிடியான கஷ்டம்

தத்து கல்வியிலேது நம்மான நஷ்டம்
ஞாயமிலையோ விதவை ஆயபேரிஷ்டம்

கீதத்திரட்டு

HINDU WIDOWS' WAIL.

இந்து விதைகளின் பிரலாபம்.

ஆரபி—நேரிசையாசிரியப்பா.

5. கதியென்றிருந்த கணவரையிழந்து
விதவைகளான மெல்லியர் யாங்கள்
உண்ணவுடுத்த உண்டியுமாடையும்
எண்ணமில்லாம லிருப்பது முறையோ
இன்றியமையா இவையெங்கட்கு
நன்றிமறந்த நாட்டுப்புறத்தார்
கொடுத்தாதரிக்கக் கூடாதென்று
படுத்தும்பாடு பகரொண்ணாது
சொத்திற்பிறந்து சொத்திற்புகுந்து
பத்தினிவிதவை பட்டினிகிடக்கும்
கருமத்தினுமுடன் கட்டை நன்றே
தருமத்துரைத்தனத் தாரிதற் கிடங்கொடார்
சகுனத் தடையாய்த் தாலியற்றவள்
புகுமித்தருணம் பொல்லாங்கென்று
மாமி மாமனார் மைத்துனர் மற்றோர்
தீமிகுங்குணத்தர் தினமுமிகழ்வார்
வெளியிற்கூலி வேலைசெய்யக்
குளிர் விட்டேகவுங் கூடாதென்பார்
அடிசிலறையி லருஞ்சிறை
விடியாதேங்க விதித்தனர் விதியே.

உ. அ. முத்துஸாமி கவி.

எந்த மதத்தினரேனும் ஸரி, எந்தக் கொள்கையரேனும் ஸரி; உண்மையான ஆத்மஞானத்தை பெற்றவரானால், அவர்களெல்லாரும் பேசுவது ஒரே பாஷை, பாடுவது ஒரே கானம், நிற்பது ஒரே நிலை.

* * * * *

நீ என்னவோ ஆயிரம் வருஷம் வாழ்ந்திருப்பவன்போல் காரியத்தைச் செய்யாதே. மரணம் எந்த க்ஷணமோ. ஆகையால், நீ சாகும்முன் உன் சக்திக்கியன்ற நன்மையைச் செய்.

மார்க்கஸ் அரீலியஸ்.

PROGRESS OF THE WORLD.

ப்ரபஞ்சப்போக்கு.

The 28th Indian National Congress.

28-வது இந்தியன் நாஷனல் காங்க்ரஸ்.—இந்தியாவின் திறவுகோலென்ற பெயர் பெற்றிருக்கும் காரச்சி நகரில் இந்த மாஸம் 26உ யன்று காங்கிரஸ் மஹாசபை வெகு சிறப்பாகக்கூடிற்று. நம்து ராஜதானியைச் சேர்ந்தவரும் வைச்ராய் கௌன்ஸிலில் மெம்பரும், மகம்மதிய ஜனத்திலிவருமான ஆனரபிள் நவாப் சைத் மஹமத் அக்ராசனத்துக்கு நியமிக்கப்பட்டது கால தேசவர்த்தமானங்களைப்பார்க்கையில் மிகவும் அனுசிதமான தென்று கருத வேண்டும். நவாப் பஹதூர், "நாமெல்லோரும் ஒரே தேசத்தில் ஒரே ஆட்சிக்குட்பட்டு சகல வழிகளிலும் மேன்மையை விரும்பு வதனாலே சில்லரை வித்யாஸங்கள் எவ்வளவு ஏற்பட்டாலும் அவைகளை ஒரு பொருட்டாய்ப்பாராட்டாமல் மனவொற்றுமை மிகுந்தவர்களாய் எல்லோருடனும் கலந்து தேசம் க்ஷேமமடையும் வகையாய் உழைப்பதே நல"மென்று சொன்னபின், தென்னப் பிரிக்கா இந்திய சகோதரர்களின் துயரங்களை துக்கத்தோடு சொன்னர். கடைசியாக, "பிரபுக்களே! நாம் பிரிட்டிஷ் பிரஜைகளா, அல்லவா என்று கேட்கும்படியான நிலைமைக்கு இந்த விஷயம் நம்மைக்கொண்டு வந்து விட்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியர்கள் கொடுமை செய்யப்படுகிறார்கள் என்ற காரணத்தாலேயே நிராண்ஸ்வால் யுத்தம் நடத்தப்பட்டது. தற்போது பிரிட்டிஷ் ராஜ்யத்தோடு தென்னப்பிரிக்கா சேர்க்கப்பட்டிருந்தும் கூட முன்னிலும் அதிகமாக கொடுமைகள் நடை பெறுவது கோரமான காட்சியாயிருக்கிறது." என்று குறிப்பிட்டுப் பரிதாப முண்டாகும்படி பேசினர்.

Bill for Protection of Minor Girls.

மைனர் பெண்களைப்பாதுகாக்க மசோதா.—16-வயதுக்குட்பட்ட பெண்களை விபசாரத்துக்குட் படுத்துவது குற்றமென்றும் அப்படி உட்படுத்துகிறவர்களுக்குத் தண்டனையுண்டென்றும்

சட்டப்ரமாணம் இருந்த போதிலும் அவ்வளவாக இது அமுலில்லை. 25-வருஷங்களுக்கு முன் கவர்ன்மெண்டாரோடு மன்றாடி 'ஏஜ் ஆப்கன் ஸென்ட்' 10-லிருந்து 12-வயதுக்கு உயர்த்தி சட்டமாக்குவது பகீரதப் பிரயத்தனமாயிற்று. ஆசார சீர்திருத்தக்காரர்கள், 12 வயதில் பெண்கள் பக்குவமடைவதில்லை யாதலால், அவர்களை உலகவிவகாரங்களுக்கு உட்படுத்துவது ஜனசமூகக்ஷய த்துக்கு காரணமாகு மென்று எங்கி இந்தத் தீர்மானத்தில் திருப்தியடையாமலிருந்தார்கள். அந்த சமயத்தில் ஏஜ் ஆப்கன் ஸென்ட் மறுபடியும் இன்னொரு சமயத்தில் உயர்த்தப்படுமென்று சொல்லப்பட்டது. வைச்ராய் சட்ட சபையில் இந்த விஷயமாக மசோதா இப்பொழுது வாதிக்கப்படுகிறது. இந்த மசோதா சார்ஜிலிருக்கும் மெம்பர் ஏஜ் ஆப் கன்ஸென்ட்டை உயர்த்துதல் அவச்யமில்லை யென்ற அபிப்பிராய முடையவராயிருக்கிறாரென்பது அவர் பேச்சால் புலப்படுகிறது. இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியில் பெண்கள் 12 வயதுக்குள் பக்குவ மடைந்து விடுகிறார்களாதலால் வயதை 12-க்கு மேலுயர்த்துவதால் சட்டத்தை மீறி நடக்கும் குற்றவாளிகள் அனேகராகும்படி முடியுமென்று அபிப்ராயப்படுகிறார். ஜனசமூக நன்மையும் கவனிக்கப்படவேண்டும். ஜனசமூக நன்மையும் கவனிக்கப்படவேண்டும். டாக்டர் ராஷ் விஹாரி கோஷ் முன்னொரு முறை இந்த பில்லைக்கொண்டு வந்தபொழுது இதற்குப்பலர் எதிர் கக்ஷி பேசினர்கள். அப்பொழுதும் ஆசார சீர்திருத்த ப்ரியர்களினிஷ்டம் சித்திபெறவில்லை. கூடாதென்கிற விஷயமாக காருண்ய கவர்ன்மெண்டார் ஜாதிமத சாரங்களில் அனுவச்யமாய்த் தலையிட்டு சட்டங்கள் செய்வதில் மிகவும் கவலையுள்ளவர்களாயும் ஜாக்ரதையாயு மிருக்கிறார்களென்று தெரிகிறது. இது அவச்யமே. பொறுப்புக்குத் தகுந்த கவலை வேண்டாமா?

Lady Doctors.

ஸ்த்ரீ டாக்டர்கள்.—ஸ்த்ரீகள் அவஸ்தைப்படும் வியாதிகளுக்கு சிகித்ஸை செய்யத் தேர்ந்த ஸ்த்ரீ டாக்டர்களில்லாமையானது பெருங்குறை. இதுவும் கோஷா முறை அனுஷ்டானத்திலிருக்கும் இந்தியாவில் பெருங்குறை. இதை நமது கவர்ன்மெண்டார் அறிந்து ஸ்த்ரீகள் எம். பி. ஸி. எம். போன்ற வைத்ய பரீக்ஷைகளுக்குப்படிக்க அதிகமாய் முன்வரும்படி, அதிக சாதகங்களை கருணைகூர்ந்து செய்திருக்கிறார்கள். இண்டர் மீடியெட் பரீக்ஷை

யில் வாசிக்கப் பிரியப்படும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ஸ்காலர் ஷிப் கொடுத்து வருதல். ஸ்காலர் ஷிப் பெற்ற ஐந்து வருஷங்களுக்குள் எம். பி. வி. எம். பரிக்ஷையில் தேறும் ஒவ்வொருவருக்கும் புஸ்தகமாகவோ கருவிகளாகவோ அல்லது ரொக்கமாகவோ ரூ. 100 கொடுத்தல். கரும்புதின்ன கைக்கூலியும் கொடுக்க மனமுவந்திருக்கிற கவர்ன்மெண்டுக்கு நன்றிசெலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சென்னை ராயபுரத்தில் வெஸ்லேயன் வைத்யமிஷன்போன்று இந்துமெடிகல் மிஷன் ஆஸ்பத்திரி ஸ்தாபித்து நாம் தர்மகைங்கர்யம்செய்யும் காலம் எக்காலமோ? காலப்போக்கைப் பார்க்கையில் தூரத்த காலத்திலாயினும் இது சாத்ய மென்பதற்கு உற்பதங்கள் போதுமானவரையில் இருக்கின்றன.

The Seva Sadan Society, Poona.

பூனு சேவசாதன சங்கம்—இந்த சங்கத்தார் வருதாப் பேச்சோடு நில்லாமல் காரியத்தில் கண்ணுயிருப்பது நாமெல்லோரும் சந்தோஷப் படத்தக்க விஷயம். நமதுபெண்கள் கல்யாண மானவுடன் பள்ளிக்கூடத்துக்குப்போவது கூடாதென்று பெற்றோர்களால் நிறுத்தப்படுகிறார்கள். இவர்கள் வீட்டிலேயே கற்றதை மறக்காமலும், மேலும் வருத்தி செய்துகொள்ளவும் இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாய்ச்சென்று படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். இதுமாதிரி கிறிஸ்தவமிஷன் ஏற்பாடிருக்கிறது. இந்த ஏற்பட்டால் வயதாயிருந்தாலும் படிக்கப் பிரியப்படுகிற ஸ்த்ரீகளுக்கு ஒருவழி ஏற்பட்டது. கிறிஸ்தவர்கள் வீட்டிற்குள் வந்து சொல்லிக்கொடுப்பது ஆக்ஷேபகரமென்றும் ஆசாரக்குறைவென்றும் சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் குட்டு வெளிப்படும் காலம் வந்துவிட்டது. இது போன்று தேசோபகாரமான கைங்கரியம் நமது ராஜதானியில் ஆரம்பமாவது எக்காலமோ?

பத்ராதிபர்.

எது சம்பவிக்கின்றதோ அது க்யாயமாகவே சம்பவிக்கிறதென்று கொள். நீ நுட்பமாய் கவனித்துப் பார்ப்பாயானால் இந்த உண்மை புலப்படும்.

மார்க்கஸ் அரீலியஸ்.

"அகர முத வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

என்று திருவள்ளுவர் கூறியவண்ணம் இவ்வுலகிற் கெல்லாம் தலைவரா யுள்ளார் கடவுளாவர். அங்ஙனம் ஒரு தலைவர் இல்லை யென்று சொல்லும் இறுமாப்புடையார் இப்பவும் சிலர் காணப்படுவாரே யாயினும் மனிதவர்க்கம் தோன்றிய காலமுதல் பல் வேறுவகையாக பல்வேறு இடங்களில் அவர் வணங்கப்பட்டே வந்திருக்கிறார் என்பது திண்ணம். முதல் முதல் கடவுள் என்னும் நினைப்பு மனிதனுக்கு எங்ஙனம் உண்டாயிருக்கக்கூடு மென்று விசாரிப்பாம். கண்ணிலும் வலியதிடமும் பயமும் பக்தியும் மனிதன் காண்பிப்பது சுபாவமே. ஆதலின் தண்ணீரும் வலியதை யெல்லாம் வணங்க ஆரம்பித் திருக்கவேண்டும். மனிதவர்க்காத்தினுள்ளேயே ஒருவனே யொருவன் முதல் வணங்க ஆரம்பித்திருக்கவேண்டும். மனிதனிலும் வலியதைக்காணும் வரை அங்ஙனம் செய்து வந்திருக்கவேண்டும். மனிதனைத்தவிரவும் எல்லா மனிதனிடவும் வலியுடையன பஞ்ச பூதங்களில் சில வென பின்னர் மனிதன் கண்டிருப்பான். அங்ஙனம் கண்டதற்குப் பின் பூதங்களை வணக்க ஆசப்பித்திருப்பான். அங்ஙனம் வணங்கி வந்தார்கள் என்பது நாம் இப்பொழுதும் வாய்வு, அக்கினி பகவான்கள் என்றும் கங்காதேவி என்றும் பலவாறாக பூதங்களை உருவகப்படுத்திப் பேசுவதினால் விளங்கும். இங்ஙனம் மனிதனுடைய புத்தியானது விரிய விரிய கடவுளைப்பற்றிய நிச்சயமும் அதாவது கடவுள் இப்பேர்ப்பட்டவர் என்பதும் அதிக அதிக சூட்சுமமாகி அவர் வழிபாடுகளும் உயர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன. பூதங்களை வணங்கு வதிலிருந்து ஆலயங்களில் விக்கிரகங்களை வணங்குதலாகப் பின்னர் தேகத்தினுள்ளேயே ஆதாரங்கள் என்று சொல்லப்படும் ஸ்தானங்களில் மனதினால் அவ்வப்போது அமைக்கப் பெற்ற விக்கிரகங்களை வணங்குதலாகி 'ஓரோவுயிர்க்கும் எதார்த்த நிலையான நிர்க்குணன் பொருள் சர்வவியாபகமுடையது;' 'அதுவே கடவுளின் எதார்த்த நிலை;' 'அதுவே வணக்கத்திற்குரியது;' என்று 'ஓவோகம்' 'அகம்பிரமமாஸ்மி' என்னும் வாக்குகளின் பொருளில் இலயித்து ரமிப்பட்டே பெரிய வழிபாடு என்பதாகிப் பலவாறாக பேதகதி யடைந்து வந்திருக்கின்

றது கடவுள் வழிபாடு. உலகம் தோன்றிய நாள் முதலாக எத்
தனை விதங்களாக வெல்லாம் கடவுளானவர் வழி படப்பட்டு வந்தி
ருக்கின்றாரோ அத்தனை விதங்களும் இப்போதும் இவ்வுலகின்
கண் பலவிடங்களில் காணப் பெறத்தக்கன வாகவே இருக்கும்.
இம்முறைகளில் ஒன்றும் தள்ளத் தக்க தல்ல. எல்லாம் சம்மதி
க்கத்தக்கவைகளே. எல்லா வற்றிலும் பிரயோஜன முண்டுதான்.
ஆயினும் என் புத்திக்கு ஒருவித வழி பாடு மிகவும் விசேஷமான
தென்று தோன்றுகிறது.

அதாவது பின் வருமாறு:—கடவுளானவர் சர்வ வியாபகர்.
ஆகையால் அவர் இல்லாத இடமில்லை. "நாம்" என்றவாக்குக்குப்
பொருளாக இருக்கும் எல்லாவற்றிலும் பூரணமாக நிறைந்திருக்கி
றார். அது போலவே நாம் காணும் அண்டபிண்ட சர்வ சரங்கள்
யாவிற்றிலும் நிறைந்திருக்கிறார். அவருடைய சர்வ வியாபகத்
துவம் இங்ஙனம் தான் என்பதில் யாதொரு சந்தேகமும் கிடை
யாது. எதனால் எனின் இங்ஙன மின்றேல் எங்ஙனம் சர்வவியாப
கத்வம் சித்திக்கும்? இவ்விதமாகக் கடவுளானவர் அணு முதல்
அண்டம் வரையும் சிறு புழுகாள் முதல் மனிதன் வரையும் சகல
தோற்றும் பொருள்களி லெல்லாம் நிறைந்திருக்கும் போது வண
க்கத்திற் குரியதல்லலாதது என்று சொல்லத்தக்க பொருள் ஏதா
வதுண்டா வென்பது என்பது கேள்வி. எல்லாம் கடவுளே
யன்றோ? அதனாலன்றோ விராட்ஸ்வரூபம் இவ்வண்டசராசரங்
கள் யாவுமோ யென உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. நாம்
எல்லாவற்றையும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் வணங்கு
தலினாலேயே கடவுளை வனங்கினவர்களா வோமே தவிர ஏதேனும்
ஒரு பொருளிடத்தில் மாத்திரம் வணக்கத்தை ஏற்றினால் அது
முழுவணக்கமாகுமா என்று சந்தேக்கிறேன். எல்லாவற்றையும்
வணங்குதலென்றால் எங்ஙனம் எனின் கூறுவாம். 'கடவுள் எல்
லாவற்றிலும் நிறைந்திருக்கிறார்' என்ற நிச்சயம் "நான் பெண்"
என்ற நிச்சயம் போல திடப்பட்டு விட்டாலே, வழிபாடு முற்றி
ற்று என்று கூறலாம். ஏன்? மனிதனின் செயல்கள் யாவற்றிற்கும்
மூடு நினைப்பாகும்; மனோ நிச்சயமாகும். எதிரில் தூரவருகிற
ஒரு சிவப்பு நிற முள்ள பசுவை காட்டில் கண்டு ஒருவள் அதை
புலி யென்று நிச்சயித்துவிடுவானாயின் அவன் செயல்களெல்லாம்
அதைப் பசு வென்று தீர்மானித்திருந்தால் என்னவாகுமோ

அவைகளாகுமா? ஆகாதன்றோ? புலி யென்று தீர்மானித்த மாத்
திரத்தில் பயகம்பினாதிகளும் அதில் தயிக்கொள்ளும் பொருட்டு
ஓட்டமும் உண்டாகின்றன. பசு வென்ன உள்ளபடி தீர்மானித்
திருந்தால் இவைகளெல்லாம் இல்லாமல் போவதோடு ஒருவேளை
சந்தோஷத்திற் கிடமாக இருந்தாலும் இருந்திருக்கலாம். அங்ங
னமே ஒன்றை விபரீதமாகக் கிரவியபதிலிருந்து உண்டாகும்.
அனர்த்தத்திற்கு அளவு சங்கை இல்லை. ஆகையால் கடவுளின்
சர்வவியாபகத்துவத்தை உண்மையாக நம்புதலே ஒரு பெரிய வழி
பாடாகும். அதனினும் பெரிது நான் பின்னால் சொல்லப்போ
வது. அதாவது மேலே கூறிய உண்மையை தினசரி வாழ்க்கை
யில் நாம் ஒவ்வொருவரும் காணுகையும் உபயோகப்படுத்து
கையும் ஆகும். எல்லாம் கடவுளா யிருப்பதினால் அதாவது கட
வுள் சமஷ்டியாதலினால் "எல்லா" வற்றிலும் அடங்கி யுள்ள ஒவ்
வொன்றும் அவரது அங்கங்களல்லாது வேறென்னாகும்? அதா
வது வியஷ்டியும் அவரேயாவர். இங்கு எல்லாம் ஒரே பொருள்,
அதாவது கடவுளாக இருத்தலின் பயம் மோகம், இராகம், முத
லான துர்க்குணங்களின் சேஷ்டைக்கிடமில்லை. ஆகையால் மனிதன்
ஆதியில் அதாவது பூர்வத்தில் அல்லது மிலேச்சனாயிருந்த கால
த்து கடவுளுக்கு பயப்பட ஆரம்பித்தான். அவனது அறிறவளர்
வளர் வியஷ்டிப் பொருள்களெல்லாம் கடவுளின் அங்கங்களென
க்கண்டு சமஷடியாகவும் வியஷடியாகவும் நேசிக்க ஆரம்பிக்கிறான்.
இப்பிரகாரமாக கடவுளை வழி படுதல் என்பது நேசத்திற்குப் பாத்
திரமாக இருக்கப்பட்ட யாவற்றையும் ஒன்றுபோல நேசித்தலே
என்று கூறுகிறேன். சகல ஜீவராசிகளையும் ஒன்று போல கருதி
அவற்றிற்கு வேண்டுவன புரிதலே சீரிய கடவுள் வழி பாடாகும்.
ஜீவராசிகளுள் தார தம்மியம் பாராமல் ஒன்றுபோல அவற்றினி
டம் அன்பைப் பெருக்கலே பெரிய வணக்கமாம் சகல ஜீவராசி
களிடத்துமே அன்பாயிருத்தலாவசியகம் கடவுள் வழி பாட்டி
ற்கு என்றால் நாம் ஒருவருக்கொருவர் ஒழுகவேண்டிய விதம்
வெளியடையன்றோ? ஆகையால் சகல ஜீவர்களுக்கும் ஹிதமசெய்
தலே கடவுளின் முக்கிய வழி பாடு என்று திரும்பவும் சொல்லி
நிறுத்துகின்றேன்.

"He prayeth last who loveth best
All things both great and small."

DUTY.

By

SUNDARAMMAL.

தர்மம்.

தர்மமாவது காலந்தப்பாது நித்யானுஷ்டானங்களைக் கருதி குருவையும் ஈசனையும் துதித்து பூஜாவிதியும் ஜபதப நமஸ்காரமும் ஆசாரநியமமும் புரிந்து தானென்றும் அகம்பாவத்தைத் தள்ளி அவனல்லது வேறில்லையென்று அறிந்து நடப்பதுவே இந்த தர்மத்தினால் இம்மைப்பயனும் மறுமைப்போகமும் மோக்ஷமும் கிடைக்கும். இம்மைப்பயனாவது பூமியிற்செல்வம். மறுமைப் போகமாவது சொர்க்காதிபோகம். உம்மைப்பயனாவது இனி மேல் கிடைக்கப்போகிற மோக்ஷம். இம்மூன்றும் தர்மமாகிற தவத்தினால் பெறலாகும். அவைகளில் சாரமான காரியங்களைப் பகுத்தறிந்து பிரபஞ்சத்தோடுகூடிய பெண்டு, பிள்ளை, பண்டு, பதார்த்தம், வீடு, வாசல், தோட்டம், துறவு, ஆபரணம், ஆடைகள் முதலியவையெல்லாம். மாயாபதார்த்தம் இந்த உடலைவிட்டு உயிர் நீங்கும்பொழுது மேற்கூறியபொருள் அனைத்தும் கூடவராது. முன்பின்னாகிய யாவருக்கும் இது பிரத்யக்ஷமே. ஆதலால் ஆசாபாசத்தில் அழுந்திக்கிடவாமல் இந்த குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு நீதிசாஸ்திரம் பாடுபட்டுப் பிரபலித்து மனம்நாட்டி தண்ணீர்ப் பானையை தலையில்கொண்டு போகிறவன் தன்னுடைய பார்வையை எதிரிலும் ஞாபகத்தைக் குடத்திலும் வைத்துப்போவதுபோல் பார்வையெல்லாம் சமுகவிசாரமாகிய சம்சாரத்திற்போக்கி தானெங்கே போனாலும் அங்கேயும் வழித்துணையாய் வருகின்ற தருமத்தில் நினைவை வைத்து சீக்கிரத்தில் தானே தாமஸமில்லாமல் தருமத்தைத் தேடவேண்டும். ஏனென்றால், சரீரமிருப்பதும் அச்சரீரத்தில் சஞ்சரிப்போன் ஒளிப்பதும் நமக்குத் தெரியாதபடியால் தாமதமில்லாமல் செய்யவேண்டும். அந்த தர்மமே ஜயமோக்ஷத்தின் கதவுதிறக்கும் முதற்சாவி அரை நிமிஷமும் சும்மா இராமல் எப்போ எப்போவென்று சமயத்தில் குவித்துக் கொள்ளவேண்டும். தருணம் தப்பினால் மரணம் நிச்சயம்.

ஐயோ! அனியாயமாய்ப்போய் விடாதீர்கள். அவசரத்திற் செய்யுங்களென்று சான்றோருரைக்கும் வாக்கியம். தர்மமென்பது பொதுப்பெயர். எதுவானாலும் சீக்கிரத்திற்செய்வது நல்லது. அன்னதானங்கள் சொர்க்காதி போகத்தைக் கொடுக்கத் தக்கன. ஆகையால் எந்தவிதத்திலாவது நிலையில்லாக்காயத்தை நம்பாமல் கெட்டுப்போம் செல்வத்தை இஷ்டமென்றெண்ணாமல் கஷ்டப்பட்டாவது தர்மங்களைச் செய்யவேண்டும். உடலுறுப்பாகிய இளமை, தேகம், செல்வம் நித்யமல்ல. அநித்யப்பொருளாதலால் சீக்கிரம் செய்யவேண்டுமென்பதாம்.

மாற்றுயர்ந்த தங்கம் வெள்ளி, ரத்னங்கள், வஸ்திரங்கள் இவைகளை தானம்செய்தால் என்னபலனோ. இதற்கெல்லாம் மேலான பலன் நல்லன்பர்களுக்கு அன்னதானம் செய்வது; வித்யாதானம் புரிவது நல்லது; சத்பாத்திரங்களுக்கு தடையறக் கொடுப்பது; அதிதி பூஜைசெய்வது அவர்கள் விரும்பியதைக் கொடுப்பது; ஏழைகள் கேட்பதை ஒளியாமல் ஈவது; கூலி குறையாமற் கொடுப்பது; சத்யம் தப்பாமலிருப்பது; யாரோடும் இறுமாந்து பேசாமல் வினயமாய் விடையளிப்பது. இதற்கும் மேலான தர்மம் அன்னை தந்தை சொற்கடவாமல், கொலை, களவுகள், காமத்தினாலழியாமல் பிறருக்குக்கேடு நினையாமல் நம்பினவர்களைக் கைவிடாமல் அடைக்கலம் வந்தவர்களை அழவிடாமல் ஒருவர் மனம் நோவப்பேசாமல் நம்பிக்கைத்துரோகம் செய்யாமல் ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்காமல் கோபம், லோபம், மோகம், மதமாச்சல்யம், பகை, அகங்காரம் இவைகளையெல்லாம்விட்டு நடப்பதுவே எல்லாவற்றிற்கும் மேலான தர்மம்.

சுந்தரம்மாள்.

விதவாச்ரமம்.
54 ஹைரோட், எழுமூர்,

நீ மனம் பதை பதைக்காதே. நீ எப்பொழுதும்போல் கள்ளங் கபடும் சூது வாதுமின்றியுமிரு. உனக்கு யாராவது தீங்கு செய்கிறானோ? செய்யட்டும். அவன் உனக்கு தீங்கு செய்கிறதில்லை. தனக்குத் தானே தீங்கு செய்துகொள்கிறான்.

மார்க்கஸ் அரீலியஸ்.

THE INNATE FEAR IN INDIAN WOMEN.

இந்து ஸ்த்ரீகளுக்கியற்கையா யுள்ள பயம்.

இந்து மாதர்களுக்குக் கல்வி கற்பிப்பதால் அவர்களுக்கும், அவர்களுடன் பழகும் புருஷர்களுக்கும், நாட்டிற்கும் கேஷமமுண்டென்று அனேகரால் கருதப்பட்டு அவர்களுக்குக் கெவ்வித கல்வி கற்பித்தல் உபயோக முள்ளதாயிருக்குமென்று யோசிக்கப்பட்டும், சிற்சில விடங்களில் தெரிந்தவரையில் அப்யசிக்கப்பட்டும் வருகிறது. புருஷர்களைப்போல வலிமையும் தைர்யமுமற்றிருப்பதால் அவர்களை அபலைகளென்கிறார்கள். ஆபத்துக் காலங்களில் மனைதைர்யமிழந்து கண்ணீர் பிசிவதும் கூக்குரலிட்டழுவதும் பெண்டிர்களுள் பெரும்பாலார்க்கு சகஜமாயிருக்கிறது. கல்லதும் கெடுதலும் புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு வெகு சுலுவாய்ப் பழகிவிடும் ஆகையால் அதேவிதம் பயம் தைர்யமிவைகளைப் புகட்டுவதும் எளிது.

இந்து மாதர்கள் தம்மக்களைக் கோயில்களுக்கு கெடுத்துப் போய் அங்கிருக்கும் விக்ரகங்களின் சமீபம் மக்கள் போகும்போது "ஸாமி கண்ணைக்குத்தும், தேள் கொட்டும், பூச்சி யிருக்கிற" தென்றும், அவர்கள் சாப்பிடும்போது "தலையோடி பிறந்தவன் தெருவோடி வருகிறான்" னென்றும் சொல்லி, மற்று மநேக விதத்தில் அவர்களுக்குப் பயத்தையே யுண்டுபண்ணுகிறார்கள். பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளைப்போல மற்ற தெருப்பிள்ளைகளோடு ஓடியாடிப்பழகி விளையாட விடுவதில்லை. மேலும் பத்துவயதிற்குள் கல்யாணம் நடைபெறவே, மாமி, மாமன், கணவன், மைத்துனன் என்கிற காணங்கொண்டு, தைர்யத்துக்கு இடமில்லாமல், மேன்மேலும் மச்சமே அதிகரித்து வந்து, வயது முதிர்ந்தும் எதைத்தொட்டாலும் நடுக்கமும் அழுகையும் பொறுமையில்லாத் தனமுந்தான் எஞ்சி மிஞ்சுகிறது.

மேற் கூறிய காரணங்களாலேயே பெண்களுக்கு ராக்காலங்களில் ஏழு மணிக்குப் பிறகு வீட்டை விட்டசையத்துணிவு வராமலும், விகாதர்களைக்கண்டால் அலறுவதும், புருஷர்கள் அலுவலாக வெளியே போயிருந்தால், வீட்டில் தனியேயிருக்கத்தைர்யமில்லாமல் ரமனிக் கொண்டிருக்கிறார்கள். புருஷர்க

ளுடன் செய்யும் வாக்கு வாதங்களிலும் தான் பேசுகட்சி மனதாணாமாய் ந்யாயமெனப் புலப்பட்டும், அதை யெடுத்துரைத்து வ்யவகாரமாட வகையறியாமல் கண் ஜலம் பெருக விட்டு 'நீலி' னப் பேர் பெறுகிறார்கள். அதனால் அவர்கள் சொல்வது அசத்யமாய்த் தோன்றவும் கூடும். உள்ளதை உள்ளது போல் பேசுவன் மனைதைர்யம் நம்மாதர்களடையக் கூடாது? அம்மனைதைர்யத்தைப்பார்த்துப் புருஷர்களின்பு கூடுமேயல்லாது குன்றுது.

சுவீர, பேய் பிசாசெனச்சொல்லி இவைகளினால் பயமவஸ்தைகள் கணக்கு வழக்கில்லாமலிருக்கின்றன. இத்த நம்பிக்கையைப் பற்றியும் இதிலிருக்கும் மூடபக்தியைப்பற்றியும் நான் என்னென்று சொல்வேன்? அதன் அஞ்ஞானத்தை யுணர்ந்து என் சகோதரிமார்கள் தங்களாலியன்ற மட்டு மிக்கெட்ட வழக்கத்திற் கிரையாயுள்ள ஜனங்களைக்கண்டித்து அதை நிறுத்தச் செய்ய முயற்சி யெடுப்பார்களென்று நம்புகிறேன். சுமார் ஒரு மாதத்திற்கு முன் தஞ்சையில் தற்செயலாய் என்னகத்திற் கெதிரே யுள்ள வீட்டினுள் சென்றேன். அங்கே ஒரு அறையில் ஜன்னல்களெல்லாவற்றையும் மூடி விட்டு சில ஸ்திரீகள் குவிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில் பித்துக்கொண்டவள்போல திகைத்த கண்களோடு தலையை விரித்துப்போட்டு ஆடிக்கொண்டு பதினான்கு வயதுள்ள ஒரு இளம் பெண்ணும், எதிரில் கையில் கோல் வைத்துக்கொண்டு, நெற்றியில் திருநீறு இட்டுக்கண்களை மூடிக் கொண்டு ஒரு மாந்திரீகனும் உட்கார்ந்திருந்தார்கள். பாவம்! பிசாசு பிடித்த பெண் ஆருவது வகுப்புவரைபடித்தவளென்றும், உயர் குலத்திலுதித்தவளென்றும் கேள்வியுற்று தூரத்தையர மடைந்தேன். பதினைந்து ரூபாய் வரையில் கொடுப்பதாய்ப்பேசி மந்திரம் நடைபெற்று வந்தது. நாணப்பெண்ணின் தாய்க்கெவ்வளவு சொல்லியும் ஏழையுடைய பேச்சு அம்பலத்தில் ஏறவில்லை. அங்கு நடந்த விஷயம் முழுவதையும், விபரீதமாய் எனக்கு மவர்களுக்கு முண்டான பலமான தர்க்கத்தையும் எழுத எனக்குக் கொஞ்சமேனும் மனமில்லை.

ஆகையால் பெண்களுக்குக் கற்பிப்போர்கள் இதையறிந்து, அவர்களை மனதிற்பட்டதை பயமின்றிப் பேசுவதற்கும், ஒருவரோடொருவர் குதூகலமாய் விளையாடுவதற்கும் விட்டு, சரீரம்

ஊசிப்போய் விடுமென் றெண்ணிக் தேகாபிமானம் பாராட்டு வதைத் தவிர்த்து, சரித்திரங்களிலிருந்து புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் (Florence Nightingale, for example) வீரச் செயல்களை யடிக்கடி யெடுத்துரைத்துப் போதித்தால் இப்பொழுதிருக்கும் ஸ்திரீகளுக்குள்ள அச்சமும் மூடபக்தியும் குறைந்து விடுமென்று நம்புகிறேன்.

சீர்காழி.

T. S. ராஜ்.

MENTAL POWER.

மனோசக்தி.

நமக்கு சரீரம் மூன்றுகும். அவையாவன :—ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்று சொல்லப்படுவனவே யாம். இவற்றுள் ஸ்தூல சரீரமாவது ஒருவர் தேகத்தினின்றும் மற்றொருவருடைய தேகமாகும். இது சாதாரணமாக எல்லாரும் அறிந்ததே. சூக்ஷ்மசரீரம் என்பது கருங்கடலின் மனமும் இந்திரியங்களும் ஆம். காரணசரீரம் என்பது ஜன்மத்திற்கு ஏதுவாயுள்ள அவித்தை அஞ்ஞானம் என்று சொல்லப்படும். இவற்றுள் ஸ்தூல சரீரமானது கட்டைக்குச் சமானமானது. தனக்கென ஒரு செயலற்றது. காரண தேகமோவித்து நிலையிலிருப்பது. அதன் தோற்றங்களே மற்றிரண்டு தேகங்களுமாதலின் அதனைப்பற்றி விசேஷித்துப் பேசுவதற்கவசியமும் அதனோடு நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு விசேஷ சம்பந்தமும் இல்லை. ஆகையால் நாம் சூக்ஷ்ம சரீரத்தை எடுத்துக் கொள்வோம். சூக்ஷ்மசரீரம் என்பது மனமும் இந்திரியமும் சேர்ந்தது என்று சொன்னேன்.

இந்திரியங்களாவன பின்வருவன :—மெய், வாய், கண், மூக்கு செவி என்று சொல்லிப்படுகிற ஞானேந்திரியங்கள் ஐந்தும் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்று சொல்லப்படுகிற கர்மேந்திரியங்கள் ஐந்துமாம். வெவ்வேறு தொழில்களைப்பற்றி இங்ஙனம் இந்திரியங்கள் பத்தெனப்பகுக்கப்படினும், எதார்த்தத்தில் இவையெல்லாம் மனமேயாம். எங்ஙனமெனின், மனமின்றி இவையொன்றும் தொழிற்படுவனவல்ல. மனம் சோர்விட்டால் செவி திறந்திருந்தாலும் கேளாது, நேத்திரம் விழித்திருந்தாலும் பாராது. இங்ஙனமே மற்ற இந்திரியங்களுமாம். ஆகையால் மனமே இந்திரியங்களாம். இங்ஙனம் மனமானது ஸ்தூலசரீரத்தை ஆட்டிவைக்கும் சூத்திரக்கயிறாக இருக்கின்றது. நம்முடைய சகல செய்கைகளுக்கும் மனமே காரணமாகும். மனத்தின் சொரூபம் நினைப்பு அல்லது சங்கற்பம் எள்ளலாம். நினைப்பே நமது குணங்களுக்கும், செய்கைகளுக்கும், மேற்போக்குகளுக்கும் காரணமாகும்.

"As a man thinketh in his heart
So is he"—Jesus.

மனிதன் தன்னிருதயத்தில் எவ்விதமாக நினைக்கிறானோ அவ்விதமாக இருக்கிறான் என்றார் இயேசுகிறிஸ்து. இம்மனத்தின் வலி அளவிறந்தது.

"மனத்தின் செயலே செயலாம்"—வாசிஷ்டம்.

Dr. Bouse Doees என்ற பண்டிதர் எப்பொருள் எங்கு அசையக்கண்டாலும் அதுமனத்தினுடையதே என்கிறார். நமது ஸ்தூல சரீரத்தினுடையவோ அதிலுள்ள ஏதேனும் அங்கத்தினுடையவோ சலனம் எங்ஙனம் மனம் காரணமாகவே உண்டாகின்றதோ அதுபோலவே இப்பிரபஞ்சத்தினுடையவும் அதன் அங்கங்களுடையவும் அசைவு விராடபுருஷன் அல்லது கடவுளுடையமனம் காரணமாக உண்டாகின்றது என்று கூறுகின்றார் மேற்கூறிய மேலைத் தேசத்திய பண்டிதர்.

இத்தகைய மனதின் தத்துவத்தைப்பற்றியும் சக்திகளைப் பற்றியும் தற்பொழுது அமெரிக்கா முதலான இடங்களில் விரிவாகக் கற்பித்து வருகிறார்கள். மனோதத்துவத்தைப்பற்றிப் பேசும் சாஸ்திரங்கள் (Mental Sience) பலவான பண்டிதர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மிகவும் விரும்பிப் படிக்கத்தக்கன.

'நாம் எவ்விதமாகப் பாவிக்கிறோமோ அவ்விதமாக ஆகிறோம்' என்றால் பின் மனத்தின்வலியால் ஆகாதென்ன இருக்கிறது. நமது வழக்கங்களை மாற்றவேண்டுமானாலும், குணங்களை மாற்றவேண்டுமானாலும், தரித்திரத்தை மாற்றவேண்டுமானாலும்,

பலஹீனத்தை மாற்றவேண்டுமானலும் இன்னும் எவ்விதமாறுதல்களையெல்லாம் நம்மிடத்தோ பிறரிடத்தோ உண்டாக்கவேண்டுமோ அவ்விதமாறுதல்களையெல்லாம் மனோசக்தியினால் எளிதில் உண்டாக்கலாம். ரோக நிவாரணங்களில் மனோசக்தியின் பிரயோஜனம் அளவிறந்தது. இங்ஙனம் மனோசக்தியானது எல்லாம் வல்லதாக இருக்கின்றது. ஆயினும் எல்லாரிடமும் மனமிருந்தும் இச்சக்தி காணப்படவில்லையே எனின் அச்சக்திக்குப்பல பிரதிபந்தங்கள் ஏற்பட்டிருப்பதினாலும் அதன்வலி அறியாததினாலும் அதற்கு அநுகூலமான சந்தர்ப்பங்கள் இல்லாததினாலும் அதன்மர்மம் அறிந்து அதனை உபயோகிக்கவேண்டிய மாதிரி உபயோகிக்காததினாலுமே அதன் சக்தி காணப்படாதிருக்கின்றதென்க.

மனத்தை சம்பந்தித்த விஷயங்களெல்லாம் எடுத்துப் பேசுவதானால் விஷயமும் எளிதல்ல, அதற்குவேண்டிய காலமும் நமதனுமும் போதாது. ஆகையால் இந்த சந்தர்ப்பத்தில் மனத்தின் ஒரு இரகசியத்தைப்பற்றி மாத்திரம் பேசுகிறேன். அதாவது 'எவ்விதமாக நாம் தப்பான ஒரு நினைப்புசரியான மற்றொரு நினைப்பால் மாற்றுகிறது?' என்பதுபோன்ற மனத்தின் சக்தி விளங்கத்தக்க விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன். ஆனால் எல்லாவற்றிற்கும் முன்னதாக மனோசக்திக்கு விபரீதிகளென்று கூறினாலும் சரி அல்லது வைரிகளென்று கூறினாலும் சரி, அவைகளைத் தெரிவிக்கிறேன்.

(இன்னும் வரும்.)

Miss TARA BAI.

By

Historicus.

இந்தியன்லேடி சாண்டோ

எனவழைக்கும்.

மிஸ் தாராபாய்.

ஸ்த்ரீகள் புருஷர்களுக்கு எந்தவிதத்திலும் சமானமானவர்களே யல்லாமல் ஒரு விதத்திலும் தாழ்மைப் பட்டவர்களல்ல வென்ற விஷயம் உறுதிப்பட ஸ்த்ரீகள் அபாரமானகாரிய சித்தி பெற்றவர்களாய்த்தோன்றி வருகிறார்கள். ஸ்த்ரீகள் அபலைகள்

என்ற பழமொழி பழிமொழியேயென்று ருஜுப்படுத்த தேகாப்பியாசப் பயிற்சிகளில் மிக்கத் திறமைகாட்டி இந்துஸ்தானத்தைச்சேர்ந்த ஒருமாதரஸ்ரீ திக்குவிஜயம் செய்துவருகிறார். இவள்செய்யும் சாஹசமான அப்பியாசங்களைப்பார்த்து ஆச்சரியப்பட்டு மனதாரப் புகழாதவர்களில்லை. பெரிய சமஸ்தானங்களுக்கெல்லாம் சென்று சன்மானம் பெற்றுவருகிறார். இந்த ஸகோதரியைப்பற்றி நாம்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஸகோதரிகள் காதாரக்கேட்டு மகிழவேண்டும். இவர் இந்த மாசத்தில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் சில அபூர்வமான சாஹஸ சித்திகளைச் செய்தார். எங்கே பார்த்தாலும் "மிஸ்தாரா சாமர்த்யமே சாமர்த்யம். ஒவ்வொருவரும் சென்று கண்டே திருப்தியடையவேண்டு" மென்று சொல்லிக்கொள்வது பெரிய முழக்கமாயிருக்கிறது.

மிஸ் தாரா ஒருஸ்காத்திரிய ஸ்திரீ. ராஜபுதனா காட்டிலே பாண்டிக் என்ற ஊரில் ஜோஹர்சிங் என்பவருக்கு இரண்டாவது புத்திரியாக தாரா 1890-ஆம் வருஷத்தில் பிறந்தாள். இவளைப் பெற்றெடுத்த 5 வருஷங்களுக்கெல்லாம் தாய் இறந்துபோக தாராவை அவள்மூத்த ஸகோதரி பரோடாவுக்குக் கூட்டிச்சென்று வளர்த்துவந்தாள். அந்த பால்யத்திலேயே தாராகளைத்து செய்வதில் பிரியமுடைய வளாயிருந்தாள். அனேகர் இதுவிஷயமாக பிரியமில்லாமல் 'பெண்பிள்ளையாவது கசரத்செய்வதாவது' என்று ஏளனம்பேசினார்கள். அவள் உபாத்யாயர் தாராவிடம் ப்ரக்யாதி பெற சக்தியிருக்கிற தென்பதையறிந்து, அவள் மனமிழந்து போகாமல் தைரிய மூட்டிவந்தார். இவர் ஆகாயில் உறுதியும் நம்பிக்கையும் தாராவுக்கு உண்டாகவும் யார் என்ன சொன்னலும் அதை அவள் லக்ஷியம் செய்யாமலிருந்தாள். தவிரவும், உபாத்யாயர் தாராவின் மீதுள்ள ஷோவாஞ்சையால் தமக்குத்தெரிந்த சில அபூர்வமான அப்யாசங்களை பழக்கிவைத்தார்.

மேலும் மேலும் அதிலேயே காட்டமுடையவளாய் பயிற்சி செய்துகொண்டு வந்தாள். தாராவுக்கு இப்படி 15 வருஷமாக அவள் ஸகோதரி இவளுக்குக் கல்யாணம் முடித்திவைக்க ஏற்பாடு செய்தாள். இதற்கு தாரா சம்மதிக்கவில்லை. ஸகோதரியின் விருப்பத்துக்கு மாறாய் நடந்துகொண்டு அவளின் ஆதரவிலிருப்பது

ஸரியில்லையென்று நினைத்து தாரா கௌரவமாய் ஜீவனோபா
செய்ய தன் புஜபலபராக்கிரமங்களை ஜனங்களுக்குச் செய்து
காட்டி சம்பாதிப்பதென்று உறுதி கொண்டவளாய் பரோடாவை
விட்டு ஆஜ்மீர்சென்று அங்கே தேகப்பயிற்சிகளை பகிரங்கமாய்ச்
செய்துகாட்ட ஆரம்பித்தாள். இந்தக்காலத்தில் அவள் உபாத்
யாயர் கூடச்சென்று ஏராளமாய் பொருள் சம்பாதித்தார். ஜனங்க
ளுடைய ஆதரவு போதுமான அளவு கிடைத்தது. இதனால்
உற்சாகமும் ஊக்கமும் தாராவுக்கு உண்டாயிற்று. இப்படி பிரு
க்கையில் தாராவைப்பற்றிக் கேள்விப்பட்டு அவளின் தேகாப்பியா
ஸங்களைப் பார்த்துக்களித்து பரோடாரா ராஜவம்சத்தைச்சேர்ந்த
சம்பத்ராவும் இன்னும் சிலரும் ஊர் ஊராய்ச்செல்லும்படி அவளை
தூண்டி உற்சாகப் படுத்தினார்கள்.

தாரா தன் சாமர்த்யங்களை ஹைதராபாத் நவாபிடம் செய்து
காட்டி நன்கு மதிப்பைப்பெற அபேக்ஷித்து ஹைதராபாத் வந்து
சேர்ந்தாள். ஆனால் அவைகளை ஜனங்கள் நன்கு பாராட்டவில்லை.
இவளப்பியாஸங்களை ஜாலவித்தைகள் கண்கட்டி வித்தையென்று
சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் தாரா மனமொடிந்தாமல்
உலகத்தில் அபவாதங்கள் ஆரம்பத்தில் கிளம்புவது சகஜமென்று
நல்ல காலத்தை எதிர் பார்த்திருந்தாள். இந்த சமயத்தில் அங்கே
யிருக்கும் போலீஸ் கமிஷனர் மிஸ்தாராவின் அப்பியாலங்களில்
யாதொரு சூது மில்லையென்று கண்டறிந்து சொன்னபின், நிஜாம்
மந்திரி மற்றுமுள்ள உத்யோகஸ்தர்கள் ஆட்டத்தைக் காணவரத்
தலைப்பட்டார்கள். நைஜாம் ஹைகோர்ட் சீப்ஜஸ்டிஸ் ஆனரபிள்
ஹமீம் உட்டௌலா "பொதுஜனங்கள் மிஸ்தாரா நமது தேசத்
திற்குச்செய்யும் அபாரமான தேசசேவையை மதிப்பார்கள். மிஸ்
தாரா வித்யா இலாகா தார்களுடையவும் பெற்றோர்களுடையும்
கவனத்தை, குழந்தைகள் இருபாலரும் தேகாப்யாசம் செய்ய
வேண்டுவதின் அவச்யமென்று வற்புறுத்திக்காட்டும் விஷயத்தில்
இழுக்கும் முயற்சி பாராட்டத்தக்கது. இப்படி தேகாப்யசப்பயி
ற்சி ஆண்பெண் குழந்தைகளிருவரும் பெறுவதால் நாட்டில் இனி
சுகதிட சரீரமுள்ள புருஷர்களும் ஸ்த்ரீகளும் உண்டாகி நாடு
சிறப்புற மார்க்கம் உண்டாகும்" என்றும், கல்வி இலாகா டைரக்
டர் "தாராவின் அபூர்வமான தேகாப்யாசங்களைப்பார்த்து உபாத்
யாயர்களும் ஸ்கூல் பிள்ளைகளும் மிகவும் மெச்சினார்கள். கல்வி

இலாகாதார்கள் மிஸ்தாராவுக்கு இந்த விஷயத்தில் ஊக்கமுண்டா
கும்படிசெய்வார்கள். என்று நம்புகிறேன்." என்றும் தங்கள்
அபிப்ராயங்களை வெளியிட்டார்கள்.

பிறகு பொதுஜனங்களபிமானம் தானாகவே உண்டா
யிற்று. புஜவலியை ஸரியானபடி அபிவ்ருத்தி செய்வதால்
ஸ்த்ரீயாகட்டும் புருஷராகட்டும் சாஹசமான எதையும் செ
ய்யலாமென்ற விஷயத்தை தாராவின் சாமர்த்யங்களைக் கண்
கூடக் கண்டபின் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். ஜனங்களு
டையு அபிமானமானது தாராவுக்கு ஸரியான சமயத்தில் கிடைத்
தது. பிறகு தாரா பல்லாரி, பெனுகுண்டா, பம்பாய், மைசூர் முத
லாகிய இடங்களுக்குப்போனாள். ஒவ்வொரு இடத்திலும் தக்க
படி மரியாதைகள் செய்யப்பட்டன. 2 மாதகாலம் மைசூரில் தாம
திக்த, சமஸ்தானத்தின் ஆதரவையும் கனவான்களின் சன்மா
னிப்பையும் பெற்று சென்னைக்கு வந்திருக்கிறாள். யாத்திரை
செய்ய ஆரம்பித்து ஒரு வருஷம்கூடப் பூராவாக வில்லையானாலும்
ஸ்த்ரீயாயிருப்பதுபற்றி இவரைப்பற்றிய புகழானது வெகுவாய்
சொம்பதூரம் பரவியிருக்கிறது. இவருக்குவயது 25-க்கு மேலாக
வில்லை யாதலால் இன்னும் தேகாப்யாஸங்களில் விசேஷமான
தேர்ச்சி பெறுவாளென்று நம்ப இடமிருக்கிறது. ஸ்வல்ப காலத்
திக்குள் இவ்வளவு ப்ரக்யாதி கிடைக்கும் பாக்யம் எல்லாருக்கும்
வாய்க்குமா? இருந்தாலும் ஒருவிஷயம் நம்மனதுக்குத் தோற்று
கிறது. இந்தியாவில் தாராவை நிகர்க்கவும் சமானமானவும் பரா
க்ரமங்களும் சாமர்த்யங்களுமுள்ள ஸ்த்ரீமணிகள் எத்தனைபேர்
ஊர்பேர் தெரியாமல் குடத்தில்வைத்த விளக்குப் போலிருக்கி
றார்களோ? மஹா பலசாலியென்றஜகத்பிரசித்திபெற்ற சாண்டோ
என்பவர் இந்தியாவுக்குவிஜயம் செய்தபின், அவர் தேகாப்யாசங்
களைப்பார்த்து, அவருக்கிருக்கும் மதிப்பைத் தெரிந்துகொண்டு,
வழிதெரியாது நிகைக்கும் மானுமிக்குவழி தோற்றினதுபோல்,
அவரைப் பின்பற்றி அதுகால பரியந்தம் நிகிவானமில்லாமல்
மறைந்துகிடந்த மாணிக்கங்களான ப்ரொபசர் ராமமூர்த்தி, இந்
தியன் சாண்டோவென்றும், துரைசாமி ஐயங்கார் பராமண
சாண்டோவெனவும், வைச்ய சாண்டோவெனவும் கிளம்பிப் புகழ
பெற்று வருகிறார்கள். சாண்டோவின் இந்தியவிஜயம் தேகாப்
யாச விஷயமாக உண்டாக்கிய ஒரு கிளர்ச்சியையும், தூங்கிக்

கொண்டிருந்தவர்களைத் தட்டியெழுப்பிய விஷயத்தையும் கவனிக்கும்பொழுது நமது தேசசரித்திரத்தில் ஒருநூதன சகாப்தமென்றே நாம் எல்லாரும் அங்கீகரிக்கவேண்டும். சாண்டோ விஜயமே மிஸ்தாரா வெளிப்புகுவதற்கும் தூண்டுகோலென்றி நம்புவது பிசகாகாது. மிஸ்காராவுக்கு இந்திய ஜனசமூகம் செலுத்தும் மரியாதையாகிய காணிக்கைகள் இன்னும் அனேக ஸ்த்ரீகள் வெளிப்படத்தூண்டுதலாயிருக்குமென்று நினைக்கிறோம்.

மிஸ்தாரா கூடியசீக்ரம் இங்கிலண்டுக்குசென்று, பிறகு ஐரோப்பா வெல்லாம்பாய் வருவார். நமக்குத் தெரிந்தவரையில் ஸ்த்ரீகளில் தாராவே புஜபல பராக்ரமத்தில் முதன்மையானவராயிருப்பதால் உலகமெல்லாம் திக்விஜயம்பெற்று பேர் பெறுவாரென்று நம்புகிறோம். இதுநோக்கம் சம்பூர்ணமாக சர்வேசன் க்ருபாகடாக்ஷம் அவருக்குண்டாக நாமெல்லோரும் கடவுளை ப்ரார்த்திப்போமாக.

மிஸ்தாரா மேனாட்டுக்குப் பிரயாணமாகும்பொழுது தம்கூட சில ஸகோதரி சிஷ்யைகளை உடன் கூட்டிச்செல்வது யுக்தமென்றபிப்ராய முடையவராயிருக்கிறார். யாராவது சிஷ்யைகள் கிடைத்தால் அவர்களுக்குத் தாம் தம் அய்யாசங்களைக்கற்றுக் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார். இது நிச்யமான சமயம்.

மிஸ்தாரா ஸகோதரிகளிடம் மிக்க அன்புடையவள். யாரைக் கண்டபோதிலும் சேஷமலாமங்களை விசாரிப்பாள். மிக்க சாந்தமும் அடக்கமுடையவள். தற்பெருமை யென்பது சற்று மில்லாமல் எல்லா சர்வேசன் கடாக்ஷம் என்று சொல்வாள். சிறந்த பக்தியுடையவள்.

இவ்வளவு பலசாலியாயிருப்பவள் கோதுமை, பாதாமை, பால், ஜலம் மாத்ரம் சாப்பிடுகிறாள். காப்பிமேல் அவ்வளவு ப்ரியமுள்ளவலல்ல. குஜராத்தி பாஷை எழுதவும் படிக்கவும் தெரியும். இந்துஸ்தானி பாஷையில் ப்ரசங்கம் செய்யும் சக்தியும் விசேஷமாயிருக்கிறது. தொழில் அவச்யத்துக்காக இங்கிலீஷ் கற்றுக்கொண்டு வருகிறாள்.

இவள் சாதுசச் செயல்களில் சிலவற்றை மட்டும் குறிக்கிறோம். (1) 250-பவுன் பாராங்கல்லை கையில் கட்டித் தூக்குதல்; (2) பாரமேற்றின வண்டியையும் தலை மயிருக்குக்கட்டி இழுத்தல்; (3) இரண்டு நாற்காலிகளைவைத்து, ஓர் நாற்காலி ஓரத்தில் தலையையும் மற்றோர் நாற்காலி ஓரத்தில் காலையும்வைத்து படுத்துக்கொண்டு ஆதாரமற்ற முதுகு கூர்மையான வேலாயுதத்தால் தாங்கப்பட, பலபேர்பெரிய பாராங்கல்லைத் தூக்கிவந்து மார்பு மீதுவைத்து சுத்தியாலடித்து உடைத்தல்; (4) வில்லைப்போல் வளைந்துகொண்டு முழங்காலில் ஒருபெரிய கட்டையையும் தோளின்மேல் ஒரு ஆளையும் தாங்குதல்; (5) தாராவின் காதை இருடலசாலிகள் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள அவர்களை ஓரே உதரில் உதரிவிடுதல்.

WHAT CREATURE YOU WOULD LIKE TO BE?

By

T. Rajagopalachari.

நீ என்ன ஜெந்துவாய்ப் பிறந்திருக்க இஷ்டப்படுகிறாய்?

இங்கிலீஷ் மாதாந்தப் பத்ராதிபரியொருவர் மேற்குறித்த ப்ரச்னையை தம்பத்ரிகை வாசிப்பவர்களில் பலஸ்த்ரீகளுக்கு அனுப்ப அவர்களில் சிலர் எழுதியனுப்பியவிஷயம் சங்க்ரகமாக அந்தப் பத்ரிகையில் ப்ரசுரமாகியிருந்தது. அதைத்தழுவி இந்த விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகையப்ரச்னை ஜீவராசிகளை நிட்பமாய் கவனித்துப்பார்த்து அறியும் சக்தியை அபிவ்ருத்தி செய்யுமாதலாலும், கற்பனை சக்தியைத்தூண்டி விடுமாதலாலும், நம்ஸகோதரிகள் மாறுன அபிப்ராயங்களுடையவர்களானால் காரணம் காட்டி எழுதி நமக்கு அனுப்பினால் ப்ரசுரிக்கத் தயாராயிருக்கிறோம்.—ப. ர்.

எருமை.

ஆஹா, உலகத்தில் அதிருப்தி என்பது சகல ஜெந்துக்களுக்கு மிருக்கிறதே! எருமைக்கடாவுக்கோ கொஞ்சமேனும் இடையாது. அவைகள் வெய்யில் காலத்தில் குளங்குட்டைகளில் என்ன சுகமாகப் படுத்துக்கொண்டிருக்கின்றன. இரண்டு மூக்கு

களுக்கதிர வேறேதாவது வெளியில் தெரிகிறதா? ஆஹா! எருமையாய் நான் பிறந்திருக்கப்படாதா?

நாய்.

நாயாய்ப்பிறந்தால் கல்ல வேட்டை யாடுவேன். மனிதருக்கு வேண்டிய நன்மைகளைப்புரிவேன். திருட்டு கண்டுபிடிப்பேன். அப்பொழுது என்னை மெச்சாதவரும் உளரோ? என்னை எல்லாவோ அன்போடு காப்பாற்றுவார்கள். தினந்தோறு மென்னைக் குளிப்பாட்டி என் மயிரைக்கத்தரித்து பார்வைக்கு எவ்வளவு அழகாக வைப்பார்கள். என் எஜமானைக்கண்டால் நானவன் மடியின் மீதல்லவோ ஏறி உட்காருவேன். எனக்கு நல்லுணவு ஊட்டுவார்கள். பகல் காலமெல்லாம் வேடிக்கையாக ஓடிக்கொண்டும், ஆடிக்கொண்டு மிருப்பேன். கோழியைப் பார்ப்பேனுகில் சற்று நேரம் குலைத்துக்கொண்டு துறத்தி செல்வேன். அதுவும் பயந்து கொண்டோடும். இப்படியாக பகலெல்லாம் இருந்துவிட்டு இரவு வந்தவுடனே உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யாமல் நன்றி யறிவோடு காப்பேன்.

எரும்பு.

இருபது வருஷகாலமாக நான் எரும்பைப் பார்த்துப் பார்த்து நானுமோர் எரும்பாகப் பிறந்திருக்கக்கூடாதா வென்று வருத்தப்படுகிறேன். அவைகளின் ராஜ்யமே ராஜ்யம். பிரிட்டிஷ் அரசாட்சிக்கு மேலாகவன்றே யிருக்கிறது. அவைகள் போவதைப்பார். ஸோல்ஜர் கூட்டம் சண்டைக்கு போவதைப் போலல்லவோ யிருக்கிறது. ஒன்றுவது வழியை விட்டு மாறிப் போகிறதா? இல்லை. ஜாக்ரதையில் எரும்புக்குச் சமான முண்டா? மழை காலம் வரப்போகிற தென்று தெரிந்துகொண்டு முன்பாகவே ஜாக்ரதையாக வேண்டிய ஆகாரத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ளுகிறதல்லவா. மனிதன் அதன் மூலமாகவன்றே "எரும்பு முட்டை கொண்டு திட்டையேறினுல் மழை பெய்தது" என்பதாக அறிகிறான். அதன் புத்தியே புத்தி. ஆகையால் நான் எரும்பாய்ப் பிறக்கவில்லையே என்று வருத்தப்படுகிறேன்.

டி. ராஜகோபாலாசாரி.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Stooping Children.

கூன் குழந்தைகள்:—குழந்தைகள் குனிந்துபடிப்பதாலும், எழுதுவதாலும், சுவரில்சாய்ந்து உட்கார்ந்து கொள்வதாலும் அவர்கள் முதுகெலும்பு வளைந்து கூன் உண்டாகிறது. குழந்தைகள் தலை நிமிராமல் நடக்கும்பொழுது உடனே கவனித்து அவர்களை தேகாப்பியாசம்செய்யத் தூண்டவேண்டும். இப்படிச் சில நாள்கள் செய்துவந்தாலே முதுகெலும்பின்வளைவு ஸரியாய்ப்போம். இல்லாவிட்டால் டாக்டரிடம் அழைத்துச்சென்று சிகிச்சை செய்யவேண்டும். அச்சத்தையாயிருந்தால் கூன் நிலைத்துப்போகும். பின்பு மாறுவது கஷ்டம். முதுகெலும்பு முற்றிப்போவதற்குமுன் நாம் கவலை எடுத்துக் கொள்ளாவிட்டால் பிறகு சிகிச்சை பிரயோஜனப்படாது.

An electric Cradle

மின்சார தொட்டில்:—மின்சார சக்தியினுல் எவ்வளவோ அற்புத வேலைகள் நடந்துவருகிறதைக் கண்ணுல் பார்க்கிறோம். தற்பொது பாரீஸ் நகரத்தில் மின்சார சக்தி அமைக்கப்பட்ட தொட்டில் ஒன்று செய்திருக்கிறார்களாம். அத்தொட்டிலில் படுக்க வைக்கப்படும் குழந்தை அழுதால் உடனே மின்சார யந்திரங்கள் வேலைசெய்யத் தொடங்க, அத்தொட்டிலை அச்சக்தி ஆட்டிக் கொண்டிருக்குமாம். அப்போது அதில் அமைக்கப்பட்டுள்ள க்ராமபோன் வாத்தியம் தாயார் பாடுவதுபோல பாட ஆரம்பித்துக் குழந்தையின் அழுகை ஓய்ந்து நித்திரை செய்யும் வரைக்கும் தொட்டிலாடிக் கொண்டும் கிராமபோன் பாடிக்கொண்டு மிருக்குமாம் இதனால் தாய்மார்களுக்கு எவ்வளவோ அனுகூலமென்றென பாரீஸ் பத்திரிகை யொன்று சந்தோஷங் கொண்டாடுகிறது.

Training of Children.

குழந்தைகளின் பயிற்சி:—"கோடஸ்வர ப்ரபுவின் பிள்ளைகளைப்பற்றி துக்கப்படுகிறேன். அப்பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் செல்லம் கொடுக்கிறதினுல் தலைகால் தெரியாமல் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்ய மறந்துவிட்டு பொறுப்பின்றி பணத்தை வீண்செலவு செய்து கொஞ்ச காலத்துக்குள் அழிந்து விடுகிறார்கள். உலகஸ்வபாவம் தெரிகிறது இடையாது. பெற்றோர்கள் பால்யத்தில் அவன் விருத்திக்கு எவ்வளவு நன்மைசெய்தாலும் நினைக்கிறதில்லை. பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை எவனொருவன் ஸரியாய்ச் செய்கிறானே அவன்தான் உண்மையான புத்திரன். நான் கோடஸ்வர ப்ரபுவானதற்குக்காரணம் என்றாய்." ஆண்ட்ரு கார்னகீ.

Cradle in Motor Vehicles.

மோடார் வண்டியில் தொட்டில்:—குழந்தைகள்சௌகர்யமாய்த்தூங்கும்படியும் கொஞ்சமேனும் அசையாமலிருக்கும்படியும் மோட்டார் வண்டிகளில் தூதனமாய் ஒரு உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 50, 60 பேர் ஏறிச் செல்லக்கூடிய ட்ராம் வண்டி போன்று சில காலமாக மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களிலிருந்து செல்லும் மோட்டார்வண்டி கம்பனிக்காரர்கள் இந்த சௌகர்யத்தைச் செய்வார்களானுல் ப்ரயாணிகளுக்கு நல்லது

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Cleaning Spectacles.

மூக்குக் கண்ணாடிகளைச் சுத்தம் செய்தல்:—"உங்கள் மூக்குக் கண்ணாடிகளை யெப்பொழுதேனும் ஸ்நானம் செய்வித்திருக்கிறீர்களா? இல்லையாயின் ஒருதரம் அவ்வாறு செய்து பாருங்கள்" என்று அமெரிக்கர் ஒருவர் சொல்லுகிறார். முக்யமாய்க் கோடை காலத்தில் ஈரமும் தூசியும் சேர்ந்து கண்ணிமை மயிரில் பிசின் போல் ஒட்டிக்கொள்ளுகின்றன. இச்சமயத்தில் மூக்குக் கண்ணாடிகளை சவர்க்காரத்தினால் தேய்த்து, வெந்நீராற் கழுவிக்காயவைத்துப் பிறகு ஜவ்வுத்தாளென்னும் மெல்லிய காகிதத்தால் துடைத்தால் அக்கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு பார்க்கும் போது பார்வை அதிக தீக்ஷண்யமாயிருக்குமாம். பிசின்போன்ற இவ்வஸ்து மூக்குக்கண்ணாடியின் வில்லைகளின்மீது படிந்து விடுகிறது சாதாரணமாய்க் கண்ணாடிகளைத் துடைக்க உபயோகப்படுத்தி வரும் மலையாட்டுத் தோலினாலாவது (chamois leather). ஜவ்வுத்தாளினாலாவது இவ்வாறு பிசின் படிந்த கண்ணாடிகளைத் துடைத்தால், கண்ணாடி வில்லைகள் சுத்தமாகிறதில்லையாம். எவ்வளவுக் கெவ்வளவு ஆகாயத்தில் ஈரம் அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மூக்குக் கண்ணாடிகளைச் சுத்தம் செய்யவேண்டிய தவசியமாம். இந்த அருமையையறிந்த நேத்திர வைத்தியரொருவர் எப்பொழுதும் தன் சட்டைப்பையில் ஓர் சிறுபுட்டியில் சுத்த சாராயத்தை எடுத்துச் செல்லுவார். சாராயத்தில் கைக்குட்டையின் ஒரு முனையை நனைத்துக்கொண்டு அம்முனையால் மூக்குக்கண்ணாடியின் வில்லைகளைத் துடைத்து சுத்தப்படுத்துவது அதிசீக்கிரத்தில் முடியும். இதனால் கண்ணாடி வில்லைகளிற் படிந்திருக்கும் மேற்சொன்ன பிசின் போன்ற வஸ்து முற்றிலும் எடுபட்டுப்போய் விடுகிறது. வேறு வியாபாரியொருவர் தன் கண்ணாடிக்கூட்டில் மடித்த ஜவ்வுத்தாளை வைத்திருக்கிறார். இதுவும் கண்ணாடி வில்லைகளைச் சுத்தப்படுத்தத் தகுந்ததொரு உபாயம் தான்.

Pure Milk.

நல்லபால்:—பால் நன்றாயிருக்க வேண்டுமானால் அடியில் சொல்லும் குறிப்புகளை கவனிக்கவேண்டும். 1. முதல் கறக்கும் பாலை உபயோகிக்கக் கூடாது. 2. பசுக்களை நாள்தோறும் தேய்க்கவேண்டும். பால் கறப்பதற்கு முன் மடியைக் கழுவவேண்டும். 3. பால் கறப்பதற்கு சில நாழிகைகளுக்கு முன்மாட்டுக்குத் தீனி போடவேண்டும். சாணியை அப்புறப்படுத்தவேண்டும். 4. மாட்டுக்கொட்டிலை ப்ரதி தினமும் இருமுறை சுத்தம் செய்யவேண்டும். நிலத்தைக் கழுவவேண்டும். 5. மாட்டுக்கொட்டிலில் தாராளமாய் வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கவேண்டும். 6. பால் கறப்பவர்கள் கறக்கும்பொழுது சுத்தமான ஆடைகள் தரித்திருக்கவேண்டும். ஒவ்வொரு பசுவையும் கறப்பதற்கு முன்னும் பின்னும் கறப்பவர்கள் கைகளை நன்றாய்க் கழுவவேண்டும். 7. பால்கறக்கும் பாத்திரத்தை உலை நீராவியில் பிடிக்கும்பொழுது பாத்திரத்திலிருந்து உண்டாகும் ஜலம்வடியும்படி கவிழ்த்து வைக்கவேண்டும். அதைக் குளிர்ந்த ஜலத்தால் அலம்பக்கூடாது துணிகொண்டு துடைக்கவும் கூடாது. நீராவியில் பிடிப்பதால் விஷக்குமிகளிருந்தால் இறந்துபோகும்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

Cocoanut Oil.

தேங்காயெண்ணெய்:—நெய்யின் விலை ஆனாலும் ரொம்ப உயர்ந்திருக்கிறபடியாலும், அப்படியும் உயர்ந்த விலை கொடுத்தாலும் அப்படம் நெய் அகப்படுவது துர்பலமாயிருப்பதாலும், என்ன செய்வதென்று எல்லாரும் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கு ஜில்லாக்களில் தேங்காயெண்ணெய் தேய்த்துக்கொள்ளவும், பலகாரம் சுடவும், சாப்பாட்டுக்கு நெய்யிக்குப் பதிலாக உபயோகிக்கவும் படுகிறது. இம்மாதிரி தென் ஜில்லாக்களில் நல்லெண்ணெய் உபயோகப்படுகிறது. தெற்கெத்தியாருக்குதேங்கா யெண்ணெய் பிடிக்காது. மேற்கத்தியாருக்கு எள்ளெண்ணெய் பிடிக்காது. பார்க்கப்போனால் எல்லாம் பழக்கம். இருந்தாலும் தேங்காயெண்ணெய் உபயோகிக்கும் மேற் கத்தியார் சரீரவளப்பத்தில் தெற்கத்தியாரை விட மேலானவர்களாயிருக்கிறார்கள். எள்ளெண்ணெய்யிலும் கடலைக்கொட்டை எண்ணையைக்கலந்து கொடுத்து விடுகிறார்கள். ஆகையால் எள் அல்லது தேங்காய் போட்டு ஸ்வயமாய் எண்ணெய் செய்துகொண்டால் நலம். தேங்காய்கள் நன்றாய் முற்றியுதிர்ந்து ஈரம் வாங்கின பின் எண்ணெயெடுக்க உபயோகிக்கவேண்டும். முக்கால் காய்களும் பால் காய்களும் எண்ணெய்க்கு உதவா.

Nature of Vegetables.

காய்கறிகளின் குணங்கள்:—கத்திரி, வெண்டை, அவரை, ஆகிய காய்களில் போஷணாசக்தி அதிகமிருக்கிறது. மாம்சம் சாப்பிடாதவர்களுக்கு வெண்டைக்காய் போஷணா விஷயத்தில் மாம்சம்போன்று ச்ரேஷ்டமானது. வெள்ளரியில் போஷணாசக்தி அதிக மில்லாவிட்டாலும் சதை மதுரம் இருப்பதால் இது மிகவும் உபயோகமான பதார்த்தம். கிழங்கு வகைகளுள் சேனை என்னும் காராக் கருணை, கருணைக்கிழங்கு, உருளைக் கிழங்கு இவைகள் விசேஷமானவைகள். உருளைக்கிழங்கு மற்றவைகளை விட அதிக போஷணா சக்தியையுடையது. ஐரோப்பாவில் இது மிகவும் அதிகமாக உண்ணப்படுகிறது. அயர்லாண்டில் பெரும்பாலர் இதனாலேயே ஜீவிக்கிறார்கள். நமது தேசத்துக் கிழங்குகளில் இவ்வுருளைக்கிழங்குக்கு சமமாக உள்ளது மாவள்ளிக்கிழங்கு.

Jilapy.

ஜிலேபி:—22-ரூ எடை கோதிமிரவை, 2ரூ-எடை அரிசிமா, 5ரூ எடை உளுந்துமா, இவைகளை ஒரு பாத்ரத்தில் போட்டு கலந்து, 4½ரூ-எடை நெய்யும் கொஞ்சம் பாலும் சேர்த்து நன்றாய்ப் பிசையவேண்டும். மாவைக் கையிலெடுத்துப்பார்த்தால் ஒருமுழம் நீளம் அறிந்து விழாமல் தொங்கும் வரையில் கெட்டியாய்ப் பிசையவேண்டும். இதற்குப்பிறகு 24ரூ எடை சர்க்கரையில் 6ரூ எடை பாலைச்சேர்த்துக் கரைத்து பாணலியை அடுப்பில்வைத்து ஜீரா செய்து கொள்ளவேண்டும். மாவை ஜிலேபி பிழிவதற்காக த்வாரம் செய்த கெட்டித்துணியில் வைத்து அடுப்பில் கொதிக்கும் நெய்யில் வட்டமாகப் பிழியவேண்டும். நன்றாய் வெந்த பிறகு இதையெடுத்து நெய் வடிந்துபோன பின் ஜீராவில் போட்டால் தித்திப்பு இதற்குப் பிடிக்கும்.—பி. வ.

ART & MUSIC.

கலையும் ஸங்கீதமும்.

Chess play.

சதுரங்க விளையாட்டு :— சதுரங்க விளையாட்டு ஐரோப்பியர்களுக்கு மிகவும் பிரியமானதால் லண்டன் டைம்ஸ் பத்திரிகை வாரவாரம் ஒவ்வொரு பக்கம் இதைப்பற்றி எழுதுகிறது. இது முதல் முதல் இந்தியாவில் தான் உண்டாயிற்று. இது அராபியர்கள் வழியாய் மேனாட்டுக்குப் பரவியது.

Handicraft.

கைத்தொழில் :—கல்வி மனப்பழக்கத்தால் சித்திக்கும். கைத் தொழிலைக் கைப் பழக்கத்தலல்லாமல் வெறும் மனப்பழக்கத்தால் அடைவது கூடாத முயற்சி. கைப்பழக்கம் பலகாலப்பிரயாசை காரணமாய்க் கைகூடும். அதன்றுட்பம் ஞாற்றிலொருவர்க்கே எய்தும். இதை அறிபவர் ஆயிரத்துக்கொருவர்.

Dancing—Criticism on.

நாட்டியம் :—நான் இந்தியாவிற்கு வரக்கூடாதென்று சிலர் செய்த ஆக்ஷேபணை எனக்கு அக்கரையில்லை. இந்தநாட்டில் என்னைப்பற்றியும் என் நாட்டியத்தைப்பற்றியும் பத்தாதிபர்களும் மற்றவர்களும் தாராளமாகப் பேசலாமென்று மிஸ்மாட் ஆலன் ஒரு பத்திரிகை ப்ரதிநிதியிடம் சொன்னாள். இந்த மாது ஸ்ரீ ஐரோப்பாவில் பேர் போன நாட்டியக்காரி. இவள் நாட்டியம் இந்தியர்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியல்லவாதலால் இவள் இந்தியாவுக்கு வரக்கூடாதென்று சிலர் சொன்னார்கள், எழுதினார்கள், மீட்டிங்கில் தீர்மானித்தார்கள். இவர்கள் ஜபம் அவளிடம் பலிக்கவில்லை. இவள் இப்பொழுது கல்கத்தாவில் ஆடி பிரக்யாதி பெறுகிறாள்.

Music's Power.

ஸங்கீதத்தின் சக்தி :—

(அறுசீர் விருத்தம்.)

ஓடுங் கொடிய விடப்பாம்பும்
உருகுமிசை கேட்டு ஆடி நிற்கும்
ஆடுங் கருங்கல் அசைந்து வரும்
அழுத குழவி வாயடங்கும்
மாடும் மகிழ்வாய்க்குழல் கேட்கும்
மதுரமேவு மமுத மென்ன
பாடு மிசை கேட்டு ருகாரை
என்னென்றுரைப்பேன் பாவலரே!

The Power of Music.

ஸங்கீதத்தின் மகிமை :— மகா கொடிய விலங்குகளும ஸங்கீதத்திலுல் பரவசமாகிய மனம் ஒருமைப்படுகின்றன என்பது பிரான்ஸில் ஸமீபமாக நடந்த ஒரு விருத்தாந்ததால் தெரியவருகிறது.

பிரான்ஸ் தேசத்தில் ஒரு பயாஸ்கோப் கம்பெனியார் சிங்கத்தோடு சில பயாஸ்கோப் படங்கள் எடுக்கப்பிரியப்பட்டார்கள். அவர்கள் சிங்கத்தை படம் பிடிக்க வழி தெரியாமல் நிலைத்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு ஸ்த்ரீதான் அவர்கள் மனதை பூர்த்தி செய்வதாக சொன்னாள். அவள் சங்கீதக்கருவியை வாசித்துக்கொண்டு சிங்கம் அடைப்பட்டு இருக்கும் கூண்டினருகில் போனாள். ஒரு குரூரமுள்ள சிங்கம் இவளுடைய சங்கீதத்திற்கு கட்டுப்பட்டு தலை யசைத்துக் கொண்டு இருந்தது. மற்ற சிங்கங்களும் இதையே பின்பற்றின. பிறகு இவன சங்கீதத்தால் அவைகளை ஆட்டிவைக்க பயாஸ்கோப் படங்கள் ஸுலபமாய் எடுக்கப்பட்டன.

சங்கீதத்தின் மகிமையே மகிமை!

T. S. V. சர்மா.

VIEWS AND REVIEWS.

அபிப்பிராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Thoughts on Xmas.

கிறிஸ்துமஸ் பண்டிகை :—கிறிஸ்து பிறந்த தினத்தை நாம் புண்ய தினமாகக்கொண்டாடுவது நம்மதத்திக்கு விரோதமென்று நினைப்பது பிசகு.

நாம், ஒருவருக்கொருவர் நன்மையையேகோரவேண்டும். இதில் தான் சுகமிருக்கும். நாம் செய்யும் நன்மைகளே கடவுளுக்கு ஓர் உபகாரமாயிருக்கும். நம்முடைய பகைவர்களை நாம் நேசிப்பதால் தான் சுகம் பெறமுடியும்.

கடவுளை நம்பினவர் கைவிடப்படமாட்டார். எவ்வித மனிதர்கள் எந்தக்கடவுளைத்துதி செய்தபோதிலும் அன்புடன் மனவேறுபாடில்லாமல் முழுமனதாடு துதித்தால் தான் கடைத்தேறலாம். ஹரிநாமத்தை பழிப்பதாலேயே பாவங்கள் நீங்குமென்று சொல்வதுண்டு. ஆனால் ஒருவன் இந்த சங்கதியை அறிந்து கொண்டே பாவம் செய்து வந்தால் அவன் பாவம் நீங்காது. தண்டனையையும் அனுபவித்தே தீரவேண்டும்.

இந்துநேசன்.

Depressed Classes.

தாழ்ந்த வகுப்பார் :—"தாழ்ந்த வகுப்பார்களை புத்தியிலும் சன்மார்க்கத்திலும், சரீரவன்மையிலும் உயர்ந்த எவனொருவன் பாடுபடுகிறானே, அவன் தனக்கே ஆத்ம சுத்தியைச் செய்துகொண்ட வனாகிறான். இந்த தேசத்தின் பிற்கால க்ஷேமமானது எல்லா வகுப்புகளையும் சமமாக நடத்துவதைப் பொருத்ததாகவே யிருக்கிறது.—எல்லா இந்தியா சுத்திக்கான்பரென்வில் சர் என். சந்தவர்க்கர்.

Religious Truths.

மத உண்மைகள் :— ஒவ்வொரு மதத்திலும் முக்யமான விஷயங்கள், முக்யமில்லாத விஷயங்கள் இரண்டும் இருந்தே தீரும். ஒருவன் தன் மதத்தின் முக்யமான விஷயங்களை அனுசரித்து நடக்க வேண்டுமானால் அவனுக்கு அன்னிய மதங்களில் ஆராய்ச்சி மிகவும் அவசியமாகும். அப்போது தான் தன் மதத்தின் முக்யமான உண்மைகள் இவை யென்றறிவான். எல்லா மதங்களுக்கும் முக்யமான தர்மங்கள் பொதுவாய்த்தானிருக்கும். வித்யாஸமிருக்காது மதவாராய்ச்சியால் தன் மதம் உயர்வு, அந்ய மதம் தாழ்வு என்ற சிறுக்குகுறையும். குறைந்தால் ஜன சமூகத்தில் நேர்மை உண்டாகும். போராட்டம் தொலையும். கவுண்ட் டால்ஸ்டாய்.

Vana Devadas ?

வனதேவதைகள் :—எல்லா மதங்களிலும் மனிதனைவிட மேலான ஜீவராசிகளைப் பற்றிய பிரஸ்தாபம் உண்டு. அனேக மதங்களில், மனிதனுக்கு பிரஞ்ஞை சம்பந்தப்பட்ட மட்டில் கீழான ஜீவர்கள் இருக்கிறார்கள் எனப் பிரஸ்தாபம் உண்டு. அவைகளைப்பற்றிக் கதைகளிலும் புராணங்களிலும் கவிகளிலும் விவரங்கள் இருக்கின்றன. நுண்ணிய உணர்ச்சியும் திருஷ்டியு முள்ளவர்களுக்கு இயற்கையான அழகுள்ள மலைகளையும் காடுகளையும் அருவிகளையும் பார்க்கும் பொழுது இத்தன்மையான கீழான தேவ கூட்டங்கள் பலப்படுகின்றன. இவைகள் தான் வனதேவதைகள் மரதேவதைகள், பூதகணங்கள்—என்ற பெயருடன் வழங்குகின்றன.

பூர்ண சந்த்ரோதயம்.

VI

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Mrs Pankharst.

மிஸ்ஸஸ் பாங்கேர்ஸ்ட் :—ஸ்த்ரீ ஸுதந்தர வாதிகளின் தலைவியாகிய மிஸ்ஸஸ் பாங்கெர்ஸ்ட் அமெரிக்காவில் அநேக பிரஸங்கங்களைச் செய்து விட்டு இங்கிலாந்திலுள்ள ப்ளிமத் என்ற துறை முகத்தில் வந்து இறங்கினவுடன் போலீஸார் அவரை அரெஸ்ட் செய்து, எக்ஸெடர் என்ற இடத்துக்கு அதிக விரைவாக மோட்டார் வண்டியில் கொண்டுபோய் அங்கு ஜெயிலில் வைத்தார்கள்.

மிஸ்ஸஸ் பாங்கெர்ஸ்ட் முன் ஜெயிலிலிருக்கையில் பட்டினி கிடந்து அதன் முடிவாக விடுதலை அடைந்தாள். முழுத்தண்டனைக் காலமும் முடியுமுன் விடுதலை செய்யப்படுகிறவர்களை மறுபடி அரெஸ்ட் செய்து பாக்கி காலத்துக்காக ஜெயிலில் வைக்கலாமென்று புதிதாகச்சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட சட்டத்தின்படி அவர் அரெஸ்ட் தற்சமயம் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

A Lady Aeroplanist.

ஆகாய விமானி :—பாரனெஸ் ஹெலாரோச் என்ற ஸ்த்ரீ இதுவரையிலும் யாரும் பறந்து செல்லாத அவ்வளவு உயரம் சென்றதால், இதற்காக அவளுக்கு 'பெமினெக்ஸ்' என்ற தங்கக்கிண்ணம் பரிசு கிடைத்திருக்கிறது. இது தவிர அனேக சன்மானங்கள் முன்னமே கிடைத்திருக்கிறதாம். சென்ற 1913 வருஷம் மீமஸ் என்றபட்டணத்தில் 200 அடி உயரத்தில் சஞ்சரிக்கையில் இவள் தப்பிக் கீழே விழ்ந்துவிட பெருங்காயம் பட்டுவிட்டது. பிழை பாரென்று நம்பவேயில்லை. தெய்வசங்கல் பத்தால் பிழைத்தாள்.

Street Cleaning.

தெருவை சுத்தம் செய்தல் :—மேற்கு ஆப்பிரிக்காவில் டகோமி என்ற பிரஞ்சுக்காரர் ஆளுகைக்குட் பட்ட ப்ரதேசமிருக்கிறது. இதிலுள்ளதெருக்களில் குப்பைகளிருந்தால் தெருக்கள் வழியாய்ச் செல்லும் ஸ்த்ரீகள் குப்பையை ஒதுக்கித் தள்ளி சுத்தம் செய்யவேண்டுமாம். தெருவில் பெட்ரோல் செய்யும் போலீஸ்காரனுக்கு ஒரு ஸ்த்ரீயை இந்த வேலையைச் செய்ய ஏவ அதிகார முண்டாம்.

A laudable gift.

ஒரு நன்கொடை :—சென்னை விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரிக்கு கன்னிக்கோட்டை ஜாமீன் அவர்கள் 1000 ரூ. கன்கொடை கொடுத்தார்கள்.

A Weighty Lady.

ஒரு பளுவான ஸ்த்ரீ :—நெல்லியம் பார்ட் என்ற 20 வயதுள்ள ஓர் மாதுவின் நிறை 560 பவுண்ட். சாதாரண ஸ்த்ரீகள் காலு பெயரின் நிறைக்குச் சமம்.

A happy Family.

கூபமாயுள்ள தும்பம் :—நாட்டிங்காம் என்ற பிடத்தில்ஓர் தம்பதிகளுக்கு கலியாணமான 50-வது வருஷத்தைக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது. அச்சமயத்தில் அவர்களின் பேரப்பிள்ளைகளும் அவர்களின் பிள்ளைகளுமாக யாவரும் ஒன்று கூடினார்கள். அக்குடும்பத்தில் இவ்வளவு காலமாக யாதொரு மரணமும் நேர்ந்த தில்லையாம்.

A Laudable Charity.

தர்மம்:—ஆனரபிள் மிஸ்டர் ஆமத் தம்பி மரக்காயர் அவர்கள் நாகபட்டணம் ஆஸ்பத்திரி காம்பவுண்டிற்குள் 6 ஆயிரம் ரூபா செலவில் கோஷா பெண்பிள்ளைகளுக்கு அறகுலமாய் ஒரு கட்டிடம் கட்டப்போகிறார்.

WIT & HUMOUR.

தமாஷ்.

ஒரு வாலிபன் :—பெண்ணைசௌக்யமா?

ஒரு பெண் :— சௌக்யந்தான். வந்தனம் ஐயா.

வாலிபன் :—நீ என்னை சௌக்யமா என்று கேட்கப்படாதா.

பெண் :—எனக்கு இஷ்டமில்லை.

மரம் வெட்டுகிறவன் :—நான் உன்னைப் பாடையிலே (பாடுகையிலே) பார்க்கவேண்டும். எப்பொழுது வரட்டும்? சங்கீதவித்வான் :—நான், உன்னை வெட்டுகையில் (மரம் வெட்டுகையில்) பார்க்க விரும்புகிறேன். அதை நான் பார்த்த பிறகு, நீ என்னைப்பாடையில் பார்க்கலாம்.

* * *

உபாத்தியாயர்:—நீ எத்தனை முறை பாடம் படித்தாய்.

நாதா:—நான் எட்டு வீசைபாடம் படித்தேன்

உபாத்தியாயர் :—எட்டு வீசை என்பதற்கு பதிலாக-நான் ஒருமணங்கு பாடம் படித்தேன்னன்று சொல்லலாமே.

நாதா:—ஆமாம், நான் பாரம் மனங்கு வீசைக்கணக்குகளை நான் நூய் அறியேன். நான் எட்டு தடவைக்கு எட்டு வீசை யென்று தப்பிச் சொல்லி விட்டேன்.

உபாத்தியாயர் :—நான் கேட்கப் போகிற கேள்விக்குப் பதிலளிப்பாயா?

* * *

ஒரு பையன் :—அப்படியே செய்கிறேன்.

உபாத்:—சர்க்கரை என்னமாதிரியிருக்கும்?

ஒரு பையன் :—என்ன சார், இது தானு ஒரு பெரிய கேள்வி? இது எனக்குத் தெரியாதா? சாக்கரை இஞ்சியைப்போல் புளித்துக்கொண்டிருக்கும்.

* * *

மற்றொரு பையன் :—என்ன சார், இத்தனை நாள் தங்களிடம் கல்வி கற்றும் இன்னும் சர்க்கரை இன்னதென்று உணராமல் சர்க்கரையை கடிக்காயாக நினைத்து இஞ்சியைப் போல் புளித்துக் கொண்டிருக்கும். என்று சொல்கிறானே!

உபாத்தியாயர் :—பேஷ் பேஷ். கன்றுகப்படிப்பு உங்களுக்கு எறியிருக்கிறது. நல்லபேர் உங்களால் எனக்கு அதிக கீர்த்தில் கிடைக்கும்.

* * *

நீர்ரோகி:—வைத்யரே! நீர்ரொம்ப இறங்குகிறது. ரோகம் வலுத்துவிட்டது. பிழைக்கமாட்டேன் போலிருக்கிறது. நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.

வைத்யர் :—சாப்பி சாப்பிவெண்டா?

நீர்ரோகி :—நீர்த்தமே சாப்பிடுகிறதில்லை. தாகத்துக்குக்கூடக் காப்பிதான். நீர்ரோகம் எனக்கு வருவானேன்?

வைத்யர்:—பலேபா, கன்றுகளவித்யம் உமக்கே தெரியும் போலிருக்கிறதே! காப்பியையும் நித்திப்பு சாப்பிவெதையும் நிறுத்திஞல் சிகித்சை செய்கிறேன்.

நீர்ரோகி:—எத்தனாளில் சௌக்யமாகும்?

வைத்யர் :—குறைந்தது ஒருமாதம் பிடிக்கும். மருந்து வியாதியைப் பிடித்து நீக்கவேண்டாமா?

VII

EVENTS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

டிசம்பர் '13

3-ந்தேதி.—தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்டங்களில் தங்களுக்குள்ள அனுதாபத்தைக்காட்டி திரவிய சகாயம் செய்ய இன்று கல்கத்தா பேடன் தெருவிலுள்ள விக்டோரியா கலா சாலையில் இந்திய ஸ்த்ரீகளின் பொது கூட்டம் நடை பெற்றது விஷயங்கள் பங்காளி பாஷையில் பேசப்பட்டன. சபை நடக்கும் சமயத்திலேயே வாலண்டியர்கள் உண்டியைக் கையிலேந்தி சுமார் ரூ. 170 வசூல் செய்தார்கள்.

9-ந்தேதி.—பிரம்ம ஸமாஜத்தை ஸ்தாபித்தவராகிய ராஜாராம் மோஹன்ராய் அவர்கள் ஞாபகார்த்தமாக இன்று கல்கத்தாவில் ஒரு பப்ளிக்லைப்ரரியையும் ரீடிங் ரூமையும் பங்காள கவர்னர் லார்ட் கார்மிக்கேல் திறந்து வைத்தார்.

10-ந்தேதி.—புதுக்கோட்டை ராஜாவின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. சுமார் 500 குழந்தைகளுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

15-ந்தேதி.—ஸ்த்ரீ ஸ்வதந்தர வாதிகள் டேவன் போர்ட்டிலுள்ள தேக்குமரத்தொட்டியை கொளுத்தி விட்டார்கள். இதனால் 70 ஆயிரம் பவுன் மதிப்புள்ள சொத்து நஷ்டமாய்ப் போயிற்று.

16-ந்தேதி.—உருவச்ரிட்டிஷ் ராஜா திகாரத்தைப் ஸ்தாபித்த மூல புருஷனான லார்ட் க்ளைவின் இந்தியாவில் சிலையை சர்சார்ல்ஸ் பெய்லி இன்று திறந்துவைத்தார்.

16-ந்தேதி.—கல்கத்தா பராபஜார் என்னு மிடத்தில் மார்வாடிகள் முன்னிலையில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்டங்களைப்பற்றி கோகலே பிரசங்கம் செய்தார். அந்த சமயத்தில் 10 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டது.

18-ந்தேதி.—பரோடா மஹாராஜா மூன்றாவது புத்ரனாகிய சிவாஜிராவ் கெய்க்வாருக்கும் சர்தார்லஷ்மண்ராவ் பஹதூர் புத்ரி குமாரி தாராபாயிக்கும் விவாகம் விமரிசையாய் நடந்தது.

21-ந்தேதி.—ஐரோப்பாவில் பேர்போன நாட்டியமாது மிஸ் மாட் ஆலன் இன்று காலை சால்சட் என்னும் கப்பலில் பம்பாய் வந்து இறங்கினாள்.

22-ந்தேதி.—தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 30-வது வருஷோற்சவத்தின் மூன்றாவது தினமாகிய இன்று மாதர் தனிச்சபை ஒன்று நடைபெற்றது பெங்களூர் ஸ்ரீமதி ஆண்டாளம்மாளும் இன்னும் சிலரும் உபந்யாசம் புரிந்தார்கள்.

25-ந்தேதி.—இன்று பூனாவில் ஒருவிதவா விவாகம் நிறை வேறியது மாப்பிள்ளை ருக்வேதி, தேசஸ்த ப்ராமணன், வயது 31. இந்தூர் ராஜ்யத்தில் சரோத் ஆங்க்லோ வெர்னாகுலர் ஸ்கூலில் ஹெட்மாஸ்டர். பெண் கொங்கண வகுபபைச்சேர்ந்தவள். வயது 21 பூனா விதவாச்ரமத்தில் கற்று வந்தவள். தம்பதிகள் திடகாத்ர தீர்க்காயுசுடன் வாழ்க.

29-ந்தேதி.—ஆசார சீர்திருத்தக் கான்பரென்ஸின் 26-வது வருஷக் கூட்டம் இன்று காரச்சியில் கூடிற்று. ராவ் பஹதூர் திவான் குரும்லால் சந்தன்லால் அக்ராசனம் வசித்தார்.

31-ந்தேதி.—திருவல்லிக்கேணியிலுள்ள விதவாச்ரமத்தை லேடி பெண்ட்லெண்ட் இன்று மாலை சென்று பார்வையிட்டார்.

அங்கம் I.—களம் II.

இடம்.—குமாரபவனம் அறையும், தாழ்வாரமும். காலம்.—பிற்பகல்.

ராஜம்.—இதேதடா சனியன்! இந்த எழவு கணக்கை எழுதி யாருக்கு ஒப்பிக்கணும். 'மாதமாடிக்ஸ்' என்றால் நம்ம பையன்களுக்கெல்லாம் கொலை. என் மூளைக்கும் கணக்குக்கும் வெகுதூரம். எடுத்ததுக்கெல்லாம் சாவித்திரியை புத்திசாலி புத்திசாலின்னா, அவளுக்கு உச்சி குளுந்துபூடரது. உடனே நமக்கு அசட்டுப்பட்டம் வந்து வாய்க்கரது. அவளுக்கு ஊசிமூளை எனக்கு தலையே சுத்தரது. நாசமாப்போக என்ன பாத்தாலும் சரி வரல்லே. (காகிதத்தை எறிந்துவிட்டு மிருதங்கம் வாசிப்பதுபோல துடையில் தாளம் போடுகிறான். மறுபடி கடிதத்தை எடுத்துக்கொண்டு) இந்தப் பேரிழவை ஒருவழியா முடிச்சுத் தொலச்சுடுவோம். (கண்ணை மூடிக்கொண்டு) மூனு பதிமூனு (சிரிக்கிறான்) கஷ்டம், மேல் கிளாசுக்குப் போனதற்கப்புறம் கூட வாய்ப்பாடு ஞாபகமிருக்கணும்னா யாராலே முடியும்? வாய்ப்பாடு படாதபாடு படறதுன்னா. (தலையைச் சொரிந்து ஏதோ எழுதுகிறான். பிறகு கண்ணை மூடிக்கொண்டு, ஆகா என்னமாப்பாடினா முண்டே! (சாவித்திரீ வந்து பின்னால் நின்று கவனிக்கிறாள். ராஜம் பாடுகிறான்) மலடிவயத்து மகன்போலே (கனைத்துக்கொண்டு) அவளப்போலே எனக்கு வரல்லேயே. கழுதைத்தொண்டைதான் நமக்கு. ஐயோ என்னமாத்தபலா வாசிச்சான் பபிக பபிக பம்பம் ததின்ன தின்ன தின்ன தாகுடு தின்ன ததாதா...ஆஹா ரொம்ப கெட்டிக்காரன் படுவா. என்ன ஷோக் இந்துஸ்தானி, என்ன திருப்புகழ், என்ன ஜாவளி, என்ன தெம்மாங்கு!

சாவி.—.....ஏ பைத்தியம் கணக்கை முடித்தாயா என்னடா? உன்னை மறந்து குதிக்கிறாய். யாராவது கண்டால் சிரிக்கமாட்டார்களா? உனக்கு வெட்கமா யிருக்கவில்லையா?

ராஜ.—சிரிச்சா பல்லுத் தெரியும். குழந்தைகள் கண்டால் தேங்காச்சில்லு எனக்குன்னு அழுக—கணக்கெல்லாம் அப்பவே முடிச்சாச்சு பாரு.

சாவி.—ஈசனே! ஈசனே! நீ ஏண்டா பிறந்தாய்? இந்தக் குலத்தின் மதிப்பைக் கெடுக்க..

ராஜ.—(தன் கைக்குட்டையை முகர்ந்து,) வாஸனே வாஸனை! நீ ஏன் பிறந்தாய் என் மூக்குக்கு ஸுகத்தைக் கொடுக்க?

சாவி.—(கடிதத்தைப் பார்த்து) ஏண்டா வெற்றிலை ஐந்து ரூபாயென்று போட்டிருக்கிறாயே!

ராஜ.—அணா ஸ்தானத்துக்குப் பதிலா ரூபா ஸ்தானத்திலே போட்டுட்டேன். ஒனக்குத்தான் புத்திசாலின்னு முழ நீளப்பட்டமிருக்கே நீதான் மாத்திப்போடேன்.

சாவி.—அப்படியே யிருக்கட்டும், உன் கணக்குப்படியே இருக்கட்டு இங்கே எப்படி ஒன்று வந்தது.

ராஜ.—ஒண்ணு பன்னிண்டஞ்சு எம்பளத்தொண்ணுக்கு ஒண்ணு மிச்சம். (சிரிக்கிறான்).

சாவி.—(காகிதத்தைக் கிழித்துவிட்டு) அடே மர்க்கடமே, முதல்வகுப்பு வாசிக்கும் குழந்தை போடுமேடா இந்த கணக்கை, நீ உளருகிறாயே. ஹைஸ்கூல் போர்டிலுல் மேல் வகுப்புக்கு எடுக்கப்பட்ட குழந்தைகள் பின் எப்படி யிருக்கும்?

ராஜ.—நீ ஆறு கிளாஸ் வாசித்துவிட்டு என்னை மிரட்டுகிறாயே, நான் மெட்ரிக்லேஷனுக்கு வாசிக்கிறேன். என்னை விட உனக்குத் தெரியுமோ சொம்ப உயர்ந்த பரீட்சைக்கு வாசிக்கிறதனால் கீழ்வகுப்பு படிப்பெல்லாம் மறந்துபோச்சு பி. ஏ. பாஸ் பண்ணினவனைப் போய் வாய்ப்பாடு கேள். எல்லாம் அவனுக்கு மறந்துபோயிருக்கும்.

சாவி.—வாஸ்தவம்தான், ஒருவருஷம் வாசித்தாலல் லவோ? நீ ஏழு வருஷமாய் மெட்ரிக்லேஷனுக்கு வாசிக்கிறாயல்லவா?

ராஜ.—அஞ்சிவாரம் பலமாயில்லாவிட்டா மேல்படிப்பு உபயோகமே யில்லை.

சாவி.—என்தான் இந்த ஜன்மத்தைப் படைத்தானே சோற்றுக்குக் கேடாக? (ஜானகம் வருகிறான்).

ராஜ.—என்தான் அந்த ஜன்மத்தைப் படைத்தானே ரொண்டாயிர ரூபாயிக்கு கேடாக.

ஜான.—உனக்கு அது பெரிதாய் தோன்றுகிறதா? படிப்பில் முதன்மையாயில்லாவிட்டாலும் தர் எண்ணைக்களில் முதல்தரந்தான். உங்களுக்குப் படிப்புகளுக்கெல்லாம் போக மீடு நிலமும் வைக்காவிட்டால் மண்ணைவை உருட்டவீர்களே. லட்சாதிப் பிரபுவிடம் போனாலும் பிச்சைக்காரனுக்குக் கொஞ்சம் அரிசியே. அதுபோல பெண்களுக்கு அது ஒரு லெவுதானே இந்த படிப்பெல்லாம் உனக்கு யாரடா கற்றுக் கொடுத்தார்கள் அதற்குள்?

ராஜ.—சீங்ஸ் இப்படிச் சொல்வீர்களென்றுதான் நான் படிப்பை விட்டுவிட்டேன். என் பெயரையும் ஸ்கூலில் அடித்துவிட்டார்கள். ஆனாலென்ன பாட்டு கற்றுக்கொண்டு கச்சேரிக்கு நூறு ரூபா சம்பாதித்து விடமாட்டேனா?

ஜான.—ஐயோ கண்ட்ராவியே பெரிய மனுஷன் பின்னே இப்படியா.

ராஜ.—ஆமாம் அத்தே. நீதான் என் கச்சேரிக்கு ப்ரீ டிக்கட்டு கொடுப்புவாய்.

சாவி.—போதும் போதும் நிறுத்து உன் பிரதாபத்தை கேற்று சாயங்காலம் தென்காசிக்கு வண்டி போனால்? அப்பா எல்லாம் விசாரித்து வைத்திருக்கிறார்.

ஜான.—போனானே, கௌரவமாக பாட்டு கேட்டுட்டு வரப்படாதா? அந்த இன்ஸ்பெக்டர் தேவடியாளுக்குப் பூவும் லெமனட்டும் வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்தானும். வண்டாரம் சாவித்திரி பாட்டைவிட ஒருத்தி பாட்டு நன்றாயிருக்கிறதென்று போனாயா, அல்லது இவனை விட தாதனமான வாத்தியம் வாசிக்கப்போராளென்று போனாயா? அய்யோ இப்பேர்ப்பட்டவர்களால் சங்கீதத்துக்கே என்ன அகௌரவம் ஏற்படுகிறது!

ராஜ.—அவளொன்னும் தாசியில்லே, குல ஸ்திரீதான்.

சாவி.—இன்னும் சொம்ப சிரேஷ்டம்.

ராஜ.—நீ பாடினால் கீர்த்தனமும் ராகமும் தேவாரமும் பாடுகிறாய் இது யாருக்குப் பிடிக்கிறது? அவ பேஷா ஜாவளி ஜோரா காவடிச்சிந்து தமாஷா இந்துஸ்தானி ஜில்லெனு பாரசி (பாடுகிறான்) ஆயே ஸையா.

சாவி.—(வெறுப்புடன்) போதும்டா நிறுத்து. காவாலி இந்துஸ்தானியும் கத்தரித்த குடுமியும் பட்டுவேஷ்டியும் வர்ணக்கைகுட்டையும் முதல் வெற்றிலைப்பாக்கு வாக்கலாம் (கையில் பேபர் பிடித்தவண்ணம் குமாரம் வந்து ஸோபாவில் உட்காருகிறார்).

தமாரம்.—சாவித்திரீ! நீ எங்கு போயிருந்தாய் ஒரு காழிகையாகத் தேடினேனே.

சாவி.—கணக் கெழுதிக்கொண்டிருந்தேன். என்ன விசேஷம்?

தமா.—இன்று பேபரில் ஆச்சரியமான விசேஷம் வந்திருக்கிறதே பார்த்தாயோ?

சாவி.—இல்லை வீட்டுவேலை அதிகமா யிருந்ததால் இன்னும் பார்க்கவில்லை.

தமா.—அன்று திருநெல்வேலியில் அமேச்சர் ட்ராமா ஸொஸைடியில் ஹாம்லெத் போட்டதற்கு நான் போயிருந்தேனே! ஹாம்லத்பார்ட் போட்ட ஹாம்லெத் போட்டதற்கு நான் போயிருந்தேனே! ஹாம்லத்பார்ட் போட்ட பங்காளியை எல்லாரும் மெச்சி மெடல் போட்டு மரியாதை செய்தார்களென்று பங்காளியை எல்லாரும் மெச்சி மெடல் போட்டு மரியாதை செய்தார்களென்றேனே! அவன் பங்காளி யல்லவாம் கனபதியாம்.

சாவி.—ஆ உண்மையாகவா? அவன் என்று யார் கண்டுபிடித்தது?

தமா.—அவனே ஸ்டேஜ் மானேஜரிடம் தெரிவித்துவிட்டு மறைத்து விட்டானும். மேலும் இன்ஸ்பெக்டர் பார்த்துவிட்டு பயந்து உட்கார்ந்திருந்தானும்.

ராஜ.—(வெளியே பார்த்து சிரிக்கிறான்) ஹிஹ் ஹிஹ் ஹிஹி.

தமா.—என்னடாது?

ராஜ.—கடைசித்யம்.

123

சாவி.—என்னது?

ராஜ.—வண்ணன் சால் ஹஹஹஹ.

ஜான.—என்னடா பிணமே.

ராஜ.—தம்பூரு வருகிறது. (சிரிக்கிறான் ஜோஸ்யர் வருகிறார்).

ஜான.—அண்ணு ஜோஸ்யர் வருகிறார். இவரையாவது கேளுங்கள் குண பூஷணத்தின் ஜாதகத்தைப்பற்றி மனப்பொருத்த மிருக்குமிடத்தில் ஜாதகம் பார்த்திருக்கவே வேண்டாம். நான் அப்பொழுதே சொன்னேன்.

ராஜ.—இவர் எல்லாப் பொருத்தமும் சரியாயிருக்குன்னுவெர். இல்லாட்டா தட்டில் மண்விழாதா?

தமா.—வாருங்கோ ஜோஸ்யர்வாள் இப்படி உட்காருங்கோ.

ஜோஸ்.—சாம்பசிவம்! மகாதேவா! (ஆஸனத்தில் உட்காருகிறார்.)

ராஜ.—(தன்னுன்). என்னத்தை வாருங்கோ கூடையில் (வெளி) தாத்தா நீங்க அந்த விநாயகனை இண்ணமே பஜிக்காதங்கோ உங்க வயிறு அன்யாயமா உங்களை முன்னுல் தள்ளி தேழையிழுக்கிறதே. அதை.—

தமா.—அட போடா நீ உள்ளே (கோபிக்க ராஜம் ஒரு பக்கத்தில் உட்கார்கிறான்.)

ஜோஸ்.—என்ன போங்கோ காலங்கெட்ட கேடு ஒன்னும் சன்னு யில்லே. (மூக்குப் பொடியை போட்டுக் கொள்கிறார்).

தமா.—(அருவருப்புடன்) பெரியவாளெல்லாம் எதற்கு இந்த வழக்கம் செய்துகொண்டு அலஸ்தைப்படவேண்டும்.

ஜோ.—(அசட்டு சிரிப்புடன்) பால்யத்துலே வழக்கமாப்போயுத்தி. லிடமுடியலே.

தமா.—வழக்கம் கெடுக்கிறகேடு கொஞ்சமா? நன்மையோ தீமையோ யோசிக்கவேண்டியதில்லே. வழக்கம்தான் தெய்வமாய் வினங்குகிறது நமக்கு.

ஜோ.—வழக்கத்தை முழுதும் அனுசரித்தாலும் பரவாயில்லையே, அதையும் விட்டுவிட்டார்கள். ஸ்நாநபானம் கிடையாது. சந்தியாவந்தனம் கிடையாது. ஐரோப்பிய பாஷையிலும் காகரீகத்திலும்தான் இருக்கிறது. மோட்சம் ஜனங்களுக்கு (பாடுகிறார்). வேதாஸ்வஞ் ஜாதவேலா ஸம்ருதிரபிறு. தயா காஸ்திகம் சாஸ்த்ரஜாலம்யே பீஸீடிதிபாரோ ஜபிதிவிஜயதே ஸர்வத காலலோஷாத: கன்யாஜானஸ்ய பாத்ரம் ததநிமவித் இம்துயேஹீயே ஸமர்த்தா. வீயேவியெல் பரீட்சாமயிர தயசஸாம் பங்கிமாஜ்யாம் விசந்தி ஸம்ஸ்திருதி பாஷை அடியோடுதொலைந்து போய்விட்டது. எபிஸீடியில்தான் நிற்கிறது உலகம். நாலுவேத ஆறுசாஸ்திர புராணங்கற்றவ ரெல்லாம்போய் பி. எ. பி. எல்., பரீட்சை தேறினவர்கள்தான் கன்னிதானத்துக்குப் பாத்திரமாயிருக்கிறார்கள். ஒருவிதமா! காலந்தான் கெட்டுப்போச்சே.

ராஜம்.—காலம் கெட்டுப்போகலே. மனுஷாள்தான் கெட்டுப்பூட்டாகள். இன்னும் என்னதான் கெட்டுப்போனலும் தாத்தா, உம்மைப் போன்ற வாளுக்குப்பயமில்லே. தேடுகிறவா கண்ணுக்குநீர் அகப்படாவிட்டாலும் உம்தொந்தி அகப்பட்டுப். ஹிக்ஹிக்கிக் (சிரிக்கிறான்).

தமா.—ஜோஸ்யரே ஜாதகம் பார்த்தீரா? உம்முடைய அபிப்பிராயமென்ன?

ஜோ.—ஆகா பார்த்தேன். திவ்யமாய் பொருந்தியிருக்கிறது. இந்த மாதத்துக்குள்ளே இந்த ஜாதகமுடைய குணபூஷணத்துக்கும் நம்ம குழந்தைக்கும் கலியாணம் நடந்தேதீரும்.

தமா.—நிரம்ப சந்தோஷம். சாவித்திரீ தாத்தாவுக்கு வெற்றிலைபாக்கும் ஐந்துரூபாயும் கொண்டுவந்து கொடு.

ராஜ.—கொலச்சவாய்க்கு கொழக்கட்டை (ஆனத்தத்தால் குதிக்கிறான்) (சாவித்திரீ தாம்பூலமும் பணமும் கொண்டுவந்து கொடுக்கிறான்).

ஜான.—கல்யாணமாகிறவளுக்கு இவ்வளவு சந்தோஷத்தைக்காணுமே உனக்கேன் பொங்குகிறது.

ராஜ.—அப்படியா, குணபூஷணத்துக்கு மச்சுனன் என்றால் எவ்வளவு உயர்த்தியாய் மதிப்பார்களென்று உனக்குத்தெரியாது. நான் எங்கே ஒன்னுக்குப்போனலும் போலீஸ்காரன் பிடிக்கமாட்டானே.

ஜோ.—தாம்பூலப்பணம் பெற்றுக்கொண்டு) ஸர்வமங்கள முண்டாக வேண்டும். ஜாதகரீதிப்படி இந்த தம்பதிகள் தீர்க்காயுளோடு மிருப்பார்கள் (ராஜம் தம்முகிறான்).

ராஜ.—என்னபேரிழவு? சனிபிடித்ததோ சனியன் பிடித்ததோவென்பது சரியாய்த் தானிருக்கு.

ஜான.—(தனக்குள்) சனியன் சகுனிமாதிரி அபசகுனம்போலதும்முடிகிறதே. எப்படி யாகுமோ? பகவான்தான் காப்பாற்றவேண்டும்.

ஜோ.—ரொம்ப சந்தோஷம். நா...வரட்டுமா?

தமா.—ஆகா. இப்போ எங்கே போகிறப்போலே—யோ.

ஜோ.—ஆண்டபிள் (ஆனரபில்) முத்துலிங்கமி ராவ்வீட்டிற்கு போயிட்டு ஜமீன்தாரவண்வரச் சொல்லியிருக்கார்.

ராஜ.—ஆண்டபிளா, ஹிக்கிக்கைக் அவன்களுக்குக் கொஞ்சமாவது புத்தியிருந்தால் அந்தப்பட்டம் உமக்குக் கொடுத்திருப்பான்கள், ஆண்டபின் கிரண்டுபேரை அழித்து ஒன்றுய் உம்மைப்படைத்திருக்கிறது. லேபுள் தொப்புள் ஆண்டபுள் அப்புள்.

ஜோ.—போடா. அதனப்பிரசங்கி (குமாரத்தினிடம்) என்ன இருக்கிறதும் மனஸு இவ்விடத்தைப் போலிருக்காது. அவர்கள் கூப்பிட்ட போதெல்லாம் போனலும், கன்றிலடையாது.

ராஜ.—அவர்கள்தான் படித்தவாள். கன்றிமறப்பது நன்று அன்று. அன்றைக்கே கன்றியை மறந்து விடாது கல்லதன்று என்று கம்பரே சொல்லியிருக்கிறாரே (சிரிக்கிறான்)

சாவி.—அப்பா அவனைப்போகச் சொல்லுங்கள் முன்பு.

ராஜ.—காளேபோய் விடரேன் (ஜோவியரிடம்) மெதுவாய் ஜமீன்தாரிடம் போகலாம். வாரும் (இருவரும் போகிறார்கள்).

தமா.—பெருங்கவலை நீங்கிவிட்டது ஜானகம் ஸாவித்திரீ இதெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனமாயிருப்பதால் அவளுக்கும் இஷ்டம்தான். சந்தேகமில்லை. என்ன கண்ணே (சாவித்திரியைபார்த்து புன்னகைசெய்ய அவள் கம்பீரமாய் நிற்பதைக்கண்டு சந்தேகித்து) என்னதான் உன்மனது தெரிந்திருந்தாலும் உன்வாயால் சம்மதம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். குணபூஷணம். உன்னைமணம் செய்துகொள்ள எவ்வளவு ஆவல்கொண்டிருக்கிறார் என்பது உனக்குத் தெரிந்ததே. நீ என்ன சொல்கிறாய், வெட்சப்படாதே. உன் அபிப்பிராயத்தை வெளியிடும் முன் அவரைப்பற்றி நான் புகழ்வது நன்றாக இருக்கமாட்டாது.

சாவி.—என் அபிப்பிராயத்தை கேட்டால் உங்கள் மனமும் ஒவ்வாதி உலகமும் ஒவ்வாது. கலியாணம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்பதென்ன? இப்படியே என்று மிருந்துவிட்டாலென்ன? கலியாணம் செய்துகொண்டவர்கள் எல்லாரும் புருஷன் பிரியத்துக்கு பாத்திரராய் சுகமும் சுதந்திரமும் அடைகிறார்களென்பது நிச்சயமா? உங்களுக்கோ மனைவி இல்லை. அத்தையோ ஐந்துவயதில் புருஷனையிழந்தவள். நான் கன்னி மூவரும் ஏன் இப்படியே இருந்துவிடலாகாது? என்னைவளர்த்த உங்களை விட்டு அன்னியிடம் எப்படி போயிருப்பது! என்னை நாட்டுப்புரத்தான் என்று ஏளனம் செய்தாலும் அக்கரையில்லை. உங்களையும் நான்பிறந்த இடமாகிய தமிழ்வாழும் மதுரை நகரையும்விட்டுப் பிரிவதினும் மரணம் எனக்கு வேறில்லை.

ஜான.—வெகு அழகு! நீ இப்படிச்சொன்னால் நான்தான் உனக்கு உலகப்பற்றில்லாமற் செய்துவிட்டேனென்று எண்ணுவாரண்ணு.

தமா.—சாவித்திரீ நீ பேசுவது குழந்தைத் தனமாயிருக்கிறது. உன்னைவு உனக்கு வந்தபிறகே கலியாணம் செய்யவேண்டுமென்றிருந்தேன், வயது பதினேழுநிறைந்தும் உனக்கு உலகானுபவம் தெரியவில்லையே. நீ படித்தென்ன பயன்? நீபடித்த கதைகளின் தலைவிகள் உன்னைப்போல்தான் இருதயமற்றிருந்தார்களோ! நீ இன்னும் குழந்தையாயிருக்க உன்னைப்பார்த்தவர்கள் நீ யறியாதது உலகில் இல்லையென்று நினைக்கிறார்கள். உன்மனதே உனக்குத் தெரியவில்லையே!

சாவி.—நீங்களிருக்குமட்டும் நான் குழந்தைதானே! அப்பா, காடகத் தலைவிகளுக்கும் கதாநாயகிகளுக்கு மென்னவேலை? தன்னையறியாத வயதி

னியத்தில் மூழ்கி தன்னைப்பெற்று வளர்த்தவர்க்குத் துரோகம் செய்வதுதான்.

தமா.—இதென்ன அர்த்தமில்லாத வார்த்தை? இந்தாகண்ணே சாவித்திரீ, குணபூஷணத்தைப் பார்த்தாலென்ன தோன்றுகிறதனக்கு, அதைச் சொல். அதிலிருந்து,

சாவி.—அவர் குணத்தையும், புத்தியையும், சக்தியையும் அறிய எனக்கு புத்திபோதாதே. நான் கேள்விப்பட்டதிலிருந்து அவருடைய நடவடிக்கை, அழகு, குணம், நிலைமை இவைகள் தனக்கீடில்லாதது என்றே தோன்றுகிறது.

தமா.—ஆட்சேபனையென்ன? அவனைப்போன்ற குணக்யன் லட்சத்திலொருவன் கிடையாது. அவனுக்குப் போ்வைத்தவன் ஞானியே! அளவிலாச் செல்வமும், அதிகாரமும், யோக்கியதையும், மகாராஜாகூட கண்ணுக்குக் கண்ணாய் பாவிக்கும் அந்தஸ்தும் உள்ளவன். தேசபலமும் மனோதிடமும் ஈவு இரக்கமும் பொருந்தியவன். இவனுக்கு ஈடு எவனும் கிடையாது. இவைகளை நினைத்தால் எனக்கே பரவசமாகின்றதே. உனக்கு அவன்மேல் ஆவலுண்டாகவில்லையா?

சாவி.—அப்பா உங்களுக்கு அதிகப் பழக்கத்தினால் அப்படித்தோன்றுகிறது. (கீழ்நோக்கி), எனக்கும் விவாகமாகி பழக்கம் ஏற்பட்டால் அப்படித்தோன்றுமோ என்னவோ? எனக்கு அவருடைய கம்பீரமான தோற்றத்தையும் கண்களையும் கண்டவுடன் சிறிதுபயமும் மரியாதையாயிருக்க வேண்டுமென்ற எண்ணமும் தோன்றுகிறது. எனக்கவரை நிமிர்ந்து பார்க்கவும் தைரியமில்லை.

தமா.—உனக்கவரை கலியாணம் செய்துகொள்ள இஷ்டமா இல்லையா? அதற்குமாத்திரம் பதில்சொல்லு முன்பு.

சாவி.—அப்பா நீங்கள் வயதிலும் புத்தியிலும் எனக்கு மேற்பட்டவராயும் என் நன்மையையே கோருபவராயுமிருக்க உங்களுக்குத் தெரியாதது எனக்கென்ன தெரியும்? உங்கள் இஷ்டப்படியே அவரே எனக்கு உகந்தவராயிருக்கலாம். கலியாணம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்கிற பட்சத்தில் இவருக்கு ஒரு குறையுமில்லைதான்.

தமா.—ஹாம் இவ்விதமும் மனோபாவமுமே உருக்கொண்ட உன்தாய் வயிற்றில் இருதயமே இல்லாமல் நீ பிறந்திருப்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது, குணபூஷணமென்னவோ உன்னைப்பற்றி பிரமாதமாயெண்ணுகிறார்.

சாவி.—அண்ணு. அதோ அதோ வருகிறார் அவர். நான் போகிறேனண்ணு.

தமா.—இரேன் சற்று அவர்வந்தால் உனக்கென்ன? (குணபூஷணம் ரில் வருகிறார்).

சாவி.—நான்மாட்டேன். அவரைக் கண்டவுடன் எனக்கு மிஞ்சிட பயமுண்டாகிறது. இதோ வந்துவிட்டாரவர். வா அத்தே (ஜானகியும் சாவித்திரியும் உள்ளே போகிறார்கள்.)

தூண.—(தன்னுள்) அதோ சாவித்திரீ தந்தையின் பக்கத்தில் நின்றுள். என்ன கம்பீரம்! என்ன பெருந்தன்மை, இவளே பெண்ணென்ற பெயருக்குரியவள். என்னிவ்வாகம் செய்துகொள்ளப் பிரயாசைப்பட்ட அனேகம் பெண்களிலுல் வசீகரிக்கப்படாத என்மனதை...எப்போப்பட்ட அபூர்வமாயினும்பார்த்து மலைக்காத என்மனதை · ஆழ்ந்த பற்றுக்குள் இழுத்து விட்டாளல்லவோ! அவள்முகத்தில் கண்யம் தவிர வேறொன்றும் காணப்படவில்லை...இவள் சுபாவம் இன்னதென்று அறியக்கூடவில்லையே. அவள் சுபாவம் எப்படியிருந்தாலென்ன, என்மனதை ஸ்தம்பிக்கச்செய்யும் சக்தி அவளுக்கு வாய்ந்திருக்கிறது. (சட்டைப்பையிலிருந்து வளையலடங்கிய பெட்டியை எடுத்து) இந்தவளையலை அவளிடம் எப்படி சேர்க்கிறது. அவள் என்ன நினைப்பாளோ? அவள்தந்தை மூலமாய்த்தான் கொடுக்கவேண்டும். சாவித்திரீ உன்னை என் பத்தினியா யடைவேணையின் என்னிலும் பாக்கியவான் இவ்வுலகிலில்லை .. (நெருங்குகிறார்).

தூமா.—வரவேண்டும். வாருங்கள் (இருவரும் ஸோபாவில் உட்காருகிறார்கள்.)

தூண.—ஆமாம் நான் சொன்னவிஷயம் கேட்டீர்களோ?

தூமா.—ஆஹா. ஜோஸ்யர் இப்போதுதான் ஜாதகம் பார்த்துவிட்டு இந்த மாதத்திலேயே கடக்கும் கலியாணம், ஜாதகமும் பொருந்தியிருக்கிறது என்று சொன்னர்.

தூண.—அதைக் கேட்கவில்லையே நான்—சாவித்திரி என்னசொன்னுள்?

தூமா.—அவளுக்கென்ன தெரியும் ஸார். வயது பதினேழாயினும், உலகமேயறியாத குழந்தையாயிருக்கிறுள். அவள் வெளிப்படை யாவும் படிப்பின் பயனேயல்லாது வேறு அல்ல.

தூண.—எனக்கப்படி தோன்றவில்லை—சரி முதலில் இதைப் பாருங்கள். (வைரகடகத்தை அவரிடம்கொடுக்க அவர் பார்க்கிறார்) சாவித்திரிக்கு நன்றாய் இசைந்திருக்கும்—இல்லையா?

தூமா.—அடடா! எதற்கு இவ்வளவு பணத்தை ஆபரணத்தில் போட வேண்டும்? குழந்தைகூட அப்படியே நினைப்பாள். ஆனாலும் உங்கள் ஆலத் தடுக்கலாகாது.சாவித்திரீ(சாவித்திரீ வந்து தகப்பையினருகே நிற்கிறுள்.)

தூமா.—(இருவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு) அம்மா பார். உன் மேல் உள்ள அன்புக்கு அறிகுறியாக கலியாணத்துக்கு முன்பாகவே இவர் வாங்கி வருத்திக்கிறார்.

OFFICE OF THE REGISTRAR MADRAS

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

SOUTH AFRICAN INDIAN LABOURERS WAIL

தென் ஆப்பிரிக்கா

இந்தியக்கூலிகளின் புலம்பல்.

பாபம் செய்யாதிருமனமே—மெட்டு.

பல்லவி.

நாயைக்கடிக்கச் செய்தானே—ஒரு
காய்ப்பயலான ஐ—ரோப்பியன் தானே.

அநுபல்லவி.

காயம் பெருங்காயம் ஐயோ—என்
கையைப்பார் முதுகைப்பார் கண்ணைதிர் பொய்யோ.

சரணம்.

கூட்டுப்பிரிவிலே தொண்டு — செய்யுங்
கூலிகட் காயிரஞ் சோலிக ளுண்டு
மாட்டுக்குத் தினியேகொண்டு — நான்
வரவில்லை என்கிற ஒரு குற்றங்கண்டு
ஆல்க்கென்ற மூர்க்கன் சொல்வாதம் — தள்ளி
அவனுக்கே ஒண்ணரைப் பவுனபராதம்
மேல்கொண்டு விதித்தது நீதம் — என்
வேதனைக்குமாரே நில் லாது ப்ரமாதம்
மறந்தது மென்மேலே தப்பு — மேலு
மன்னிக்கக்கேட்டேனே மனமதிலொப்பு
திறந்தானே மானுடஞ் செப்பு — மிது
தெரியாத கழுதைக்கேன் செங்கோற் சிறப்பு —
புண்ணுறி விடுகோலைப் பொழுது — கடம்
பூமி புகழ்முத்து ஸாமியைத்தொழுது
பண்ணுக நான் சொல்லும் பழுதுக் — கவி
பாரம் பரச்சேரி பபளிக்கி லெழுது

விஷ்ணு ஸ்துதி

இராகம் தோடி. தாளம் ரூபகம்.

பல்லவி.

என்முறை கேளாயோ—இன்ன

1. மேனிப் பராமுகந்–தானப்பனே வந்திங்
2. நா–னிடர்க்கடலிற் சுழல்கின்றேன்
நடுக்கமிகுத் துழல்கின்றேன் (என்)
3. பத்தர்–இச்சைப் படிக்கெல்லாம்
ரட்சிக்குங் கர்த்தா நீ (என்)

அநுபல்லவி.

பொன் மடமங்கை பொருந்தும் விநோதா
பொய் கலந்தார்க்கெட்டா வைகுந்த நாதா
தன்மய ஸ்வாமித்த சத்யப் பிரபோதா
தருணஞ்சுக மருவும்படி
விரதம் பெறு சிரமங்களி (லென்)

சரணங்கள்.

ஆதாரமுந்தேடி லேன் — ஓ
ரன்னை யிடந்தற் கட்டி
மன்னு குரங்குக் குட்டி (ஆ)

மாதாவாய்க்கவ்வ வரும் பூனைக்குட்டி
மார்க்கம் போலென்னை வளர்ப்பதே கெட்டி
நாதாகு நின்கடன் என்ன இனியட்டி
இருளறு சோதி விலாசா
திருமலை ராய புரேசா (என்)

தாசானு தாசனன் ரே — என்
சஞ்சலமு மொன்றே
மிஞ்சும்வர்ம னன்றே (தா)

தேசார்வருணச் செங்—தாமரை நேத்ரா
தேமி குமாமுத்து ஸாமிசொற் பாத்ரா
பாசாட விக்குட் படார்புரிஸ் தோத்ரா
பங்கம்படர் வெங்கண்டகர்
சக்கரத்தனில் மங்குங்குறை (என்

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Miss Tara & Ourselves.

மிஸ தாராவும் நாமும் :—மிஸ் தாராவைப் பற்றி சென்ற மாஸ பத்திரிகையில் எழுதியிருந்தோம். நமது ஸகோதரி மிகவும் அடக்கமும் சாந்தமும் வாஞ்சையும் பொருந்தப் பெற்றவளால் ஸகோதரிகளின் நட்பையும் விசுவாசத்தையும் கவர்ந்து கொண்டிருக்கிறாள். இவள் செய்து காட்டிய பராக்கிரம மான தேகாப்யாசங்கள் ஸகோதரிகளுக்கு சிறந்த படிப்பினையே போதித்தது. நம் தேசத்தில் மனோப்பயிற்சி ஓங்கியும் தேகப்பயிற்சி குன்றியும் வருவதால் தேசக்ஷயம் ஓங்கிவரும் பொழுது ஸகோதரி தாராபாய் நன்மை யெல்லாம் தூக்கத்தினின்றும் தட்டி யெழுப்பி " துயில்விழி. எழுந்திரு. இல்லையேல் எக்காலத்தும் இக்கதியிலேயே கிட " என்று தீர்க்கதரிசி போல் உபதேசம் செய்கிறாள். தேகமும் மனமும் சமமாக பயிற்சி அடையாவிட்டால் தேசக்ஷயம் சமீபமாய் விடும் என்கிறதை வற்புறுத்திக் காட்டுகிறாள். ஸகோதரிகள் தேகப்பயிற்சியில் இனியாவது கவனம் செலுத்தி, இதத்கு சாதகமாக அத்லெடிக் கிளப்புகளை ஏற்படுத்திக் கொள்வார்களாக. நமது ஸகோதரியின் தாராள தர்ம சிந்தை நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களனை வரையும் மிகவும் கடமையுள்ளவர்களாக்கி விட்டது. அவர் இந்த மாதம் 18-ந்தேதி யன்று ஒரு ஆட்டம் வைத்து அதன் வசூலை ஸ்த்ரீ வித்யா விஷயத்துக்காக நமக்குக் கொடுத்ததற்காக ந[redacted] மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறோம். நமது [redacted] தரிக்கு லேடிஸ் ரிக்ரியே ஷன் கிளப்பில் ஒரு மெடல் பரிச[redacted] பெற்றது. நாமும் நம் ஸமாஜ ஸகோதரிகளும் சேர்ந்து ஸ[redacted] தாரபாயிடம் நமக்குள்ள வாஞ்சையை வெளிப்படுத்த நம் [redacted] கியன்ற ஒரு பொன் மெடலைச் செய்தோம். நமது பத்திரிகை சமாஜம் இவ்விரண்டின் போஷகராய் விளங்கும் ஸ்ரீமதி ப. விசாலாக்ஷி அம்மாள் (கல்கத்தா ரயில்வே அக்கவுண்ட்ஸ், சீப் எக்ஸமி[redacted]வ் பஹதூர் ம-ா-ா-ஸ்ரீ கே. பலராமஐயர், அவர்களின் பா[redacted]கி ரங்கமாய் ஸபையில் தாரா பாயைப்பற்றிப் புகழ்ந்து பே[redacted]லை அளித்தார்கள். மேலும் நாம் ஸகோதரியை ஸமாஜத்து[redacted]ரவ ழைத்து விருந்து செய்து உபசரித்தோம். ஸகோதரி த[redacted]சோ

161419

தரிகளிடமெல்லாம் மிகவும் பக்ஷமாய்ப் பேசி உறவாடி உண்டு கவித்தது ஸகோதரிகள் தாராபாயை என்றும் மன[redacted]ளும்படி செய்து விட்டது. நமக்குள் பாஷை [redacted] இடையூறாயிருந்தபோதிலும் அந்தரங்க வாஞ்சை இவ்விடையூரை திரணமாக்கி விட்டது.

The Nobel Prize.

நோபல் ப்ரைஸ் :—ஸ்வீடன் தேசத்து ப்ரபு ஒருவர் தம் சொத்தின் ஒரு பகுதியை கவர்ண்மெண்டார் வசம் ஒப்புவித்து அதை விநியோகப் படுத்த வேண்டியதற்கு உயில் எழுதி இறந்து போய் விட்டார். இந்த வருஷம் அந்த உயில்படி அவர் பேர் வைத்துள்ள வெகுமதியானது உலகத்தில் முதன்மையான கவிவாணரைச் சேரவேண்டியது. இந்த வெகுமதியின் மதிப்பு 2-லக்ஷம் ரூ. வங்காளியாகிய ரபீந்த்ரநாத்டகூர் கவீஸ் வரருக்கு இந்த வெகுமதி கிடைத்தது. இது இந்தியர்களுக் கெல்லாம் பெருமை யுண்டாக்கியிருக்கிறது. இவர் காலேஜில் சேர்ந்து ஆங்கிலம் படிக்காதவர். இவருக்கு அனேக வருஷங்களாக வங்காளத்தில் சுயபாஷா கவீஸ்வரச் ரேஷ்ட ரென்ற மதிப்புண்டு. இவர் சமீபத்தில் இங்க்லண்ட் சென்றிருந்த காலத்தில் தாம் வங்காள பாஷையிலியற்றியிருந்த சில கவிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவைகளில் பொதிந்து கிடக்கும் அருமையான கருத்துகளை இங்க்லீஷ் கவிகள் பாராட்டி ஊக்க மூட்டினார்கள். அதன் பயனாக கவித்தொகுதி ஒன்று 'கீதாஞ்சலி' என்ற நாமத்துடன் பிரசரமாயிற்று. இது உலகமெல்லாம் ப்ராபல்யமாயிருக்கிறது. இதைப்பார்வையிட்டே ஸ்வீடன் தேசத்தார் இவரை முதன்மையான வராய்த் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். இது விஷயம் நாமெல்லோரும் சந்தோஷப்படக் கூடியதும் பெருமை பாராட்டிக்கொள்ளக் கூடியதுமாம். இந்த வெகுமதியை கவீஸ் வரருக்குப் பதிலாக ஸ்வீடன் இங்க்லீஷ் ரெஸிடெண்ட் பெற்று கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டார். இதை வங்காள கவர்னர் லார்ட் கார்மிக்கேல் ஒரு தோட்டக்கச்சேரி நடத்தி டகூருக்குக் கொடுத்தார். குடத்திலிட்ட விளக்காக எத்தனை பாரத புத்திரர்கள் மறைந்து இருக்கிறார்களோ? இங்க்லண்ட், அமெரிக்கா முதலிய மேனாடு களுக்குப் போகாமலிருந்தாலாவது, ஆங்கிலத்தில் கவி செய்யாமலிருந்தாலாவது டகூருக்கு இந்த நன்குமதிப்பு கிடைக்குமா?

Prof Karve's widow's Home.

ப்ரோபசர் கார்வி ஸ்தாபித்த விதவாச்ரமம் :—பண்டிதர் கார்வி பூனு பர்கூசன் காலேஜிலிருக்கும் பொழுது 1893 ஆம் வருஷத்தில் அவரின் பார்யை இறந்து போனுள். அந்த சமயம் அவர் ஒருவிதவையை மற்றவர்களுக்கு ஒரு வழி காட்டியாயிருக்கும்படி மறுவிவாகம்செய்து கொண்டார். 1907 ஆம் வருஷத்தில் மஹிளா வித்யாலயத்தை ஸ்தாபித்தார். 1910 ஆம் வருஷத்தில் ஸ்த்ரீகள் வித்தை ஆசார சீர்திருத்த முற்போக்குக்கு ஊழியம் செய்ய ஊக்கமும் பிரிய முள்ளவர்களைச் சேர்த்து ஸ்த்ரீ அபிவருத்தி மிஷனை வேலை செய்து வருகிறார். இந்தியாவிற்குள் விதவாச்ரமத்தை முதல் முதல் ஸ்தாபித்தவர் இவரே. இரண்டாவதாக பங்களூரில் ஏற்பட்டது. சென்னையில் சென்ற வருஷம் தான் ஏற்பட்டது. இதுவும் பிராமண விதவைகளுக்காக மட்டும் ஏற்பட்டிருப்பதால் உதவியை எதிர்பார்க்கும் இதர வகுப்பு அனுதை விதவைகள் இன்னும் ஏங்கியே தவிக்கிறார்கள். இது நிவர்த்தியாகும் காலம் ப்ரொபசர் கார்விபோன்ற ஸ்வயநலம் கருதாக உத்தமர் ஒருவர் நம் ராஜதானியில் தோன்றும் பொழுது தான். இருந்தாலும் இந்த சமயத்தில் விதவாச்ரமத்தின் நோக்கங்களை வெளியிடுவது ஆச்ரம ஸ்தாபனத்தில் ஊக்கமுள்ளவர்களுக்கும் அனாதரக்ஷக கருணைசிந்தையுடையவர்களுக்கும் ப்ரயோஜனமாயிருக்கும்.

(1) ஜனசமூக க்ஷேமத்தைக் கோறி ஊழியம் செய்ய இஷ்டமுள்ள ஸ்த்ரீகளை ஒன்று கூட்டுதல்.

(2) வித்யாலயத்தின் நோக்கங்கள் சம்பூர்ணமாக புருஷர்களை தற்காலம் சேர்த்துக்கொள்ளுதல். போதுமான ஸ்த்ரீகளை ஊழியத்துக்குக் கிடைப்பார்களானால் இப்பொழுது உழைக்கும் புருஷர்கள் இஷ்டப்பட்டால் சாகும் பரியந்தம் ஊழியம் செய்யலாம். இல்லாவிட்டால் தங்கள் காரியத்தை ஸ்த்ரீகளுக்கே ஒப்புவித்து விடலாம்.

(3) பாடசாலை களும், போர்டிங் ஸ்கூல்களும் ஸ்தாபித்து நடத்துதல்.

மேற்கொண்ட நோக்கங்களுள்ள ஸ்தானபனங்களுக்கு சக்திக்கியன்றபடி திரவியமாயோ, ஊழியர்கள் மூலமாயோ உதவி செய்தல்.

ப்ரொபஸர் கார்வி இரண்டு மர்மாங்க காலமாக இந்திய ஸ்த்ரீகளின் நிலையில் கவலைகொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்கு தம் ஆயுளின் முக்யபாகத்தை செலவழித்து வருவது ஸ்த்ரீகளுக்கே அவரை உண்மை ஸகோதரனைச் செய்து விட்டது. அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வாழ்க என்று நாம் ப்ரார்த்திப் போமாக.

Snehalata's Suicide.

ஸ்னேஹலதா தேவியின் தற்கோலை :—வங்காளத்தில் சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை நினைத்தால் மிகவும் துக்கத்தை விளைவிக்கிறது. ப்ராமண வருப்பைச் சேர்ந்த ஒருவன் தன் பெண்ணுக்கு வரன் தேட பெரு முயற்சிகள் செய்து கடைசியாக ஒருவனைத் திட்டம் செய்தான். வரனின் தகப்பனார் ஆண் குதிரைக்கு விலை சொல்வது போல விலை கூறினன். வரனின் விலையைக்கண்டு பயந்து பெண்ணின் தகப்பனார் மனம் சலித்துக்கொண்டு வீடு சேர்ந்து ஆழ்ந்த யோசனையிலமர்ந்து தனது மனைவியிடம் தெரிவித்தான். தாங்கள் குடியிருக்கும் வீட்டை அடகு வைத்து வரதக்ஷணையைக் கொடுத்து தன் பெண் ஸ்னேஹலதா தேவிக்கு விவாகம் செய்வதாக இருவரும் தீர்மானித்தார்கள். ஸ்ரீமதி ஸ்னேஹலதா தேவி தன் தகப்பன் தனக்காகப்படும் கஷ்டங்களையும் மனோவியாகூலங்களையும் பார்த்து ஒரு அறையில் தனது புடவையில் நெருப்பை வைத்துக்கொண்டு உயிர் துறந்தாள். இப்பெண் சாகுமுன் ஒரு நீண்ட கடிதம் தன் தகப்பனுருக்கு எழுதி வைத்து விட்டு இறந்தாள். அக்கடிதத்தை வேறு இடத்தில் ப்ரசுரித்திருக்கிறோம். நாம் இதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. படிக்கிறவர்கள் கடிதத்தை ஆழ்ந்து படித்து சற்று யோசிக்கவேண்டும். வரதக்ஷணையினல் அநேக பெற்றோர்கள் விடு வாசல்களை யிழந்து தரித்திரர்களாகி பரிதவிக்கிறார்கள். இக்கொடிய வழக்கம் அடியோடு அற்றுப்போகாமலிருக்கிற வரையில் ஜனசமூகம் முன்னேக்கிச் செல்வது தடையாகும். சாஸ்த்ர விற் பன்னர்களும் செல்வாக்குள்ள ப்ரபுக்களும் உபாத்தியார்களும் இதைக் கண்டித்துப் பேச வேண்டும். முக்யமாக நமது சகோதரிகள் ஸ்த்ரீ சங்கங்களில் கூட்டங் கூடி இவ்வழக்கத்தை நீடிக்க விடாமல் தடுக்க முயற்சிகள் செய்ய வேண்டும்.



சில நாட்களுக்கு முன் ஒரு நக்க கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் தம க்கு மூத்த ஸம்ஸாரமிருக்க 10-வயதுள்ள ஒரு சிறு பெண்ணைக்கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்தார். காலிகட்டும்பொழுது அவ்வூர் பொது ஜனங்க ளின் நன் முயற்சியால் போலீஸார் உதவியுடன் கல்யாணம் தடுக்கப்பட்டது. அந்தக் கல்யாணக்காட்சியை இங்குகாண்பித்திருக்கிறோம். ப-ர்.

HINDU WOMEN IDEALS.

By

Mr. T. Rajagopalachari.

இந்து ஸ்த்ரீயின் இலக்ஷணம்.

"நாற் குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா, ஆர்க்கும் சிலம் பேயணி முரசா, வேற்படையும் வாளுமே கண்ணு, வதன மதிகுடைக் கீழானுமே பெண்மையரசு" நளவெண்பா.

இந்து ஸ்த்ரீயின் இலக்ஷணத்தையும், அவளிருக்கவேண்டிய மாதிரியையும் பற்றி பேசுவோமானால் நடை யுடைபாவனைகளைப் பற்றி மாத்திரம் பேசிப்பயனில்லை. நடை யுடைபாவனை முத லிய எல்லா வற்றிற்குஞ் சிறந்ததான குணமொன்றைப்பற்றி மாத் திரம் கவனித்தால் போது மென்று தோன்றுகிறது.

இந்து ஸ்த்ரீ முதல் முதல் சிறந்த பக்தியுடையவளாக விரு க்க வேண்டும். எப்பொழுதும் அதிருப்தியில்லாமல் என்ன கஷ் டம் வந்த காலத்தும் திருப்தியுடைய வளாகவே யிருக்கவே ண்டும்.

OFFICE OF THE LIBRARIAN OF BOOKS
1914
MADRAS.

"சாதல் வந்ததேத்த காலுத்
தனக்கொரு சாதலின்றிப்
பூதலமிருக்குங் காலும்
புகழுடம் பிருக்கும்"

பிள்ளையார் புராணம்.

இறந்தும் இறவாதவளாக விருக்கும் நம் ஸீதா தேவியைப் பற்றி கேட்டதில்லையா? அவள் என்ன கஷ்டத்துக்காவது பயப் பட்டாளா. இராணியாய் நாட்டில் அரண்மனையில் பஞ்சணை மெத் தையின் மீது சொகுசாகத் தூங்கினேமே. காட்டில் போல் கட்டிலெங்கே, மெத்தை யெங்கே, கல்லிலும், முள்ளிலும், மேடும் பள்ளமுமாக விருக்குந் தரையிலு மெப்படிப்படுத்துறங்குகிறது என்று யோசித்தாளோ? தன் நாயகனிருக்கு மிடந்தான் தனக்கு சகலமும் மென்றுதானே ஸ்ரீராமனுடன் கூட எவ்வளவோ தடுத்த போதிலும் நில்லாமல் புறப்பட்டு கானகம் போய்ச் சேர்ந்தாள். எதனல் அவ்விதம் போனுள். உண்மைக் காதலாலும், அவர் மீது தோன்றிய அன்பினுலும், பக்தியினுலும் மல்லவோ? சாவித் திரியைப் பற்றி படித்ததில்லையா. அவன் தன்னுயகன் மீதுண்டான அழியாவன்பினுலும், தன்னுடைய கற்பின் மேன்மையினுலும் இயமனையும் பின் தொடர்ந்து அவனையுஞ் ஜெயித்தாள். அவள் உலகத்தையும், பணத்தையுமே பெரிதென் றெண்ணுமல் மைத்

மேயிையைப்போல் ஞானத்தைப் பெரிதாகக் கொண்டுஅதை யடை யும் மார்க்கத்தைத் தேடவேண்டும்.

அவள் நற்குண, நற் செய்கைகளே விட்டு அரைக்கணமே னும் பிரிதல் கூடாது. இவைகளோடு கூட சுவதேசாபி மானமும் பிறந்து வளர்க்கியடையவேண்டும். தைரிய சாலியாயும், பொ ருமை யுடையவளாயும், தரும சிந்தையுடைய வளாய மிருத்தல் வசியம். இசேல் டார்வின், கைட்டிங் கேலம்மையார், ராணி பவாணி யிவர்களுடைய சரித்திரத்தைப் படித்தால் இவர்கள் ஸ்த்ரீகளா யிருந்தும் என்ன விதமான மெச்சத்தக்க நற்குணங்களை வகித் தார்களென்பது தெரிவரும். இந்து ஸ்த்ரீக்குக் கல்விய வசியமா வது. சாதாரண கல்வியோடு மதவிஷயமாகவும் தேர்ச்சியடைய வேண்டும். கல்வி யென்றால் புஸ்தகத்திலிருந்து கற்குங் கல்வி மாத்திர மல்ல, ஜனிவர்விடி பட்டம் பெற வேண்டு மென்ற அவசி யமு மில்லை.

இந்து ஸ்திரீகளுக்கு வீடும் ஸம்ஸாரமுமே ப்ரதானமாகை யால் அதற்குத் தக்கபடி கல்வி கற்பிக்கப்படவேண்டும். சிலர் பெண்களுக்கு விவாக மான பிறகு படிக்கக் கூடா தென்று பித் தம் பிடித்தவர்கள் போல் பினத்து கிறார்களே. அஃதப்படி யல்ல. பிறகு தான் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷ யங்கள் அநந்தமாக விருக்கின்றன. ஓர் இந்து ஸம்ஸாரத்தைப் பரிபாலிக்கிற தென்றால் சுலபமான விஷயமல்ல. ஓர் ஸம்ஸாரத் தில் எல்லாரும் ஒரே மனதுடைய வராக விருப்பார்களென்று நம்ப லாகாது. நாட்டுப் பெண்ணாக வருபவள் அவரவர்களுக்குத் தக்க படி நடந்து கொள்ளவேண்டும். அல்லாமல் எப்பொழுதும் வீண் சண்டை தொடுத்துக் கொண்டிருத்தல் கூடாது. கல்வியில்லாத தனால் தான் இக்காலத்தில் அனேக விடங்களில் எப்பொழுதும் சச்சரவு ஓயாமலிருந்துகொண்டு வருகிறது. இதற்குத் தக்க ஔஷதம் கல்வியே.

மனுஷ்யாணவள் புருஷனுக்கு எக்காலத்தும் ஹிதமாகவும், புருஷன் நாலெல்லாம் உழைத்துவிட்டு சாயங்காலம் வீடு வந்து சேர்ந்தால் உடனே தனக்குப் புடவை நல்லதாக வில்லை, ரவிக்கை நல்லதாக வில்லை, என்று ஆயாஸப் படுத்தாமல் அவன் வாங்கிக் கொடுப்பதைத் திருப்தியாக வணிர்ந்துகொண்டு அவனுக்கு வேண் டிய பணிவிடைகளையும் செய்து, நன்மொழி யுரைக்கவேண்

டும். புருஷனுக்குத் தக்க சினேகிதி பெண்சாதியே யாகை யால் வேண்டும் போது அவனுக்கு கல்ல யுக்திகளையும் சொல்ல வேண்டும். "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என் பது போல் அவன் வாயால் சொல்லுவதற்கு முன்னால் சாடை யாலேயே தெரிந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யவேண்டும். தன்னுடையவும், பந்துக்களுடையவும் தேக சௌக்கியத்துக்குத் தக்கவாறு வேண்டியதை மனங்கோணா மல் செய்ய வேண்டும். ஆகையால் முதல் முதல் சிறு பெண் ணாக விருக்கும் பொழுது தான் செய்யவேண்டிய காரியங்கள் வேறு. பிறகு வீட்டுக்கு அதிகாரியாகவும் பெண்சாதி யாகவும் வந்த பிறகு செய்யவேண்டிய காரியம் வேறுகிறது. அதன் பிறகு குழந்தைகளைப் பெற்று அவைகளுக்குத் தாயாராக வேண்டி முள். இக்காலத்திலோ பெண்கள் 13, 14, வயதுக்கெல்லாம் தாயாராக விருக்கின்றதைக் காண்கிறோமே. 13, 14 வயதில் அவ ர்களே குழந்தைகளல்லவோ? அப்படி யிருக்கும் அவர்கள் ஒரு குழந்தைக்குத் தாயா சென்றால் அவர்களுக் கென்ன தெரியும்? புத்தியோ விருத்தியாக வில்லை. வயதிலுமில்லை. இவர்களுடைய தேகசௌக்கியக்கியமும் குறைகிறது. குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பாரம் தலையில் விழுகிறது. கடைசியாக யாதொரு சுகத்தையும் கண்டறியாமல் வருத்தப்படுகிறாள். ஆகையா லிப் பேற்பட்ட வழக்கத்தைக்கண்டிப்பது அவசியமாக விருக்கிறது. பெண்களுக்குக் கல்யாணமான பிறகே கல்ல போதிக்கக்கூடிய இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற புத்தகங்களைப் படிக்கும்படி செய்யவேண்டும். அவர்கள் உலகவியற்கையின்ன தென்று அறியக்கூடிய காலமுமதுவே. இதை யறிந்தால் தான் மேலே பிற் காலத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டுமோ அப் படி நடந்து கொள்ளக்கூடும்.

இதெல்லாம் போக இந்து ஸ்த்ரீக்கு அதிதி பூஜை முக்கிய மானது. யாராவது அதிதியாக வந்தால் அவர்களை விசாரிக்காம விருத்தல் கூடாது. அவர்களை விசாரித்து வேண்டிய சிச்ரூஷை யைச் செய்யவேண்டும். யாராவது ஓரதிதி ஓர் வீட்டுக்கு வந்து பினையோ அல்லது அவர்கள் கொடுக்கக்கூடிய மேலெதுவோ அதை யடையாமல் மனுவியா கூலத்தோடு போவானேயாகில் அவன் அவ்வீட்டிலுள்ளோர் களுடைய புண்ணியங்களைப் பெற்

றுக்கொண்டு தான் பாவத்தை அவ்விடத்திலேயே மாற்றிக்கொண்டு செல்லுறு னென்பது சாஸ்திரம். அதிதியானவன் யாராயிருந்தாலுஞ் சரி, விரோதியாயிருந்தாலும் ஓர் மரமானது தன்னை வெட்டுபவனுக்கும் தான் நிழலைக் கொடுப்பது போல் வித்தியாசம் நினையாமல் தன்னாலாகிய உதவியைச் செய்தல் வேண்டும்.

ஓர் இந்து ஸ்த்ரீ சுதேசா பிமான முள்ள சத் புத்ரர்களைப் பெரும் பொருட்டு தானே சிறந்த சுதேசா பிமானியாக விருக்க வேண்டும்.

இந்துஸ்த்ரீ தான் புருஷர்களைப்போல வெளியே வந்து பப்ளிக் பிரஸங்கங்கள் செய்து அந்த விதமாக தேசாபி மானத்தைக் காண்பியாவிட்டாலும் வீட்டிலேயே யிருந்துகொண்டு வாயால் சொல்லாமல் நடவடிக்கையால் நடந்து காட்டுவது விசேஷமாகையால் அப்படிச் செய்வதே உசிதம்.

இந்து ஸ்த்ரீ பெருந் தன்மையுடையவளாயும், வீண்செலவு செய்யாதவளாயும், தான் சேகரித்து வைக்கும் தனத்தில் சிறிது பாகம் ஏழை ஜனங்களுக்கென்று உபயோகப்படுத்த வேண்டும்.

இன்னு மிந்து ஸ்த்ரீகளுக்கு 'ஸமத்துவம்' உண்டென்றும், பூர்வகாலம் முதல் கல்வியில் அவர்கள் சிறந்தவர்களாக விருந்தார்களென்றும், புருஷர்களுடன் வாதஞ் செய்தார்களென்றும், சில சமயங்களில் மந்திரிஸ்தராகவும் ஏற்படுத்தப் பட்டார்களென்றும் அனேக காரணங்களால் தெரிகிறதாகையால் அந்த விஷயங்களில் புத்திசாலித்தனத்தை வருத்தி செய்வார்களென்று பெரிதும் நம்புகிறேம்.

டி. ராஜகோபாலாசாரி.

FRIENDSHIP.

By

Sri. Sundarammal.

ஸ்நேஹம்.

ஸ்நேஹமென்பது மனிதர்களுக்குள்ள அன்பினால் உண்டாகக் கூடியது. எல்லாரிடத்திலும் அன்பாயிருக்க வேண்டியது அவசியமானாலும், எல்லாரிடத்திலும் ஸ்நேஹமாயிருக்க முடியாது. முதலில் ஸ்நேஹம்செய்யப்போகு முன் அவர்கள் தனக்கு ஸரியான வர்களா, மேன்மையான குணமுள்ளவர்களா, நல்ல ஒழுக்கங்கள்

உள்ளவர்களா, என்று அறிந்துகொள்ளவேண்டும். கல்வி அறிவுள்ளவர்களாயிருந்தால் நல்லது. அதனால் கல்வி யறிவில்லாதவர்களுடன் பழகக்கூடாதென்பது அர்த்தமல்ல. ஸ்நேஹவிஷயத்தில் பணத்தைப்பற்றி கவனிக்கக்கூடாது. பணத்திற்கும் ஸ்நேஹத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. பணமுள்ளவர்களைத்தான் ஸ்நேஹம் செய்து கொள்ளவேண்டும், அதில் நமக்கு உபகாரமுண்டு, ஏழைகளால் நமக்கென்னப்ரயோஜன மென்றெண்ணுமல், இரண்டிலும் ஸமத்துவமாயிருக்கவேண்டும். யாவற்றிற்கும் மனம் தான் காரணம். ஒருவரால் ஒரு முக்கிய காரியமாகவேண்டியிருந்து அவர்களை ஸ்நேஹம் செய்து கொண்டு காரியமான பிறகு அவர்களை மறந்து விடுவது அழகல்ல; நாமுள்ளவரை நமக்குச் செய்த நன்றியை மறவாமலிருப்பதுதான் ஸ்நேஹம் செய்ததின் பலன். அப்படி எப்பவும் மறவாமலிருக்கமுடியாத பக்ஷத்தில், அல்பகாரியங்களை உத்தேசித்து எல்லாரிடமும் ஸ்நேஹம் பாராட்டப்போகவும் கூடாது. ஒரு அபூர்வவஸ்து ஒருவரிடமிருந்து, கிடைக்கிறதற்காக அவர்களை ஸ்நேஹம் செய்து, அதுகிடைத்த பிறகு, பிரதி உபகாரம் செய்யாமற் போனாலும், அவர்கள் என்ன செய்தார்களென்று சொல்லாமல் மறக்காமலிருப்பது வேண்டும். அல்லது முதலிலேயே ஒருவரன்னியில் தானே தேடிக்கொள்ளவேண்டும். காரியமான பிறகு அலக்ஷியமாய்ப்பேசினால் செய்தவர்களுக்கு அல்ப ஸ்நேஹமாய் முடிந்ததே என்று மனம் அதிருப்தி அடையும். கூடியவரையில் ஒருவரையும் விரோதித்துக்கொள்ளாமல் நடக்கவேண்டுமே தவிர, எல்லாருடனும் ஸ்நேஹமாயிருக்க வேண்டுமென்பது கருத்தல்ல. அம்மாதிரிசெய்வது சாத்தியமான காரியமுமல்ல. ஒரு ஸ்நேஹமிருந்தாலும் மனப்பூர்வமாய் ஒருவரையொருவர் நம்பி ஒத்து நடக்கவேண்டும். ஸ்நேஹமாயிருப்பதில் எவ்வளவோ நன்மை யுண்டு. ஒருவரால் முடியாததை இருவர் சேர்ந்து நடத்தலாம். இருவரும் நல்ல புத்திசாலிகளாயிருந்தால் மேன்மேலும் புத்தி வருத்தியாகும். அதிக ஸ்நேஹம் செய்ததின் அடையாளம் உடல்வேறுயிருந்தாலும் உயிரொன்று போல் ஒத்திருக்கவேண்டும். ஸ்நேஹம் ஆரம்பிக்கும்பொழுது இரண்டுபேரும் ஒரேவிதமான நிலைமையிலிருந்து, பிறகு ஒருவருக்கு ஐச்வரியம்பெருகினாலோ, அல்லது எளிமைத்தனம் வந்தாலோ, இனிநமக்குத்தகுதியில்லையென்று எண்ணி மற்றொருவர் விட்டிவிடாமல், அவர்களுக்கு ஸந்தோஷம் வந்த காலத்தில், பொறுமை கொள்ளாமலும் வருத்தம் வந்தகாலத்தில்

அலக்ஷ்யம் செய்யாமலுமிருப்பவர்கள் தான் உண்மை ஸ்நேஹிதர்கள். தனக்கு வந்தாலும் தன் ஸ்நேகருக்கு வந்தாலும் எவ்விஷயத்திலும் ஒன்றுபோலிருப்பது தான் ஸ்நேகத்தின் அடையாளம். பணமுள்ளவர்கள் தான் பணத்தாலுபகாரஞ்செய்வார்கள். இல்லாதவர்கள் என்ன செய்வார்களென்றாலோ, சரீரத்தாலும், வார்த்தையாலும், இன்னும் எவ்வளவோ விதமாக உபகாரம் செய்யலாம். சில ஸமயங்களில் அன்போடு கூடிய ஒருவார்த்தையே லக்ஷம் பவுனுக்கு மேலான தாயிருக்கும். இவ்வளவும் சேர்ந்து ஸ்நேஹிதர்கள் ஒத்திருந்தால் பார்க்கிறவர்களுக்கு இவர்களுக்கு இவ்வளவு ஒற்றுமையா? என்கிற அவிகை உண்டாகலாம், அதனால் இரண்டு பக்ஷங்களில் உண்மையான நெருப்பல்லாமல் கலக நெருப்பைவைப் பார்கள். அவர்களைப்போல் நாமும் ஒழுகி நடக்க வேண்டும். ஸ்த்ரீ புருஷருக்கும் ஒருவிதமான ஸ்நேஹமென்றெடுத்துக்கொள்வோம். சில குடும்பங்களில் இவர்களிப்படியிருப்பதைப் பார்த்த மாமி தன் மகனிடம் மருமகளின் மேல் குற்றம் சொல்ல ஏற்படுகிறுள். அப்படிப்பட்ட மாமியாவது ஒரு வேளை தன் மகன் மனைவியை விரோதித்தால் அவன் வரும்படி நம்மைச்சேருமென்று செய்கிறாளோ, என்னமோ, உண்மை யாய் நடக்கும் மனைவியாயிருந்து அதைப் புருஷனறிந்தானுனால் தாயின்சொல் எவ்வளவு பயன்பெறுமோ, அதுபோலவே உண்மை ஸ்நேஹிதர்களுக்கிடையில் உண்டாக்கப்படும் கலஹமும் பயனற்றுப்போகும். தன்னை நம்பினவர்களை பகவான் எப்படி கைவிடாமல் காப்பாற்றுகிறாரோ, அதுபோல ஒருவரையொருவர் நம்பி விட்டால் பிறகு கைவிட்படமாட்டார்கள். ஸ்நேஹமும் செய்வதும் ஸாமான்ய காரியமல்ல; ஸ்நேகிதர்கள் எக்காரணத்தாலும் பகைகொள் ளக்கூடாது; அப்படி நேர்ந்தாலும் பிறகு சேரவும் கூடாது.

எழும்பூர்.

சுந்தரம்மாள்.

பெண்கல்வி இரண்டாவது வால்யூம் காலிகோ பைண்டு செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

விலை ரூ. 3.

MENTAL POWER

மனோசக்தி.

சென்ற பத்திரிகையின் 82-வது பக்கம் தொடர்ச்சி.

காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யமென்று சொல்லப்பட்ட அறுவகைப் புழுக்களுக்கும் மனோசக்தியே ஆகாரமாம். இப்புழுக்கள் எம்மனத்தினிடம் எல்லாம் காணப்படுகின்றனவோ அம்மனமெல்லாம் கரையானரித்த ஸ்தம்பமே யாம். சக்தி, சக்தி என்னும் அதனிடம் கிடையாது. மனத்தின் சக்தியையெல்லாம் இப்புழுக்கள் சாப்பிட்டுவிடும். இவையாறும் மனோவலியின் தோற்றத்திற்குப் பிரதி பந்தகங்களாம். இனி மனோவலிக்கு அநுகூலமான வையை கூறுகிறேன். அதாவது ஏகாக்கிரம் எனப்படும். மன ஏகாக்கிரம் எனின்மனத்தின் கனுகூலங்கள் பிரதிகூலங்கள் பலவுள. அவை யிருக்கட்டும். நினைப்பை எங்ஙனம் மாற்றுகின்றது?

திருஷ்டாந்தமாக ஒரு ஸ்த்ரீயானவள் கூந்தலுடைத்தாயிருந்தாள்; பின் அவள் கூந்தலை எடுத்துவிட்டு மொட்டையாகிவிட்டாள் என்று வைத்து கொள்வோம். அவள் கையானது கூந்தல் எடுக்கப்பட்டும் ஒவ்வொரு நாளும் எத்தனையே, தடவைகள் மேலழும்பி தலைவரைச்சென்று கூந்தலில்லாதது கண்டு திரும்புகின்றது. இவ்வநுபவம் பலர் அறிந்திருக்கலாம். ஆனால் இங்ஙனம் சிலகாள் சென்றபிறகு அவள்கை அங்ஙனம் கூந்தல்கட்டமே லெழுவதில்லை. இதுவும் பலர்க்குத்தெரியலாம். ஆனால் கூந்தலை எடுத்தும் அவள் கை ஏன்மேல் லெழும்பிற்று? சில நாட்களுக்குப்பின் அவள்கை கூந்தல் கட்டச்செல்லாது நின்றுவிட்டது? என்பன அறியார்கள். இதைப்பற்றி சிந்தித்தவர்களும் சுருக்கமாகவே இருக்குமென்று நினைக்கிறேன்.

கூந்தலிருந்த காலத்து "நமக்குக் கூந்தலிருக்கிறது" என்னும் நினைப்புமனத்தில் பலமாக ஊன்றி விடுகின்றது. இங்ஙனம் வெகு காலம் ஊன்றிக்கிடக்கும் நினைப்பு கூந்தல் எடுத்தமாத்திரத்தில் [illegible]றதில்லை. ஆகையால் கூந்தல் எடுக்கப்பட்டும், கை, மே[illegible]ன்றது. ஏன் எழுகின்றது? "கூந்தல் இருக்கின்றது" [illegible]னும் நினைப்பின் பதிப்பு (Impression) மனத்தில்

கிடத்திலிலலென்க. இக்காரணம் பற்றியே கைமென்மேலும் எழுந்துகொண்டேயிருக்கிறது. எதனால் கை எழுகிறது? மனத்தில் "கூந்தல் இல்லை" என்னும் நினைப்பின்பதிப்பு (Impression) எடுபட்டதும் கைமேலெழுவதில்லை. அந்தஸ்திரீக்கு கூந்தல் எடுக்கப்பட்டுப்போயும் கை கூந்தலைக் கட்டுவதற்காகச் சிலநாள் மேலெழும்பியதும் பின் எழாது நின்றுபோனதும் அவளும் எல்லாரும் அறிவார்களானாலும் எதனால் நின்றுபோய் விட்டதென்று அவளுக்கும் மற்றவருக்கும் தெரிகிறதில்லை. அவள் கையானது கூந்தலைக் கட்டுவதற்காகச்சென்றபோது அவள் மனதில் என்ன நினைப்பு உண்டாயிற்று? "ஹாஹா நம்தலையில் கூந்தல் இல்லையே. கூந்தலை எடுத்துவிட்டோமே. இதென்ன பைத்தியம், கூந்தலுள்ளதுபோல் கட்டவந்தோமே" "கூந்தல் இருக்கிறது" என்னும் நினைப்புக்குமாறான பல நினைப்புகள் அவள்மனதில் மிகவும் அழுத்தமாக உண்டாகி இருக்கவேண்டும். பதிந்தநினைப்பே வழக்கமான செய்கைக்குக் காரணமாதலின் கைமேலெழுவதில்லை. இங்ஙனமேதான் செய்கையின் வழக்கமெனக் கூறுமிடங்களிலெல்லாம் நினைப்பின்வழக்கனவே கிரகிக்கவேண்டும். நல்லது இஃதிருக்கட்டும் மேற்கூறிய உதாகரணத்தில் அந்தஸ்திரீக்கு 10-தினங்களில் கை மேலெழாது நின்றுவிட்டதாகவும் ஒவ்வொரு தினமும் 10 தடவைகள் கைமேலெழுந்ததாகவும் வைத்துக்கொள்வோம். ஆயின் நூறு தடவைகள், கை மேலெழுந்திருக்கவேண்டும். "கூந்தல் நமக்கிருக்கிறது" என்னும் எண்ணத்திற்குமாறான எண்ணமாகிய "எனக்குக் கூந்தலில்லை" என்னும் எண்ணமும் நூறுதடவைகள் உண்டாயிருக்கவேண்டும். நல்லது இந்தாகசியம் கூந்தலெடுத்துவிட்ட அந்தஸ்திரீக்குத்தெரிந்தும் கூந்தலை எடுத்தபின் பையத்தியகாரத்தனமாக கைகூந்தலைக் கட்டுவதற்குப் போகக்கூடாது என்று அவளுக்கு எண்ணமும் இருந்திருக்குமானால் அவள் என்னசெய்வாள்? கூந்தலெடுத்த நிமிஷமே கனித்த இடத்தில் உட்கார்ந்து ஏகாக்கிரத்துடன் "எனக்குக் கூந்தலில்லை; என்கூந்தலை எடுத்துவிட்டேன்." என்று இடைவிடாது நினைத்திருப்பாள். 100-தடவை நினைக்கவேண்டும். அவண்ணம் 100-தடவைகள் தனித்திருந்து நினைத்திருந்தால் கூந்தலைக் கட்டுவதற்காக [redacted]லெழுந்திரா தென்பது விளங்குகின்றதல்லவா? அதனால் [redacted]த்தத்தை அப்பியசிக்கவேண்டும். ப்ரதிஜனங்களும் இதை [redacted]க்கையின் லக்ஷ்யமாக வைக்கவேண்டும்.

OMNIPRESENCE OF GOD.

By

A. YOGI.

ஸர்வம் ப்ரம்மம் மயம்

அல்லது

கடவுளின் ஸர்வவ்யாப கத்வம்.

ப்ரம்மம் எனினும் கடவுள் எனினும் ஒக்கும். 'கடவுள்' என்ற பொருள் இல்லவேயில்லை? 'எல்லாம் அணுக்கூட்டங்களே.' 'அலைகளே தற்செயலாக ஒன்றோடொன்று சேர்ந்தம் பிரிந்தும் ப்ரபஞ்சம் விளங்குகின்றது.' 'எல்லாம் இயற்கையே' என்று கூறும் நாஸ்திகர் ஒழிய ஆஸ்திகர்கள் யாவரும் "கடவுள் எங்கும் நிறைந்தவர்" என்னும் வாக்கியத்தில் நம்பிக்கையுடைய வராகவே காணப்படுவார். "கடவுள் எங்கும் நிறைந்தவர்," கடவுள் எங்கும் நிறைந்தவர்" என்று யாவரும் பல சமயங்களில் சம்பாஷணைகளுக்கிடையே கூறுவது சகஜம். ஆனால் அவர் கூறும் வார்த்தைகளின் உண்மையை உணர்ந்திருக்கிறார்களா வென்றால் அது கிடையாது. உலகத்தில் பொதுவாக ஜனங்கள் தாங்கள் பேசும் வார்த்தைகளின் எதார்த்த அர்த்தம் தெரியாமலிருந்தாலும் வாசாமகோசாரமாய்ப் பேசுவதில் பின் வாங்கார்கள். அது உண்டாவதெனின் தெரியாதன பலவற்றைத் தெரிந்தனவாகவே ஹிருதயம்கொண்டு கிடைத்தலினலென்க. இக்குற்றம் பாமரர்களிடத்தது என்று மாத்திரம் நினைக்கவேண்டாம். பண்டிதர்களிடத்தும் கொஞ்சமும் குறைவில்லை. இக்குற்றத்தை நன்காராயந்துணர்ந்து அதனின்றும் ஜனங்களை விடுவிப்பதற்காகத்தன் ஆயுள் நாளை யெல்லாம் தத்தம் செய்த புண்ணிய சீலர் ஒருவரேயாவர். அவர் கிரேக் தேசத்துதித்த ஞானிகளுள் ஒருவர். அவர்பெயர் ஸாக்ரட்டிஸ் (Socrates) என்று சொல்வார்கள். இம்மகானை பற்றி அறியாதவர் ஆங்கிலம் படித்தவருள் அருமை. இது இம்மட்டில் இருக்கட்டும். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்குச் செல்வோம்.

"கடவுள் எங்கும் நிறைந்தவர்" என்றால் எங்ஙனம்? என விசாரிப்போம். முதலில் கடவுளானவர் எப்பேர்ப்பட்டவர்? அதாவது அவரது இலக்ஷணங்கள் என்ன? என்று விசாரிப்போம். இலக்ஷணங்கள் அறியாமல் அறியாத எப்பொருளையும் அறிதல் கூடாத காரியம். கடவுளின் பராக்கிரமங்களையும் வல்லமைகளையும் பொரு

மைகளையும் மகிமைகளையும் பற்றிப் பலமதங்கள் கூறுவதாக அறி கிறோம். ஆனால் ஹிந்துமதம் ஒன்றில் மாத்திரம் கடவுளானவர் வாக்கு மனதுகளுக்கெட்டாதவர் என்று பன்முறை பல இடங்களில் சொல்லப்பட்டிருந்தபோதிலும், காணப்படும் பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களின் ஸாரத்தையும் கிரகித்து யுகிக்கும் யுகத்திற்கு எவ்விலிக்ஷணங்கள் விளங்குமோ அவ்விலிக்ஷணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. புராணங்கள் முதல் உபநிஷத்துகள் வரையில் சச்சிதானந்தமே கடவுளின் ஸ்வரூபமாக அதாவது அவரது இலக்ஷணங்களாகக் கூறப்பட்டிருக்கின்றது. சச்சிதானந்தம் என்னும் வாக்கில் மூன்று வாக்குகள் அடங்கியிருக்கின்றன. அவையாவன: சத்து, சித்து, ஆனந்தம் என்பனவாம். அவற்றின் பொருள்:— சத் என்றால் சத்தியம், உண்மை, எனப்படும் அதாவது. திரிகாலத்திலும் உள்ளது. 'எக்காலத்தும் அழியாதது' 'நித்தியமாயுள்ள' பொருள்', என்று பொருள்படும். இனி சித் என்றால் அறிவு, தெளிவு எனப்படும். அதாவது அறிவு அல்லது ஞானமே தனது சொரூபமாக உடையது என்று பொருள்படும். பின், ஆனந்தம் என்றால் சுகம் என்று பொருள்படும். அதாவது சுகமே தனது ஸ்வரூபமாக உடையது எனப்படும். நல்லது. அங்ஙனமாயின் பொருள் மூன்றுமோ வெனின், அங்ஙன மன்று. மேற்கூறிய மூன்று இலக்ஷணங்களும் ஒரு பொருளினிடத்தானே ஒன்றுகக் காணப்படுவன வாகும். சூடும் வெளிச்சமும் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒன்றுக ஒரே பொருளாகிய அக்னியினிடத்து எங்ஙனம் விளங்குகின்றனவோ அங்ஙனமே என்னலாம். ஆகவே நாம் இப்போது பார்க்கவேண்டியது இச்சச்சிதானந்த மாகிய பொருள் எங்கும் வியாபித்திருக்கின்றதா என்பதேயாம். இது நிற்க, நான் ஒன்று சொல்லி விட்டு விட்டேன். அஃதாவது ஹிந்து மத மொழிந்த மற்ற மதங்களும் இம்மூன்று லக்ஷணங்களில் ஒன்றை வெளிப்படையாகவும் மற்ற வற்றை கூட்டமாகவும் சொல்லாமல் இருக்கவில்லை யென்பதே. அதாவது, அவைகளெல்லாம் கடவுளானவர் நித்தியர் என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றன. எம்மதமும் இசச்சிதானந்தம். உடையனவேயாம்.

மூன்று இலக்ஷணங்களையும் தனித்தனி ஆராய்ச்சி செய்யப்புகுந்தால் அதிகக் காலதாமதம் நேரிடுமாகையால் எல்லா மதங்களும் வெளிப்படையாகக் கூறும் சத்லக்ஷணம் ஒன்றை மாத்திரம் எடுத்

யப்பேசவேண்டும். கடவுள் சத்து. இப்பிரபஞ்சத்தில் எத்தனையோ கணக்கில்லாத பொருள்கள் அணுமுதல் அண்டம் ஈறுக்காணப்படுகின்றன. இப்பொருள்களெல்லாம் சத்தல்ல. வென்பது பட்டப்பகற் போல் வெளி. எதனாலெனின், எல்லாம் நாசத்தையுடையன வென்று அறிவீர்கள். அண்டங்களும் தகர்ந்துபோகின்றன. ஒரு காலத்தில் எல்லாம் நசிப்பன. இங்கு நாசம் என்பது எதற்கென விசாரிக்க வேண்டும். உலகப் பொருள்கள் யாவற்றிற்கும் நாசம் என்பது நாம ரூபத்திற்கேயாம். அங்ஙனமன்றிப் பொருள்களின் நாசம் கிடையாது. அதாவது ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக்கொண்டால் அதை நாசம் பண்ண அதாவது அதை ஒன்றுமில்லாததாக்க யாராலும் இயலாது. ஒரு நாமரூபம் மற்றொரு நாமரூபமாகுமேயல்லாது ஒன்று மில்லாமலாகாது (matter is never lost). இது தற்கால ஜடதத்வ சாஸ்திரிகளுக்கும் சம்மதம். இதை நன்கு விளக்க ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு மண்கட்டியை எடுத்துக் கொள்வோம். அதை ஜலத்தில் கரைத்தால் ஜலரூபமாகின்றது. இன்னும் அஜ்ஜலத்தை அக்னியால் எரித்தால் வாயுவாக மாறும்? இங்ஙனம் எவ்விதமாக மாற்றினாலும் நாமரூபங்கள் மாறுதலடைகின்றனவே யல்லாமல் வேறல்ல. ஆகவே எல்லாப் பொருள்களிலும் அழியாத்தன்மை ஒன்று சொல்லப்படுவது. எல்லாவற்றிலும் சோதிப்பது அதுவே யாகும். இதைத்தான் கடவுள் என்று சொல்வது. இது நிற்க, இன்னொரு வழியாகப் பார்ப்போம்:—உலகமானது பஞ்சபூதச் சேர்க்கையாலானது. பஞ்சபூதங்களும் ஒன்று ஒன்றுக மாறும் தசையன. அங்ஙனமாயின் உள்ளபொருள் எது? பஞ்ச பூதங்களா? அல்லது இப்பஞ்ச பூதங்களுமல்லாத மற்றொரு பொருளா? இவ்விரண்டிற்கு விடை ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். ஒருவன் பல வேஷம் போட்டுத் திரிகிறான் என்று வைத்துக் கொள்வோம் அதாவது ஒரு சமயம் புலி சமயம் ஸ்த்ரீ வேஷத்துடன் வருகிறான். மற்றொரு சமயம் கரடி வேஷத்துடன் வேஷத்துடன் நடக்கிறான். மற்றொரு சமயம் கரடி வேஷத்துடன் வருகிறான் என்றால் இப்போது வாஸ்தவப் பொருள் ஸ்த்ரீயா? அல்ல[redacted]யா? அல்லது கரடியா? என்றால் என்ன சொல்வீர்கள். [redacted] புலியும், கரடியும், நாமரூபத்தில் மாத்திரம் உள்ளவையாகவும் எதார்த்தத்தில் மனுஷனே உள்ளான் எனவும் கூறுவார்களல்லவா? அதுபோலவே பஞ்சபூதங்களையும் வேஷமாகத்தரித்து [redacted]ள்ள ஒரு பொருளே எதார்த்தத்தில் உள்ளதென அறியக்கடவீர்

அதுவே கடவுள் அல்லது பரம்மம். பஞ்சபூதங்களிலும் கடவுளே வியாபித்திருக்கிறார் என்று கண்டால் பின் கடவுளின் சர்வவியாபகத்வத்தைப்பற்றி யார்க்கு சந்தேகம் ஜனனம். இனியும் ஒரு யுக்தி சொல்கிறேன். சற்று கவனமாகக் கேளுங்கள். தோற்றத்திலுள்ள பொருள்களை யெல்லாம் நாம் "இருக்கிறது" என்று சொல்கிறோம். அதாவது 'கல் இருக்கிறது" 'மரம் இருக்கிறது" 'வீடு இருக்கிறது" 'மேஜை இருக்கிறது" என்று இவ்வாறுக ஒவ்வொரு பொருளையும் சுட்டி நாம் பேசுகிறும். பார்த்தீர்களா இவற்றிலெல்லாம் 'இருக்கிறது' என்னும் சப்தத்திற்குப் பொருள் விளங்குகிறது. இவற்றுள் ஒன்று மற்றொன்றுகமாறினும் அங்ஙனம் மாறிய பொருள் 'இருக்கிறதாகவே கூறுவோம். இங்ஙனம் தோன்றும் பொருள்களிலெல்லாம் 'இருக்கிறது' என்னும் சப்தத்திற்குப் பொருள் விளங்கிக்கொண்டே இருக்கிறது. இவ்விருக்கும் தன்மை யேசத்தாவஸ்தை யெனப்படும். அதாவது கடவுள். ஆனால் இப்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் ஜனிக்கலாம். அதாவது பொருள்களிடத்தில் தான் 'இருக்கிறது' என்பது விளங்குகின்றது. சூன்யமாகிய ஆகாயத்தில் ஒன்று மில்லையே, அங்கு 'இருக்கிறது' என்னும் சப்தத்திற்குப் பொருள் எங்கே என்பதேயாம். அங்ஙனம் நீங்கள் நிகைக்கவேண்டாம் சூன்யமாகிய ஆகாயத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கும் அப்பொருள் விளங்கத்தான் செய்கிறது. எங்ஙனமெனின், நாம் மேஜையின் மேல் ஒரு புஸ்தகத்தை வைத்து ஒருவனிடம் 'மேஜையின்மேல் என்ன இருக்கிறது?' என்று கேட்டால் புஸ்தகம் என்பான். பின் அப்புஸ்தகத்தை எடுத்து விட்டு இப்போது என்ன இருக்கிறதென்று கேட்டால் 'ஒன்று மில்லை' என்பான். இதற்கர்த்தம் 'மேஜையின் மேல் ஒன்றுமில்லை என்றுதான் பொருள். மேஜையில்லை என்றல்ல. அவன் ஒன்றுமில்லை யென்று சொல்லும் பொழுதே 'மேஜை இருக்கிறது' என்று சொல்வதாகின்றது. அதுபோலவே சகல பொருள்களும் ஆகாயமாகிய இடத்தில் கிடக்கின்றன. [redacted]ால் 'ஒன்று மில்லை' யென்று சொன்னால் 'ரூபமுடைய பொ[redacted]ளி ல்லை,' ஆகாயமாகிய இடமாத்திரம் இருக்கிறது' என்று [redacted]ள் படும். ஆகவே ஆகாயம் சூன்யமாயினும் அதுவும் இரு[redacted]ன் செய்கிறது. வெற்றிடம் பிரத்தியகூப்பொருள்தான். இவ்வி தமாக இருக்கும் தன்மை அதாவது எந்து சர்வவியாபக முடையது. அதுவே கடவுளானது பற்றி கடவுள் ஸர்வ வ்யாபக முடையவர்

என்று சருதிகள் கோஷிக்கின்றன. இப்பொழுது நீங்கள் சற்று ஊன்றி விசாரிப்பீர்களானால் எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாகவும் எப்போதும் அழியாமலும் உள்ள பொருள் கடவுளே என அறிவீர்கள். அக்கடவுள் நாம் மெல்லாருக்கும் மென் மேலும் ஞான ஒளியைக் கொடுப்பாராக. நாமும் எப்பொழுதும் அவரைப் பற்றிச் சிந்தித்து ஞானத்தை யடையவோ மாக.

SNEHALATA'S LETTER TO HER FATHER.

ஸ்ரீமதி ஸ்நேஹலதா தேவி தன் தகப்பனாருக்கு எழுதிய கடிதம்.

தன்னை விவாகம் செய்து கொடுப்பதற்காக குடியிருக்கும் வீட்டை அடமானம் வைத்துக்கடன் வாங்கி வரதக்ஷிணை கொடுக்கத் தீர்மானித்திருந்த தன் தகப்பன் நிலைமையைக்கண்டு சகிக்க முடியாமல் தற்கொலை புரிந்துகொள்ளப் போகுமுன் ஸ்நேஹலதா தேவி தன் தகப்பனுக்கு எழுதிய கடிதம்.

"என்னைப் பலி கொடுக்கிறேன்."

"அப்பா அவர்களுடைய பாதபத்மங்களில் ஸ்நேகலதா அநேக நமஸ்காரம். என்னை விவாகம் செய்து கொடுப்பதற்காகத் தாங்கள் நம்முடைய வீட்டைப் பெந்தகம் வைக்க நினைப்பது என்னால் சகிக்கக் கூடவில்லை. அப்படிச் செய்யவேண்டாம்; செய்யவேண்டிய அவசியமிராது; எனென்றால் காளைப் பொழுது விடியுமுன், பரம துக்கத்துக்களாகிய என்னுடைய ஜீவன் பறந்து போய் எப்பொழுதும் இன்பமயமா யிருக்கும் தேவியின் பாத நிழலை அடைந்து விடும்.

என்னைச் செல்வமாய் வளர்த்தீர்கள். தாங்களும் அம்மாவும் என்னிடத்தில் வைத்துள்ள அன்பினால் நான் சந்தோஷமா யிருந்திருப்பது போல் மகாராஜா வீட்டுக் குழந்தைகளும் இருந்திருக்க மாட்டார்கள். இப்படி அன்புடன் நீங்கள் என்னை வளர்த்ததற்குப் பதிலாக, உங்களையும் குஞ்சு குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியே ஓட்டி நீங்கள் கஷ்டப்படும்படி செய்யவா நான் பெண் பிறந்தேன்!

மூன்றும் நாள் இரவு வெகு நேரம் சென்ற பிறகு, பகலெல்லாம் அலைந்து களைத்து கால் வலிக்க நீங்கள் வீட்டுக்கு வந்த பொழுது உங்கள் முகத்தைப் பார்த்தேன். அதில் துக்கம் குடி கொண்டு டிருந்தது. "எல்லாம் போய்விட்டது" என்று நீங்கள் சொன்னது என் காதில் விழுந்தது. அது முதல் அப்பொழுது உங்களுடையை முகமிருந்த மாதிரி என் கண்முன் எப்பொழுதும் நின்று கொண்டே இருக்கிறது. அந்த வார்த்தை என் காதில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. என் விவாகத்துக்காக கடன் வாங்கத் தாங்கள் செய்திருந்த யோசனை பலிக்காமற் போய்விட்ட தென்பதும், வீட்டைப் பெந்தகம் வைத்து கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் பிறகு எனக்குத்தெரிந்தது. அப்படி அந்த நினைப்பை சகிக்கக் கூடவில்லை. என் விவாக விஷயமாக எவ்வளவு மனை விசாரம். விவாகமாகவில்லை என்று எவ்வளவுபேர் தங்களைத் தூற்றுகிறார்கள்! தகுந்த வரன் சம்பாதிக்க நீங்கள் அரும்பாடு பட்டிருக்கிறீர்கள். எவ்வளவோ தலை முறையாக நமக்குச் சொந்தமான இந்த வீட்டில் பிறந்தியார் நடமாட நான் சகிக்கமாட்டேன். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். "என்னை நான் பலி கொடுத்து விடுகிறேன்."

பரத்வானில் வெள்ள மெடுத்த பொழுது அங்கு கஷ்டப்பட்டவர்களுக்கு உபகாரஞ் செய்ய உத்தம குணமுள்ள பிள்ளைகள் எவ்வளவோ பெயர்கள் முன் வந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். கஷ்டப்பட்ட ஜனங்களுக்கு இரங்கின அவர்களுக்கு பகவான் கிருபை செய்வாராக. அங்கிய பண்டங்களை வாங்குகிறதில்லை யென்று எவ்வளவோ பிள்ளைகள் பிரதிக்ஞை செய்து கொண்டிருப் பதாகவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வெகு தூரத்திலுள்ள தென் ஆபிரிக்காவில் இருக்கும் நம் ஜனங்களின் பொருட்டுப் பணம் வசூல் செய்ய உத்தம குணமுள்ள பிள்ளைகள் அநேகர் வீடு தோறும் போனார்கள் என்று கேள்விப்பட்டேன். இங்கு கிட்டவிருந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு இரங்குகிறவர்கள் இல்லையா?

நேற்றிரவு, அப்பா! நான் ஒரு கனவு கண்டேன் அதிலிருந்து ஒரு பிரமாணம் செய்துவிட்டேன். திடீரென்று ஒரு சங்கீதம் கேட்டது; உடனே ஜோதி ஒன்று உண்டாயிற்று; அந்த ஜோதியின் மத்தியில் நம தன்னை துர்க்கா தேவியைக் கண்டேன். சிரித்த முகத்துடன் என்னைப்பார்த்து தன்னண்டை வந்து விடும்

படி கூப்பிட்டாள். அப்பொழுதும் உங்களையும் குடும்பத்தில் அடி பட்டு எப்பொழுதும் வருத்தத்துடன் இருக்கிற என் அம்மாவையும், ஸ்வர்க்கம் போன்ற சந்தோஷ மயமாய் நம் வீட்டைச் செய்யும் குழந்தைகளையும் நினைத்துக்கொண்டேன். உங்களை எல்லாம் ஆபத்திலிருந்து தப்புவிக்கிறதாக உடனே ப்ரமாணம் செய்துகொண்டு நமது துர்க்காதேவி கூப்பிட்டபடி தவக்கம் இன்றி வந்துவிடுகிறதாக பதிலுரைத்துவிட்டேன். நான் போய்விட்டால், நீங்கள் அழுவீர்கள். ஆனால் நான் போகத்தான் போகிறேன். வீடு தப்பட்டும்! அதுமுதல் எப்படி உயிரை விடலாமென்று பல வழிகளை யோசித்தேன். கெருப்பிட்டுக் கொள்ளலாமா? நீரில் விழலாமா? விஷம் சாப்பிட்டு விடலாமா? என்று பலவாறு யோசித்தேன். கெருப்பே ச்ரேஷ்டமென்று தீர்மானித்துவிட்டேன். நானிடும் தீ தேச மெல்லாம் மூண்டு பெண்களை வைத்துக்கொண்டு விவாகம் செய்து கொடுக்கக்கூடாமல் தவித்திருக்கும் ஸர்வ [redacted]க்கத்தை எரிக்கட்டும்.

[redacted]அப்பா! பலியிடும் கோரம் கிட்டிவிட்டது. உலகெலாம் துங்கிக்கொண்டிருக்கிறது. நானும் நித்யமான தூக்கத்தை அடையப்போகிறேன். எனக்கு இப்பொழுது ஒரு சந்தோஷம் ஜனிக்கிறது. இவ்வளவு காளாய் நீங்கள் என்னை அன்பாய் வைத்து ஆதரித்து வந்ததுபோல் நமது துர்க்கை அம்மாளும் இனி என்னை வைத்து ஆதரிப்பாள். நீங்களும் அம்மாவும் அங்கு வரும் வழியைப் பார்த்துக்கொண்டே கிற்பேன்.

அநேக நமஸ்காரம்,

தூரதிருஷ்டசாலி,

ஸ்நேகலதா.

FRENCH WOMEN.

ப்ரான்சு தேச ஸ்த்ரீகள்.

பக்தியிலும், சுத்தையிலும், அன்பிலும், ப்ரான்சுதேசப் பெண்களைவிட ச்லாக்கிய மானவர்களெவர்களு மில்லை. முக்கியமாக அவர்கள் தங்களுடைய குழந்தைகளின் பொருட்டு தங்களுடைய சௌகரியத்தையும் பாராது கஷ்டப்பட்டு வளர்த்துவருவார்

களாம். அவர்களுக்குத் தங்கள் குழந்தைகள் மீதுள்ள அன்புக்கு அளவு கிடையாதாம். ஓர் ஸ்த்ரீக்குக் குழந்தை யில்லையாகில் அவள் தன்னன்பை புருஷன் மீது காட்டுவாளாம். அன்பாவது சாமான்னியமான அன்பல்ல. புருஷனும் பெண்சாதியும் ஒருவரையொருவர் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்களின்பின் மிகுதியைக் காட்டுவார்களாம்.

ஓர் ஸம்ஸாரத்தில் ஸ்த்ரீ புருஷனுக்கு எவ்வளவு மனவருத்த மிருந்தபோதிலும், தாயாருக்கும் பிள்ளைக்கும் எவ்வளவு சண்டை யிருந்தபோதிலும் இதை யெல்லாம் வெளியில் தங்களுடைய பிரிய சினேகினதர்களா யிருந்தபோதிலும் தெரிவிக்கமாட்டார்களாம். இஃதல்லாமலும் வெளியிலவர்களைப் பற்றி மேன்மையாக பேசுவார்களே தவிர எக்காரணத்தாயினும் தாழ்வாகப்பேசமாட்டார்களென்றும், ஸம்ஸாரத்தில் ஸ்திரீ புருஷர்கள் மனமொத்து வாழ முடியாமல் எவ்வளவு சண்[redacted] நேரிட்டு ஒரு வரையொருவர் விட்டுப் பிரிந்து விட்ட பிறகு[redacted]ஸாரத்தில் வெகுநாளாகச் சச்சரவு உண்டென்[redacted]ள்ளக்கூடுமென்றும் ஓர் கனவான் எழுதுகிறார்.

ப்ராஞ்சு ஸ்திரீ எப்பொழுதும் தன் காரியத்திலேயே கண்ணாயும், வம்புக்கூட்டம் கூடிக்கொண்டு பேசாமலும், தன் புருஷனுக்கு வேண்டிய ஸமயத்திலொத்தாசை செய்துகொண்டு மிருப்பாளாம். தனக்கு உடம்பு அஸௌக்கியமா யிருக்கிற தென்று அதையொரு சாக்காகக்கொண்டு தன் புருஷனுக்கு வேண்டும்போது உதவி செய்யாமலிருக்காமாட்டாளாம்.

ஓர் ஸம்ஸாரத்தில் தரித்திர மதிகரித்து விட்டாலதை வெளியாருக்குக்காட்டாமல் வருபவர்களை வரவழைத்து விசாரிப்பதற்கென்று ஓர் தனியறை வைத்துக்கொண்டு அதை வாரத்துக்கொரு முறை சுத்திசெய்து, அன்றைய தினம் வருபவர்களை சக்திக்கியன்றபடி நல்வரவு விசாரிக்கிற வழக்கமாம். மற்ற நாட்களில் தங்களை யாரும் பார்க்காதபடி ஐந்தாவது, ஆறாவது மாடியிலிருப்பார்களாம். அவர்கள் தர்மசிந்தையிலும் அதிதிபூஜையிலும் ச்ரேஷ்டமானவர்களென்றும் எழுதுகிறார்.

டி. எஸ். வி. சர்மா.

154

Interesting Items.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Advice to Children.

குழந்தைகளுக்குப் புத்திமதி :— ஸ்வாமி விவேகாநந்தரின் தாயானவள் தன் குழந்தைகளுக்கு நல்ல புத்திமதிகளைபோதித்து வளர்த்துவந்தாள். ஸ்வாமி விவேகாநந்தரைப் பெற்ற தாயைக்காட்டிலும் உத்தமித்தாய் வேறு யார்? அந்த அம்மாள் குழந்தைகளைப்பார்த்து (1) ஒருபொழுதும் சாவதாயிருந்தாலும் பொய்பேசாதே; (2) உத்தமனாயிரு; (3) யோக்யதைக்குத் தக்கபடியிரு. பிறருடைய மனதையறிந்து நட; (4) பிறருடைய ஸ்வதந்தரத்துக்கு வில்லங்கமுண்டாக்காதே; (5) சாந்தமாயிரு; என்ன கஷ்டமும் துக்கமும் உண்டான போதிலும் மனந்தளரவிடாமல் உறுதியாயிரு.—என்று சொல்வாளாம்.

Forget me's.

மறக்கவேண்டியவை :—நீ உன் பாக்கியத்தை அதிகரிக்கவும், உன் ஜீவனை நீடிக்கவும் செய்ய விரும்பினால் உன் அயலானுடைய குற்றங்களை மறந்துவிடு. சோதனைகளையும் குற்றம்பிடித்தலையும் மறந்துவிடு. அதற்கு உன்னை ஏவினதற்குக் காரணமாயிருந்தவைகளை நினையாதே. உன் சிநேகிதரின் விகற்பகுணங்களையெல்லாம் மறந்து உனக்கு அவர்கள் மேல் ப்ரியமுண்டாகும் நற்குணங்களை மாத்திரம் நினை. பிறருடைய சண்டைகள் அல்லது மற்ற விஷயங்களைப்பற்றி தற்செயலாய்க் கேள்விப்பட்டதை மறந்துவிடு. நீ அதைப் பிறருக்குச் சொன்னால் அது முன்னிலும் ஆயிரம் மடங்கு கெடுதியாகக் காணப்படும். ஜீவியத்தில் துவேஷமானவைகளை யெல்லாம் கூடியவரையில் நீக்கிப்போடு. அற்பத்தனமான செய்கைகள் அல்லது அதிலும் கேடான காமம் குரோதம் இவற்றைத் திரும்பத் திரும்ப மனதில் எண்ணுவதானது அவற்றோடு உன்னை அதிக பழக்கமாக்கிவிட எதுவாகும். துவேஷமானவைகளையெல்லாம் நேற்றோடு நீக்கிப்போடு. இன்றுமுதல் ஒரு சத்தமான ஞாபகத்திற்காக மனோகரமானவைகளையும் விரும்பத் தக்கவைகளையுமே எழுது.

ஒருவன் தான் தப்பிதம் செய்திருக்கிறதாக ஒப்புக்கொள்ள ஒருபோதும் வெட்கப்படக்கூடாது. அப்படி ஒப்புக்கொள்ளுகிறதினால் அவன் தான் நேற்று இருந்ததைப் பார்க்கிலும் இன்று அதிக ஞானமுள்ளவனாயிருப்பதாகத் தன்னைக் காண்பிக்கிறானேயொழிய வேறல்ல.

Preverbs on Education.

கல்வியைப்பற்றிய பழமொழிகள்.

அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.—இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்.—கண்டது கற்கின் பண்டிதனாவான்.—கல்வியுள்ள வாலிபன் கனகிழவன்.—கல்வியில்லாச் செல்வம் கற்பில்லா அழகு.—கற்றலிற் கேட்டல் நன்று.—குரு இல்லார்க்கு வித்தையுமில்லை. முதலில்லார்க்கு லாபமுமில்லை.—தொட்டுக் காட்டாதவித்தை சொட்டுப் போட்டாலும் வராது.—நூறுநாள் ஓதி ஆறு நாள் விடத்தீரும்.—பழிப்பான கல்வி பாவத்தின் ஊற்று.—பள்ளிக்கணக்கு புள்ளிக் குதவாது.—பாடமேறினும் எடுத்து கைவிடேல்.—புஸ்தகம் அஸ்தபூஷணம்.—பேசப்பேச எந்தப்பாஷையும் வரும்.

155

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Evil effects of quinine.

கொயினாவின் கெடுதல் குணம் :— பதினாறு வயதுள்ள ஒரு பெண் 15-நிமிஷத்தில் 30-க்ரைன் கொய்னாவை உட்கொண்டாள். பிறகு இரண்டு மணிநேரம் சென்றதும் தாங்கக் கூடாத தலைவலியும், காதுகளில் அஸாத்தியமான இரைச்சலும் உண்டானதாய் அவள் முறையிட்டாள். சரீரநிலைமையில் வேறு எவ்வித கோளாறும் காணப்படவில்லை. அவளுடைய காதுமாத்திரம் நிமிஷத்துக்கு நிமிஷம் க்ரமமாக மிகவும் மந்தமாய் விட்டது. மறுநாள் காலையில் அவளுடைய காதுகள் இரண்டும் முற்றிலும் உணர்ச்சியற்று, எவ்வித பேரிரைச்சலையும் கேட்கக்கூடாதவாறு செவிடாய்விட்டன.

Rusting of Copper, brass & silver goods.

செம்பு, பித்தளை வெள்ளி சாமான்களுக்குப் பிடிக்குங் களிம்பு :— ஒருசட்டி ஜலத்தில் சீயக்காய்த் தூளையும் உப்பையும் கொட்டிக்கொதிக்க வைத்துக்கொண்டு, செம்பு, பித்தளை அல்லதுவெள்ளி சாமான்களைக் கழுவினால் களிம்பு போய்விட அவைகள் சுயம் பிரகாசமாகும்.

Bug proof.

மூட்டுப்பூச்சி உபத்ரவமில்லாமலிருக்க :—படிக்காரத்தைப் பொடி செய்து ஜலத்தில் கரைத்து அதில் வஸ்த்ரத்தை அல்லது துப்பட்டியை நனைத்து, நிழலில் உலர்த்தி, உட்காரும் நாற்காலி அல்லது படுக்கும் மெத்தைமேல் போட்டுக்கொண்டால் மூட்டுப்பூச்சிகடி உபத்ரவமிருக்காது. வஸ்த்ரம் அல்லது துப்பட்டி ஒரு பவுன் நிறையிருந்தால் அதற்கு ஒரு பலம் படிக்காரம் வீதம் ஜலத்தில் கரைக்கவேண்டும்.

Iron articles.

இரும்பு சாமான்கள்:—அரத்தூளை பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid) டில்போட்டுக் கொதிக்கவைத்து இரும்பு சாமான்களை அதில் 2 மணி நேரம்போல் போட்டு வைத்திருந்து சுத்தமாய் அலம்பிவிட்டு, லின்ஸீட் என்கிற ஆளிவிதை எண்ணெய்யால் சாமான்களைத் துடைத்து விட்டால் அந்த சாமான்கள் நீடித்த காலம் துருப்பிடியாமலிருக்கும்.

Sleep.

நித்திரை:—நித்திரையென்பது யாவருக்கும் இயற்கையாகவே யுண்டாயிருக்கிற தென்றாலும், தேகசௌக்யத்தை விசேஷமாய் வ்ருத்தி செய்வதனால் நித்திரையின் சௌக்யமும் விசேஷமாய் வ்ருத்தியாகும். தினந்தோறும் நல்ல காற்றுள்ள வெளிகளில் தேகப்பயிற்சி செய்வதனாலும், வாகனங்கள் மீது சவாரிசெய்வதாலும், தோட்டங்களில் உலாவுவதாலும், மிதமாய் சாப்பிட்டு இரைப்பையை இலகுவாக வைத்துக்கொண்டிருப்பதனாலும், மனக்கவலை நீங்கியிருப்பதனாலும், நல்ல நித்திரையுண்டாகும். மிதமிஞ்சின தேகவருத்தமும், அளவுகடந்த உண்டியும், குடியும், தேகப் பயிற்சியின்மையும், மனக்கவலையும் நித்திரைக்கு பங்கமுண்டாக்கும். சுகநித்திரைக்கு அதிகவெப்பமாவது, குளிர்ச்சியாவது கூடாது. நடுத்தரமாய் இருக்கவேண்டும்.

A Substitute for Meat.

மாமிசத்திற்கு பதில் ஆகாரம் :— ருசிக்கும் பார்வைக்கும் மாமிசம்போலேவே யிருப்பதுடன் மாமிசத்திலுள்ள அசுத்தங்களில்லாத ஒரு செயற்கை ஆகாரம் சாஸ்திர ஆராய்ச்சி முறையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

A substitutes for Ghee.

நெய்க்குப் பதில் உணவுபொருள்:- கோக்கோவி லிருந்து ப்ரஞ்சகாரர்கள் 'கோகோஸ்' என்ற வெண்ணை போன்ற ஒரு உணவுப் பொருளை வேறு சில சரக்குகள் கூட்டிச் செய்கிறார்களாம். இது நெய்யிக்குப் பதிலாக உபயோகமாகி வருகிறது. இதில் பன்னி அல்லது மாட்டுக்கொளுப்பு சேர்வதில்லை. ஆகையால் சைவர்களும் மதாசாரப் ரியர்களுங்கூட தாரளமாய் வாங்கி உபயோகிக்கலாம். இந்தியாவுக்கு இது இறக்கு மதியாகிறது.

Hasty Eating.

அவசரமாய்ச் சாப்பிடுதல் :— அநேக குழந்தைகள் ஆகாரம் உட்கொள்ளும்போது அவசரமாய் உணவை விழுங்கிவிடுகின்றனர். இது முற்றுலும் பிசகு. ஆகாரத்தை வாயில்போட்டுக் கொள்ளும்போதே நன்றாய்க் கடித்து மெல்லவேண்டும், அப்படிச்செய்வதால் ஆகாரம் நமது பற்களால் அறைபட்டுக் பொடியாகி வாயிலிருக்கும் உமிழ் நீரோடு கலந்து உள் செல்லுகிறது. உமிழ் நீருக்கு மிக்க ஜீரண சக்தியுண்டு. விரைவா யுண்ணுவதாலும் நமது ஆகாரம் உமிழ் நீரோடு கலக்காமல் செல்லுவதால் அஜீரணம், வாதம், முதலிய நோய்களுண்டாகின்றன. உணவை நாம் எப்போதும் மென்று உமிழ் நீரோடு கலந்து கூழ்போலாக்கினால் உணவு தானாக வயிற்றுக்குள் சென்றுவிடும். இதனால் ஷை வியாதிகள் கிட்ட அணுகா.

Be your Own Washerwoman.

துணிகளை சலவை செய்தல் :— வண்ணான் உபத்ரவம் நகரங்களிலிருப்பவர்கள் சகிக்கமுடியாமலிருக்கிறது. உருப்படிக்கு அணா ஒன்று விகிதம் கொடுத்தாலும் சொல்கிற தவணையிலாவது, நன்றாக சலவை செய்தாவது நாணயமாய்க்கொடுக்கும் வண்ணான்கள் அபூர்வம். சன்லைட் சோப் ப்ரபால்யமானதின் பேரில் உபத்ரவம் சற்று குறைந்திருக்கிறது. இப்பொழுது சோடா பஸ்மம் மெஸ்ஸர்ஸ் பாரி கம்பனியாரால் ப்ரபலமாகி வருகிறது. கடைகளில் ஒரு பாக்கட் காலணாவுக்கு அகப்படுகிறது. பாக்கட்டில் உபயோகிக்கும் முறை கூறப்பட்டிருக்கிறது. சாதரணமாய் 2 பாக்கட்டால் 4 துணிகளை பேஷாக சலவை செய்யலாம். சன்லைட் சோப்பைவிட துணிகள் சோடா பஸ்மத்தால் நன்றாக வெளுக்கின்றன. செலவும் சுலபம். வண்ணானிடம் சேலையைப்போட்டு கொக்கு முன்போய் அழவேண்டியதில்லை. நம்முடைய துணிகளை சுலபமாய் நாமே சுத்தம் செய்து கொள்ளலாம். இன்னும் மொரு ச்லாக்யமான விஷயம். வண்ணான் பலவிதமான வியாதிஸ்தர்களுடைய துணிகளோடு நம்முடைய துணிகளைச்சேர்த்து வைப்பதும், அவைகளைத் துவைத்த ஜலத்தில் துவைப்பதும், போன்ற அருவெருப்பான காரியங்களொன்றுமேயில்லை.

Rat Nuisance.

எலி உபத்திரவம் :—பாஷாணம் வைப்பதும், கூண்டுகளில் தின்பண்டங்களை வைத்து அவைகளைச் சிக்கவைப்பதும் சகஜம். ஆனால் இதையெல்லாம் விட ச்லாக்யம் என்னவென்றால், மருந்து ஷாப்களில்பேரியம் சல்பேட் என்ற உப்புவிலைக்கப்படும். இதைத் தின்பண்டங்களில் கலந்து எலி நடமாடும் இடங்களில் வைத்துவிட்டால் எலிஇதைத்தின்று தாகமதிகரிக்கவும் குடிக்க ஜலத்தைத் தேடி வீட்டை விட்டுப் போய்விடுகிறது. முக்யமாய் இந்த உப்பு மற்றப்ராணிகளுக்கு விஷமான தல்ல.

157

ART & MUSIC.

கலையும் ஸங்கீதமும்

Music and Flowers.

ஸங்கீதமும் புஷ்பங்களும் :—சில புஷ்பங்களுக்கு ஸங்கீத உணர்ச்சியிருக்கிறதென்று ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பவேரியா தேசத்தின் ப்ரதான நகரமாகிய ம்யூனிச்சிலிருக்கும் ப்ரொபஸர் ஹான்ஸ்டி ஜென் சொல்கிறார். சில ஸ்வரங்களைக் கேட்டால் மலர்கிற ஸ்பாவமும் வேறு ஸ்வரங்களை கேட்டால் குவிகிற ஸ்வபாவமும் சில புஷ்பங்களுக்கிருக்கின்றனவாம்.

Ragams.

இராகம் :—இராகம் முப்பத்திரண்டாகும். அவை பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இல்லிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி. நாட்டை, தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம் என்பவையாம். இவற்றுட் பைரவியென்பது புருடவிராகம்; பிராமணஜாதி; இதின் மனைவிகள் தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சியென்பவையாம். அதிதேவதை ஈசனும், பூபாளமென்பது புருடவிராகம்; பிராமணஜாதி. இதன் மனைவிகள் வேளாவளி, மலகரிபௌளியென்பவையாம். அதிதேவதைதிருமாலாம், சீராகமென்பது புருடவிராகம்; அரசஜாதி. இதின் மனைவிகள் இந்தோளம், பல்லதி, சாவேரியென்பவையாம். அதிதேவதை சரஸ்வதியாம். படமஞ்சரியென்பது புருடவிராகம்; அரசஜாதி. இதின் மனைவிகள் தேசி, இல்லிதை, தோடியென்பவையாம். அதிதேவதை இலக்ஷ்மியாம், வசந்தமென்பது புருடவிராகம்; வைசியஜாதி; இதின் மனைவிகள் இராமக்கிரியை, வராளி, கைசிகம் என்பவையாம், அதிதேவதை சூரியனும்; மாளவியென்பது புருடவிராகம், வைசியஜாதி, இதின் மனைவிகள் நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி என்பவையாம். அதிதேவதை நாரதனும், பங்காளமென்பது புருடவிராகம். சூத்திரஜாதி; இதின்மனைவிகள் தன்னியாசி, காம்போதி, கௌளியென்பவையாம். அதிதேவதை விநாயகனும்; நாட்டையென்பது புருடவிராகம்; சூத்திரஜாதி. இதன்மனைவிகள் தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம் என்பவையாம். அதிதேவதை தும்புருவனும். இவையன்றிப் பல வகைப்பட வழங்கு மிராகங்கள் பலவுள.

Talams.

தாளம்:—தால்ப்பிரமாணம், பத்து விதமாகும். அவை காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், ஜாதி, களை இலயை, யதி, பிரத்தாரம் என்பவையேயாம். இவற்றுட் காலப்பிரமாணம், பத்தாகும். அவை கணம் இலவம், காட்டை, நிமிடம், துடி துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என்பவையேயாம். இவற்றுள் கணமென்பது தாமரையிதழ் நூறடுக்கி அதில் ஓரிதழில் ஊசிசெலுத்துங் காலமாகும். அப்படிக்கணம் எட்டுக்கொண்டது இலவமாகும். இலவம் எட்டுக்கொண்டது காட்டையாகும். காட்டை யெட்டுக்கொண்டது நிமிடமாகும். நிமிடம் எட்டுக்கொண்டது துடியாகும். துடியிரண்டுகொண்டது துரிதமாகும். துரிதம் இரண்டுகொண்டது இலகுவாகும். இலகு இரண்டுகொண்டது குருவாகும். இலகு மூன்றுகொண்டது புலுதமாகும். குரு இரண்டுகொண்டது சாகபதமாகும்.

VIEWS AND REVIEWS.

அபிப்பிராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Tamil Journalists' Conference.

தமிழ் பத்ராதிபர்களின் கான்பரென்ஸ் :—பத்ரிகைகளின் ஆசிரியர்களைச்சேர்த்து ஒரு கான்பரென்ஸ் நடத்திவிடுவது பெருங்காரியமல்ல. இந்தக் கான்பரென்ஸ் சாச்வதமாய் ஏற்படவேண்டும். அப்படி யில்லாமற் போனால் ப்ரயோஜனமில்லை. ஆகவே இவ்விஷயத்தில் தமிழ்ப் பத்ரிகை நடத்து வோரனைவோரும் கவனம் செலுத்த வேண்டியதோடு, சரீரப் ப்ரயாசையும் பொறுப்பும் எடுத்துக் கொண்டு விடாமுயற்சியுடன் இதற்கு உழைக்க ஒருவர் முன்வரவேண்டும்.—சுதேசமித்திரன்.

Evils of Palmistry

கைக்குறி காட்டுவதிலுள்ளகேடு:—உள்ளங்கை ரேகைகளைப்பார்த்து மனுஷரது ஜீவித நிலைமைகளை அறியலாமென்று நினைப்பது சரியன்று. அனேகர் போலி வேஷதாரிகளாய் மனிதர்களை மோசம் செய்கிறார்களென்று அறிந்து ஜெர்மன் கவர்ன்மெண்டார் இதைதண்டனைக்குட்படுத்தியிருக்கிறார்கள்.—இந்து பத்திரிகை.

In dentured Labourers.

ஒப்பந்தக் கூலிகள் :—" இந்தியாவிலிருந்து எக்காரணம் பற்றியும் எவ்விடத்திற்கும் ஒப்பந்தத்திற்குக் கூலிகளை அனுப்புதல் கூடாது. கூலிகளை அந்நியநாட்டுக்கு ரிக்ரூட்செய்யும் சட்டத்தையே எடுத்துவிடும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்கவேண்டும்." ரெவரண்ட் மிஸ்டர் சி. எப். ஆண்ட்ருஸ்.

Music Education.

சங்கீதக்கல்வி :— சங்கீதத்தால் மருகமும் பக்ஷியும் மனிதரும் கடவுளும் ஏளிதில் சந்தோஷ மடைவதாலும் இந்த ஞானம் ஸ்திரீகளிடம் அவச்யமிருக்க வேண்டுமென்று கடவுள் ஏற்படுத்தியிருப்பதாலும் ஒவ்வொரு ஸகோதரியும் சங்கீதத்தேர்ச்சி அடையவேண்டும். காளுடக சங்கீதத்துக்கு ஆர்மோனியம் தக்கதே. இருந்தாலும் வீணையும்பிடிலும் கற்பது நலம்.

ஆண்டாளம்மாள்.

Beware of Tooth-powder.

படிக்காரப் பல்பொடியின் கெடுதல் :—ப்ரதிதினமும் பல்தேய்க்க பல்பொடி உபயோகிக்கிறவர்கள் தாங்கள் வாங்கும்பொடி படிக்காரம் கலக்காததாவென்று விசாரித்துப் பின் வாங்கவேண்டும். படிக்காரம் சேர்ந்துசெய்த பல் பொடியால் பல்லுக்குக் கெடுதல் வருமென்று இங்கிலீஷ் வைத்யப்பத்ரிகையில் சொல்லியிருக்கிறது.

A Statisalcs.

ஒரு கணக்கு :—பர்மாவில் குழந்தை விவாகமென்பதே கிடையாது. சென்ற ஜனக்கணக்கின்படி ஆயிரத்தில் ஒருவன் 15 வயதிற்கு முன்னும் 78 சேர் 20 வாரத்திற்கு முன்னும் விவாகஞ் செய்துக்கொண்டிருக்கிறதாகவும் ஸ்திரீகளில் ஆயிரத்திற்கு 7 பேர் 15 வயதிற்கு முன்னும் 259 பேர் 20 வசதிற்கு முன்னும் விவாகஞ்செய்துக் கொண்டிருக்கிறதாகவுந் தெரிகிறது.

Census in India.

இந்தியாவின் ஜனத்தொகை :—1911-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் ஸென்ஸெஸ் எடுத்ததில் மொத்த ஜனத்தொகை 31,51 5[illegible] 369 அதில் 16,13,38,935 பேர் புருஷர் என்றும், 15,38,17,461 பேர் ஸ்த்ரீகள் என்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

VI

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Illtreament.

கொடுமை :— திருச்செங்கோடு அக்கிராரத்தில் வசிக்கும் ஒரு பிராமணத்தி தன் மருமகள் பாலைக் கை தவறவிட்டு ஊற்றிவிட்டதுதற்காகக் கொள்ளிக் கட்டையால் மருமகளுடைய கன்னத்தைச் சுட்டுப் பொசுக்கிவிட்டாள்.

A case of Soti.

உடன் கட்டையேறி இறந்தாள் :— வங்காளத்திலுள்ள மைமென்சிங் என்ற நகரில் பாபு மனோரஞ்சன் சௌதரி என்றவர் சில தினங்களுக்குமுன் இறந்து போய்விட்டார். சிறு பெண்ணாகிய அவருடைய மனைவி தன் தேகமெல்லாம் மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு நெருப்பை வைத்துக்கொண்டுவிட்டாள். அவளுடைய உறவினர்கள் அதை அறிந்தவுடன் நெருப்பை அவித்துவிட்டபோதிலும் வெந்த காயங்களினால் அந்தப் பெண் இறந்து போய்விட்டாள். உடன் கட்டை ஏறி இறந்து போவதைத்தடுக்க சர்க்கார் சட்டம் கடுமையாக யிருந்தபோதிலும் வங்காளத்தில் இந்த வழக்கம் அடியோடு நின்றுவிடவில்லை,

A Freakish lady.

ஒரு கிருக்குப்பிடித்த ஸ்த்ரீ:—அமெரிக்காப்ரஸிடெண்டிக்கு ஒரு ஸ்தரி தனக்கு ஆணுடை தரித்துக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டு மென்று விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறாளாம்.

Mrs. Ghandi.

மிஸ்ஸஸ் காந்தி :—இவர் ஜெயிலில் இருக்கும்பொழுது பிரத்யேகமாய் ஆகாரம் சாப்பிட ஜெயில் அதிகாரிகள் அனுமதி கொடுக்கவில்லை. ஆதலால்மிஸ்ஸஸ் காந்தி மிக்க மெலிவுற்றிருக்கிறார். எலும்புதான் சரீரத்திலிருக்கிறது. பார்வைக்குத் தள்ளாடும் கிழவியைப் போலிருக்கிறார் என்று மிஸ்டர் போலக் கோகலேயிக்கு தந்திசமாசாரம் கொடுத்திருக்கிறார்.

An American Lady.

ஒரு அமெரிக்க ஸ்த்ரீ :— வங்காளாக் கவீஸ்ர வராகிய ரபீந்த்ரநாத் டாகூர் அமெரிக்காவுக்குச் சென்ற பொழுது அவர் வில்லியம் வாகன் மூடி என்பவரின் விருந்தினராக விருந்தார். கவீஸ்வரரின் மனோசக்தியையும் ஆராய்ச்சித்தன்மையையும் கண்டு மெச்சி மூடின் மனைவி கவீஸ்வரரின் சீஷையாகிவிட்டாள். இந்த மாது ஸ்ரீ சகோதரி நிவே திதையைப்போல் இந்துஜன சமூக விருத்திக்கு உழைக்கக் கங்கணம் பூண்டு நம்முடைய தேசத்துக்கு வரப்போகிறார்.

The Travancore Maharanee.

திருவாங்கூர் மஹாராணி :—திருவனந்த புரத்திலிருக்கும் கேதரைன் (Catherine) ஸ்த்ரீ ஆஸ்பத்திரிக்கு, 3000-ரூ செலவழித்து ஒரு கட்டிடம், மஹாராணி கட்டப்போகிறார்.

An Old Lady.

ஒரு கிழவி :—ஜெர்மனி தேசத்திலுள்ள டார்மோவா என்ற ஊரில் 'ஹெட்விக்ஸ்டராம்னா' என்ற ஓர் குடியானவ ஸ்த்ரீ இருக்கிறாள். அவளுக்கு வயது 120. அவள் பிறந்தது 1794-௵ அக்டோபர் ௴ 15௳ என்று ரிகார்டு மூலமாய் தெரிகிது. அவள் தற்காலம் உருளைக்கிழங்கு பயிரிடும் தொழில் செய்து வருகிறாள். ப்ருஷியன் யுத்தம் நடந்த சமாசாரம் முற்றிலும் ஞாபகத்தில் வைத்துப் பலருக்கு இவள் கதையாகச்சொல்கிறாள்.

Lady Preachers.

ஸ்த்ரீ உபந்நியாசகர்கள் :—அமெரிக்காவில் 5,000 ஸ்த்ரீ உபந்நியாசகர்கள் ஸ்த்ரீகளுக்காகவே உழைத்து வருகிறார்கள்.

WIT & HUMOUR.

தமாஷ்.

[illegible]ecdote

சம்பவம் :—சமீபத்தில் ஜார்ஜ் [illegible]வர்த்தியின் மனைவியாராகிய [illegible] மேரி தமது நண்பரொருவர் [illegible]க்குச் சென்றிருந்தார். அங்கி[illegible] காஸில் மியூஸியம் (அரண் [illegible] மியூஸியம்) என்ற பொருட் [illegible]சி சாலையைப் பார்வையிடலா[illegible]ன்று புறப்பட்டுப்போனார். அங்கு [illegible]ற்கார்த்து வந்த சேவகன் மேரி [illegible]ணியைப்பார்த்து அறியாதவன். [illegible]னி வாசற்படியண்டை சென்ற [illegible], அச்சேவகன் இராணியையழை[illegible] அவர் கையில் வைத்திருந்த [illegible]டையை மற்றவர்களைப்போல் கட்[illegible]த்திற்கு வெளியிலேயே வைத்து [illegible]டுப் போகும்படி சொன்னான். [illegible]காராணி அதற்குடன்படவில்லை. [illegible]தாம் இன்னாரென்று சொல்லவும் விரும்பவில்லை. சேவகன் இராணியை மியூஸியத்திற்குள் விடவுமில்லை. மஹாராணி தன்னுடைய [illegible]ஜாங்கங்களுடன் வராமையால் [illegible] இருந்தவர்களுக்கும் அவர் யா[illegible]று அடையாளங்கண்டு கொள் [illegible]டவில்லை. நல்ல வேளையாய் அச்சமயத்தில் ராணியின் நண்பரான நார்விச் பிஷப் அங்கு வந்துசேர, அவர் சேவகனுக்கு குடையை வெ[illegible]ரியேவி[illegible]பவர் மேரி ராணியா[illegible]ரன்று [illegible]த்த பிற்பாடு, சேவ[illegible]ன் உட[illegible]கி மன்னிப்புக் கேட்[illegible]கொண[illegible]

* * *

தங்கை[illegible]ா சாப்பு கடை[illegible]ல் என்[illegible]கு.

அக்கா[illegible]. இது தெரி[illegible]தா, கச[illegible]டில் மாமிசமிருக்கு.

தங்கை :—நான் [illegible]ப்பு கடை[illegible]ல் என்ன யிருக்கு[illegible] கேட்டா, [illegible]மெங்கிறை[illegible]

அக்காள்:—ஓ, சாப்பு கடையிலையா, அங்கே கொடை, விளக்கு, பேனா, பொத்தகம், சோப்பு, சீப்பு, எல்லாமங்கே யிருக்குது.

தங்கை:—தங்க நகை அங்கே யிருக்குதூது சொன்னாங் கக்கா.

அக்காள்:—ஓ, ஹோ, சாப்பு கடைக்கு சாப்கடை கசாப்புக்கடையென்று சொன்னாயா? சாப்புக்கடையில் தங்க நகைகள் விக்கிறாங்கோ, இல்லா விட்டால் மச்சாங்கிட்டே தங்க (தங்கை) நகைகளிருக்கும்.

* * *

இளவரசன் :—அப்பா, எல்லாத்துக்கும் தான் வரிபோடுகிறீர்கள். தொலைந்து போகிறது. மூத்திரத்துக்குக்கூட வரியா? இது நன்றாயிருக்கவில்லையே!

ராஜா :—வா, தம்பி, மூத்திரவரியால் வசூலான பணம் இது. முகர்ந்து பார். நாறுகிறதா?

* * *

Himself Doctor.

தனக்குத்தானே வைத்யன்:—பெர்லின் ஜர்மன் தேசப்ரதான நகரம். இதிலுள்ள ஒருவியாதிஸ்தன், "நானே ஜாக்ரதையாக மருந்துகளை செய்து உபயோகித்துக்கொள்ள எந்தவைத்ய ப்புஸ்தகம் படிக்கலாம்?" என்று ஒரு டாக்டரைக் கேட்டான். அதற்கு அவர், "நண்பா! ஜாக்ரதை. புஸ்தகங்களில் அச்சுப்பிழையிருந்தால் என்றைக்காவது அந்யாயமாய் நீ இறந்து போவாய்." என்றார். அறைகுறையாய்த் தெரிந்தவர்கள் வைத்யம் செய்ய ஆரம்பித்து சகலமும் தெரிந்ததாக பாவிப்பதால் அகால மரணங்கள் அந்யாயமாய் உண்டாகின்றன. "ஆயிரம் பேரைக்கொன்றவன் அரைவைத்யன்." இது முறையாய்க்கற்காத போலி வைத்யர்களுக்காக சொன்ன பழமொழி.

VII
EVENTS OF THE MONTH.
மாஸ வர்த்தமானம்.

ஜூனவரி 1914.

5-நீதேதி.—மலேயாளம் அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் வ ராவ் பஞ்சமர்களுக்காக ஒரு ராத்ரி பாடசாலையை இன்று திறந்து வை இந்த பாடசாலையை ஏற்பதித்தும் புண்யகாரியம் மிஸ்டர் பி. டி. ர டையது.

13-நீதேதி.—ஜப்பானைச் சேர்ந்த ஸாகுராஜிமா என்னும் தீவிலி ஒரு எரிமலை நெருப்பைக்கக்க ஆரம்பித்து விட்டது. சுற்று பக்கத்திலி அநேக ஆயிரம் ஜனங்கள் தங்கள் ஊர்களை விட்டு ஓடிப்பிழைத்தார்கள்.

18-நீதேதி.—திருவல்லிக்கேணி லக்ஷ்மி விலாஸ ஸபையின் 3-வது வேஷாற்சவம் இன்று ஹிந்து ஹைஸ்கூலில் நடந்தது. தமிழ், தெலு கன்னடம், சமஸ்கிருதம் இங்க்லீஷ் பாஷைகளில் வ்யாஸங்கள் வாசி பெற்றன. மிஸ்ஸஸ் அன்னி பெஸண்ட் அக்ராசனம் வஹித்தார்.

19-நீதேதி சானிடரி கான்பரென்ஸ்.—இந்த வருஷம் லக்னௌ கூடி று. மலேரியா காய்ச்சல், பாடசாலைகளை வைத்யர்களைக் கொண்டு சோதிப்பது ஆகிய விஷயங்களைப் பற்றி பேசப்பட்டது. மேலும் சி ணம், பால்வியாபாரம் சம்பந்தமான வியாசங்கள் வாசிக்கப்பட்டன.

19-நீதேதி புதுக்கோட்டையில் பொருட்காக்ஷி.—இந்த வரு மூணவர்களின் தேகப்பயிற்சி சாமான்கள் விசேஷமாகக் காட்டப்பட்டி தன. விதவிதமான பட்டாடைகளுக்குக் குறைவில்லை.

20-நீதேதி உபாத்யாயர்களுக்கு ப்ராவிடண்ட் பண்ட்.—இன்று டெ வியில் இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க ஒரு கமிட்டி கூடியிருக்கி மது ராஜதானியிலிருந்து ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ப்ரணதார்த்தி ஐயர் இது சம்பந்தமாய் சென்றிருக்கிறார்.

23-நீதேதி.—திருவனந்த புரம் ஜூனியர் ராணிக்கு ஒரு பெண் கு ந்தை பிறந்தது.

25-நீதேதி.—திருச்சி ஜில்லாக்காண்ப ரென்ஸ் இன்று [redacted] லையி கூடிற்று. திவான் பஹதூர் எல். எ. கோவிந்தராகவ ஐ [redacted] ராசலு பதி.

26-நீதேதி சஷ்டி அப்த பூர்த்தி.—சுதேசமித்ரன் [redacted] மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய ஐயரின் 60-வது வருஷ பூர்த்தி நடந்த [redacted] இடை னில் கூடி அவருக்கு உபசார கடிதங்கள் அனுப்பினார்கள்.

27-நீதேதி.—விவாகமான பிள்ளைகளை சகிண்டரிப் [redacted] டங்களி சேர்த்துக்கொள்ளாமல் தடுக்கவேண்டுமென்று ஒரு மெம்ப [redacted] ருவாங்க பூர் மூலம் சபையில் அபிப்ராயப்பட்டதை திவான் ஆலோசித்து முடி செய்வதாக ஒப்புக்கொண்டார்.

சாவி.—(மெதுவாய்) பெண்கள் என்றால் நகையைத்தான் விரும்புவார் கள் என்று எண்ணிவிட்டார் போலும். (வெளிப்படை) என் அப்பா, எனக்கு எதற்கப்பா இதுகள் எல்லாம்.

தூண.—ஆம் யாரே அழகுக்கழகு செய்வார்? ஆயினும் நான் வாங்கினது உனக்கென்றே வாங்கிவிட்டேன். (கங்கணத்தை அவள் கையில் கட்டு. அவள் கையை நீட்டுகிறாள். (ஜோஸ்யர் வருகிறார்.) ராஜும் பின்னால் வந்து பைசகில் ரப்பர் குழாயை அவர் மீது எறிந்து பாம்பு பாம்பு என்று கத்த ஜோஸ்யர் அலறிகுதிக்கிறார். வளையில் தவறி கீழே விழுந்து உடைந்து போகிறது. ராஜம் ஓடிவிடுகிறான். குமாரம் ஜோஸ்யரை சமாதானம் செ கிறார்.)

தூண.—ஆ! சாவித்திரி வளையல் போனால் போகிறது. மறுபடியும் கட்டிவிடலாம். இதற்காக வருத்தப்படுவானேன் (மெதுவாய்) உனக்கு இ விவாகம் சம்மதம் தானே. என் சாவித்திரி

சாவி.—எனக்கு இப்போது கலக்கமாயிருக்கிறது. என் தந்தையை கேட்டுக்கொள்ளுங்கள் அவர் இஷ்டமே என்னிஷ்டம். ஐயோ விலையுயர்ந்த அழகிய வளையலை உடைத்து விட்டேனே. என்னை மன்னிக்கவேண்டு தாங்கள்,

தூண.—அதற்கென்ன?

ஜோஸ்.—முகூர்த்தமென்ன மதுரையில்தானே? நானே வந்து கட்டி

தூண.—மிகவும் சந்தோஷம்.

தூமா.—வெளியில்போய் வரலாமே வருகிறீர்களா.

தூண.—ஆகா அப்படியே மூவரும் வெளியிற் செல்லுகிறார்கள்.

(சண்பகம் சிரித்துக்கொண்டே வருகின்றார்)

சண்.—சாவித்திரி, நான் ஒளித்திருந்து கவனித்தேன்.

சாவி.—அயல் ஆடவர் முன் நிற்கும்பொழுது, நீ சொல்வது போல் நாணல் கோணல் செய்து கொள்வது பிசகு. கௌரவமாகத்தான் நிற்க வேண்டும்.

சண்.—நீ சொந்த புருஷன் முன்தானே நின்றாய்: அப்படி யெல்லாம் செய்துகொள்ள வில்லையே.

சாவி.—(கோபித்து) சண்பகம். விவரகம் ஆகும்வரை ஒன்றும் உன் ராதே. இதுதான் நம்மவரின் கெட்ட வழக்கம்.

சண்.—ஆமாம் உன் மனதில் அளவற்ற அன்பும் ஆவலுமிருந்தால் உன் வயதில் இக்கிலேமையிலிருப்பாயா.

சாவி.—இப்பேச்சை விடு. கல்யாணமாய் விட்டால் உங்களை யெல் லாம் பிரிய வேண்டுமே என்று இப்போது முதல் வருத்தமா யிருக்கிறது. சரி நீ சற்று பாடு.

சண்.—நான் வீணை வாசிக்கிறேன் (சண்பகம் பாடுகிறாள். சாவித்திரி வீணையில் சுருதி கூட்டுகிறாள்.)

செஞ் சுருட்டி ரூபகம்.

ஞானினிப் புகல்வதென் னுயகமே நின்றன் முன்
வாணியோரு ருவான வனிதாய் நின்னியல்பினை (ஞானினி)
பாணியில் வீணையுடன் கானம் செய் நித்தியகல்
யாணி நின்னிசை வினவிடார் செவிட ரொப்பா ரென (ஞானினி)

சாவி.—தெய்வத்தைப் பாடவேண்டிய வாயால் மானிட ஸ்துதி செய்யாதே. (ரகுநாதன் ஓர் புறமாக மறைவில் வருகிறான். கிலேக்கண்ணுடியில் சாவித்திரியின் உருவத்தைக் கண்டு பிரமித்து நிற்கிறான்.)

சண்.—சாவித்திரி உன் பாடல்களில் ஏதாவது பாடு. பிறகு சுலோகங்கள் ஏதாவது பாடலாம். சாவித்திரி வீணையுடன் பாடுகிறாள்.

ராகம் நாட்ட குறிஞ்சி தாளம் சாபு.

மன்னன் ரகுநாதன் மகிமை சொல்
மானிடரால் தரமோ.

அனுபல்லவி.

என்னின் சகியே, யான் பன்னு வன் கேள் நம
தன்னை மைதிலியினேட் மன்னவன் கருணை.

சரணம்.

மத்த கஜ மொத்த நடை யுற்ற வந்த உத்த மன்றன்
சித்தடி பெருத்த கன் மேற்றுக்க
சித்திழையாம மலிசை குற்ற சாப நீங்கிட
மெத்த மகிழ்ச்சியுடன் பக்தர் குறை தீர்க்கும்.

ரகு.—(தனக்குள்) ஆகா. என்ன சாரீரம். மதுரபாவம். சங்கீத வித்வத்தி. இசை யாவும் பொருந்தியிருக்கின்றது! (கண்ணுடியில் உற்று நோக்கி, இவள் அழகிற் சிறந்தவளாயினும மதுரபாவம் அதற்கு மிஞ்சி யிருக்கின்றது. சே. ஸ்திரீகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பவனை நிந்திக்கும். நான் சோரனைப்போல் ஒளிந்து பார்ப்பது கேவல மல்லவா! சங்கீதமே. உன் மகிமையே மகிமை. (சாவித்திரி) மறுபடி பாடுகிறாள்.

ரகு.—(மறைவில் தன்னுள்) ஆகா. என் மெய் சிலிர்க்கின்றதே. என்ன வாக்ஸ் பஷ்டம்.....நான் பி. ஏ. வரை ஸம்ஸ்க்ருதம் படித்தும் இத்தச்லோகம் கேட்ட தில்லையே. இதுதான் பள்ளிப் படிப்புக்கும் நிஜ வித்யைக்கும் வித்தியாசம். இவள் வாக்குக் கென்றே ஸம்ஸ்க்ருத பாஷை சிருஷ்டிக்கப்பட்டதுபோலும்—இப்பெண் யார்—குமாரத்திக்கு விவாக மாகாத பெண் ணொருத்தியிருக்கின்றாள் என்று பூஷணம் சொன்னானே. அவள் கூட அழகு யென்று சொன்னதால், இவள் தான் அவளாயிருக்கவேண்டும்—கூட இருப்பது யா

ஓ. சண்பகமோ. இவர்கள் என்னை இன்னிலைமையிற் கண்டால் இக்ழ் வாய் கருத மாட்டார்களா! நான் போய் விடுவதே நல்லது. (சாவித்திரி இசை கூட்டுகிறாள்) சற்று நியங்கி. ஹ; சுருதிக்கும் சாரீரத்துக்கும் வித்தியாஸமே தெரிய வில்லையே. கால் மூன் இழுத்தால் மனது பின் இழுக்கின்றதே. ஐயோ. கபடமே. நீ நுழையாத நெஞ்ச மில்லை! இதென்ன கீழே காகிதம் சுருண்டு கிடைக்கிறது. (குனிந்து எடுத்து பார்க்கிறான்) ஆ அப் பெண்மணி யின் உருவம்—யார் இதை இவ்வளவு நிறமையுடன் எழுதியதோ—அடா அப் படியே இருக்கிறதே. இதை தெய்வம் தான் என் கையில் சிக்கும்படி செய் தது (சட்டைப்பையில் வைத்துக் கொள்கிறான், சாவித்திரி பாடுகிறாள்.)

ராகம் ஆபேரி. தாளம் ஆதி. (சுகுமோ மோகன)

பல்லவி.

ஆகுமோ மோகனுங்கியே இத்தனை பராமுகம்
ஆதரித்திட லாகாதா.

அனுபல்லவி.

நாகசயனன் பகிளி பாகி நாணி. பரி பூரணி
மானினி யானனி எனினி. சோதனை செய்குறயம்மணி ஈதாடு

சரணம்.

ஸ்ரீதரி கண்ணன் அவாதரி என்னையாதரிப்பாய் தயாபரி
ஸ்ரீமஹி மதுரம்மணி ஈசன் கண்மணி பசும் பொன்மணியே
பூதல முண்ட புங்கவனு மச்செங்கண் மாலினைத் தங்கையே.
சங்கையே னங்கையே பொங்கு மருளமிர்தம்...யொழியங்கையற்
கணி (ஈதாடுகுமோ).

(வேறு:)

சந்தம். அடதாள சாபு யதுகுல காம்போதி.

அண்ட சராசர முண்ட பிராமனை
கண்டக ராவணனைத் தண்ட மதாக்கியோனை
எண்டிசை புகழும் கோதண்டபாணி யவனை
கொண்டாடி பணினிகை குண்ட மதிற் கேகவே.

(சங்கீதத்தின் உருக்கத்தினால் சண்பகம், நித்திரை போகிறாள். சாவித்திரி வீணையை கீழே வைத்து விட்டு நிமிர கண்ணுடியில் பிரதி பலிக்கும் ரகுநாதன் உருவைக் கண்டு திகைக்கிறாள்.)

சாவி.—(தனக்குள்) யார் இவர்...எனக்கு மறுபடி பார்க்கக்கூட தைரியம் வரவில்லையே. (எழுந்து மெல்ல வெளியே நிற்கும் ரகுநாதனை பார்க்கிறாள்). ரகுநாதன் திரும்ப இருவர் கண்களும் சந்திக்கின்றன. இருவரும் பிரமித்து நிக்கின்றனர். ராஜம் வருகிறான். சண்பகம் திடீரென நித்திரை தெளிந்து சாவித்திரியை கவனிக்கிறாள். சாவித்திரி பின்னடைகிறாள்.

சண்.—(தன்னுள்) இதென்ன ! ஆச்சரியம். சாவித்திரி இக்கிலேமையில் இருப்பதின் காரண மென்ன ? (வெளியில் பார்த்து) ஆ! அங்கு நிற்பது ரகுநாதனல்லவோ. அவனைக் கண்டு தான் பிரமித்து நிற்கின்றாள் போலிருக்கின்றது. இதென்ன சங்கடம். இணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாயிற்றே. எத்தகைய ஆடவனையும் அலட்சியம் செய்து கண்ணெடுத்துப் பாராதவள் கற்சிலைபோல் நிற்கிறாளே. இவனேன் இப்படி நிற்கிறான். பூஷணத்துக்கு நிச்சயிக்கப்பட்ட இவள் அவனை ஆவலுடன் பார்ப்பதும் அவனும் அவ்விதமிருப்பதும் சரியல்லவே. என்ன செய்வது—இப்பொழுது—(வெளி) சாவித்திரி அங்கென்ன பூச்சி பிடிக்கிறாயா. இல்லாவிட்டால் கண்ணுடிக்கு அழகு காட்டுகிறாயா. (சாவித்திரி தலை குனிந்து மௌனமா யிருக்கிறாள்.

ராஜு.—இந்த யூரோப்பியன்களுக்கு கொஞ்சமாவது கெட்டிகாரத்தனம் இருக்கிறதா. தங்கிக்கு கம்பிகள் தூண்கள் எல்லாம் வைத்துக் கவ்டப் படுகிறானே. இங்கே கண்ணுக்குக் கண் டெலகாம் அடிக்கிறார்களே தம்பிடி பிலவில்லாமல். (தன்னுள்) இதைப்போய் பூஷணத்தினிடம் சொல்லி விடுகிறேன் (போகிறான்).

ரகு.—(தன்னுள்) இந்த காவாலிப்பயல் இங்கெங்கு வந்தான். (வெளி) குணபூஷணம். பூஷணம் (கூப்பிடுகிறான்.)

சாவி.—சண்பகம். யாரோ கூப்பிடுகிறார்கள் பாரேன்.

சண்.—பூஷணம் இல்லை யென்று சொல்லேன்.

சாவி.—நீ தான் போய் சொல். நான் மாட்டேன் (வெட்கி நிற்கிறாள்.)

சண்.—சாவித்திரீ. அன்னியரைக்கண்டு இவ்விதம் கூசுவது பிசகென்றாயே. நீ உன் நிலைமையை யோசித்துப்பார் (பெருமூச்சுறிகிறார்).

சாவி.—நான் கூசவு மில்லை. பேசவு மில்லை. நீரோ எழுந்திரும் சிக்கிரம்.

ரகு.—பூஷணம். குணபூஷணம். (கூப்பிடுகிறான்) சண்பகம் வெளியில் வருகிறாள். சாவித்திரி உள் சென்று மறைகிறாள். (ரகு) யார். அக்கா, நீங்களா. பூஷணம் இங்கு இல்லையோ ?

சண்.—இல்லை. இப்பொழுது தான் வெளியே போனார்கள்.

ரகு.—என்னை இங்கு வரச் சொல்லி இருந்தாரே (சாவித்திரி சாளரத்தருகில் வந்து மறைந்து கவனிக்கிறாள்.)

சண்.—இன்னேரம் வரை காத்திருந்தார். நீ வரவில்லை. ஆகையால் வெளியே போய்விட்டார். நீ வெகு நேரமாய்க் காத்துக்கொண்டிருந்தாயோ. நான் அவள் பாட்டைக்கேட்டுக் கொண்டே தூங்கிப் போனேன், (ரகு) யார் பாடினது. (சண்) அவள் குமாரத்தியின் புதல்வி சங்கீதத்தில் அவளுக்கு ஜோடியே கிடையாது.

ரகு.—இன்னும் விவாகம் ஆக வில்லை போலிருக்கிறதே.

சண்.—இல்லை : தன் பத்தியறிந்து செய்து கொள்ளட்டும் என்று முனையே செய்ய வில்லைபோலிருக்கிறது. இப்போது தான் ஏதோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள். (ரகுநாதன் மௌனமா யிருக்கிறான்) நான் கொஞ்சம் அவசரமாய் போக வேண்டியிருக்கிறது.—(ரகு) சரீ. (சண்பகம் போகிறாள்).

ரகு.—ஆ ! இதென்ன எனக்கு பைத்தியமா. அப்பார்வை ஆம். என்னையும் தன்னிலைமையை மறக்கச் செய்து கனவிலும் கிட்டாத எண்ணங்களை யுண்டு பண்ணுகிறதே ! அப்பார்வையின் அர்த்த மென்ன. உறுதியாய் புலப்படவில்லையே என்ன மனோ ராஜ்யம்—இது நமக்கு கிட்டும் விஷயமோ. பிரமையா இது என்ன மூடத்தனம். ஆனால், அவள் கண்ணிகைதானே...எற்பாடாய் விட்டதென்றானே. யாருக்கு நிச்சயித்திருக்கிறதோ. ஆனால் இப்பார்வை என்னை கேவலம் ஏழையான என்னை, அன்னையான என்னை, மூன் பின்னறியாத என்னை, கௌரப்படுத்தியதன்றோ. இது உண்மையாய் நிறைவேறு மாயின் நான் பாக்கிய வானே. ஐயோ மற்றொரு முறை இங்கு அவளைக்காண ஆவலாயிருக்கிறதே. இவள் இங்கித்தைக்கண்டு எனக்கு அவள் வேறொருவனை மணம் செய்து கொள்வாளோ வென்று சோசனையாயிருக்கிறதே. குணபூஷணத்தைக் கேட்போம். அவனும் சுகாரமும் வெகு நேசமாயிற்றே—ஆம்—ஆஹா சஞ்சலமே எப்பொழுதும் குடி கொண்டிருந்த என் மனதை இப் பெண்மணி அரை நிமிஷத்தில் அல்லோல கல்லோலப்படுத்தி விட்டாளே. ஆஹா ! என்ன அழகு. என்ன, சரீரம் நினைக்கா விட்டாலும் மனம் ஸ்தம்பிக்கின்றதே. (ரகுநாதன் பிரமித்து நிற்கிறான். குணபூஷணம் வருகிறார்.)

குண.—(தன்னுள்) என்ன இந்தப் பையல் அப்படி உளறினான். அவனை யலட்சியம் செய்து தூக்கி விட்டேன். ஆயினும் ஒருக்கால் அப்படி கேட்டோமென என்மனம் அஞ்சுகிறது. ஐயோ, அந்த வேளையல் உடைத்தது. (முதல்) என் மனம் நிதானமற்று அலைகின்றதே. குணத்தை நம்பலாகாதென்று என்ன தான் புத்திக்கு தோன்றிய போதிலும் தன் விஷயத்தில் அது மனதைத் துளைக்கின்றதே. நான் அவனை மெய் மறந்து நோக்கிய பொழுது அவளிடம் காதற் குறி யொன்றும் துலங்க வில்லை. அதோ ரகுநாதன் ஏன் ஒருவிதமாய் செயலற்று நிற்கின்றான்...ஐயோ...மாஜம், சொன்னது மெய்யாயிருக்குமோ. இப்போது இவனை பார்த்து என்ன சமாசாரம் என்று விசாரிப்போம். எதாவது இருந்தாலும், நம்மைக் காட்டிக்கொள்ளாமல் அறிந்து கொள்வோம். குமாரம் இவர்களுக்கு இடங்கொடுக்க மாட்டார். அவரே இவனுக்கு மணம் செய்யவும் சம்மதியார். (அருகில் சென்று) ரகுநாதா என்ன பலமான யோசனை. நான் வருவதைக்கூட கவனியாமல் (சாவித்திரி மறைந்து கேட்கிறாள்.)

ரகு.—(திடுக்கிட்டு) பூஷணமா, உன்னைத்தேடியே இங்கு வந்தேன். இங்கு ஒரு பெண் குமாரத்தியின் குமாரிபோலிருக்கிறது. வீணை வாசித்து

கொண்டிருந்தாள். நான் வெளியில் நின்று கேட்டேன். என்ன இனிமை யாயிருந்தது. அது தான் பிரமித்து நின்றுவிட்டேன் சற்று. (பூஷணம் முகம் மாறுகிறது) ஏன் நான் செய்தது தவறுதான். சங்கீதத்தைப் பைத்தியத்தி னல் வந்த முட்டாள் தனம் அதை நீ மன்னிக்கவேண்டும்.

தூண.—(தன்னுள்) ஐயோ என்ன அடக்கியும் வெளிவந்து விடும் போலி ருக்கிறதே (சிரித்துக்கொண்டு வெளிப்படையாய்) பார்த்தாயா, எனக்கு சங் கீதத்தில் ஆழ்ந்த ஞானமில்லை யென்று- வெறுப்பாயே. அது எவ்வளவு நன்மை பார்த்தாயா போகட்டும் பிறகென்ன.

ரகு.—பிறகு சண்பகத்துடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்பெண்ணு க்கு சீக்கிரத்தில் விவாகமாகு மென்றார், உனக்குத்தெரியுமோ. மனகமன் யானன்று.

தூண.—இதைப்பற்றி உனக்கு என்ன கவலை என் பைத்தியம் மாதிரி மூழிக்கிறாய் போகலாம் வா. நம்வேலைக்கு.

ரகு.—எனக் கென்னவா பூஷணம் எனக்கவலியம் தெரிய வேண்டும். இவ்விஷயம் நீ என் நண்பனை யிருந்தும் இதைச் சொல்ல மறுக்கிறாயே. யாருக்கு அப்பெண்ணை நிச்சயித்திருக்கிறார்கள். அப்பெண்ணுக்கு விருப்பம் தானே. அவன் மேல்.

தூண.—என் விருப்ப மில்லாமலென்ன. குமாரம் தன் பெண் மனதி ற்கு விரோதமாய் ஒன்றும் செய்யார். இதைப்பற்றி உன் மனதில் ஏதோ எண்ணுகிறாய் போலிருக்கிறது. அதைச் சொல் ஒளியாமல் முன்ட

ரகு.—பூஷணம். நான் சொல்வது அகம்பாவ மென்றும் மூடத்தன மென்று மெண்ணாதே. அப்பெண்ணுக்கு வேறு வரன் ஏற்பாடு செய்திருந் தால் அதில் அவளுக்கு விருப்ப மிராமல் கட்டாயத்துக்குட் பட்டிருக்கவேண் டும். அல்லது அப்பெண் கற்பின் தன்மை தெரியாதவளா யிருக்கவேண்டும்.

தூண.—அடே டோசனை யில்லாமல் என்ன உளருகிறாய்.

ரகு.—பூஷணம் என்னை வீணாய் கோபித்துக் கொள்ளாதே. உன்னைத் தவிர வேறு உற்றத்துனை யில்லாதது பற்றி உண்மையை உன்னிடம் சொல் லுகிறேன். அப்பெண் என்னை உற்று பார்த்தாள். அப்பார்வை என் மனதில் புதிதாய் களங்கத்தை யுண்டு பண்ணினது. அவள் என்னை விரு ம்பியது அப்பார்வையில் விசதமாயிற்று. இது பொய்யானால் காதலைப் பற்றி உயர்வாய் கூறியிருக்கும் திருக்குறள் போன்ற புத்தகங்களை எடுத்து சமுத்திரத்தி லெறிந்து விடவேண்டும் (ஆடர்லி வருகிறான்)

ஆடர்லி.—எசமான். சுதர்சனம். எசமானை ஞாபகப்படுத்தி அழைத்த வரச் சொன்னாங்க.

ரகு.—பூஷணம். இதை. வெளியிடாதே. நான் போய்வருகிறேன். ஏன் பூஷணம் ஒரு மாதிரி இருக்கிறாய். ஆ. என்மேல் வருத்தமோ.

168

பூஷ.—அதொன்று மில்லை. குமாரம், ஒரு வாரத்துக்குள் தன் குமாரிக்கு விவாகம் செய்ய உத்தேசித்தார். நீ சொல்வதைப்பார்த்தால் அது எப்படி முடியுமோ வென்று தோன்றுகிறது. சரி. நமக்கென்ன அதைப்பற்றி நீ போகலாம். (ரகுநாதன் ஆடர்லி யுடன் போகிறார், பூஷணம் பெருமூச்சு டன் ஸோபாவில் உட்கார்ந்து தலையை பிடித்துக் கொள்கிறார், ஆ. என்ன விபத்து. எதிர்பாராமல் நேர்ந்தது இவன் சாவித்திரியைக் கண்டு மயங்கு வது ஆச்சரியமல்லவே. நானே அறி விழிந்தேனே. நான் தான் குறித்த வரன் என்று வெளியிட என் மனந்துணிய வில்லையே. ஆனால் இது விஷய மாய் சாவித்திரியின் மனதை அறிந்த பிறகு நான் யோசிக்க வேண்டும். இவன் சொன்னபடியே, நேரும் பகுத்தில் செய்வ தென்ன—ஒன்று தான் (திக்கத்துடன்) கடவுளே. நான் எதெதவினையனத்தினையும் கெடுக்கி ன்றாயே. நானுனக் கென்ன அபராதம் செய்தேன்...சாவித்திரீ...நீ...எனை விரும்பா விடில் என்பழி...உன்னையே சாரும் (மௌனம்) ஹா. ஒருக் கால் சாவித்திரி. அப்படி இல்லாம லிருக்கலாம் கான் ஏன் மீனைப் அவ சரப்பட்டு விருந்த வேண்டும். (பூஷணம் யோசித்துக்கொண்டே போகிறார் சாவித்திரி வெளிவருகிறாள்)

சாவி.—அம்மட்டும் தனக்கு நிச்சயித்திருப்பதாய் வெளியிடாததும் நான் செய்த தவப்பயன் தான். (யோசிக்கின்றாள்) என்ன ஆச்சரியம் என் னை என்னை யிழுத்துப்போகிறதே என்னை யறியாமல் பூஷணம் ஐயோ. உம் எண்ணம் பாழாகுமோ! ஆம் இல்லாவிட்டால் ஏன் மனதுக்கு சஞ்சல முண்டாகி ஆயுளளவும் நீரா வருத்தமுறும். அப்படி என்ன நினைபாரோ ஐயோ என் மனது இவர் பால் செல்வதை என்னால் தடுக்க முடி யவில்லையே. இதை யறிந்தால் குணபூஷணம் என்னை வற்புறுத்தி தன்னை மணம் செய்து கொள்ளும்படி நேடபாரோ—ஐயோ அவரை வெளிப்படை யாய் மணந்து உலகத்தில் உத்தமி யென்று பெயர் பெற்று விடலாம். ஆனால் என் மனதில் சதா இவர் உருவம் நிற்க மானஷீக துஷ்டையாய் என் ஆத் மாவினாலும் கடவுளாலும் தண்டிக்கப்பட்டு உயிருடன் நரக பாதையில் அகப் பட்டு வருந்தவேண்டுமே. சீ! இதைப்பற்றி இப்பொழுது யோசிக்கக்கூடாது. (மௌனம்) எது எப்படியாயினும் கற்பே பூஷணம். அதை காப்பதே என் முதற்கடமை.

ரகுநாதன். ஆம் நாதன் உத்தம அவதாரமாகிய ராமாவதாரத்தை மனத்துடன் பூஜித்த பலன் இன்று கிடைத்தது. அவனருளினால் முற்றும் இனிதாக முடியவேண்டும். (போகிறாள்)

அங்கம் I.—களம் III.

காட்சி 3 காலம் நிலவுள்ள மாலை. இடம். குற்றாலத்தருகிலுள்ள மலையில் மரங்களடர்ந்த, குகையும், பாறைகளும், வெளியிடமும்.

ஜீவானந்தயோகினி துக்கத்துடன் கண் மூடியிருக்கின்றனன். அருகில் முகமூடியிட்டு மற்றொரு ஸ்திரீ துக்கிக்கின்றனள். ஓர் வீரர் வாடியமுகத்துடன் நாற்பறமும் பார்த்துக்கொண்டு நிற்கிறான். விரத்தியானந்தயோகி குகைகுள்ளிருந்து வருகிறார்.

விரத்தி.—"ஜீவு, இதென்ன இதுவோ உன் மனஉறுதி, வெகு நன்னாயிருக்கிறது. எழுந்து ஸ்நாநம் செய்து விட்டு, ஆதியிந்தமற்ற பரம்பொருளை த்யானி. நான் சிறு வயது முதல் உன்னை இப்பாழுலகாசையை வெறுத்து துறவு பூணப்போதித்தேன். உலகம் நம்பாதென்று மணம் செய்து கொண்டாய். புத்திரிகளை நீன்று அவர்களையுமிழ்ந்தாய் கணவனையுமிழந்தாய், இக்காலம்வரை அவர்க்காக வருந்தினாய். தற்காலம் குணபூஷணத் [illegible]காக வருந்துகிறாய்.....ஆ. அஞ்ஞானமே அவனின்றி ஓரணுவும் அ[illegible]பதை யறியாதான்போலழுகின்றாய். நீ வருந்துவதில் யாதுபயன். [illegible] தீரும்...அவனார் நீயார். ஏன் இன்னும் உனக்கு இவ்வுலகில் பா[illegible] க்கையும் அற்றுப்போகவில்லை...குணபூஷணத்தை அரசனிடம் ஒப்[illegible] பொழுதே அவனைப்பற்றிய கவலையை விட்டுவிட்டதாக அன்று கூறினா[illegible]

ஜீவானந்தம்.—நான் உரைப்பதைக்கேள். விதியின் வழியே செயல். கஜபதி கையால் அவன் இறக்கவேண்டுவமன்பது பகவத்சங்கல்பமாயின் அதைத் தடுக்க கேவலம் பதர்களாகிய நம்மால் ஆகுமோ. நான் செய்த உபதேசம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்றே. ஐயோ கலிகால சந்நியாசி என்ன அபக்யாதியை நிலைநிறுத்துகின்றாயே. இதுவோ உன் ஞானம் (வீரனை நோக்கி) அப்பா நீங்கள் வந்த காரியம் முடிந்ததல்லவா? (முகமூடியிட்ட ஸ்திரீயும் வீரனும் நமஸ்கரிக்கிறார்கள்) நான் உங்களுக்கென்ன ஆசி கூறலாம். மாய உருவாய் வந்து மானிடரைவதைக்கும் இவ்வுலகபாசத்தை நீக்கி சீக்கிரத்தில் பகவான் திருவடிகளை யடைவீர்களாக.

ஸ்திரீ.—என்னையனே அவ்வாசியே நான் வேண்டுவதும் (பெருமூச்செரிகிறார்).

ஜீவா.—பெண்ணே உன் பிடிவாதத்தை விடமாட்டாயா. உன் மனமென்ன கல்வா. உடலென்ன இரும்பா. இனியேனும் நான் சொல்வதைக் கேள். நான் உனக்குக் கொடுத்த வரத்தை மீட்டுக்கொள்.

ஸ்திரீ.—அது ஒருநாளும் முடியாது. கொடுத்த வாக்கு தவறுவது தமக்கழகன்று என்ன கஷ்டம் நேரிடினும் ஈசனே கதி. என்ற நம்பிக்கையை தவிர என் உருதியினின்றும் தவறுவதில்லை. இது சத்தியம் நான் காவியுடை தரித்து தங்களுடன் திரிந்தால் தானா சன்னியாசி இப்பொழுதும் என் உள்ளம் பரம்பொருளையே நாடி நிற்கின்றது.....ஐயனே நேரமாயிற்றே. நான் விரு[illegible]வாம்.—

170

THE

FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
ster R. Thayarammah.

பத்ராதிபர் :
கோதரி ரேவு, தாயாரம்மா.

Vol. 3. தாகுதி 3. } ப்ரமாதீசஹு மாசிமீ, February. 1914. { No. 5. பகுதி 5.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for [illegible] pages.

Manager,
The "Female Ed[illegible]n",
M[illegible]E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

171

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

பெண்ணைப் பெற்ற தாயாரும் பெண்ணைக்கொண் மாமியாரும் தர்க்கம்.

பல்லவி....மெட்டு.

தாய்—அண்ணியரே எங்கள் கண்மணியைப் பி
தன்பாய் மணங்கொள்ளத் தந்தோமன்
மாமி—தந்தி லென்னம்மா சந்தோஷந்தானே பி
சஞ்சலம் போலே தளர்வதென்
தாய்—தளர்வ தொன்றும் பில்லைச் சண்டைசச்சர வென்
தாக்கவில்லை மேலே காக்கவேணு
மாமி—காப்பீபாயிரு செலவும் போட்டுகொடுத் துப்போ
கட்டிக்கொண்மரித கெட்டியன்றே
தாய்—கெட்டியிருக்கட்டும் மாப்பிள்ளையும் பெண்ணு
கெம்பீரங்காண்பதே சம்பூரண
மாமி—பூரணமான படிப்புமுத் யோகமும
புருஷர்க்குண்டானால் பொருள்வே றென்ன
தாய்—பொருளுலகத்திலே மாமி மருமகள்
போட்டி பூட்டி யென்பர் காட்டிச்சொன்னேன்
மாமி—காட்டவேண்டாவேயிக் காலநாகரீகங்
கண்கூர் பங்காளாவேறுண்டம் மம்மா
தாய்—பங்களாத் தோட்டமும் பாக்யமும் பெண்ணுக்குப்
பங்கோபஸ்தும் பார்த்துத் தந்தோ மல்ல
மாமி—அல்லவே எல்லாந்தா, குணந்தானுமெலே
நல்லகவி வாழி சொல்லுவமே.

அம்பிகை மேம்பிராட்டி துதி.

தேசிக தோடி—நடபகம்.

ணிகள்.

அம்பிகை பதம்	நம்பினவர்தம்
அன்பு கண்டுகு	லாவுவாம்
செம் பொன்னுலயங்	கும் பிடத்தினஞ்
செல்லுவோர் துணை	மேவுவாம்
சத்தியஞ்சிவ	சத்தி சமக்குச்
சகல தொழிலுங்	தந்திடும்
பத்திகொண்டடி பணிந்து	போற்றிடிற்
பாக்கியங்களும்	வந்திடும்
தேமிருந்தடங்	கிண்டிக் கற்பதிச்
சிலர்பஜனைக்	கூடமே
காமியம்பபி	ராமி சிர்முத்து
சாமிவி தித்த	பாடமே.

ஸரஸ்வதி துதி.

ராம மஹி ப்ரணதபால தயய தயய என்ற மெட்டு.

பல்லவி.

வாணிப்தம்	பேணிநிதம்
வழுத்தினனெஞ்	சமுக்குமலர்

அநுபல்லவி.

ஆணிமுத்து	மாலேமின்ன
வீணைதொடுத்துக்	தேனுசொன்ன
அழகுகலைமகளி	னுறையும்

சகலலோக மாதா கதி
புகலுவார்கள் வேதாவிதி
தழுவி வரினு நிழலு தவிய
துலக்கமான முகக்கண்ணோடு
மனக்கண்வேணு மெனக்கொண்டாடு
சுகிர்த பஜனை சகித மருவி
சத்யவாச கப்ரதான
முத்துஸாமி மொழியும் ஞான
ஸரஸ்வதி நிதி யருளுமுறுதி

ராமாயண ஓடம்.

பூலோக வைகுந்தமாம் அயோத்தி
புரிதனிலே அரசு கொண்ட
சாலோக சக்ரவர்த்தி தசரத
தருமகிமை திருமகனும்
தட்டாமலே வந்த பட்டாபிஷேகம்
தம்பி பரதன் பெறதந்த குணபாகம்
கிட்டாதபாகமது கங்கை நதிவேகம்
கங்கை நதி வேகத்தில் மங்களமனேகம்
சிஷ்டர் புகழ் கோதண்டராம வைபோகம்
சீதா சமேதம் பிதாவாக்ய மோகம்
தொட்டுவரு லக்ஷ்மணசாமிவுப யோகம்
சொல்லுகுக வேடனுக்கு நல்லது சினேகம்

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Poetess Sarojini.

கவீஸ்வரி ஸரோஜநி:—நமது ஸஹோதரி ஸரோஜனி தேகசுக நிமித்தமாக இங்க்லண்ட் சென்றிருக்கிறாள். சென்ற நவம்பர் மீ 7-ந்தேதி யன்று லண்டனில் ஸெஸில் ஹோட்டலில் கவிகளும் க்ரந்தகர்த்தர்களும் ஒரு கூட்டம் கூடி நமது ஸஹோதரிக்கு மரியாதை செய்தார்கள். அச்சமயம் மிஸ்டர் ஏட்ஸ் என்பவர் ஸரோஜனி வெளியிட்டுள்ள க்ரந்தங்களாகிய கோல்டன் த்ரெஷ்ஹோல்ட் (Golden threshold) பர்ட் ஆப் டைம் (Bard of Time)-இவைகளைப் பற்றி ச்லாக்யமாய்ப் பேசினார். அவைகளில் புலப்படும் அபூர்வ கற்பனா சக்தியையும் கவிப்புலமையையும் வ்யந்து பேசினார். ஜாதிவர்ண பேதங்களின்றி ஸஹோதரி ஆங்கிலப் புலவர்களால் மரியாதை செய்யப்படுவதைப்பார்த்தால் ப்ரிட்டிஷ் ஏகாதி பத்யத்தின் சில பாகங்களில் இந்த பேதங்கள் வலுத்து முன்னிற்பது க்யாபகத்துக்கு வருகிறது.

Mixed Eeducation in Bombay.

பம்பாயில் பெண்கல்வி:—இம்மாதம் 9-ந்தேதிவில்ஸன் காலேஜ் வருஷாந்தரக்கூட்டம் நடந்தது. அக்காலேஜ் தலைமைபோதகரான மிஸ்டர் மாபோதமோஹன் பேசினார். அவர் பேசின விஷயங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன. இப்போது வில்சன் காலேஜில் உயர் வகுப்புகளில் 29 ஸ்த்ரீகள் படிக்கிறார்களென்றும் ப்ரதிவருஷத்திலும் அநேகம் ஸ்த்ரீகள் பி. எ. முதலிய பட்டங்கள் பெற்று டாக்டர்களாகவும் உபாத்தினிகளாகவும் வந்திருக்கிறார்களென்றும் சொன்னார். ஆண் பிள்ளைகள் படிக்கும் காலேஜ்களில் ஸ்த்ரீகள் சேர்ந்து படிக்கலாமென்றும் அப்படி சேர்ந்து படிப்பதனால் ஒரு விதமான சௌகர்யக்குறைவாவது தவறுகளாவது உண்டாகவில்லை. மேலும் ஆண் பிள்ளைகள் அதிக நன்மையை அடைகிறார்களென்றும் அப்படிப்படிப்பதிலிருந்து பரஸ்பரமரியாதைகள் உண்டாகிறதென்றும் சொன்னார். அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்க ஸ்கூல்களும் காலேஜ்களும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதென்றும் அதனால் பெரும் நன்மைகள்

உண்டாயிருக்கிற தென்றும் தெரிவித்தார். இப்போது இங்கலாந்திலும் இம்முறையை அனுஷ்டிக்கக் கலாசாலைகள் ஏற்பட்டுவருகின்றன வென்றும் சொன்னார். இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பிக்க பெருமுயற்சிகள் செய்வது அவசிய மென்று கூறிவிட்டு வந்திருந்த கனவான்களை உற்சாகப்படுத்தினார். இருந்தாலும் ஸ்த்ரீகளுக்கு தனியான காலேஜ்கள் ஏற்படுதலும் நலமாகும். பம்பாய் ப்ரமுகர்கள் ஸ்த்ரீகளுக்கு காலேஜ்கள் ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்து வருகிறார்கள். இது கூடிய சீக்ரத்தில் வ்ருத்திக்கும் என்பது நிண்ணம். பம்பாய் கவர்னரும் ஸ்த்ரீகளுக்கு ப்ரத்தியேக காலேஜ் ஸ்தாபிக்க ஊக்கமெடுத்து வருகிறார்.

சென்னை எழும்பூர் ப்ரிஸிடென்ஸிட்ரெயினிங் ஸ்கூல் இப்போது ஹைஸ்கூலாக இருந்து வருகிறது. சென்னை கவர்ன்மெண்டார் வருஷா வருஷம் ஸ்த்ரீகளின் கல்வியபிவ்ருத்தியைக்கவனித்து ஸ்த்ரீகளுக்குப் ப்ரத்தியேக காலேஜ் ஏற்படுத்த பெரு முயற்சிகள் செய்து வந்தார்கள். இப்போது எழும்பூர் ப்ரிஸிடென்ஸி ட்ரெயினிங் ஸ்கூல் காலேஜாக உயர்த்தப்படுமென்று ஸர்க்கார் கெஜட்டில் ப்ரசுரமாயிருக்கிறது. நமது கவர்னர் லார்ட் பெண்ட்லண்டும் பொதுவாக கல்வியபிவ்ருத்தி விஷயத்தில் ச்ரத்தை கொண்டவராகையால் இவர் காலத்திலேயே காலேஜாக உயர்த்தப் பட்டது மிகவும் விசேஷம்.

சென்னை ராஜதானியில் உயர்ந்த வகுப்பில் படிக்கும் ஸ்த்ரீ மாணவர்கள் சொல்பம். படித்த பெற்றோர்கள் இச்சமயத்தை யறிந்து தங்கள் தங்கள் பெண்களை ப்ரைமெரிபடிப்போடு நிறுத்தாமல் உயர்ந்த வகுப்பில் படிக்கும்படி விடவேண்டும். ஆரம்பத்தில் காலேஜில் சேர்ந்து படிக்க மாணவர்கள் எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும் காலக்ரமேண இன்னொரு காலேஜ் ஏற்படுத்தும்படி நேரிடு மென்பது நிச்சயம். இதர ராஜதானிகளின் கல்வி இலாக ரிபோர்ட்டைக் காணும்போது சென்னை ராஜதானியைக்காட்டிலும் உயர்ந்த வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஜாஸ்தியா கத்தானிருக்கிறது.

Sanskrit School for Women.

பெண்களுக்கு ஸம்ஸ்க்ருதவித்யாலயம்:—பெண்களுக்குஸம்ஸ்க்ருத பாஷையைப்போதிப்பதற்காக திருவல்லிக்கேணி ஸைடாஸ்ரீலிருந்து 17-வது நெ. வீட்டில் 1913 ஆம் டிசம்பர் மீ 13-ந்தேதி

யன்று ஒரு ஸம்ஸ்க்ருத வித்யாலயம் ஸ்தாபிக்கப்பட்டு ஒழுங்காய் நடந்து வருகிறது. ஆரம்பித்து சில நாட்களுக்குள் 30 பெண்கள் வந்து சேர்ந்தார்கள். மூன்று மாதத்துக்குள் 70 பெண்கள் வரையிலும் வாசித்து வருகிறார்கள். இப்பெண்கள் 10 வயது முதல் 28 வயது வரையில் இருக்கிறார்கள். இப்பள்ளிக்கூடத்துக்கு உபாத்திமார்கள் ப்ரம்ம ஸ்ரீலக்ஷ்மண சர்மாதிகளும் அவரின் பார்யை ஸ்ரீமதி கமலாம்பாளுமிருந்து வருகிறார்கள். இந்த ஸம்ஸ்க்ருத வித்யாலயத்துக்கு மாதம் ரூ. 75 வரை பிடிக்கிறதாகத்தெரிகிறது.

இவ்வித்யாலயத்துக்கு கமது 'பெண் கல்வி' ப்பத்திரிகை போஷகர்களில் ஒருவராகிய ஸ்ரீமதி கே. கல்யாணி அம்மாள் (ஆனரபிள் ஜட்ஜ் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யரின் பார்யை) அவர்களும் போஷகராகயிருக்கிறார். இன்னும் பல சீமாட்டிகளும் கனவான்களுமிருந்து வருகிறார்கள். பெண்களுக்கு ஸம்ஸ்க்ருத வாசக புஸ்தகங்கள் ரகுவம்சம், குமாரஸம்பவம். ராமாயணம் இன்னும் மற்ற காவ்யங்களும் சில ஸ்ம்ருதிகளும் போதிக்கப்பட்டுவருகிறது. இதில் வயது வந்த பெண்களும் படிக்கிறார்கள், பாடம் சொல்லிக்கொடுக்கும் நேரம் காலை 7 மணி முதல் 8 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 4 மணி முதல் வரையிலும்தான். குடும்பப்பெண்கள் தாராளமாய்ப் படிக்கலாம். வீட்டு பெண்களுக்கு ஸௌகர்யமாகவே பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிற நேரமும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இனியாவது புருஷர்கள் சாக்குப்போக்குச் சொல்லாமல் தங்கள் மனைவிமார்களிடத்தில் தயை கூர்ந்து வித்யாலயத்துக்குப் போய்ப்படித்து வரும்படி அவர்களைத்தூண்டவேண்டும். பெண்களும் காலத்தை வ்ருதாவாகக் கழிக்காமல் காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்கிறபடி படிக்கவேண்டும். எப்போதும் புத்தியுள்ளவர்கள் பிழைப்பார்கள். பொறுமை கொண்ட ஆண்களும் பெண்களும் மதிமயங்கி அந்த காரத்தில் தங்கி நிற்க நேரிடும்.

இந்த வித்யாலயத்தைப் பாலக்காடு, சித்தூர் வேதசாஸ்த்ர பாடசாலையின் ப்ரின்ஸ்பால் மகா-ரா-ரா-ஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்த்ரியார் பார்வையிட்டு அவ்வித்யாலயத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீமத் லட்சுமணசிரௌதிகளும் அவருடையபத்னி ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மாளும் பெண் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் விஷ

யத்தில் காட்டுகிற அவர்களின் சக்தியையும் குணத்தையும் மெச்சுகிறார். சில பெண்களைப் பரீட்சித்துப்பார்த்ததில் மிகவும் திருப்தியாய் இருக்கிறதென்றும் தெரிவித்திருக்கிறார். கடைசியில் தம்பதிகள் இருவருமாக பாடுபடுகிறதை ஜனங்கள் பின்பற்ற வேண்டுமென்றும் வற்புறுத்தித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். இம்மாதிரி சம்ஸ்கிருத பாடசாலைகள் அவசியமென்றும் ஸ்ரீமத் லட்சுமண சிரௌதிகளைப்போலவும் ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மாளைப்போலவும் ஸ்த்ரீ புருஷர்கள் முன் வந்து உழைக்கவேண்டுமென்று சொல்வது அனுசிதம்.

ப்ரம்ம ஸ்ரீ லட்சுமணச் சௌதிகளும் ஸ்ரீமதி கமலாம்பாளம்மாளும் சுகஜீவியாய் வாழ்ந்து இவ்வுத்தம கார்யத்தை மேன்மேல் வருத்தி பண்ண பகவான் ஊக்கமும் அதிகசக்தியையும் கொடுக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

Infant Mortality in Calcutta City.

கல்கத்தாப்பட்டணத்தில் குழந்தை மரணம் :—கல்கத்தா கார்ப்போரேஷன் 1912-13 நிர்வாக ரிபோர்ட்டைப்பார்த்தோம். 1000 த்துக்கு 259 விகிதம் குழந்தை மரணம் சம்பவித்திருக்கிறது. குழந்தை மரணத்தைத்தடுக்க கார்ப்போரேஷன் அதிகாரிகள் பல முயற்சிகள் செய்து வருகிறார்கள். முக்யமாக ப்ரஸவகாலத்தில் மருத்துவச்சிமார்கள் அவச்யமென்று கருதி அவர்களை நியமித்ததற்குப் பிறகு குழந்தை மரணம் குறைந்து வருகிறதென்று தெரிய வருகிறது. வருஷா வருஷம் ஜாஸ்தியாக மருத்துவச்சிமார்கள் நியமிக்கப்படுவார்கள். பொதுவாக அறியாமை, கவனமின்மை, தரித்ரம், முதலியவைகளே ஏழை ஜனங்களை பீடிக்கிறது. ஜனங்கள் முக்யமாய் ஸ்த்ரீகள் சுகாதார முறைமை யறிந்து நடப்பது விசேஷம். சென்னையிலும் குழந்தை மரணம் குறைந்ததாகத் தெரிய வில்லை. சென்னை ராஜதானியிலும் அதைச்சேர்ந்த மற்ற ஜில்லாக்களிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டிய தவச்யம்.

பழியஞ்சிப் பாத்தூண் ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்சான்று மில்.

* * * * *

தெய்வத்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யு மழை.

WOMAN, HER GREATNESS & RESPONSIBILITIES.

By

Mr. T. S. V. Sarma.

ஸ்த்ரீயின் பெருமையும் பொறுப்புகளும்.

இப்பூலகில் எல்லா சிருஷ்டியைக் காட்டிலும் மானிட சிருஷ்டி சிரேஷ்டமானது. மானிடச் சிருஷ்டியில் ஸ்த்ரீயாகப்பிறக்கிறது விசேஷம். சர்வேச்வரன் ஸ்த்ரீயை விசேஷ சிருஷ்டியாக சிருஷ்டித்தது உலக க்ஷேமத்தையே கருதியன்றி வேறில்லை. ஸ்த்ரீயன்றி ப்ரபஞ்சம் நடையாது. எத்தேசத்தில் ஸ்த்ரீகள் கல்வியுடையவர்களாகவும், தாய்க்குலத்தில் முதிர்ந்தவர்களாகவும் தேசாபிமான முள்ளவர்களாகவும் இருக்கிறார்களோ அத்தேசம் செழிப்பாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்படும். பொதுவாக ஸ்த்ரீகளின் நிலைமையைக் கண்டுதான் ஒருதேசம் உயர்வுடையதா, தாழ்வுடையதா என்பது நிர்ணயிக்கப்படும். உத்தம புருஷரும் தேசத்தின் பெருமைக்குக் காரண பூதர்களல்லர். ஆயினும், புருஷர்களே ஒரேநிதானமாக இருந்துபடிச்செய்து வாழ்க்கையின் லக்ஷ்யத்தையடையச் செய்யும் மார்க்கம் ஸ்த்ரீகளின் கையில்தான் இருக்கிறது. புருஷர்கள் மோக்ஷத்தை ஸ்த்ரீகளைக்கொண்டுதான் அடைய வேண்டும். பாருங்கள்! ஸ்த்ரீயில்லாத வீடு பாழ்வீட்டுக்குச்சமானம். ஸ்த்ரீகளாலேயே சுமுத இக்ஷணம் ரக்ஷிக்கப்படுகிறது. ஸ்த்ரீகள் மிகச்சகன்மையை யடைந்தால்தானே இக்ஷணம் க்ஷித்துப்போகும். ஸ்த்ரீகள் இக்ஷ மகத்துக்கு காப்புச்சேனைகள். எப்படி ஒரு தேசப்பாதுகாப்பு சேனைகளின்றி எதிரிகையில் அகப்பட்டுபோகிறதோ அப்படி ஸ்த்ரீகள் தங்கள் தர்மத்தைக் காப்பாற்றிக் கொள்ளாமல் மூடத்தனத்தில் அமர்ந்திருக்கிறவரையில் இக்ஷணம் க்ஷித்துப்போகும். நிதானங்கள் காலடையில் வந்து விடுவார்கள்.

முன் ஒரு காலத்தில் சூலோத்துங்க சோழராஜனுடைய மகுடாபிஷேகம் நடந்தது. அப்போது அநேக ராஜாக்களும் கலிங்கராஜனும் வந்திருந்தார்கள். வந்திருந்த வித்வான்கள் அசோனும் மேற்படி வாழ்த்து கவிபாடினார்கள். அப்போது வந்திருந்த ஔவை புலவியை அரசன் மேல் ஆசுகவி பாடவேண்டிக்கொள்ள அவரெழுந்து 'வரப்புயர' என்று சொல்லி உட்கார்ந்தனர். சபையார்கள் திடுக்கிட்டு இதை எப்படி ஆசுவாகுமென்று வினவ அவர் அதை விரிவாக பொருள்படும்படி 'வரப்புயர' பாடினார்.

கெல்லுயரக்குடியுயரும், குடியுயரக்கோலுயரும் கோலுயரக் கோனுயர்வான்' என்று சொன்னார். அதுபோல் இந்திய தேசம் முன்னடைய வேண்டுமானால் 'பெண்ணுயர' என்று ஆசி கூறுவது காலாவிதத்திலும் தகுதி. பெண்கள் உயர்ந்தால் பிள்ளைகள் உயர்வார்கள். பிள்ளைகளுயர வாலிபர் உயருவர், வாலிபர் உயர புருஷர்கள் உயர்வார்கள். அப்போது தேசம் ப்ரகாசித்து விளங்குவது சொல்லிமுடியாது.

'தாயைப் போலபிள்ளை' 'நூலைப்போல சேலை' என்பது ஆன்றோர்மொழி. பிள்ளையின் குணதிசயங்களைக்கண்டு தாயையறிபலாமல்லவா? அதுபோல் சேலையைக்கண்டு நூலின் குணத்தையறியலாம். இதை நாம் அனுபவத்தில் கண்டுவருகிறோம்.

ஸ்த்ரீகள் இவ்விக ஸ்த்ரீ ஜென்மத்தை யெடுத்தது முதற் கொண்டு சாகும் பர்யந்தம் நாலுவித நிலைகளையடைகிறாள். அவைகளாவன:—மகள், மனைவி, மாதா, சகோதரி. இந்த நாலுவித நிலைகளுள் ஏதாவதொன்றையாவது அல்லது நான்கையுமாவது நிறைவேற்ற ஸ்த்ரீ இவ்வுலகில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள். ஸ்த்ரீகள் ஏதேனும் ஒரு நிலையில் இருந்து கொண்டு உலகத்தை அழிக்கப்பண்ணவும் செழிக்கப்பண்ணவும் கூடும். ஸ்த்ரீகள் நன்மைதீமைகளை எடுத்து முன் சொல்லி எச்சரிக்கக்கூடியவள்.

ஒவ்வொரு ஸ்த்ரீயும் தான் செய்யவேண்டிய காரியங்களை நன்காராய்ந்துணரவேண்டும். ஸ்த்ரீயானவள் பெரிய அபாரமான காரியங்களைச்செய்யப்பிறந்திருக்கிறாள். இப்பூவுலகில் உத்தமகும்ப ஸ்த்ரீயின் பெருமையே பெருமை. அவர்களின் உயர்வே உயர்வு குடும்பம் சிறந்து வீடு புஷ்பத்தோட்டம் போலிருக்கும். பொறுமையும் அன்புள்ளவாக்கும் வீட்டை ரம்மியப்படுத்தும். பாவத்தையகற்றும் கொடுமைபைப்பறக்கடிக்கும் வீட்டுக்கு ஆபரணமாகிலகம்போல் விளங்குவள். உத்தமஸ்த்ரீ தனது நாயகனுக்கும் பந்துமித்திரர்களுக்கும் நல்லவளாக நடந்து நற்பெயர் எடுப்பதே அவளின் லக்ஷணம். திருவள்ளுவர் தம் மனைவியாகிய வாசுகி தேக வியோகமானபோது அவர் பாடினபாடலை நோக்கும் போது ஸ்த்ரீ எவ்வளவு பெருமையும் பொறுப்புமுடையவளாய் இருந்தா ளென்பது தெரியவரும்.

அடிசிற் கினியாளே யன்புடையாளே
படி சொற்றவருபாவாய் அடிவருடிப்
பின் நாங்கி முன்னெழு உம்பேதையோ போதியோ
என் நாங்கு மென் கண்ணீரா.

இப்பேர்ப்பட்ட பாடல்கள் ப்ரதி ஸ்த்ரீயின் இல்லற நடத்தையைப்பற்றிப் பாடக்கட்டியதாயிருக்குமானால் எத்தனை பாக்கியம்.

டி. எஸ். வி. சர்மா.

DOMESTIC CONTROL.

By

T. S. Raj.

குடும்பாதி காரம்.

குடும்பாதிகாரம் வகிப்பவர்களால் பின்வரும் சில விஷயங்கள் நிதானித்தறியத்தக்கவை.

நம்மா தீனத்திலிருப்பவர்களின் மனம் வருத்தமுறுவண்ணம் காப்பது முறை. தண்டனைப் பெற்றவர்களைப்போல அவர்களை வேலை சரிவரப்பார்க்கவில்லை, பார்க்கவில்லையென இகழுவதுபிழை. அவர்களுக்குக் கொஞ்ச நேரம் தங்களுள் கலந்து பேசவோ, சுவேச்சையாயிருக்கவோ மனதுடன் விடவேண்டும். அதனவசிய மறிந்து, இடங்கொடுத்து, காமுமதில் சிற்சிலசமயங்களில் உற்சாகத்துடன் சேரவேண்டும். அஃதன்றியவர்களை வேலையில் கட்டிப்போட்டும், அவர்களுடன் குலாவாமலுமிருந்தால், அவர்கள் நம்மிடம் அந்தரங்க விசுவாசத்தோடிருக்க மாட்டார்களென்பது திண்ணம். அவர்கள் நன்மையில் நாம் கண்ணும் கருத்துமாயிருக்கிறோமென்று சொல்வது மாத்திரம் போதாது. நம்மனதுக்குச் சந்தோஷம் வர ஒரு அலுவல் மூடிக்க வேண்டு மென்ற அவாவில், அவர்கள் மனங்கடுக்க அபிமானமில்லாதவேலையை வாங்கவுங்கூடாது. நன்மை, தீமை, என்றறியுவண்ணம் கடவுள் யாவருக்கும் பகுத்தறிவு கொடுத்திருக்க, கேவல மதிகாரத்தினால் ஒருவளை நல்வழிக்குக் கொணருவது சாத்தியமா? நம்மிடமிருக்கும் தனத்தின் கௌரவத்தால் நம்மாக்கினை நடந்தே

2. தேகாப்யாசம்:—

மனக்களைப்பை நீக்கிமனதுக்கு புதுபலத்தைக்கொடுக்கின்றது. தேகாப்யாசத்தில் பிள்ளைகளைப்பழக்காத பாடசாலின் மற்றவிஷயங்களில் எவ்வளவுதிறமாக இருந்த போதிலும் மே[illegible]க் கொள்ளப்படாது. பிள்ளைகள் ஒருதினத்தில் அறைமணிக[illegible]வது தேகாப்யாசம் செய்யவேண்டும். கொஞ்சகால[illegible]யிற்கு எந்தப்பாட சாலையிலும் தேகப்பயிற்சியை கவனியா யார்தாகள். அந்தகுறைவை உணர்ந்து இப்பொழுது கொஞ்சகால[illegible]க்கு எல்லாப் பாடசாலைகளிலும், காட்டுப்புறங்களிலும் தேகப்பயிற்சியை கவனித்து வருகிறார்கள்.

3. தேகப்பயிற்சியினால் உண்டாகும் ப்ரயோஜனங்கள்:—

(1) பிள்ளைகளின் தேகம் நன்றாய் வளருகிறது, தசைநார்கள் பலப்பட்டு சுகமடைந்து வியாதிவராமல் தடுக்கிறது. (2) தேகாப்யாசத்தினால் தேகத்திற்குப்பலம் உண்டாவதும் தவிர புஜம், மார்பு, கால் முதலிய உறுப்புக்கள் ஒருவிதமான அழகையும் அடைகின்றன. அப்படிப்பட்டவர்களுடைய நடை கம்பீரமாயிருக்கும். (3) பொதுவாய் சரீரசௌக்யம் விர்த்தியடைகிறது. தகுந்த அப்யாசத்தினால் சுவாசக்கருவி பலப்படுகிறது. (4) அதிக அளவு சுத்தவாயு தேகத்தில் சென்று இரத்தத்தை சுத்தி செய்து தேகத்திற்குப்போதுமான அனலைக்கொடுத்து கழிவு பதார்த்தங்களை வெளிப்படுத்துகின்றது. போஜனம் தகுந்தபடி ஜீர்ணமாகி தேகத்துடன் சார்கிறது. (5) மூளை இளைப்பாறுகிறது. தேகாப்யாசம் செய்வதினால் மனதிற்கு அதிக ஆறுதலை உண்டாக்குகின்றது. (6) பாடசாலையில் க்ரமசிக்ஷை விர்த்தியாகிறது. முறைப்படி தேகாப்யாசமும், கவாத்தும்செய்கிற பிள்ளைகள் வகுப்பில் யாதொரு பிரயாசையுமில்லி கட்டளைக்கு உடனுக்குடனே சந்தோஷமாகக் கீழ்ப்படிவார்கள். புஸ்தகங்களை எடுத்துக்கொள்ளும் பொழுதும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும் பொழுதும் சந்தடியில்லாமல் ஒழுங்காகப்போவார்கள்.

4. தேகப்யாச முறையின் இலக்ஷணங்கள்:—

(1) தேக உறுப்புகளை எல்லாம் சமமாக பலப்படுத்தவேண்டும். ஒருவகையான உறுப்புகளைப்பலப்படுத்தி மற்றவைகளை அல

184

க்ஷியம் செய்யக்கூடாது. எல்லா உறுப்புகளுக்கும் வேலை யிட்டால்தான் தேகம் பார்வைக்கு லக்ஷணமாயிருக்கும்.

(2) கால் முதல் பாதம் வரையிலுள்ள தசை நார்களையும் வரிசையாகப்பயிற்றுவிக்கவேண்டும். அப்படிச் செய்தால் கூனிய முதுகு, குனிந்தகண்ட, சிம்பின தோள் முதலியவைகள் [illegible].

(3) அப்யாச முறை, லகுவானதாயும் திட்டமானதாயும் படிப்படியாய் கடினத்தில் அதிகப்படுவது மாயுமிருக்கவேண்டும். செய்யும் வேலைகளெல்லாம் பார்வைக்கு லக்ஷணமாயிருக்கவேண்டும்.

(4) எல்லா அப்யாசங்களையும் பரபரப்பாகச் செய்யவேண்டும். சுவாசக்கருவிகள் அதிக அளவு வேலை செய்யவேண்டும். ஆனால் தேக உறுப்புகளுக்குக் கெடுதி உண்டாக்குகதக்க மிதமிஞ்சின பரபரப்புக்கூடாது.

(5) அப்யாசங்கள் பிள்ளைகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும்படியாக வேற்றுமையுள்ளதாயிருக்கவேண்டும். உபகரணங்களை அதிகமாய்த்தேடக்கூடாது. அப்படி வேண்டுமானால் அவைகள் சுலபத்தில் சம்பாதிக்கத்தக்கவையாயிருக்கவேண்டும்.

5. தேகப்பயிற்சிக்குரிய சாதகங்கள்:—

(1) தேக சௌக்யத்திற்கு அனுகூலமான விளையாட்டுகள் (உதாரணம்) ஓடுதல், தாண்டுதல், ஜலத்தில் நீந்துதல், பந்தாடுதல் முதலியன—இவைகளுள் சிலவற்றில் உபாத்தியாயரும் கலந்து கொள்வது நலம். பிள்ளைகள் செய்யும் பொழுது அவர் பக்கத்திலிருந்து பார்க்கலாம். சில விளையாட்டுகள் விளையாடும் பொழுது வாத்தியங்கள் வாசித்தால் மிக உற்சாகமாயிருக்கும்.

(2) ஐரோப்பியர் ஏற்படுத்தியிருக்கும் மிலிடெரி டிரில் இவைகளின் பின் வருமாறு.

(a) தலை அப்யாசம்—கட்டளை வார்த்தையைச் சொன்ன வுடனே தலையை முன்னேக்கியும், பின்னேக்கியும் இருபக்கங்களிலும் அசைத்தல்.

(b) தேக அப்யாசங்கள்—கைகளை முனைகவும், பின்னுகவும், பக்கங்களிலும் உயர்த்துதல், முன்பக்கமாயும், பின்பக்கமா

185

யும், தலைக்கு மேலும் சுற்றுதல்; மேலும், கீழும், பக்கத்திலும் நீட்டுதல்.

(c) உடல் அப்யாசம்.—தேகத்தைப் பலவிதமாகத் திருப்புதல்.

(d) கால் அப்யாசம்.—முழங்காலை வளைத்தலும், முன்னே கொண்டு போதலும், குதிகாலைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துவதும் தாழ்த்துவதும், பாதங்களைச் சேர்ப்பதும் பலவிதமாகப் பிரிப்பதுமாம்.

6. தேகாப்யாசம் செய்யவேண்டிய காலம்:—

காலையில் 7-மணிக்குள்ளும் மாலையில் 5-மணிக்கு மேலும் அப்பியாசம் செய்வது நல்லது. காலையைவிட மாலையே மிக அனுகூலமானது. அப்பொழுது பிள்ளைகள் மனப்பயிற்சி அதிகமாகச் செய்து அலுத்திருப்பார்கள். அப்பியாசம் செய்தால் மனோவ்யாகூலம் நீங்கும். பிள்ளைகள் வீட்டுக்குப்போகும் போது உற்சாகத்துடனும் பசியுடனும் போவார்கள்.

சுந்தரம்மாள்.

THE LIBRARIES & BOOKS.

By

S. Bagirathi.

புஸ்தகசாலைகளும் புஸ்தகங்களும்.

ஒரு புஸ்தகசாலை ஒரு கோவிலுக்குச் சமானமானது. அதனால் உலகத்து அந்தந்தக் காலத்து புலவர்களின் நோக்கங்களும் குணங்களும் தெரிகிறது. அது நானா இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ஞானக்களஞ்சியம். அதை எவரொருவர் சரியாக உபயோகிக்கிறாரோ அவர் பணமின்றி இலவசமாக கல்வியின் உயர்ந்த பலனை அடைந்தவராகிறார். இந்த மஹோன்னத உண்மையை ஜனங்கள் அறிந்து ப்ரதி பட்டணத்திலும், கிராமத்திலும் இலவசப் புஸ்தகசாலை ஸ்தாபிக்கப்படுகிறவரையில் ஜனங்கள் காட்டுமிராண்டிகளென்றே கருதப்படுவார்கள்:—ஸ்ரீ ஜி. கே. கோகலே.

பொதுவாக புஸ்தகசாலையும் புஸ்தகங்களும் ஜனசமூகத்தை எவ்வளவு தூரம் உயர்த்துகிறது என்பதையறிய வேண்டும். இந்தியர்களின் கல்வி முற்போக்குக்கு எவ்வளவு தூரம் ஒரு புஸ்தகசாலை ஸாதகமாயிருக்கிறது என்பதையும் அறியவேண்டும்.

புஸ்தகங்களை ஒருங்கு சேர்த்து வைக்கும் வழக்கம் வெகு காலத்துக்குமுன் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது. இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் பம்பாய் ராஜதானியைச்சேர்ந்த பூனாப்பட்டணத்தில் இருந்த புஸ்தகசாலை மிகவும் பெயர் போனதாயிருந்தது. வெகு அருமையான நூல்கள் எல்லாம் கொள்ளை போயின. இனியும் அதி அருமையான நூல்கள் அச்சிடப்படாமலிருக்கின்றன. அதி தீவ்ர புத்தியுள்ள பண்டிதர்கள் இந்நூல்களை பரிசோதிக்க வேண்டுமென்றால் ஏதேஷ்டமாயிருக்கிறது.

பொதுவாகப்பார்க்கும்போது நவீன நாகரீகம் முதிரவும் ஜனங்கள் அநேக விதமான துறைகளில் ப்ரவேசித்துத் தங்கள் புத்தி நுட்பத்தால் எதிர்பார்க்கப்படாத பலன்களை தருவிக்கிறார்கள். பெரிய பெரிய பரிசீலனர்கள் தாங்கள் அனுபவத்தால் கண்டு பிடித்தவைகளை எழுதிப் புஸ்தக ரூபமாக அச்சிட்டு பின் சந்ததியாருக்குப் பரோபகாரமாகப்பாதுகாத்து வைத்து வருகிறார்கள். பரோபகார சிந்தையுள்ள பரம புருஷர்களும் ஸ்த்ரீகளும் பொது ஜனங்களின் நன்மையைக் கருதிப் பலவழிகளில் நன்முயற்சிகள் செய்து வருகிறார்கள். சிலர் இலவசப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதும், பள்ளிக்கூட மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் புரிவதும், பாடசாலையை யொட்டிப் புஸ்தகசாலையை ஸ்தாபித்து நடத்துவதுமாக இருக்கின்றனர். இப்போது சாதாரணமாக ப்ரதி பள்ளிக்கூடத்தையும் ஒட்டி ஒரு புஸ்தகசாலை இருந்து வருகிறது. ப்ரதி பள்ளிக்கூடத்தை யொட்டியிருக்கும் புஸ்தகசாலை மாணவர்களுக்கு மாத்ரம் தான். முக்கியமான பட்டணங்களில் படித்தவர்கள் தங்களுக்கு ஒரு புஸ்தகசாலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அது கொஞ்சம் சம்பளத்தில் உத்யோகம் செய்கிறவர்களுக்காவது சாதாரண ஜனங்களுக்காவது வசதி கொடுக்கிறது கிடையாது.

ஸ்ரீமத் கோகலே சொன்னது போல் ப்ரதி கிராமத்திலும் ப்ரதி பட்டணத்திலும் புண்ய சீலர்கள் முன் வந்து தர்மங்களில் முக்யமாகிய கல்வி தர்மத்தை ஸ்தாபித்து ஸர்வ ஜனங்களுக்கும் உதவும்படிப் புஸ்தகசாலை ஏற்படுத்த வேண்டும்.

புஸ்தகசாலையில் எவ்விதமான புஸ்தகங்களை வைப்பது என்பதை முக்யமாய் கவனிக்கவேண்டியது. புஸ்தகசாலையை நிர்வ

கிக்கும் புண்ய சீலர்கள் தாங்கள் தருவிக்கும் புஸ்தகங்களிலாவது பேப்பர்களிலாவது உண்மையைத்தேட இடங்கொடுக்கிறதா? அதன் நோக்கம் முன்னேறிச் செல்கிறதா? அவைகள் நல்ல ப்ரஜைகளாக்குமா? சகோதர வாஞ்சையை வ்ருத்தி செய்யுமா? ஸமய ஸச்சரவுகளை உண்டாக்காமலிருக்குமா? இவைகளைத் தீர கவனிக்கவேண்டும். பொதுவாக நாம் பாஷ்கலிலும் க்ரந்த கர்த்தர்கள் நல்ல புஸ்தகங்களையே அச்சிடுவார்கள். நல்ல புஸ்தகங்களை கையாண்டு வந்தால் காலக்ரமேண ஒழுக்கத்தை வ்ருத்தி செய்து மூளையின் வலுவை அதிகப்படுத்தலாம். நாம் புஸ்தக மூலமாகத்தான் உத்தம நோக்கமுள்ள வித்வ சிரோன்மணிகளை யறியவும் அவர்களின் குணாதிசயங்களைப் படிக்கவும் அவர் நடந்துபோன வழிகளை பின்பற்றவும் கூடும் புஸ்தகங்கள் ஒவ்வொரு தேசத்தாருடைய சுகதுக்கம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளை தெரிவிக்கின்றன. சுருக்கிச் சொல்லின், மனிதர் புஸ்தகமூலமாக அறிந்துகொள்ளவேண்டியவைகள் அபரிமிதம். நம் சகோதரிகளின் நன் முயற்சியால் அநேக ஸ்த்ரீ சங்கங்கள் சென்னையிலும் வெளியூர்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சங்கத்தை யொட்டி புஸ்தகசாலைகள் ஏற்படுத்துவது அவசியம். புஸ்தகசாலைகளிலுள்ள புஸ்தகங்களை எப்படி படிப்பது என்பதை அனுபோகமுள்ளவர்களைக் கொண்டுத் தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

எஸ். பாகீரதி.

JENNYLIND, THE SWEDISH NIGHTINGALE.

By

Mr. S. Rajagopalan.

ஜென்னிலிண்ட் என்னும் ஸ்வீடிஷ் நைடிங்கேல்.

'ஸ்வீடன்' என்பது ஐரோப்பாக்கண்டத்தின் வடபாகத்திலுள்ள தேசங்களில் ஒன்று. அது, வனங்கள், எரிகள், ரீர்வீழ்ச்சிகள், கால்வாய்கள் நிறைந்துள்ள பூமி. அதிலுள்ள அநேக சிறுவர்களும் சிறுமிகளும் உலகமுழுதும் ப்ரஸித்தி பெற்றிருக்கிறார்கள். அவர்களுள் "ஜென்னிலிண்ட்" என்பவளின் சரித்தத்தைக் கேட்பது மிக்க இன்பந்தருவதாயிருக்கும். அவள் நைட்டிங்கேல் பறவைபோலினிய குரலுடையவளாயிருந்ததால், இங்கிலாந்

திலுள்ள ஜனங்களவளுக்கு "நைட்டிங்கேல்" என்ற பெயர் கொடுத்தார்கள். ஏதாகிலுமோரிடத்தில், இவள் கானஞ்தொடங்கப்போகிறளெனக்கேள்வியுற்றதும், ஜனங்கள் திரள் திரளாயங்கு வந்து கூடுவார்கள். அவள் ஸ்வீடனில் பிறந்த போதிலும், இங்கிலாந்திலேயே குடியிருந்து, கடைசியில் 1887-ம்வரு "மால்வர்ன்" குன்றுகளில் தனதகத்திலேயே இறந்தனள். ஸ்டாக்ஹோம் லண்டன், பர்லின், நியுயார்க், இங்ஙனங்களில் ஜென்னிலிண்டைபற்றியாதாரில்லை. அவளது தர்மசிந்தையும், பரோபகார நினைவும், இன்றைக்கு மவர்களால் கொண்டாடப்படுகின்றன. ஒரு தடவை அமெரிக்காவில் செய்த சுற்றுப்பயணத்தால் 35,000 பவுன் சம்பாதித்து, அப்பணத்தின் மேல் பாகத்தை தர்மத்துக்கெனச் செலவு செய்தாள். ஓரே வருஷத்தில் 10,000 பவுன் சேர்த்து வைத்தியசாலைகளுக்கும் வித்தியாசாலைகளுக்கும் கொடுத்துப் பொருளுதவி செய்தாள். இதனாலேயே அவளைக் குறித்து எல்லோரும் அதிக நன்றியோடும் வியப்போடும் அகமகிழ்ந்து பேசுகிறார்கள்.

ஜென்னிலிண்ட் என்பவள் 1820-ம்வரு அக்டோபர்மீ 6-ம் தேதி யன்று ஸ்டாக்ஹோம் (Stockholm) எனும் நகரத்தில் பிறந்தாள். அவள் தகப்பன் ஒரு சரிகை வ்யாபாரி. அவர் தேகம் தளர்ந்திருந்ததினால் அவ்வேலையை நீடித்துப் பார்த்து வரத் திறமையில்லை. தமாஷிலும் சங்கீதத்திலும் மிக்க ஆசை கொண்டவர். அவருக்கு இசைந்தகுரலுண்டு. இருந்தும் குடும்பபாரம் சிறிது முழுதும் ஜென்னியின் தாயைப்பொறுத்தது. அத்துடன் வள் சிறு பெண்களுக்குச் சொல்லிக்கொடுக்க ஒரு பள்ளியு மேற்படுத்தி யிருந்தாள். அப்பொழுது குழந்தையாயிருந்த ஜென்னி அவள் வேலைகளுக்கொரு தடங்கலாயிருந்ததால், ஸ்டாக்ஹோம் நகரத்துக்குப் பதினேந்து மைல் தூரத்துக்கப்பாலுள்ள ஸோலன்ஹைனு (Sollenhina) வெனும் கிராமத்தில் குடியிருந்த ஒரு கீத க்ஞனிட மனுப்பப்பட்டாள். அங்கு அடிக்கடி ஜென்னியை அவள் தாய் காணப்போய், ஒரு தோடைமுழுதும் அவளோடிருந்து வருவாள். அக்கிராமத்தில்தான் ஜென்னிக்கு தேசாபிமானமும், பறவைகளின் பாட்டுகளில் உற்சாகமும், பட்டணத்தில் குடியிருக்க வெறுப்பும் பிறந்ததென்று அவளை யறிந்தவர்கள் சாற்றுகிறார்கள்

ஸ்டாக் ஹோமில் ஜென்னிக்குப்பாட்டி விதவை யொருத்தி யிருந்தனள். அவள் ஜென்னியிடம் பரமப்ரீதி கொண்டவள். சற்குண சற்செயல்களும், தர்மசிந்தனைகளும் ஜென்னிக்கு அவளாலேயே ஏற்பட்டன. அவளுக்கு சங்கீதக்ஞானமிருக்கிற தென்று முதலில் கண்டறிந்தவளு மக்கிழவியே!

ஜென்னி ஸ்டாக்ஹோம் வந்த பிறகு ஒருநாள், அந்தகரத்தின் வீதி வழி பவனிபோய்க்கொண்டிருந்த ரணவீரர்கள் பாடியதை யவள் உற்றுக்கேட்டு, வீட்டிலொருவரு மில்லையென நினைத்துத் தன் தமக்கையின் வாத்தியப் பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு, போர் வீரர்கள் பாடிய கீதத்தையே தாளம் போட்டுப் பாடலானாள். கிழவியதைக்கேட்டு, ஜென்னியின் தமக்கை தான் பாடுகிறாளெனக்கொண்டு அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். ஜென்னி அச்சங்கொண்டு ஒரு மூலையிற்போய் பதுங்கினாள். தான் கூவியதற் கொருவரும் பதிலுரைக்காததால், கிழவியங்கு வந்து ஜென்னியை மூலையிலிருந்திழுத்து, "நீயா, குழந்தாய், பாடியது?" என்று வினவினாள். அதற்குக் குழந்தை யழுதுகொண்டு தான் செய்ததாகவே ஒப்புக்கொண்டாள். கிழவி சற்று நேரமவள் முகத்தையுற்று நோக்கிவிட்டு, பிறகு தன் மகள் வந்ததும் அவளைப்பார்த்து, "உன் பெண் உனக்கு மிக்க உதவியாயிருப்பாள் போல் தோன்றுகிறது" என்று கூறினாள்.

ஜென்னியின் தாய்க்கு அடிக்கடி தன் சிலவுகளுக்குப் பணம் போதாமலிருந்தது. ஆதலால் தான் வெளியிற் போய் சில குழந்தைகளுக்கு வித்தை கற்பிக்கிற தென்றும், ஜென்னியை விதவைகளிருக்கு மிடம் (Home for widow's) விட்டால், யாராகிலுமவளை ஸ்வீகாரம் செய்துகொள்ளட்டு மென்றும் தீர்மானித்தாள். இவ் விதவைகளிருப்பிடத்திற்முன் அப்பொழுது கிழவியுமிருந்தாள். ஜென்னி யங்கு பதினேட்டு மாதகாலம் வசித்தாள். அப்பொழுதே யவளுக்கு சங்கீதக்ஞானம் விசேஷித்திருந்ததென வெளி ஜனங்களுக்குப் புலப்பட்டது. குழந்தையாயிருக்கையில் ஒவ்வோரடி எடுத்து வைக்கும் பொழுதும், ஒவ்வொரு கடவை காலால் தாண்டும் பொழுதும் ஜென்னி பாடுவது வழக்கம்.

நாலைந்து வயதாயிருக்கும் போதெல்லாம் அவள் ஒரு பூனைக் குட்டியோடு கட்டிப் புரண்டு விளையாடுவாள். அதன் கழுத்தி

லொரு பச்சை நாடாவைக்கட்டியதை சன்னலில் தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு அதற்குப் பாட்டுப் பாடுவது முண்டு. வீதியிலேகும் ஜனங்கள் நின்று கேட்டு மகிழ்வார்கள். ஸ்டாக்ஹோம் ராஜ நாடகசாலையிலுள்ள (Royal Opera House) சங்கீத வித்வானுடைய வேலைக்காரப்பெண், ஜென்னி பாடுவதை யொரு சமயங் கேட்டுத் தன் எஜமானியிடம் சென்று, அச்சிறு பெண் பூனைக்குப்பாடுவதுபோல் இதுவரையிலும் வேறிடத்திலும் கேட்டதில்லை யெனக்கொண்டாடினாள். அவ்வம்மை உடனே தாயையும் பெண்ணையும் வரவழைத்து, ஜென்னியைப் பாடச்சொல்லிக் கேட்டு ஸ்தம்பித்து, அபிநயசாலையிலுள்ள சங்கீதவித்தகரான ஹெர் க்ரலியஸ் (Herr Crolius) என்பவருக்கு ஒரு யோக்யதா பத்ரம் வரைந்து தாயிடம் கொடுத்தனுப்பினாள். அதைப்பெற்று தாயும் மகளும் நாடகசாலையடைந்த பொழுது, அதிற் காலந்தள்ளுவது மனதுக்குச் சம்மதமில்லாததனால், தாய் வீடு திரும்ப விரும்பினாள். ஜென்னியோ அவளையிழுத்துக்கொண்டு படிகளேறி க்ராலியஸிருந்த வரைக்குட்ச் சென்றனள்.

அங்கு ஜென்னியினிய குரலைக்கேட்டுச் சிட்சகருக்கு ஆநந்தம் பொங்கிவிட்டது. உடனே யவர் நாடகசாலைத்தலைவர் கௌண்ட் பியூக் (Count Puke) என்பவரிடம் ஜென்னியைக் கொண்டு போய் விட்டார். அவர் முதலிலவளைத்திரும்பியும் பாராமல், "இது குழந்தை வளர்க்கு மிடமல்ல, இது ராஜ நாடகசாலை!" யென்று சொல்லியனுப்பி விட்டார். உடனே க்ராலியஸ், "சரி, இச்சிறுமியைப் நீங்களழைத்துக்கொள்ளாவிடில் நானவளுக்கு சிட்சை சொல்லிவைக்கிறேன். நீங்களதிசயப்படும்படி கொஞ்ச நாளில் ஜென்னி புகழ்பெறுவாள்!" என்று சொன்னார். தலைவரும் கடைசியில் அவர் வார்த்தைக்கிணங்கி சிறுமியின் கானத்தைக்கேட்கச் சம்மதித்தார். கேட்டதும் உருக்கம் மேலிட்டது. அதிமுதல் அரசாங்கச்செலவில் ஜென்னி வளர்க்கப்பட்டும் சிட்சை கற்பிக்கப்பட்டும் வந்தனள். ஜென்னி பத்துவயதுக்குள் கன்ஸர்ப்பாடவும் அபிநயம் செய்யவும் கற்றுக்கொண்டு ராஜ நாடகசாலையில் முதல் முதல் 'பாலிஷ் மைன்' (Polish Mine) என்ற நாடகத்தில் வந்து நடித்தாள். வயது முதிர முதிர அவள் பேர் அதிக தேசங்களில் மிக்கபுகழ் பெற்றது. இவ்வளவு சீர்த்தியடைந்து மவள் இறுமாப்படையவில்லை.

கடைசியில் வெளிப்படையாய்ப் பாடுவதை நிறுத்தி விட்டு, நாட்யசாலையிலிருந்து விலகி, எல்லாவற்றிலும் தன் வீட்டிலிருப்பதே மேலென்றெண்ணி தன் பிற்கால வாழ்நாளை இவ்விலாந்திலேயே கழித்தனள். ஒரு நாள் ஜென்னி தன் 'பைபிள்' புஸ்தகத்தை முழங்காலில் வைத்துக்கொண்டு, சூரியன் மலை வாயில் வீழ்வதைப்பார்த்துக் கொண்டிருக்க, அவளுடைய தோழியொருவளங்கு வந்து, "இது காறும் ஒருவரும் பெற்றிராத கீர்த்தியை நீ பெறப்புகும் சமயத்தில், ஏனம்மா நீ நாட்யசாலையிருந்து வந்து விட்டனை?" என்று வினவினள். அதற்கு ஜென்னி, "தோழி, (பைபிலைக்காண்பித்து) நாடோறும் இதைப்பற்றிய ஞாபகம் குறைந்து கொண்டே வந்தது. (அஸ்தமிக்குந் தருணத்திலிருந்த சூரியனைக்காட்டி,) அதைப்பற்றிய ஞாபகமே கிடையாது. ஆதலால் நாட்யசாலையை விட்டு வருவதைத்தவிர்த்து நான் வேறென் செய்வது?" என்று பதிலுரைத்தாள்.

S. ராஜகோபாலன்.

SEARCH FOR THE BRIDEGROOM.

By

Srinivasammal.

மாப்பிள்ளை தேடுதல்.

இக்காலத்தில் முற்காலம் போல் ஸ்வயம்வரமில்லை. மேலும் இந்த வழக்கம் பல காரணங்களால் அஸாத்திய மாயிருக்கிறது. ஆகையால் தகப்பனே அல்லது உடன் பிறந்தவர்களோ பெண்ணுக்கு மாப்பிளைதேடுவது அவச்யமாயிருக்கிறது. அவர்கள் நன்றாகப் பலவிடங்களிலும் தேடி விசாரித்துப் பார்த்து குணத்திலும், குலத்திலும், சௌந்தர்யத்திலும் தகுந்த மாப்பிள்ளையைத் தேடி மணஞ் செய்விப்பது கடமையாக விருக்கிறது. அதேகர் அக்ரமமாய் வயதையும் பாராமல், அழகையும் பாராமல், கல்வியையும் பாராமல், பணத்தையே பெரிதென நினைத்துத் தங்கள் பெண்களைப் பாழுங் கிணற்றில் தள்ளுவது போல் தள்ளுகிறார்களே! கேவலம் பணத்தாசைமேலிட்டு பெற்றோர்கள் சிறு பெண்களை இரண்டாவது மனைவியாக வயதுசென்றவர்களுக்கு விவாகம் செய்துகொடுப்பதுபோல் அநீதியும் அதர்மமும் வேறு கிடையாது. இதுவுஞ்

ஞாயமா? இப்படிச் செய்வதனால்தான் நம் தேசத்தில் அநேக பெண்கள் சிறு வயதிலேயே விதவைகளாகி விமோசன மின்றி கர்மமென்று மனதைத் திருப்தி பண்ணிக்கொண்டு காலத்தை வருதாவாய் யொழிக்கிறார்கள். இம்மாதிரி கல்யாணங்களெல்லாம் சாஸ்திர சம்மதமாகப் பண்ணப்பட்டதென்று மூடத்தனமுள்ள பெற்றோர்களின் அபிப்ராயம். இம்மாதிரி விவாகம் சாஸ்திர சம்மதமாகாது. இதல்லாமலும், அநேகம் பெண்கள் தங்கள் குடும்பங்களில் எப்பொழுது பார்த்தாலும் புருஷனுடைய அனுஸரணையில் லாமல் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக சண்டை ஸச்சரவிலேயே கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு பெண்ணினுடைய பெற்றோர்கள் அவளுக்கு ஓர் குரு பிபை மணவாளனுக்கினும் குணங்கெட்டவனை மணவாளனுக்கினும் அப்பெண் தன் விதியை மனத்துள் நொந்து கொள்வதல்லாது பிறர்க்குப்புலப்பட இவன் எனக்கு வேண்டா மென்று சொல்லாள் மாணிக்கத்தைத் தகுதியான இரத்தினபரணங்களுக்கு நடுவே பதியாமல் ஈயத்திலே பதித்தாலும் அது தான் மாட்டேனென்று சொல்லாது. பதிப்போர் அதன் தகுதி யறிந்து பதிக்கவேண்டும். தந்தை தாயரும் தம் மக்களுக்கேற்ற சௌந்தர்யமும், குணமுள்ள ஒரு கணவனை அவளுக்கு விவாகஞ்செய்து வைத்தால் அக் குடும்பஞ் சிறப்புற்று வாழுமாதலால் பெரியோர்கள் இவ்விஷயத்தில் புத்திசெலுத்தவேண்டும். பெண்களை கல்யாணம் பண்ணிக்கொடுக்கிறது இலேசான காரியமல்ல. சட்டியா பானையா மாத்துகிறதற்கு. பெற்றோர்கள் தாங்கள் அறிவீனத்தினால் அவசரப்பட்டுப் பெண்களுக்குக் கல்யாணமுடித்ததற்குப் பிறகு மாப்பிள்ளை பொல்லாதவன் சம்மந்தி பொல்லாதவர்கள் என்று நொந்துகொள்கிற வழக்கம். ஆதலால் செய்து அறியாப் பெண்களுக்கு கண்மையைத் தேட வேண்டுகிறேன்.

ஸ்ரீனிவாசம்மாள்.

பெண்கல்வி இரண்டாவது வால்யூம் காலிகோ பைண்டு செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது.
விலை ரூ. 3.

WHY MEN MARRY.?

By

A Lady.

கல்யாணமேன் ?

ஓர் ஆங்கிலப்பத்திரிகையின் எதிரில்வெளியிடுகிறார்:—ஏ தேவி! நாங்கள் ஏன் ஸ்திரீகளை கல்யாணம் செய்துகொள்ளுகிறோம்? தெரியுமா?

நாங்கள் உங்களை விவாகஞ் செய்துகொள்வது முதல் எங்கள் கர்வத்தைக் கொஞ்ச மடக்கிக் கொள்ளுகிறோம்.

சுயேச்சை என்பதையும் விட்டு இருவரும் மனமொத்து வாழ விரும்புகிறோம். அப்படி விவாகஞ் செய்துகொண்டு ஸ்திரீ புருஷராக வாழ்வதில் எவ்வளவோ சந்தோஷமிருக்கிறது; மேலும் குணமுமிருக்கிறது.

புருஷனுக்குத் தன் பெண்சாதியால் வேண்டிய தென்னவெனில், முக்கியமாக அவன் கஷ்டப்படுங்காலத்தில் நன்மொழிகளால் அவனுடைய மனதை ஆனந்திக்கச் செய்வதே. எப்பொழுதும் எங்களுக்கு உங்களுடைய அன்பே வேண்டியிருக்கிறது. நீங்கள் சந்தியற்றவர்களாயிருந்த போதிலும் எங்கள் சக்தியெல்லாம் உங்களுடைய கையிலேயே யிருக்கிறது.

ஆகையினால் உங்களை விட்டுச் சற்றுநேரமும் தனியே யிருக்கமுடியாது. நீங்களோ எங்கள் ஜீவாளம். எங்கள் ஆத்மாவாயிருக்கள். காளுக்கு நாள் அன்பு வளர்ந்தியாகட்டும்.

உங்களுடைய அன்பின் பயனால்தான் நாங்கள் போஜராம்ராஜ்யத்தை யடையவேண்டும். நீங்கள் இல்லாத வீடு வாசல்கள் லக்ஷ்மீகரமாக விளங்கவில்லையே.!

ப்ரான்ஸ்தேசத்திலும், அமெரிக்காவிலும் அநேக புருஷர்கள் கல்யாணமில்லாமலே காலத்தை கழிக்கிறார்கள். அவர்களின் நிலைமையைப்பற்றி மிகவுப் பரிதாபப் படுகிறேன். அவர்களெல்லாம் துக்கவாசிகளே. கல்யாணம் செய்துகொண்டு குடும்பத்தில் ஜனிக்கும் சுகத்தைக்காட்டிலும் வேறு இல்லை. இந்தக் காரணங்களுக்காகன்றி நாங்கள் உங்களை விவாகஞ் செய்வதில்லை

ஒரு ஸ்த்ரீ.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Beauty.
அழகு ?

1. பார்வைக்கு அழகு சன்மார்க்கப் புத்தகங்களும் மேலோர் தரிசனமுமன்றி அயல்மாதரின் அவயவங்களன்று.

2. வார்த்தைக்கழகு நன்மார்க்கங்களோப் பிறர்க்குரைப்பதும் நயவசனமாக வசனிப்பதுமன்றிபொய்யுங் கோளும் பொருத்திப் புகல்வதன்று.

3. ஹிருதயத்துக்கழகு சாந்தமும் கருணையும் பொருந்தி யிருப்பதன்றி பிறரை வஞ்சிக்கும் எண்ணமும கோபமும் பொறுமையும் நிறைந்திருப்பதன்று.

4. உணவிற்கழகு விருந்தினருடனுண்டலன்றி வந்தவரை வாயிலில் நிறுத்தி வயிறுபுப் புசித்தலன்று.

5. ஜீவனத்துக்கழகு உழைத்துண்பதன்றி பல்லுக்காட்டியாசிப்பதும், லஞ்சம்வாங்க நாய்போ லலைவதும், பெண்ணை விலை கூறிவிற்பதுமன்று.

6. பெற்றோர்க்கழகு பிள்ளைகட்கு நிறைகல்வியுரை செய்வதன்றி பிறந்த நாண்காமாண்டில் கப்பலேற்றி கடல் கடப்பித்தலன்று.

7. பிள்ளைகட்கழகு புகழ் பெற்றுப் பெற்றோரை மகிழ்விப்பதன்றி தாய் தகப்பனைப் புறத்தேதுரத்தி இழிதொழில் புரிந்து தனித்து வாழ்வதன்று.

8. கற்புடைய பெண்டிர்க்கழகு கணவனைப் போற்றுதலன்றி பொட்டிட்டு மைதீட்டித் தெருவிலலைந்து திரிவதன்று.

9. புருஷனுக்கழகு பெண்டிரை மகிழ்வித்தலன்றி மனைவியத்துறை நது வேலையை நம்பி வீணனாய்த் திரிவதன்று.

10. மதாபிமானிகட்கழகு தம் மதத்தைப் புகழ்ந்து சித்தாந்திப்பதன்றி பிறமதத்தைத் தூஷிப்பதன்று.

11. எஜண்டுகட்கழகு முதலாளிகளின் வருவாய் நோக்கிப் பிரயாசைப்படுவதன்றி பக்கத்திற் கடைவைத்து பலவழிகளிலும் தமக்கு இலாபம்சம்பாதிக்கப் பார்ப்பதன்று.

12. பெரிய மனிதருக்கழகு பிறருக்கு உபகாரம் செய்வதேயன்றி பாட்டு சொல்வதும் பரிதானம் வாங்குவது மன்று.

13. நேசர்க்கழகு கேர்ப்பட் வாழ்தலன்றி நெஞ்சுழி வெட்டநினைப்பதன்று.

14 பந்துக்களுக்கழகு பலகாரியங்களினும் உதவிக் கொள்வதன்றி ஒருவர்மே லொருவர் பலமான வழக்குத் தொடுத்துப் புறம் பேசித் திரிவதன்று.

15. செல்வர்க்கழகு இல்லார்க்கு உபகரிப்பதும், ஜனசௌகரியத்தை முன்னிட்டுக்காலமும் இடமுமறிந்து எளியாரை தருமஞ்செய்வதுமன்றி எளியாரை வாங்கப்பார்ப்பதெதிர்த்து அவரைக்காலத்தில் துரப்பிடிப்பதும், சுற்றத்தைப்பாடுபடுக்கும்படி பார்ப்பதுமன்று.

16. வாதிப்போர்க்கழகு தருக்க முறையாக ஆதாரத்தோடு வாதிப்பதன்றி மனம் போனவாறு வசவுவார்த்தைகளைப் பிரயோகிப்பதன்று.

17. ஸ்வாமி தரிசனத்துக்குச்செல்பவர்க்கழகு இறைவனை வழிபட்டுத் திரும்புவதன்றி அங்குவரும் மாதர்களின் பக்கஞ்செல்வதன்று.

18. விவேகிகட்கழகு கண்மை கடைப்பிடித்தொழுகலன்றி குற்றவகண்டு குதர்க்கஞ் செய்வதன்று.

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Vegetarians.

மாம்சம் புசிக்காதவர்கள்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே ஹிந்துக்கள் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து மனிதர்க்குக் காய்கறியே நல்ல ஆகாரம் என்று கண்டறிந்திருப்பதாகவும் மற்ற தேசத்தவர்கள் இந்த வழக்கத்தை ஹிந்துக்களிட மிருந்தே கண்டறிந்தார்கள். தற்காலம் மேல்நாட்டில் அநேகர் மாம்ஸத்தை நீக்குவதற்கான ஸபைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

மாம்சவுணவு அஜீர்ணம், குன்மம், கீல் வாய்வு, க்ஷயம் முதலிய அநேக வியாதிகட்குக் காரணமானதென்றும், உண்பதற்காகவே கொழுக்க வளர்க்கபட்ட ஆடு கோழி முதலியவை முறைதப்பிய வுணவு கொடுக்கப்படுவதால் ஏதேனும் ஒருவித நோய்க்கு வித்தாகவே வளர்கின்றனவென்றும், இவற்றின் மாம்சங்களின் மூலம் சில விஷக்கிருமிகள் மனித சரீரத்துட் புகுந்து பலவித கெடுதிகளைச் செய்கின்றன வென்றும் சாஸ்திர நிபுணர்கள் காரணங்காட்டி விரித்தெழுதியுள்ளார்கள். மாம்சவுணவு உடம்பில் ரத்த மிகுந்து சூடு அதிகப்பட்டு ரத்தாசயத்தின் தொழில் அளவுக்கு மிஞ்சி நரம்புத்தளர்ச்சி அதிகரித்து உயிர்வலிமை குன்றி அவதிப்படுதற்கே ஏதுவாகின்றது.

மாம்சங்களின் இயற்கைத் தன்மையையும் தழை, குழை, காய்கனி முதலிய சாகபக்ஷணங்களின் இயற்கைத் தன்மையையும் பரீக்ஷித்துப் பார்த்தால் தசை வளரவும் நரம்புகள் பலப்படவும் சரீர புஷ்டி கொள்ளவும்வேண்டிய சத்துக்கள் சாக பக்ஷணங்களில் தான் நிறைந்திருக்கின்றன என்பது தெளிவாகும். சரீரவளர்ச்சிக்கு ஆதாரமான கொழுப்பும் லோக வஸ்துக்களும் மாம்சங்களில் இருப்பதினும் காய்கறி வகைகளில் அதிகமாகவே இருக்கின்றன. அன்றியும் மாம்ச வர்க்கத்தில் இல்லாத சில சத்துவர்க்கங்கள் காய்கறி வகைகளில் இருக்கின்றன. இது மட்டோ! மாம்சங்களிலுள்ள கெட்ட வஸ்துக்கள் காய்கறி வர்க்கங்களில் சிறிதும் இல்லை.

Hot Water Supply.

வென்னீர் சப்ளை.—லண்டன்வீடுகளில் வென்னீர்காய்ச்சாமல் குழாய்களின் வழியாக மின்ஸார மூலமாய் ஜலம் வீடுகள் தோறும் ஸப்ளைசெய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். அநேக வருஷங்களாக உஷ்ண ஜலத்தில் ஸ்நானம் செய்து அநேகவியாதிகளுக்கும் பரிகாரமென்று ஜனங்கள் வென்னீரையேஉபயோகிக்கிறார்களாம். வென்னீரினால் அநேக பதார்த்தங்கள் சமைக்க உதவும், வீடுகளின் புகையும் ஒழியும்.

Domestic training for Women.

ஸ்த்ரீகளுக்கு குடும்ப நிர்வாகப்பயிற்சி.—லண்டனில் ஆங்கிலேயச் சிறு பெண்களைகுடும்ப நிர்வாக முறையில் பயிற்றுவிக்கும் பொருட்டு, ஸ்த்ரீகளுக்கான கிங்கஸ் காலேஜ் என்னும் ஸ்தாபனத்தை ஒட்டியதாய் ஒரு முயற்சி செய்யப்படுகிறதென்றும், இம்முயற்சியை லண்டன் யூனிவர்ஸிடி அங்கீகரித்திருக்கிறதென்றும், சொல்லப்படுகிறது. இம்முயற்சிக்கு வேண்டிய மூலதனத்தின் பொருட்டு, 50,000 பவுன் கையொப்பமாயிருக்கிறது. கல்கத்தா பம்பாய் போன்ற இடங்களில் குடும்பநிர்வாகப் பயிற்சி ஸ்த்ரீகளுக்கு பள்ளிக்கூடங்களில் செய்விக்க ஏற்பாடுசெய்து வருகிறார்கள். கவர்ன்மெண்டும் சகாயம் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

Healthy Living.

நோயற்ற வாழ்வை யடையும் முறை.—அடியில் கண்ட நான்கு விதிகளை யநுஷ்டித்தால் நோயில்லாமல் வாழலாமென்று ஒரு ஆங்கில வைத்யர் சொல்லுகிறார்.

(1) அதிக உணவும் அடிக்கடி உண்ணுதலும் கூடாது. யோகிக்கு மத்யானத்தில் ஒருவேளை போஜநம், போகிக்கு, அதாவது சுகமாய் உலகவாழ்வை விரும்புகிறவனுக்குப் பகலிலும் இரவிலும் சேர்ந்து இரண்டு வேளை போஜநமும் நன்றாம். உண்ணும் உணவும் மிதமாயும் சாத்துவீக உணவாகவும் இருத்தல்வேண்டும் சரீரமானது பல யந்திரங்களமைந்த ஒரு தொகுதி. அடிக்கடி உணவு உட்கொண்டால் யந்திரங்களுக்கு ஓய்வு ஒழிவு இல்லாமல் எப்போதும் செய்வதாகும். அதனால் யந்திரங்களின் வலிமை குறைந்து அவை வியாதிகளுக் குள்ளாகும்.

(2) இடைநடுவில் எவ்விதத் தின் பண்டமும் கூடாது. "நுண்மை நுகரேல்" என்ற ஔவையார் வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

(3) உண்ணுங்காலத்தில்ஜலபாநம் பண்ணக் கூடாது. உண்டமேல்2நாழிகைக்குப்பிறகு ஜலபாநம் பண்ணவேண்டும். ஜீர்ணிப்பதற்கு, வாயிலும் இரப்பையிலும் பெருங்குடல் ஆரம்பத்திலும் ஜீர்ணம் செய்விக்கும் நீர்கள் இருக்கின்றன. உணவு சம்பந்திக்கவே அந்நீர்கள் சுரக்கின்றன. அவை சுரந்து, ஊறி, உணவைத்தாக்கி, பக்குவப்படுத்தும் சமயத்தில் ஜலம் உட்கொண்டால் நலமுண்டு. அதற்குமுன் உட்கொண்டால் அது ஜீர்ணிக்கும் நீர்களுடன் கலந்து அவைகளின் சக்தியைக் குறைக்கும்.

(4) ஞாந பக்தி விஷயங்களில் நோக்கத்தின் மேலல்லாமலும், தேக சௌக்கியத்தைக் கருதியும் நம்முடைய முன்னோர்கள் பல உபவாஸ (பட்டினி) திநங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஏகாதசி, அமாவாசை கிருத்திகை, சோமவாரம், பௌர்ணமி முதலியன.

Apple Fruit.

ஆப்பில்பழம்.—இரவில் படுத்துக் கொள்வதற்கு முன் ஒரு ஆப்பில் பழத்தைத் தின்பது நிரம்ப சிலாக்கியமான வைத்திய முறைகளில் ஒன்று என்று ஒருவைத்யர் சொல்லுகிறார். இத்னால் அஜீர்ணம் ஸூர்யனைக் கண்ட பனிபோல் மறைந்துபோகும்.

Cocoanut Chutney.

தேங்காய்ச்சட்ணி.—பாணலியில் 2 ரூபா எடை எண்ணெய் அல்லது நெய்யை விட்டு அடுப்பிலேற்றி நன்றாய்க்காயவிட்டு, $\frac{1}{2}$ ரூபாய் எடை மிளகாய், $\frac{1}{3}$ ரூபாய் எடை கடுகு, $\frac{1}{8}$ ரூபாஎடை உளுத்தம் பருப்பு இவைகளைப்போட்டு சிவக்க வறுக்கவும், நல்ல மணமுண்டாகும் பொழுது துருவின தேங்காய் 7 ரூபா எடையைப் பாணலியில் கொட்டி பாதிவதங்கும்படி செய்து அடுப்பிலிருந்து கீழே இறக்கி விடவேண்டும். பிறகு 1 ரூபாய் எடை உப்பு, 1 ரூபா எடை புளி, கொஞ்சம் பெருங்காயம், இவைகளைச்சேர்த்து அம்மியில் வைத்து அறைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். அதிகமாய் அறைத்து விடக் கூடாது.

A Strange Cake.

ஒரு அற்புதமான பணியாரம்—கிளாப்ஹாம் (Clapham) என்ற ஊரிலிருக்கும் ரொட்டிசுடுகிறவன் ஒருவன் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக ஒரு பெரிய பணியாரம் சுட்டான். இதைச் செய்ய 3 வாரம் பிடித்ததாம். இதின்நிறை 1050 பவுண்டு. 6-அடி உயரம் அடிப்பக்கத்து சுற்றளவு 12-அடியும் உள்ளது.

ART & MUSIC.

கலையும் வங்கீதமும்.

Talams.

தாளம்.

தாளம் ஐந்து விதமாகும். அவை சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம் என்பவையாம். இவற்றுட் சச்சற்புடமென்பது. குரு 2, இலகு 1, புலுதம் 1. ஆகமாத்திரை 8 ஆகும். இஃது ஈசன் சத்தியோஜாத முகத்திற் பிறந்தது. இது பிரமஜாதியாகும். சாசற்புடமென்பது குரு 1, இலகு 2. குரு 1. ஆக மாத்திரை 6 ஆகும். இஃது ஈசன வாமமுகத்திற் பிறந்தது. இது அரசஜாதியாகும். சட்பிதாபுத்திரீக மென்பது புலுதம் 1, இலகு 1, குரு 2, இலகு 1, புலுதம் 1, ஆகமாத்திரை 12 ஆகும். இஃது ஈசன் அகோர முகத்திற் பிறந்தது. இது வைசிய ஜாதியாகும். சம்பத்து வேட்டமென்பது புலுதம் 1, குரு 3, புலுதம் 1, ஆக மாத்திரை 12 ஆகும். இஃது ஈசன் தற்புருட முகத்திற் பிறந்தது. இது சூத்திர ஜாதியாகும். உற்கடிதமென்பது குரு 3, ஆகமாத்திரை 6 ஆகும். இஃது ஈசன் ஈசான முகத்திற் பிறந்தது. இது சங்கிரம ஜாதியாகும். இவையன்றி (அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்ததாளம், படிமதாளம், வீடதாளம்) என்ற நவதாளங்களுண்டு. இவற்றை சுவசந்திதானமென்பர்.

தாளப்பகுதி ஏழாகும். அவை துருவம், மட்டியம், உரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம், என்பவையாம். இவையே சப்ததாள மென்று சொல்லப்படும். இவற்றுள் துருவதாளத்திற்கு, இலகு 1, குரு 1, துரிதம் 1. இதற்குச் சுரம் சரி கம, சரிசரி, சரிசரிகம எனக்கூறும். மட்டியதாளத்திற்கு இலகு 1, துரிதம் 1, இலகு 1. இதற்குச்சுரம் சரிகரி, சரி, சரிகம எனக்கூறும். உரூபகதாளத்திற்கு, இலகு 1, துரிதம 1. இதற்குச்சுரம் சரி, சரிகம, எனக்கூறும். சம்பை தாளத்திற்கு இலகு 1, அநுதுரிதம் 1, துரிதம் 1. இதற்குச்சுரம், ச, ரிக, சரி, சரி, கமா, எனக்கூறும். திரிபுடை தாளத்திற்கு, துரிதம் 3, அநுதுரிதம் 1. இதற்குச்சுரம் சரிக, சரிகம எனக்கூறும். அடதாளத்திற்கு, இலகு 1, துரிதம் 2, இலகு 1. இதற்குச்சுரம் சரிகா, சாரிகா, மா, மா எனக்கூறும். ஏகதாளத்திற்கு, இலகு 1. இதற்குச் சுரம் சரிகம எனக்கூறும். சம்பை தாளத்திற்குப் பிரம ஜாதிதவிர நான்கு ஜாதியுமுள. திரிபுடைத்தாளத்திற்கு மூன்று விராமமும் ஓரநுதிரிதமுமானால் ஒரே ஜாதியாம். இலகு விருந்தால் ஐந்து ஜாதியுமுள. மற்றையைந்து தாளங்கட்கும் ஐந்து ஜாதியுமுள. அவற்றை யவ்வச்சாதி ஏகதாளலகு அக்கரங்களாலறியுமாறு, பிரமஜாதியிலகுவிற்கு நான்கக் கரக்காலமாம். அரச ஜாதியிலகுவிற்கு மூன்றக்கரக்காலமாம்; வைசிய ஜாதியில் குவிற்கு ஏழக்கரக்காலமாம். சூத்திரஜாதியிலகுவிற்கு ஐந்தக்கரக் காலமாம். சங்கிரமஜாதியில் லகுவிற்கு ஒன்பதக்கரக்காலமாம்.

எச்சாதியிலும் க. அசையென்பது ஒரு மாத்திரை வடிவு எ. தாக்கென்பது இரண்டுமாத்திரை. வடிவு உ. அளவென்பது மூன்றுமாத்திரை வடிவும். (ககரங் கொட்டே யெகரமசையே யுகரந்தாக்கே யளவேயாய் தம்) என்ற சூத்திரப்பிரகாரம், கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கி யெழுதல்; தாக்காவது தாக்கித் தாக்குதல்; அளவாவது தாக்கிவோசை சேரேறின்று மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதலென் பதாகும்.

VIEWS AND REVIEWS.

அபிப்பிராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Teaching by pictures.

படங்களினால் கற்பித்தல்:—பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குச் சாதாரணமாக ஒரு ஆனையைப்பற்றிச் சொல்லிக்கொடுக்கிறதாக வைத்துக்கொள்வோம். உபாத்தியாயர்கள் ஆனைக்கு நாலு கால்களுண்டு. ஒரு தும்பிக்கை. கண் சிறியதாயும் காது மூறம்போலிருக்கும். என்றவைகளை மனோபாவனை செய்யச்சொல்லி குழந்தைகளுக்கு கற்பிக்கிறதைக் காட்டிலும ஆனைபடத்தைக் காண்பித்து அதுமூலமாகக் கற்பிக்கிறது மிகுந்த விசேஷம். இந்துதேச சரித்திரங்கள் சொல்லிக் கொடுக்கும்போது தேச வீரர்களையும் ராஜனையும் படங்களினால் காண்பித்து அதுமூலமாக கற்பிக்கவேண்டும். குழந்தைகளுக்காக ஏற்பட்டிருக்கும் பத்திரிகைகளிலும் படங்கள்போட்டு ப்ரசுரம் செய்வது மேலானதாகும்:—சில்ட்ரன்ஸ் மாகஸைன், பரோடா.

History teaching in schools.

பாடசாலைகளில் சரித்ரபோதனை:—பள்ளிக்கூடங்களில் இங்கலாண்டு தேசசரித்ரத்தை முதன் முதல் குழந்தைகளுக்குப் போதிக்காமல் இந்துதேச சரித்ரத்தை எப்படி போதிக்கவேண்டுமோ அம்மாதிரியாகச் செய்யவேண்டும். தேச சரித்ர பாடம் அவச்யமென்பதை யுணர்ந்து சரித்ரபோதகர்கள் குழந்தைகளுக்கு தேசக்ஷேமத்திற்குரிய ப்ரகாசமான விஷயங்களை தெளிவாக உயர்ந்த நோக்கத்துடன் போதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு நோக்கத்துடன் கோழைத்தனத்தை யுண்டாக்கும் தன்மையாய் எழுதியிருக்கும் இந்துதேச சரித்ரங்களை வைத்துவிட்டு சரியான தெரியல் [illegible]தப்பட்டிருக்கும் புஸ்தகங்களை [illegible]க்கவேண்டும். இந்தியர்கள் தங் [illegible] தேசசரித்ரங்களை நோய் கற்

காதவரையில் இந்தியாவுக்கு முன்னேற்றம் துர்லபம். சுதேசமித்ரனில் ஒரு நிருபர்.

Brutal men.

மிருகதுண மனிதர்கள்:—

சேட்டைதனில் வானரம்
னைமதில்ப் புலியே
செலுத்த கங்காரத்திலே
ங்கமெஜமானன்
துரோகத்தில் யானையே
செறிமந்த மதிவெல்ருமையே
காட்டுகிற சோம்பலில்
தேவாங்கு புரிகின்ற கபடத்
[திலே குளகரி
காக மார்ச்சாலமிவை
போலவார் மானிடர்கள்
கொண்ட மேலானபிறவிக்
கூட்டினிலும் விசுவாச
நாய்ப்பிறவி நல்லது
கொழுகண்ணையும் மதிந்து
குலத்துக்கடிக்கும் வெறி
காயென்ன மனிதரைக்
குவலயத்தில் படைத்த
வாட்டமில் விதிசனைக்குட்டி
றைக்குமா
வைத்திட்ட குமரு குருவே
வரை ராஜகுமாமடி மீதில்
வினையாட புரி
மணிகொண்ட வடிவேலனே.
வடிவேலர் சதகம்.

A plague cure.

ப்ளேக் நிவாரணி:—இந்தியாவில் ப்ளேக்நோய் வரவர அதிகமாகப்பரவி வருகிறது. இவ்வியாதியைப் போக்குகிறதற்கு அதிகாரிகள் எலிகளைக் கொன்று வருகிறார்கள். அதிகாரிகள் ப்ளேக் அம்மை குத்துகிறதை ப்ரபலப் படுத்திவந்தால் அடியோடு வ்யாதியைத் தொலைக்க ஏற்பாடு செய்ததாகும். ப்ளேக் அம்மை குத்திக்கொள்ளாதவர்கள் 100-க்கு 99-பேர் நஷ்ட மடைகின்றார்கள்:—டாக்டர் ஹாபிகின், இங்கலாண்டு.

VI

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Women in the Russian civil service.

ருஷ்ய ஸிவில் ஸர்விஸில் ஸ்த்ரீகள் :—ருஷ்யாவில் ஸ்த்ரீகள் ராஜாங்க நிர்வாசத்தில் உத்தியோகம் பெறலாமென்று ஒரு சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அநேக ஸ்த்ரீகள் கலெக்டர் தாஸில்தார்போன்ற உத்தியோகங்களே வகித்து வருகிறார்கள். அவர்களுக்கு புருஷர்களைப்போல் பெண்ஷனும் கிடைக்குமாம்.

Women lawyers in portugal.

போர்ச்சுகலில் ஸ்த்ரீ வக்கீல்கள் :—ஸ்பேயின் தேசத்து ப்ரதான நகரமாகிய போர்ச்சு கல்வில் ஸ்த்ரீகள் கோர்ட்டுகளில் வக்கீல்களாக வந்து வாதிக்கலாமாம். ஸ்த்ரீகள் கேஸுகளைத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். அத்தேசச்சட்டம் ஸ்த்ரீகள் வக்கீல்களாகவர இடம் கொடுக்கிறதாம்.

A Lady Artist.

ஒரு ஸ்த்ரீ சிற்பசாஸ்த்ரி :—ஆஸ்ட்ரேலியாவின் முக்யபட்டணமாகிய அக்கன் பரோவானது ஒரு ஸ்த்ரீ சிற்பசாஸ்த்ரியின் யோஜனையின்படி சட்டப் பட்டதாம். 'என் மனைவி அறிவை உபயோகிக்கிறாள். நான் வேலையைச்செய்கிறேன்' என்றார் மிஸ்டர் கிரிப்பன் என்கிற சிற்பசாஸ்த்ரி.

A child buried alive.

ஒரு குழந்தை உயிருடன் புதைக்கப்பட்டது :—ஐக்ய மாகாணங்களிலுள்ள அஜாம்கார் என்ற ஜில்லாவைச்சேர்ந்த ஒரு க்ராமத்தில் ஒரு குழந்தை பல்லுடன் பிறந்ததாம். அக்குழந்தை பிறந்தது முதற்கொண்டு அக்ராமத்தில் அநேக அரர்த்தங்கள் உண்டாயின. பெற்றோர்களும் க்ராமத்து ஜனங்களும் பயந்து அக்குழந்தையை உயிருடன் புதைத்துவிட்டார்கள். இதை போலிஸார் கண்டுபிடித்து கேஸ் நடத்தி வருகிறார்கள்.

Tibetan Princesses.

தீபா அரசனிள் குமாரத்திகள் :—ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கைப்பற்றுவதற்கு முன்னதாக, இத்தேசத்தை ஆண்டுவந்த தீபா அரசனின் குமாரத்திகள் தற்போது, இந்தியாவிலே ரத்னகிரி என்னுமிடத்தில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய ஜீவனார்த்தத்திற்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பணங்கொடுத்து வருகிறார்கள். அப்பெண்களுக்கு இன்னும் வருஷம் காது குத்தும் சடங்குகள் செய்யப்படுமாகையால், அதன்பொருட்டு, தீபா அரசனிடத்தில், நட்டார வேலை செய்துவந்த யு-வா-யா என்பவரும், ஜமக்காளம் விரிப்பவராய் வேலை பார்த்துவந்த யு-கேலே, என்பவரும், நேற்று கல்கத்தாவுக்குப் புறப்பட்டு அரண்டோ கப்பலில் பிரயாண மானார்கள். அவர்களிருவரும், இதற்குமுன ஒருபோதும் இந்தியாவுக்குப் போயிராதவர்களாகையால், போலீஸ் பந்தோபஸ்து தங்களுக்குச் செய்து கொடுக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ள கவர்ன்மெண்ட் அவர்களிவிஷயத்தில் படி போலீஸ் பந்தோபஸ்தும் ஏற்படுத்திக்கொடுத்தார்கள்.

Maids.

கன்னிகைகள் :— அமெரிக்காவில் 80 லக்ஷம் புருஷர்களும் 90 லக்ஷம் ஸ்த்ரீகளும் கல்யாண மில்லாதவர்களாம். இதில் 20 வ்ருந்து 45 வயதுக்குட்பட்டவர்களின் தொகை 72 லக்ஷம். 90 லக்ஷம் ஸ்த்ரீகளும் 15 வயதுக்கு மேல்பட்டவர்கள். பட்டணவாசிகளாகிய ஸ்த்ரீகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சக்தியிருக்கும் பொழுது ஆயுட்காலமெல்லாம் கல்யாணங் கழித்து ஆடவனுக்கு உடன் படுகிற தன்பமேன் என்று அபிப்ராய முடையவர்களா யிருக்கிறார்களாம்.

VII

WIT & HUMOUR.

தமாஷ்.

மாயவரம் தாலுக்காவைச் சேர்ந்த நெய்க் குப்பை யென்னும் ஊரில் 12-வயதுடைய ஒரு பெண் வயற்றிலிருந்து கிராமபோன் மாதிரியாக ஓர் சப்தம் உண்டாயிருக்கிறதாகவும், அச்சப்தம் கொஞ்சநேரம் பொருத்துப் பொருத்து சப்திக்கிறதாகவும் வதந்தியுலாவுகிறது.

ஒரு கன்னிகையைப்பார்த்து "உனக்கு எப்படிப்பட்ட புருஷன்வேண்டும்?" என்று கேள்வி ஹிந்துக் குடும்பங்களில் கேட்கப்படுவது சகஜம். சில ஆங்கிலஸ்த்ரீகள் தங்கள் கணவருக்கு அமைந்திருக்கவேண்டிய இலக்ஷணங்களைப்பற்றிச் சொல்லுகிறார்கள்.

மிஸ்மார்ஜோரி பிரௌன்:—"ஒரு மனிதனிடத்தில் விரும்பப்படும் குணங்களாவன தைரியம், சுட்சும புத்தி, குதூஹலம், பச்சாதாபம். இவைகளுடன் இனிமையும் தயாளத்வமும் இருக்குமாயின் அவன் சம்பூர்ண மனிதனே.

மிஸ்ஸஸ் டி. ஹெ. பிரிஸ்:—பலம், மனதிடமும், சுயநம்பிக்கையும் ஒருவனிடமிருப்பதுடன் ஒருவன்மீது உண்மைக் காதல்கொள்ளும் தன்மையு மிருக்குமாயின் நலம.

* * *

ஜட்ஜ்—.நீ இதற்குமுன் தண்டனை யடைந்திருக்கிறாயா.?

தூற்றுவாளி—.இல்லை. எஜமான்களை எதிர்க்கட்சி வக்கீல்—.இதற்குமுந்தி ஜெயிலுக்கு எத்தனே வாட்டி போயி நக்கிறாய்.

தூற்றுவாளி—.நாலு வாட்டி தான் போயிருக்கிறேன். எஜமான்க.

பெண்—.நாயனு. இன்னிக்கு ஒரு அம்மா இரண்டு வீசை சர்க்கரை வாங்க வந்தாள். 1½ வீசை தானிருந்தது. தராசை இடது கை தட்டை விறலால் அமுத்திக்கொண்டு இரண்டு வீசை நிறையாகக் காண்பித்தேன் அதற்கு இதோ அணு-12-0 வைத்திருக்கிறேன் என்று சொன்னுள்.

செட்டியார்—.குழந்தாய்! சோடையாய்ப்போகாமல் என் பேர் எடுக்க வேண்டும். நீ செய்தது சரிதான்.

பெண்—.இதற்கு என் பேரில் அண்ணே கோபிச்சிட்டது.

செட்டியார்—.அவன் கிடக்கிறான். அது தாசிலே. பிழைக்கத்தெரியாப் பயல்.

* * *

ஒரு நவீன ஸ்த்ரீ. டென்டிஸ்டு

ஒரு நவீன ஸ்த்ரீ.—ஸார், டாக்டர். இவ்வைத்தியசாலையில் பல் வைத்யம் செய்கிறதுண்டா?

டாக்டர்.—ஆம் மடாம், உண்டு. தங்களுக்கு என்ன பல்லியா?

ஸ்த்ரீ.—ஒரு வாரமாக பெரிய ஹிம்சையாக இருக்கிறது. பல் வலி சகிக்க முடியவில்லை. கல்ல மருந்தாகக்கொடுங்கள்.

டாக்டர்.—சரிதான். இப்போது சீமையிலிருந்து மெயிலில் வந்திருக்கிற பற்கள் சரியாயிருக்கும் போலிருக்கிறது. அடே சோக்ரா. அந்த பல்பிடுங்கியை எடுத்துவா.

ஸ்த்ரீ.—திடுக்கிட்டு, என்ன ஸார். பல்பிடுங்கி எதற்கு?

டாக்டர்.—தாங்கள் பல்லை பிடுங்கிறதற்கு (மூக்குறியைப்பார்த்து) என் பயப்படுகிறீர். பழசுபோலுல் புதிதுவருகிறது.

ஸ்த்ரீ.—என் ஹஸ்பண்டைக் கேட்டு வருகிறேன் என்று போய்விட்டான்.

VIII

EVENTS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

பிப்ரவரி '1914.

1-ந்தேதி.—சென்னை அபேத ஐக்கியானந்த சமாஜத்தில் மிஸ், தாரா வுக்கு, பெண்கல்விப் பத்ராதிபர் ஒருவிருந்து கச்சேரி நடத்தினார்.

3-ந்தேதி.—ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் தமது பங் களாவில் ராயல் கமிஷன் மெம்பர்களுக்கு ஒரு வீட்டுக்கச்சேரி நடத்தினார்.

4-ந்தேதி.—பஞ்சமத்தில் பீடிக்கப்பட்ட துருக்கிக் குடும்பங்களின் பஞ்ச நிவாரணத்திற்காக லேடி ஹார்டிஞ்சு 1000 ரூ. கன்கொடை கொடுத்திருக்கிறார்.

6-ந்தேதி.—சென்னை அபேத ஐக்கியானந்த மாஜத்துக் கார்யதரிசி யும் பெண்கல்விப் பத்ராதி பருமான சகோதரி தாயாரம்மாள் மிஸ்தாரா வுக்கு அவளின் சகோதர வாஞ்சையையும் தன் மறுப்பையும் கண்டு மகிழ் ந்து ஒரு பொற்பதக்கம் பரிசளித்தார்.

9-ந்தேதி.—ஸ்ரீமத் ஜி. சுப்பிரமணி அய்யரின் சஷ்டி அபத்பூர்த்தியை முன்னிட்டு சுதேசமித்திரன் கும்பகோணம் சந்தாதார்கள் 60 ரூக்குமேல் பெறும்படியான ஒருவெள்ளி கூஜா அனுப்பினார்கள்.

10-ந்தேதி.—தென்னப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்ட நிவாரணத்திற்காக பம்பாயில் புருஷர்களும் ஸ்த்ரீகளும் சேர்ந்து 32,084-வரூல் செய்தார்கள். மறுபடியும் இன்று 3,29,853. வரூல் செய்திருக்கிறார்கள்.

11-ந்தேதி.—நமது போஷகர்களில் ஒருவராகிய ஸ்ரீமதி கே. கல்யாணி அம்மாளின் பதி ஆணையில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் இன்று சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

15-ந்தேதி.—கோதாவரி, கர்நூல் விசாகப்பட்டணம் ஆகிய ஜீல்லாக் களின் டிஸ்டிரிக்ட் போர்டார்களின் அனுமதியின் பேரில் சுற்றித்திரியும் டிஸ்பென் ஸரிகளு (Travelling dispensares) க்குதவா 1000 கொடுப் பதாக கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

21-ந்தேதி.—இன்று கல்வி இலாகாத்தலைவர் மிஸ்டர் போரன் மிஸ்டர் ஸ்டோனிடம் தமது வேலையை ராஜீநாமா ஒப்பித்துவிட்டு ஜென்மதேசம் போகிறார்.

22-ந்தேதி.—பரோடோ சமஸ்தானத்து திவான்வேலையை ஒப்புக்கொ ள்ள மிஸ்டர் வி. பி. மாதவராவ் பெங்களூரைவிட்டு புறப்படுவதற்குமுன் அவருக்கு ஒருவிருந்து கச்சேரி நடத்தப்பட்டது.

26-ந்தேதி.—இன்று ஆசார சீர்திருத்த சங்கத்தின் கீழ் மாலை 5-30 மணிக்கு மிஸ்டர் வட்சுமி நாராயணு ஹிக்குமதமும் ஆசாரசீர்திருத்தமும் என்ற விஷயமாகப்பேசினார். ஜட்ஜ்சங்கரன் நாயர் அக்ராசனம் வகித்தார்.

வீர.—அவசரப்படாதே! ஐயோ நீ அதை விட்டுவிடேல்.

ஸ்த்ரீ.—எது, அது முடியாது.

ஜீவ.—சரி பெண்ணே. சற்று குகைக்குள் வா; ஒரு விஷயம் தெரிவிக் கின்றேன். அண்ணு அங்கு யாரோ வருகிறார்கள். குகைக்குள் செல்லவே (யாவரும் குகைக்குள். செல்கின்றார்கள்). ஒருபுறமாக சிறிது தூரத்தில் ஜமீன்தார், உத்தண்டராயபிள்ளை, தாகன்முத்து, வக்கீல் அனந்தாம், யாவ ரும் வருகிறார்கள்.

உத்.—தற்காலம் நமக்கு ஐயமாயிட்டதல்லவா...பிறகு மேலாவி [redacted] துக்கொள்ளோம். அனேகமாய் நியாயாதிபதிங்க எல்லாருமே [redacted] சுயமாய் ஆராஞ்சுபார்ப்பது கிடையாது. கீழ் கோர்ட்டார் செய் [redacted] யென்று அப்பீலுத் தள்ளுபடி செய்வதுதான் வளக்கம் (வக்கீலைபார்த்து) நீங்கள் ஜவஜாதி என்று பார்க்காமல் அந்தப் பிராமணப்பெண்ணை நகை கோர்ட்டில் அவமானமான கேள்வி கேட்டீங்களே. அதுதான் எனக்குச் சங் தோஷம்.

வக்கீல்.—எங்க ஜாதியா. நாங்கள் மாத்வஜாதி. எங்களுக்கு இவர் கள் ஸ்வஜாதியல்ல. நீங்கள் எப்படியோ அப்படித்தான். இந்த தமிழ் பிரா மணர்களும் எங்களுக்கு. எங்கள் ஜாதியே வேறு அய்யா.....மேலும் ஜாதி யாவது பேதியாவது. கேஸில் நிறைய பீசுகிடைக்கும் என்று படித்தபா பட்டேன். பிராமணர்கள் எல்லாரும் ஏன் அனேக நாள் பிராமண்ஸ் கூட இதற்காக என்னை நிந்திக்கிறார்கள். அதுமுதல் நான் பார்லேப்ராக்டி பக்கம்போய் உட்கார்ந்தால் வக்கீல்கள் எல்லாரும் ஒதுங்கிப்போய் விடுகி ரூர்கள். நல்லதுதான். இடைகாலி யென்றிருந்து விடுவேன் நான்.

முத்து.—உங்களை சூனியன் களப்பில்கூட என்ன...ஞாபகத்துக்கு வர மாட்டல்லியே. என்னவோ. பால் பண்ணி விட்டாங்களாமே.

உத்த.—பிளாக் பாலா.

முத்து.—ஆமாம். பிளேக்பால் பண்ணி.

வக்கீல்.—சரிதான். வாயைமூடு. இவங்க இளப்போ லச்சனமோ. என்ன இன்ஸ்பெக்டரவாள். உங்களுக்குத் தைரியமிருந்தால் இந்த வக்கீல் கள் இளப்பை பூராவாய் ஒழித்துவிடலாம். ராஜத்துரோகம் அலலது.—

இன்ஸ்.—ஐயா. அந்தப் பூச்செல்லாம் செல்லாது அங்கே. போதும் போதும். அங்கே நம்மகை வீரசெல்லாம் செல்லாது. அங்கேபோலுல் எறும்பு புற்றில் கை வைத்தாற்போல்தான். இரண்டு வக்கீல் கைதிபக்கம் வந்தால் நான் கேஸ்களில் நிண்டாடுகிற கஷ்டம் எனக்குத்தெரியும். அவங் களில் யாராவது ஒருவன் என் கட்சிக்கு வந்தால்தான் நம் கேஸ் ஜயிக்கி [redacted] இந்த வக்கீல்களை கேஸ்களில் அதுவும் போலீஸாருக்கு எதிர் பக்கத் [redacted] வேகூடாது. எதாவது நடந்தால் அவுடவிட்டு பேசுவேன் என்

கிறார்கள். மேஸ்திரட்டை நம்வழிக்கு சரி பண்ணிஞமோ உடனே கேஸை மாற்றிக் கொள்ளப்போகிறோம். விசாரணையை நிறுத்து என்று சட்டம் பேசுறார்கள். எளவுசட்டம். இவன்களுக்கனு கூலமாயல்லவா யிருக்கிறது.

ஜமீன்.—என்ன இன்ஸ்பெக்டர். ஆக்கிரகப்படுகிறீங்களே. காசு வன்னு. சட்டமெல்லாம் நம்ம பக்கம்தானே. எட்டி யெறிஞ்சா. பொறுக்க வருவான்க இந்த வக்கீல்கள்.

வக்.—ஆமாம். எனக்கு கொடுத்தீர்களே. என்வேலைக்கு சாதாரண கடசிக்காரர் கொடுப்பதுகூட தாங்கள் கொடுக்கவில்லை. ஸப்மே ஜிஸ்திரட் டாருக்கு மாத்திரம் 10,000, ரூபாய் கொடுத்தவாளுக்கு என்பீஸில்தான் மிச் சம் பிடிக்கவேண்டுமாக்கும்.

முத்து.—நான் முன்னேயே சொன்னேனே. ஜமீன்தார் என்றுமயங்கி முன்டணமாக பீசை வாங்கமாட்டேன் என்றார்கள். அப்படி செய்திருந் தால் இப்போது ஐயப்பீசு கேட்டுவாங்கலாம். அதுபோனாற் போகுது. மேஸ்திரேட்டுகாவது நம்மூலமாக் கொடுக்கலாமென்றேன். அப்படி செய்திருந்தால் நமக்கு 1000 மாவது தங்கியிருக்கும்.

ஜமீன்.—என்ன. பிரமாதவேலை அப்படி கீங்க செய்துவிட்டது.

வக்.—ஆகா.—அப்படியா மதுரையிலிருந்து பெரிய வக்கீலென்று குமா ரத்தை யழைத்துவந்தான்களே. இந்தப்போலீஸ் சூான்கள் ராஜாதமும் மெடல்பெற்ற குணபூஷணமும் என்னத்தைக் கிழிச்சாங்க. அந்தச்சாயம் எங்கிட்டயா.

முத்து.—ஆமாம். பி. எ., பி. எல். பாஸ்பண்ணி என்ன பிரயோசனம் இவான் கெட்டிக்காரத்தனம் ஒருத்தருக்கும் கிடையாது. மாதம் மூவாயி ரமா. லேசா.

ஜமீன்.—மூவாயிரமாய் சொல்வானே. பூஜ்யங்கள் இன்னும் நாலு சேத்துக்கொள்கிறதுதானே. இப்படி அனேக வக்கீல்கள் ஜம்பம் பேசு கிறார்கள்.

இன்ஸ்.—(முத்துவை) நோக்கி உன்னால்தானே வரும்படியே. மூன்றி லொருபாகம் உனக்குத்தானே.

முத்து.—(நகைத்து அதனுலென்ன? எங்களுக்கும் பிழைப்புவேண்டுமே. மேலும் நாங்கள் செய்யிர வேலையார் செய்யமுடியும். மினுக்காய் கோர்ட் டில் பேசினுலாச்சோ. சாட்சிப்பசங்களை பக்குவப்படுத்தி அவங்களை வீலை வைத்து, ரசீதுகளோ பத்திரங்களோ எவ்வளவு கிருஷ்டமோ செய்யவேண்டி யிருக்கு. எல்லாம் செய்துமுடித்தால் ஜம்பமாய் பேசுவார்கள் வக்கீல்கள். இவன்டெளட் அவன்டெளட் என்று என்ன இன்ஸ்பெக்டரே. உம்முன் சொல்ல எனக்குப்பயமா. யோகியமாய் சம்பாதிக்கிற வக்கீலுக்கு என்ன மரியாதை கடக்கிறது. சொல்லப்போனுல் எங்க யசமானுக்கு கடக்கிறது

யாதையில் நூறில் ஒருபங்கு மற்றவர்களுக்கு கிடையாது. ஜட்ஜிகளுக்கு வேண்டுமானுல் நம்ம லாண்டலட்டுதான் முதலில் கேட்பார்கள். எல்லாம் பணம்தான் முக்கியம். நாய் விற்றகாசு குலைக்குமா.

ஜமீ.—ஆனுல் உங்க வக்கீல் அபோக்கிய னென்கிறீரா. சே. என்னையா. அவர் முகத்துக்கு முன்னேயா.

வக்.—(அசட்டுச் சிரிப்புடன்) நாமெல்லாம். யோக்கியனைக் காசைப் பட்டால்...எப்படி பிழைத்திருக்கிறது.

ஜமீ.—என்ன பன்மையாய் பேசுகிறீர்...நாம்.....ஜாக்கிரதை.....ஐயா சேஸ் நடக்கும்போது மாஜிஸ்திரேட்டு. உம்மை வீண்கேள்வி கேட்காமல் குமாரத்தை யடிக்கடி ஆட்சேபித்து, உம்மை சரியப்படுத்தியும்கூட சில சமயங்களில் முழி முழியென்று முழித்தீரே...ஆமாம். குமாரம்கேட்ட கேள்விகளுக்கு, நீர்பதில் சொன்னீரா? மாஜிஸ்திரேட்டும் என்பணமும் பதில் சொல்லிற்று? என்பணம் இல்லாவிட்டால் கேஸும் நீரும் போன விடம் புல் முளைத்திருக்குமே. இனி மேலாவில் கேஸ் நடந்தால் குமாரத் தையே நியமித்துக்கொள்கிறன்.

முத்து.—எங்கே பார்ப்போம் நீ லட்சம்தான் கொடும். அவர் மாட் டவேமாட்டார்.

ஜமீ.—அது நிகழ்ந்தாலு.

வக்கீல்.—ஜமீன்தாரவாள் ரொம்ப சமஸ்கிருதமாய்ப் பேசராப்பிலே யிருக்கே.

ஜமீன்.—ஓய். பாப்பான் என்கிற குரும்பைக்காட்டு கிறீரே.

முத்து.—அதுவிமா. எல்லாத்தான் கெட்டுப்போச்சே.

வக்.—ஆமாம். காலந்தானே பாப்பான் பாப்பான் என்று கீழ்ஜாதி யன் கரிப்பதும், தாசிகள் எல்லாரும் தாங்களே குலஸ்திரீகளைவிட உயர்ந் தவரென்று கர்விப்பதும், நியாயமொருபக்க மிருக்க அனியாய கட்சி ஜயிப்பதும் காலத்தின் கோலந்தானே.

உத்.—ஓய் என்னங்காணும் பொடிவைத்துப் பேசுகிறீர். வெள்ளி பாக்கு, தங்கராம்பு, ஸோடா, தேவடியாள் இவற்றால் கட்சிக்காரர்களை இழுத்து தாகசன்வைத்து ரூலுக்கு விரோதமாய் நடப்பதற்காக உம்மை ரெஸ்டுசெய்து போடுவேன்.

வக்.—(நகைத்து) ஹாலிய், ஹாலிய். போலீஸ் புலியல்லவா. கஜபதி யிடம் காட்டவேண்டிய வீரத்தை என்னிடமா காட்டுகிறது. பேஷ், என் குற்றத்தை நீர்சொல்ல உம்குற்றத்தை நான்சொல்ல இதுதானு நம்மினே கம்.

முத்து.—சிறுத்தங்கள். வீண்வாதத்தை ஒருகுட்டி புதிதாய் ளம்பி யிருக்கிறான். ஜாவளி, தெம்மாங்கு, திருப்புகழ், காவடிச்சிந்து எல்லாம் ஜமாய்க்கிறான். ஜமீன்தாரவர்கள் வீட்டில்.

ஜமீன்.—என் பாதோன் பெரிய பாட்டாயிருக்கிறதே.

உத்.—என்ன ஜாதி. பிராமணப்பெண்ணே.

முத்து.—இல்லை. உங்கள் ஜாதி. பெயர் சண்முகசுந்தரம்.

உத்.—அப்படியானால்...வேண்டாம்...தன் சகோதரிபோன்ற ஸ்திரீ களை புருஷர்கள் சதனில்விட்டு வேடிக்கைபார்த்து ஸ்வஜாதி யபிமானமில் லாது புறம்போய் தாவுக்க...நாங்கள் பாப்பானல்ல.

வக்.—(அசட்டு சிரிப்புடன்) ஜாதி பேதமில்லாமல் ஐக்கியமேற் படுங் காலத்தில் எதற்கு மறுபடி துவேஷத்தை ளைப்பவேண்டும். எய் முத்து வாடா. ஸ்நானம் செய்துவிட்டுப் போகோம்.

முத்து.—நீங்கள் போங்கள். அதோ அபத்தில் க. ரு. மி. செட்டியாரும். காளையாவும் வருகிறார்கள். நமக்கு வேட்டைதான். (இருவரும்போய் விடுகிறார்கள்).

ஜமீன்.—நாயைக்கொஞ்சினால் வாயை முத்தமிடும்—இந்த அல்பப்பசங் களுடன் சகவாசம் செய்வதினால் ஒரும்கேடு கொஞ்சமில்லை. இவன் கழுகு தான். செட்டியைக்கண்டதும் மூக்கில் வியர்த்தது. ஓடிப்போய் விட் டான்.

உத்.—இவனை மாட்டிவிடவேன். இவன் ஜகதலப்பிரதாபன். தான் போவதுடன் எப்படியாவது கம்மையும் தொலைத்துவிவான். தான் மேலதி காரிக்கு பத்துசலாம் போட்டேனால் இவன் நூறு சலாம்போட்டு காரி யத்தை சாதித்துவிவான்.

ஜமீன்.—அது போகட்டும். அப்பீல்வாய்தா கிட்டிவிட்டதே. அந்த ஸ்திரீ. ரகுநாதனிடம் சகலமும்சொல்லி பலமான பிரயத்தினம் செய்கிறா ளாம். இனிதப்புவது தப்பிரான் புண்ணியமிருந்தால். மைநன் கோர்ட்டில் கம்பணம் பலிக்காதே. முக்கியமாய் இந்த ரகுநாதன் இல்லாவிட்டால் அப் பீலே நடக்காது. இவனை ஒழித்துவிட்டார். (நாற்புறமும் பார்த்துவிட்டு) என் இச்தமாதிரி இடங்களில் அவனை பைசல் செய்துவிட்டாலென்ன. என்.

உத்.—செய்யலாம்...ஆனால் கம்மேல் நிகயம் சந்தேக மேற்படும்... மேலும் இப்போது ராஜாவின் சுபாரிண்டண்டும் இவனுக்கு நிழல்போல உதவி செய்கிறானே. எப்படி நம் எண்ணம்முடியும்...இவர்கள் எங்கிருந்து தலைப்பட்டானோ. காசமாய்போக. காலகள் கேலை கண்டுபிடிக்கிறது. சேர்த்தி எல்லாம் இவர்களுக்கு. கழுதைகேலியில் மாந்திரம் நானப்படி விடப் போகிறதல்லோ. (மீசையை முறுக்கிக்கொண்டு) அதில்தெரியும் என் சாமர்த் தியம் முன்னாலேயே இதைப்பற்றி மேலாவுக்கு எழுதி என் வீரத்தைக் கவ னிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்ன பலமான யோசனையி லிருக்கிறாய் போலிருக்கே.

ஜமீன்.—எப்படியும் நான் அவமானப்படுவது நிச்சயம். எனக்குக் கட னும் ஜாஸ்தியாய் விட்டது. ஜமீன் முழுவதும் ஒத்தி, இந்த கேஸ் முடியும் முன் மற்றக்கடன் காரர்களும் ஜப்திக்கு வந்து விடுவார்கள். இதுதான் நல்ல நிர்மானம். இன்னும் எப்படியாவது கடன்களை வாங்கி தணித்து பலவிதத் காலும் அனுபவித்து விடுகிறது. அந்த ஸ்திரீயையும் ரகுநாதனையும் பழிவா ங்கிவிடுகிறேன். முடிவில் தற்கொலை இருக்கவே யிருக்கிறது. பூலத்தார் ஜமீன்தாரிப்படித்தானே செய்தான். என்ன.

உத்த.—இப்படி யெல்லாம் பேசாதேயுங்க. எனக்கு தலை சுற்றுது. நாம் வேஸாக்கயிருக்கலாம்னு—ரகுநாதனை ஒழிக்கும் விஷயத்தில் நான் நல்ல உதவிசெய்கிறேன். இன்று காலை குமாரத்தின் மகன் ராஜம் என்னிடம் ரகுநாதனைப்பற்றி பலவிதமாய் தூதித்தான்.—

ஜமீன்.—குமார மென்றவுடன் ஞாபகம் வருகிறது. இன்று காலை நான் அருவிக்குப்போனேன் தண்ணீரின் மத்தியில் கருத்து கீண்டபல பாம் புகள் போல ஏதோ காணப்பட்டது. அழகாய் துடைவரை தொங்கும் அக் தப்பெண் கூந்தலென்று பிறகு அறிந்தேன். பத்தரை மாற்றுத்தங்கத்தை யுருக்கி வார்த்தாலென நிறமும் முகனையும் பொருத்தி வளர்த்தி குன்றுத பெண் விவாகமாகாத குமாரத்தியின் புதல்வி யென்று சொன்னார்கள். அவள் பிறரைக்கவனியாமல் ராணிபோல கௌரவத்துடன் பூமிநோக்கியே போல தைக் கண்டு என்னை மறந்து திகைத்து பிரேதம் போல நிற்க கால் வழுக்கி நிடீரென விழுந்தேன். என் கௌரவத்துக்காக என்னை பார்த்து ஒருவரும் சிரிக்கவில்லை. ஆனால் அப்பெண் நான் விருந்தைக் கண்டு தன் தோழியி டம் ஏளனம் செய்து நகைக்க எல்லாரும் சிரித்தனர்கள். உடனே அவள் விரைவாய் போய்விட்டாள்.

நான் அவமானப்பட்டது கூட எனக்குத் தோன்றவில்லை. அவள் புன்ன கையும் கௌரவமான நடபடிக்கையுமே என் மனதைக் கவர்ந்து கொண் டன. பெண்ணைச் சேர்ந்த பாதகனைப் பெயரெடுத்தேனே வீணாய்.

உத்த.—நானால் அவமானப்படுத்தியவனைக் கொலை செய்யவும் அஞ்ச மாட்டேன். நமக்குப் புறமல்லவா ஆசை. அப்பெண் மகா கர்வி. நான் கூட அவளிடம் அவமானப்பட்டேன். அவனை எப்படியாவது அவமான ப்படுத்தி தீங்கு செய்து விடா விட்டால்.

ஜமீன்.—(தன்னுள்) என்ன அருமை. சரியான பெயர் தான். உத் (வெளி) அப்படியானால். நாம் அவனைத்தூக்கி வந்து விட்டாலென்ன கண்ட (வெளி) அப்படியானால். நாம் அவனைத்தூக்கி வந்து விட்டாலென்ன (தன்னுள்) வந்த பிறகு அவளுக்கு தீங்கைழைத்தாயானால் உன் உயிரை வாங்கி விடுவேன்.

உத்.—என்ன. ஒன்றில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுவது போதாதா. அவனைத்தூக்கிப் போவது மகா கஷ்டம். அவளுக்குண பூஷணத்துக்குக் கொடுக்கப்போகிறார்களாம்.

ஜமீ.—ஹா... அப்படியா!

உத்.—ஆம். அதைப்பற்றி பிறகு யோசிக்கலாம். ரகுநாதனை முடிக்க வேண்டிய வழியை முதலில் பார்ப்போம். நம் காரியம் கை கூடுமா வென்று நம் ஜோஸ்யரைக் கேட்டுக்கொள்வோம். அஞ்சணமை போட்டு பார்த்துவிட்டு வேலையைத் துடங்குவோமே (மீசைடை முறுக்கி) என்ன. ஒருவிதமாயிருக்கிறார்கள். பயப்படவேண்டாம்.

ஜமீன்.—எனக்கதொன்றிலும் நம்பிக்கையில்லை. (தன்னுள்) ஆகா. குண பூஷணமே. மானிடப்பிறவிக்குள் பாக்கியம் செய்தவன். இப்பேர்ப்பட்ட பெண்ணை மன மொத்த மனைவியாயடைந்தா லொழிய மனதிற் கின்பமில்லை. (இருவரும் போகிறார்கள். கந்தன் வருகிறான்).

கந்தன்.—இன்னிக்கி நரி மொவத்திலே முளிச் சேண்டாப்பா. அந்தப்பட்டு நூலு காரப்பய பண முடிச்சு கொண்டாரான். இந்த எடந்தா சரீ. ஒதச்சுப்பிடுங்க. கணபதி வீட்டுப்பணம் செலவாச்சேணிருந்தே. அடடே இங்குட்டே வாரங்க. நல்லது. இத்தா. நாதிருடரத்துலே இரண்டிந்த டவை இண்ணும் பயம் மிணுக்கு மிணுக்குண்ணிருக்கிறது. வளக்காயிட்டாக்கி சரியாபோயுடும். பொறவு சசவதி. கூட கூட சேர்ந்தாரவா. இதோ கிட்ட வாரங்க. ஒளிஞ்சுகிறேன் (செடிமறைவில் பதுங்குகிறான்). செட்டியும் நாகையாவும் வருகிறார்கள்)

செட்டி.—படுகாளிப்பயமகேன். இவம் பேச்சுலே நாமயங்கராதுலலே. முந்தா நேத்து கூட. பாலாமணி நாடகத்துலே. இப்படிதா ஒருத்தேன். வேசம்போட்டு கிட்டு வந்தா. சோரா. ஏம் மருமகப்பிள்ளை. இவங்கூடப்போனா. பச்சணம் பலவாரம். காபி பளக. களப. படிக்கலாமிண்ணு போ. போ. கேசை தோத்துட்டு வந்தாரு.

நாகையா.—என்னாஸேயர்து. நம்மளு கூட அப்படிதா. கேசை தோத்துடா செய்தூட்டது உ. கேஸுலோ. யாத்திர வந்தது உடவோ. ரூவா. அல்லா. ஸெலவு ஸெய்துட்டத்து. உ என்னாத்துக்கு யாத்தரே ஏ. நம்மளு ஸமுஸாரம். ஸொம்மா போகோணூண்ணு தொந்தார ஸெய்தது உ. நெம்மளு ஓணாண்ணு ஸொன்னா கேக்கா ஸெய்யரதில்லை. தோணீ ஏறி. தோஸீ பட்டணம் போகா ஸெய்தது. உஸெய்தா ஆ தோணீ அய்யோணு இளுக்க ஸெய்தது. நம்மளு புள்ளே குட்டிங்கள்ளா கோயிந்தாண்ணு போக ஸெய்யரது உ. என்னா ஸெய்யரது உ. தோணீ காரா. மூக்கணாங்கயத்தே இளப்பா. இளுண்ணு கத்த ஸெய்ததூ ஊ. நம்மளுக்கு பட்டாஸு. நிக்க கன்னாண்ணு ஆம்பிளேபிள்ளே நோகம் மாண்ணு பொம்பொளே பிள்ளே. முக்காலு புள்ளே. நம்மளு சமசாரம் வயித்தூலே. ஸெய்திருந்தது. மலையளகர் கிருபையா ஆலே. பொளச்சு வந்தது. இதோ கொஞ்சம் (தன் பணமுடிப்பை எடுத்து) விச்சுகிங்கோ. நெம்மளு வெளியே போயிட்டு ஸுருக்கா வந்துடாரது

செட்டி.—அடே இளவே பணத்தெல்லா. இங்குட்டு கொண்டாரலாமா.

நாகயா.—அய்யாய்யா அவஸரமா, வெந்துட்டுதுஉ.

செட்டி.—ஊட்டுக்குப் போயிறல்லாமே.

நாக.—இப்படி ஒக்காந்திருந்தா. நம்மளு ஸுருக்கா வந்துடும். (நாகையா போகிறான்).

செட்டி.—வடிவேலா. எங்கிருபே ஒக்காந்துரும்போம். (உட்கார்ந்து கொட்டாவி விடுகிறான். கந்தன் பின் புறமாய் வந்து பையை எடுக்கிறான்).

செட்டி.—ஹைக். ஹைக். யார்ராவேங்களவாணிப் பயமாதிரி யிருக்கே (பையை நெட்டியாய் பிடித்துக்கொள்ள. கந்தன் கண்ணால் உறுக்கி கையை ஓங்குகிறான்).

செட்டி.—ஹிக் அடே. பாக்கறாப்பிலேயிருக்கே. அடிக்க வராப்பிலேயிருக்கே. களவாணித்தனம் பண்ணராப்பிலே யிருக்கே. (பின்னகர கந்தன் அடித்துப் பணப்பையைப் பிடுங்கிக்கொள்கிறான்.)

செட்டி.—(அழுது கொண்டு) ஏண்டா. களவாணிப்பயலே அடிச்சுப்பிட்டாப்பலேருக்கே. பிடுங்கி கிட்டாப்பலேருக்கே. உம் ஹும் ஹேபட்டு நூலகார. களவாணிப்பய...ஓடியா. ஓடியா. (கந்தன் செட்டியைப் பலமாயடித்துவிட்டு பையுடன் ஓடுகிறான். நாகையா வருகிறான்)

நாகை.—நெம்மளே பட்டுணூல் காரண்ணு ஸொல்லாதே. ஸௌராஷ்டிர பெராமண எண்ணு ஸொல்லோணூண்ணு. எத்தனை தடவே அளுக ஸெய்யரதூஉ. இன்னமே பட்டு நூலு காராண்ணு வொண்ணே. அப்பவே நெம்மளுக்கு கோவம் வெந்துட்டுது.

செட்டி.—என்னாங்கிரே, கிருக்கௌவூ. களவாணிப்பயே. ரூவாயெக்கொண்டுட்டு போயிட்டாங்கிரே. நீ யௌவு. வெந்துட்டுது வேகல்லேண்ணு (அழுகிறான்).

நாகையா.—அய்யோ ஸுந்தர ராசப் பெருமானே. (வயிற்றிலடித்துக் கூச்சலிடுகிறான். குணபூஷணமும் ஆர்டர்லியும் வருகிறார்கள்) அய்யா. நம்மளு பொணப்பைங்க.

செட்டி.—களவாணிப்பயே அடிச்சுட்டு போய்டான்.

குண.—ஆர்டர்லி. நீ இவர்களைக்கூட்டிக் கொண்டு ரகுநாதம் யஜமானிடம் ஒப்பித்துவா. ஆள் அங்கே அடையாளங்கள் எழுதி வாங்கி உடனே தேடிப்பிடிக்க ஏற்பாடு செய்யுங்கள் செட்டியாரே இவனுடன் போங்கள். பணத்தைத் தேடிக்கொடுப்பார்கள். (இருவரும் கும்பிட்டு ஆர்டர்லியுடன் போகிறார்கள்). ஆ. அம்மட்டும் ரகுநாதனிடம் நான் உண்மையை வெளிவிடாதிருந்ததும் குமாரத்தை எச்சரித்ததும் நலமே. குமாரம் காரணம் கேட்ட

தற்கு நாளை பதில் தெரிவிப்பதாக சொன்னேனே. என்ன சொல்கிறது. சொன்னாலும் அவர் ஒரு நாளும் மன மொப்பி தன் குமாரியை ரகுநாதனுக்கு கொடுக்கமாட்டார். ஆம். அவன் உயிரே அவனுக்குச் சொந்த மில்லாதிருக்கும் காலமல்லவோ. இப்பொழுது அவர் எப்படி மனம் துணிவார். மேலும் அவனுக்கும் அவளை வைத்து காப்பாற்றக்கூடிய சக்தியில்லையே. என் மனம் தவிப்பதை ரகுநாதன் சிறிதளவேனும் அறிவானாகில் இவ்வெண்ணத்தை வேருடன் களைந்துவிடுவான். சாவித்திரி மனதை முழுதும் அறியும்வரை அவனுக்கிது தெரியாதிருப்பதே நலம். முழுதும் தெரிவானேன். இதுவரை அவள் யாதுமறியாத பேதையாய் இருந்தவள். நேற்று தினம் நானும் ரகுநாதனும் அருகிலிருக்கையில் அவள் தந்தை யழைக்க, அவள் நடபடிக்கை மாறுவானேன். நிலத்தைக் காலால் கீறி பூமி நோக்கிய வண்ணம் பதிலளித்தாள். ஆஹா! இந்நிலையில் அவளைக்காணவே நான் வெகுநாளாய் ஆவலுற்றேன். ஆனால் அது என் பொருட்டு ஏற்படாமல் அவள் பொருட்டு ஏற்பட்டதே! மேலும் என்னை சந்திக்காதிருக்க எண்ணுகிறாள். நான் எதிர்ப்பட்டால் ஒரு பக்கமாக மறைந்து விடுகிறாள். அவள் ரகுநாதனை நேசிக்கின்றாளோ என்னமோ என்னை நேசிக்கவில்லை...நேசமிலாப் பெண்டிரை மணந்தென்ன பயன். ஐயோ அவள் என்னை வெறுப்பதாய் கூட சில நடபடிக்கைகளில் புலப்படுகிறதே. ஆயினும் என் பாழ் மனம் அவளை மறக்கவில்லையே ..நான் அவள்மேல் கேவலமான இச்சை கொண்டாலல்லவோ மறக்க முடியும். தெய்வத்தின்மீது கொண்ட பக்திக்கு நிகராய், அவளருகில் எப்போது மிருந்து சம்பாஷித்துக் கொண்டிருப்பதே என்னா வலன்றி வேறல்ல...பிறர்க்கு மானிடர் தீங்கு செய்து முயற்சி வீணாய், தானும் பயனடையாமல் போகுந்தருணம் இதைப்போன்ற தருணமே யல்லவோ. அப்படிப்பட்ட புத்தியை ஈசன் எனக்கு அளிக்காதிருப்பராக...சாவித்திரி வேறிடத்தில் மனம் வைக்காது என் உயிர்க்குயிரான ரகுநாதனை யாவது காதலித்தாயே...நானென்ன பிதற்றுகிறேன். இது உண்மைதானோ...நான் அவளையிழந்து உயிர்வாழப் போவதாய் நினைக்கிறேன். என்னால் அது ஒருநாளும் முடியாது என்பது பிரமாணம். நான் அவளை மணம் செய்யாவிட்டாலும்...ஹ (பெருமூச்செறிகிறார்)அவளை தினமொரு தரமாவது கண்டு அவளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. தோன்றாத்துணையாயிருந்தாவது கார்ப்பேன். இது சத்தியம், சத்தியம் உலகம் என்ன நினைக்குமோ...சீ. என்ன நினைத்தாலென்ன. சத்தியத்தைக் கைவிடாமல் உண்மையான சகோதரன் போலிருந்தாலென்ன. இதென்ன பைத்தியம். தன் தந்தையின் வாக்கியத்திற்கிணங்கி சாவித்திரி என்னையே ஒரு கால் மணஞ்செய்துகொள்ளக்கூடும். ஏன் நான் கலங்கவேண்டும். ஏன் நான் கலங்கவேண்டும். முழுவதும் பார்க்காமல் ஏன் அவசரப்படவேண்டும (மௌனம்)....நான் அவளை மணந்த பிறகு அவள் ரகுநாதனையே மனதில் ஸ்மரித்தாளாகில் ஆனால் இந்திய ஸ்த்ரீகள் அவ்விதம் நினையார்...மேலும் இவள் சுயபுத்தி வந்தவள்...அப்படி நினைப்பாளாகில் அதினும் கொடிய நரகம் எனக்கு மவளுக்கும் வேறில்லை. அககொடுமைக்கு

210

THE

FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்ராதிபர் :
ஸஹோதரி ரேவு. தாயாரம்மா.

Vol. 3. தொகுதி 3. } ப்ரமாதீசஹு பங்குனிமீ, March. 1914. { No. 6. பகுதி 6.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors,

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

211

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

சீதன வரிசை.

கல்யாணி—ஆதி.

பல்லவி.

சீதன வரிசை யீனகம் செய்வேனிதில் என்ன சங்கீதகம்.

பெற்றுக்கொள்ளின்னம்

அநுபல்லவி.

ஆகாவா யென்னுடன் அல்லியங்குழல் வல்லி
ஆடலுடன் பல
சேடமணந்தனில்
லாகுமோ மனது
நீ குணளமுடனே

அவதரித்த சற்குணி
நல்ல தங்கையம்மணி
பாடல் முழங்குவி
வாடுமுகங் கொள
நோகுவதென்ன
முன்னே சொன்ன (சீதன)

சரணம்.

வாசனைப்புஷ்ப நந்த
வர்ணச்சம்பா நெல்வயல்
பாசமாம் பால் பசுக்கள்
பசும் பொன்னாபரணமும்
பாஜிபந்து விரல்
காச சந்தாமணி
பட்டைவிராவிய
அட்டிகை மாலைநல்
பதக்கமாலேவி
மதிக்கு மேகலை
பச்சை பதித்தவி
மெச்சிய நதுமு

வனங்களில் பன்னிரண்டு
வேலியாயிர முண்டு
பத்தாயிரமுங் கொண்டு
இசைந்த தெடு நீ கண்டு
மோதிரங்கள் பிர
மாகில் கெம்பு வகை
கத்திரி பாவலி
வஜ்ஜிரமோகன
சித்ரச் சடைவிலை
கொப்புச் செவியணி
தக்கடகப்பணி
தல்தா முத்து

பவளக் கொடி பொற்
கொலு சுத்தினுசுக்
பங்கமில் தோடுகள்
மைந்தலை நாகமி
பற்றுன பொற்காரை
சுற்றுன ஒட்டியாணம்
பகுமாயெடுத்துவை நீ
லக்ஷமொடு லக்ஷமென

சரடற் புதகைக்
கிணை செப்பரிதிப்
வங்கிய லங்கிர்த
லங்கு சதங்கைகள்
சிற்றிடையிலோட்டி
மிக்க மயிர் மாட்டி
சித்தஞ் சலியாதே
வைத்தே னுனிப்போதே

(சீதன)

தகுந்த ஆயிரங்குடந்
தவலை தோண்டிதட்டுகள்
ஜகம் புகழ் வெள்ளியண்டா
தேக்கு சாமுக்குச் சட்டி
செம்பு கரண்டிகு
ஐம்பதிரண்டும
சித்தாக்குத்துவி
டுக்குச் சட்டிப
சிங்கார மங்காத
இங்காயிரங்காணு
திருப்தி நீயடைய
ஒருத்தி உன்னுடைய
தினந்தினம் பெறும்
கனம்புரிந்திட
தீபாவளியாடி
மாபூ ஜிதை கோடி
சேருமே இன்னம
கோருவாயிர் நாள்
பாரெலாம் புகழும்
பாரம் மணியுன்

தண்ணீர் கொள்ளுங் கொப்பறை
இவைகளுக் கென்ன குறை
மிகும்பணி வெள்ளிக்குண்டா
திகழ்வெள்ளிக்கிணையுண்டா
டங்கள் கிண்ணங்கள்
டங்கி லெண்ணங்கள்
ளக்குப் பெட்டிய
டுக்கைக் கட்டில்கள்.
தங்கத்திலே லோட்டா
முன் சித்தமே காட்டாத்
என்பிறவி.
வாழ்வில்
அனந்த மங்கள
மனம் பிறந்தது
நோன் பொடுதைப்பொங்கல்
நான் செயுந்திட்டங்கள்
னேகம்
வைபோகம்
யோகம்
விவாகம்

(சீதன வரிசை)

பெரிய மேஜைப்பல்லக்குப் பெட்டி வண்டி. பெட்டெட்டு
பீரோ குறிச்சி வகை பெஞ்சாயிரம் பொன்னில்லட்டு
விரிசலவைக்கல் மேஜை விதத்துக்கு நூறு மட்டு
மிஞ்சு நவரத்தினக்காக்கொஞ்சு பொம்மை தங்கக்கட்டு
விளக்குமே தரு நிலைக்கண்ணாடிகள்
தளத்திலே மிக விரித்தபாய் வகை
விலோபாடிய சது ரங்கப் பலகைகள்
அவை சேர்கருவிக ளிங்கற் புதவகை
விலேசுரபத்து பாணி மகிழ்பிட்டில்
வேணு மென முத்து சாமி கவி கற்று
விற்தையுடன் பயில் கின்றவுனிங்கித
நின் கணவன் புகழ் பண்பு தருந்தரும்
வேடிக்கைக்கு வைத்த வாடிக்கைக்கு மட்டும்
தேடித்தக்க தக்க நாடிப்பற்றி யிட்டு
மேன்மையாக அரண்மனைதனில் வாழ்வாய்
நீ மகாபதவி இனமெது சூழ்வாய்

(சீதனவரிசை)

உ. அ. முத்துஸாமி கவி.

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Education in India.

இந்தியாவில் கல்வி :— இந்தியா மஹா தரித்ர தேசம். அதன் செல்வங்களெல்லாம் போய்விட்டன. பாமரர்கள் ஜாஸ்தி. வரவர பிழைப்புக் கஷ்டமாயிருக்கிறது. விலை வாசிகள் ஒன்றுக்கு இரண்டரைப்பங்கு அதிகமாகயிருக்கின்றன. ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கவேண்டுமென்றால் உயர்தரப் பரீக்ஷைகள் பாஸ் செய்யவேண்டும். கொஞ்சப் படிப்புப் படித்தவர்கள் ஸர்க்கார் உத்தியோகத்தில் ஆசை வைப்பது ப்ரயோஜனமில்லை. ஏதாவது தொழிற் படிப்பைப் படித்து வருத்தி செய்து பிழைக்கவேண்டும். இந்தக் காலத்தில் படிக்காதவர்களின் கஷ்டம் சொல்லி முடியாது. கூலி வேலைக்குக்கூட எழுதவாசிக்கத் தெரிந்த கூலிகளைத்தான் எடுக்கிறார்கள். இனி பெண்ணைகட்டும் ஆணைகட்டும் சும்மாயிருக்கமுடியாது. படித்தே தீரவேண்டும். இதற்கு ஸர்க்கார் ஆதரவும் ஜனங்களின் உதவியும் உழைப்பும் வேண்டும். ஜனங்களும் ஸர்க்காரும் ஒத்துப்போய் ஒரு காரியத்தை முடிக்கத் தங்கள் முயற்சிகளை ஒரே வழியில் செலுத்தினாலன்றி அந்தக் காரியம் நிறைவேறுவது ஸாத்தியமல்ல. தேசத்தில் கல்வி அபிவ்ருத்தியைப் பரவச்செய்ய ஒவ்வொரு தேசத்தில் ஜனங்களும் ஸர்க்காரும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் மிகவும் புகழத்தக்கதாயிருக்கின்றன. இந்தியாவைத் தவிர ப்ரதிதேசத்திலும் ஆண்களும் பெண்களும் படிக்கவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. ஸர்க்கார் உதவியன்னியில் இக்காரியம்நிறைவேறாது. லண்டனில் ப்ரசுரமாகும் 'ஸடாடிஸ்டு' என்ற ஆங்கில பத்ரிகை ஒரு உபாயம் சொல்லுகிறது. ஸர்க்கார் இந்திய ஜனங்களிடத்தில் 15-கோடி ரூபாய் 4 வட்டிக்குக்கடன் வாங்கி அதைக்கொண்டு இந்தியா முழுமையும் இலவசப்படிப்பைக் கட்டாயப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் இந்த 15-கோடி ரூபாய்க்கு வட்டி வருஷம் 1-க்கு 60 லக்ஷம் ரூபாய்க்கு மேலாகா தாகையால் கவர்ன்மெண்டு ஸுலபமாகச்செய்யலாமென்றும் எழுதுகின்றது. ஒரே ஸமயத்தில் இவ்வளவு பணம் கடன் வாங்கவேண்டியதில்லை. காலக்ரமேணவாங்கினால் போதுமென்றும்சொல்லுகிறது. இப்படி

ஸர்க்காருக்கும் ஜனங்களுக்கும் ஒரு அழிபாபாந்தம் ஏற்பட்டுவிட்டால் இப்போதிருக்கிற ராஜ விஸ்வாஸத்தைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகப்பட்டு ப்ரிட்டிஷ் ராஜ்யம் அழியாப்பெருமையை படையுமென்று எழுதுகின்றது. இது எந்தக்காலமோ? தேசத்தில் கல்வியின்மையேதான் தேச அமைதியின்மைக்குக் காரணமென்றும் சொல்லுகிறது.

Dowry System.

வரதட்சணை வாங்கும் வழக்கம்:—ஸரோஹலதாதேவி என்னும் வங்காளப்பெண் தன் கல்யாண நிமித்தம் தன் தகப்பனார் வீட்டை அடகு வைத்துப்பணம் வாங்கப்போவதை உணர்ந்து அதனை ஸஹிக்காமல் தன் உயிரை நெருப்புக்கு இரையாக்கினது நம் ஸஹோதரிகளுக்குத் தெரிந்த விஷயம். இப்பெண்ணைப் பார்த்து கல்கத்தாவில் இதுவரையில் 16 உத்தமப் பெண்கள் தங்கள் பெற்றோர்கள் படும் துயரத்தைப்பார்த்து தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டார்கள். மஹாபரிதாபமாயிருக்கிறது. இப்படி ஒருவரைப்பார்த்து ஒருவர் தற்கொலை புரிந்துகொள்வார் என்று நாம் நம்பவில்லை. மாணவர்களும் ஆசாரசீர்திருத்தக்காரர்களும் ஆங்காங்கு கூட்டங்கூடி வரதட்சணை வாங்கும் வழக்கத்தைக் கண்டித்து தாங்கள் வரதட்சணை வாங்குவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இத்தீர வழக்கத்துக்காக பெண்கள் பண்ணிக்கொள்ளும் கோரம் பார்க்கவும் கேட்கவும் கூடவில்லை. இந்த கெட்ட வழக்கம் அடியோடு போகவேண்டியதுதான். ஆண்களும், பெண்களும், பெற்றோர்களும் இதைத் தொலைக்கமுயற்சிகள் செய்யவேண்டியது தான். இக்கொடிய வழக்கத்தைத் தொலைக்க தீர்மானம் செய்துகொண்ட உத்தமப்பெண்கள் புத்திசாலிகளே. ஸாதாரணமாக எல்லாப்பெண்களுக்கும் ஆத்ம த்யாகம் இலேசில் வராது. இப்பேர்ப்பட்ட உத்தமப்பெண்கள் தங்கள் உயிர்களை அநாவஸ்யமாகச்செய்து கொண்டார்களென்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு ஜீவன் துர்மரணமடைந்து பைசாச ரூபமாக அலைந்து கஷ்டப்படும் என்னும் ஜனங்கள் கொள்ளும் நம்பிக்கை உண்மையாயிருந்தால் அந்த ஜீவன்கள் வெகு கஷ்டப்படும். இப்பேர்ப்பட்ட பெண்கள் கல்யாணமில்லாமலே யிருந்து நமது ஸஹோதரிகளுக்கு மிகுந்த நன்மையை உண்டாக்கலாம். இப்பெண்கள் இறந்து போகும்போது எழுதிவைக்கும் கடிதங்களை நோக்குங்கால் அபாரசக்தியை உடையவர்களென்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது. இனி ஒரு கண்டிப்பான ஜனஸமூகச்சட்டமாவது ராஜாங்கச்சட்டமாவது இல்லாதவரையில் வரதட்சணை வாங்கும் வழக்கம் வேரோடு அற்றுப்போவது ச்ரமஸாத்யம்.

Education in Mysore.

மைஸூரில் கல்வி:—மைஸூர் ஸமஸ்தானத்துப் போன வருஷத்து கல்வி இலாகா ரிபோர்ட்டை பார்வையிட்டோம். இந்த ரிபோர்ட்டு தயார்செய்தவர் வித்யா இலாகா தலைவராகிய மிஸ்டர் ரிபோர்ட்டு தயார்செய்தவர் வித்யா இலாகா தலைவராகிய மிஸ்டர் ஷாமராவ் அவர்கள். மைஸூர் கவர்ன்மெண்டார் 1912-13-வருஷத்தில் கல்விக்காக 20 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். ஹைதராபாத்தைக் காட்டிலும் மைஸூர் விஸ்தீரணத்தில் சிறிது. அப்படியிருந்தும் மைஸூர் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் இரண்டு மடங்கு அதிகமாய்ப் பணத்தைச் செலவுசெய்து வருகிறது. 1912-ம் வருஷத்தில் ஹைதராபாத்து ஸமஸ்தானம் வித்யா விஷயமாக 10,19,738 ரூ. செலவழித்திருக்கிறது. மைஸூர் ஸமஸ்தானம் 20,01,303 ரூ. செலவழித்திருக்கிறது. திருவாங்கூர் ஸமஸ்தானம் போனவருஷம் 1284450 ரூ. செலவழித்திருக்கிறது. திருவாங்கூர் கூடிய சீக்கிரத்தில் 20 லட்ச ரூபாய் செலவழிப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. போனவருஷத்தில் 158 ஸ்கூல்கள் மைஸூர் கவர்ன்மெண்டார் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸ்தாபிக்கப்பட்ட ஸ்கூல்கள் பெரும்பாலும் ப்ரைமெரி ஸ்கூல்களாகும். மைஸூர் கவர்ன்மெண்டார் ப்ரைவேட் ஸ்கூல்களையும் ஆதரித்து வருகிறார்கள். திருவாங்கூர் ஸமஸ்தானம் ப்ரைவேட் ஸ்கூல்களை ஆதரிப்பது கிடையாது. மைஸூர் ஸமஸ்தானத்தில் ப்ரைமெரி படிப்பைக் கட்டாயமாகச் செய்கிறதற்கு அனேக ப்ரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். தாழ்ந்த வகுப்பாருக்குக் கூட ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகின்றன. கிராமத்தார்களும் ஸர்க்காரோடு சேர்ந்து ஜனனன்மைக்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறது மிகவும் மெச்சத்தக்கது. ஸ்தாபிக்கப்பட்ட ஸ்கூல்களைக் கட்டுகிறதற்கு கிராமத்தார்கள் 88 ஸ்கூல்களின் கட்டடச்செலவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனங்கள் தங்கள் ஸஹோதரர்களாகிய தேசத்தார்களுக்குச் செய்யவேண்டிய முக்ய கடமையை அறியவேண்டும். ப்ரிட்டிஷ் ராஜாங்கம் தேசத்து எல்லா கார்யங்களையும் கவனித்து அந்தந்

தக் கார்யங்களே சரிவரப் பூர்த்தி செய்வார்களென்று எதிர்பார்ப் பது கூடாத கார்யம். வருஷாவருஷம் பணமிருதிக்குத் தக்கபடி ஒவ்வொரு டிபார்ட்டுமெண்டுக்கும் பணத்தைப் பிரித்துக்கொடுத்து உதவி செய்வார்கள். நாகரீகமடைந்த தேசங்களில் ப்ரபுக்கள் தான் பொதுக் கார்யங்களுக்கு பணத்தைக் கொட்டுகிறார்கள். நம் தென்னிந்தியாவில் ப்ரபுக்கள் ப்ரதி க்ராமத்திலும் ஸ்கூல்கள் ஸ்தா பிக்க. முன்வருவார்களேயானால் பாமரர்கள்குறைந்து வருவார்கள்.

Conversion of Hindu Girls to Christianity.

க்ரிஸ்தவ மதத்தில் சேரப்போகும் ஹிந்துப் பெண்கள்:—இப் போது எங்குபார்த்தாலும் க்ரிஸ்தவப் பாதிரிமார்கள் தங்கள் மதமாகிய க்ரிஸ்தவ மதத்தைப் பரவச்செய்ய நாலாவித ப்ரயத்த னங்கள் செய்துவருகிறார்கள். அப் ப்ரயத்தனங்களில் பாடசாலை கள் ஸ்தாபித்தல், ஏழை ஜனங்களின் வ்யாதிக்கு ஸிக்ஸை செய் தல முதலியவைகளாகும். க்ரிஸ்தவமதத்தை இந்தியாவில் நிலை நாட்டும் பொருட்டே இவ்விதப் பாடு படுகிறார்கள். இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பாடசாலைகள் முக்கால் பங்கு க்ரிஸ்தவர் கள் முயற்சியின் பலன். நாலாவது வகுப்புக்கு மேல் இந்தியர்க ளின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒரு பாடசாலையாவது கிடையாது. நாலாவது வகுப்புக்குமேல் பெண்களுக்கு படிக்க வேண்டுமென்று விருப்பமிருந்தால் அவர்கள் க்ரிஸ்தவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பள்ளிக்கூடத்துக்குத்தான் போகவேண் டும். க்ரிஸ்தவ கன்யாஸ்த்ரீகளின் கீழ்ப் படிப்பதனால் நன்மைக ளும் தீமைகளுமிருக்கின்றன. தீமைகளே ஒதுக்கி நன்மைகளேமாத் ரம் அடைவது பாலப் பெண்களால் முடியாதகார்யம். இது மேதா விகளுக்கு ஓற்றதேயன்றி அறியாப் பெண்களுக்கு ஏற்றதல்ல. லாகூ ரில் ஒரு க்ரிஸ்தவப் பெண்பாடசாலையில் ஹிந்துமதத்தையும் ப்ரா மோமதத்தையும் சேர்ந்த பல பெண்கள் பாடசாலையில்வாசித்து வருகிறார்கள். இப்பெண்களனைவரும் க்ரிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடப் போகிறார்களென்று பலத்த வதந்தி யுண்டாகி யிருக்கிறது. ஹிந்து ஸமூகத்தில் மிகுந்த குழப்பமும் கலக்கமும் ஜாஸ்தி. கன்யா ஸ்த்ரீகள் தாங்கள் க்ரிஸ்தவமதத்துக்கு வாருங்கள் என்று நேருக்கு நேராகப் போதிக்கவில்லையென்று சொல்லி வருகிறார்கள். பெண்க ளின்பெற்றோர்கள் தங்களா லியன்றவரையில் பெண்களுக்குப் புத்தி சொல்லி வருகிறார்கள். இதன் முடிவு என்ன ஆகுமோ தெரியவில்லை.

WHAT ARE ETERNAL?

By

Mr T. S. Rajagopalan.

நித்யமானவை எவை?

இன்று காலே வழக்கம்போல் வயல்களுக்குப் போயிருந்தேன். பயிர்களில் காற்றுப்புகுந்து பாடிக்கொண்டிருந்தது. அங்கிருக் கும் கால்வாயின் கரைகளில் ரீச்சேம்புகள் வளர்ந்திருந்தன. விசாலமான அவைகளினிலைகளின்மேல் பெரிய முத்துகள்போன்ற மாசற்ற தண்ணீர்த் திவிலைகள் தங்கி சூரியக்ரணங்களே ஆனந்தமா யுண்டு கொண்டிருந்தன. கால்வாயில் தண்ணீரில்லை. நடுவிலிறங்கி இம்முத்துக்களே வெகுநாழிகை நானுற்று நோக்கிக்கொண்டிருந் தேன். பார்ப்பவர்க்கு இலைகளின்மேல் நின்ற தண்ணீர்த் திவிலை யொரு அதிசயமன்று. ஆனல் அது அறிவித்த ரஹஸ்யமென்ன? அங்குகிடந்த சில கற்களேப்பொறுக்கி ஒன்றன்பின் ஒன்றாய் அவ்விலைகளின் மேலெறிய முத்துக்கள் நழுவிக்கீழே வெகு சுலு வாய் விழுந்துவிட்டன. நமக்கிப்புவியின் மீதுள்ள அபிமானம், சேம்பின்மேல் ரீச்சொட்டாய், தொட்டும்தொடாது போலுமிரு ந்து, அழைத்த ஸமயத்தில் போவதற்குத் தயாராயுமிருக்க வேண் டாமா? எனிவ்வளவு ஆட்டம், ஓட்டம், திண்டாட்டம்; இவ்ய லனம், இக்களிப்பு, இவ்வினோதம், இம்மனவிமக்கள், இவ்வாடை யாபரணங்கள், மூன்றுவித ஆசைகள், கணக்கில்லாத துயரங்கள், இன்னுமநேக உரைக்கக்கூடாத விஷயங்களென்ன? கோடிகோ டியாய்ச் சம்பாதிக்கட்டும், வயிறுநிறைய உண்ணட்டும், கணக் கின்றிக் குடிக்கட்டும், மானிடனெருவனுவது உயிர் துறக்கா திருந்தாலெனக் கேள்வியுற்ற துண்டோ? அவனுக்கு ஏராள மான தனமிருக்கிறது, அநேகஞ் சத்துருக்களே வென்றிருக்கிறான், பெண், பிள்ளைகளிருக்கின்றனவென்றால், கூட ஒருவிழுது கூட்டி விருக்குமோ அவன் பிராணன்? போன பிராணன்தான் திருப்பி வருமோ?

இவ்வாறிருக்க நம்மில் அநேகர் ஸந்தோஷம் வருமளவு தலே தெரியாதகூத்தாடுகிறார்கள். வருத்தம் வரும்போது தலேகுனிந்து மயங்கி கிடக்கிறார்கள். அப்பொழுதவர்களாண்மை படும்பாட்டை யார் தீர்க்கமுடியும்? ஆசாபாசங்களாகிற சாலரங்களில் புகும்

மனத்தின்போக்கைத் தகுந்த கட்டைபோட்டுத் தடுத்துக்கொள்பவர் எவர்? எவ்வளவு சேவகர்கள், அடிமைகளிருந்தென்ன, எவ்வளவு வாகனங்கள், பிருதுக்கள், விதம்விதமான ஸௌகர்யங்களிருந்தென்ன, ஒருவன் மனத்திலுள்ள கெட்ட சிந்தைக்கடலினலைகளை யாரடக்கக்கூடும்? ஓர் ஊசியின்காதில் ஒரு ஒட்டகம் நுழையக்கூடும், தனிகன் ஈசனுடைய சமீபமடைவது மிகவும் துர்லபமன்றோ? ("It is easier for a camel to enter the eye of a needle than for a rich man to enter the Kingdom of God.") தர்மபுத்ரர் "நாடோறும் ஜனங்கள் பிணங்களாய்ப்போய் இயமனுடைய ஆலயமடையுமளவு, மற்றுள்ளவர் தாங்கள் ஸ்த்ரமாயிருக்க ஆசைகொள்வதைவிட வேறு விநோதமொன்றில்லை!" என்றுரைக்கவில்லையா? ஆனால், பிறப்பு, இறப்பு, வ்யஸனம், ஸந்துஷ்டி, ஆடம்பரங்கள், அஸூயை, லாபநஷ்டம், இரவுபகல், மாதங்கழிவது மாதம் வருவது, கொண்டாட்டங்கள், யுத்தவீரர்களின் வலிமை, க்ரந்தகர்த்தாக்களின் கீர்த்தி, சாஸ்த்ரங்களின் வெற்றி, இவைகளைக் கண்ணாரக்கண்டும் காணவில்லைபோல் தர்கிக்கலாமோவென்றால், ஜீவவாழ்க்கை கனவுகளெல்லாவற்றிலும் பெரிது. ஸொப்பனத்தில் காண்பது அச்சமயமுண்மை. விழித்துக்கொண்டால் உண்மையன்று. மேலும், ஒருமணி ஸொப்பனத்தில் அநேக அஹோராத்ரங்களில் நடக்கும்செயல்கள் நடந்துவிடுகின்றன. இஹவாழ்க்கையும் விழித்துக்கொண்டால் கனவல்லாது நினைவன்றென்றே தோன்றுகின்றது. கனவிற்போல, இதற்கு முன்நடந்த செய்கைகளின் மேல்பாகம் மறந்துபோய் விட்டதல்லவோ!

இதுநிற்க, போஜமஹாராஜனை அவன் சிற்றப்பன் கொல்ல உத்தரவளித்ததும் அம்மஹாராஜன்.

மன்னு புகழ்பெற்று முதல் யுகத்திலார்ந்த
மாந்தாதா வெங்கே? நீர்க்கட லடைத்துத்
தென்னிலங்கை மேவிய ராவணனைச்செற்ற
தேர்க்கதிரோன் குலத்திலக ராமனெங்கே?
இன்னுமிகற் பாண்டவரே முதலயாரு
மெய்தினரவ் விண்ணுலக மிறந்துமன்னு!
அன்னவரோடிவ்வவனி சென்றதில்லை
யாயினு மிஃதுன்னுடனே போகுமெய்யே!

என்றெழுதி யனுப்பவில்லையா? கொஞ்சகாலம் முந்தி ஒருவயோதிகர் இறக்குந் தருணத்திலிருக்க, அவரது மனைவிமக்கள் ஸமீபம் வந்து "எங்களுக்கொன்றுஞ்சொல்லாமற்போகிறீர்களே!" என்று கேட்டார்கள். அதற்கு வம்மகான், "நீங்கள் யார்? நான் யார்?" என்று சொல்லிக்கண்ணை மூடிவிட்டார்! இப்படி வேருடனறுத்தெறிந்த ஆசைகள் (Renunciation) உடையோர் அநேகருண்டோ?

ஆனால் நித்யமானவை எவை? இரண்டுவார்த்தையில், தர்மமும், ஈசுவர பத்தியென்றுஞ் சொல்லலாம். தர்மமற்ற கீர்த்திவானும், பக்தியில்லா மஹானும், ஆன்மாவில்லாத ஒருபெரிய மிருகமென்று சொல்லவேண்டும். இவர்கள் புலதின்னாமலிருப்பதும், இயற்கையாயுள்ள மிருகங்கள்செய்த பாக்கியமே! தர்மிகள் வெகுமான மடையவும், அதர்மிகள் தண்டனை பெறவுமிட மிருக்கிறதென்று நம்பினால், நித்யானந்தத்தை யடைந்திருக்கும் மகுடந்தரித்திருந்த அரசர்கள் எவ்வளவுகொஞ்சம்! கீர்த்திபெற்றும் வித்வான்களாயுமிருந்தவர்களைப்பற்றி நாம் அஸூயைப்பட அவச்யமில்லை. அவர்களை இப்பொழுது நாம் பார்க்கமுடிந்தால், அவர்களுள் அநேகர் ப்ரதாபப்படத்தக்க நிலையிலிருப்பார்களேயன்றி, அவர்கள் பெற்றிருக்கும் ஜயத்தைக்குறித்து நாம் அபிநந்திக்கவிடமிராது!

நாம் மண்ணுலகு விட்டுப்பெயர்ந்து விண்ணுலகு போகும்போது, நம்பின்வருவது நாம் குப்பல் குப்பலாய்ச் சேர்த்துவைத்திருக்கும் தனமல்ல! நம்முடன் இப்பொழுது உல்லாஸமாய் உறவாடும் இஷ்டமித்ர பந்துக்களல்ல. நாம் செய்திருக்கும் தர்மமும் அதர்மமும்தான் உடன் வருகின்றன! ஆதலால் தர்மம் செய்வதேமேல்! அதுவே உத்தமம்! அதுவே நித்யமானது! மரங்கள், நிழல், காய்கனிகள் தந்து பிறருக்கு உபகாரம் செய்யவில்லையா? நதிகள், தங்களுக்காகவா ஜலத்தை வெகு தொலையிலிருந்து கொண்டு வருகின்றன? பசுக்கள் யார்பொருட்டுத் தங்கள்மடிகளில் பாலை சேர்த்துவைத்துக் கொண்டிருக்கின்றன? பிறர்பொருட்டல்லவா? நாம் மாத்ரமேன் இச்சரீரத்தில் புண்படக்கூடாதென்று அதிக அபிமானம்வைத்துறைய நன்மை பாராட்டிப் பரோபகாரமென்பதை அடியோடு மறந்துவிடுகிறோம்? அதுவு

மில்லாமல் சிற்சில விஷயங்களில், அயலாருக்குக் கூடியமட்டும் தீங்கிழைக்கிறோமே! நமக்குப் பகுத்தறிவு இருப்பதற்கு இதுதான் விசேஷ குணமாயிருப்பதோ?

மற்றொரு நித்யமான விஷயம் ஈசுவரபக்தி. இறக்குந்தருணத்தில் 'சங்கரா' 'சங்கரா' என்றுசொல்லி என்பயன்? நாமிறப்பது எப்பொழுதோ! அப்பொழுது நாமெந்த ஸ்திதியிலிருப்போமோ! சரியான நினைவுதானிருக்குமோ! உன் மத்தர்களாய் விடுவோமோ! உயிருக்கும் நமக்கும் வெகு காலமிழுத்துச் சண்டை போட்டு நிற்பமோ! திடீரெனச் சாவோமோ! ஆதலால் நாம் திடகாத்ரர்களாயும், சிறுவர்களாயுமிருக்கும்பொழுதே கடவுளைத் துதிக்கவேண்டும். (Remember thy creator in the days of thy youth). நமக்குக் கஷ்டகாலம் வருமளவு அவனைத்திட்டவும் கூடாது. நல்லகாலம் வந்தாலவனை மறந்து விடவுங்கூடாது.

ஸர்வேசா! உனதன்பு புவியில் நகரும் பரமாணுப்போலுள்ள ஜந்துமுதல் மனிதன்வரை ஸ்ருஷ்டி முழுதும் வ்யாபித்திருக்கிறது. இவ்வன்பைத்தழுவி மேன்மேலு மதைப்பற்றி விசாரித்து, அதனுஷ்ண க்ரணங்களில் காயவிருப்பங்கொள்ளப் புத்திபுகட்ட வேணுமெனக் கேட்பவர் சிலரே. அக்ஞானிகளாயும் பாபிகளாயுமுள்ள எங்களைமன்னித்து, உனது குழந்தைகளான எங்களையணைத்து, வழிபறியாது பேதையாயிருக்கும்போது திருந்தி நடக்கச்செய்து உதவிபுரிபவன் நீயல்லனோ! நீ செயவதனைத்து மெங்கள் நன்மைக்கென்றும், உனது திருவடிகளே சரணமென்றும், உனதன்பில்லாது அன்பில்லையென்றும் நினைப்பதைவிட வேறு பெரிதான வெண்ணமிப் பாமர ஜனங்களுக்கிருக்கலாகுமோ? ஆதலால், எக்காலத்திலும், உன்தயை, உன்மகிமை, உன்கவலை, உன்மன்னிப்பு, இவைகளைப்பற்றியே எங்கட் கிதயம்பொங்கி நிறைந்துள்ள நாயிருக்கக் கடாட்சிப்பாயென்று உறுதியடைந்து ப்ரார்த்திக்கிறோம்.

வடக்கு மடவிளாகம்,
சீர்காழி.

T. S. ராஜகோபாலன்.

களே உபாத்யாயர் தொழிலுக்குச் சரியானவர்கள். அவர்கள் கடவுள் ஆக்னையாக எண்ணி உபாத்திமைத்தொழிலை வகிக்கிறவர்கள். தற்கால பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்களைக்கண்டால் ஸிம்ஹத்தைக்கண்டாற்போல் குழந்தைகள் பயப்படுகிறார்கள். அன்பு நிறைந்த உபாத்யாயர்களைக் கண்டவுடன் முகமலர்ச்சியோடு பையன்கள் அவரை நாடுகிறார்கள். அன்புநிறைந்தவர் ஸந்தோஷமாக பையன்கள் நாடும்போது அவரவர்களுக்குத்தகுந்த புத்தியைச் சொல்லி அவரவர்களின் கெட்ட குணங்களை நீக்கப்ரயத்தனப்படுகிறார். தமது வாழ்நாளை யறிந்து தாம் நடந்து ஒழுகின்படி பையன்களை அவ்வழியில் நடக்கும்படி கூறுவார். இப்படி அன்புநிறைந்த உபாத்யாயரின் சிறந்த நடத்தையையும், ஒப்பற்ற குணத்தையும் கண்டு பையன்கள் வணங்குவார்கள். இப்படி வணங்கும் தன்மை ஏற்பட்டபோது மேன்மையான வஸ்துவை அதாவது பரமனை அடைய புத்திசெல்லும்.

கீழ்ப்படியும் தன்மையுள்ள பையன்களுக்குக் கற்பிக்கிறது மிகவும் ஸுலபம். அவர்கள் தங்கள் நிலைமையை யறிந்து கொடுக்கப்பட்ட பாடங்களை சரிவரப்படித்து வருவார்கள். அப்போது தண்டனை என்கிற வாஸனையே பள்ளிக்கூடத்தில் இராது.

பையன்களை இப்படியாக அடக்கி யாளுவது முடியாத காரியம் என்று சிலர் நினைக்கலாம். கெட்ட பழக்கத்திலேயே நடத்தப்பட்ட பையன்களை திருத்துவது ச்ரமஸாத்யம். ஆனால் அவர்களை காலக்ரமேண நற்பழக்கத்துக்குக்கொண்டுவருவது எளிது. இப்படி கெட்ட பிள்ளைகள் நற்பழக்கத்துக்கு திருத்தப்பட்டிருக்கிறார்கள் என்று எவ்வளவோ கதைகள் படித்திருக்கிறோம். பள்ளிக்கூட நேரங்களில் அன்புநிறைந்த ஆஹாயத்தை உபாத்யாயர்களும் மாணாக்கர்களும் ஸ்வாஸம் பண்ணிக்கொண்டிருந்தால், அப்படி வளர்ந்த பையன்கள் பெற்றோருக்கு ஸுகுமாரனாயும், ஜனங்களுக்கு ஸஹோதரனாயும் தேசத்துக்கு உத்தம தாஸனாயுமிருப்பார்கள். இப்படி இவர்கள் தலை முறை தலை முறையாக நற்பெயர் எடுத்து தேசத்துக்கு திலகம்போல விளங்குவார்கள்.

என். சிங்காரம்மாள்.

BAD BELIEFS ABOUT THE DEVILS.

By

Mr. M. Chinniah Chettiar.

பேய்களைப்பற்றிய தப்பபிக்கைகள்.

ஐரோப்பிய நாடுகளைத் தவிர மற்ற முதல்ய கீழ்த் தேசங்களிலும் நமது இந்தியா, பர்மா, மலையா நாடுகளிலும் ஜனங்கள் பேய்களிருப்பதாகவே உறுதியாக நம்புகிறார்கள். அதற் கேற்ப பேய்ப் பிடித்தவர்கள் தங்கள் வசமற்று ஆடவும் பாடவும் காண்கிறோம். பேய்களுள் அநேக விதமான பேய்களிருப்பதாகக் கூறுகிறார்கள். முனியன், காளி முதலிய சில பேய்கள் பல மானவை யென்றும், நிலையானவை யென்றும் கூறப்படுகின்றன. இவைகளைத் தவிர ஆபத்திற்காக மாண்டுபோன மனிதர்க ளும் பேய்களாகிவிடுவதாகக் கூறப்படுகிறது. நமது தேசத்துப் பேய்கட் கெல்லாம் ராஜாவாக இருப்பது மதுரை வடக்குக் கோபுரம் (மொட்டைக் கோபுரம்) முனியென்றும் சொல்லப்படுகி றது. இத்தகைய பேய்களைப் பயமுறுத்தப்படுகிறவர்கள் பெரும் பாலும் பெண்களாகவே யிருக்கின்றார்கள். பேய்களால் பயமுறு த்தப்பட்ட பெண்கள் பல ஸமயங்களில் கண்ணால் ஒன்றும் காணாமலும் பேசவும், கண்டிருக்கின்றோம். முடிவில் அப்பேய்கள் ஒரு கணக்கான பணத்தையோ, அல்லது நூறு தேங்காயோ, அல்லது அடி உலக்கைகளை மட்டுமோ பெற்றுக்கொண்டு விலகி விடுகின்றன வென்றும் காணப்படுகிறது. இதை சற்று ஆராயுமிடத்து இச்செய்கை இயற்கைக்கு விரோதமாகவே காணப்படுகிறது. ஜனங் கள் நம்புகிறபடி அப்பேய்கள் பணங்களையும், ஆடு கோழிகளைக் கொன்று, போடுகிற நூறு தேங்காய்களையும் விரும்புவதாயின் அவைகளை மனிதர் எற்றுக்கொள்ளுவதால் அவைகள் (பேய்கள்) தேடிப் பெற்று அனுபவிக்கவேண்டும். அப்படியிலலாமற் பணம் தோப்புகளிலும், தென்னந்தோப்புகளிலும், மரத் தூர்களிலும், புதர்களிலும், பணங்களைப் போலியாய் செய்து அவைகளை முன்னே ஆஸாமிகள் கொண்டுபோகவே அவைகள் குருப்பிடித் கவோ பார்த்துக் கொண்டிருப்பதிற் பயனென்ன? ஆடு கோழி களைக் கொன்று வந்தவுடனே, வழிபாடுகளை நிறுத்திவிட்டால் என்ன பயன்? இப்படிப் பண்டங்கள் வீணுகப் போவதிற் பேய்

THE TEACHERS AND STUDENTS.

By

Sri N. Singarammal.

உபாத்யாயர்களும் மாணக்கர்களும்.

தற்காலப் ஜனங்கள் காலத்தின் உத்தியோகங்களை வகித்து வருகிறார்கள். அவைகளில் உபாத்தியாயமை ஒன்று. இப்போது இவ்வுத்தியோகத்தை வகிக்கிறவர்கள் வெகு தூரம் ஜனங்களால் மதிக்கப்படவில்லை. ஏதோ அருமை அறிந்தவர்கள் மாத்திரம் மதிக்கிறார்கள். ஏதோ ஒரு சம்பளமான தென்று கருதி உபாத்தியாயர் தொழிலை வெகு சம்பளமான தென்று கருதி உபாத்தியாயர்களாயிருக்கிறவர்களை உத்தரவுப்படுத்தி அவர்களை மதித்து வருகிறார்கள். இதனாலேயே புத்தி கூர்மையுள்ளவர்கள் இத்தொழிலுக்கு வராது பற்பல தொழில்களை நோக்குகி றார்கள். ஒரு தொழிலும் பகுபாதகமின்றி உலகத்தில் தொழில்களை நோக்குங் கால் உபாத்தியாயர் தொழில் வெகு ஸ்ரேஷ்டமானதி ஒரு தேசமுன்னேற் றம் உபாத்தியாயர் கையில் இருக்கிறது. இப்போது பாடசாலை களில் படித்து வரும் பையன்களும் பெண்களும் தான் பிற்கால த்தில் தேசத்தூண்களாக விளங்குவார்கள். முற்காலம் உபாத்தியாயர் தொழில் தெய்வீகமானதென்று ரிஷிகள் கருதித் தாங்களே உபா த்தியாயர்களாக விளங்கியிருக்கிறார்கள். பாடசாலை தொண்டுக்குச் சமமாக நடத்தப்பட்டு வந்தது. மேலும் இந்தியாவில் முற்காலம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அதி பாலியமாயிருக்கிற போதே கல்வி தேர்ந்த விற்பன்னரிடம் ஒப்புவித்து விடுகிற வழக்க மிருந்தது. அப்படியே குழந்தைகள் வெகு வருஷகாலம் குருவி னிடம் படித்து வருவார்கள். ஜனங்களுக்கு அதி ஒரு பெரிய பயிற்சியாக இருந்தது. இதற்கு குருகுலவாஸம் என்று பெயர். தற்காலமோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது. இந்தியாவின் முன்னேற்றம் இப்போது அதிகமாகி வருவதால் இந்தியாவின் முன்னேற்றம் வெகு காலித்து. இப்படி நடக்கவேண்டுமானால் உபாத்தியாயர்களிட மிருக்கிற அன்பு வாஞ்சை சிறந்த குணமிருக்கவேண்டும். இனி இந் தியா உலகத்தில் மற்ற நாகரீகமடைந்த தேசங்களைப்போல் பல த்திலும், செல்வத்திலும், செல்வாக்கிலும் பிரகாசித்து விளங்க வேண்டுமானால் அன்பு என்கிற மேலான குணத்தை உபாத்தி யாயர்கள் காப்பிடவேண்டும்.

உலகத்தில் அநேக மதஸ்தாபனர்களும் ஞான சாரியர்களும் ஒருவன் அன்புடையவனாயிருந்தால் எல்லா குணங்களையும் சித்தத்தில் அடைவான் என்று முறையிட்டிருக்கிறார்கள். மனிதனுக்கு அன்பே பிரதானம். அன்பில்லாதவன் மனிதர்களோடு சேரத் தகுதியற்றவன். மற்ற எந்த குணங்களிருந்தாலும் ஒருவனுக்கு அன்பில்லாவிட்டால் அவன் சோபிக்கமாட்டான். ஆகையால் உபாத்திமைத் தொழிலுக்கு வருகிறவன் அன்பை உடையவனாயிருக்கவேண்டும். அன்பில்லாதவன் உபாத்திமைத் தொழிலுக்கு லாயக்கற்றவன். உபாத்தியாயர் தன் தின வாழ்க்கையில் அன்புடன் கூடி பையன்களுக்குப் போதிக்கவேண்டும். ஒருவனிடத்தில் அன்பு இருக்கிறது எப்படி யறிய முடியுமென்று கேட்கலாம். குழந்தைகள் பாலவயதில் விளையாடும்போதும் தன் இச்சையைத் தெரிவிக்கும்போதும் தான் நடந்துகொள்ளும மாதிரியைக்கண்டும் இந்தத் தொழிலுக்கு ஏற்றவி என்பதை எப்படி கண்டுபிடிக்கிறோமோ அப்படியே அந்த பாலவயதில் அன்புடையவனை உபாத்திமைத் தொழிலுக்குத் தெரிந்தெடுக்கலாம்.

ஒரே பள்ளிக்கூடத்தில் அநேக தன்மையுள்ள பையன்கள் வாசிக்கிறார்கள். படிப்பு முடிந்தவுடன் அவரவர்களின் படிப்புக்குத் தக்கபடி தொழிலுக்குப் போகிறார்கள். ஒரு குழந்தை ஸதா ஸர்வதாலும் ஸந்தோஷமாகவே காலம் கழித்து வந்து, அக்குழந்தையை பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் அச்சந்தோஷம் குறையாமல் பெற்றார்கள் பழக்கிவந்தால், அது தன் வாழ்காளில் கண்ணைச் சுற்றியிருக்கிறவர்களை ஸந்தோஷப்படுத்தும். உபாத்தியாயர் அன்பு நிறைந்தவராக இருந்தால் பையன்கள் அவரையே நாடுவார்கள். அவர் சொல்லும் புத்திமதிகளைக்கேட்பார்கள். அப்படியே நடக்கவும் செய்வார்கள். அந்த உபாத்தியாயர் பாடசாலையை ஸந்தோஷகரமாகவே செய்வார்கள். உபாத்தியாயர் தம்முடைய அன்பைக் காண்பித்து குழந்தைகளை பாடத்தின் பேரில் பற்று வைக்கும படிச்செய்யாமலிருந்தால் அவர் உபாத்தியாயர் தொழிலுக்கு ஏற்றவரல்லர். வேறு உத்தியோகம் பார்க்கவேண்டியது தான். அன்புடையவர்கள் தெய்வாம்சத்தையுடையவர்கள். பரியுடையவன் ஆஹாரத்தைக்கண்ட மாத்திரத்தில் எவ்வளவு தாழ்மையுள்ளவனாயிருப்பானோ அப்படியே தெய்வீகத் தன்மையுடையவர்கள் தேச ஸேவைக்குக்காத்துக் கொண்டிருப்பார்கள். அன்பு நிறைந்தவர்

WHAT KIND OF CREATURE I LIKE TO BE BORN?

By

K. Meenatchiammal.

நான் என்ன ஜாத்துவாய்ப் பிறந்திருக்க இஷ்டப்படுகிறேன் ?

இங்லீஷ் மாதாந்தப் பத்ராதிரியரொருவர் மேற்குறித்த ப்ரச்னையை தம்பத்திரிகை வாசிப்பவர்களில் பல ஸ்த்ரீகளுக்கு அனுப்ப அவர்களில் சிலர் எழுதியனுப்பிய விஷயம் சங்க்ரகமாக அந்தப் பத்ரிகையில் ப்ரசுரமாகி இருக்கது. அதைத் தழுவி இந்த விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகையப்ரச்னை ஜிவராசிகளே நுட்பமாய் கவனித்துப்பார்த்து அறியும் சக்தியை அபிவ்ருத்தி செய்யுமாதலாலும், கற்பனை சக்தியைத்தூண்டி விடுமாதலாலும், நம்ஸோதரிகள் மாறுன அபிப்ராயங்களுடையவர்களானால் காரணம் காட்டி எழுதி நமக்கு அனுப்பினால் ப்ரசுரிக்கத் தயாராயிருக்கிறோம்.—ப.ர்.

எருமையாகவா ?

ஐயோ ! போதும் ! போதும் ! எருமைக்கடாவுக்குத்தானே மிகுந்த திருப்தி ! வெய்யில் காலத்தில் குளங்குட்டைகளில் இருநாசித் துவாரங்களையும் வெளியில் வைத்துக்கொண்டு படுத்திருந்தால் சவுக்யம் வந்துவிட்டதே ? அப்பொழுது மெய்மறந்து கிடந்தாலும், மூண்டுகள் உடம்பு முழுதும் வெளிப்பட, முதுகெலும்பு தெரிய, சாட்டையடி வாங்கிக்கொண்டு, கடும் வெயிலில் கலப்பையிழுப்பதும் அவ்வெருமைக்கடாதானே ! அது நின்றிருக்கும்பொழுதும் படுத்திருக்கும்பொழுதும் காக்கை அதன்மேல் உட்கார்ந்து, அதை இரத்தவிளாராய்ப் புண்படுத்திவிட்டு, நிறைந்திருக்கின்ற வால்பயிரிலும் கொஞ்சம் தன் கூட்டுக்கு, எடுத்துக் கொண்டுபோய் விடுகிறதே ! அச்சமயம் கடா தன் விதியை நொந்துகொண்டிருக்கிறதா ! அல்லது, சுரணையற்று நிற்கிறதா ? அல்லது, அதுவே பேரின்பமென்று நினைக்கிறதா ? தவிர யாரையாகிலும் கோபித்துக்கொள்ளவேண்டியிருந்தாலும், திட்டவேண்டியிருந்தாலும், முக்கியமாய் நம் வாயில் முதலில் வருவது, ஏ !

"எருமைக்கடா" அல்லது எருமைக்கடாவுக்குப் புகுந்ததுபோல் உனக்கும் புகுந்ததே ப்ராயம்! என்கிற வசனங்களல்லவா?

நாயாகவா?

நாயாய்ப் பிறந்திருக்கலாமோ வென்றால், என்ன நற்குணங்களிருந்தும், ஒருவரிடம் அடிமைப்பட்டுத்தானே கிடக்கவேண்டும்? எஜமான் யாரிடத்திலாவது சண்டை ஸச்சாவு போட்டால் கோபம் முழுதும் நாயிடத்திலேதான் காண்பிப்பார். வேட்டையில் ஒரு ஸமயம் ம்ருகங்களைப் பிடிக்கத் தவறிவிட்டால் அவர் சவுக்குக்கு அது இரையாகிவிடும். மற்றொரு நாயைக் கண்டுவிட்டாலோ பொறாமை முகத்தில் கூத்தாடுகிறது. மேலும் நாயைப் பற்றி அனுபவத்திலிருந்து அநேக பழமொழிகள் கூறப்பட்டுள்ளன (1) நாய்போல் வெள்ளென விழுகிறாயே? (2) அடிபட்ட நாய்போல் குலைக்கிறாயே, ஏன்? (3) நாயைக்குளுப்பாட்டி நட்டுள்ளே வைத்தால் அது வாலைக் குழைத்துக்கொண்டு குப்பை மோட்டுக்குப்போகும்? (4) கெட்டநாய்க்குப் பட்டதுருதி? (5) நாயை ராஜாவாக்கினால் அது செருப்புத் தூக்குவதை நிறுத்துமோ? இன்னும் அநேகமுண்டு, நிற்க, ஏப்ரல் மாதங்களில் நாய்களுக்கு வெறிபிடித்து விட்டதென்று நூற்றுக்கணக்காய் இரண்டே அடியில் தரையோடு தரையாய் அவைகள் வீழ்த்தப்படுகின்றன. பாவம்; நாய்ஜென்மம் ஒருபோதும் எடுக்கவே வேண்டாம்.

எறும்பாகவா?

எறும்பினிடத்தில், சுரு சுருப்பு, ஒத்துமை முதலான விரும்பத்தக்க குணங்கள் வாய்ந்திருந்தபோதிலும், அதன் கருப்பு நிறம் மாறுமா? சிலர் உபத்ரவம் பொறுக்கமாட்டாமல் அதன் புற்றை மண்ணெண்ணையால் ஸ்நானம் செய்விக்கிறார்கள். காரமுள்ள சுண்ணாம்பெடுத்து அதன் துவாரத்தை யடைத்துவிடுகிறார்கள். இரைதேடப்போய் நெய்யிலும், பாலிலும், மோரிலும், விழுந்து நசித்துப்போய் விடுகின்றது. அதனருகில் மனிதன் உட்கார்ந்தால் "சுரீ"ரென அவனைக் கடித்துவிட்டு "பளே"ரென்று ஒரு அறை வாங்கிக்கொண்டு இருந்தவிடந் தெரியாமல் நசுங்கிப் போய் விடுகிறது. வெல்லக்கட்டி அல்லது மற்ற தித்திப்பு பண்டங்களில் தன்னினத்தார்களுடன் சேர்ந்திருந்தால் எல்லாம்

கட்கு விருப்பமிருக்க ஞாயமுண்டா? யாராவது ஒருவர் தின்று ஸந்தோஷிக்கட்டுமென்று அந்தப் பேய்கட்கு ஜீவகாருண்ணியமுண்டென்றால், ஒருவரையும் பயமுறுத்தாமலிருந்துவிடலாமே. ஒருவரை பயமுறுத்தி மற்றவரை சாப்பிடச் செய்வது நடுவு நிலைமையும் ஜீவகாருண்ணியமுமுள்ள செய்கையல்லவே.

ஒரு மனிதன் தற்கொலையாலோ, அல்லது படுகொலையாலோ மாண்டுபோனால் அந்த இடத்தில் அவன் பேயாக உலாவுவதாகவும், பேசுவதாகவும், கத்துவதாகவும், சில ஸமயங்களிற் பன்றி, நாய், கழுதை, இவைகளைப்போல் உருமாறி ஓடுவதாகவும் ஜனங்கள் நம்பி அந்த இடத்துக்கு அந்தி ஸந்திகளிற் போகக்கூடாதென்றும் தெரியாதவர்களையும் எச்சரித்துப் பயமுறுத்த ஆரம்பித்து வருகிறார்கள். சில நாட்செல்லவும் அதற்குப் பணம் இவ்வளவு என்று தீர்மானமாகிவிடுகிறது. அதோடு அந்தப் பணத்தைப் போடுகிற இடமும் தீர்மானமாகிவிடுகிறது. அப்பணங்களைக் கொண்டு போவதற்கும் ஆஸாமிகள் தயாராகி விடுகிறார்கள். இறந்துபோன மனிதர்கட்கு நாய், பன்றி முதலிய உருவங்களைக் கொள்ளச் சக்தியுண்டென்பது பொருந்தியதாகக் காணப்படவில்லை. மேலும் இறந்த மனிதர்கட்கு உயிரோடிருப்பவர்களைப் பயமுறுத்தவேண்டுமென்ற ஆவசியகமென்ன? காளி, கறுப்பன், முனியன் முதலிய பெரும் பேய்களும் ஜனங்கட்கு நன்மைகளைச் செய்து அவர்கள் அன்போடு செலுத்தும் பக்தியை யேற்பது முறையேயன்றி, பயமுறுத்திப் பணங்கேட்பது பெருந்தன்மையன்றே. ஆகவே இவ்விஷயத்தைச் சற்று உற்று நோக்குமிடத்து பேய்களிருப்பதாக ஒறுவாறு நம்பினாலும் அவைகள் ஜனங்களைப் பயமுறுத்துகின்றனவென்பது நம்பத்தக்கதன்று. ஆனால் ஜனங்கள் பேய்கள் இருப்பதாக நினைத்து பயப்படுகின்றனர். திடீரென்று பயப்படுவதனால் வைத்யர்கள் கூறுகிறபடி இரத்தம் கக்குதல், ஜுரம், முதலிய அபாயமான நோய்களும், மனமாறுதலும், சில ஸமயங்களில் மரணமும் உண்டாகின்றன. மனமாறுதலுடையவர்கட்குத் தங்கள் வசமற்று ஆடுவதும், பேசுவதும், இயல்பென்று ஆத்மசக்தி வல்லோர் கூறுகின்றனர். ஆகவே ஸாதாரண ஜனங்கள், அதிலும், பெண் மக்கள் பேய்களிருப்பதாக நம்பித் தங்களைத் தாங்கள் பயமுறுத்திக்கொள்ளுகிறார்களே தவிர வேறில்லை. புருஷர்கள் தைரியமும், சிறிது பகுத்தறிவும் உடையவர்களாதலின் பேய்கட்கு

அஞ்சுவதில்லை. அதிலும் சிறிது கற்றுணர்ந்தவர்கள் பேய்களைப் பார்க்கிலும் தங்களுடைய வல்லபம் விசேஷமென்பதை யுணர்ந்து அவைகளைப்பற்றி நினைப்பதேயில்லை. பெண்களையும் அதுபோற் செய்யவேண்டுமென்றால் அவர்களை கன்றாய்ப் படிக்கவைத்துப் பகுத்தறிவையுண்டாக்கி தைரியமும் தக்திரமும் ஞானமும் உடையவர்களாகச்செய்வது அவசியமாகும். அப்படியாகும்போது அவர்கள் பேய்கட்கு அஞ்சி பைத்தியக்காரஆட்டம் ஆடமாட்டார்கள். பணமுடியவேண்டியவேலையும், பூசையிடவேண்டியவேலையும் வீண் கஷ்டமாகாது. ஆனால் சிலருடைய ஜீவனத்துக்கானமுண்டாகும். அத்தகையோர் வேறு சோனவேலைகளைச்செய்து பிழைக்கட்டும். கட்டடங்களிலும் ஊர்களிலும் பேய்கள் ஓடுகின்றனவென்றும் அதனால் பல தீங்குகள் ஏற்படுகின்றனவென்றும் இலைகளிருக்கிற இடங்களில் வீடுகட்டக்கூடாதென்றும் கட்டிலுறை சல்லியஞ் செய்கின்றனவென்றும் அநேகர் கூறுகின்றார்கள். இதற்கு காரணமாக ஒரு சிறு கதை கூறிவிட்டு இதை முடிக்கிறேன்.

என் நண்பரொருவர் ஒருநாட் பாதியிரவில் எழுந்து முகப் புக்கதவைத்திறந்து வெளியிற் போவதற்கு வந்தார். எதிரே ஒரு இருண்ட கறுப்புத்தோற்ற, அது பேயோவென்று சற்று உற்று நோக்க அது முன்னிலும் பெரிதாகவும், விசாலமாகவும், ஸ்பீபமாகவும் காணப்பட்டது. அதைக்கண்டு பயந்து வீட்டினுட் போய் சில கற்களைக் கையிலெடுத்துக்கொண்டு மெதுவாகக் கதவைத்திறந்து அந்த இருட்ட தோற்றி விசையும், அங்கொரு பிராணி கதரிக்கொண்டோடிற்றும். ஆனால் அது பேயன்று. மண்ணுடைய கழுதை. இதுபோலவே ஒன்றைக்கண்டு அது பேயென்று அஞ்சுவதற்குப் பல சந்தர்ப்பங்களேற்படுகின்றன. உயிரோடிருக்கிற மனிதர்களைப்பார்க்கிலும் இறந்தவர்கட்கு சக்தி அதிகமன்று.

இதனாற் பேய்கட்கு அஞ்சுவது அநாவசியமென்பதும் பெண்கட்குப் படிப்பு அவசியமென்பதும் என்னுடைய அபிப்பிராயமாகும்.

மஹிபாலன் பட்டி. எம். சின்னையா செட்டி.

228

காலால் தேய்க்கப்பட்டோ, வெயிலில் கொட்டப்பட்டோ சிவலோகப் பிராப்தியடைகின்றன. எறும்பைக் கீழேவைத்து மண் கிண்டிப்போட்டு மூடி அது மேலேவருமளவு மறுபடியும் அதன் மேல் மண்ணைக்கொட்டுவது குழந்தைகளுடைய விளையாட்டுகளிலொன்று. சில கோபம் வந்தவைபோல் தனது உள்ள வலியோடும் கடித்துத் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொள்கின்றன.

ஆதலால் விலங்குகளினியற்கை யறிந்து அவைகளிடத்துள்ள மேன்மைக்குணங்களைத் தழுவத் தயாரா யிருந்தபோதிலும் நான் எடுத்திருக்கும் மானிட ஜென்மமே சிரேஷ்டமென்று நினைக்கிறேன். பகுத்தறிவு விசேஷத்தால் எனக்கு வேறொன்றுகவும் பிறந்திருக்கச் சிறிதும் மனமில்லை. எவ்விதத் தொல்லைகளினிருந்தும் நம்மை நீக்கிக்கொள்வதற்கு இப்பகுத்தறிவும் புத்திநுட்பமும் எவ்வளவோ உதவியா யிருக்கின்றன வென்றுணர்ந்து களிப்படைகிறேன்.

சீர்காழி. கே. மீனாக்ஷி அம்மாள்.

ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

குறிப்பு:—தரித்திரர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதனால் புகழ் பெற்று வாழவேண்டும். இப்புகழை விட மக்களுயிர்க்கு வேறு பயன் இல்லை.

* * * *

ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.

குறிப்பு:—உலக நடையை யறிந்து அதன்படி நடப்பவனே உயிரோடு கூடி வாழ்பவனுவான். உலகநடையின் வண்ணம் நடவாதவன் உயிருடைய வனு யிருந்தாலும் இறந்தவர்களில் ஒருவனுக நினைக்கப்படுவான். வேத வனு யிருந்தாலும் மனிதர் எவரும் அனுஷ்டிக்கவேண்டிய விதியாத நடைபோல உலகநடையும் மனிதர் எவரும் அனுஷ்டிக்கவேண்டிய விதியாதலின் உலகநடையில் ஒருவனும் தவறலாகா தென்பதே கருத்து.

* * * *

மறந்தும் பிறன் கேடு சூழற்க; சூழின்
அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு.

குறிப்பு:—பிறனுக்குக் கெடுதியைத் தரும் வினையை மறந்தும் ஒருவன் நினைத்தல் கூடாது. அவ்வாறு நினைத்தால் தர்மம் அவனை விட்டு நீங்கிப் போய் விடும். அதுவுமல்லாமல் அவன் நாசமடைவான். ஆதலால் தீவினையை நினைத்தலும் ஆகாது.

231

PRECEPTS OF LIFE.

By

Sri. Bagirathi.

வாழ்க்கையின் விதிகள்.

நம் ஸ்ரேஷ்டாசிகள் அடியில் காணும் விதிகளை வாரம் ஒரு முறையாவது ஐந்து நிமிஷம் ஸாவதானமாகப் படித்து மனதில் பதிய வைக்கவேண்டியது. சிறு வயதிலேயே பெண்கள் இவ்விதி களை கவனமாய்ப் படித்து அதன்படி நடக்கவேண்டும். முதன் முதல் அதன் ப்ரகாரம் நடக்க சிரமமாக இருக்கும். ஆயினும் காலடைவில் இதனால் வரும் நன்மையை யடைவோம். இஹத் துக்கும் பரத்துக்கும் ஸுஹிர்தம். லக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும். எல்லோரும் முக்யமாக பெண்கள் தங்கள் தின க்ருத்யங்களில் இதை ஒரு கடமையாகப் பாவித்துப் படித்து அதன்படி நடக்க முயலவேண்டும். இப்போதிருக்கிற பெண்களின் ஸந்தானங்கள் பிற் காலத்துத் தாயார்களாகவும் தகப்பனார்களாகவும் ஆகிறதால் அவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தேச உத்தமர்களாக ஆவார்கள் அப்போது தேசம் சிறந்து விளங்கும்.

ஒருவருக்கும் வாக்குத்தத்தம் செய்யாதே. எப்பொழுதும் உண்மையையே பேசு. பிறரை நிந்தனை செய்யாதே. கல்ல ஸகவா ஸம் செய். இல்லையேல் ஸகவாஸமே இல்லாமலிருப்பது கலம். வர வுக்குத் தக்கபடி செலவு செய். எப்பொழுதும் ந்யாயத்திலிருந்து தவறாதே. மனஸாக்ஷியல்லாமல் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம் பிக்காதே. பிறரைபான எவ்வித வஸ்துவையும் குடிக்காதே. கன்னடத்தையும் கற்பழக்கமும் தான் மேலானது. ரஹஸ்யமிருந்தால் ஒருவரிடமும் வெளியிடாதே. கடன் வாங் காதே. ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. பிறரிடம் வீண்வார்த் தைபேசாதே. வது பேச ஆரம்பித்தால் யோஜித்துப் பேசு. கோபத்தை முன்னிட்டுக்கொள்ளாதே. உலகத்தில் ஒருவரைப் போல் ஒருவர் இருக்கமாட்டார். உன்னைப்பற்றி தோஷமாகப் பேசினால் அவ்வார்த்தைக்குக் காதுகொடுக்காதே. தைரியமாயும் கம்பீரமாயும் இரு. அதிகாலையில் எழுந்திருந்து வேலையை தது சுறுப்பாய் செய். அவரவர்கள் மதாசாரப்படியும் குலாசாரப்படி

யும் நட. ஒருவருடன் பேசும்பொழுது முகத்தைப்பார்த்துப்பேசு. ப்ரதிதினம் படுக்கைக்குப் போகுமுன் அன்றையதினம் என்ன காரியங்கள் செய்தோமென்று நினை. சோம்பலா யிருக்காதே. கையால் வேலைசெய்ய சரிப்படாவிடில் மூளைக்கு வேலையைக் கொடு. குழந்தைகளிடத்தில் அன்பாயிரு. பதியினிடத்தில் பக்தி வேண்டும். பந்துமித்ரர்களை பட்சமாய் உபசரணை செய். குழந் தைகளின் மனதை யறிந்து நட. தர்மம் செய்யத் தயாராயிரு. தர்மம் தலைகாக்கும்.

பாகீரதி.

VALUE OF CONDENSED MILK

கட்டிப்பாலின் பிரயோசனம்.

இப்பூவுலகில் ப்ரத்யக்ஷமாய் உபயோகித்து அதன் அனு பவத்தை தெரிந்தவர்கள் தவிர, இந்தப் பாலிலுள்ள ஸாரமான உணவு குழந்தைகளுக்கே யல்லாமல் வயது முதிர்ந்தவர்களுக் கும் ஊட்டந்தருகிற தென்று அறிந்து கொள்ளாதவர்கள் சிறு பான்மையோர்.

அந்த கட்டிப்பாலின் குணாதிசயத்தை நுட்பமாய் அறியும் பொருட்டு பாரிஸ் நகரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற லெஸ்ஸபிளி யேர்ஸ் (Lassabliers) என்ற டாக்டர் ஒருவர் சில குழந்தைகளு க்கு 2 வருஷம் கட்டி பாலேபோ போட்டி, அவர்களை இடைவிடாமல் நிறுத்தும், அளந்தும், பரிசோதித்துக்கொண்டும் வந்தார். அப் படிச் செய்துகொண்டு வந்ததில் கட்டிப்பாலே ஜாகிரதையா கவும், சுத்தமாகவும், சுத்த ஜலத்தில் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்துக்கொண்டு வந்தால் அந்த பால் கல்ல பயனைத்தரும் என்பதை அறிந்துகொண்டார்.

[redacted]பாலைச்சாப்பிட்ட குழந்தைகள், உணவை யுண்ட குழந் [redacted]ட மேன்மையாய் இருக்கிறார்கள். இதோகூட மேற்

சொல்லிய பாலை சாப்பிட்ட குழவிகள், வேறு விதமான பிணிகளின்றியும் உதிர ஓட்டம் குறையாமலும் வேறு கட்டி முதலானதுகள் இல்லாமலும் இருக்கின்றன.

இப்படி குழந்தைகளுக்கு கட்டிப்பாலைக்கொடுத்துப்பார்த்ததில் சாதாரண பாலினால் உண்டாகிற மேற் சொல்லிய வியாதிகளை போக்கடிக்கவல்ல மருந்து கட்டிப்பால் என்று தெரிய வருகிறது. அதிகமான வியாதி குழந்தைகளுக்கு இருந்து கட்டிப்பாலை கஞ்சியோடு கலந்து கொடுத்தால் சுத்த ஜலத்தையும் சுறியைக் காட்டிலும் சுலபமாய் குடிக்கிற தோடு கூட அளவற்ற புஷ்டியும் தென்பும் ஊட்டமும் கொடுக்கிறது.

அநேக ஆஸ்பத்திரிகளும் மற்ற மருந்து சாலைகளும் மேலே கூறிய செய்கையை இந்து தேசம் முழுவதும் உயர்ந்த பாலாகக் கொண்டாடப்பட்ட உலக ப்பிரசித்தி பெற்ற கட்டிப்பாலை அதிக ஜயத்துடன் குழந்தைகளுக்குக் கொடுத்துக்கொண்டு வருகின்றன.

இதை வாசிப்போர் கட்டிப்பால் ஏடுநிறைந்ததாய் இல்லாவிட்டால் கட்டிப்பாலை உபயோகிக்கிறதில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். எந்த காரணத்தினாலாகிலும் ஏடெடுத்த கட்டிப்பாலை உபயோகிக்கலாகாது. எப்பொழுதும் மில்க்மெயிட்குறியையே கேளுங்கள். அப்பொழுது நீங்கள் கிடைக்கக்கூடிய மிகவும் மேலான பாலை பெறுவீர்கள்.

பொறுத்தல் இறப்பினை யென்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

குறிப்பு:—அன்னியர் நமக்குத் தீங்கிழைப்பின் அவரை ஏற்றவாறு தண்டிக்க நம்மால் முடியுமாயினும் அவர்மீது கோபங்கொள்ளாது பொறுமையோடிருத்தல் மிகவும் நல்லது. மேலும் அவர் நமக்குச் செய்த [illegible]ய அந் நிமிஷமே மறந்து விடுதல் அப்பொறையினும் மேன்மையை[illegible]

Interesting Items.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Students Hostel.

மாணவர்களின் ஹாஸ்டல்:—இவைகளில் நானாவிதமான பிள்ளைகள் உண்டு உடுத்து வசித்து வருகிறார்கள். தயதாக்ஷண்யமென்பது இங்கே கிடையாது. பிள்ளைகள் ஏதாவது குற்றம் செய்தால் குற்றவாளி எப்பேர்ப்பட்ட ஐச்வரியவான் பிள்ளையேயாயினும் தண்டிக்கப்படுவான். இந்த ஹாஸ்டல்களில் பிள்ளைகளின் நல்ல நடத்தை முக்கியமாகக்கவனிக்கப்படுகிறது. இதற்காக ப்ரொபஸர்கள் அல்லது உபாத்தியாயர்களில் தகுதியுடைய ஒருவர் வார்டனாக நியமிக்கப்படுகிறார். பிள்ளைகளின் நல்ல நடத்தைக்கு இவர் உத்தரவாதி. இவர் நிர்தாக்ஷண்யமாயிருப்பதால் பிள்ளைகளுக்கு ஒழுங்கு. கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்கள் பிடிபடுகின்றன. பிள்ளைகள் தகப்பனாருடைய உதவியை ஒரு போதும் கவனியாமலிருக்கும்படியும் பெற்றோர்களின் செள்ளத்தால் கெட்டுப்போகாதபடியும் பிள்ளைகள் போர்டிங் லாட்ஜிங் ரீடிங் அதாவது உண்டல் வசித்தல், வாசித்தல் ஆகிய சௌகர்ய வசதியுள்ள ஹாஸ்டல்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். பெற்றோர்கள் ஆதரவிலிருந்து படிப்புக்கு மட்டும் ஸ்கூல்களுக்குப்போகும் பிள்ளைகளை விட ஹாஸ்டல்களுக்கு அனுப்பப்படும் பிள்ளைகள் வாழ்க்கையில் மிகவும் சௌக்யமாயிருக்கிறார்களென்பது அநுபவம். இதுகாரணத்தால் நமது தேசத்தில் ஸ்கூல்கள் காலேஜ்களுக்குச் சேர்ந்தாப்போல் ஹாஸ்டல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

Panpered children.

கொழுக்கச்செய்யப்பட்ட குழந்தைகள்:—குழந்தைகள் பாலபருவத்தில், அநேகவிதமான விஷமங்கள் செய்யும். குதித்து விளையாடும் ஏதாவது குழந்தைகள் விளையாடும்போது கை கால்களில் இடித்துக்கொண்டால் அக்குழந்தையின் தாய் மிகவும் பரிதாபப்பட்டு அழுது குழந்தையைத் தடவிக்கொடுக்கிறாள். குழந்தை தாயாரைக்கண்டு வெகு நேரம் விம்மி அழுகிறது. குழந்தை ஆஹாரம் வேண்டாமென்றால் தாயார் பலவந்தப்படுத்தி சோத்தைத் திணிக்கிறாள்.

குழந்தை ஏன் ஆஹாரம் வேண்டாமென்கிறதை அறிய தாயாருக்கு சக்திகிடையாது. பணக்கார வீட்டுக்குழந்தை ஒரு வஸ்து வைத்திருந்தால் அதைப்பார்த்து ஏழை வீட்டுக்குழந்தை வாங்கிக்கொடென அழுதால் தாயார் கடன் பட்டாவது வாங்கிக் கொடுத்து விடுகிறாள். குழந்தை ஒரு தப்பிதம் செய்தால் அதைக்கண்டிக்காமல் விட்டு விடுகிறாள். குழந்தைகளை புத்திசாலியாகவும் தைரியமாகவும் செய்கிறதும் தாய் தான். முட்டாளாகவும் பயங்காளியாகவும் செய்கிறதும் தாய் தான்.

Patience.

பொறுமை:—ஸ்திரீகளுக்குப்பொறுமையே பூஷணம். அன்புக்கு அதிகாரி. ஸமாதானத்தை நாட்டும் கருவி தாழ்ந்து போகும் குணத்தைப்போதிக்கும் உபாத்யாயன். நாக்கை அடக்கும் மந்திரி. காமக்ரோத லோப மோஹம், மதம், மாற்சர்யம் இந்த ஆறு குணங்களையும் அடக்கும் ராஜன் பொறுமையுள்ளவளுக்கு ஒருகுறைவுமில்லை.

235

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Consumptives' diet.

க்ஷயரோகிகளின் சாப்பாடு :— க்ஷயரோகத்தால் வருந்தும் ஜனங்கள் விளக்கெண்ணையை உபயோகப்படுத்தல் நலம். எளிதில் ஜீரணிக்கக்கூடிய ஆஹாரங்களை உண்ணவேண்டும். பால் ரொட்டி காய்கறி வகைகளில் அவரைக்காய் பொடலங்காய், முதலியவைகள் சாப்பிடலாம். ப்ரதி தினம் வேளை தப்பாமல் சாப்பிட்டு வந்தால் தேகபலத்தைக்கொடுக்கும். குளிர்ந்த தேசங்களைக்காட்டிலும் உஷ்ணப்ரதேயங்களில் மிதமான ஆஹாரம் சாப்பிடுதல் நலம்.

Combs.

சீப்புகள் :—ஸாதாரணமாய் ஸஹோதரிகள் ஸ்நேகிதிகள் வீட்டுக்குப்போயிருக்கும்பொழுது அவர்கள் விட்டில், தலையை வாறிச்சீவிப் பின்னிக்கொள்கிறார்கள். இதில் மிகவும் ஜாக்ரதை அவசியம். சொட்டைத்தலை புண்தலை யிருப்பவர்களுபயோகிக்கும் சீப்பைப்பிறர் உபயோகித்தால் மிகவும் கெடுதல்கள் சம்பவிக்கும். அனேக ஸ்த்ரீகளுக்குத் தலை மயிர் திடீரென உதிர்ந்து தலை சொட்டையாய்ப்போகிறது. இதற்குக்காரணம் வியாதிஸ்தர்களுடைய சீப்புகளை உபயோகிப்பதாகும். துணி, சோப்பு, உடைமுதலியவைகளை அவரவர்கள் பிரத்யேகமாய் வைத்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு உபயோகிக்கக்கொடுக்கவும் கூடாது. பிறத்தியாருடையது வாங்கி உபயோகிக்கவுங்கூடாது.

To keep of flies.

ஈக்களைத்தடுக்க:—ஸமையல் பதார்த்தங்கள் தின்பண்டங்கள் முதலியவைகளை ஈ எறும்பு மொய்க்காமல் பாதுகாப்பது வேண்டும். ஸாதாரணமாய் மிட்டாய் காப்பிக்கடைகளிலும் ஓட்டல்களிலும் இந்த விஷயம் ரொம்பகவனிக்கப்படலவச்யம். ஈ எரும்புகள் தின்பண்டங்களைக் கெடுத்து தின்பவர்களுக்கு வியாதிகளை கிளப்பி விடுகின்றன. ஆகையால் இவைகளைக்கூடியவரையில் ஈ எரும்புகளிடமிருந்து பாதுகாத்து வைக்கவேண்டும். சென்னை மிட்டாய்க்கடைக்காரர்கள் கண்ணாடிக்கதவுகள் போட்டு வியாபாரத்தில பண்டங்களை தும்பு ஈக்கள் இவைகளிடமிருந்து காப்பாற்றுகிறார்கள். சாக்கடைக்குப்பக்க முட்கார்ந்து ஆப்பம், பலகாரம் சுட்டுவிற்பவர்களிடமிருந்து பலகாரம் வாங்கிச்சாப்பிடக்கூடாது. காலரா வியாதிகள் பரவ ஆப்பக்காரிகள் காரணபூதர்கள்.

Earache.

காதுவலி:—அறியாத ஜனங்களும் அறிந்த ஜனங்களும் ஆரோவிதமாக காது வலியால் கஷ்டப்படுகிறார்கள். அறிந்தவர்கள் அனுபவத்துக்கொண்டு வருகிறது கிடையாது. அறியாதவர்களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. காதுவலி வந்தால் உடன் தகுந்த வைத்யரிடம் காட்டவேண்டும். ஸாதாரணமாய் ஜாஸ்திவாய்விட்டு அழுதல் பட்டினி கிடத்தல் வேளைதப்பி சாப்பிடுதல் ஈருக்குச்சியால் காதை நோண்டுதல் தேகதர்மத்தை கவனியாமலிருத்தல் இவைகளே காதுவலிக்குக் காரணங்கள் ஆற்றிலாவது குளத்திலாவது ஸ்நானம் செய்யப்போகும்போது இரண்டு காதிலும் பருத்திப்பஞ்சை காதில் வைத்துக்கொண்டு போகவேண்டும். காதுகளில் தண்ணீர் புகுந்து மிகுந்த தொந்தரவு கொடுக்கும். இது விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அவச்யம்.

III

KITCHEN & COOKERY.

சமையலறையும் சமையலும்.

To Buy vegetables.

கறிகாய்களை வாங்க.—வீட்டுக்குக்கறிகாய்கள் வேண்டுமென்றால் கேவலம் வேலைக்காரனை நகபி பணத்தைக் கொடுத்து வாங்கிவரச்சொல்வது சரியானதல்ல. நமக்குப் பிடித்த கறிகாய்களை வாங்கிவர மாட்டான். பறித்து இரண்டு மூன்று நாள் காய்ந்து கிடக்கிற கறிகாய்களை வாங்கி வருவான். புதிதாகப்பறித்த கறிகாய்க்கும் பறித்து இரண்டு மூன்றுநாளா யிருக்கிற கறிகாய்க்கும் வித்யாசத்தை யறிந்து வாங்கமாட்டான். அவரவர்கள் நேரில் போய் புதிதாகப்பறித்திருக்கிற கறிகாய்களை வாங்கி வருவது மேன்மை.

Hot water drinking.

வெந்நீர் குடித்தல் :—அடியில்காணும் நாலு வகுப்பாரும் வெந்நீர் சாப்பிடக்கூடாது. ஹிருதய எரிச்சலுள்ளவர்கள் (2) விரிந்த வயறுள்ளவர்கள். (3) வயிற்றில் புண்ணுள்ளவர்கள். (4) வயிற்றுவலி யுள்ளவர்கள். ஸாதாரணமாக ஜனங்கள் தாகத்தைத் தணிக்கச் சாப்பிடலாம். குளிர்ந்த தண்ணீரைக்காட்டிலும் வெந்நீர் தாகசாந்தி செய்யும். பொடி, காபி முதலியவைகள்போல் வெந்நீரும் சுறுசுறுப்புண்டாக்கும்.

Vermicelly Pudding.

சேமாப் பணியாரம்:—நாலு அவுன்ஸ் சேமாவும் கால்ப்படிப் பாலும் இரண்டு அவுன்ஸ் சர்க்கரை எடுத்துக்கொள். குளிர்ந்த ஜலந்தில் சேமாவைப்போடு. கால்மணிநேரம் கழித்து தண்ணீரை வடித்துவிடு. நன்றாகக் காய்ந்துகொண்டிருக்கிற பாலில் சேமாவைக் கொட்டு. பால் நன்றாகக் காயும்போது சர்க்கரையைப்போட்டு வற்றுகிறவரைக் காயவைத்து தீஞ்சுபோகாமல் நன்றாகக் கிளறி கீழே இறக்கிவிடு. கொஞ்சம் எலுமிச்சம்பழம் பிழிந்தாலும் நலம்.

Karuveppalai chutney.

கருவேப்பிலை சட்ணி :— இளங்கரு வேப்பிலையைக் கொண்டு வந்து காம்புகளை கிள்ளிவிட்டு ஜலத்தில் நன்றாய் அலம்பிவிடவும். பிறகு அடுப்பில் பாணலியை வைத்துக் கொஞ்சம் நெய்யை விட்டு மேற் சொன்ன கருகப்பிலையை கொஞ்சம் வதக்கி எடுத்துக் கொள்ளவும். அதற்குத் தகுந்த உப்பு புளி மிளகாய் இவைகளைச் சேர்த்து அம்மியில் நன்றாய் ஜலம் படாமல் அரைத்து எடுத்துக் கொள்ளவும் பாணலியில் கடுகு உளத்தம் பருப்பு போட்டு தாளிதம் செய்து அரைத்த விழுதைப் போட்டு கலந்து வேறு பாத்ரத்தில் எடுத்து மூடிவைக்கவும் இது அஜீர்ணம், அதிக வயிற்றுப் போக்கு பித்தசாந்தி முதலியவைகளுக்கு கைக்கண்ட ஔஷதமாகும்.

To keep cooking Vessels clean.

ஸமையல் ஸாமான்களை சுத்தமாய்வைக்க :— ஸமையல் ஸாமான்களை நன்றாக தேங்கா நாரோடு சாம்பல் கலந்து சுத்தமாக தேய்த்து சுத்த ஜலம் விட்டு இரண்டு தரம் க்கழவவேண்டும் மண்ணால் பாத்ரங்களை தேய்க்கலாகாது. தேங்கா நாராவது வைக்கொல் சுருணையாவதுல்லாமல் வெறும் கையினால் தேய்த்தல் கூடாது. நன்றாகத் தேய்த்து பாத்ரங்களை அலம்பின பிறகு வெண்மையான துணியினால் ஈரமில்லாமல் துடைத்துக் கவிழ்க்க வேண்டும்.

IV

ART & MUSIC.

கலையும் ஸங்கீதமும்.

பாடவேண்டிய ஏற்றத்தாழ்வுகளின் விதி :—ஆரோகணம்.—மந்தாரவிசை தொடங்கி தாரவிசைக்கு மேலேறுவது. சுவேரோகணம்.—தாரவிசை தொடங்கி மந்தாரவிசைவரையில் கீழ் இறங்குவது.

இசை யென்பதை ஸ்தாயிஎன்று சொல்வதுமுண்டு. ஸ்தாயி மூன்று வகைப்படும். மந்தாரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி.

Perfuming Flowers.

பூவுக்கு வாசனைகட்டுதல் :—பூபரித்தபின் விற்பனைக்கு வேற்றூருக்குக் கொண்டுபோனால் அவைகள் வாடிபோகின்றன. வாசனையும் குறைவுபடுகிறது. பூக்களை ஐஸ் அதாவது ஜலக்கட்டி போட்ட பெட்டிக்குள் பூக்களை பாக்செய்தால் பூ வாசனை குறையாது, வாடவும் செய்யாது. விற்பதற்கு முன் சால் அம்மோனியக் ஸல்லூஷனில் பூக்காம்புகளை தோய்த்தால் பூ அப்பொழுதுதான் பரித்த மலர்போலாகும். மேலும் அந்தந்தப் பூவாசனை ஸத்தை அந்தந்த புஷ்பத்துக்கு வாஸனையாகக் கட்டலாம் எப்படி என்றால் இந்த வாசனையை கார்பாலிக் ஆஸிட் காஸை பூக்கள் மேல் பாயச் செய்தால் பூக்களின் வாசனை அதிகரிக்கும்.

Insects and Flower scents.

பூச்சிகளும் புஷ்பஸெண்டுகளும்:—மனிதனுக்குப் ப்ரியமான வாசனை புஷ்பச்ஸெண்ட்டுகள் பூச்சிகளுக்கும் அறுவருக்கிறதாம். பட்டுப் பூச்சிகள் பூச்செடியில் தேன் எடுக்கிறபோதும் வாசனையை அலக்ஷ்யம் செய்துவிட்டு விடுகிறதாம். பட்டுப் பூச்சிகளும் தேனீக்களும் மனிதர்களைப் போலவே அநேகச் செடிகளின் துர்நாற்றத்தை வெறுக்கிறதாம்.

Details of Talams.

தாளமிடு தற்குறிவிபரம் :— † இக்குறி காதை எனப்படும். இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று கொட்டுதலாம். இது அனுதுரிதமெனப்படும். — இக்குறி அட்சரம் எனப்படும் கைகளை கொட்டிய வுடன் தனித்தனி விரல்களைச் சேர்த்து எண்ணுதலாம் ⌣ இக்குறி காலி எனப்படும். கொட்டிய கையைத்தூக்கிக் காட்டுதலாம். ⌣ † இக்குறி ஒருதுரிதம் எனப்படும். † — — இக்குறிலகு எனப்படும். இது ஒரு காதையும் இரண்டு அக்ஷரமும் ஒரு காதையும் எட்டு அக்ஷரமும் வருவதும் கூட இலகு களாகும். † — — — இக்குறி ஒரு அனுதுரிதம் மெனப்படும். † ⌣ † ⌣ இக்குறி இரண்டு துரிதம் எனப்படும்.

அமெரிக்காவில் எல்லா பள்ளிக்கூடங்களிலும் சங்கீதம் ஒரு பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. வித்ய இலாகா தலைவர் தேசத்தின் நாகரீகத்துக்கு ஸங்கீதம் ஒரு அறி குறிஎன்று ஸங்கீத காலேஜிகள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

VI

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Russian pearsant women.

ருஷ்யா தேசத்துக்குடியான ஸ்த்ரீகள் :—அநேகமாக ருஷ்ய ஸ்த்ரீகள் அழகுள்ளவர்களாம். வட்டமான முகத்தையுடையவர்களாம். கண் புருவம் கருப்பிட்டு வில்லுருவம் போலிருக்குமாம். கண்கள் கோதுமை நிறமுடையதாம். எப்போது சிரித்த முகத்துடனிருப்பவர்களாம். அவர்கள் நெட்டையாகவும் நடப்பதில் மெதுவாகவும் ஆனால் கம்பீரமாகவும் நடப்பார்களாம். பெண்களாகட்டும் ஸ்த்ரீகளாகட்டும் எல்லாரும் ஒரே விதமாக வெள்ளை லாங்கோட்டுப் போடுவார்களாம். கல்யாணம் நிச்சயமாக சில நாட்களுக்கு முன் கல்யாணப்பெண்களே பந்து மித்திரர்களை கல்யாணத்துக்கு அழைத்து வருவார்களாம். பெண்கள் இடுப்பில் சுற்றி கட்டியிருக்கும் ஒரு துணியின் நுனியில் சிவப்புவர்ண மிருக்குமாம். அதைப்பார்த்து தான் கல்யாணப் பெண் என்று கண்டுபிடிக்கிறதாம். ஸ்த்ரீகளின் உடுப்புகளைப்பார்த்து தான் புருஷன் யோக்யதையை அறியமுடியுமாம்.

Unmaried Girls.

விவாகமாகாத பெண்கள் :—ஸயாம் நாட்டில் பெண்களுக்கு விவாகமாகாமல் 35 வயதாய்விடின், அவர்கள் அரசரால் பாதுகாக்க படுவார்கள் அவர்களுக்கு விவாகஞ்செய்து வைக்கும் பொறுப்பு அரசரைச் சார்ந்ததாம். அப்பெண்களுள் எவளையேனும் மணந்து கொள்வதாக அந்த நாட்டு ஜெயில் கைதிகளில் எவனாவது சம்மதிப்பானாயின், அவனை அரசர் உடனே விடுதலை செய்து விவாகஞ் செய்துவைக்கிறாராம். அவன் முன்விவாக மானவனா யிருந்தாலும் பாதகமில்லையாம்.

Turkish women and European dress.

துறுக்கிய ஸ்திரீகளும் ஐரோப்பிய உடைகளும் :—துறுக்கிய பெண்களும், ஆண்களைப்போல தங்களுக்குச் சுதந்தரங் கிடைக்கவேண்டுமென்று கேட்பதாகவும், எவ்வளவோ மானமாக வுடைதரித்து வந்த துருக்கிய ஸ்திரீகள் காலக்கொடுமைக்கேற்ப ஐரோப்பிய உடைகளைத் தரித்து அவர்களின் சில அநாகரீகமான பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு நடக்கிறார்களென்றும் அதைத் திருத்தவேண்டியும், அவ்விதம் இந்த ஸ்திரீகள்நடந்து வருவது முஸ்லிம் மார்க்க நாணம், ஒழுங்கு முதலியவற்றிற்கு விரோதமென்றும் மாட்சிமை தங்கிய ஷெய்குல் இஸ்லாம் அவர்கள் ஓர் விளம்பரஞ் செய்திரிக்கிறார்கள் நியூயார்க் ஹெரால்டு.

French women and thrift.

ப்ரஞ்சு ஸ்த்ரீகளும் அவர்கள் செலவும்:—ப்ரஞ்சு தேசத்தில் சிக்கனமாகக் குடித்தனம் பண்ணுகிற ஸ்த்ரீகள்ஸுத்தமாகக் கிடையாதாம். எவ்வளவுக் கவ்வளவு புருஷன் ஏழையாயிருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு மனைவி செலவாளியா யிருக்கிறார்களாம். ப்ரபுவீட்டு ஸ்த்ரீயும் குடியானவன் வீட்டு ஸ்த்ரீயும் வெளியில் உலாவப் புறப்பட்டால் ஏழை பணக்காரி என்கிற வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதாம்.

ப்ரஞ்சு தேசத்துப் பணங்கள் முழுமையும்ஸ்த்ரீகளிடமே யிருக்கிறதாம். அவர்கள் மிகவும் நம்பக்கூடிய வர்களாம் பிறந்தது உடுக்கிறதற்கும் உறங்குகிற தற்குமாத்ரமே யன்றி வேறொன்றுக்கு மல்லவென்று எண்ணங்கொண்டு அதன்படி நடந்து காட்டுவார்களாம்.

V

VIEWS AND REVIEWS.

அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Talk with women.

ஸ்த்ரீகளுடன் ஸம்பாஷனை:—ஹிந்து ஸ்த்ரீகள் அந்நிய புருஷர்களுடன் பேசுவதில்லை. நெருங்கிய பந்துக்களோடு மாத்ரமே பேசுகிறார்கள். அவர்களோடு பேசுகிற சிலரும் குடும்பம் சமையல் கல்யாணம் துணி மணி, நகை நட்டு போன்ற விஷயமாய்ப் பேசுகிறார்களே தவிர அவர்களுடைய மனோவ்ருத்தி சம்பந்தமான விஷயமாய் ஒன்றும் பேசுவதில்லை. இப்படி வாழ்கிற ஸ்த்ரீகளிடம் என்ன புத்தி சாதுர்யத்தை எதிர்பார்க்க முடியும்? இகபர ஸாதன விஷயங்களை அவர்களோடு ஸம்பாஷித்து அவர்கள் அறிவை நாம் வ்ருத்தி செய்வோமானால் குடும்ப நிர்வாகத்தில் புருஷர்களுக்கிருக்கும்பொறுப்பை அவர்கள் வகித்துக்கொள்ளும் சக்தி அவர்களுக்குண்டாகும். இங்க்லீஷ் ஸ்த்ரீகளுக்கு இந்த சக்தி விசேஷமாய்ப் புருஷர்கள் மிக பழக்குகிற படியால் ஸகல விஷயங்களிலும் புருஷனுக்கு மனைவிகள் ரொம்ப உதவியாயிருக்கிறார்கள்.

பாங்கிபூர் எக்ஸ்ப்ரஸ்.

Education of our women.

பெண்கள் எவ்விதக்கல்விபயில வேண்டும்?—பெண்கள் எவ்வித உயர்தரக்கல்விபயிலினும் வாத்திமார்களாகவும், வைத்ய இலாகாவிலும்தான் சேரலாமே யொழியாமற் றெவ்வித உத்தியோகத்திற்கும் அவ்வளவு தகுந்தவர்களாகத்தெரியவில்லை. ஆகையால் இந்த இலாகாக்களுக்குத்தகுந்த படிப்பில் உத்தியோகத்திற்குப்போக பிரியமுள்ளவர்கள் பயிலவேண்டும். ஏனையோர் தமிழ் நன்கு வாசிக்கவும் எழுதவும் லீடுகளை வைக்கவேண்டிய கிரமமும் உள்ளதைக்கொண்டு அதற்குத்தகுந்தபடி மனங்கோணாது சரிவர இல்லறகாரியங்களை நடத்தும் விதமும் தான் வயது வந்த காலத்து இருக்கவேண்டிய ஒழுங்கும் குழந்தைகளைக்காப்பாற்றும் விதமும் கற்கவேண்டும். ஸங்கீத ஸத்ஸம்பிரதாயத் பிகை.

To prevent receiving bridegrooms price.

வரதட்சனை வாங்கும் வழக்கத்தைத்தடுக்க:— முற்காலத்திலிருந்த கொடிய வழக்கங்களாகிய உடன் கட்டையேறுதல் சிசுவதை முதலியவைகளைத் தொலைக்க கவர்ன்மெண்டார் சட்டம் திட்டம் செய்தனர். அது போல் இவ்வழக்கத்தையும் தடுக்க கவர்ன்மெண்டால் கூடாதகாரியமானாலும் ஸர்க்கார் வேலையிலிருக்கும் அதிகாரிகள் தங்கள் பிள்ளைகளுக்கு வரதட்சனை வாங்கினால் அது குற்றமாகபாவிக்கப்படுமென்றும் மேலும் புதிதாக ஸர்க்கார் உத்யோகத்தில் அமரப்போகிறவர்கள் வரதட்சனை வாங்கியிருப்பார்களாயின் அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டார்களென்றும் ஒரு உத்தரவு பிறப்பித்தால் வரதட்சனை வாங்கும் வழக்கம் சீக்கிரத்தில் இல்லாமற் போய்விடுமென்று கூறுகிறது. வங்காளிப்பத்திகை.

Unequal human eyes.

த்ருஷ்யில் ஸமமற்ற கண்கள்:— ஒரு பெயர் போன கண் வைத்யர். எழுதுகிறார். அநேகர் தங்கள் கண்கள் பார்வையில் ஸமமென்றுகருதுகிறார்கள். எப்போதும் ஒரு கண்ணைப் பார்க்கிலும் மற்றொரு கண் ஏற்றத் தாழ்வாகத்தானிருக்கும். எழுதிக்கொண்டேயிருப்பவர்களுக்கு இடது கண் பார்வை தீக்ஷ்ணயம் ஜாஸ்தியாம். இடது கண்பார்வை தன் வேலையில் ஜாஸ்தியாகக்கவரப்படுகிறது.

டாக்டர்.எஸ், காலின்ஸ், சிகாகோ.

VII

WIT & HUMOUR.

தமாஷ்.

உபாத்யாயர்:— அற்புதமென்றாலென்ன?

பையன்:—அமெரிக்காவில் நடப்பதெல்லாம் அற்புதமே.

உபாத்:—அப்படி யார் சொன்னார்கள்?

பை:—அபூர்வமாகக் கண்டுபிடித்த உலகத்தில் காண்பதெல்லாம் அற்புதம்தான் சார்.

* * * *

வேலைக்காரி:—அம்மா பால்காரன் நம்மூட்டுக்குப் பால் வாங்குகிறதில் படிக்கு எனக்கு அரை அணாக் கொடுக்கிறதாகச் சொன்னான்.

எஜமானி:—சரிதான். அவன் பரம அயோக்கியன். நீ பரமயோக்யஸ்தி. நாளைமுதல்கொண்டு வேறு பால்காரனைத்தேடு.

வேலை:—ஏனம்மா?

எஜமானி:—அவன் ஜலத்தை ஏராளமாய்விட்டு படிக்கணக்கு செய்துவிட்டானக்கு வஞ்சம் கொடுக்க சம்மதித்தான். அவனை ஆதலால் பரம அயோக்கியன் என்றறிகிறேன்.

வேலை:—என்னை அப்படித்தானே சொன்னீர்கள்?

எஜ:—இல்லை. நீ பரமயோக்யஸ்தி. இல்லாவிட்டால் என்னிடம் இதைச் சொல்லமாட்டாயல்லவா?

* * * *

பிள்ளை:—சாமியாரை நரமாம்சபக்ஷணி தின்றுவிட்டது. சாமியார் மோக்ஷம் போவாரல்லவா?

தகப்பனார்:—தடையென்ன? சந்தேகமென்ன?

பிள்ளை:—அப்பா நரமாம்சபக்ஷணியும் மோக்ஷம்தானே போகும்.

தகப்பனார்:—சே, அதுபாபம் செய்ததற்காக நரகம் சேரும்.

பிள்ளை:—அதெப்படியப்பா? சாமியாரை நரமாம்சபக்ஷணி விழுங்கிவிட்டதால் அவர் அதன்வயிற்றிலிருக்கிறாரல்லவா?

தகப்பனார்:—ஆமாம்.

பிள்ளை:—அப்படியானால் இது பொகிற இடத்துக்குத்தானே சாமியாரும் போய்த்தீரவேண்டும்.

* * * *

முதல்திருடன்:—என்ன தம்பி:ரொம்ப சீக்ரம்வந்துட்டே. சுலபமாய் அம்பட்டதோ?

இரண்டாம்திருடன்:—விளக்கு எரிகிறது. பட்டப்பகல் போலிருக்கிறது. சட்டிபானை உடைந்தது. மூலையிலே கிடைக்கிறது. அவ்வளவுதான்.

* * * *

பார்வை:—மழைகொட்டி தெருவெல்லாம் சேராகவிருக்கிறதே. இன்று ஆபீசுக்குப் போகாவிட்டாலென்ன? தாங்கள் இல்லாவிட்டால் சமாளித்துக்கொள்ளுவாரல்லவா?

புருஷன்:—அந்த குட்டுவெளிப்பட்டதானால் சோத்துவாயில் மண் விழுந்தது.

விகட புராணங்கள்.

நல்லோரை நாவழியப் பேசாதிருந்தால் நன்மையடைய முடியாதென நாஸ்திகபுராணங் கூறுகிறதாம்.

நம்பினோரை நற்டாற்றில் விட்டுவிடாதவர்களுக்கு சுவர்க்கமே கிடையாதென சூழச்சி புராணங் கூறுகிறதாம்.

பலபேர்களாலும் பாழ் மகனெனப் பார்த்தோர் நகைக்கப் பட்டம் வாங்காவிடில் பாக்கியவானாவது பழுதாய்விடுமென்று பழய புராணங் கூறுகிறதாம்.

புண்ணியவதிகளாகிய பூங்கொண்டைக்காரிகளின் புத்தி மதியைக்கேட்டு புறணிகள் பேசாவிட்டால் அது புத்தியல்லவென புளுவுனி புராணங் கூறுகிறதாம்.

VIII

EVENTS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

மார்ச்சு '1914.

7-ந்தேதி.—சென்னை அபேதஜக்கியானந்த ஸ்த்ரீ சங்கத்தில் மாலை 4 மணிக்கு மானிடதர்மம் என்றும் விஷயமாக ஸ்ரீமதி வெங்கட்டநரஸம்மா பேசினார்.

10-ந்தேதி.—லண்டனில் ஸ்த்ரீ சுதந்திரவாதிகள் அநேக பஞ்சாபீஸ்களையும் மண் எண்ணெய் தொட்டிகளையும் நெருப்பை வைத்துக்கொளுத்தி விட்டார்கள்.

14-ந்தேதி.—சென்னை ஸ்த்ரீ அபேதஜக்கியானந்த சங்கத்தில் மாலை 4 மணிக்கு பக்தி என்னும் விஷயமாக ஸ்ரீமதி நீலாய தாஷி அம்மாள் அவர்கள் பேசினார். மிஸஸ். ஸாலா குருஸாமி செட்டியார் அக்ராஸனம் வகித்தார்.

17-ந்தேதி.—பெண்களின் பாதுகாப்பு மசோதாவைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க ஒரு தனி கமிட்டியாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. கமிட்டியாரின் அபிப்ராயங்கள் வைசராய் சட்டசபையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

21-ந்தேதி.—சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்கியாநந்த ஸங்கத்தில் மாலை 4 மணிக்கு ஞானம் என்னும் விஷயத்தைப் பற்றி ஸ்ரீ ஸாந்தானந்த மௌனி உபந்நியாஸம் செய்தார்.

22-ந்தேதி.—கோதாவரி ஜில்லா ஆசாரதிருத்த கான்பரன்ஸ் இன்று நடந்தது. அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளில் ருதிமதி விவாகமும், வரதட்சணை வாக்கும் கெட்டவழக்கமாகும்.

28-ந்தேதி.—சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்கியானந்த சங்கத்தில் மாலை 4 மணிக்கு சிசுபரிபாலனம், என்னும் விஷயமாக. ஸ்ரீமதி கோ மீனாட்சியம்மாள் பேசினார். பெண்கல்வி பத்ராபர் தாயாரம்மாள் அக்ராஸனம் வகித்தார்.

28-ந்தேதி.—காஞ்சிபுரம் ஹிந்துப் பெண்பாடசாலையின் வருஷாந்தரக் கூட்டம் நடைபெற்றது. ஆனரபிள் சிவஸாமி அய்யர் அக்ராஸனம் வகிக்க மிஸஸ் பெஸன்ட் அம்மாள் பெசினார்.

30-ந்தேதி.—சென்னை ஹிந்து மஹிளாஞான ஸமாஜத்தில் ஆருமாஸக் கொண்டாட்டம் மூன்றாவதாக நடைபெற்றது ஸ்ரீமதி. எம், லக்ஷ்மி அம்மாள் அக்கராஸனம் வகித்தார். ஸ்த்ரீகளுக்கு ரியநல்ல விஷயங்கள் பேசப்பட்டன.

242

இந்நிலைமையே சிறந்தது. சை. நானென்ன மூடனாயிருக்கிறேன். சாவித்திரியையோ அவ்விதம் எண்ணுவது. கற்பில் மிகு கனியன்றோ அவள். சாவித்திரி என்ற பெயர் அவளுக்கு உரித்தான தன்றோ. ஆம் அவளை பலவந்தப் படுத்தி மணம் செய்து கொண்டேனானால்...அவள் மனத்தில் அவள் மேல் உண்மையான மெய்யன்பு இருக்கும் பட்சத்தில் என்னதான் மறந்தாலும், எவ்வாறு அவள் மனம் மறக்கக்கூடும். என் உடலழியும்வரை நான் என்னதான் செய்யினும் சாவித்திரியின் மீதுள்ள அன்பு என் மனதை விட்டகலுமோ. அது ஒரு நாளுமில்லை. ...ஹா என் தலை சுழல்கின்றதே. இன்று காலை முதல் என்னைக் காண்பவர் யாவரும் ஏன் முகம் வாடி பயங்கரமாயிக்கின்றதே என்று கேட்கிறார்களே. எவ்வளவோ, அடக்க முள்ள என் சுபாவத்தை இந்நிலைக்குக் கொண்டு வந்த சிறு பெண்ணின் சக்தியை என்னென்பேன்! அவளைப்பாராதிருக்கையில் நான் எழுதிய சித்திரத்துக்கும் அவளுக்கும் கொஞ்சமும் பேதமில்லை. நான் எழுதிய சித்திரங்களுள் எதுவும் இவ்வளவு தெளிவாய் அமையவில்லை. (பையை தடவிப்பார்க்கிறான்.) ஆ. எங்கே போயிற்று அச்சினம் (திகைத்து) ஐயோ! இதுவும் வளையல் ஒடிந்ததைப்போல அபசகுனமே ரூபா—சித்திரமே. உயிரில்லாத நீயும் உயிர் பெற்று உண்மையான சாவித்திரியின் கன்னெஞ்சமடைந்தாயோ. உனக்கும் என்னிடமிருக்க சம்மதமில்லையோ. ஆகா. என்னதிரஷ்டம் (பாறையின் மீது உட்கார்ந்து) என் பாட்டியாரைத் தேடிவந்த நான் எதேதோபிதற்றுகின்றேனே. இங்குதானே இருப்பதாக சொல்லியனுப்பினார்கள். சுற்றிப் பார்ப்போமென்றாலும் தலை சுழல்கின்றது. கால்கள் நடுங்குகின்றன. கண் இருளடைகின்றது. என்ன செய்வேன். பதினாயிரம் ஜனங்கள் சேர்ந்து செய்த சண்டைகளையும் கலகங்களையும் அடக்கின இந்த பலத்த சரீரம் கேவலம் ஒரு பெண்ணினால் நிற்கவும் திடனற்றுப் போய்விட்டதே. . என்ன ஆச்சரியம்...ஹா. சாவித்திரீ (கண்ணீர் மல்க).

மங்காய் நின்னங்கமதை மலரினால் படைத்தபிரமன்
நங்காய் நின்நெஞ்சந்தனை நஞ்சினாற் படைத்தனனோ
எங்கெங்கு சென்றிடினும் எந்தியேயுன் வதனம்
மங்கலிலா மதிநிகராய் மாதரசீ தோற்றுதடீ.

(மெய்மறந்து பாறைமேல் சாய்கிறான். குகைக்குள்ளிருந்து யோகி, யோகினி, ஸ்திரீவீரன் வருகிறார்கள். ஸ்திரீ குணபூஷணத்தைக்கண்டு வீரனிடம் சுட்டிக்காண்பிவித்து நடுங்குகிறாள். வீரன் உற்றுப்பார்த்து ஆச்சரியங்கொண்டு).

வீர.—அக்கா. அவரில்லை...ஆனால் அப்படியேதான் இருக்கிறது. என்ன ஆச்சரியம். தேவி...இவர்தானோ. தாங்கள் சொல்லியவர்.

வீவ.—(உற்றுநோக்கி) ஆம். என் கண்மணியே...என். இக்கோலத்துடன் கிடக்கிறான். தூக்கமோ...ஆ. கண்ணீர் வடிந்திருக்கிறதே. ஐயோ,

5

243

உனக்கும் என்ன மனகஷ்டம் கேரிட்டதடா. என்வயிற்றின் கொடுமையோ. அப்பா. பூஷணம், பூஷணம். அப்பா. என்செல்வமே. (பூஷணம்விழித்து சரேலென எழுத்துயோகினை நமஸ்கரிக்கிறான்.) ஸ்திரீ முகமூடியால் மூடிக் கொள்கிறாள்.

தூண.—அம்மா, நான் இங்குவந்து தங்களை தேடிபார்த்து காணுதபடியால் சற்று கார்த்திருந்தேன். தூங்கிப்போய்விட்டேன். அம்மா தாங்கள் வடக்கேபோய் பல வருஷங்காயிற்றே. எப்பொழுது வருவீர்களென்று விசாரித்து ஆவலாய் எதிர்பார்த்திருந்தேன். இப்போது என் வேலையென்ன தெரியுமம்மா. ராஜா எனக்கு ரூபரிண்டண்டு வேலைகொடுத்து பட்டாளத் தலைவனுக இவிடம் கஜபதி என்ற திருடனைப்பிடிக்கும்படி (ஸ்திரீ விசனப் படுகிறாள்). அனுப்பியிருக்கிறார். (தனக்குள்) என் இந்த ஸ்திரீ என்னை இவ்வாறு பார்த்தாள். இவள் யாரோ.

ஜீவ.—நான் அனுப்பிய ஆள் உன்னிடம் சொல்லவில்லையே.

தூண.—சொன்னான். அதற்கு முன்பாகவே. ராஜசபையில் அவனைப் பிடிக்காமல் உயிருடன் திரும்புவதில்லையென்று பிரமாணம் செய்துவிட்டேன். தர்மசங்கடத்தில் அகப்பட்டேனே தம்வார்த்தை மீறினேன் என்ற அவதூறும் சபை முன்னிலும்போலும் சத்தியம்செய்து பயங்கொள்ளி பூஷணம் பாரதமாயினனே என்ற அபகீர்த்தியும் எனக்குவராது காக்கவேண்டியது தம்கடமை. நாங்கள் மனதொப்பி இவ்விஷயத்தில் என்னை அனுப்பவேண்டும். என்னை உலகப்பற்றைவிடும்படி ஸ்வாமிகள் அருளியது, அதற்கு தற்காலம் அசக்தனுயிருக்கிறேன். என்வாழ்வில் எனக்கு இன்பமில்லையென்று தோன்றிவிட்டாலும் கஜபதியைப் பிடிக்குமட்டும் நான் இவ்விஷயத்தில் பிரவேசிக்கமுடியாது. (ஸ்திரீ கண்ணீர்பெருக மூர்ச்சை யாய்விழ வீரன் குகைக்குள் அவளைத் தூக்கிச்செல்கின்றான். யோகினியும் கூடச்செல்கிறாள்.) (தன்னுள்) இதென்ன? யார்கள், இவள்பார்வை என்னைப் பரவசமாகச் செய்கிறதே. என்னுலின்னதென்று அறியமுடியாத ஒருபுதி உணர்ச்சி தோன்றுகிறதே சாவித்திரியின் நினைவு என்னையோர் புரம் வருத்த இந்த ஸ்திரீ என்னை வினிப்படி பார்த்தாள்.

வீர.—அப்பா, பூஷணம். ஏன் உனதுமுகம் மிகவும் வாடியிருக்கிறது. நீ மனதினுள் நிரம்பக் கவலைப்படுவதாக உன்முகம் காட்டுகிறதே.

தூண.—ஆம். என் கவலையைத் தீர்த்துக்கொள்ளவே நானிங்குவந்தேன். எனக்கிவ்வுலகில் இரண்டுகோரிக்கை இருக்கின்றது. ஒன்று என் வாழ்வைப்பற்றினது. மற்றொன்று என் கௌரவத்தைப்பற்றியது. இவ் விரண்டும் தீரும்வரை என்மனம் சஞ்சலம் தவிர்க்காது. அதில் முதலாவது நிறைவேறுதா நிறைவேறுமா என்று ஊகித்து எனக்குச் சொல்லவேண்டும்.

வீர.—(சிரித்து). நீ ஜோதிஷத்தை நம்புகிறாயா. ஜோதிஷம் சுத்தப் பிரட்டு என்னுமிக்காலத்தில்நீ...

தூண.—அப்படிகூறுபவர் மேலுத்தமரில்லை. உலகில் ஒன்று இல்லை என்றுகான் எப்பொழுதும் சொல்வதில்லை. ஓர்வித்தையை அரையுங் குறையு மாய்க்கற்று அதை ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டு பணத்தின்பொருட்டு பித்தலாட்டம் செய்யும் பிரஷ்டர்கள் சொல்லும் ஜோஸ்யம் பொய்யே. தவிர அதை பூராவாய்கற்று பிரதி பிரயோஜனம் எதிர்பாராமல் உலகான்மையைக் கருதிச்சொல்லும் தம்போன்றவர் வாக்கு பொய்க்காதென்பதை நான் அறி வேன்...உலகத்துக்கென்ன. காலியுடையணிந்தவர்களெல்லாம் துஷ்டர்களா? தம்போன்ற உத்தமர் போய்விட்டார்களா? ஒரு தொழிலைப்பற்றி நிற்பொதுவாய் இகழ்வான எண்ணம்கூடாது. அது அத்தத்தொழிலாளி யைப்பற்றினதே—தாம். என் பிரார்த்தனையை நிறைவேற்றவேண்டும்.

வீர.—இப்பொழுது நீ கண்ட ஸ்திரீயும் என்னை ஓர் விஷயம்கேட்க வந்தவள்தான். அவளுக்கும் பொதுவாய் தெரிவித்தேனேயொழிய விவரமா யொன்றும் சொல்லவில்லை. அப்படியேதான் உனக்கும். நான் தற்காலம் ஜோதிஷம் சொல்வதே கிடையாது. அத்தொழில் ஞானிகளுக் கடுத்த தல்ல. உன்விஷயத்தை முன்னேயே யோசித்து வைத்திருக்கிறேம். கேட்க மனத்திடமாயின் சொல்கிறேன். "உன்ஜாதகம் சொல்கியமான உத்தமகுணம். பராக்கிரமம் உயர்த்தபதவி இவைகளைக் கொடுக்கின்றது. ஆனால் உன்வாழ்வில் உனக்கு இன்பம் இராது. எடுத்த காரியங்களும் ஜய மாகாது. நீ விரும்புவதே உனக்கு முடிவாகும்." (பூஷணம் தலை சாய்க்கி ருன்). அப்பா அதனால்தான் சிறுவயதிலேயே பாசத்தில் நேசம்வைக்காதே. ஆசையை வெறுத்தவர்க்கு மோசமில்லையென்று உனக்குப் போதித்தோம். மேலும் "பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்ற உன்மனதில் பதியச்செய்து உலகைவெறுத்து என்னுடன்வரும்படி போதித்தேன். நீ மறுத்துவிட்டாய்... நீ இதனால் மனசொந்து முயற்சியைக் கைவிடாதே. தீயவழியில் பிரவேசி யாமல் சருமத்தைக் கைவிடாமல் நடப்பாயாகில் கடவுள் விட்டவழி விடட் டும். மனதில் ஆசைவைத்து அது நிறைவேறுமிட்டால் கிலர் சன்னியாசி வேஷம் போடுவதுண்டு. அச்சன்னியாசிக்கும் காடகச் சன்னியாசிக்கும் ஒரு காரியத்தைக்குறித்து அதை முடித்துக்கொள்ள வெளிவேஷம்போடும் சன்னி யாசிகளுக்கும் பேதமில்லை. உன்மனம் பூராவாய் உலகப்பற்றற்று விட்ட தாயின் என்னுடன் வந்துவிடு. இல்லாவிட்டால் உலகத்துக்கு கற்கருமங் களைச் செய்துகொண்டு கொஞ்சங்கொஞ்சமாய்ப் பற்றையொழித்துவா. இதுதான். நான் உனக்குச் சொல்லக்கூடும். இதற்குமேல் உன்போன்ற வாலிபர்களுக்குச் சொல்லுதல்கூடாது. (பூஷணம் கண்ணைமூடி இருக்கி ருன். ஜீவானந்தா வருகிறான்.

ஜீவ.—கண்ணே பூஷணம். கஜபதியைப்பிடிக்க என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்.

தூண.—அவன் இருப்பானென்ற சந்தேகப்பட்ட பலகாடுகளை வெட்டி வெட்ட வெளியாக்க ஏற்பாடாய்விட்டது. அவனைத் திருவாங்கூர் புறத்து

லிருந்து துரத்தியாய்விட்டது. தற்காலம் அவன் இங்கு ஒளிந்திருப்பதாய் தெரிந்துவந்தேன். சமீபத்தில் ஆயுதக்கொள்ளையைத்தவிர வேறொன்றுங் காணப்படவில்லை...முக்கியமாய் அவன் ஆட்களையும் ஆயுதங்களையுங்கண்டு பிடிப்பதில்தான் தற்காலம் முயற்சியாயிருக்கிறோம்.

வீர.—அவனைப் பிடித்துவிடலாமென்ற நம்பிக்கை உனக்கிருக்கிறாப் போல் தோன்றுகிறது. பூஷணம் இதில் உன் முயற்சியெல்லாம் வீணாகுமே தவிர சிறிதும் லாபமில்லை.

குண.—பிடித்து விடலாமென்ற உறுதியில்லாவிடினும் அனேக கொடுஞ் செயல்களைத் தடுத்துவிட முடியுமல்லவா.

ஜீவ.—(பெருமூச்சுடன்) அப்பா என்னசொல்லியுங் கேட்கமாட்டேனென்கிறாய் பூஷணம் உன் செய்கை எத்தகைய கேட்டை விளைவிக்குமென்பதை நீ யறியாய்...அண்ணா சொல்வதைப்போல், இனி உன்னைக்குறித்துக் கவலைப்படுவதில் பயனில்லை. நாங்கள் நாளையதினம் யாத்திரை புறப்படுகிறோம். திரும்பிவர ஒரு வருஷத்திற்குமேல் செல்லும் ..அக்காலத்தில் உயிருடனிருந்தால்.—

குண.—(காலில்விழுந்து) அம்மா நீங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. என்கோரிக்கை ஈடேற ஆசீர்வதிக்கவேண்டும்...கேவலம் உயிருக்குப்பயந்து தர்பார் நடுவில்செய்த சத்தியம் தவறுவேனாகில் என்னிலும் அதமன் உலகிலேது. என்றுமே நான் உயிரைப்பற்றி கிலேசப்படுவதில்லை. அதிலும் இரண்டு நாளாய் இந்தக்ஷணம் உயிர் நீங்கினாலும் எனக்குச்சம்மதமே. தாம் உத்தரவு கொடுத்தாலொழிய எழுந்திருக்கமாட்டேன்.

ஜீவ.—விதியின்வழியே செயல்...எழுந்திரப்பா, எழுந்திரு...கண்ணே. பூஷணம். நேரமாய்விட்டது. உனது மனதை திடப்படுத்திக்கொள். போய் வா அப்பா. (பூஷணம்போகிறான் யோகிகளும் போகிறார்கள்).

அங்கம் I.—களம் IV.

இடம்.—குத்தாலத்தில் மலையருகில் ஓடையும் தோட்டமும்.

சண்.—நாம் உலாவு தன் பொருட்டு வந்து சிறிது நேரத்திற்குள் இருட்டிவிட்டது பார்த்தனையா. நான் முன்பே அழைத்தேன். அப்புத்தகத்தை நீ ஏன் கட்டிக்கொண்டழுதாய், அது என்ன புத்தகம்.

சாவி.—அது மனோன்மணியம்.

சண்.—எது—அள்ளா குள்ளா வென்று மட மடவென்று உளரிவிட்டு தேன் குடித்த நரிபோல் துள்ளுவாயே. அப்புத்தகந்தானே.

சாவி.—செந்தமிழினருமை புனக் கெப்படி தெரியும். ஏதாகிலும் நூதன ஆபரணங்களைக்கண்டால் நீ அப்படி துள்ளுவாய்...அறிவுக்கும் ஆபரணத்திற்கும் அதிக விரோத முண்டல்லவா.

சண்.—உன்னைத்தூஷித்தாற்கூட வராத கோபம் உன் புஸ்தகங்களைப் பற்றி இகழ்ந்தால் உனக்குப்பொங்கு கின்றதே.

சாவி.—ஆம். தன்னருமை காதலியை விரோதிகள் கூடி மானபங்கம் செய்யும்பொழுதும் சகோதரருக்கு கீழ்ப்படிந்திருந்த பறகுனன், தன் காணஉவத்தைத்தூவித்த அத்தமையனை எதிர்க்கவில்லையா. தன்னிலும் தான் அபிமானிக்கும் வஸ்துவே சிறந்தது.

சண்.—அதெல்லாம் பொய். நீயும் ஒரு மனோன்மணியல்லவா. காதலைப்பற்றி பேயென்றும் பைசாசமென்றும் அது ஓர் உருவற்ற பொய்யான கற்பனை யென்றும் பலவாறு தூஷித்துப்பிறகு தானே அதில் வீழ்ந்தலைந்தாளல்லவா.—அதைப்போல் தான்... நீயும்—நேற்று.

சாவி.—என்ன என்ன. நேற்று. நேற்றென்ன. எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை.

சண்.—அர்த்தமாகுமா—நீயும் சாவித்திரிதானோ. இது குற்றாலந்தானோ என்ன வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டைக் ரகு நாதன் கிருபையைத் தவிர.

சாவி.—(திடுக்கிட்டு முகங்கவிழ்ந்து) என்னது யாரைத்தவிர ! சண்பகம் உனக்கு பைத்தியமா என்ன. உளருகிறாய். ஞானமில்லாமல்—என்னிலைமையில்.

சண்.—உளருவது தான் என் வழக்கம்—நீ இவ்வளவு கோபிக்கும்படி நான் என்ன சொன்னேன். உத்தமாவதாரமென்று நீ சதா புகழும் ஸ்ரீராம மூர்த்த அருளைத்தவிர உனக்கு வேறு ஒன்றும் வேண்டியதில்லை என்றேன் (நகைக்கிறாள்.)

சாவி.—சரிதான். நீ நிரம்ப நல்லவள்—(கவலையுடன் முகத்தை திருப்பிக்கொள்கிறாள். ஐரோப்பிய உடையுடன் கஜபதி மலைமீது தென்படுகிறான். புலி வருகிறது.)

247

சண்.—சாவித்திரி இருட்டி விட்டது. வா! போகலாம். ஹா...ஐயோ புலி, புலி. சாவித்திரி நான் அப்பொழுதே கூப்பிட்டேன். அதோ வந்து விட்டதே புலி. ஐயையோ. எங்களைக்காப்பாற்ற ஒருவருமில்லையா இருவரும் ஓடுகிறார்கள்.

சாவி.—ஐயோ. புலி நம்மை பார்த்துவிட்டதடி. தொலைந்தோமினி. ஐயோ, ராமச்சந்திரா.

(அலறுகிறாள். புலி இவள்மேல் பாயுந் தருணம் கஜபதி திடீரென குதித்து புலியை அறைந்து கழுத்தில் கட்டிபோடுகிறான். சாவித்திரி மூர்ச்சையாய் விழுகிறாள். துப்பாக்கியுடன் ரகுநாதன் ஓடிவர கஜபதி புலியை விட்டு மறைகிறான். புலியை ரகுநாதன் தூக்கிக்கொண்டு இருவரும் மறைகிறார்கள். சாவித்திரி மூர்ச்சை தெளிகிறாள்.)

சண்.—சாவித்திரி. திகிக்கப்படாதே. ரகுநாதன் புலியைத்தூக்கிக் கொண்டு போயிருக்கிறார். புலி இவ்வழி திரும்பினாலும் திரும்பும்—அவர் உயிருடன் திரும்பவேண்டுமே.

சாவி.—(மனங்கலங்கி) சண்பகம். நம் உயிரென்ன—வெல்லமா இருசற்று, பார்த்துக்கொண்டு போகலாம். துப்பாக்கி சத்தம் ஒன்றன் பின் ஒன்றாய் கேட்கிறது). அதென்ன சத்தம்

சண்.—புலியின் கர்ச்சனை. அவர் கொன்று விட்டார் அதை. சாவித்திரி நாம் போய்விடுவோம். (கஜபதி வருகிறான்.)

சாவி.—Sir, I cannot thank you sufficiently! But for yor timely aid, we would have fallen a prey to the tiger. I trust you are not hurt.

கஜ.—Oh! 'Tis nothing; it is getting dark; please don't stay here.

சாவி.—சண்பகம் அதோ வருகின்றாரவர்—புலியை இழுத்துக்கொண்டு ஆ என்ன தைரியம் ஐயோ! என்ன உடலெல்லாம் இரத்தம். புலி கீறிவிட்டதா என்ன. ஆ. (கஜபதி மெல்ல மறைகிறான்.)

சண்.—சாவித்திரி. உனக்கென்ன அதைப்பற்றி பைத்தியம். ஹா! அடபாவமே. இதென்ன கஷ்டம்.)

(ரகுநாதன் புலியை கீழே போட்டுவிட்டு பாறைமீது சாய்கிறான்.)

சண்.—என் உங்களுக்கென்ன செய்கிறது. ஒருவரையுங்காணோமே. வீட்டிற் காளனப்ப—சாவித்திரி. நீயும். தனிமையில் போகமாட்டாயே. இங்கு—உன்னைவிட்டு—நான் போவது—சரியல்லவே.

ரகு.—(களைப்புடன்) அக்கா, என் ஊதுகுழல் எங்கேயோ விழுந்துவிட்டது. சீக்கிரம் நீங்கள் போய்—வழியில் குணபூஷணம் இருப்பார். அவரையுடனே என்னிடம் அனுப்பு. (சாவித்திரியை பார்க்கிறான். அவள் பரதவித்து கண்ணீர் வடிக்கிறாள்.)

244

சாவி.—(தன்னுள்) இவரை இந்நிலைமையில் எப்படி விட்டுப்போவது என் இருதயம் துடிக்கிறதே—(வெளிப்படையாய்) காயம் பலமாயிருக்கிறதுதே. என்ன காரணம். சண்பகம்.

ரகு.—முட்டாள்தனம். புலி பின்னுலிருந்து அடித்துவிட்டது. இது லட்சியமில்லை. வீணில் கவலைப்படவேண்டாம். சற்று ஆயாஸமாயிருக்கிறது. அவ்வளவுதான் (தன்னுள்) ஐயோ. எனக்காக எவ்வளவு வருந்துகிறாள். அவள் முகத்தில் இரத்தம் சிந்திவிடும்போலிருக்கிறதே.

சண்.—நாம்போய் சீக்கிரம் அவரை அனுப்புவோம். (சாவித்திரி திரும்பி திரும்பி பார்த்துக்கொண்டு இருவரும் போகிறார்கள்.)

ரகு.—ஆ. உன் அன்பைப்பெற்ற பின்பு நான் இறந்தாலும் பெரிதல்ல ஐயோ. என் தலை சுழல்கிறதே. என் கண் மங்குகிறதே. யார் இது (கஜபதி). அருகில் வந்து உட்காருகிறான்).

ரகு.—(தன்னுள்). ஹா. கஜபதி ஐயோ. இத்தருணம் இவனிடம் சிக்கிக்கொண்டேனே. அன்னை எச்சரித்ததை மறந்தேனே. ஈவிரக்கமின்றி கொன்றுவிடுவானே. அம்மா. என் பிரக்ஞை தப்புகிறதே. இனி நான் விழிப்பது மேல் உலகில்தான். ஆ, அம்மா. மூர்ச்சையாகிறான். கஜபதி. ஜலம் தெளித்து, தன் பையிலிருந்து மருந்தை காயத்தில் தடவி அவனை மூர்ச்சை தெளிவிக்கிறான்.

கஜ.—இவனை இப்படியே மிதித்துகொன்று விட்டாலென்ன. சீ. குழந்தை முதல் என் கையால் அருமையுடன் வளர்த்து இப்பொழுது கொல்ல மனம் வரவில்லையே. சீ. இதென்ன என் மனங்கூட சஞ்சலப்படுகிறது. இவன் கொடிய விரோதி. ஸ்தானத்திற்கு வந்து தாயென்றும் பாராது அவளை சிறைப்படுத்தியவனல்லவா. இருக்கட்டும். இவனை இப்படியே சொல்லக்கூடாது. (ரகுநாதன் மூர்ச்சை தெளிந்து கண் விழிக்கிறார்,

கஜ.—ஆகா...என்ன. குமரிண்டவாள். தேகம் எப்படி இருக்கிறது... அன்புடன் தாயைப்போல் வளர்த்தவளை வஞ்சகமாய்ப் பிடித்துப்போன புண்ணியம் புலியின் கையினின்றும் தப்பித்துவிட்டதுபோலிருக்கிறது.

ரகு.—(தனக்குள்) ஐயோ. இந்த நிலைமையில் அகப்பட்டுக்கொண்டேன். நான் சொன்னாலும் நம்பமாட்டானே) (வெளி) துன்மார்க்கத்தை விடுமென்று போதித்தும் விடாத உம்மையே, வளர்த்த நன்றிக்காக, காட்டிக்கொடுக்க மனம் வரவில்லையே. அவளை நான் பிடித்துவருவதானால்...உம்முடன் சேர்ந்து பாபகர்மமே தொழிலாய் பூண்டு பிசாசமே உருவாய் மற்றொரு சன்மமெடுக்கவேண்டும்—

கஜ.—சொச்சொச்...இதெல்லாமென்னிடமிருக்கும்போது கற்கவில்லையே: எந்த வாத்தியார் சிட்சை...பூஷணம் என்பவன் உபதேசமோ... அடே நன்றி கெட்டநாயே. வெளிக்கு நன்றியுள்ளவன்போல் வேஷம் பூண்டு, ரகசியமாய் என்னை பிடித்து கொடுத்துவிடுவதாக உடன் படிக்கை செய்திருப்பதை நான் அறிவேன். எனடா, இல்லாவிட்டால் உன்னை எத

249

ற்கு இந்த விஷயத்தில் நியமிக்கிறார்கள். உன்னைவிட சூரப்புலிகள் வேறு இல்லையோ...இப்பொழுது உன்னைக்கொன்றாலென்ன ... அது பெரிதல்ல. வளர்த்த என் கையினால் கொல்ல மனம் வரவில்லை. மேலும், உன்னைக் கொல்வது எனக்கு எம்மாத்திரம்...என் உளவுகளை வெளியிட்டு ஆட்களின் வேஷம், சமிகை, குகைகள், ஆயுதசாலை இவற்றை காட்டிக்கொடுத்தாயோ. உன்னை சித்திரவதை செய்வேன்...ஜாக்கிரதை. என்னிடமிருந்து ஓடி போலீஸாரிடம் அடைக்கலம் புகுந்தானே வாரணம் பிள்ளை அவன் கதியினின்றும் உன் வழி யறிந்து கொள்ளலாம். அடே அந்தக் குணபூஷணம் என்பவன் யார். அவன் சுபாவம், பலம், யுக்திகளெப்படி, இதை அறியவே வந்தேன். நீ சொல் உடனே. இல்லாவிட்டால் கழுத்தைத்திருகி விடுவேன்.

ரகு.—பூ...என் வீணாய் பயமுறுத்துகிறீர். இந்த ஊது குழலை உபயோகித்தேனாகில் உம்மைச்சுற்றி பட்டாளம் சூழ்ந்து விடும்.. நீர் கொல்வதற்காக நான் அஞ்சப்போவதில்லை. என்று என் தந்தை என்னை உம்மிடம் ஒப்புவித்தாரோ அன்றே நான் இறந்த தற்குச்சமானமே...ஆயினும் கேளும். உமக்கும் பூஷணத்துக்கும் புத்தியிலும் சக்தியிலும் யாதொரு பேதமுமில்லை. நீர் துற்குணன். அவன் சற்குணன்; அதுதான் வித்தியாசம். நீர் செய்வதெல்லாம் அக்கிரமம்; அவன் செய்வதெல்லாம் லோகோபகாரம்.

கஜ.—வேலிக்கு முள்ளடைக்க, காலிலே தைத்ததுபோல, உனக்கு நான் கற்றுவைத்ததை யெல்லாம் என்னிடத்திலேயே ஒப்புவிக்கிறாயே... ஹூம்...அடே உன் இரத்தம் ஆறாயோடுகிறது பார். அதைக்காண என் மனம் எவ்வளவு சந்தோஷத்தை அடைகிறது.

ரகு.—எனக்கு மது சந்தோஷமே. ஏனெனில் உம்மாலுண்டான ரத்தமல்லவா. இது இவை யெல்லாம் போய்விட்டால் உமக்கு துரோகம் செய்யக்கூடாதென்ற எண்ணமும் அதுடன் போய்விடும். (கஜபதி அவனை கழுத்தைத்திருகப்போகிறான். குணபூஷணம் ஓடி கஜபதியை இடித்துத்தள்ள. கஜபதி தூரத்தில் போய் விழுகிறான்).

குண.—ஐயோ, ரகுநாதா. இரத்தம் வெள்ளமாய் பெருகுகிறதே. ஆடர்லி (குழல் ஊதுகிறான். கஜபதி எழுந்து பூஷணத்தைப்பின்னால் வந்து பலமாய் அறைகிறான். தூரத்தில் குமாரம், இன்ஸ்பெக்டர், ராஜம், ஜமீன்தார், காட்டதிகாரி, ஆடர்லி இவர்கள் வருகிறார்கள். பூஷணம் தெளிந்து கஜபதியைத்தூரத்துகிறான்.)

பூஷ.—அடே. நில் (கத்தியை உருவி பாய்கிறான். கத்தி கஜபதியின் கையில் பட்டு ரத்தம் வருகிறது. கஜபதி கத்தியை தன் கைத்தடியால் தட்ட அது ஓயந்து விடுகிறது. போலீஸார் வருகிறார்கள். குணபூஷணம் தன் துப்பாக்கியைக் குறிவைத்துச் சுடுகிறான். கஜபதி தப்பி மறைகிறான். பூஷணமும் பின் தொடர்ந்து மறைகிறான்....ரகுநாதனை குமாரமும் சில கான்ஸ்டபில்களும் எடுத்துப்போகின்றனர். காட்டதிகாரிகள் செத்த புலியை இழுத்துச் செல்கின்றனர்).

THE

FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்ராதிபர் :
ஸஹோதரி ரேவு, தாயாரம்மா.

Vol. 3. தொகுதி 3. } ஆநந்த௵ சித்திரை௴, April. 1914. { No. 7. பகுதி 7.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

கல்யாணமாப்பிள்ளையைப் பார்த்து

பெண்சொல்லுங் கேலி.

(பலமகுஜலோட்டி)—மெட்டு.

பல்லவி.

சரஸகுண மாப்பிள்ளைக்குச்
சமானமினி யேது.

அநுபல்லவி.

வரிசைப்பந்தி
வாரி வாரித்
தீருவாரொருகந்தி

வந்து குந்தி
தொந்தி தனிலடைத்துத் (சரச)

பெண்டுகள் சொல்லுக்குத்
பிரீதிகோடியுண்டு
பெப்பர்மெண்ட்

தொண்டு மவ்லமசையய
மடிக்குளே
கற்கண்டு (சரச)

பக்கக் கடிகாரத்தில்
பார்த்தாச்சரியப்படுவார்
போய்த்தணிக்

தானே மணியடிக்க
எட்டிமேல்
கைதொடுவார் (சரச)

ஜேப்புக்குள்ளே
திணுசிரண்டு
சொரி பனாசம்

சோப்புக்கட்டி
பெட்டி கண்டேனே
ஓட்டி (சரச)

நல்ல சரிகை
கல்முய் மடித்துக்
கொண்டார் துரைகள்

வெள்ளை வேட்டி
கூட்டி மேலே போட்டுக்
பேட்டி வாங்கின

ரெண்டு ரவிக்கைச்
பெண்டாளுக்குங்
சண்டை கொஞ்சம்

சீட்டி சுற்றுத்தார்
காட்டி விட்டாரே
மூட்டி (சரச)

கீதத் திரட்டு

மணப்பெண் சொல்லுங் கேலி.

(தக்கதக்கதேக்கி சுந்தரியான்ஜா)—மெட்டு.

அத்தானுக்கு வந்தபோகம் எத்தனையடி
பொத்தானைக் குடித்துணிக்குப் பூட்டத் தெரியாத (அத்)

கழுத்துப்பட்டி யெடுத்துக் கட்டிக்கொள்ளச் சொன்னேனே
முழுத்துப்பட்டி யெடுத்து மூட்டிக்கொண்டார்
இழுத்துவாச் சொன்னேன் இந்தமணத் திண்ணைமேலே
அழுத்தி விழிச்சிறீரே ஆந்தையைப்போலே (அத்)

கேலிகட்டிப் பேசமாட்டார் வாலிங்கெல்லாம் வீசமாட்டார்
காலிகட்டி மேய்த்தார் காட்டுக்குள்
வேலிகட்டியுங் திரிந்தார் மேவுநம்ம பெண்ணுக்கு
காலிகட்டி யாச்சுதென்ற சந்தோஷம்பார் (அத்)

குலுக்கும் வயிற்றைப்பாரே தண்டோராவைப் போலே
சொண்டவிரலைப்பாரே நண்டுக் கொடுக்குப்போலே
அலுக்குங் குடுமியைப்பார் அழுகப்புல் வேரும்போலே
அலங்கார மீசையைப்பார் ஆட்டுக்கடா கொம்புபோலே
இலக்கணம்பேசி நேத்து வழுக்கி விழுந்துமுடி
மலைக்கவி ஒன்றிரண்டு முழுக்கினீரே ஓ ஓ (அத்)

(நது வாலது ருகுவானே)—என்ற மெட்டு.

கேளம்மா ஒருசேதி

நாலுநல்ல நானைசொல்ல

காழ்வாரச் சிற்றறையில் தன்னைசார் முன்னையத்தான்
சூழ்வார் சிரித்திடவே சொன்ன சொல்லுத்தான் சொல்லக்()

கொண்டாடத் தெய்வமில்லே
கோயிலில்லே யோசிக்கையில்
பெண்டாட்டித் தெய்வமேகண்
கண்டதெய்வ மென்றார் சொல்லக் (கே)

சொத்துள்ள கெத்
சோஷல் கல்
சத்யம் பேசி
ஸாமிகவி
தோஷிக்பெண்ணே
யாணம்பேசி
ஞராமுத்து
ராசிசொல்ல (கே)

(கலியாணத்தில்) மாப்பிள்ளே சோல் கேலிப்பாட்டு.

(அம்பலகடம்புரியுஞ் செம்பொன்மலர்ப்பாதனே)—மெட்டு.

கெட்டில்வாய் டிக்காஷன் காப்பி
சட்டமாய் ரவிக்கைவகை
பொட்டுவைத்துக் கோலமது
பூட்டகமாய்ப் பாட்டொன்றுமே
வேகும்போது காய்கரியின்
வேறுவேறு கூட்டுச்செயும்
ஆகும்பாட்டுச் சொல்லிவைக்க
அம்மம்மா இப்பெண்ணுலும்
வைக்கத் தெரியாது
தைக்கத் தெரியாது
போடத் தெரியாது
பாடத் தெரியாது
பாகந் தெரியாது
யூகந் தெரியாது
ராகந் தெரியாது
யோகங் கிடையாது

(சையாரே அமரகு)...பியாரலகாயி ஜான்—மெட்டு.

பல்லவி.

சொன்னலுந் தெரியாது
தோணது வெட்கமே
கல்யாணப் பெண்ணுக்கு
காணேனடக்கமே (சொ)

அநுபல்லவி.

ஜன்னல் வழியே
அன்னியர் பார்க்கிறார்
காதுதான் கேளாதோ
சூது கொஞ்சமுமில்லை
குனிந்து நடப்பதில்லை
அனந்தங் கவனிப்பாள்
சதிராட்ட மாடையில்
ஐயையோ ஜாடையில் (சொ)
கதையை விரிக்கிறாள்
சும்மா சிரிக்கிறாள் (சொ)
கூட்டத்தில் வேடிக்கை
அனைத்துந்தன் வாடிக்கை (சொ)

(ஆசீர்வாதமே)—என்ற மெட்டு.

சங்கராபரணராகம்—ஆதி தாளம்.

பல்லவி.

சம்பந்தி நீரே-நல்ல
சாது-நிகரேது-கண்டபோது நல்ல (சம்)

அநுபல்லவி.

செம்பொன்பணம் படைத்தீர்
பெண்பிள்ளைகளும் பெற்றீர்
தேடிக்கொண்டீரே மாப்பிள்ளை-அந்த
இன்பமாப்பிள்ளைக்குச் சம்பிரம வரிசைகள்
ஈந்திடவேணுங் கொள்ளை
கொள்ளை என் சள்ளை நல்ல (சம்)

தங்கள் வீட்டிலிருக்கும் இன்னித மாப்பிள்ளைக்கு
தக்க பெண்ணெனுங்களிடங் கேட்டீர்-நாங்கள்
சம்மதித்தோஞ் சீதனங் தருவதெங்கள் மனசு
சடதி வாயைத்திறந்து போட்டீர் விடமாட்டீர் நல்ல (சம்)
கண்ணைக் கொடுத்தபோல் பெண்ணைக் கொடுத்தபின்னே
காசெங்களுக்கோர் பொருட்டல்ல-நல்ல
புண்ணியசாலிக்கெங்கள் பெண்ணைகப்படுமையா
புரட்டுருட்டான திருட்டல்ல இருட்டல்ல நல்ல (சம்)
கொண்டால்கொடுப்பரோபெண் கொடுத்தாலவ்விடத்திலே
கொள்வது கூடாதென்பர் பாங்கு-பெண்
கொண்டுங் கொடுத்தும் பலர் திண்டாடுகின்றார்-அது
கூக்குரலோங்கும் பொல்லாங்கு பட்டாங்கு நல்ல (சம்)

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Miss Mathura Bai Joshi on Female Education.

மிஸ் மதுராபாய் ஜோஷி பெண் கல்வியைப் பற்றி:—பம்பாய் மாகாண ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் கூடினபோது, மிஸ் மதுராபாய் ஜோஷி பெண் கல்வியைப்பற்றி வெகு தெளிவாய் காரணங்கள் காட்டி வந்திருந்த ஸஹோதர ஸஹோதரிகள் ப்ரமையடையும்படி பேசினார். அவர் பேசின விஷயங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன:—நமது ஸமூக அபிவ்ருத்திக்கும், பிற்கால ஸந்ததியார்களின் க்ஷேமத்துக்கும், குடும்பம் ஸந்துஷ்டியாய் வளர்கிறதற்கும் பெண்களுக்கு கல்வி அத்யாவச்யம். இது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நமது ஸர்க்கார், பெண் பாடசாலைகள் ஸ்தாபித்தும்ஸ்த்ரீகளுக்குக் காலேஜ்கள் ஸ்தாபித்தும் அதன் அபிவ்ருத்திக்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துவருகிறார்கள். ஆனால், ஸர்க்கார் செல்லும் வழி தற்கால நமது பெண்களின் முன்னேற்றத்துக்கு ஒத்த தல்ல. ஸ்த்ரீகள் அநேகமாக புருஷர்களுடன் பப்ளிக் ஆபீஸ்களில் உத்தியோகம் வகிக்கப்போகிறதில்லை யாகையால் ஆண்கள் படிக்கும் படிப்பை கற்கச் செய்வது முற்றிலும் பொறுத்தமானதாகயில்லை. ஹிந்துப்பெண்கள் பிற்காலத்தில் குடும்பப் பொறுப்பை வகிக்கப்போகிறார்களாகையால் அவர்களுக்கு வேண்டிய கல்வியாகிய க்ருஹக்ருத்யம், சுகாதாரம், வைத்யம் ஸங்கீதம், தையல் முதலிய பாடங்களை வைத்து க்ரமப்படி நடத்துவது அவச்யம். இந்தமாதிரிக்கல்வி பின் வரும் ஸந்ததியாருக்கு கல்வியின் பூர்ணபலனை கொடுத்ததாகும். பெண்களின் அபிவ்ருத்தியில் அக்கரை செலுத்துகிற பரோபகார சிந்தையுள்ளவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பாடசாலைகளில் மேற்சொன்ன படிப்புகளை முறையாகக் கற்பித்தல் எவ்வளவு தூரம் ப்ரயோசனத்தைத் தரும் என்று நாம் சொல்லவேண்டியதில்லை.

பாடசாலைகளில் இந்தியப்பெண்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியானது அவர்களை நாஸ்திகர்களாகவாவது விஜாதியர்களாக

வாவது செய்யும் தன்மையாயிருக்கக்கூடாது. இக்கருத்தை வித்தையிலாகாத தலைவர்களும் ஜனப்ரதி நிதிகளும் மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டியது அவச்யம்.

Infant mortality in India.

இந்தியாவில் குழந்தை மரணம்:—இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் சுகாதாரத்தைப்பற்றி ஒரு பெரிய நீண்ட தீர்மானம் ப்ரசுரம் செய்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த தீர்மானத்தில் மலேரியா, பிளேக், கால்ரா, அம்மை, க்ஷயரோகம், குழந்தைகளின் மரணம் ஜலஸப்ளை, பால் ஸப்ளை, சுகாதாரத்துக்குறிய பல அம்சங்களை காரணம் காட்டி விளக்கி அவைகளின் சிகித்ஸைகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தீர்மானத்தில் கண்டிருக்கிற ஒவ்வொரு அம்சமும் முக்யமானாலும் முதன் முதல் குழந்தைகளின் மரணத்தைப்பற்றித் தெரிவிப்போம்.

இந்தியாவில் 1911ஆவத்தில் 44,57,551 பெண்குழந்தைகளும், 4752152 ஆண் குழந்தைகளும் பிறக்க, அவைகளில் 873677 பெண் குழந்தைகளும் 10,16,823 ஆண் குழந்தைகளும் இறந்துபோயிருக்கிறார்கள், அதாவது பிறந்து ஒரு வருஷத்துக்குள்ளாக ஐந்தில் ஒரு பங்கு மரணமடைந்திருக்கிறார்கள். இந்த மரணத்திற்கு இது தான் காரணமென்று குறிப்பிட்டுத் தீர்மானத்துககு வருவது அஸாத்யமாயிருக்கிறது என்று கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் கீழ்க்கண்டவைகள் இவ்வளவு மரணத்துக்கு ஒருவாறு காரணமாக இருக்கலாமென்று ஊஹிக்கிறார்கள். (1) விஷஜுரம் தாய் மூலமாகவும், நேராகவும் குழந்தைகளைத்தாக்குகிறது. (2) அசுத்த இடத்திலிருந்து ஈக்கள் தொத்து வியாதிகளைக் கொண்டு வருவது (3) தாய் மார்கள் அறியாமையினால் குழந்தைகளைப் போஷிக்கத்தெரியாதது. (4) பிரஸவ காலத்தில் தகுந்த சிகித்ஸை இல்லாமல் குழந்தைகள் இறப்பது. (5) பால விவாஹம் (6) தாறு மாறான பிரஸவம் ஸம்பவித்து தாய் இறந்து குழந்தைத் தாய்ப்பாலுக்குக் கஷ்டப்படுவது. கேவலம் நல்ல பால் கிடைக்காத்தினாலேயே குழந்தை மரணம் ஜாஸ்தி ஸம்பவிக்கிறதென்று சொல்வதற்கில்லை. இந்தியாவில் வைத்யம் செய்யும் ஸ்த்ரீகள் தங்களாலியன்றபடி சுகாதாரத்தைப்பற்றி இந்தியப்பெற்றோர்களுக்கு போதிக்கவேண்டும். கல்கத்தா, பம்பாய், சென்னை

257

முதலான இராஜதானிகளிலுள்ள முக்ய முனிஸிபாலிடிகளில் மருத்து வச்சிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் முக்ய வேலை வீடு வீடாய் சென்று தாய்மார்களுக்கு சுகாதார முறையைப்பற்றி போதித்து வருவது. இப்போது புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்திய ஸ்த்ரீவைத்ய ஸர்விஸ் இவ்விஷயத்தில் ஜாஸ்தியாக கவலை எடுத்து ஊக்கம் செலுத்துவார்களென்று நம்பப்படுகிறது.

கடைசியாக இந்த தீர்மானத்தில் ஸர்க்கார் பரோபகார ஜனங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கோருகிறார்கள். இந்தியாவில் சுகாதாரம் அபிவிருத்தியாகிறதற்கும் குழந்தைகளின் மரணத்தைத் தடுக்கிறதற்கும் குடும்ப ஸ்த்ரீகள் சுகாதார முறையைப் பற்றி கற்பிக்கப்படாதவரையில், ஸர்க்கார் இந்த விஷயமாக திருப்திகரமான வேலை செய்ய முடியாது.

Women Suffragettes in England.

ஸ்திரீ ஸ்வதந்தரவாதிகள் :—இவர்கள் பார்லிமெண்டில் ஸ்தான பெறவும் ராஜாங்க நிர்வாகங்களில் தக்க உத்தியோகங்கள் வகிக்கவும் பண்ணும் ஹார்பாட்டம் சொல்லிமுடியாது. நாளுக்கு நாள் வர்துகொண்டிருக்கும் தந்திகள் வரவர ஸ்திரீகள் பெரு முயற்சிகள் செய்துகொண்டு வருகிறார்களென்று தெரிவிக்கின்றன. பெரிய பிரபுக்களுக்கும் வியாபாரிகளுக்கும் பெருத்த நஷ்டங்கள் உண்டாக்கி வருகிறார்கள். தினம் போலீஸ்க்காரர்கள் கலகம் செய்யும் ஸ்திரீகளை அரெஸ்டு செய்து மாஜிஸ்ட்ரேட் முன் நிறுத்தினால், நியாய அதிகாரிகளை செறுப்பால் எறிந்து அவமானம் பண்ணுகிறார்கள். நியாய அதிகாரிகளும் லகுவாகவே அபராதம் விதித்து வருகிறார்கள். அதிகாரிகளை லக்ஷ்யம் செய்கிறது கிடையாது. மந்திரிமார்கள் மோட்டார் வண்டியில் போனால் அவர்கள் பேரில் வெடி குண்டுகளை எறிகிறதும் காகிதத்துண்டுகளை கிழித்தெரிகிறதும், கூடி நின்றுக்கொண்டு கை தட்டி பரிஹாஸம் செய்கிறதுமாக இருக்கிறார்கள். இவர்கள் செய்யும் காரியங்களைப்பார்த்து ராக்ஷஸ அவதாரங்களென்று லண்டன் பத்ரிகைகள் கூறுகின்றன. அடுத்த பத்ரிகையில் இவர்களைப்பற்றி விரிவாகத்தெரிவிப்போம்.

258

161419

SRI KALAHASTI

By

An Antiquarian.

ஸ்ரீ காளஹஸ்தி.

இந்த திவ்ய க்ஷேத்ரத்தை தக்ஷிண கைலாஸமென்று ஆரியர்கள் கூறுகிறார்கள். ப்ரஸித்த கைலாஸத்திலிருந்து லோகானுக்ரஹார்த்தமாக பரமேஸ்வரன் வாஸம் செய்ய, ஒரு சிகரத்தை ப்ரஹ்மாகொண்டுவந்து வைத்ததாக ஆரியர்கள் சொல்லுகிறார்கள். முனிச்ரேஷ்டராகிய வஸிஷ்டர் தம் புத்ரசோகத்தால் வருந்தி, பார்வதிவல்லபனைக்குறித்துத் தபம் செய்ய, சிவன் அவரின் குறையை தீர்த்தாரென்றும் சொல்லுகிறார்கள். ஆதியில் சிலந்தி, பாம்பு, யானை இந்த மூன்று ஜந்துக்களும் பகவானைக் குறித்துத் தபசு செய்ய அம் மஹாதேவன் ப்ரத்யக்ஷமாகி, என்னவேண்டுமென வினவ அவைகள் நாங்கள் மூவரும் ஒன்றாக உம் ரூபத்தை யடையவேண்டுமென்று கோரிக்கொண்டன. ஈச்வரன் வேண்டிக்கொண்டபடியே தம்முடைய ஸாயுஜ்யத்தை அனுக்ரஹித்தது தாம் சிலாமய லிங்காகாரத்தை அடைந்தாரென்று ஸ்தலபுராணம் கூறுகிறது. இப்பவும் லிங்க மூர்த்தியைப்பார்த்தால் தலையில் பஞ்சமுகங்களிருப்பதும் லிங்க மூர்த்தியைப்பார்த்தால் தலையில் பஞ்சமுகங்களிருக்கின்றன. இதை ஸர்ப்ப இராஜ பஞ்சமுகங்களென்று சொல்லுகிறார்கள். லிங்கத்தின் மத்தியில் இரண்டு வெள்ளைப்பட்டைகளிருக்கின்றன. அவை கஜராஜ தந்தங்களென்று கூறுகிறார்கள். அடியில் சிலந்திப்பூச்சியின் உருவம் காணப்படுகிறது இத்தியாதி காரணங்களால் இங்கு இருக்கும் லிங்கத்துக்கு * ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரன் என்று பெயர் வழங்குகிறது.

இதுவுமன்றி இங்கு நடந்த ஒரு கதை இருக்கிறது. பூர்வத்தில் கண்ணப்பன் என்கிற ஒரு வேடன் காடுகளிலுள்ள பட்சி மிருகாதிகளைக்கொன்று ஜீவனம் செய்துகொண்டுவந்தான். இப்படியிருக்கிறகாலில் காட்டின் ஒரு பக்கத்தில் அடர்ந்த புதரை நோக்கினவே, அங்கு ஒரு லிங்கத்தைக்கண்டான். அவனுக்கிருந்த ஜென்மாந்தர வாஸனையினால் பக்திமேலிட்டு, லிங்கத்தைத் தன் பாதரக்ஷையினால் சுத்தம் செய்து, அருகிலுள்ள ஸ்வர்ணமுகி என்ற நதி

* ஸ்ரீ=சிலந்தி, கால=பாம்பு, ஹஸ்தி=யானை.

259

யிலிருந்து தீர்த்தம் மொண்டு அபிஷேகம் செய்து தான் வேட்டை யாடிக்கொண்டுவந்த மாம்சங்களை நைவேத்யம் செய்து, லிங்கத் தைப் பூஜை செய்து வந்தான். இதில் ஒரு விசேஷமென்ன வென்றால் கொண்டுவந்த மாம்சத்தைத் தான் ருசிபார்த்தபிறகு நைவேத்யம் செய்வது வழக்கமாம். இப்படி ஐந்து நாள் கழியவே ஆறாவது நாள் லிங்கத்தின் கண் புண்ணடைந்து நீர் வடியக்கண்டு மிகவும் துயரப்பட்டான். உடனே தன் கண்களில் ஒரு கண்ணை வில்லினால், பெயர்த்து, புண்ணடைந்த கண் இருந்த இடத்தில் வைத்தான். சற்று நேரத்திற்கெல்லாம் மற்றொரு கண்ணும் புண்பட்டு இருக்க, தன்னுடைய கால் விரலினால் அடையாளமாக லிங்கத்தின் கண் பக்கம் வைத்துக்கொண்டு, தன் மற்றொரு கண் ணையும் பிடுங்கி வைக்கவே, பரமசிவன் பிரத்தியக்ஷமாகி வேடனு க்கு மோக்ஷத்தை இந்த இடத்தில் கொடுத்தாரென்று புராணம் கூறுகிறது. இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும் சிவனுக்கு வாயுலிங்க மென்றும், காஞ்சிபுரத்து சிவனுக்குப்ரித்வ் லிங்கமென் றும், திருவானைக்கோயில் சிவனுக்கு அப்புலிங்க மென்றும், திரு வண்ணாமலையானுக்கு தேஜோலிங்கமென்றும் சிதம்பரத்தானுக்கு ஆகாய லிங்க மென்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். இங்கு மஹா சிவராத்ரியன்று தரிசனம் செய்வோர் மஹா கைலாஸத்தை யடைவார்கள். சிவராத்ரியன்று இரண்டாம் ஜாமத்திற்குமேல் சிவ லிங்கமகோத்பவ காலமென்று ஐதீகம். மாசி மாதத்தில் பிரமோத் ஸவம் வெகு விமரிசையாய் நடக்கும்.

கோவிலுக்குள் ஸரஸ்வதி தீர்த்தம் என்ற ஒரு புஷ்கரணி யிருக்கிறது. லிங்கத்தின் மஹிமை எல்லாருக்கும் தெரியும். அவ ருக்கு அபிஷேகம் கிடையாது. பீடத்துக்குத்தான் அபிஷேகம். புஷ்ப கந்தாதி அர்ச்சனைகள் எல்லாம் லிங்கத்திலிருந்து கயறு கட்டிவிடப்பட்டிருக்கும் ஒரு கவசத்துக்குத்தான் செய்யப்பட்டி வருகிறது. சங்குனால்தான் லிங்கத்துக்கு அபிஷேகம். அபிஷே கம் செய்த பிறகு வஸ்த்ரத்தினால் துடைக்கிறது கிடையாது. கோவிலின் த்வஜ ஸ்தம்பத்துக்கு அருகிலிருக்கும் ஒரு வில்வ விரு க்ஷத்தின் மஹிமை மிகவும் கொண்டாடத்தக்கது. வில்வ தளம் ஸாதாரணமாக மூன்று பிரிவுகளாக இருக்கிற வழக்கம். இங்கு 9, 11, 13, பிரிவுகளாக இருக்கிறது. வில்வ விருக்ஷத்துக்குத் தெற்குமுகமாகப் போனால் அம்பிகை ஸந்நதி இருக்கிறது. அம்

260

பாளின் பெயர் ஞானப்பாள். அம்பிகை ஸந்நிதானத்துக்குப்பக் கம் விஷ்ணுகோவில் இருக்கிறது.

இந்த க்ஷேத்ரத்தைச் சுற்றியிருக்கிற மலைகளைப்பற்றியும் அதன் விசேஷங்களைப்பற்றியும் கொஞ்சம் தெரிவிக்கிறேன். இந்த க்ஷேத்ரத்தின் மதிலை யொட்டி ஸ்வர்ண முகி நதியானது ஓடுகிறது. கோவிலுக்கு வடக்குப்பக்கத்தில் ஒரு மலையிருக்கிறது. மலையின் சிகரத்தில் கண்ணப்பன் ஆலயமிருக்கிறது, இந்த விக்ரஹமும் வெகு அழகாயிருக்கும். இதற்குத் தெற்குப் பக்கத்தில் ப்ரஹ்மா ஆல யம் ஒன்றிருக்கிறது. வேறு எங்கும் ப்ரஹ்மாவுக்கு ஆலயம் கிடையாது. இது கைலாஸமாகையால் சிவனைப் போற்ற ப்ரஹ்மா விஷ்ணு இருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள்.

இந்த மலை இரண்டாக பிளக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு அருவி ஓடுகின்றது. அந்த தீர்த்தத்தை பாரத்வாஜ தீர்த்த மென்று சொல்லுகிறார்கள். இந்த இடம் பூர்வம் பரத்வாஜ மஹா ரிஷியின் ஆச்ரமமாகும். இதற்குப்பக்கத்தில் அகஸ்தீஸ்வரன் கோவிலிருக்கிறது. சற்று 100 கஜம் சென்றால் பைரவரின் கோவி லிருக்கிறது. இதற்குப் பக்கத்தில் மார்க்கண்டேயர் தீர்த்தமும் மார்க்கண்டேய லிங்கமும் இருக்கிறது. இதற்கடுத்தாப்போல் ஒரு கோபுரமிருக்கிறது. கனகமுகி என்ற நதி கோபுரத்தை யொட் டிப்போய்க்கொண்டிருக்கிறது. அங்கு பக்கத்து மலைமேல் ஆயிரம் லிங்கங்கள் இருக்கின்றன. ஆனால் லிங்கத்தின் ஆகாரம் ஒன்று தான். ஜனங்கள் இந்த ஆயிரம் லிங்கத்தை தரிசனம் பண்ணமற் போகார்கள். இந்த மலைமேல் மஹா ரிஷிகளும், தபோதிகளும் இப்பவும் வசித்து வருகிறார்கள். அப்போதப்போது புண்ய வான்களுக்கு தரிசனம் கொடுத்து வருகிறார்கள். இந்த க்ஷேத் ரத்தை மானிடராய்ப் பிறந்த பிரதி மனிதனும் தரிசனம் செய்ய வேண்டியது பெரும் புண்ணியம். நான் உலகத்தாரால் போற் றப்பட்டு தைரிய சௌகர்யத்திலும் பேர் எடுத்த மஹா உத்தம வீரன் என்று பெயரெடுத்தேன். இப்படி உயர்ந்த ஸ்திதியை அடைந்ததற்கு மூலகாரணம் என் அருமைத்தாயே:—

நேபோலியன் போனபார்ட்.

261

GRATITUDE

By

T. V. Subramaniyam.

நன்றி மறவாமை.

இப்பூவுலகின்கண் தோன்றிய மாந்தர் அனைவர்க்கும் நன்றி மறவாமை இன்றியமையாதது. ஒருவர் நமக்கு அணுவளவாய் ஓர் உபகாரஞ் செய்திருந்தாலுங் கூட அதை நாம் மலையளவாகக் கொண்டு நம்மால் பனையளவு செய்ய முடியாது போனாலும் தினையளவு சிந்தனையினாலாவது, செயல்களாலாவது பக்தி வினயத்துடன் மறவாது செய்யுந்தன்மைக்குத்தான் நன்றிமறவாமை எனப்படும். இதற்குத்தான் "நன்றிமறவேல்" என ஔவையாரும் அருளியிருக்கின்றனர். நன்றி காலத்தால் செய்யும் நன்றி; பிரதி உபகாரம் நோக்கிப்புரியும் உதவி; பிறர் உதவி எதிர்பாராது செய்யும் பேருபகாரம்; எனப்பலவகைகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

நாம் பிறர் செய்த நன்றியைக்கனவிலும் மறவாது எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பதுடன், சில துர்போதனை, துர்சகவாசம் முதலியவைகளால் நேரிடும் நன்றியல்லாத விஷயங்களை உடன் காலத்தில் மறந்துவிடுவது மேன்மையாகும். இதற்குத்தான் "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என தெய்வப்புலமைவாய்ந்த நாயனாரும் வரைந்துளார். நாம் கூறிய விஷயமாகிய நன்றியை மறவாதிருந்தால் நம்மிடம் எல்லோரும் அன்பு, விசுவாசம், சிநேகம் முதலியன வைத்து நமக்கு ஏதாவது ஒரு காலத்தில் தற்செயலாய் நேர்ந்த ஆபத்துகளைப் பகலவனைக்கண்ட பனிபோல் அகற்றி விடுவிப்பார்கள்.

நம்மை நல்வழிப்படுத்த பற்பல பரிசிரமங்கள் எடுத்துக்கொண்டு, நாம் புத்திசாலிகளாய், புவிதலத்தில் புகழ்பெற்று விளங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பிரயத்தனஞ் செய்து கற்பித்து வரும் குருவையும், அன்புடன் எப்படி பறப்பன ஊர்வன முதலிய ஜந்துக்கள் முறையே தனது குஞ்சு குட்டிகளுக்கு இறையளித்துப் பால்கொடுத்துப் பரிபாலிக்கின்றனவோ, அப்படியே உயிர் திணையில் அவதரித்த மாந்தர்களாகிய நாம் பிறந்தது முதல் விபரம் தெரியும் வரை பாலோடு புகட்டி இனிய வசனத்துடன்,

நன்மொழி கூறி, நம்மை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சீருடன் பேணி வளர்த்து அன்புடன் ஆதரித்துவரும் அன்னையையும், உண்டி, உடை முதலியவைகளுக்கு உறக்கமின்றி கண்ணுங் கருத்தும் களைப்புற்று ஓடியாடித் திரவியம் ஸம்பாதித்து நம்மைச்செல்வமாய் நினைத்து நமக்கு எவ்வித இடையூறுகளும் அணுகாவண்ணம் பாதுகாத்து, நேர்ந்தவைகளுக்கு இதமே செய்து இன் சொல்லேகூறித் தளர்த்திவருந் தந்தையையும், நமக்கு எந்த வேளையிலும் ஸகாயஞ் செய்கின்ற ஸகோதரர்களையும், "உப்பிட்டவர்களை உயிருள்ளளவும் நினை," என்றபடி நமக்கு ஒருவேளையாவது அன்னபானாதிகள் அளித்து பசி, தாகம் முதலியகளைப்பைத்தேற்றினவர்களையும், இவை தவிர அன்புள்ள நண்பர்களையும், நன்றி செய்தவர்களையும் ஒரு பொழுதும் மறவாது நாம் நகமும் சதையும் போல் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றும், நாம் இந்நானிலத்தில் நல்லாரெனப் பெயர்பெற்று நற்பெயரை நிலைநாட்டவேண்டுமென்றும், நாம் இதரமாந்தர்களுக் குபகாரிகளாயிருக்கவேண்டுமென்றும் எண்ணி நம்மை சிருஷ்டித்து, நன்றியை மறவாமல் ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக மனதையும் பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவுவதற்கு நாவையும், இதர நற்செய்கைகளுக்கு மற்ற புலன்களையும் தந்து, கண்ணை இமைகாக்கின்ற வண்ணம் இரவும் பகலும் பாதுகாத்து இரட்சிக்கின்ற ஒப்புவமையற்ற அழிவிலாப்பொருளாய் விளங்கானிற்கும் சச்சிதாநந்த மூர்த்தியாகிய கடவுளின் ஆணையைக்கடவாதிருப்பது அவருக்கு நன்றியாதலால் அவரையும் மறக்காமல் நினைவிலிருத்திக்கொண்டிருக்க நாம் கடைமைப்பட்டிருக்கிறோம் அல்லவா! ஓர் வனாதிபதியாகிய சிங்கத்தின் காலில் தைத்திருந்த முள்ளை எடுத்து அதன் வினையை நீக்கின ஆந்த்ரோகிள்ஸ் என்ற அவன் அத்தேயத்து மன்னனின் ஆணையால் அதே சிங்கமானது பிடித்தடைக்கப்பட்ட கூண்டில் அடைக்கப்பட்டபோதிலும் கூட, அச்சிங்கம் "தன் வினை தீர்த்த உபகாரி" என்றெண்ணி அவனை நாய் போல் நக்கி நன்றிபாராட்டின தென்றால் ஆறறிவுள்ள மானுட பிறப்பிற்றோன்றிய மாந்தர்களாகிய நாம் நன்றிமறவாதிருப்பது ஓர் ஆச்சரியமாகுமா!

அப்பால் நாம் எந்த சுவையுள்ள நீரை ஊற்றி வளர விட்டபோதிலும் கூட, நாம் பட்ட பரிசிரமத்திற்கு பதிலாய் ஓர் தெங்கு

நமக்கு அதிமதுரமான இள நீரைத்தந்து தான் நன்றிமறவாதிருப்பதை நமக்குணர்த்துகிற தென்றால் நாம் பிறருக்குச் செய்த உபகாரத்தை எதிர்பார்ப்பது பேதமையன்றோ? மேலும் அஃறிணையிற்றோன்றியமிருகம், மரம் முதலியவை உயர் திணையிலுதித்த நமக்கு நன்றிகாட்டுகிற தென்றால் மற்றவைகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ.

இதை நாம் செய் நன்றியென்று சொல்லுதல் பொருந்துமல்லவா! உலக வழக்கில் நாம் நன்றிகொன்றவனை "நன்றி கெட்ட பன்றியே" என்று கூப்பிடக்கேட்டிருக்கிறோம் அன்றோ? இதனால் நன்றியை மறந்தவன் பன்றிக்கும் கேவலமாக மதிக்கப்படுகிறான் என்பதும் தெரியவருகின்றதல்லவா? கடைசியாய் நன்றி யறிதல் என்பது நற்பழக்கத்தால் உண்டாகும் வித்து. அதை மாந்தர்களிடம் விதைத்தால் நற்பயனை விளைவித்து நம்மை இரட்சிக்கும் குணங்களில் ஒன்று என்பதற்கத்தாட்சி வேறொன்றும் வேண்டுவதில்லை. மேற் கூறியவைகளைத்தானே நன்காராய்ந்த மாத்திரத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோன்றும்.

நாம் இத்தலத்தில் பிறந்து வளர்ந்திருப்பதாலும் நாம் இத்தேயத்தில் இருப்பதற்கு இடமளிக்கப்பெற்று பத்திரமாய் பாதுகாக்கப்பட்டிருப்பதாலும், நாம் ஜீவனோபாயத்திற்குறிய சாதனங்கள் அடைந்திருப்பதினாலும் நம்மில் ஒவ்வொருவருக்கும் தேசாபிமானமும், இராஜாபிமானமும், பாஷாபிமானமும் உண்டாகும். எப்படியெனில் நாம் பிறந்தது இந்து தேசமென்பதால் தேசாபிமானமும், நாம் வசிப்பது மண்டலேஸ்வரராகிய, ஆங்கலேயர் ஆதீனத்துக்குட்பட்ட நாடென்பதால் இராஜாபிமானமும், நாம் முதல் முதல் உச்சரித்த பாஷை தமிழ் என்பதால் பாஷாபிமானமும் இருத்தல் வேண்டுமென்பது தெளிவாகும். ஆகையால் அபிமான கர்த்தர்களாகிய நாம் நன்றியை மறவாதிருக்கக் கட்டுப்பட்டிருக்கிறோம் இத்தகைய நன்றியை மறந்தால் நம்மையே நாம் மறந்தவராகிறோம். எப்பொழுது ஒருவர் தம்மைத்தாமே மறந்தாரோ அப்பொழுது அன்னவர்க்குப் பற்றுதல் என்பதே கிடையாது அதனால் நன்று எத்தன்மைத்ததென்பதுந் தோன்றாது.

இறுதியில் நன்றி யொன்றைச் சிந்தியாத துரோகிகளுக்கு எழுபிறப்பிலும் உய்வதற்கு உயர் பதவிகிடையாது.

நாம் நன்றியை மறவாது நன்மைக்கடைப் பிடித்து ஒழுகிவருவோமாயின் எல்லோருடைய நட்பும், நம்பிக்கையும், நற்சகவாசமும், விசுவாசமும், நல்லொழுக்கமும் உடன் தோன்றும் அதனால் நாமும் நற்பெயற்றைப்பெற்று நலமுடன் வாழலாம். நம்மையும் நானிலத்தார்கள் நன்கு மதிப்பார்கள் அன்றேல் நாம் புகழ் இன்றி இகழ் பெற்றுய்வதுடன் நமக்கு துன்பங்களும் பல ஸம்பவிக்கும். நம்மனமும் ஸந்தோஷமடையாது. நம்மை ஒருவரும் மதியார்கள் ஆதலால் நாம் நன்றியைப்பாராட்டி நன்மையைப் பெற வேண்டுமென்பது இச்சிறுவியாஸத்தால் தெரியவருவதுடன் இது நாம் அவசியம் அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்களில் ஒன்று என்பதும் விளங்கலாகும்.

திருகோகர்னம்
புதுக்கோட்டை

டி. வி. சுப்பிரமணியன்.

ECONOMIC CONDITION OF WOMEN AND HER IDEALS

By

Sri. Sundarammal.

ஸ்த்ரீகளின் குடும்ப நிலைமையும், அவர்களின் நோக்கங்களும்.

மேல் நாட்டு ஸ்த்ரீகளெல்லாம் கிருஹ கிருத்யங்களைத் தள்ளி வேறு ஏதேதோ வேலைகள் செய்கிறார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை தாதிமார்களிடம் ஒப்புவித்துவிடுகிறார்கள். அவர்கள் இந்த வேலைகளெல்லாம் செய்தால் கௌரதைக்குறை வென்றெண்ணுகிறார்கள். அதனால் அனேக கெடுதிகள் உற்பவிக்கின்றன. லண்டன் பத்ரிகைகள் அவ்விடத்துஸ்த்ரீகள் தங்கள் கிருஹ கிருத்யங்களை சரிவர செய்வதில்லை யென்றும் அதனால் அனேக கெடுதிகள் சம்பவிக்கின்றன வென்றும், பெண்கள் புருஷர்களுக்கடங்கியிருப்பதால் பெற்றோர்களாவது புருஷர்களாவது கண்டிக்க வேண்டுமென்று முறையிடுகின்றன. அதற்கு காரணமாக லண்டன் வித்தை இலாகாதலைவர் 45 பெண்களுக்கு தர்மமாக குடும்பத்திற்கேற்ற பாடங்களை சொல்லிக்கொடுத்தும் தர்மத்திற்கு சாப்பாடு

போட்டும் ஏதோ வெகு மதிகள் கொடுத்தும் இப்பொழுது 24 பெண்கள் தானிருக்கிறார்கள். இத்தேசத்திலும் மேல் நாட்டு நாகரீகத்தை உத்தேசித்து ஸ்த்ரீகள் குடும்பத்தை சரிவர கவனிக்காமல் மற்றுமுள்ள வேலைகளையும் செய்யாமல் இந்துஸ்த்ரீகளேனேகர் விழிக்கிறார்கள். ஆகையால் நமது தேச ஸ்த்ரீகள் மேல் நாட்டாரைப்போல் நடந்தால் மிகவும் கெடுதிக்குவருவார்கள். ஆகையால் இத்தேசத்தின் ஸ்த்ரீகளின் நோக்கமானது மேல் நாட்டாரைப்போலிருந்தால் அவர்களைத்திருப்தி கிருஹதர்மங்களை சரிவர நடத்தும்படி செய்யவேண்டும். இப்பூவுலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை நியமிக்கப்பட்டிருப்பதாலும் அதில் ஸ்த்ரீகளுக்கு கிருஹகிருத்யங்களை சரிவரநடத்தும்வேலையிருப்பதாலும் அவகாசத்தை சரிவர நடத்தாவிட்டால் கிருஹம் சீர் குலைந்து போவதாலும், ஸ்த்ரீகள் சிறுவயதிலேயே பள்ளிக்கூடத்தில் படித்தால் உபாத்யாயினியும் வீட்டிலிருந்தால் பெற்றோர்களும் பெண்களுக்கு பிற்காலத்தில் கிருஹகிருத்யங்களை எப்படி செய்வதென்று சொல்லிக்கொடுத்து அவர்கள் மனதில் பதியும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் பிற்காலத்தில் கிருஹ கிருத்யங்களை சரிவர நடத்தக்கூடியவர்களாயிருப்பார்கள். ஆகையால் நமது தேசத்திலிருக்கும் பெண் பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்கும் படிப்பில் விசேஷமாய் கிருஹ கிருத்யங்களுக்குரிய பாடங்களை கற்றுக்கொடுத்தால் நமது தேச ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் மிகவு நல்லதாகவிருக்கும்.

ஸ்ரீ சுந்தரம்மாள்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

கருத்து:—அன்பால் தன்னைத் தியானிப்பவரது இருதய கமலத்தில் அவரவர் நினைத்த வடிவத்தோடு சென்று வீற்றிருப்பார் கடவுள்; அத்தகைய கடவுளது பாதாரவிந்தத்தைத் தியானஞ்செய்பவர் முக்தி பெறுவர்.

* * * *

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

குறிப்பு:—மழை பெய்யாதாயின் இப்பேருலகில் பஞ்சம் உண்டாகும். அக்காலத்தில் மனிதர் தானங்களே பலியால் வாடும்பொழுது தேவர்க்கு எவ்வாறு பூசை முதலியன நடத்தக்கூடும்.

266

HISTORY, BIOGRAPHY

சரித்ரம், ஜீவ்ய சரித்ரம்

MANDODHARI.

By

The Editor.

மண்டோதரி.

இராக்ஷஸ ஸில்பாசாரியனுகிய மயனுடைய ஸாமர்த்ய ஸுகுணங்களைப் புகழ்ந்து தேவர்கள் ஹேம என்னும் அப்ஸர ஸ்த்ரீரத்னத்தை மயனுக்கு விவாஹம் செய்வித்தார்கள். மயனும்ஹேமையும் அத்யந்த ப்ரியர்களாய் வெகு காலம் ஸுகமாக வாழ்ந்தனர். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. மாயாவி, துந்துபி எனும் இருபுத்ரர்களும் மண்டோதரி எனும் ஒரு புத்ரியும் காளராருமேமனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு வந்தார்கள். கொஞ்ச காலத்துக்குப்பிறகு தேவர்களின் ஆக்ஞையின்படி ஹேம ஸ்வர்க்கலோகம் சென்றனள். மயன்மட்டும் தன் வாழ்க்கையை குழந்தைகளுடன் ஸுகமாக காலம் கழித்து வந்தான். இரு புத்ரர்களும் மஹாஸாமர்த்யசாலிகள். மண்டோதரி ஈடில்லாத அழகுடையவள். தாயைப்போல ஸுசீலி தீர்க்க புத்தியுடையவள். வெகுசாந்தமுடையவள். இவளின் இடை வெகு சிறியதாயும் அழகுள்ள தாயுமிருந்ததினுல் மண்டோதரி என்ற நாமம் கிடைத்தது. மூன்று குழந்தைகளும் யௌவனதசையை அடைந்தது. மயன் இருபுத்ரர்களையும் புத்ரியையும் விட்டு, ப்ரபஞ்ச ஸுகத்தைத் துறந்து தபம்செய்ய உத்தேசித்தான். ஆயினும் தன் புத்ரிக்கு விவாஹமாகாத வரையில் தான் செய்யப்போகும் தபம் நிஸ்பலமாயிராதென்று எண்ணி, மயன் மண்டோதரிக்கு வரனைத்தேட புத்ரியைக் கூட்டிக்கொண்டு யாத்ரை புறப்பட்டான்.

மண்டோதரியின் விவாஹம்.

ப்ரஹ்ம குலத்தில் உதித்த ஸ்ரீ இராவணன் பூலோகத்திலிருந்த அரசர்களையும் ஜெயித்து தேவர்களையும் தோர்க்கடித்து தமமுடைய பராக்ரமத்தை ஜெகத்தில் ஸ்தாபித்தார். இப்பேர்ப்பட்ட தசா

267

னன் ஒரு நாள் அடர்ந்தகாட்டில் வேட்டையாடி திரும்பும் ஸமயத்தில், தம் பார்வைக்குக் கொஞ்சதூரத்தில் அக்காட்டின் ஒத்தையடிப்பாதை வழியாய் வந்துகொண்டிருந்த இரண்டு மனிதர்களின் உருவங்கள் தென்பட்டன. இப்படி இராவணனுக்குக்காணப்பட்ட உருவங்கள் மயனும் மண்டோதரியுமே. நீலமேகம் போன்ற மண்டோதரியின் தலைமயிரும், அல்லி இதழ்போன்ற இருகண்களும், பவழம்போன்ற உதடும், சந்திர பிம்பம் போன்ற முகத்தையும் பார்த்த மாத்ரத்தில் இராவணன் பரவசமடைந்தார். அவளுடைய அழகைப் பற்றியும் அவயவங்களைப் பற்றியும் செவ்வனே வர்ணித்து மண்டோதரியின் லாவண்யத்தில் ஈடுபட்ட இந்த சுத்தவீரன், எப்படியாவது அந்த ஸ்த்ரீரத்னத்தை விவாஹம் செய்தாலொழிய தம் ஜென்மம் ஸார்த்தகமாகா தென்று தீர்மானித்து, அவர்களுடைய விருத்தாந்தங்களை தெரிவிக்கும்படி மயனை வெகு ஆத்திரத்துடன் கேட்டார். மயன் தன்னுடையவரலாறுகளை விசதமாய்த்தெரிவிக்கவே, இராவணன் தாம் ப்ரஹ்மசாரியென்றும் குணரூபவதியுமாகிய மண்டோதரியை விவாஹம் செய்யக்கோருகிறேனென்றும் சொன்னபோது, மயன் அதிக ஆனந்தத்துடன் ஸம்மதித்தான். அந்த இடத்திலேயே இராவணன் மண்டோதரியை விவாஹம் செய்து கொண்டான்.

மண்டோதரியின் பாக்ய தசை.

தாயைப்போல அதி ரூபலாவண்யமுடையவளாயும் தகப்பனைப்போல புத்திவிசேஷங்களும் நீதி ஸம்பத்தும் பொருந்தினவளாயுமிருந்தனள். இப்பேர்ப்பட்ட ஸுசீலி பராக்ரமச்ரேஷ்டராகிய இராவணனை கை பிடித்தது அவளுடைய பாக்யத்தைப்பற்றி என்னவென்று சொல்லலாம். அதிருஷ்ட தம்பதிகளிருவர்களுக்கும் மேதனாதன் என்ற செல்வ குமாரன் உத்பவித்தான். தகப்பனைப் போன்ற தைர்ய சௌர்யமுடையவனாய், இந்திராதி தேவர்களை ஜெயித்து, இந்திரஜித் என்ற பட்டத்தையும் பெற்றான். மிகுந்த ரம்யமான விருட்சாதிகளுடனும், அழகான மாளிகைகளுடனும் கணக்கற்ற தன தான்ய ராஸிகளுடனும் ப்ரகாசிக்கும் லங்காதிபத்துக்குப் பட்டத்துராணியாய் மண்டோதரி சௌக்கியத்தில் ஊஞ்சலாடிக்கொண்டு மங்களகரமாய் வாழ்ந்துவந்தனள். இராவணன் இவளுடைய புத்திகோசரத்தையும் அழகையும் குணத்தையும்

கண்டு வியந்து, இவள் தம் இராஜ்ய நிர்வாகத்தில் ஸமயத்துக்குத் தக்கபடி சொல்லும் யோசனைகளையும் ஹிதங்களையும் ஸாவதானமாகக் காதுகொடுத்துக்கேட்டு அவைகளின்படி நடக்க ப்ரயத்தனப்படுவார். ஸ்தாஸார்வகாலம் பதியின் ஸுகதுக்கங்களை தான் பங்கிட்டுக்கொண்டு அவரின் க்ஷேமத்தைப்பற்றி பகவானை த்யானம் செய்து கொண்டிருப்பாள்.

இராவணன் மண்டோதரியின் தாரதம்யங்கள்:

ஒருவனுக்கு புஜபல பராக்ரம மட்டும் இருந்தால் அவன் பௌருஷனாக ஆகமாட்டான். நீதி சௌர்ய பௌருஷமும் வேண்டும். அப்போது தான் புருஷன் என்ற பெயருக்குத்தகுந்தவன். யத்தகளத்தில் ஆயுதங்களை கண்டமாத்ரத்தில் பயங்காளி ஓடுகிறது போல இராவணன் நீதி வான்களைக் கண்டால் விலகிவிடுவார், தயை தாக்ஷண்ய முதலிய குணங்கள் இவரிடம் அவ்வளவாக ஜாஸ்தி காண முடியாது.

மண்டோதரி அப்படியல்ல. எந்த விஷயத்திலும் உத்தமி. ஸ்த்ரீகளுக்கு சௌந்தர்யம் மட்டும் போதாது. உத்தமிகளுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அவச்யம். ஆணாகட்டும் ஸ்த்ரீயாகட்டும், நீதியுடையவர்களே உத்தமர்கள். மண்டோதரி தன்பதியைப் போலல்லாமல் ஸகல குணத்திலும் மேன்மை பொருந்தியவள். தன் பர்த்தாவின் புஜபலபராக்ரமத்தைக்கண்டு ஸந்தோஷமாயிருந்தாலும் நீதி ஒழுக்கத்தைக்கண்டு விசனித்துக்கொண்டிருப்பாள் தான் ஒரு விதத்திலும் அதிருப்தியாயிருப்பதாக பதியினிடம் காண்பியாள். பரிசுத்தமான பதிபக்தியுடையவள். மெள்ள மெள்ள தன்பர்த்தாவின் துர்க்குணங்களை நீக்கவேண்டுமென்று ப்ரயத்தனம் செய்து கொண்டிருப்பாள். வயது வந்தவர்களின் கெட்ட குணத்தைத் திருப்புவது எவ்வளவு கஷ்டமென்று அனுபவ சாலிகளுக்குத்தெரியும். இராவணனுடைய துர்க்குணங்களை நீக்கமுடியாமல் சோகமடைந்தாள். ப்ரஹ்லாதன் தன்பிதா ஹிரண்யகசிபுக்கு உபதேசம் செய்ததுபோல் மண்டோதரி தன் பர்த்தாவாகிய தசானனை நோக்கி "ஏராக்ஷஸ ராஜேந்திரா! நீர் அகண்ட பூமண்டலத்தை ஒரு நொடியில் ஜெயித்தீர். இந்திரியங்களை நிக்ரஹம் செய்து மஹாகோரதபம் செய்தீர். மஹாச்ரேஷ்ட புருஷனாயிருக்கப்

பட்ட நீர் இப்போது உமக்கு சத்ருக்கள் இல்லையென்று நினைக்கி றீர். உமக்கு காம, க்ரோத, லோப, மோஹ, மதம், மாற்சர்யம் என்ற ஆறு பெரிய அழிபாஸத்ருக்கள் இருக்கின்றன. இந்த ஸத்ருக் களை ஜெயித்தால் பூமண்டலத்தில் ஸத்ருக்களே கிடையாது. ஏ நாதா! அடியாள் சொல்லும் வார்த்தைகளை கவனமாய் எடுக்கக் கோருகிறேன்" எனறு போதித்தாள். வரும்.

BARRENNESS OF WOMEN

By

Sri Parvathi Ammal.

ஸ்த்ரீகளின் மலட்டுத்தனம்.

இவ்விஷயம் நமது ஸஹோதரி ஸ்ரீமதி பார்வதி அம்மாளால் தஞ்சாவூரிலிருந்து நமக்கு ஸ்பெஷலாக அனுப்பப்பட்டது. இதில் தம் சொந்த அனுபவத்தை தமது ஸஹோதரிகளின் பொருட்டு எழுதியிருக்கிறது மிகவும் புகழத்தக்கது. ப. ர்.

நம் ஜனங்கள் ஸ்த்ரீகளில் சிலர் குழந்தை பிறவாமலே இருந் துவிட்டால் அவர்களை பெண்மலடு என்று கூறுகிறார்கள். நன் றாய் யோஜித்துத் தீர்மானத்துக்குவரும்போது குழந்தைபிறவாமலி ருக்கிற ஸ்த்ரீகளை பெண்மலடு என்று கூப்பிடுவது சரியல்ல. ஸ்த்ரீ களில் பெரும்பான்மையோர் ஸம்ஸாரத்திலிருந்து குழந்தைகளைப் பெற்று ஸுகமாகக் காலம்கழித்து வருகிறார்கள். ஸ்த்ரீகளில் சிலர் குழந்தை பிறவாமலேயிருக்கிறார்கள். இப்படியிருக்கக்காரணம் என்ன? அவர்களைப்பிடிக்கும் வியாதிகளைத்தவிர வேறு கிடை யாது. ருதுசாந்தி கல்யாணம் முடிந்து இரண்டு வருஷத்துக்குள் பெண் கர்ப்பவதியாகாமலிருந்தால் நாயார் பயம் ...ன்பம் சொல்லி முடியாது புக்ககத்தில் செல்ல காட்டுப்பெண்ணாகயிருந்து, இந்தப் பெண்ணின் புருஷன் அந்த வீட்டுக்கு ஒரே பிள்ளையாயிருந்தால் அப்பெண்ணின்மாமியாரும் அசல் வீட்டு ஸ்த்ரீகளும் ஓரேபன தாய் வங்கி, பெண்ணை ப்ரார்த்தனை எடுத்துக்கொள்ளும்படி தூண் டுகிறார்கள். பெண் கர்ப்பவதியாகாமலே 1 அல்லது 5 வருஷம் தப்பினால் 10 வருஷகாலம் பிறவாமலிருந்து விட்டால் மாமி

யாருக்கு வேறு யோசனைத் தோன்றிவிடுகிறது. இந்த குடும் பத்துக்கு புத்ர ஸந்தான மில்லாமலிருக்கிறது. தன் ஒரே பிள்ளை க்கு வேறு கல்யாணம் செய்யவேண்டுமென்று யோஜித்து வேறு கல்யாணம் செய்துவைக்கிறாள். மூத்தாள் ஆயிரமிருந்தாலும் இளை யாளோடு சண்டைபோடாமலிராள். ஆக இருவர்களுக்கும் ஒத்து மைகிடையாது. புருஷன் கொஞ்சம் காலம் பார்த்துவிட்டு இரண் டாவது மனைவிக்கும் பிள்ளை இல்லையென்று நினைத்து, மூன்றாவது விவாஹம் செய்து கொள்ளுகிறான். இப்படியாக நம் தென் ஜில்லா க்களில் அநேகர் பிள்ளை இல்லையென்று மூத்தாளிருக்கும்போது இரண்டு பெண்சாதி அல்லது மூன்று பெண்சாதியுடன் வஸிக்கிறார் கள். கர்நாடக இராஜாக்கள் மாதிரி அநேக பத்னிகளை வரித்து விடுகிறார்கள். பெண்கள் அவரவர்கள் தங்கள் தலை விதி யென்று நம்பி ப்ரதிதினம் கண்ணும் கண்ணீருமாய் எல்லா ஸுக த்தையும் மிழந்து வீட்டில் எப்போதும் சண்டை ஸச்சரவுகளுக்குக் காரணமாயிருக்கிறார்கள். இந்த ஸமயத்தில் விதாப்பியரான புருஷன் இறந்து விட்டால் எல்லாரும் விதவைகளாகி வருத்த முறுகிறார்கள் விதவைகள் இந்தியாவில் ஜாஸ்தியாகிறதற்குக் காரணம் இதுவும் ஒன்று என்று சொல்லலாம். நிற்க, இப்படியாக ஸ்த்ரீகள் குழந்தை பிறவாமலிருந்தால் அதற்குக்காரணத்தை யோசிக்கவேண்டும். மலட்டுத்தன்மைக்கு வியாதி காரணமென்று சொன்னினல்லவா? அதை என் ஸொந்த அனுபவத்திலிருந்து ருசுப்பிக்க ஆரம்பிக்கிறேன். நான் என் புருஷனுக்கு இளையாள். எனக்குக் கல்யாணமாகி 15 வருஷங்களாயின. மூத்தாளும் நானும் சேர்ந்துதான் வாழ்ந்துகொண்டு வருகிறோம். நான் புக்ககத்துக்கு வந்தது முதல் பெண்பிள்ளைக்குரிய வியாதிகளால் அவஸ்தைப் பட்டேன். மயக்கம் வந்து கொண்டிருந்தது. வயிற்றுவலி சொல்லி முடியாது. பஹிஷ்டைகாலத்தில் வெகுகஷ்டப்படுவேன். என் வியாதியைப்போக்கடிக்க அநேக வைத்தியர்களிடம் மருந்து சாப் பிட்டேன். ஆனால் உடம்பு மாத்ரம் பெருத்துக்கொண்டு வந்தது இதற்கு மிகவும் பயப்பட்டேன். ஒன்றும் ப்ரயோஜனமில்லாமலி ருந்தது. இதற்குள் என் புருஷர் மூன்றாவதுமனைவியை விவாஹம் செய்து கொள்ளப்போகிறார் என்று எனக்குத் தெரியவந்தது. அவர் நானும் மலடி யென்று எண்ணினார். இப்படி இருக்கும் போது என் தமயனார் ஒரு டாக்டரை அழைத்து வந்தார். என்

புருஷரிடம் கடைசியாக இந்த வைத்யரின் மருந்தையும் பார்த்து விட்டு பிறகு வேண்டுமானால் மூன்றுவது விவாஹம் செய்துகொள்ளலாமென்று சொல்லவே, என் புருஷர் தமது பாதி ஸம்மதத்தைத் தெரிவித்தார். அந்த டாக்டரின் மருந்தை 45 நாள் ஸாப்பிடவே மயக்கம் போய் விட்டது. திடசரீரியானேன். பிறகு 3 மாதம்கழித்து கர்ப்பவதியாகி இப்பொழுது ஒருபிள்ளைக்குத் தாயாராயிருக்கிறேன். என்னைப்பார்த்து விட்டு என் மூத்தாளும் வேண்டிய மருந்தை அந்த வைத்யரிடம் ஸாப்பிட்டு கல்ல தேகமாகி அவளும் கர்ப்பவதியாகி ஒரு பெண்ணை பெற்றெடுத்தாள். பாருங்கள்! 15 வருஷ மலட்டுத்தனமும், 20 வருஷ மலட்டுத்தனமும் தகுந்தபடி சிகித்ஸையால் போய்விட்டது மேலும் அநேக வருஷ காலமாக குழந்தை பிறவாமலிருந்த ஸ்தரீகள் கூட இப்போது குழந்தைக்குத் தாயாராயிருக்கிறார்கள்.

பெண்கள் வியாதியினால் துன்பப்படும்போதே தகுந்த வைத்யரிடம் காண்பித்து சிகித்ஸை செய்யவேண்டும். வியாதியை வளர விடக்கூடாது. உடன் கவனித்தல் நலம். நம் ஸஹோதரிகளின் பொருட்டு எனக்கு மருந்து கொடுத்த வைத்யர் பெயரையும் தெரிவிக்கிறேன். டாக்டர் ஜகதீஸ்வாய்யர் அவர்கள், மூத்தியாலுப்பேட்டை, சென்னப்பட்டணம். வியாதியால் வருந்தும் ஸஹோதரிகள் இனியாவது தக்க மருந்து சாப்பிட்டு சௌக்யப்படுத்திக்கொள்ளவும். இது என் ஸஹோதரிகளின் பொருட்டு எழுதப்பட்டதேயன்றி வேறல்ல.

தஞ்சாவூர்,
26—4—14.

பார்வதி அம்மாள்.

மஹத்தானவர்கள் அதாவது எவர்கள் ஜனங்களுக்காக தம் கஷ்ட சுகங்களைப் பாராமல் பெருநன்மையைச் செய்து வரும்போது அற்ப கஷ்டங்கள் அனுபவித்தாலும் ஜனங்கள் மனதில் அவைகள் பதிகின்றன. மேலும் அவரை ஒருநாளும் மறக்கமுடியாது.

ஹோமரீ.

* * * *

பெண்ணுக்கு வயதானவுடன் புருஷன்வீடு சேருவது கலம். ஆனால் தகப்பனின் வாழ்நாளைக்குக் கெடுதலாயிருந்தாலும் பெண் தகப்பன் வீட்டில் வெகுநாள் இருத்தல் கூடாது.

யூனைடிஸ்.

TUBERCULOSIS

By

A Lady Medical Student.

காசரோகம் அல்லது எலும்புருக்கி வ்யாதி உண்டாகும் விதம்.

காசரோகமானது ஸாதாரணமாய் மனிதர்களுக்கும் கொம்புள்ள ப்ராணிகளுக்கும் வரக்கூடிய ஓர் கொடூரமான தொத்து வியாதி. இது ஜன நெருக்கமுள்ள பெரிய பட்டணங்களில்தான் விசேஷமாய் உண்டாகின்றது. இந்த வியாதியுள்ளவர்களிடமிருந்து உண்டாகும் ஓர்வித கண்களுக்குப் புலப்படாத அதிஸூக்ஷ்மமான விதத்தன்மையுள்ள பூச்சிகளை மற்றவர்கள், சுவாசத்தோடாவது உண்ணும் உணவோடாவது உட்கொள்வதினால், வெளியில்ஜாஸ்தியாகப்ப்ரவுகிறது. இந்த விஷப்பூச்சிகளை எவ்வளவுக்கெவ்வளவு ஜாஸ்தியாக உட்கொள்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு வியாதியும் பலப்படுகின்றது. இந்த வியாதியானது சொர்ப்பகாலத்தில் உடம்பிலுள்ள இரத்தத்தை யெல்லாம் அசுத்தப்படுத்தி தேகத்தில் நல்ல இரத்த வோட்டமில்லாமல் செய்துவிடுகிறது. இதனால் அவயவங்கள் நாளுக்கு நாள் பலஹீனமடைகின்றன. ஆகாராதிகள் தேவையில்லாமல் வெறுப்புண்டாகின்றது. பிறகு கொஞ்சகாலில் இறக்கும்படி நேரிடுகிறது.

முக்யமாக இவ்வியாதிகள், சுவாச கருவிகளையும், ஈரல் குலைகளையும்தான், பற்றினதாயிருக்கின்றன. இந்த வியாதியானது அநேக நாளாக யாதொருவித்தமான வைத்திய சிகிச்சைகளுக்கும் உட்படாமல் அநேக சிறுவர், சிறுமிகளுடையவும், செல்வவான்கள முதல் தரித்திரர்கள் உள்பட ஏராளமான ஜனங்களின் ப்ராணனை வதைத்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொடிய வியாதியை தொலைக்க, ரசாயன சாஸ்த்ரிகள் முயற்சி யெடுத்துவருகிறார்கள்.

இவ்வியாதியானது ஒருவனிடத்தில் எவ்வளவு காலத்திற்கு தீடித்திருக்கிறதோ அவ்வளவுக்கு இந்த வியாதிக்கு மூலகாரணமாயுள்ள அதிஸூக்ஷ்மமான பூச்சிகள் சுவாசக்கருவிகளிலும் ஈரல் குலைகளிலும் ஜாஸ்தியாக உண்டாகின்றன. மேற்படி வியாதியஸ்தனின் ஒவ்வொரு இருமலிலிருந்தும் ஆயிரக்கணக்கான மேலே சொன்ன விஷப்பூச்சிகள் வெளிப்பட்டு காற்றுடன் கலந்து விடுகின்றன. அந்தக்காற்றை உட்கொள்ளும், ஒவ்வொரு மனிதனும், ப்ராணியும் அதே வியாதியை அடைகிறார்கள். அவ்வி

யாதியஸ்தர்கள் இருப்புதலினல் உண்டாகும் தோழைகளிலிருந் தும் அளவற்ற விஷப்பூச்சிகள் வெளிப்பட்டு மேலே சொன்ன படி கெடுதலேச்செய்கின்றன. மேற்படி விஷப்பூச்சிகள் கலந்து ள்ள காற்றை யுட்கொண்ட பிராணிகளின் மாமிசத்தைத்தின்னும் மனிதர்களும் இந்த வியாதியை அடைகிறார்கள். காச வியாதிய ஸ்தர்கள் இருக்கும் இடத்தைச்சுற்றிலும் மேற்படி விஷப்பூச்சி கள் நிறைந்திருக்கின்றன.

ஒரு பெரிய கம்பெனியிலாவது அல்லது சங்கங்களிலாவது மேற்படி வியாதியுள்ள ஒருவன் இருப்பானேயாகில் அவ்விடத்தி லுள்ள மற்றவர்களும் மேற்படி வியாதிக்கு ஆளாகின்றார்கள். இந்த வியாதியுள்ள பசுவின் பாலைக்குடித்தாலும், இந்த வியாதி யுண்டாகின்றது.

தடுக்கும் முறை.

மேற் சொன்ன கொடிய வியாதியைத்தடுப்பதற்கு, முக்கிய மாக கவனிக்க வேண்டியது சுகாதார முறைகளே. காசரோ கஸ்தர்கள் இருக்குமிடம் எப்பொழுதும் நற்காற்று உலாவுதற் கேற்றதாயிருக்க வேண்டும். அவ்விடத்தில் அனுவசியமாக யாரும் பிரவேசிக்கக்கூடாது. அவர்களுக்குப் பக்கத்தில் ஆடு மாடுகளே யும் கட்டி வைக்கக்கூடாது. பெரிய பட்டணங்களில் இதற்கா கவே முனிசிபாலிட்டியார், சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் ஏற்படு த்தி பட்டணமுழுவதும் யாதொரு இடத்திலும் எவ்விதமான அசுத்தங்களும் ஏற்படாதபடி பாது காத்துவரவேண்டும்.

பட்டணங்களிலுள்ள ஒவ்வொரு கசாப்புக்கடைகளுக்கும், மிருகவைத்திய பரிசோதனையில் தேர்ந்தவர்களே ஏற்படுத்தி, அவர்க ளேக்கொண்டு தினந்தோறும் விற்கும் மாமிசங்களேபரிசோத செய்து பார்த்து, மேலே சொன்ன வியாதியுள்ள மிருகத்தின் மாமிச மிருக்கும் பக்ஷத்தில், அவைகளே விற்காதபடி தடுத்துக் கொண்டு வரவேண்டும்.

பால் கொடுக்கக்கூடிய பசு, ஆடு முதலிய மிருகங்களே அவை களின் இஷ்டப்படி மேய்வதற்கு விட்டுவிடாமல் நாம் ஜாக்கிரதை யாக பார்த்துவரவேண்டும். மேலே சொன்ன விஷப்பூச்சிகள் 60 டிக்கிரி செண்டிகிரேட் தர்மாமிட்டர் (உஷ்ணமானி) உஷ்ணத் தில் செத்துப்போகிறபடியால், மாமிசதாரிகள், தாங்கள் சாப்பி டும் மாமிசத்தை, நெருப்பில் போட்டுவாட்டிவிட்டு சாப்பிடுவதை ப்பார்க்கிலும், நன்றாக வேகவைத்து ஸாப்பிடுவது நலம்.

ஒரு ஸ்த்ரீ வித்யார்த்தி.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

The Greeter chance of Widowhood.

ஜாஸ்தி பால்ய விதவைகளுக்குக் காரணம்:—இந்தியாவில் ஏராளமான பால்ய விதவைகளுக்கு பால்ய விவாகமே முக்கிய காரணம். நமது தேசத்து அனுஷ்டானப்படி விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்றிருப்பதால், இவர்கள் தங்கள் வாழ்நாள்முழுவதும் தனிமையாக கஷ்டத்திலும், துன்பத்திலுமே கழிக்கவேண்டியதாயிருக்கிறது.

சென்ற 1911-ம் வருஷத்து ஜனஸங்கியைப்படி அடியில் கண்ட பால்ய விதவைகள் இந்தியாவில் இருப்பதாக ஏற்படுகிறது.

1 வயதுள்ள விதவைகள் 859, 1 முதல் 2 வரையில் 1,039, 2 முதல் 3 வரையில் 1,886, 3 முதல் 4 வரையில் 3733, 4 முதல் 5 வரையில் 8,180, 5 முதல் 10 வரையில் 78,407, 10 முதல் 15 வரையில் 2,27,367.

Over population.

ஜாஸ்தி ஜனசங்கை:—பால்ய விவாகத்திலால், ஜாஸ்தியான ஜனப் பெருக்கம் உண்டாகிறது. அப்படி உண்டாகும் ஜனங்களுக்கு தங்களுடைய ஜீவனத்திற்கே ஸம்பாதிப்பது அரிதாயிருக்கிறது. இந்தியாவில், சுயமாக சம்பாதிப்பதற்கு திறமையில்லாத ஒரு பையனுக்கு, அவனுடைய பெற்றோர்களின் கட்டாயத்தின்பேரில், ஓர் இளப்பெண்ணே கலியாணம் செய்கிறார்கள். அத்தப் பெண் தனக்கு 12 வயதில் ஓர் குழந்தைக்கு தாயாகிறாள். அத்தக் குழந்தை தனக்கு 12 வயதில் தான் ஓர் குழந்தைக்கு தாயாகிறாள், இப்படியாக.

ஓர் ஸ்த்ரீக்கு 36 வயது ஆகிறதற்குள் ஒரே குடும்பத்தில் மூன்று வம்ச பரம்பரை உண்டாகிறது. நாகரீக முள்ள மேற்கு தேசங்களில் ஸ்த்ரீகள் 30 வயதில் கலியாணம் செய்துகொண்டு 36 வயதில் 1 அல்லது 2 குழந்தைகளுக்கு தாயாகிறாள்.

Female Education in Travancore.

திருவாங்கூரில் பெண்கல்வி :—போன வருஷத்தில் திருவாங்கூரில் 100-க்கு 5 பெண்கள் வாசித்து வந்தார்கள். இவ்வருஷம் 100-க்கு 22 பெண்கள் வாசிக்கிறார்கள்.

Baroda Libraries.

பரோடாவில் லைப்ரேரிகள் :—பரோடா ஸென்ட்ரல் லைப்ரேரி இலாகாவை யொட்டி, பரோடாவில் இப்பொழுது 275 பப்ளிக் லைப்ரேரிகளிருக்கின்றன. மேற்கண்ட லைப்ரேரிகளில் 1,56,000 புஸ்தகங்களிருக்கின்றன. சென்ற மூன்று வருஷங்களாக, லைப்ரேரி புஸ்தகங்களே வாசிப்பவர்களின் தொகை அதிகரித்திருக்கிறது. சுற்றித்திரியும் லைப்ரேரிகளும் இந்த ஸமஸ்தானத்தி லிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் மூன்று மாதங்கள் வரையில் அப் பெயர்கொண்ட லைப்ரேரி யொன்று வைக்கப்பட்டிருக்கும். அக்காலம் கழிந்த பிறகு, அது மற்றொரு கிராமத்திற்குக் கொண்டு போகப்படும்.

275

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Juvenile Court in Bengal.

சிறுவர்களுக்கு ஒரு கோர்ட்டு :— வங்காள கவர்ன்மெண்டார் சட்ட விரோதமாய் குற்றம் செய்த சிறுவர் கள் 15 வயதுக்குட்பட்டவர்களாயி ருந்தார்களானால் அச் சிறுவர்களை அடைத்துவைக்க ஒரு தனியான வீடும், அவர்கள் செய்த குற்றங்களை விசாரித்து அவர்களை தண்டிக்க ஒரு தனியான கோர்ட்டும், ஜூன் மாதம் முதல் ஸ்தாபிப்பதாய் நிச்சயம் செய் திருக்கிறார்கள். இதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அக்கமிட்டி யில் ஜட்ஜ் முக்கர்ஜியின் மனைவி ஒரு மெம்பர்.

Children.

குழந்தைகள் :—இவ்வுலகத்தில்வரு ஷமொன்றுக்கு சுமார் 3,60,00,000 குழந்தைகள் பிறக்கின்றன வாம். அஃதாவது நிமிஷம் ஒன்றுக்கு 70 குழந்தைகளும் ஸெக்கண்டு ஒன்றுக்கு 1குழந்தைக்கு அதிகமாகவும்பிறக்கின் றனவாம். ஒரு வருஷக் குழந்தை களை ஒரே வரிசையில் தொட்டில் களில் அமைத்துவைத்தால் அத்தொ ட்டில்கள் இப்பூமண்டலம் முழுமை யும் சுற்றியிருக்குமாம்.

Antedote for mad dog bite.

பைத்தியம் பிடித்த நாய் வஷத் துக்கு முறிவு :—மணத்தக்காளித்தழை யை இடித்து ரஸம்பிழிந்து சல்லாத் துணியில் ஏழுதடவை வடிக்கட்டி ஒரு நாளைக்கு அரைக்கால்படி ரஸம் வீதம் மூன்று நாள் குடிக்கவேண்டும் ஆறு நாள் உப்பில்லா பத்தியம் இருந்து கஞ்சி சாப்பிடவும். ஏழாவது நாள் தும்பத்தை அரைத்து வெந்நீர் ஸ்நானம் செய்து ஆறுவாரம் நல்லெண்ணெய் சேர்க்காமல் ஸாதாரண ஆகாரம் புசித்துவந்தால் விஷத்தின் விகாரங் கள் போய்விடும்.

Malaria and Mosquitoes.

மலேரியாவும் கொசுக்களும் ;— விஷஜ்வரத்திற்குக் காரணம் கொசுக் கள். நீர் தங்கியிருக்கும் குட்டை குள ங்களின் ஓரங்களில் கொசுக்கள் மூட் டைபிடிக்கின்றன. அவைகளினால் கொ சுமுட்டைகள் நடிஜலத்திற்குகொண் டுபோகப்படுகின்றன. சில மீன்கள் அம்முட்டைகளை தின்று ஜீவிக்கின் றன. கொசு இருக்கும் குளம் குட்டை களில் இவ்வகையான மீன்களைப்பிடி த்து வளர்த்து வந்தால் கொசு உற் பத்தி யாகாது. அப்பொழுது விஷ ஜ்வரமுண்டாகாது. பம்பாயிலிருக்கும் பேரல் தொழிற் சாலையில் மிஸ்டர் க்ளென்லிஸ்டன் என்பவர் கொசுக் கூட்டங்களைத் தொலைக்க அநேக வகை மீன்களைப் பிடித்து வளர்த்து வருகிறார்.

Use of Maize.

சோளத்தின் உபயோகம் :—இரே லிலும் அமெரிக்காவிலும் மக்காச்சோள க் கதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷா யம்வைத்துக் கொடுத்தால் நீரடைப்பு, நீர்ச்சுறுக்கு, முதலான வியாதிகள் கு ணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக் காச்சோளக் கதிரில் உள்ள தானியத் தை உதிர்த்த பின்னுள்ள கத்தையை எரித்த சாம்பலுடன் ஸாதாரணமாக உப்புக் கலந்து கொடுத்தால் நெஞ்சுச் சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம்.

Remedy for White Ants.

கறையான் தொலைக்க மருந்து:— நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சீனக்காரத்தைக் கரைத்துப் பொந்தி லூற்றிவிடக் கறையான் நாசமாகு மாம். பொட்டுப்பூச்சி வலெநெய்பு பிடங்களில் இதை பூற்றிவிட்டாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

III

KITCHEN AND COOKERY.

ஸமையலறையும் வமையலும்.

Aviyal.

அவியல் :—என்ற போஜன பதார் த்தம் மலையாளத்தில் ஸர்வ ஸாதார ணமாக எல்லாரும் செய்து சாப்பிடு கிறார்கள். இது தமிழ்நாட்டுக்கு அபூர்வம். தமிழ்நாட்டார் இப்பதார்த் தத்தை மிகவும் இஷ்டப்படுகிறார் கள். இது பண்ணும் விதம் வாழைக் காய், பாவக்காய், பொடலங்காய், கத் தரிக்காய், பூஷணிக்காய், முருங்கக் காய், வெள்ளரிக்காய், சேனைக்கிழ ங்கு, கீரைத்தண்டு முதலியவைகளைக் கொண்டுவந்து நன்றாய்க் கழுவி 1½ அங்குலம் நீளமாக நறுக்கிப்போ ட்டு சுத்த ஜலத்துடன் அடுப்பில்வேக வைக்கவேண்டும். தகுந்த உப்பு புளி யும் ½ ரூ. எடை மஞ்சள் பொடியும் போடவேண்டும். காய்களெல்லாம் நன்றாக வெந்தபிறகு ஒரு தேங்காய்த் திருவி வேண்டிய பச்சை மிளகாயு டன் ஒன்றிரண்டாக அரைத்து அதில் போட்டு இளறிவிடவும். கருவேப்பிலை கொத்தமலித்தழையும் போடவும். புளிக்குப் பதிலாக மாங்காயைத் துண்டித்துப் போடலாம்.

How to prepare Guava Jelly.

கொய்யாப்பழப்பாகு பாகம்பண் ணும் விதம் :—கொய்யாப்பழங்களைத் லைவற்றை அழுக்கில்லாமல் நீரில் கழுவி, ஒரு ஜாடியிலிட்டு பழங்களைத் தாழ்த்தி ஒரு அங்குலஉயரம் வரையில் நிற்கத்தக்க அளவு நீரூற்றி நெருப் பில் இட்டுக் கரையும் வரையும் அவி த்துக், கரைந்தபின்பு அரிகண்ணு ள்ள சீலையிலிட்டு வடித்துத், தோலை யுங் கொட்டையையும் நீக்கி, மிகுந்தி ருக்கும் நீரை அளந்து ஆறுபங்காலுல் 6½-பங்கு சீனி சேர்த்து, சிறுகெருப் பிலிட்டு சிறிது எலுமிச்சம் புளியும் அளவாகச் சேர்த்துக் கொதிப்பீக்க ருசியான பாகாகின்றது.

Drakshi Churnam.

திராட்சி சூர்ணம்:—கொடி முந்திரி ப்பழம், பேரிச்சம்பழம், அதிமதுரம், மூட்காவேளை, நெற்பொரி, கோரைக் கிழங்கு, ஏலம், திராம்பு, கொத்தமல் லி, மிளகு, திப்பிலி, கூகைநீர், வேலி லவங்கப்பத்ரி, வால் மிளகு இவை கள் வகைக்குப் பலமொன்று வாங்கி இளவறப்பாய் வறுத்துச்சூர்ணித்து, ஸமனிடை சர்க்கரையைச் சேர்த்து திரிகடி ப்ரமாணம் அந்திசந்தி நாற் பதுநாள் தேனிலாகிலும் நெய்யிலா கிலும் கொள்ளவும். இதனால் தீரும் வ்யாதிகளாவன ;—அந்திரவாய்வு, பா ண்டுரோகம், தாபஜ்வரம், மயக்கம், தூக்கமின்மை, பித்தவாந்தி, அன்ன வேதம், உஷ்ணரோகம், சிலேஷ்ம ரோகம், அக்கினி மந்தம், கைகாலெ யய், கைகண்டது. உஷ்ணதேஹிக்கு நெய்யிலும் சிலேஷ்மதேஹிக்கு தேனி லும் கொடுக்க வேண்டும்.—விஸ்வகர்ம குலோபகாரி.

LAW.

சட்டம்.

Custody of Minor.

மைனர் யார் வசமிருப்பது என் பது :—ஆறுவயதுள்ள ஒரு மைனர் பையனை அகோமாய் பிறந்தது முதல் கொண்டே அவனது தாயைப் பெற்ற பாட்டியும் அவளுடைய புத்ரனும் பராமரித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் மைனருடைய பாட்டனார் அந்த மைனருடைய பராமரிப்புக்காக கொஞ்சமும் பண உதவி செய்யவில் லை. அவனுக்காக வேறு விதமாக ஒரு உதவியும் செய்யவில்லை. அப்படியா னால் மைனருடைய பாட்டியும் அவ ளுடைய மகனும் மைனருடைய கே மத்துக்காகத் திருப்திகரமான ஏற்பா டுகள் செய்துவரும் வரையில் மைன ருடைய பாட்டனாருக்கு எதிரிடை யாக மைனருடைய பாட்டியே மைன ரை தன்வசம் வைத்திருக்க பாத்ய முள்ளவளாகாள்.

8 பஞ்சாப் வீக்லி ரிபோர்ட் 144.

Widow's Maintenance.

விதவையின் ஜீவனாம்சம் :—ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் இரண்டு சஹோதரர்களிருந்தார்கள். அவர்களு ன் ஜேஷ்டருக்கு மூன்று புத்திரர் கள் ; இத்தப் புத்திரர்களில் ஒருவன் இறந்து போகவே அவனுடைய விதவை மே. இரண்டு மாமனார்களையும், இரண்டு மைத்துனர்களையும் சேர்த்து ஜீவனாம்சத்திற்காக வியாஜ்யம்கொண் டேன்தான். இவன் வியாஜ்யம் கொண் டேன்த சமயத்தில் குடும்பம் சேர்ந்தி ருந்தது ; இந்த வியாஜ்யத்தில் இவரி யூக்கள் ஏற்படுத்தப்பட்ட பின்பு குடும் பத்தார் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். (1) வியாஜ்யம்கொ ண்டேன்த பிறகு அவர்கள் பாகப்பிரி வினை செய்துகொண்டது அவர்கள் குடும்ப மெம்பர்களை எல்லாம் சேர்த் து வியாஜ்யம் கொண்டேன்ததைப் பாதிக்கமாட்டாது. (2) குடும்பத்தார் பாகப் பிரிவினைசெய்து கொண்ட போது இவளுக்கும் ஜீவனாம்சத்திற்கு ஒரு ஏற்பாடு செய்ததும், அதற்கு அவள் ஸம்மதம் கொடுக்காததும், அவளை இந்த வியாஜ்யத்தில் கட்டுப் படுத்தமாட்டாது. (3) அவளுடைய மைத்துனர்கள் மட்டுமல்ல, இரண்டு மாமனார்களும் ஜீவனாம்சம் கொடுக்கப் பாத்தியப்பட்டவர்கள். (4) பாகப் பிரிவினையில் குடும்ப ஸொத்து யாரு டைய பாகத்திற்கு வந்திருந்த போதி லும், அவர்கள் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர்கள்.—21 மதராஸ் லா ஜர்னல் 28-ம் பக்கம்.

Stridhanam.

ஸ்த்ரீதனம் :—ஒரு குடும்பத்தில் 200ஏகரா நிலமிருந்ததாகப்பன் தன் குமாரத்திற்கு விவாகமாய் 40-வரு ஷத்திற்கு பிறகு 8 ஏகாநிலம் ஸ்த்ரீ தனமாக எழுதிவைத்தார்.

சேர்ந்த குடும்பத்தில் கன்னிகைக் காவது, அல்லது கன்னிகைக்கும் வா னுக்குமாவது கொடுக்கப்படும் ஸ்த்ரீ தனமும், இனாமும், க்ரமமான தொ கையாக விருந்தால், மற்ற மெம்பர் களையும் கட்டுப்படுத்து மென்றும், இந்த அனுஷ்டானம் செல்லுபடியுள் ளதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (2) ஸ்த்ரீதனமாக கொடுக்கப்படவே ண்டிய ஸொத்து ஹிந்துலாவில் பண மும் நகையுமாக மட்டிலுமிருக்கவே ண்டுமென்பது அவசியமல்ல, ஸ்தாவா ஸொத்தாகவுமிருக்கலாம். (3) குடும் பத்திற்கு 200 ஏகரா விருக்கும்போது 8 ஏகரா கொடுத்தது க்ரமந்தான். (4) விவாகமான 40-வருஷத்திற்கு பிறகு ஸ்த்ரீதனம் கொடுத்ததை முன் னிட்டு அது செல்லாமணியாக மாட்டா தென்று சொல்லமுடியாது. 21 மத ராஸ் லா ஜர்னல் 24 பக்கம்.

பிழைத்தும்வழி.

VIEWS AND REVIEWS.

அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Causes of Blindness.

கண்தெரியாமைக்குக் காரணங் கள் :—இங்கிலாந்தில் ராயல் கமி ஷன் முன்பாக சாக்ஷிசொல்ல சேர்ந் தபோது மிஸ்டர் ஹோல் என்பவர் காமத்தினாலுண்டாகும் வியாதிகளே கண்தெரியாமைக்கு முக்ய காரண மென்று சொன்னார். குருடர்களுக் கென்றேற்படுத்திருக்கும் பள்ளிக்கூட த்தில் பரீக்ஷை செய்து பார்த்ததில் 625 பேருக்கு 325 குருடர்கள் இந்த காமத்தினாலுண்டான வியாதிகளி னால் வருத்தினார்கள்.

லண்டன் டைம்ஸ்.

Religious Education and Moral culture in Schools.

ஸ்கூல்களில் மதக்கல்வியும் நல் லொழுக்கப் பயிற்சியும் :—பேஹார் கவர்ன்மென்டார் பேஹார் ஓரிஸ்ஸா விலுள்ள ஸ்கூல்களில் வாரத்திற்கொ ருமுறை கல்லொழுக்கப் பயிற்சியை உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு அவ ஸ்யம் போதித்து வரவேண்டும் அவர் களுக்குரிய மதவம்பந்தமான வி ஷயங்களைக் கற்பித்து வரவேண்டும்.

பேஹாரி.

An wonderful invention.

நூதன சிருஷ்டி.

(1) இச்சென்னையில் இப்பொழுது இருக்கும் எலக்ட்ரிக் தியேட்டரில் (Electric Theatre) காண்பிக்கும் காட்சிகளை எல்லோரும் பார்த்திருக்க லாம். அதேவிதமாய் சலிக்கும் படங் களை ஸ்டேஜில் கட்டி யிருக்கும் வெண்மையான ஓர் பதாகையின்மேல் விழும்படிக்குச் செய்திருக்கிறார்களென்றும் தெரியவரும். ஆனால் அந்த பதாகை இல்லாமல் இக்காட்சிகளை யெல்லாம் காண்பிக்கக்கூடுமென்று ஒரு பண்டி தர் கண்டுபிடித்திருக்கிறார். அந்த பதாகை இல்லாததனால் சரியான மனி தர்கள் ஸ்டேஜில் வந்து ஆடி செய் கிறார்களோவென்ற ப்ரமை உண்டா கின்றதாம். தவிர கண்ணுக்கு அசௌ கர்யத்தை கொடுக்கும் தன்மை இதில் இல்லையாம்.

ஸயன்டிபிக் அமெரிக்கன்.

Mahamadan Women Education.

மகம்மதிய ஸ்த்ரீகளின் கல்வி :—உயர்ந்த படிப்புக்கு இந்திய மகம்ம திய ஸ்த்ரீகள் தவிர புத்தியின் ஆவலைக் காட்டுகிறபடியால், அவர்க ளுக்கு ஜாதிய படிப்பு, க்ரமப்படி கொடுக்காத பக்ஷத்தில், அவர்களு டைய படிப்பு பூர்த்தியானதாகக் கரு தப்படாது. மேலும் மஹமதிய ஸ்த்ரீ களுக்காக போபால் ஸ்டேதாபாத் முதலிய லம்ஸ்தானங்களில் வெகுமு யற்சிகள் எடுத்து பாடசாலைகள் ஸ்தா பித் திருக்கிறார்கள். ஜாதியப்படிப் பை எவ்வளவு தூரம் விருத்திசெய்தி ருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தேசம் முன்னேற்றமடையும்.

ஜட்ஜ்ஷாடின்.

VII
WOMAN'S WORLD.
ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Inseaparable Love.

தன்றுக்காதல் :—

ஆயென்பதியில் அரம்பதி வந்தெய்
திடினும், ஆயநூது ஆயநூது ஆனா
லும்—தூயஞ்ளங், குன்றுபோல் வாய்
ந்த குவி முலையாள் தன்னுடனே,
இன்றுபோல் என்று மிரு.

(இக்கவி ஔவையாரால் தம்பதி
களுக்கு ஆசீர்வதிக்கப்பட்டது).

Telling her past Births.

தனது முற்பிறப்பைக் கூறிய ஒரு
ஸ்த்ரீ :—பிரான்சு தேசத்திலுள்ள
பாஸி என்னு மூரில் ஆஸ்பத்திரியில்
வெகுகாலம் வேலைசெய்துவந்த லாரி
ரேணா என்னும் மாதுஒரு நாள் தான்
ஏற்கனவே ஒரு தரம் பிறந்து 19-வது
வயதில் காச நோயால் இறந்ததாக
டாக்டரிடம் கூற அதன் உண்மை
யறிய அவள் கூறியவற்றைக் கொ
ண்டு அவள் பிறந்த ஊர் இட்டாலியா
விலுள்ள லீனா என்னுடனூராக இருக்
குமென யூகித்து அவ்வூரின் விசேஷ
படங்களைத்தருவித்துப் பார்க்க அவள்
வர்ணித்ததற் கிசைந்திருக்க அவளை
இட்டுக்கொண்டு அவ்வூருக்கு சென்ற
போது அவள் முன் தான் வசித்த
வீட்டில் சென்று பிறகு அவரை கல்ல
றைக்கு அழைத்துப்போய் மரண ரிஜி
ஸ்டரை எடுத்து பரிசோதிக்க அவள்
1840-ம் வருஷத்தில் காச நோயால்
இறந்ததாக காணப்பட்டது. பிறகு
தன்னை புதைத்த கல்லறையின் சமீ
பம் சென்றபோது மூர்ச்சையாகி விழு
ந்துவிட்டாளாம். இவள் பிறந்தது
முதல் வெளிநாட்டிற்குச் சென்ற
தில்லையாம்.

Burmese Girls.

பர்மியப் பெண்கள் :—சில பர்மா
தேசத்துப் பெண்கள் ஜப்பான் பெண்
சிற்பசாலையில் (டெக்னிகல் ஸ்கூல்)
மரவேலையும், புஷ்பம் செய்கிற வேலை
யும், பயின்று வருகிறார்களாம். இன்
னம், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்
கும் சில பெண்கள் வயித்திய படிப்பு
க்குப் போயிருக்கிறார்களாம்.

Five feet long haired Woman.

ஐந்து அடி நீள தலைமயிருள்ள
ஸ்த்ரீ :—சீனி மொட்டகிராப் வேடிக்
கையை நடத்தும், மிஸ் டயேன்
ஓஸ்ட், என்பவளுடைய தலைமயிர்
5 அடி நீள மிருக்கிறதாம். அதில்
3 அடி மயிர் ஓர் பாரீஸ் வர்த்தகனுக்கு
1000 பவுனுக்கு விலைக்குக் கொடுக்க
ப்போகிறாளாம். அந்த மயிரை கத்
தரிப்பதற்கு தங்கத்தினால் ஓர் கத்த
ரிக்கோல் செய்யப்பட்டிருக்கிறதாம்.
அந்த மயிரைக் கத்தரிக்கும்போது
அநேக சிநேகிதர்கள் வருவார்களாம்
அந்தக் கத்திரிக்கோலை அவளுக்கே
பரிசாகக் கொடுக்கப்படுமாம்.

Women millionaire

ஸ்த்ரீ கோட்டீஸ்வர சீமாட்டி :—
தென் அமெரிக்காவிலுள்ள ஸிலோ
ராகஸின் என்னும் ஸ்த்ரீக்குள்ள
சொத்துக்கள் 40 கோடி பவுண்டு
மதிப்புடையனவாம். ஜர்மனியிலுள்ள
ப்ரூ என்னும் ஸ்த்ரீக்கு வாரமொன்
றிற்கு 10,000 பவுண்டு வரும்படியு
ள்ள சொத்துக்களிருக்கின்றனவாம்.
வட அமெரிக்காவிலுள்ள மிஸ்ஹெட்டி
கிரீஸ் என்னும் ஸ்த்ரீக்கு 120,00,000
பவுண்டு மதிப்புள்ள ஆபரணங்களிரு
க்கின்றனவாம். மெக்ஸிகோவிலுள்ள
மஸ்கரீஸ் என்னும் ஸ்திரீக்கு வருஷ
த்தில் 500,00,000 டாலர் வரும்படி
யுள்ள சொத்தும், 6,00,000 கால்
நடைகளும் (குதிரை, பசு முதலியன
வும்) இருக்கின்றனவாம்.

VII
WIT & HUMOUR.
தமாஷ்.

Motor cars in America.

அமெரிக்காவில் மோட்டார் வண்
டிகள் :—அமெரிக்காவில் நியூயார்க்
என்ற நகரத்தில் சஞ்சாரம் செய்யும்
டாக்ஸிகாப் (Taxicab) மோட்டார்
வண்டிகள் எல்லாம் சேர்ந்து ஒரு
வருஷத்தில் 81,900 மைல்கள் ஓடு
கின்றனவாம். இரண்டு தடவை சந்
திர மண்டலம் போய் திரும்பிவரவே
ண்டுமானாலும் இவ்வளவு தூரம்
போகவேண்டுமாம்.

Husband and wife.

கணவனும் மனைவியும்.

ஒருநாள் கணவன் மனைவியை
நோக்கி என்ன குளம்பு என்றாராம்.
அதற்கு அப்பெண் வேடிக்கையாக
கத்தரிக்காய் குளம்பு என்று எழுதிக்
காட்டினாளாம். கணவன் இது குற்ற
மென்று கருதி அப்பெண்ணை வைத்
துவிட்டு வேறு விவாகம் செய்துகொ
ள்வேன் என்று பயமுறுத்தினாராம்.

வைஸ்யமித்திரனில் ஒரு நிருபர்.

* * * *

பங்கஜம் :—" சண்பகம் என்னவோ
அடித்தாற்போல் சப்தம் கேட்டதே
உன் கணவர் உன்னை அடித்தாரா
என்ன !

சண்பகம் :—ஆம்.

இளமையிலெனை நம்பா
திருட்டரை தனிலிருத்தி
ஈண்டுநின்ற கண்டிலுன்
னுயிர்போக்கிடுவேனென்
றளவிலா வதிகாரமனைத்
தினையுஞ் செலுத்தியபின்
முதுமயிலேதனியா
மூடமே யென்றடித்தார்.

பங்கஜம் :—உன் விதியப்படி. என்
கணவர் போக வர இடக்கையாலும்
அடிக்கிறார். நானொரு தப்பிதம் செய்
யவில்லையே என்றாலோ,

கல்வியின் மமதையோ
கருவமோ வென்னிட
கட்டளைதனை மனதிற்
கசந்திட்டா யறிந்தேனான்
நல்லதோ தீதோ
யானிட்டதே சட்டமென
நானிலத் தனைவோரும்
நவிலுவா ரென்செய்வாய்

என்கிறார்.

மதுரை கல்யாணியம்மாள்.

* * * *

ஒருவன் தன் தகப்பனுக்கு அமா
வாசையன்று தருப்பணம் கொடுக்கப்
போகையில் அவன் பிள்ளை அவனை
மடிபிடித்துக் கொண்டு, அப்பா ! நீர்
மட்டும் தருப்பணம் கொடுக்கப்போ
ரயே. நான் உனக்கு எப்பொழுது தரு
ப்பணம் கொடுக்கிறது ? அதை
சொன்னால்தான் விடுவேன், என்
றான்.

* * * *

கிருஷ்ணன்.—அவன் ஒரு மகாதரி
த்திரன். அவன் வாழ்க்கையில் ஒரு
வஸ்துவாவது பிறருக்கு கொடுக்கமா
ட்டான். இது நிச்சயம்.

இராமன். — கொடுத்திருக்கிறான்.
நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.
அவன்தன் பெண்ணை விவாகம்செய்து
கொடுத்தான்.

VIII

EVENTS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

ஏப்ரல் ' 1914.

1-ந்தேதி.—இன்று சென்னை கவர்னர் பச்சையப்பன் காலேஜிக்குப் புதிதாய் சேத்துப்பட்டில் கட்டப்படும் ஹாஸ்டலுக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டினார்.

4-ந்தேதி.—சென்னை அபேத ஐக்யானந்த சங்கத்தின் கீழ் ஸன்மார்க்கத்தைப்பற்றி ஸ்ரீமதி காவேரி அம்மாள் ப்ரஸங்கம் செய்தார். ஸ்ரீமதி அலமேலு அம்மாள் அக்ராஸனம் வகித்தார்.

10-ந்தேதி.—இன்று தஞ்சாவூரில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் கூடை பெற்றது. கனம் ஜட்ஜ் சங்கரன் நாயர் அக்ராஸனம் வகித்தார்.

11-ந்தேதி.—வைதிக ஆந்த்ர கான்பரன்ஸ் இன்று பெஜவாடாவில் கூடி விதவாவிவாஹம், ருதுவானபிறகு கல்யாணம், கடல்யாத்திரையில் ஜாதி வித்யாஸமில்லாமல் சேர்ந்து சாப்பிடுவது ஆகிய இவைகள் சாஸ்திர விரோதமென்று தீர்மானம் செய்தது.

15-ந்தேதி.—ஆனமபில் மிஸ்டர் சேஷகிரி அய்யருக்கு ஜட்ஜ் உத்யோக மானதைக்குறித்து வக்கீல் சங்கத்தார் ஒரு விருந்துக்கச்சேரி நடத்தினார்கள்.

18-ந்தேதி.—சென்னை அபேத ஐக்யானந்த சங்கத்தின் கீழ் மாலை 4 மணிக்கு ஸ்ரீமதி தாயாரம்மாள் மத ஸம்பந்தமான கல்வி அவஸ்யம் என்பதைப்பற்றிப் பேசினார்.

24-ந்தேதி.—இன்று கல்கத்தாவில் ஏராளமான ஜனங்கள் ஒரு கூட்டம் கூடி வரதக்ஷணை வாங்குவதில்லையென்று சபதம் செய்துகொண்டார்கள்.

25-ந்தேதி.—சென்னை அபேத ஐக்யானந்த சங்கத்தின்கீழ் மாலை 4-மணிக்கு ஸ்ரீ சாந்தானந்த மௌனி 'முக்திகாந்தா கல்யாணம்' என்னும் விஷயமாக காலக்ஷேபம் செய்தார்.

30-ந்தேதி:—நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி காம்பிரட்ஜிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்துவைத்துவிட்டு மோட்டார் வண்டியில் காம்பிரிட்ஜ்ரோட்டில் வரும்போது ஒரு ஸ்த்ரீ சுதந்திரவாதி ஒரு பெடிஷனை சக்ரவர்த்திமேல் எறிந்தாள். அந்த பெடிஷன் நல்ல வேளையாக சக்ரவர்த்தி வண்டிக்காரன் முகத்தில் விழுந்தது.

கஜபதி அல்லது நவீன ராபின ஹூட

இன்ஸ்.—பாப்பானல்லவா. இரத்தத்தைக்கண்டதுமே உடல் கலங்கி உட்கார்ந்து விட்டான். கஜபதியை நேரில் கண்டும் பயந்து வந்த குணஷணமா அவனைப்பிடிக்கப்போகிறான்...அவன் கஜபதி என்பதே பொய். எவனோ. ஒரு ஐரோப்பியனுடன் சண்டை போட்டுவிட்ட கஜபதியாம்... கஜபதி. அவன் மாறுடைபோட்டுக்கொள்வது இவன்களுக்கு சொல்லிக் கொள்ள எளிதாயிருக்கிறது.

ராஜம்.—பாப்பான் பயங்குள்ளிதான். அதுதான் ரகுநாதன் புலியைத் திரத்திக்கொண்டு வந்தார். நீர் தான் தைரியசாலி : புலியைக்கண்டதும் பிறர் பார்க்கும் முன் ஓடினீரே! உம்முடைய ஓட்டத்தைப் புலியினுடைய பாட்டனும் பிடிக்க முடியுமா. நீர் இந்த விஷயத்தில் கல்ல தைரியசாலி. (பாடுகிறான்) என் பொட்டி மகனே. உன்னைப்புலி கண்டால் விட்டுவிடுமோ தான். நம்ப ஜமீன்தாரவாள் மகா ராஜா வாச்சே : ராஜா. இஸ்பேட் ராஜாத்தான். பழைய காலத்து ராஜாக்களாவது ஸ்த்ரீகளைக் காப்பாற்றுவதற்காகவண்டுகளையாவது பிடிப்பார்கள். இவர் பெண்டுகளைத்தான் பிடிப்பார். நல்ல ராஜா (யாவரும் நகைக்கிறார்கள்) இன்ஸ்பெக்டர் ராஜத்தை உதைக்கிறான். பத்மநாபன் இரண்டு ஆட்களை விலங்கிட்டு அழைத்து வருகிறான்.)

இன்ஸ்.—இதென்ன. இப்போது என்ன அவசரம். இங்கு கொண்டு வருவானேன்.

பத்ம.—இவன்களிருவரும் நம் ஆபீசுக்கருகில் சண்டையிட்டுக்கொண்டிருந்தபடியால் பிடித்துவந்தேன். இதை தங்களிஷ்டப்படி நடத்தவா அல்லது ரூல்ப்படி நடத்தவா என்று உத்திரவு பெற்றுக்கொள்ள வந்தேன்.

இன்ஸ்.—ஏய். பசங்களா, இப்படி கொண்டுவா. இந்தப்பட்டிக் காட்டுப் பசங்களை எண்டா. சண்டைபோட்டீர்கள்.

முதல்.—ஆள். சாமி. எங்கருப்பணசாமி பிள்ளையா. நெசத்துச்சொல்ரேன். காப்பாத்தணும். தர்ம யெசமா. நீங்கதா எங்கருப்பணசாமி. (யாவரும் நகைக்க, இன்ஸ்பெக்டர் அவனை உதைக்கிறான்.) ஐயோ. எங்கொலெதெய்வமே. சாமி. எங்கருப்பணசாமி. சாமி. அடியாதேங்க, சொல்ரேன். அந்த காட்டேரி மருதவீரன்று எண்ணிக்கிட்டிருக்கே உங்களை நா—

ஜமீன்.—அவன் மூடபக்தியாய் சொல்கிறானேயன்றி தெரிந்து அவனை ரகப்பேச வில்லை. அவனை அடிப்பானேன். மற்றவனை விசாரியும்.

2-ம் ஆள்.—சாமீ. நான் அரிச்சந்திரவேசக்காரன். இவே சந்திரமதி நாங்க கூத்திப்போட்டா, பெரிய பெரிய மனுசாங்கூட அம்பலாரத்தேவரு கணக்குப்பிள்ளைங்க கூட பாத்து ஏனம் கொடுப்பாங்க. அதுமேலுகூட (பாடுகிறான்) "கண்மணியே இன்னம் தூக்கமோ" என்று பாடினேன்னு க்கி ரொம்ப ஜொகுஜாயிருக்குன்று அவுக தலையே ஆட்டா ஆட்டுவே மூணு தலேமேலே வலிக்குங்க.

ராஜம்.—அதோ கஜபதி கஜபதி (யாவரும் பயந்து ஓட ராஜம் அடங் காது நகைக்கிறான்) நீங்களும் பாப்பான்தானே (இன்ஸ் பெக்டர் அடிக்க வருகிறார்.)

பத்ம.—அதை விடுங்கள். இவனைப்பூராவும் விசாரியுங்கள் ஏய் நீ சொல் லிய சண்டைக்குக்காரணத்தை மரத்திரம் சொல்லு. வீணாய் விளர்க்காதே. தெரியுமா.

ராஜ.—டிர் போலீஸ் அதிகாரம் புதுத்தெரு வெங்காரம். பேர்டிக்குச் சங்காரம் பிள்ளைவாளுக்காங்காரம். நகைக்கிறான்.

ஜமீன்.—அவனையடித்து பயனில்லை கேவலப்பாருங்கள்.

2-ம் ஆள்.—சாமி நாங்க இப்படி இருந்தமா இருந்தோம் இருந்தஞ் சாமீ இருக்கைலே.

இன்ஸ்.—நான் ஸென்ஸ் என்டாது இருக்கைலே போகைலே சொல் லடா சீக்கிரம் (உதைக்கிறான்.)

2-ம் ஆள்.—ஐயா இவே இப்பீதலுக்கு மினுக்குபண்ணி எம்பொஞ்சாதி மேலே கண்ணெ வச்சுட்டா வச்சாளே.

இன்ஸ்.—ஏண்டா அப்புறம் இவனுக்கு பார்க்க கண்வேண்டாமா. கண் ணெவெச்சா நீ பிடிங்கி எறிவதற்கென்னடா. ஏன்டா உன் பெண்சாதி அழகாயிருப்பாளாடா இங்கே தானே இருக்கிறாள்.

2-ம் ஆள்.—எப்பீங்கசாமி ஒரு பேச்சுக்கு சொல்லே உங்க பொஞ்சாதி மேலேதா ஒருத்தே கண்ண வச்சுட்டான்னு வையுங்க. எல்லாரும் நகைக்க இன்ஸ்பெக்டர் சவுக்கால் அவனே அடிக்கிறார்.

1-ம் ஆள்.—சாமி நாங்கண்ணெயு வைக்கலே மூக்கையுவக்கலே. இவே பொஞ்சாதி நேத்து சத்துப்பூட்டா இவே கொன்னூட்டு என்னியே சொல் றாஞ் சாமி.

ஜமீன்.—ஓ கொலைக்கேஸா. அடே பிணமெங்கே அதை முதலில் பார் த்தவன்யார்.

ஆள்.—சாமீ நாந்தா பாத்தேன் எம்புட்டு தூரத்திலேணணு (பின்ன கர்ந்து) சாமி நீங்கதா பொணம் இம்புட்டு தூரத்திலே பாத்தேஞ்சாமி (இன்ஸ்பெக்டர் சிரிக்கிறார், ஐயா ஒரு பேச்சுக்கு சொல்றேன் நீங்கதா எம் பொஞ்சாதி செத்துகிடகிறீங்க.

ஜமீன்.—போதுமடா உன் சாட்சி என்ன ஸார் நேரமாய்விட்டது. கொட்டடியில் மீதத்தை விசாரித்துக் கொள்ளலாமே.

இன்ஸ்.—சரி போகலாம் காருங்கள் (போகிறார்கள் ஆட்கள் ஒருவன் இன்ஸ்பெக்டரையும் மற்றவன் ஜமீன்தாரையும் பலமாய் உதைக்க அவர்கள் கீழே விழுகிறார்கள். ஆட்கள் மேலே மீது ஏறிப்போக ஜமீன்தார் இன்ஸ்பெக் –ர் முதலியவர் பிடிக்க முயலுகின்றார்கள். கஜபதி துப்பாக்கியுடன் தோ

284

ன்றி பெரும்பாறையை கீழே உருட்டுகிறான் பத்மநாபன் கஜபதியென்றலர ஆட்களேத்தவிர யாவரும் கீழே ஓடி மறைகின்றனர். கஜபதி ஆட்களின் விலங்கைத்தெரிக்கின்றான்.

கஜ.—(சிரித்து) எல்லாம் பார்த்துக் கொண்டேதானிருந்தேன். எதற் காக இந்தவேஷம் போட்டீர்கள்.

ஆள்.—நாங்கள் சண்டையிலெதாகப் பாசாங்கு செய்து எங்களே போ லீஸ் கோட்டடியில் அடைத்தார்கள். உள்ளே போலீஸார் சிலர் பேசியதிலிரு ந்து நம் வாரணம்பிள்ளையை ஜமீன்தார் வீட்டில் ஜாக்கிரதையாய் வைத்தி ருப்பதாயும் மற்றவர்களுக்குத்தெரியாமல் இந்த இன்ஸ்பெக்டரும் வாரணம் பிள்ளையுமாய் படைகளுடன் போய் நம் ஆயுதங்களைக் கண்டெடுக்கப்போவ தாகவும் தெரிந்தது. இக்கடிதத்தையும் ஒரு வருக்கும் தெரியாமல் எடுத்து வந்தோம். (கஜபதி பிரித்து பார்க்கிறான்.)

கஜ.—பேஷ் கள்ளனுக்குள்ளே குள்ளனு ஆம் நமக்கனுகூலந்தானே.

ஆள்.—என்ன ; என்ன.

கஜ.—தன்னிடம் கஜபதியாள் ஒருவன் அகப்பட்டிருப்பதாயும் அவன் மூலமாய்தானே சகல ஏற்பாடும் செய்யப்போவதாயும், பிடித்தபிறகு மேலதி காரிகள் தான் ரகுநாதத்துக்கு கீழ்ப்படிந்து நடக்காதது குற்றமென்று சொ ல்லக்கூடா தென்றும் சூபரிண்டண்டு எப்படியாவது கஜபதி ஆளே தப்பித்து விடுவானென்றஞ்சி அவனுக்குத்தெரியாமல் ஏற்பாடு செய்திருப்பதாயும் இர கசியமாய் எழுதியிருக்கிறான் இன்ஸ்பெக்டர் மேலதிகாரிகளுக்கு. இதற்கு ஒருபதில் அனுப்புவோம் அவன் இஷ்டம் போல செய்யலாமென்று எழுதி அவனுக்கு அனுப்பிவிடுவோம்.....அட்ட மூட்டாளே. இதற்கென்று கங் கணங்கட்டியிருக்கும் குண பூஷணத்தையும் விரோதித்துக் கொள்ளுகி றேனே.....நமக்குநல்லதே.

ஆட்கள்.—இதென்னரகசியம் தங்கள் தேகத்திலும் காயமா ஆ! ஆ!!

கஜ.—ஆம். ஒப்புக்கொள்வதில் என்ன வெட்கம். இன்றைக்கு நான் தப்பித்ததே வெகு சிரமம். இத்தனே காலமாய் பலசாலிகளேயும் அதிகாரிக ளேயும் குரங்காக ஆட்டிவைத்த நான் அதுபோலவே இன்று குணபூஷணத்தி னிடமும் அலட்சியமாய் எதிர்த்தேன். அவன் வைத்த அறை இன்னும் நோகிறது. உங்களேப்போன்றவராயிருப்பின் இறந்துபோயிருப்பீர்கள். கடைசியில் அவன் என்னேத் துறத்த நான் ஓடித் தப்ப வேண்டி வந்தது. பலத்திலும் தைரியத்திலும் அவன் எனக்கு குறைந்தவனில்லே. அனுபோ கம் முதிர்ந்து என் யுக்திகளேத் தெரிந்துகொண்டானுதில் நாம் வாழ்வது அனித்தியமே. அவன் சாமர்த்தியம் தான் என்ன. நானே வியக்கத்தக்க தாயிருக்கிறதே.

ஆள்.—ஜமீன்தார் ஏதோ! ரகசியமாக அறியவேண்டி அஞ்சனமை போபெவனே யழைக்கப்போகிறாராம். நாம் ஆட்களில் ஒருவன் மைபோடு

285

றவனையும், ஒருவன் பார்த்துச் சொல்பவனைவும், மாறுவேஷம்போட்டுக் கொண்டு போயிருக்கிறார்கள். நம் குவலயம் தாலிவேஷம்போட்டு ஜமீன் தார் பங்களாவில் கச்சேரி பண்ணுவான். எல்லாருமாக வாரணம் பிள்ளை யைப் பிடிக்கத்தான் இவ்வளவும். (ஆட்கள் போகிறார்கள்).

கஜ.—இதெல்லாம் காளீசன் உபாயமா...பேஷ். ஏவாமக்கள் மூவா மருந்து அப்பா. உன் சகாயத்தை எவ்வாறு மதிப்பேன். நீ எனக்குத் துணையிருக்கும்வரை எத்தனை குணபூஷணங்கள் எதிர்த்தாலென்ன இது யார் (தூரத்தில் தூரோபதை வருகிறாள்)....மானிட உருவமாய்த் தோன்ற வில்லையே...யாரிப்த ஸ்திரீ சத்யமோ...அடடா முகமேன் விகாரமாயிருக்கி றது. கண்களில் நீர் மல்குகின்றதே.

த்ரௌ.—ஹா! தெய்வமே...ஹும் தெய்வம் (ஓர் பாரையின்மீது உட்காருகிறாள்). அடேபாவி உன்னைப் பழிவாங்காமல் இறக்க மனம் வர வில்லையே. அதற்கு வழியுங் காணப்படவில்லையே. என்ன நியாயஸ்தலம் என்ன நியாதிபதி அடடா.

கஜ.—(உற்றுக்கேட்டு) (தனக்குள்) ஓ இவள் அக்கிரமமிஞ்சி ஜமீன்தாரி னல் கற்பழிக்கப்பட்ட ஸ்த்ரீ...ஸ்த்ரீ நியாய ஸ்தலத்தில் அபஜயமடைந்தா ளென்று காளீசன் சொன்னானே. இவளை விசாரித்தறிவோம். ஆ! இவ் வுடையுடனு பேசுவது பாதகமில்லை. (அவள் முன் சென்று) அம்மாள் யார். இந்த வேளையில் நீ என் தனியே இங்கு உட்கார்ந்துகொண்டிருக் கிறாய்.

த்ரௌ.—(தன்னுள்) இவனைப் பார்த்தால் வெள்ளைக்காரனைப்போல் இருக்கிறான். இந்தியன்போல பேசுகிறானே. (வெளி) ஐயா நான் யாரா யின் என்ன. அன்னியஜாதியரான உமக்கேன் கவலை.

கஜ.—அப்படியல்ல எஜ்ஜாதியாரென்ன இரக்கமுடையார். எதிலும் அபலைகளை ஆதரிக்கவேண்டியது கடமை. உன் முகத்தைப்பார்த்தால் நீ மிகவும் துக்கப்பட்டவள்போல் தோன்றுகிறது. என்னாலான உதவியை நானுனக்கு செய்யக் காத்திருக்கிறேன்.

த்ரௌ.—போதும் போதும் ஸ்த்ரீகளுக்கு வலுவில் உதவி செய்வதா கச் சொல்லி நெருங்கிப் பேசும் புருடர்களில் அனேகர் யோக்கியதையை நான் அறிவேன்.

கஜ.—நியாயமே. (சிரித்து) நானப்போப்பட்ட யோக்கியனில்லை.

த்ரௌ.—முதலில் உம்மை பார்த்தால் ஒரு வேஷதாரியென நினைக்கி றேன். உம் உடைக்கும் பேச்சுக்கும் சம்பந்தமில்லை.

கஜ.—என் உடைக்கும் பேச்சுக்கும் சம்பந்தம் வைத்துக்கொள்ள எனக்குத் தெரியும். நான் வேஷதாரி யென்பது பொய்யல்ல. ஆனாலது உன் போன்ற அபலைகளிடம் காண்பிப்பதில்லை. உம் போன்றவர்க்கு உதவி செய்வதே என் விரதம். என் பெயரை நீ கேட்பாயானில் அவ்விதம்

எண்ணமாட்டாய் ஆனால் அது சகஜந்தானே. உலகமே வெளி வெளிமயக் கைக் கண்டு நம்பும் சுபாவமுடையதல்லவா?

த்ரௌ.—ஐயா உலகம் என்பதைப்பற்றி என்னிடம் கூறவேண்டாம். என்மட்டில் உலகம் நெருப்புக்குச் சமானமா யிருக்கிறது. அது போகட்டும் நீர் சொல்வதிலிருந்து நீர் யார் என்பதைப்பற்றி அறிய ஆவல்கொண்டவளா யிருக்கிறேன்.

கஜ.—என் பெயரா...என்னை...கஜபதி யென்று சொல்வார்கள்.

த்ரௌ.—ஹா.—(திடுக்கிட்டு விலகிபோய் நடுக்கத்துடன் பார்க் கிறாள்).

கஜ.—(சிரித்து) நான் சொல்லவில்லையா—நீ உலகத்தை வெறுத்தாலும் நீயும் உலகத்தில் வசிப்பவள்தானே...பயப்படவேண்டாம். நான் உனக்கு மித்துருவேயன்றி சத்துருவல்ல.

த்ரௌ.—உண்மையே. சற்றுமுன் என் தலையில் மழை பொழிந்தா லென்ன. இடிவிழுந்தாலென்ன வென்றிருந்த எனக்குப் பயமுண்டான தைப் பார்த்தால் நிலையற்ற உடலில் மானிடர்க்கிருக்கும் ஆசாபாசம் விளங் குகிறது. நீர் களவு கொலைக்கஞ்சாதவரென்று நான் கேள்விப்பட்டிருக்கி றேன். ஆனால் உம்மை நேரில் காண அப்படித் தோன்றவில்லை.

கஜ.—என் கையால் இதுவரை ஒரு கொலையும் செய்யாவிட்டாலும் நான் கொலை களவுக்கு அஞ்சாதவன்தான். உருத்திராட்சப் பூனைபோல் கல்லவனென்று பெருமை பாராட்டிக் கொள்வதினும் குற்றத்தை ஒப்புக் கொள்வது நல்ல குணமல்லவா? இது நிற்கட்டும். உம் வரலாற்றை வெளி யிடும் சற்று. யாரையோ பழிவாங்கவேண்டும். என்று பேசினீரல்லவா? அவ்விஷயத்தில் நான் உதவிசெய்வேன்.

த்ரௌ.—ஐயா, என் புருஷன் அக்கிரமிஞ்சி ஜமீன்தாரிடம் வேலையா யிருந்தார். நான் சிறுவயதில் அழகு செல்வம் சங்கீதங்களில் சிறப்புற்றி ருந்தேன். இதனால் நான் அகம்பாவங்கொண்டு என்னைப் புகழாதவர்களை ஞானமற்றவரென்றெண்ணினேன். புருடர் பலர் என்னைப்பற்றி உயர்வா கப் பேசுவதை நான் கேட்டிருக்கிறபடியால், அவள் ஸ்த்ரீ என்ற துர் அபி மானத்தால் பேசுவதை நினையாமல், ஸ்த்ரீகளுக்கு வுண்மை ஞானமும் இய ற்கை யழகின் வனப்பின் மகிமையும் தெரியாதென்று அவர்களை யலட்சியம் செய்துவந்தேன். ஜமீன்தார் பத்தினியுடன் நேசமாய் அவளுடன் அடிக் கடி பேசி வந்தேன். அவள் உலகில் உள்ள உயர்ந்த ஜாதி ஸ்த்ரீகளில் தன் புருஷனுடைய பிரியத்துக்குப் பாத்திரமாகாத ஸ்த்ரீயே யிடை யாதென்று ஒருகாள் என் மனம் சுடும்படி வாதித்தாள். நானும் கண்ட படி எதிர்த்து வாதாட எங்கள் விரோதம் முற்றியது. பிறகு இந்த ஜமீன்தார் என்னைக்காதலிப்பதாக பலவாறு தெரிவித்து கடிதங்கள் எழுதினான் நான்

அக்கடிதங்களை கொளுத்திவிட்டேன். என் கணவனிடம் இந்த வேலையை விட்டு வேறு ஊருக்குப்போக வேண்டுமென்று வற்புறுத்தினேன். ஜமீன்தார் அவருக்கு புரோமோஷன் செய்து திருத்திக்கொள்ள இவரும் என்னைக் கடிந்து அவ்விடமே இருந்தார். பிறகு என்ன என்னைத்சந்திரமாய் தாக்கிப் போய் ஆ. அந்தப்படுபாவி அழித்துவிட்டான். ஹ (மூர்ச்சையாகிறாள்.)

கஜ.—அட்ட துஷ்டர்களுக்கு உலகில் யாதொரு தண்டனையுங் காணேன். என்னைத்தேடிப் பிடித்து விலங்கிட ஸ்பெஷல் பட்டாளம் அனுப்பிப்யிருக்கிறார்கள். ஐயோ கற்பழிப்பதை விட கொடிய குற்றம் வேறுண்டோ? அவை புருடர்க்கு கேவலமல்லவென்பது உலக நியாயம். என் குற்ற மெல்லாம் இதில் பத்திலொருபங்கு இராது. இரக்கம் என்பதை வகிக்காத என் நெஞ்சம் ஏனோ இப்பெண்ணினிமித்தம் கரைந்துருகுகிறது. என்ன வந்தாலும் வரட்டும் இப்பெண்ணின் கருத்தை நிறைவேறச்செய்வேன்.

த்ரௌ.—(மூர்ச்சை தெளிந்து கண்ணீருடன்) ஐயா, நான் பிராணனை விட்டுவிட எண்ணினேன் வழிதெரியாமல் என்பலங்கொண்ட மட்டும் கதறினேன். என் கதவைப்பலமாயுடைத்துக்கொண்டு ரகுநாதம் உள்ளேவந்தார். நான் என்பர்த்தாவிடம் சென்று நடந்ததைக்கூறி அவனைப்பழி வாங்க வேண்டுமென்றும் பிறகு என் உயிரை விட்டுவிடுவதாகவும் கூறினேன். ஐயா என் கணவன் சிறிதும் இரக்கமின்றி என்னைவெளியே தரத்திவிட்டு உடனே மறுமணம்செய்து கொண்டார். அன்று தான் புருடருடைய கடுநெஞ்சத்தையும் பெண்களுக்கு தற்காப்பு அவசியமென்பதையும் அறிந்தேன். நான் உயிர் துறந்திருப்பேன். சூபரண்டவாள் தான் கேஸ் நடத்தி அப்பழிகாரனைத் தகுந்தபடி தண்டிப்பதாகக்கூறி பிராது கொடுத்தார். மானமுள்ள ஸ்த்ரீகள் கோர்ட்டுக்குப்போக மாட்டார்கள் என்ற துணிச்சலினால் இப்படி குற்றங்கள் நடப்பதால் இதை நடத்தினால்தான் மற்ற ஸ்த்ரீகளுக்கு க்ஷேமமென்றும் வற்புறுத்தினார். ஐயோ. நான் நியாய ஸ்தலத்தின் முன் நிற்கும் போது என் மனமெப்படி இருந்தென்று நீரே ஊகியும். நான் அழிந்தவுடன் தெய்வ மென்ற நம்பிக்கை பாதிபோய்விட்டது. அன்று நியாய ஸ்தலத்தில் என்னைக்கண்டு எளனம் செய்த பலபிரபுக்களின் இரக்க மற்ற நெஞ்சையும் நான் அவமான மடைந்து அபஜயப்பட்டதையும் நினைக்க... ஆ... ஆ எனக்கு முழு நம்பிக்கையும் போய்விட்டது. நம் காரியங்கள் நம்மாலே செய்யப்பட வேண்டுமேயன்றி பரம்பொருளை ஈடுபடுத்துவது மடமை என்று எண்ணினேன். பிறகு அப்பீல் செய்திருப்பதாயும் நிச்சயம் நியாயம் கிடைக்கும் என்றும் என்னைத்தற்கொலை செய்து கொள்ளக்கூடா தென்றும் வேண்டிக்கொண்டார் சூபரண்டவாள் இம்மாதிரிகாடுகளில் என் பொழுதை மனதில் வைரம் உறுதிபடுத்திக்கொள்வதில் செலவிட்டு இந்த உலகத்தில் நியாயம் கிடைக்காவிட்டால் என்பழியை நானே தீர்த்துக் கொள்வதென்று நிச்சயம் செய்து விட்டேன். மானமிழந்தபின் வாழாமை முன்னினிதாயி

னும்...என் கதியை அடையும் ஸ்த்ரீகள் வீணில் அடிமையான வளர்ப்பினால் தன் உயிரை மாய்த்துக்கொள்வார்கள். அதனால் துஷ்டர்களின் கடத்தை கண்டிக்கப்படாது பெருகுமாதலால் நான் பழிவாங்கி பின்னோர்க்கு வழி காட்ட வேண்டும். மானம்போன பின் அனுதையான ஸ்த்ரீ ஆண் தன்மையடைகிறாள்.

கஜ.—ராஜ ஸ்த்ரீகளின் வீரம் அழிந்து போய்விட்ட தென்று எண்ணினேன் உமக்கு நான் சந்தோஷமாய் உதவிசெய்வேன். நான் நியாயத்தைக் கோரதமாய் கொள்ளையடித்திருக்கிறேன் இன்னும் பல கொடுந்தொழில் செய்திருக்கிறேன். ஆனால் ஸ்த்ரீகள் யாவரையும் தாய் போலவும் பாவிப்பேன். மீண்டும் ஒரு பொழுதும் தவறமாட்டேன். அவர்களுக்கபகீர்த்தியிழைப்பவர்க்குத் தீங்கிழைக்கவும் அஞ்சமாட்டேன். ஆகையால் என்னை நீர்நம்பலாம்.

த்ரௌ.—ஐயா, நீர் அறியாத தொன்றில்லை யெனத்தோன்றுகிறது. நீரோன இக்கொடுந்தொழில் கவிற் பிரவேசிக்க வேண்டும். நீரே செய்ததாக ஒப்புக்கொள்வதால் கேட்கிறேன்.

கஜ.—(பெரு மூச்சுடன்) காரணமா கேட்கின்றாய் காரணம் விதி. அதனால் துஷ்டர்களின் சகவாசம்.

த்ரௌ.—உலகத்தின் மீது வெறுப்புற்றால் ஞானியாக வல்லவோ.

கஜ.—அல்ல பணமிருந்தால் எத்தகைய துர்க்குணமும் சோபிப்பதையும் பணத்தால் அற்பமும் பெரும் புகழையும் கண்டு அப்பாழும் பணத்திற்காகவும் சரீர பலம் மனோபலம் இவற்றிற்கு நாட்டில் நியாயமான போக்கு இவ்வுலகதாலும், அகம்பாவங்கொண்டு இத்தொழிலில் பிரவேசித்தேன். ஆதியில் அது என் மனத்தைப்பீடித்து வந்தாலும் கடைசியில் எனக்குறுதியாக நீலிகின்று விட்டது. நான் பிடித்ததை சாதிப்பேன். மேலும் ஒரு மனிதனுக்கு எவ்வளவு தூரம் தைரியத்துடன் ஒரு கருமத்தைச்செய்யக்கூடுமென்பதை என்னளவிலேயே அறியும் பொருட்டு (போலீஸ் உடை போட்டு ஆள் வருகிறான்.

கஜ.—என்ன; என்ன.

ஆள்.—என்னை இதுவரையில் போலீஸார் கவனிக்கவில்லை ரகுநாதம் கண்ணில் படாமல் மறைத்து வருகிறேன். அனேகரகசியம் அறிந்துவந்திருக்கிறேன். அதைச்சொல்ல நேரமில்லை. எனென்றால் குணபூஷணம் இன்ஸ்பெக்டர் படைகள் எல்லாரும் அதோ வருகிறார்கள். சீக்கிரம் நாம்தப்பவேண்டும். நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன்...ஹ (பாறையிலிருந்து குணபூஷணம் திடீரென குதித்து கஜபதியைப்பின் புறமாக கட்டுகிறான். ஆள் குழலை ஊதி கஜபதியின் உதவிக்குப் போகிறான். கஜபதி திமிற அவனும்

குணபூஷணமும் உருண்டு கீழே அடர்ந்த புதரில் மறைகிறார்கள். போலீசார் இன்ஸ்பெக்டர் பத்மநாபன் முதலியார் வருகிறார்கள்.

ஆள்.—ஐயையோ சூப்ரண்டெசமான் இறந்தார். கஜபதி அதோ தூக்கிக்கொண்டோடுகிறான் (புதருக்குள் நுழைகிறான்).

இன்.—ஆ இதென்ன கஜபதி தூக்கிக்கொண்டு போகவா அட்டெனி ஷன் ரெடி. சுடத் தயாரா யிருங்கள்; Fire in the air பான்டு வாசியுங்கள். (பான்டு முழங்குகிறது.) கஜபதி ஆட்கள் செடிகளின் நடுவேநின்று சுடுகிறார்கள். குண்டு ஒரு கான்ஸ்டெபில் காலில் படுகிறது.

1-ம் கான்ஸ்டேபில் ஐயோ என் கால் போய்விட்டதே (ரத்தம் பெருக கீழே விழுகிறான் மற்ற கான்ஸ்டபில்கள் சற்று பின் வாங்க இன்ஸ்பெக்டர் தானும் பின்சென்று).

இன்.—அடே பயங்கொள்ளிகளா Forward எஸ்டெப்படுதி ப்ரெண்ட்டு Fire சுடுங்கள். அதோ பாரையை பார்த்து குறிவைங்கள். அங்குதான் ஆட்கள் ஒளிந்திருப்பான்கள். (போலீசார் சுட கஜபதி ஆள் ஒருவன் கீழே விழுகிறான். உடனே அவன் எழுந்து,

ஆள்.—அடே உத்தண்ட உன் ஆவியைக் குடிக்கிறேன். (சுடுகிறான் குண்டு பத்மனுபன் இடது கையில் படுகிறது).

பத்ம.—ஆ அவனை விடாதேயுங்கள் சுடுங்கள் கைபோயிற்றே கைகுட்டையால் கட்டிக்கொள்கிறான். போலீசார் மறுபடி குறிவைக்கிறார்கள். கஜபதியாட்கள் கற்களை எறிய அவை போலீஸாட்கள்மேல் விழுந்து குண்டுகள் வெடிக்கின்றன.

போலீஸாட்கள்.—ஐயோ எங்கள் உயிருக்கு ஆபத்து நேரிட்டது, பிறகு பார்த்துக்கொள்ளலாமே.

இன்.—ஆமாம் இவங்கள் பயங்கொள்ளிகள். அடே எதிர் நின்று சண்டை செய்யுங்களேண்டா. கள்ளப்பசங்கள் (இன்ஸ்பெக்டர் கையில் ஒரு பெரிய கல்விழ அவர் அவசரமாய்ப் பின் ஓடுகிறார். போலீசாரும் சிதறி ஓடுகிறார்கள். கஜபதியாட்கள் வெளியே வருகிறார்கள்).

ஆள்.—அடே புலிகள் நில்லுங்கடா. இந்த இன்ஸ்பெக்டரைக் குறி வைங்கடா அவனை தீர்த்துப்போடுவோம். அதோ சரிகைத்தலப்பா அவன் தான் (இன்ஸ்பெக்டர் தலைப்பாவைக் கீழே எறிந்துவிட்டு கான்ஸ்டேபிலகளுக்கு நடுவில்போய் மறைகிறார். கஜபதியாட்கள்கூட சில கான்ஸ்டபில்கள் விழுகின்றார்கள்).

ஒரு கான்.—ஐயோ இதென்ன அவமானமாயிருக்கிறதே இத்தனை பேர் இருக்க ஓடுவானேன் (திரும்பி சுடுகிறான் கஜபதி ஆட்கள் இருவர் காயப்பட்டு விழுகின்றனர். மற்றொரு ஆள் தடியால் இவனை யடிக்க கான்ஸ்டபில் மூர்ச்சையாகின்றான் காயம்பட்டவர்களை யெல்லாம் தூக்கிக்கொண்டு கஜபதியாட்கள் மறைகின்றனர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
RECEIVED
1914
MADRAS.

FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லார் தவர்.—திருக்குறள்.

Editor:
Sister R. Thayarammah.

பத்ராதிபர்:
ஸஹோதரி ரேவ. தாயாரம்மா.

Vol. 3. தொகுதி 3 } ஆகந்தவரு வைகாசிமீ, May. 1914. { No. 8. பகுதி 8.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேக சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E

291

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

மதுரை இந்து மாதர் ஐக்கிய சங்கத்திற்காக
ஸ்ரீமதி கலியாணியம்மாளால் இயற்றப்பட்ட பாடல்கள்.

ராகம் காம்போதி-தாளம் ரூபகம்.

பல்லவி.

இந்திய மாதர்க் கெந்த மாதரும்
இணை யாவாரோ எதிரிலா

அநுபல்லவி.

தன் மறுப்பினுங் கற்பினும்
தான மான நாண ந்தனிலுங் (இந்திய)

சரணம்

அன்னிய மாதர் போன்று
அதி சுதந்திரத்தினும்
ஆண் சகவாசத்தினும்
ஆவல் கொள்ளாரென்றும்
அன்பின்றி ஆடவர்
அடிமை போனடத்தினும்
ஆதாரமாய வரடியே தொழும் (இந்திய)

சுயக்யாரி ரங்கராயா என்ற மெட்டு.

பல்லவி.

சுந்தரி கான் சொந்த ஸோதரிபோல்
அந்தரங்கத்தோடு வந்து அன்பாயிருங்கள்
அருந்ததி போகற் புடனிருங்கள்
சந்தமும் சத்தியமும் கைக்கொள்ளுங்கள்

சரணம்.

இந்துப் பெண்மணிகள் எந்த விதத்து முயர்ந்தவரென நம்மை
எந்த நாட்டாரும் சிறந்தமே நாட்டாரும் செப்பிட கல்வியதனில்
முந்துவோம் முந்துவோம் முன்பாக நம்மை யின்ற
இந்தியத்தாய் சிந்தை மகிழ்ந்திடவே. (சுந்தரிகாள்)

மித்திரன் போன்றதோர் பத்திரிகைகளை
சிரத்தையாய் படித்து வாருமே
உத்தமிகட்கென்று உதித்த தொரு நல்ல
பத்திரிகையாகும் பெண்கல்வியுமே
சித்த சுத்தியுடனே திடமாய்
கற்றுக்கடைத்தேற வாருமே.

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Educational Progress in Mysore

மைஸூரில் கல்வி அபிவருத்தி:—மைசூரில் கல்வி ஸம்பந்த மாக சில சீர் திருத்தங்கள் செய்ய, திவான் ஸர் விச்வேச்வரய்யா ஒரு கமிட்டி ஏற்படுத்தினார். அக்கமிட்டியார் வெகு நாள் ஆலோசனை செய்து ரிபோர்ட் வாசித்தார்கள். அதில் கல்வி ஸம்பந்தமாக 18 விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்திருக்கிறார்கள். அவைகளில் முக்யமான 12 அம்சங்களைப் பற்றித்தெரிவிப்போம்: 1. கட்டாயப் படிப்பு ஏற்பாட்டை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருதல்; 2. பெண்கல்வியை வ்ருத்தி செய்தல்; 3 ஆரம்பப்பள்ளிக் கூடங்களில் அனுபோகக் கல்வி போதித்தல்; 4. ஸ்கூல்களுக்கு வெளிப்புறங்க களில் கல்வி புகட்டல்; 5. பள்ளிக்கூட பாடங்களை திருத்துதல்; 6. புஸ்தகசாலைகளை ஸ்தாபித்தல்; 7. சரீரப்பயிற்சியை வ்ருத்தி செய்தல்; 8. கன்னட பாஷையை வ்ருத்திசெய்தல்; 9. மைசூர் ஸமஸ்தானத்துக்கு ஒரு யூனிவர்ஸிடியை ஸ்தாபித்தல்; 10. ஐந்தா வது வகுப்புவரையிலாவது பெண்களை படிக்கவைக்க, ஸ்காலர் ஷிப் புகள் கொடுத்து ஊக்க மூட்டுதல்; 11. பெண்களுக்கு ஒரு தொ ழிற்பள்ளிக்கூடம் ஸ்தாபித்தல்; 12. படிக்க முடியாதவய தை சென்ற ஜனங்களுக்காக இராப்பள்ளிக்கூடம் வைத்து ப்ரஸங்கம் செய்ய ஏற்பாடு செய்தல்.

மேற் கண்ட ஆலோசனைகளின்படி கவர்ன்மெண்டார் முடிவு செய்து விடுவார்கள். மைசூர் ஸமஸ்தானம் கல்வி விஷயத்தில் வெகு தூரம் முன்னேற்றத்தையடையுமென்று எதிர்பார்க்கிறோம். பரோடா ஸமஸ்தானத்துக்குச் சமமாக கூடிய சீக்ரம் வந்துவிடும். திருவனந்தபுரம், ஹைதராபாத் முதலிய ஸமஸ்தானங்களும் கல்வி விஷயத்தில் மைசூர் ஸமஸ்தானம் வைத்த அடியை பின்பற்று வது நலம்.

Christian Missionary Schools.

க்ரிஸ்தவப்பாதிரிப் பள்ளிக்கூடங்கள் :—வங்காளத்திலுள்ள ஸ்ரீராம்பூர்காலேஜ் கொண்டாட்டதினத்தன்று ஸர் ஜார்ஜ் மாக்ளன்

பவர் பேசினதை நம் ஜனங்கள் கவனிப்பது அவசியமாதலால் இங்கு அவர் பள்ளிக்கூட விஷயமாக பேசின பேச்சின் ஸாராம்சத்தை எழுதுகிறோம். "க்ரிஸ்தவமதத்தில் மாணவர்களைப்பயற்சி செய்வதற்காகவே ஸ்கூல்களையும் அதையொட்டி சாப்பாடு விடுதி, தங்கவிடுதி முதலியவைகளையும், வைத்து நடத்துகிறோம். பள்ளிக்கூடத்து வேலை கஷ்டம் ஜாஸ்தியாய் விட்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய பட்டணங்களிலுள்ள க்ரிஸ்தவ கலாசாலைகளிலும், ஸ்கூல்களிலும் இதைமாதிரிகஷ்டங்கள் இருக்கிறதாகத்தெரிகின்றன. ஆகையால் மாணவர்களுடன் ஸதா ஸர்வகாலம் கெருங்கிப்பழகும் வேலையையேகொண்டுள்ள உபாத்யாயர்கள் போதகர்களாயிருக்கவேண்டும்."

இவர் பேசின விஷயத்தைப்பற்றி சென்னை அடையாற்றில் நடந்து வரும் 'காமன் வீல்' என்ற பத்திரிகையின் வருமாறு எழுதுகிறது. "ஸர்ஜார்ஜ்மாக் நடக்கிற உண்மையான விஷயத்தை எடுத்துச்சொன்னார். இதை ஹிந்துக்களும் மஹமதியர்களும் கவனித்து க்ரிஸ்தவமார்க்கத்தில் மாணவர்களைச்செலுத்துவதற்காகவே பாதிரிமார்களால் நடத்தப்படும் காலேஜுகள், பள்ளிக்கூடங்கள், ஹாஸ்டல்கள் முதலியவைகளுக்கு தங்கள் பிள்ளைகள் போய் சேர்ந்து படிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பாதிரிமார்களின் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பதனால் மாத்ரம் க்ரிஸ்தவர்களாகிவிடமாட்டார்கள். ஆனால் மதஉணர்ச்சியற்று நாஸ்திகர்களாவார்கள்."

The Malabar Marriage Act.

மலபார் விவாஹச்சட்டம்:—மலபார், திருவனந்தபுரத்திலுள்ள முக்யமாக நாயர்கள் வாரர்கள் ஜாதியில் சட்டப்படி விவாஹம் இடையாது. ஸம்பந்தம் என்னும் ஒரு வழக்கம் வெகுகாலமாகமிருந்து வருகிறது. இவ்வழக்கத்தைச் சட்டம் ஆதரிக்கிறது இடையாது. இந்த ஒழுங்கீனமான வழக்கத்தைச்சட்டம் ஆதரிக்கும்படி செய்கிறதற்கு, ஆளாபில் மிஸ்டர் சங்கரன் நாயர் அவர்களால் (இப்போது ஜட்ஜ்) 1896வது த்தில் கவர்னர் சட்ட ஸபையில் ஒரு மஸோதாகொண்டு வரப்பட்டு, அது நிறை வேறிற்று. இந்த மஸோதாவுக்கு விரோதமாக நின்றவர்கள் அநேகர். நாயர் மார்களும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அந்த மஸோதா இப்பொது சட்

டமாகியிருந்தும் ஒருவரேனும் சட்டப்படி விவாஹத்தை ரிஜிஸ்டர் செய்து கொள்ளவில்லை. சென்ற வருஷம் 1914வது மார்ச்சுமீ வரை நாயர் ஜாதியில் தென் மலபார்ஜில்லாவில் ஒரே ஒரு ரிஜிஸ்டர் விவாஹமாயிருக்கிறது.

போன வருஷம் திருவனந்தபுரம் சட்ட ஸபையில் நாயர்களின் விவாஹத்தைப்பற்றியும் குடும்ப நிர்வாஹத்தைப்பற்றியும், ஒரு மஸோதா கொண்டுவரப்பட்டு சட்டமாகியிருக்கிறது. இப்போது ஸம்பந்தம் என்கிற வழக்கம் சட்ட விவாஹமாகக் கருதப்படுகிறது. தனியாக விவாஹத்துக்கு ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டியதில்லை. இது நாயர்களைத்தவிர மற்ற புருஷர்களை கட்டுப்படுத்துமா என்கிறது ஸந்தேகம்.

A Gift.

ஒரு நன்கொடை:—தற்காலம் ப்ரமுகர்கள் ஆங்காங்கு ஸ்த்ரீகளின் கல்வி அபிவ்ருத்திக்கு தங்களுடைய சக்திக்குத் தகுந்தபடி பணம் உதவிபுரிவது மன்றி, சாஸ்வத நிதியாகவும் ஏற்படுத்திவருகிறார்கள். இது நல்ல காலத்தின் அறிகுறியாகும்.

சென்னை ஆனரரி ப்ரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டு மிஸ்டர் P. V. கிருஷ்ணஸாமி செட்டிகாரு ஹிந்து ஸ்த்ரீகளுடைய வித்யாபிவ்ருத்தியைக்கருதி, கவர்ன்மெண்ட் வித்யா இலாகா ஸெக்ரிடேரியிக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம் பின் வருமாறு:—

ஹிந்து ஸ்த்ரீகளுடைய வித்யாபிவ்ருத்தியின் பொருட்டு, 1,200 ரூபாயை சாஸ்வத பண்டாக ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறேன். ஹிந்து ஸ்த்ரீகளுக்கு படிப்பு என்றால் விஷம். அவர்கள் தங்களுடைய பெண் குழந்தைகளை ஸ்கூலில் படிக்க விடுகிறதில்லை. அவ்விதஸ்த்ரீகளை விடுமுறை காலங்களில் பெண்பாடசாலைக்கு வரவழைத்து அவர்களுக்கு இயற்கையமைப்பின் அழகையும், நவீன சாஸ்த்ரம், சித்ரவேலை, பூகோளசாஸ்த்ரம், வானசாஸ்த்ரம், சுகாதார சாஸ்த்ரம் முதலிய விஷயங்களை உபந்யாஸங்களாலும், படங்களாலும், ஸ்லேட் மேடாகிராப்பு படங்களாலும் விளக்கிக்காட்டி, அவர்களின் மனதில் பதியும்படி செய்யவேண்டும். இதற்கு பெருந்தொகை வேண்டியிருக்கிறது. இப்பொழுது

1,200-ரூபாய் மூலதனத்துடன் ஜார்ஜ் டவுனில் இக்கார்யத்தைத் தவக்கக் கோருகிறேன்.

இவர் எழுதியனுப்பிய கடிதத்தை கவர்ன்மெண்டார் வாசித்துப் பார்த்துவிட்டு, அவர் செய்திருக்கும் நன்கொடைக்காக அவருக்கு வந்தனஞ் செலுத்தினார்கள்.

A Woman Engineer.

ஒரு ஸ்த்ரீ எஞ்சனீர்:—லண்டன் நகரில் மிஸ் கிரிப் (Griff) என்று ஒரு ஸ்த்ரீ எஞ்சினீர் இருக்கிறார். அநேகவித கைத்தொழில்களில் அவளுக்கு கல்லபரிக்ஞை உண்டு. பத்ரிகைப் பிரதிநிதி யொருவர் சமீபத்தில் அவளைப் பார்த்துப் பேசிய பொழுது, அந்த ஸ்த்ரீ எஞ்சினீர் பின்வருமாறு சொன்னார்:—

"இன்னின்ன யந்த்ரங்களும் வேலைகளும் ஸ்த்ரீகளுக்கு மிகவும் ஏற்றனவென்று ஸ்த்ரீகளுக்குப் புத்தி சொல்பவர் பலர் வேண்டியிருத்தலால், நான் இவ்வேலையைக் கைகொண்டேன். பண்ணை சாதுபடியில் எத்தனை ஸ்த்ரீகள் இருந்து வருகிறார்களென்று அநேகருக்குத் தெரியாது. என்னுடைய சிநேகிதர்களில் இருவர் கானடா நாடு சென்று அங்கு பெரிய பண்ணைத் தொழில்கள் செய்து வருகிறார்கள். அத்தொழிலைச் சரிவரச் செய்வதற்கு அநேக யந்த்ரங்களை அவர்கள் உபயோகித்து வருகிறார்கள். இவ்வழியில் ஸ்த்ரீகளுக்கு அநேக வேலைகள் கிடைக்குமென நான் நம்புகிறேன். பால் சாலைகள், வண்ணாரச் சாலைகள் இவைகள் ஸ்தாபிக்கப்படுவதிலும், வீட்டுக்கு விளக்குப் போடுவதிலும் ஸ்த்ரீகள் தேர்ச்சி பெறவேண்டுமென்பதே என் உத்தேசம்."

நம் தேசத்திலும் மேதாவிகளான சில ஸ்த்ரீகள் அநேக தரைகளில் பெருங் காரியங்களை நிர்வஹித்து வருகிறார்கள். அவர்களெல்லாம் வெளிக்கு வரவில்லை. ஆயிரும் அவகாச நேரங்களில் ஸ்த்ரீகள் வீண்பொழுது போக்காமல் ஏதாவது தொழில்களில் பிரவர்த்தித்து அதில் முன்னுக்கு வரவேண்டியது இன்றியமையாதது.

WOMEN'S RIGHTS.

By

Mr. M. R. Sreenivasa Aiyer,

ஸ்த்ரீகளின் ஸ்வதந்தர்யங்கள்.

ஸ்த்ரீகள் புருஷர்களைவிட பொதுவாக மெல்லிய தேகத்தையுடையவர்களாயிருக்கிறார்கள். அதே ப்ரகாரம் அவர்களுடைய மனதும் புருஷர்களுடைய மனதைவிட நிடம் குறைவாயும் பயப்படக்கூடியதாயும் இருக்கிறது. இந்த காரணங்களினால் அவர்கள் தங்களைத் தாங்களே வெளி யுலகத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள பொதுவாக சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். உலக நீதியை எடுத்துச் சொல்வதில் ஒப்பற்றவரான ஔவையாரும் "காவலுனே பாலையற்கழகு" என்று கூறியிருக்கிறார். நன்றாய் நடக்கத் தெரியாத ஒரு குழந்தை இஷ்டப்படி தெருவில் திரியவேண்டுமென்று அபேக்ஷித்தால், அது கூடாதென்று தமிழ்த் குழந்தையினுடைய அபேக்ஷித்தால், அது கூடாதென்று சொல்லலாமா? இவ்வுலகத்தில் ஸ்த்ரீகள் நடந்து கொள்கிறதில் 3 விஷயங்கள் கவனிக்கத்தக்கன. அதாவது:—புருஷர்களைப்போல் அவர்களுக்கு பகவான் கொடுத்திருக்கிற புத்தியைக் கல்வியால் விருத்தி செய்யாமலும் அவர்களுடைய தேகம், அழகு முதலியவைகள் கேவலம் மனுஷ்ய ஸுகத்துக்காகமட்டும் ஏற்பட்டதாகவினைத்து, அவர்களை வெளி யுலகத்திலுள்ள கல்காற்று, கண்காணிகள் இவைகளை அனுபவிக்க வொட்டாமல் தடுத்து, நடத்திவருகிறவர்களின் நாகரீகத்தையும் படிப்பையும் நாம் சொல்லவும் வேண்டுமோ?

2வது:—ஸ்த்ரீகளுக்கு விதைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவைகள் ஸன்மார்க்கம், தெய்வபக்தி, ஞானம் ஆகியவைகளை உண்டாக்கும்படியாயிராமல் புருஷர்களுடைய ஸ்வபாவத்திற்கு அவச்யமாயுள்ள வழிகளில்ஸ்த்ரீகளைப் ப்ரவர்த்திக்கும்படி செய்கின்றன. இதனால் ஸ்த்ரீகளுக்குள்ள அடக்கம் நீங்கி, கர்வமும் பலவிதமான வீண்பெருமையும் ஏற்படுகின்றன. அன்றியும் புருஷர்கள் நடத்திவருகிற ராஜாங்கம் முதலிய பலவிதமான வெளியுலக கார்யாதிகளில் புருஷர்களுக்குப் பதிலாக தாங்களே நடத்த வேண்டுமென்று ஸ்த்ரீகள் முயற்சிப்பதும் மேற்கண்ட படியுள்ள கல்வியின் பயனாகயிருக்கிறது.

3வது :—ஸ்த்ரீகள் தர்மம், தெய்வபக்தி, புருஷவிச்வாஸம், ஞானம், இவைகளை வருத்தி செய்யக்கூடியதாயும் வீட்டுக்குள்ளி ருந்து செய்யவேண்டியதாயுமுள்ள உலகசம்மத்தமான கல்விகளைக் கற்று, வெளி யுலக விஷயங்களில் ப்ரவர்த்திக்காமல் வீட்டிலேயே யிருந்து, இல்லாள் எனப் பெயர்பெற்று, இல்லற தர்மத்தை நடத்தி வருவது. அப்பேற்பட்ட கல்வி பெறப்பெற்றிருக்கிற ஸ்த்ரீக்கு நாணம், மடம், அச்சம், பயிற்பு, ஆகிய இன்னும் நு குணங்களும் அவளுடைய ஸ்வபாவத்திற்கு ஏற்பவிரர்து விளங்கும். அவள் வீட் டிலேயே இருந்து புருஷனால் அடையப்படவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு, ஆகிய இன்னும் நு ஸாதனங்களுக்கும் அவள் இன்றியமையாத துணையாகி அவைகளை அபிவருத்தி செய்து வருவாள்.

நாணம் என்பது வெட்கம், புருஷர்கள் மத்தியில் கூச்சமில் லாமல் பேசுதல். குலஸ்த்ரீகள் அப்படிச் செய்யக்கூடாது. குல ஸ்த்ரீகள் தாங்கள் தன் புருஷனுக்குரிய கடமைகளை செய்து குழந்தைகளையும் இன்னும் வீட்டிலுள்ள மாமன், மாமி, முதலிய மற்றவர்களுடைய சௌகர்யங்களை கவனித்தல்.

மடம் என்பது தான் தன்னுடைய கல்வியின் பயனால் எந்த விஷயங்களை அறிந்திருந்தபோதிலும் அவைகளைப் புருஷர்களுக் குப் பகரங்கப்படுத்தி அவர்களால் புகழப்படவேண்டுமென்று விரும்பாமல் ஒன்றும் தெரியாதவள்போல் அடங்கியிருத்தல்.

அச்சம் என்பது தன்னுடைய மெல்லிய தேகம், மனம், இவை களுக்கேற்ப தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு பயந்த ஸ்வபாவமாயிருத்தல்.

பயிற்பு என்பது பரபுருஷர்கள் தன் யோக்யதையைக்கண்டு லன்மானம்கொடுத்தும்படியான பாக்யத்தையும், மரியாதையை யும் கருதாமல், தன்னுடைய புருஷன் பிதகம் தவிற மற்ற புருஷர் களுடைய ஸம்பந்தம் எவ்விதமாகத் தனக்கு நேர்ந்தாலும் அதை அருவருப்பது.

மேற்சொன்ன குணங்களெல்லாம் வாய்க்கப் பெறாமல் இல்லறம் நடத்திவருகிற ஒரு ஸ்த்ரீ 'ஸ்வதந்த்ர்யம்' உடையவளா அல்லது நிர்ப்பந்தம் உடையவளா என்பது கவனிக்க வேண்டிய விஷயம். உலகத்தில் இந்திரிய ஸுகங்களுக்காகவும் அஹங்காரத்திற்காகவும் இஷ்டப்

போல் மனம் போனபடியெல்லாம் பொழுதுபோக்கி வரும் ஸ்த்ரீ புருஷர்களை ஸ்வதந்த்ரமுள்ளவர்களென்று சொன்னால் அது எவ் வாறு பிசகோ அதே ப்ரகாரம் சுதந்த்ரமென்பதற்கு பிசகான அர் த்தம் கொடுக்கப்படுகிறது. மேற்கண்டபடி விவரித்துச் சொல்லப்ப ட்ட ஒரு ஸ்த்ரீயானவள் தன் புருஷனுடைய விசேஷ இன்பத்திற் கும் மரியாதைக்கும் பாத்ரமாகிறாள். ஒரு ஸ்த்ரீ குழந்தைப்பருவத் தில் தகப்பனின் ஸ்வாதீனத்திலிருந்து வருகிற ஒருமாத்ரியாக வும், அப்பால் புருஷனுடைய ஆதீனத்திலிருந்து வருகிற ஒருமனை யாகவும் அதற்குப் பிறகு மகனுடைய ஸம்ரக்ஷணையிலிருந்து வருகிற ஒரு தாயாராகவும் இருந்துவருகிறாள். ஆனால் அவளுடைய அடக்கமும் மெல்லினமான ஸ்வபாவமும் புருஷனுடைய மனத் தை இளக்கி அவள் அபிப்ராயப்படியே பொதுவாகக் குடும்பக் காரியங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தன் குமாரத்திக்குக் கணவன் நிர்மாணிப்பதோ, அல்லது பங்குக்களையபரிப்பதோ அல்லது இதராளுக்கு தர்மம் செய்வதோ, ஆகிய இவைகளுக்கெல் லாம் ஸ்த்ரீகளுடைய கோக்கத்தை அவமதித்து விட்டு, புருஷன் தானாக மட்டும் ஸமாதானமாய் நிறைவேற்றி சாதித்துவிடுவான் என்பது மிகவும் துர்லபம். இந்தக்காலத்தில் நமது தேசத்தில் இப்பவும் அனேக ஸ்த்ரீகள் படியாதவர்களாயிருந்த போதிலும் தொன்று தொட்டுவந்த வழக்கத்தை யனுசரித்து மேற் சொல்லிய நாணம்முதலிய நான்கு குணங்களையும் நமது ஸ்த்ரீகள் அடையப் பெற்றிருக்கிறார்கள் என்பது நிண்ணம்.

நிறைந்த கல்வியில்லாத குறையினால் மேற் குணங்கள் மேன் மேலும் ப்ரகாசித்து விளங்க வாய்ப்படாமல் இருக்கின்றன அப்படியிருந்த போதிலும் புருஷர்கள் தங்கள் கல்வித்திறமையி னால் நமது தேசத்திற்கு அனேக ஆசாரசீர்திருத்தங்கள் உண்டி பண்ணவேண்டுமென்று நினைத்தாலும் அதை நிறைவேற்றுவது மிகவும் ச்ரமமாயிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? ஜனப் பெருக்கத்திற் பாதியுள்ளவர்களாகிய ஸ்த்ரீகள் மேற் சீர் திருத்தங் களுக்குத் தடையாயிருக்கின்றார்கள். அவர்களை மீறி புருஷர்கள் சீர் திருத்தம் செய்ய அசக்தர்களாயிருக்கிறார்கள். தாயாயிருந் தாலும்சரி, மனையியாயிருந்தாலும் சரி, ஸஹோதரியாயிருந்தாலும் சரி, குமாரத்தியாயிருந்தாலும் சரி ஆகிய இவர்களைக் கல்வியினால் நாகரீகத்தையடைந்த மனதையுள்ள ஒருவன் மேற் ஸ்த்ரீகளுடைய

மனதகளை நோகச்செய்து அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாய் எந்தக்காரியத்தையும் சாதிக்க வல்லவரை என்று பார்த்தால் அது முடியாதகார்யம். அதுதான் ஸ்த்ரீகளுக்குள்ளவாஸ்தவமான ஸ்வாதந்தர்யம். மேலே இரண்டாவது விதமாகச் சொல்லியிருக்கிறபடி புருஷர்களுக்குப் போட்டியாய் அவர்களுடன் எதிர்த்துமல்லுக்கு நின்று போராடி, புருஷர்களுடைய தயவுதாக்ஷண்யத்தையும் உலக முழுவதும் ஒரு அபகீர்த்தியையும் பல அக்கிரமான செய்கைகளுக்காக ராஜாங்க தண்டனையையும் அடைவதையும் தவிர மேலே 2-வது வகுப்பிற் சேர்ந்த கம்முடைய மேல் காட்டுஸ்த்ரீகளுக்கு வாஸ்தவமான 'ஸ்வாதந்தர்யம்' எப்படிக் கிடைக்கப்போகின்றது. ஸ்த்ரீயானவள் தேசமென்னையினல் வீட்டில் ஸாதகாயியாயிருந்து வரவேண்டியவளாயிருக்கிறாள். அவளுக்கு மாதவிடாய், கர்ப்பம், ப்ரசவம் முதலிய வீட்டில் நிறுத்திவைக்கிற நிர்ப்பந்தங்கள் வெகுவாயிருக்கின்றன. 'இவைகள் ஸ்வாதந்தர்யம்' என்று பிசகாக மதிக்கப்படுகிற வெளி யுலக சட்ட திட்ட ராஜாங்க கார்யங்களில் அவர்கள் புருஷர்கள் ஒப்பந்தப் பிரவேசிப்பதாயிருந்தால், அவர் பெற்றுவைக்கிற குழந்தைகளை அழாமல் பால் கொடுத்துவளர்ப்பது யார்? ஸாமான்ய குடும்பங்களில் ஸ்த்ரீ புருஷர்களுடைய வெளிப்ரதேசப்போட்டியில் வீட்டில்சமைத்து அன்னம் அளிப்பது யார்? உலகம் உண்டானது முதல் காளதுவரை காகரீகமான தேசங்களிலும் வாழ்ந்து வந்துள்ள ஸ்த்ரீகளுக்குத் தோன்றுத ஸ்வதந்த்ர ஞானம் மேலே இரண்டாவது வகுப்பு ஸ்த்ரீகளுக்கு இப்பொழுது புதிதாகத்தோன்றிவிட்டதாக நினைத்து ஸ்த்ரீ என்ற பேருக்கு அவமானமாயுள்ள துர்க்கிருத்தியங்களை செய்துவருகிறதாக நமக்குத் தெரிய வருகிறது.

காணத்தையே தொன்று தொட்டு அடைந்து வருகிற அலக்காரமான ஆபரணமாகப் பூண்டு ப்ரகாசித்து வருகின்ற நமதுதேசத்து ஸ்த்ரீகளுக்கு இப்பேற்பட்ட பாப ஸ்வபாவமான ஸ்த்ரீ 'ஸ்வதந்தர்யம்' ஸர்வதா வேண்டாம். அப்பேற் பட்ட ஸ்வதந்த்ரதை அவர்கள் எப்பொழுதும் காடாமல் இருக்கும் பொருட்டு ஈசன் கருணை செய்வாராக.

பெரிய குளம், எம். ஆர். ஸ்ரீனிவாஸய்யர்,
மதுரை. வக்கீல்.

300

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1914
MADRAS.

THE EFFECTS OF WESTERN CIVILISATION ON THE EASTERN WOMEN.

By

Sri Pankajam.

மேனாட்டு நாகரீகப்பயனும் கீழ்நாட்டு ஸ்த்ரீகளும்.

பெண்களுக்குக் 'கல்வி பழகேயழகு' என்றபடி கல்வியின் பயனல் எவ்வித நன்மைகளும் அவர்களுக்கு அனிகலமாகு மென்பது பெறப்படும். அநேகவிதமான நற்காரியங்கள் இருபதாம் நூற்றாண்டில் துவக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு சான்ற யுகமென்றும் கூறலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் கீழ்த்தேச பெண்பாலார்க்கு நற்காலப் உதயமாகியிருக்கிறதென்று சொல்வது எவ்விதத்திலும் பொருந்தும். ஒரு ஸமூகம் மேலிலடைகிற தற்கு அந்தஸமூகத்திலுள்ள ஆண்மக்கள் ப்ரதிமனிதனும் கல்வி, சிரந்திருத்தம், நாகரீகம் முதலியவைகளில் தேறி வரவேண்டியது எவ்வளவு அவச்யமோ அச்சமூகத்திலுள்ள ஸ்த்ரீகளும் மேற்சொல்லிய வைகளில் தேறி வரவேண்டியதவச்யம். மேனாட்டு ஸ்த்ரீகளும் ஒரு காலத்தில் தகுதியான கல்வி, சிரந்திருத்தம், ஸ்வபாதீனம் முதலியவைகளில்லாமல் அடைபட்டிருந்தார்கள். இப்போது எல்லாவற்றிலும் முன்னடைந்திருக்கிறார்கள். அதுபோல் கீழ்நாட்டு ஸ்த்ரீகளும் நாகரீகம், சிரந்திருத்தம் முதலியவையற்று அடைபட்டிருந்த காலமுமுண்டு. ஆனல் தற்காலம் கீழ்நாட்டு ஸ்த்ரீகளுக்குள் ஒரு நவீனகிளர்ச்சியுண்டாயிருக்கிறது. அந்த நவீனகிளர்ச்சியில் விசேஷக்கருத்துகள் அடங்கியிருக்கின்றன.

மேற்குதேசஸ்த்ரீகளைக் காட்டிலும் கீழ்த்தேசஸ்த்ரீகள் பல வழிகளில் நிருத்தமடையவேண்டியது ஜாஸ்தி. சீனு, ஜப்பான் முதலிய தேசங்களில் ஸ்த்ரீகளின் நிலையை அறிந்து ஸர்வகலாசாலைகளும், ஹைஸ்கூல்களும், ஸ்த்ரீகளுக்காக லைப்ரரிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அநேக பெண்மணிகள் கல்லபட்டங்கள் பெற்றுவைத்யர்களாகவும், உபாத்யாயர்களாகவும், கம்பெனி முதலிய ஸ்தாபனங்கள் வைத்து நடத்துகிறவர்களாகவும், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களாகவும் அமர்ந்து வருகிறார்கள். ஐம்பது வருஷங்களுக்குமுன் சீனதேசத்தில் பெண்கள் கல்வி கற்கத்துவங்கினார்கள். சுமார் இருபது வருஷங்களுக்குமுன் பிறந்த பெண் குழந்தைகளின் பாதங்களை

26 301

கட்டுகிறது பிசகு என்று போராடினார்கள். பெண்களின் முன்னேற்றத்தைக்கண்டு 1907-ம் வருஷத்தில் சிலு கவர்ன்மெண்டார் தொழிற் கலாசாலைகள் ஸ்தாபித்தார்கள். படித்த ஸ்த்ரீகள், குழந்தைகளுக்காகவும், ஸ்த்ரீகளுக்காகவும் ஸமாசாரப் பத்ரிகைகள் நடத்திவருகிறார்கள். சிலு கவர்ன்மெண்டாரும் ஸர்க்கார் பாடசாலைகளில் பத்ரிகைகளை வாங்கி உதவிசெய்கிறார்கள். இப்போது புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஜனப் பார்லிமெண்டில் ஸ்த்ரீகள் தங்களுக்கு ஸமஅந்தஸ்து கொடுக்கப்படவேண்டுமென்று வாதாடுகிறார்கள்.

அதிக த்ரவ்யமுடைய சிந்திவான் என்னும் ஸ்த்ரீ தன் த்ரவ்யத்தை எல்லாம் ஸமஅந்தஸ்து வேண்டுமென முன் சொன்னவர்களுக்கு உதவி செய்தாள். ப்ரபலவர்த்தகனின் மகள் ஒருவள் தன் எல்லாப்பணங்களையும் தனது ஸஹோதரிகள் படிக்கிறதற்கு பாடசாலைகள் ஸ்தாபிக்கச் செலவழித்தாள். அவள் ஆங்கிலபாஷையில் நன்றுகப்பேசி ஸ்த்ரீகளுடைய ஸ்வதந்த்ரங்களை வெளியிட்டு அவைகள் வேண்டுபென்று வாதாடினாள். அறுபத்தைந்து வயதுள்ள சூ என்னும் அம்மாள், சீன தேசத்துக்கு தேவை என்ன என்ற விஷயமாய் மிகவும் உருக்கத்துடன் பேசி, 1700 ஸ்த்ரீகளை எழுப்பிவிட்டனள். இன்னும் எவ்வளவோ ஸ்த்ரீகள் புருஷர்களோடு ஸம அந்தஸ்துக்கு வர வேண்டும் என்று ஸங்கங்கள் ஸ்தாபிக்கிறதும், தெருவு தெருவாய் ப்ரஸங்கம் செய்கிறதுமாக இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் சீனப்பெண்கள் மேனிலைக்கு வர அறிகுறியாகப்புலப்படவில்லையா? ஆகவே மேற்கு தேச நாகரீகத்தினை செல்வாக்கு என்னும் தோன்ற வில்லையா? இன்னும் மேனாட்டு நாகரீகம் எவ்வளவு செய்யுமோ? காமறியோம்.

நம் தாய் தேசமாகிய இந்தியாவின் பெண்களின் நிலைமை உற்று நோக்கும்போது அந்த மேனாட்டு நாகரீகத்தினால் தான் இவ்வளவு தூரம் முன் அடைந்திருக்கிறார்களென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆசார சீர் திருத்த ஸங்கங்கள் ஊர் ஊராய் ஸ்தாபிக்கப்படுகின்றன. ஸர்க்கார், பெண்களின் கல்வியில் வெகு அக்கரை எடுத்து பாடுபடுகிறார்கள். ப்ரமுகர்களும் பாடசாலை ஸ்தாபனங்களுக்கு உதவி புரிகிறார்கள். பால விவாஹம் வரவரகுறைந்து வருகிறது. இந்து வாலிபர்களும் அநேகமாக கல்வி கற்று முடியுமுன் விவாஹம் செய்து கொள்ள மறுக்கின்றனர். விதவா விவாஹமும்

ருதுமதி விவாஹமும் ஆங்காங்கு கடைபெறுகின்றது. படித்தவர்கள் கல்லாதஸ்த்ரீகள் ஜனஸமூகஜீக்யத்துக்குத்தடையாயிருக்கிறார்களென்று உணர்ந்திருக்கிறார்கள். ஸ்த்ரீ ஸமாஜங்கள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்படுகின்றன. அச்சபைகளில் ஸ்த்ரீகளின்ஒழுக்கம், ஆசாரம், நாகரீகம் முதலிய ஸ்த்ரீகளின் வ்ருத்திக்குறியவிஷயங்கள் பேசப்படுகின்றன. சில ஸ்த்ரீ ரத்னங்கள் பத்ரிகைகளும் நடத்தி வருகிறார்கள். இவைகளெல்லாம் அபிவ்ருத்திக்கு அறிகுறியென்று நம்பவேண்டியிருக்கிறது. க்ரஹங்களில் பெண்களும் ஸ்த்ரீகளும் தங்கள் கணவர்களிடம் தாங்கள் ஸமானமாகக் சுவனிக்கப்பட வேண்டுமென்று ப்ரஸ்தாபிக்கிறார்கள். பால பெண்களுக்கு விவாகத்துக்குச் செலவாகிற பணத்துடன் கொஞ்சம் போட்டு, வட்டிக்கு விட்டு அந்தவட்டியைக்கொண்டு,பெண்குழந்தைகளைப் படிப்பிக்கவேண்டுமென்று கணவர்களுடன் வாதாடுகிறார்கள். பெண்கள் ஏறக்குறைய 12-வயதிலும் அதற்கு மேலும் இப்போது கல்யாணம் செய்யப்படுகிறார்கள். சுருக்கிச்சொல்லின் ஒரு நவீனக்கிளர்ச்சி இந்தியாவிலுள்ள ஸ்த்ரீகளுக்குள் உண்டாயிருக்கிறது. இக்கிளர்ச்சிமேனாட்டு நாகரீகத்தால் உண்டாகி வருகிறது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? மேனாட்டு நாகரீகம் இந்திய ஸ்த்ரீகளுக்குள், வரவர வ்ருத்தியானால் அது என்ன விதமான கிளர்ச்சியை உண்டாக்குமோ என்பது பயமாயிருக்கிறது.

புருஷர்களுக்கு மேனாட்டு நாகரீகப் பித்து மேலிட்டு மயங்கிக்கிடக்கிறார்கள். மேலும் ஸ்த்ரீகளை தங்கள் போகத்துக்கு வழியை அனுஷ்டிக்கும்படி தூண்டிவருகிறார்கள். க்ரமேண இந்த வழக்கம் ஸ்த்ரீகளுக்குள் வ்ருத்தியாகிக்கொண்டு வருமென்றே சொல்ல வேண்டும். சென்னையில் சில ஸ்த்ரீ ஸங்கங்களிலும் மைஸூரிலும் மற்றுமுள்ள சில ஜில்லா தலை நகரத்திலும் மேனாட்டு நாகரீக ப்ரபாவத்தையடைந்த ஸ்த்ரீ அவதாரங்களைப் பார்க்கலாம். மேனாட்டு நாகரீகம் இந்தியாவுக்கு அவச்யமா இல்லையா என்பது வேறு கேள்வி. இவ்விஷயத்தை நான் ஆலோசித்த ஸஹோதரிகளாவது, ஸஹோதரர்களாவது இவ்வருமைப் பத்ரிகை மூலமாய்த் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

பங்கஜம்.

மைஸூர்,
22—5—14.

303

THE PHILOSOPHY OF EATING.

By

Sri S. Bagirathi.

போஜன தத்வம்.

ஒருவன் எப்படி திடசரீரியாயும் ஸுகஜீவியாயு மிருக்கமுடியும்? தனது தேக ஸ்திதிக்குத் தக்கபடி போஜனதத்வத்தை யறிந்து அதை அப்யாஸத்துக்குக் கொண்டு வருவானேயாகில் திட சாலியாயும் ஸுகஜீவியாயு மிருக்கலாம். நாம் இன்ன போஜனத்தைச் சாப்பிடுகிறதென்றும், எப்படிச் சாப்பிடுகிறதென்றும் அறிந்திருக்கவேண்டும். உலகில் மாம்சம் புசிக்காதவர்களும் புசிக்கிறவர்களுமிருக்கிறார்கள். வீதாஷ்ண நிலைமைக்குத் தக்கபடி ஒரே காலத்தில் ஒரு தேசத்தில் பற்பல விதமாக ஜனங்கள் ஆஹாராதிகள் சாப்பிட்டு வருகிறார்கள். இவைகளுக்கு எல்லாம் ஸ்திரமாக ஒரு விதி ஏற்படவில்லை. அவரவர்கள் ஸுகாதார விதிப்படியும், தேதர்ம ப்படியும் உணவுகளை அமைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது. ஆனல் போஜனதத்வத்தின் விதிகளைமாத்ரம் கூறலாம்.

சிலர் தேகத்தாலும் மூளையாலும் உழைத்துச் சாப்பிடுகிறார்கள். சிலர் பாதி மூளையாலும் பாதி தேகத்தாலும் உழைத்து ஜீவிக்கிறார்கள். இன்னும் சிலர் ஜனஸமூகத்துக்குப் பாரமாக இருந்து ஒரு வேலையின்றி ஜீவித்து வருகிறார்கள். நல்ல தேகம் வேண்டுமென்றல் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைத்து ஸுகமாக ஜீவனம் செய்யவேண்டும்.

போஜனதத்வம் ஆஹாரத்தை மெத்துச் சாப்பிடுவதிலிருக்கிறது. நம் பூர்வீகர்கள் 90 வயதாகியும் நல்ல திட சரீரிகளாய் ஸுகமாக இருந்து வாழ்ந்தார்களென்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்போது நம் பாட்டிமார்கள் வெகு வயதாகியும் திடசாலியாயிருக்கப் பார்க்கிறோம். அவர்களெல்லாம் ஆஹாரத்தை விழுங்குவதற்கு முன் நன்றாக மெத்துச் சாப்பிடுவார்கள். எந்த ஆஹாரமாயிருந்தாலும் 32 தடவை மெத்துச் சாப்பிடவேண்டும். அப்போதுதான் ஆஹாரத்தின் ருசியை அறிய முடியும். த்ரவ ஆஹார பதார்த்தமாயிருந்தாலும் வாயில் ஊத்திக்கொண்டு, கொஞ்சம்வைத்து ருசிபார்த்து விழுங்கினால், அப்பதார்த்தத்தின் ருசியை

அறிய முடியும். இக்காலத்து புருஷர்கள், சாப்பிடவரும் நேரத்தில் தான் பெரிய வேலைகள் பாக்கியிருக்கிறதென்றும், ஸ்நேகிதர்கள் வெளியே காத்திருக்கிறார்களென்றும், ஆபீஸுக்குப்போக நேரமாயிற்றென்றும் வீட்டு ஸ்த்ரீகளை அவஸரப்படுத்தி, அரைவயிறும் கால் வயிறுமப் பாதி வெந்ததும் வேகாததுமாகப் புஜித்து வருகிறார்கள். இரவிலாவது ஸாவகாசமாகச் சாப்பிடுகிற வழக்கமுண்டா? இல்லையே. விடிந்து 9 மணிவரையிலும் ஊர் வம்பும், தெருவம்பும் பேசி, மீண் பொழுது போக்கி 10 மணிக்கு ஆபீஸுக்குப் போக, 9 மணிக்குமேல் ஸ்நானம், பூஜை, சாப்பாடு முதலியவைகளை வைத்துக்கொள்ளுகிறார்கள். 9 மணிக்குமேல் ஒரு மணி நேரத்தில் ஸ்நானம், பூஜை, சாப்பாடி முதலிய க்ருத்யங்களை ஒவ்வொரு காரியத்துக்கும் செலவழிக்கவேண்டிய நேரத்தைச் செலவழிக்கிறார்களா? இல்லை. ப்ரதி காரியத்திலும் அரை குறை. இப்போர்ப்பட்ட புருஷர்கள் ஆபீஸ்களிலும் சரிவர வேலை செய்வாரோ நாமறியோம்? தற்காலம் புருஷர்கள் அற்பாயுசாக மரணமடைவதற்குக் காரணம் க்ரமவேளை தப்பிச் சாப்பிடுவதும், மற்ற கார்யாதிகளில் க்ரமம் தப்பியிருந்து அனவச்யமான அலைச்சலுக்கு ஆளாகுவதும், போஜனத்தை நன்றாய் மெத்துச் சாப்பிடாததினாலே என்று வைத்ய நிபுணர்கள் கூறுகிறார்கள். புருஷர்களைக் காட்டிலும் ஸ்த்ரீகள் நீடித்து இருக்கிறதற்குக் காரணம் அவர்கள் போஜன தத்வத்தை அறிந்தோ அறியாமலோ ஸாவகாசமாக பேசி மெத்துச் சாப்பிடுகிறதினாலென்றும் சொல்லுகிறார்கள். பள்ளிக்கூடத்து மாணவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இக்காரியத்தில் தகப்பன் எப்படியோ அப்படியே மேனட்டார்கள் வெகுகாலம் திடமாயிருக்கிறதற்குக் காரணம், தேசத்தின் வீதாஷ்ண ஸ்திதி எவ்வளவு உதவியாயிருந்தாலும் அவர்கள் சாப்பாட்டு விஷயத்தில் கவலை செலுத்தி, அதன் ஸுகமறிந்து சாப்பிடுவது ஜாஸ்தி தான். இங்லாந்தில் சில வருஷங்களுக்குமுன் மந்திரித்வம் வகித்த மிஸ்டர் கிளாட்ஸ்டன் என்பவர் போஜனம் செய்யும்பொழுது தம் முடைய சில ஸ்நேகிதர்களுடன் சாப்பிடுவாராம். ராஜாங்க வேலையில் கொஞ்சம் சஞ்சலம் நேரிட்டால் உடன் அவர் தம் ஸ்நேகிதர்களுடன் ஹோட்டலுக்கு போய்விடுவாராம். அங்கு ஸந்தோஷமாகச் சிரித்துப் பேசிச் சாப்பிட்டு வருகிறது வழக்கமாம். இவர் வெகுகாலம் திடமாய் வாழ்ந்தார். இவர் வீட்டில் டாக்டருக்கு

அதிக வேலை யிருக்காதாம். டாக்டரைப் பார்த்து அடிக்கடி அரை அவுன்ஸ் சிரிப்பும் குதூகலமும் ஒரு ஆஸ்பத்திரி மருந்துக்கு ஸமானம் என்று சொல்வாராம்.

எப்போதும் ஆஹாரம் இலேசாகவும் ப்ரணிக்கத்தக்கதாகவு மிருக்கவேண்டும். பழங்கள் தின்னலாம். புதியவும் பழுத்தவுமான பழங்கள் தேகத்து இயற்கை ஸ்வபாவத்துக்கு ஏற்றதான மருந்து என்று நவீன டாக்டர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். தேகத்தி லிருக்கிற கெட்ட விஷப் பூச்சிகளை இப்பழங்கள் கொன் றுவிடும். நம் நாட்டில் ப்ரபலமாய் வழங்கிவரும் காபி, டீ, கோகோ, முதலிய பானங்கள் நம் நாட்டு ஜனங்களுக்குச் சுத்தமாய் கெடுதி யை விளைவிக்குமென்று அமெரிக்கா தேசத்து டாக்டர்கள் அபிப்ரா யப்படுகிறார்கள். மேனுதகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இப் போது கடைகளில் விற்கப்படும் சரபத்துக்களை (Syrups) காட்டி லும் நம் தேசங்களில் உண்டாகும் பழுத்த எந்தப் பழங்களின் இர ஸத்தோடு ஸுத்தமான தண்ணீரைக் கலந்து சாப்பிடுவது வெகு ருசியாயும் தேகத்துக்கு சௌகர்யமாயு மிருக்குமென்று கல்கத்தா வில் இந்திய டாக்டரொருவர் கண்டுபிடித்து தெரிவித்திருக்கிறார். இம்மாதிரி செய்யப்பட்ட பானங்களை யாதொரு பயமில்லாமல் குடிக்கலாமாம். கடைகியாக ஸுகாதாரத்தையும் கவனிக்கவேண் டும். நமக்குப் பரம சத்ருவா யிருக்கப்பட்டது ஈக்களும் புழுதி யுமே. பக்ஷணக் கடைகளில் ஈக்களும் புழுதியும் ஸர்வ ஸாதாரண மாய்ப் பழகி வருமாகையால் அங்கு பக்ஷணங்களை வாங்கி புசிக்கி றதை நிறுத்தவேண்டும். வீட்டைச்சுற்றி நீர்தங்கு மிடத்தில் கொசுக்கள் உற்பத்தியாகவும் தங்கவும் நேரிடுமாகையால் எப்போ தும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டார் ஸுகாதாரத்துக் காக தனி ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி யிருக்கிறார்கள். வெகு பணம் வருஷா வருஷம் செலவழிக்கப்படுமென்று தெரிய வருகி றது. ஸுகாதார அபிவருத்திக்கு ஸ்த்ரீகள் முக்ய காரணஸ்தர் களா யிருக்கிறதினால் அவர்களுக்கு ஸுகாதாரப் பயிற்சியை பல வழிகளில் ஊட்டி தெரியச்செய்வது அவச்யம்.

எஸ். பாகீரதி.

306

ENGLISH WOMEN AND DOMESTIC MANAGEMENT.

By

Sri Nagammal.

ஆங்கில ஸ்த்ரீகளும் குடும்பநிர்வாகமும்.

நமது சக்ரவர்த்தி வசிக்கும் லண்டன் பட்டணத்தில் விலை வாசிகள் ஒன்றுக்கு மூன்று பங்காகவிற்கும். பெரிய வ்யாபார ஸ்தலமான தால் ஸாமான்கள் ஜல்தியாய் செலவாய்விடும். மாதம் எவ்வளவு பணம் வந்தாலும் கூடணப்பராழுதில் செலவழிந்து விடும். ஒரு மனிதன் மாதம் ரூ. 250 சம்பளகாரனாயிருந்தால் அவன் கௌரவமாக வாழ்ந்தாலே அன்றுகழிக்கலாம். கையில் ஒரு பைஸாமிஞ்சாது. லண்டன் பட்டணத்தில் 250-க்குறைந்து வரும்படியுள்ள வர்களைகிடையதாவென்று கேட்கலாம். வர்ஷம் ஒன்றுக்கு 25 ஷில்லிங் அல்லது அதற்குக் குறைந்த வருமான முள்ள ஜனங்கள்தான் ஜாஸ்தி. இந்த ஜனங்களில் தினக்கூலிகளும் குமாஸ்தாக்களும், ஷாப்புகளில் உட்கார்ந்து ஸாமான்கள் விற்கும் பெண்களும், ஸ்த்ரீகளுமிருக்கிறார்கள். ஒரு பெண் வாரத்துக்கு ஒரு பவுன் ஸம்பாதித்தால் அவள்தான் அதிர்ஷ்டசாலி. ஆங்கில யர்கள் நாகரீகத்தில் மேன்மையும், உயர்ந்த உடுப்பும், புஷ்டியான ஆஹார முள்ளவர்களாயிருக்க, இந்த ஸொல்பவருமானம் போது மா என்று கேள்விகள் கேட்கிறது ஸஹஜம். அவர்கள் இந்த ஸ்வ ல்ப வருமானத்தைக்கொண்டு எப்படிக் குழந்தைகளுடன் கூடிய குடும்பத்தை நிர்வாகம் செய்துவருகிறார்களென்று கவனிப்போம்.

ஸாதாரண ஸ்த்ரீ ஒருவள் 10 ஷில்லிங்தான் ஒருவாரத்தில் ஸம்பாதிப்பாள். புருஷன் 15 ஷில்லிங் ஸம்பாதிப்பான். இந்த 25 ஷில்லிங்கில் அபாரமான லண்டன் பட்டணத்தில் வீட்டுவாடகை கொடுத்து காலம் கழிப்பது வெகுச்ரமம். ஒரு ஜோடி பூட்ஸ் குறைந்தது எட்டு ஷில்லிங் விலை, ஸ்த்ரீகளின் தலைதொப்பி குறை ந்தது 5 ஷில்லிங் விலை. உடுப்புகள் வாங்கவேண்டும். வைத்யனுக் குக் கொடுக்கவேண்டும். பண்டிகைதினம் வந்தால் சினேகிதகளு டன்கூடி செலவழிக்கவேண்டும். சில்லரைச்செலவுகள் எவ்வள வோ விருக்கின்றன.

இதற்காக, குறைந்தது 30 ஏழைக் குடும்பங்கள் ஒன்று சேர் ந்து ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கிறார்கள். ப்ரதிகுடும்பத்தவரும் வார ஸம்பாதனையில் சக்திக்கேற்றபடி மிகுத்து ஸங்கநிர்வாகஸ்தர்களி

307

டம் தப்புவிக்கிறார்கள். இப்படியாக மிகுந்த பணத்தில் 30 குடும்பங்களுக்கு வேண்டிய ஸாமான்களை ஸங்கீர்வாகஸ்தர்கள் வரவழைத்துக்கொடுக்கிறார்கள். அல்லது முதல் வாரத்தில் 6 குடும்பம் மறு வாரத்தில் வேறு 6 குடும்பங்களுக்கு ஸப்ளை செய்கிறார்கள். இப்படியாக 5 வாரத்தில் 30 குடும்பங்களுக்கும் ஸாமான்கள் சேர்க்கப்படுகின்றன. க்ரிஸ்ட்மஸ்பண்டிகைகள் முதலியதுகள் வந்தால் 'க்ரிஸ்ட்மஸ்பண்டி' என்று ஏற்படுத்தி ஸாமான்களை நயமாக வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். இவ்விதமாக லண்டன் பட்டணத்திலும் மற்றுமுள்ள பட்டணங்களிலும் குடிப்பங்குகளுக்குள் ஐக்கியம் ஏற்பட்டு வாழ்க்கை கஷ்டமின்னியில் குதூஹலமாகக் கழிக்க இடமுண்டாகிறது. ஆங்கில ஸ்த்ரீகள் எத்தகாரியம் கடத்திலுலும் பலபேர் சேர்ந்து செய்யாதிருக்கமாட்டார்கள். இப்படி. இவர்கள் சேர்ந்து இருக்கிறதினால் ஒருவருடைய ஸௌகர்யங்கள் கூட பங்கிடப்பட்டு கடவுள் நம்மிடம் ஒப்புவித்த ஜீவனுக்கு ஒரு கஷ்டம் வராமல் செய்துகொள்ள ஹேதுவுண்டாகிறது.

இப்பொழுது நமது க்ராமாந்தரங்களில்கூட 4 அல்லது 5 குடும்பஸ்த்ரீகள் ஒன்று சேர்ந்து வாசலில் கொண்டுவந்து விற்கும் புளி, மிளகாய், பருப்பு முதலிய வருஷாந்தர ஸாமான்களை மொத்தமாக வாங்கி பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். மேலும் சீட்டு போடுகிறார்கள். அதாவது 10 ஸ்த்ரீகள் சேர்ந்து ஒரு சீட்டு 5 ரூ. மெனி 10 சீட்டுகள் ஏற்படுத்தி முதல் மாதத்தில் சேர்ந்த 50 ரூபாயை அதை நிர்வாகம் செய்யும் ஸ்த்ரீ எடுத்துக்கொள்ளுகிறாள். ப்ரதி மாதக்கடைசியில் சீட்டுக்குலுக்கி வரத்தில் இந்த 10 மெம்பர்களுக்குள் கிடப்படுகிறது. ஜாஸ்தி ஏலம் கேட்டவர்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது. இக்கச்சீட்டு 10 மாதம் நடக்கிறது. இருந்தாலும் ஐக்கியம் ஸ்த்ரீகளுக்குள் ஒருமுறையாக நடை பெறுகிறது கிடையாது. செல்வீமோன்ற பட்டணங்களில் க்ராமாந்தரங்களில் இருக்கும் ஐக்கியம்கூட ஸ்த்ரீகளுக்குள் கிடையாது. பட்டணங்களில் இப்பொழுது புதிகாக சில படித்த ஸ்த்ரீகளின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்த்ரீஸங்கங்களில் இம்முறையை கையாடிவருவது எவ்வளவு தூரம் பலனைக்கொடுக்குமென்று நாம் சொல்லவேண்டியதில்லை.

நாகம்மாள்.

A BRAVE WOMAN.

By

Mr T. S. Raj.

ஒரு தைர்யமுள்ள ஸ்த்ரீ.

(1761)

இப்போழு திருக்கும் இங்லாந்து ஜனங்கள், சுமார் இரு நூறு வருஷங்கள் முன் ஆண்டுவந்து கொண்டிருந்த ஸ்டேர்ட் வம்ச அரசர்களை ராஜ்யத்தை விட்டு ஓடும்படி கட்டாயப்படுத்தினர்கள். அவ்வரசர்கள் சிம்மாஸனத்தை தங்கள் வசத்தில் வைத்துக் கொள்ள இருதடவை முயன்றும் பலிக்காமற் போய் விட்டது. இருதடவையும் அவர்கள் யுத்தத்தில் முறியடிக்கப்பட்டு அவர்களுக்கு உதவியாயிருந்தவர்களில் சிலர் காராக்ருஹத்தில் அடைக்கப் பட்டார்கள்; சிலர் கொலையும் செய்யப்பட்டனர்.

இப்படி ஸ்டேர்ட் அரசர்களுக்குத் துணையாயிருந்து, கொல்லப் படவேண்டி, சிறையிலடைபட்டிருந்தவர்களுள் நித்ஸ்டேல் பிரபு (Earl of Nithsdale) ஒருவர். அவரை அப்பாதனத்திலிருந்து விடுவித்து அவருயிரைக் காத்த மாது நிரோமணி அவரது பத்னியே!

இப்பெண்மணி மாரிகாலக் கொடுமையில் ஸ்காட்லண்டின் தென்பாகத்திலிருந்த தன் னகரத்தை விட்டு லண்டன் நகரத்துக்குப் போகப் புறப்பட்டாள். நிலத்தில் பனி மிகுதியாய்ப் பெய்திருந்ததால் வண்டியில் போக ஸௌகர்யப் படவில்லை. மூன்று மைல்தூரமும் குதிரைமேல் ஸவாரிசெய்து போகவேண்டி நேர்ந்தது. மாரிகாலத்தில், உறைபனி, மூடுபனி இவைகளின் தொல்லையை அவள் ஒரு பொருட்டாய் எண்ணுமலிருக்கக் காரணமென வெனில், இங்லாந்து போய், அரசரைப் பார்த்து, தன்பதியை விடுவிக்கும்படி கெஞ்சிக் கேட்கலாமென்ற வெண்ணமே!

ஆனால் அங்கு போனதும், அரசர் சிறிதும் அவள் வேண்டுகோளுக் கிணங்காமல் கடகடித்து அவள் கணவன் இறக்கத்தான் வேண்டு மென்று உறுதிமொழி கூறிவிட்டார். இருந்தும், அவள் மனத்தில் கொஞ்சமும் அதைர்யப்படாமல், ஒன்று அவரை சிறையிலிருந்து மீட்டுவிடுவது; அல்லது அத்தகைய கார்யம் செய்ய யத்

தனிக்கையில் தன்னுயிரை ஆபத்துக் கிடமாக்கி மாய்த்துக் கொள்ளுகிறதெனப் பிரதிக்ஞை செய்து கொண்டாள்.

நித்ஸ்டேல் அம்மாள் தன் பர்த்தாவை இஷ்டப்பட்ட போதெல்லாம் காணப் போகலாம். போகும்போது தன்னுடன் வேண்டியவரொருவரையு மீட்டுச் செல்லலாம் நிற்க,

ப்ரபு மரிக்கவேண்டியதற்குக் குறிப்பிடப் பட்டிருந்த தினத்திற்கு முந்தினதினம் அப்பெண்மணி இரண்டு ஸ்காமார்களுடன் சிறைச்சாலையை யடைந்தாள். முதலில் அவளோடு சென்ற தோழி, ஒருவரு மறியாவண்ணம் இரண்டு இரண்டு உடுப்புக்களை அணிந்திருந்தாள்; ப்ரபுவிருந்த வறைக்குட் சென்றதும், இவள் மேலே அணிந்திருந்த உடுப்பையும் முக்காட்டையும் எடுத்து அங்கேயே போட்டுவிட்டுச் சரேலென்று வெளியே ஏகினள். அவள் போகும் போது துவாரபாலகர்கள் இவள்யாரோ நித்ஸ்டேல் அம்மாளும் அவள் தோழியும் வருவதற்குமுன் உள்ளேயிருந்தவள் போனாள் என்று நினைத்துக் கொண்டார்கள். பிறகு இரண்டாவது தோழி தலையைத் தொங்கப் போட்டுகொண்டு தீராவருத்த முற்றவள்போல அங்குவந்து ப்ரபுவின் அறைக்குட் சென்றாள். காவற்காரர்களும் அவள் நிலையைக்குறித்து பரிதாபப்பட்டுத் துக்கமடைந்தார்கள். ஆனால் அவள் உள்ளே நுழைந்ததும் கண்களைத் துடைத்துக்கொண்டதைப் பார்த்திருந்தால் அவர்களப்படிச் செய்திருக்க மாட்டார்கள்.

இம்மாது உள்ளே சென்றதும் எல்லோரும் வேஷம் போடத் தொடங்கினார்கள், ப்ரபுவுக்கு இரண்டாவது வந்த ஸ்த்ரீயின் வேஷம். அவளுக்கு முதல் வந்த ஸ்த்ரீ போட்டுவிட்டுப் போன உடுப்பு! வேஷம் முடிந்ததும் ப்ரபுவின் பத்னி அவளை வாயற்படியண்டை அழைத்துவந்து காவலர்கள் காதிற்பட நிற்காதே, "சீக்ரம் போய் எனது வேலைக்காரியை அனுப்பு. அவள் வருகிறவரையில் என்னுயிர் முள்மேல் நிற்பது போல் அடிக்கும்" என்று சொல்லியனுப்பி விட்டாள்.

சுமார் கால்மணி நேரங்கழித்து மற்றொருவளை யதேவிதம் உள்ளிருந்து அழைத்து வந்தாள். அங்கே நின்றவர்களுக்கு இவள் அழுது கொண்டுவந்த பெண்பிள்ளை போலவே தோன்றிற்று. அதே

உடுப்பு, முக்காடு. அதேவித மழுபவள்போல தலை தொங்கவிட்டிருந்தது! அப்பொழுதும் காவலாளி களின்காதில் ஒடு, என்னருமை மிஸ்ஸஸ் பெட்டியே (Miss. Betty) வேலைக்காரி இன்னும் வரவில்லையே! சடுதியி லனுப்புகிறாயா? வென்ற சத்தம் விழுந்தது மிஸ்ஸஸ் பெட்டியும் அதி வேகமாய் வண்டி யொன்று அமர்த்திக் கொண்டு சென்று விட்டாள். அஃது யாரென்று அநேகம்பேருக்குத் தெரிந்திருக்கும். ப்ரபு தான் இப்பொழுதுபோன பெண். பிறகு நித்ஸ்டேல் அம்மாள் தன் கணவன் வெகுதூரம் சென்று விடும் வரை உயிர் பிழைப்பதரிதென்றுணர்ந்து, திரும்பவும் அவ்வறைக்குச் சென்று அங்கே யவரிருக்கிற பாவனை யாகவே மறுபடியும் பேசவாரம்பித்து, தானே அவருடைய குரலோடு பதிலும் சொல்லிக் கொண்டாள். கடைசியில் தன் நாயகர் பத்ரமாய் வெகுதூரம் சென்றிருப்பா ரென்று தோன்றினவுடன் சிறையை விட்டு வெளிக்கிளம்பி போயினள்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் நித்ஸ்டேல் ப்ரபு பிரான்சு தேசத்துக்குப் பிரயாணமானார். கப்பலிலிருந்த மாலுமிகள் தங்கள் உயிரைக்காப்பதற்கா யிருந்தால் எவ்வளவு வேகமாய்ப் போகலாமோ அதைவிட அதி விரைவாய்க் கப்பலை யோட்டினார்கள். ஆனால் அதிலிருந்த ஒருவர் தன்னுயிருக்காகவே வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தாரென்று கொஞ்சமும் அவர்களுக்குத்தெரிய வில்லை. ப்ரபுவின் மனைவியும் சீக்ரம் அவரைச் சேர்ந்து இருவரும் தங்கள் வாழ்நாளை அந்ய நாடுகளிலேயே கழித்தார்கள்.

T. S. ராஜு.

பொருத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

குறிப்பு:—அன்னியர் நமக்குத் தீங்கிழைப்பின் அவரை ஏற்றவாறு தண்டிக்க நம்மால் முடியுமாயினும் அவர்மீது கோபங்கொள்ளாது பொருமையோடிருத்தல் மிகவும் நல்லது. மேலும் அவர் நமக்குச் செய்த கெடுதியை அன்றன்றே மறந்துவிடுதல் அப்பொறையினும் மேன்மையுடைத்து.

HISTORY, BIOGRAPHY

சரித்ரம், ஜீவ்ய சரித்ரம்

MANDODHARI.

By

The Editor.

மண்டோதரி.

மண்டோதரி இராவணனுக்கு நீதிபகட்டல்.

புழுக்கடைச் செடிமருந்திக்குதவாதுபோல் அவிசாரிபுருஷன் தன் குலபத்னியின் அழகுக்கு மகிழமாட்டான். இராவணன் மண்டோதரியின் ஹிதவசனங்களைக் கேளாமல் அலக்ஷ்யஞ்செய்து துர்புத்தி மேலிட்டவராய் தண்டகாரண்யத்தில் இருக்கும் ஸீதா தேவியை அபகரிக்கப் புறப்பட்டார். படுமோசத்தால் ஸ்த்ரீயை தம் விமானத்தி லேற்றிக்கொண்டு இலங்கை வந்து சேர்ந்தார். ஆயினும் ஸீதை இராவணனை மதியாமலிருந்தனள். அநேக உபாயங்களால் ஸீதையை ஸமாதானப்படுத்தியும் வசப்படாமையால் இராவணன் ஸீதையை கொலைசெய்ய யத்தனித்தார். அப்பொழுது மண்டோதரி குறுக்கேநின்று "நாதா! எவ்வளவு சொல்லியும் கேளாமலிருக்கிறீர். நான் யாது செய்வேன்? காலுக்கு கண் துவக்ருத்யங்கள் அதிகமாகின்றன. இந்த மஹா உத்தமஸ்த்ரீயால்தங்களுக்கு பல கேடுகள் வரும். மஹா பாதகங்களைச் செய்த உமக்கு நற்கதி கிடைக்குமா? ஐயோ! நாதா! என் புத்தியைக் கேளும் இந்த ஜானகியின் சாபம் பொல்லாது. பதிவ்ரதாஸ்த்ரீகள் உலகத்தையும் காத்துவிட்டு, வேணுமென்றால் சூரிய சந்திரரை தெற்கு வடக்காகப் போகச்செய்வார்களே! தங்கள் எவ்வளவோ முறை பதிவ்ரதாமணிகளின் சரித்திரத்தை எனக்குச் சொல்லி யிருக்கிறீர்களே? ஐயா! கொலைசெய்யப்போகிறீரே! இது யார்செய்த பாபமோ! வேண்டாம் இந்த அந்யாயமும் அக்ரமும் உலகில் ஒவ்வாது" என்று பன்முறை வேண்டவே ஸீதாதேவியை வெட்டாமல் விலகி வெளியில் போய்விட்டார்.

மண்டோதரி ப்ரதிதினம் ஸீதையை ஸ்ரீராமரிடம் கொண்டு போய் விடும்படி புத்தி சொல்லிக்கொண்டிருக்க, ஸ்ரீராமர், வாயுபுத்ரனுடைய ஹனுமாரால் ஸீதை இலங்கையிலிருப்பதாகத் தெரிந்து கொண்டு வானர ஸேனைகளுடன் இலங்கையை முற்றுகைப்போட்டார். இது இராவணனுக்குத் தெரியவே, ஸேனைகளை யனுப்பி யுத்தம் புரிந்து வந்தார். ஒருநாள் மண்டோதரி யுத்தச் செய்திகளை யறிந்து சிந்தாக்ராந்தாளாய் முக்ய மந்த்ரிகளுடன் இராவணனிருக்கும் ஸபா மண்டபத்திற்கு வந்தாள். இராவணன் பார்யாளுக்கும், மந்த்ரிமார்களுக்கும் ஆஸனங்கொடுத்து வந்த காரணங்களை உரைக்கும்படி மண்டோதரியைக் கேட்டார்.

மண்டோதரியின் விண்ணப்பம்.

"மண்டலேஸ்வரா! தாங்கள் என் விண்ணப்பத்தைத் தெரிவித்தபடி. கேட்டதற்கு ஆனந்தம்கோடி நமஸ்காரம். தாங்கள் க்ருபைசெய்து செவிசாய்க்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன். "இதுவரையில் கடந்த யுத்தத்திலும் ஜெயாப ஜெயங்களை தாங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீர் செய்கிறது அதர்ம யுத்தம், தற்கால நிலையைநோக்கும்போது தாங்கள் அபஜெய மடைவீர்களென்று தங்களுக்கு புலப்படவில்லையா? இனி நிமிஷமேனும் தாமதியாமல் தகுந்த தூதனை யனுப்பி ஸ்ரீராமருடன் ஸமாதானம் செய்துகொள்வீர்த்த மேல். ஸ்ரீராமன் புருஷோத்தமன். அண்டினவருக்கு அபயங்கொடுக்கிறவர். நாம் ஸமாதானஞ் செய்துகொண்டால் அவமானம் வருமோ என்று நினைக்கவேண்டாம். ஸமாதானஞ் செய்துகொள்வது க்ஷாத்ரதர்மம். முன்பு ஒருதரம் கார்த்த வீர்யனுடன் ஸமாதானஞ் செய்துகொள்ளவில்லையா? ஸமாதானத்திற்கு இதுதான் ஸமயம். காலதாமதஞ் செய்யவேண்டாம். நமது ஸேனைகள் அநேகமாக யுத்தத்தில் இறந்துவிட்டன. தூதனை அனுப்பும் நமக்கு க்ஷேமமுண்டாகும்." என்று முடித்தாள்.

இராவணனின் பதில்.

"வெகு சாதுர்யமாக நீதிகளை மொழிந்தாய். நீ சொல்லுகிறதெல்லாம் என் காதில் நுழையாது. பூர்வம் லோகபாலர்களை ஜெயித்த மஹா சுத்த வீரனுடைய நான், வானரக் கூட்டங்களையுடைய கேவலம் ராமன் என்ற ஒரு நரனிடம்போய் எப்படி ஸமாதானம் செய்துகொள்வேன். என் தங்கை ஸூர்ப்பணகையின் மூக்கை அறுத்து என்னை அவமானம் செய்தான். அந்த அவமானத்தை லக்ஷியமல் பழிக்குப் பழிவாங்க நிர்மானித்து, ஸீதை

யைத் தூக்கிவந்தேன். எது நடக்கவேண்டுமோ அது நடக்காமல் நிற்காது. மரணம் மரணம் என்று ஏன் என்னை பயமுறுத்துகிறாய்? மரணத்துக்கு நான் பயப்படேன். என்னையும் இந்திரஜித்தையும் இவ்வுலகில் ஜெயிப்பவர் யார்? ஆகையால் பயம் வேண்டியதில்லை. உள்ளேபோ" என்று கோபத்துடன் உரைத்தான். மண்டோதரி வ்யாகூலத்துடன் உள்ளே சென்றனள். அன்றையதினயுத்தத்தில் கும்பகர்ணன், இந்திரஜித் முதலான முக்ய வீரர்கள் இறந்தனர். ராவணன்மட்டும் தனிமையாக யுத்தத்துக்குப் போகவேண்டிய காலம் வந்தது. ராவணன் யுத்தம் புரிந்தான். லட்சமணனை மூர்ச்சையாகும்படி இழே கிடத்தினன். அருணாத்தம்பிப்ரக்ஞையில்லாமல் தரையில் கிடக்கிறதைப் பார்த்துச் ஸியாதலை ராய் உக்ரமான பாணங்களை ஸ்ரீராமர் ராவணன்பேரில் ப்ரயோகம் செய்தார். அதை ராவணன் பொறுக்கமாட்டாமல் யுத்தகளத்திலிருந்து ஓடிவிட்டார். அன்று ராத்திரி ராவணன் மண்டோதரியைப் பார்த்துச்சொல்லுகிறார். "ஏ பெண்மயிலே! இப்பொழுதுதான் என் ஸ்திதி எவ்வளவு கேவலமாகிருக்கிறது! நீ அறிந்தாயா? எல்லாரும் இறந்தார்கள். ராமன் இவ்வளவு சௌர்யவான் என்று கனவிலும் நான் ஒருபொழுதும் நினைத்ததில்லை. இடிகளைப்போல் வரும் ராமன் பாணத்தில் யார் நிற்பார்? யுத்தகளத்தில் ராமன் எங்கும் தென்பட்டான். இவ்விடத்திலேயும் ராமன் தோன்றுகிறான். இனி என் செய்வேன். மேலும் இவன் என்பேரில் க்ருபைசெய்து காரிடம் அபஜெயமாகும்போது நிச்சயமாக ஒரு ஹோமம் செய்தால் ஜெயமுண்டாகுமென்று அருள் செய்திருக்கிறார். ஆகையால் அந்த ஹோமத்தை இப்போது செய்தி சத்ருவை ஸம்ஹாரம் செய்திறேன்" என்று சொல்ல, மண்டோதரி சொல்லுகிறாள். "ஏ ராக்ஷஸாதிபா! நீர் சொல்லும் காரியம் சுத்தமாக எனக்குப் பிடிக்கவேயில்லை. இது என்ன மாத்யகாரமான எண்ணம். நாங்கள் யுத்தகளத்தை விட்டு புறங்காட்டி ஓடி, மந்திரத்தினால் ஜெயிப்பேன் என்று சொல்லுகிறது எனக்கு மிகுந்த விசனத்தைத் தருகிறது. இதனால் நங்களுடைய பலம் நங்களுக்குத் தெரியவில்லை என்று தெரிகிறது. யுத்தகளத்தில் தோற்றுப் போவேன் என்று தோன்றினால் ஸீதையை கொண்டுபோய்க் கொடுத்து ஸமாதானம் செய்துகொள்ளலாமே? கையாலாகாதவருக்கு இவ்வளவு என் பிடிவாதம்? யுத்தகளம்போய் ஆண்மைத்

தனத்தைக் காண்பியுங்கள்." இப்படி மண்டோதரி சொல்ல, வெட்கப்பட்டு மனம்ஸஹியாதவரும் யுத்தகளம் சேர்ந்தார். அன்று யுத்தக்கடைசியில் தாம் ஜெயமடையமாட்டோமென்று ராவணன் எண்ணி ஓமம் செய்ய ஆரம்பித்தார். இந்த ஸங்கதி ஸ்ரீராமருக்குத் தெரியவே, அனேக விக்னங்கள் செய்தும் பயன்படவில்லை. இதற்குள், அங்கதன், அந்தப்புறத்தில் தூக்கத்திலாழ்ந்து சுருண்டு கிடக்கிற மண்டோதரியை தலைமயிரில் கைபோட்டு இழுத்து வந்து ராவணன் எதிரே நிற்கவைத்தான். தபம் செய்யும் ராவணனைப்பார்த்துச் சொல்லுகிறாள். "ஏ நாதா! மஹா மோசக்காரனாகிய ராக்ஷஸனுடன் சேர்ந்து அந்யாயமாய் குலஸ்த்ரீயை தூக்கிவந்தீர். அதற்குப் பதிலாக உம் ஸ்த்ரீகள் என்னை மயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டு உம் முன் நிறுத்தி இருக்கிறதை பார்க்கவில்லையா? ஐயோ! என் ப்ராணேசா! மந்த்ரங்களால் என்ன ஆகும்? இந்த்ரஜித் இறந்தபோதே உம் ஜெயம் போய்விட்டது. மயனுடைய புத்ரியும், உம் பார்யையும், இந்த்ரஜித்தின் தாயும் ஸ்த்ரீகளால் பூஜிக்கப்பட்டவளாகிய என்னை கேவலம் ஒரு குரங்கு மயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டு வந்ததே? என்று கதறி அழ மண்டோதரியின் வசனங்களைக் கேட்டு, தபஸிலிருந்து எழுந்து சத்ருக்களைத் தாக்கி மண்டோதரியை தேற்றினர்.

மண்டோதரி மறுபடியும் "ப்ராணநாதா! ராமனுடைய பராக்ரமம் தங்களுக்குத் தெரியவில்லையே! பூர்வம் நீர் ராஜி செய்துகொண்ட கார்த்தவீர்யார்ஜுனனை பரசுராமன் தோற்கடித்தான். க்ஷத்ரிய பூண்டு இல்லாத 21 தலைமுறையாக கருவறுத்த இந்த பரசுராமன் ஸ்ரீராமனால் தோற்கடிக்கப்பட்டான். தங்களை ஜெயித்த வாலியை ஒரே பாணத்தால் இந்த ஸ்ரீராமன் பரலோகமனுப்பினர். இப்போது நமது பெண்சாதியாகிய உத்தம ஸீதையை அபகரித்துவந்த உம்மோடு சண்டை போடுகிறார். ஸ்ரீராமன் மஹாத்மா, ஸ்ரீ விஷ்ணு அவதாரம். தாங்கள் அவரை ஜெயிக்க முடியாது. இப்பவாவது ஸீதையையும், நமது ராஜ்யத்தையும் ஸ்ரீராமரிடம் ஒப்பித்துவிட்டு நாம் தபஸிகளாகக் காட்டுக்குப்போவோம். தாங்கள் தயைகூர்ந்து அடியாள் சொற்படி செய்யவேண்டுமென. ஏ சுந்தரீமணி! நீ எவ்வளவோ ஹித்வசனங்கள் மொழிந்தாய். என் பிள்ளை, தம்பி, பந்துக்கள், ஸேனை வீரர்கள் முதலியவர்கள் இறந்தோக, நான்மாத்ரம் வாழ ராமனுடன் ஸமாதானம் செய்யவேண்டுமோ?

ண்டுமா? காட்டுக்குத் தபம் செய்யப்போவோம் வா என்கிறாய். குல ஸ்த்ரீயைக் கொண்டுவந்ததுபோல அனேக பாபங்கள் செய்திருக்கும் நான், காட்டுக்குத் தபம் செய்யப் போனால் உலகம் சிரிக்காமலிருக்குமா? நீ சொன்னதுபோல் நான் இறப்பது நிச்சயம். ஆனால் ராமனுடன் ஸமாதானம் செய்துகொள்வதை விட அந்த புருஷோத்தமனாகிய சுத்த வீரனின் பாணத்தால் இறப்பது மேலாகும். அப்படியே யுத்தகளத்தில் இறந்து மோக்ஷத்தை யடைகிறேன். ஏ நாரீமணி! எனக்கு மரணகாலம் கிட்டிவிட்டது. யுத்தத்துக்குப் போகவேண்டும். நான் மோக்ஷமடைகிறேன். நீ தாமரையில்லாக் குளம் போலவும், சூரியன் இல்லாத பத்மம்போலவும், வஸந்தன் இல்லாத வனலட்சமிபோலவும் இருந்து ஜீவனைக் கழிப்பாய். நான் யுத்தகளம் போகிறேன்." என்று புறப்பட்டுவிட்டார். அன்று கடைசி யுத்தத்தில் ராவணன் ராமன் பாணத்தால் அடிபட்டு கிடக்க, பாமசிவன் கைலாஸத்துக்குக் கூட்டிப்போனார்.

மண்டோதரியின் புலம்பல்.

இந்தச் செய்தி மண்டோதரிக்குத் தெரியவரவே, மஹாதுக்க ஸாகரத்திலாழ்ந்தாள். வைதவ்யம் தனக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் விசனித்தாள். பதிப்போன பிறகு ஜென்மம் நிஷ்பலம் என்றறிந்தாள். தகப்பன் கொடுத்த சாபத்தினால் உடன் கட்டையேற முடியவில்லையே யென்று வருந்தினாள். பிறகு தன் கணவனுடன் வாழ்ந்த நாள் ஞாபகத்துக்குவரவே, ராவணன் செய்ததுஷ்க்ருத்யங்களை நினைத்து நடுங்கினாள். உத்தமியான ஸீதையின் சாபம்விடுமா? அனுபவித்தே தீரவேண்டும். மேலும் நலலோர் நன்மையை அனுபவிப்பார். பாபிகள் தின்மையைத்தான் அனுபவிக்கவேண்டும். தம்பியாகிய விபீஷணன் மிகுந்த குணவான். அவர் நன்மையைப் பெற்றார். துஸ்ஸீலராகிய ராவணன் யுத்தகளத்தில் மடிந்தார். இப்படி பலவிதமாக அழுது கடைசியாக தம் கணவருக்கு நல்லபதவி கிடைக்கவேண்டுமென்று பகவானை ப்ரார்த்தித்தாள்.

பிறகு தம்வாழ்நாளை மண்டோதரி தமது மைத்துனன் விபீஷணன் வீட்டில் கழித்து வந்தாள். வைதவ்யதசைவந்தும் ஸுகுணங்கள் மாத்ரம் மறையவில்லை. மண்டோதரி ப்ராசீன புராண ஸ்த்ரீகளுள் முதன்மையாய்ப் பூஜிக்கப்படுகிறாள்.

Interesting Items.

1

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Wealth & Education.

தனமும் கல்வியும்:—செல்வம், அள்ளக் குறைவுறும்; கல்வி அதனைச் சொல்லச்சொல்ல நிறைவுறும். செல்வம் கள்வரால் அபகரிக்கப்படும்; கல்வி அவ்வாறாகாது, கற்றோரால் உபகரிக்கப்படும். செல்வம் துன்பத்தைக் கொடுக்கும்; கல்வி அத்துன்பத்தைக் கெடுத்து, இன்பத்தை கொடுக்கும். செல்வம் ஏரியில் வெந்துபோம், கல்வி தீ முதலியவற்றால் அரிவுறாது. செல்வம் வெள்ளத்தில் அடிபடும்; கல்வி கற்றோர்தம் உள்ளத்திற் குடிபடும். செல்வம் அபாயாத்துண்டு மடுக்கும்; கல்வி அவ்வபாயத்தைத் தடுக்கும்; உபாயத்தைக் கொடுக்கும். செல்வம் பகையை உண்டாக்கும்; கல்வி அப்பகையினைப் போக்கும். செல்வம் நிலத்திற் புதைக்கப்படும்; கல்வி மனத்திற் பதிக்கப்படும். செல்வம் நாணாளும் உருமாரும்; கல்வி நாணாளும் உருவேயும். செல்வம் தயாதிகளாற் பாகித்துக்கொள்ளப்படும்; கல்வி அங்ஙனம் கொள்ளப்படாது. செல்வம் இவ்வுலகத்தே அழிவுறும்; கல்வி அவ்வாறு அழிவுறாது தன்னையுடையவர்க்கு இந்நிலத்தில் எல்லா நலனும் அளித்துச் செல்லும் உலகத்தும் உடன்சென்று அவரை நற்கதியிலுய்க்கும். பலவாறுரைத்தலென்? கல்வி அன்னைபோல் இரக்ஷிக்கும்; தந்தைப்போற் இரக்ஷிக்கும்; மனைவிபோல் இன்பஞ்செய்யும்; மைந்தன் போற் பணிசெய்யும்; மற்றும் கற்பதருப்போல ஏதனைத்தான் பயவாது? இத்திரத்த பெருஞ் சிறப்பு வாய்ந்த கல்வியைத் தமக்கு நிலைத்த பொருளாக வுடைய அறிவினரைப் போற்றுதல் அரசர் கடமை. அங்ஙனம் அப்புலவரைப் போற்றாது புறக்கணிப்பரேல் அதனால் அக்கல்வியாளர்க்கு யாது தீதுமின்று. அறிவினரைப் பகைத்தல் அறியபெரிய அல்லல் விளைக்கும், ஆதலின் எவரும் நற்கல்வியுடையமேலோரைக் கோபப்படுத்தாதொழிக. காளமேகப் புலவரைச் சினமூட்டிய திருமலைராயன் புரம் அழிந்ததும், கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடரை எளிமைசெய்த சோழனுக்குற்ற சிறுமையும், புகழேந்தியாரைப் பகைத்த ஒட்டக்கூத்தர் பட்டபாடும், காளிதாசரை இழிவுரைத்தபோசராசன் செய்தியும் உலகரியாதோ?

How to lift baby?

குழந்தையை எப்படித் தூக்குவது:—பிறந்த குழந்தை, புழுவுக்கு ஸமானம். இடது உள்ளங்கையை குழந்தையின் கழுத்திலும் அடித்தலையிலும் வைத்து வலது கையை இடுப்பில் வைத்து ஸாவதானமாகத்தூக்க வேண்டும். குழந்தையை திடீரென வாவது அஜாக்ரதையாகவாவது தூக்கக்கூடாது. கொஞ்சம் ஆட்டி அசக்கினால் நரம்பு பிசகி விடும். சிறுபெண்கள், பிறந்த குழந்தைகளை தூக்கக் கூடாது.

How to Give Milk.

எப்படி குழந்தைகளுக்கு பால் கொடுப்பது:—குழந்தைகளுக்குப்பால் கொடுக்கும்போது பல இடங்களில் கவனம் செலுத்தக்கூடாது. பாலை கொஞ்ச கொஞ்சமாக வாயில்விடவேண்டும். பால் கொடுத்தவுடன் குழந்தை கக்குகிறதற்குக் காரணம், குழந்தை மூச்சுவிடாமல் குடிப்பது தான் பால் கொடுத்தவுடன் குழந்தையைச் சற்று நேரம் கழித்து படுக்கையில் போடவேண்டும்.

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Antidote for insects biting.

பூச்சி கடிகளுக்குமருந்து:—ஸாதாரண பூச்சிக்கடிகளுக்கு பின் வருமாறு செய்யவேண்டும்:—நதிகளிலாவது, குளங்களிலாவது அலைகளால் அரிக்கப்பட்டு ஓரங்களில் ஒதுங்கியிருக்கும் மெல்லிய மணலைக் கொண்டுவந்து, கட்டித் தயிரைவிட்டு மைபோல் அரைத்து, ஒரு டீங்கானில் வைத்துக் கொண்டு 4-அல்லது 5-நாள் வரையில் கடிகளின்மேல் நன்றாகத் தேய்த்து வருவதால் துர் நீர்கள் க்ரமமாக வெளிவந்துவிடும்; பிறகுகொஞ்சம் ஈய வெள்ளையும் கற்பூரமும் கலந்து,தேங்காயெண்ணெயையும் போதுமான அளவு சேர்த்து, நன்றாகக் குழைத்து மேற்படி கடிகளுள்ள இடங்களில் காலையும் மாலையும் தேய்த்து சுத்தமாகக் கழுவி வரவேண்டும்.

* * * *

கல்ல பாம்பு கடித்தவர்கள்உடனே எருக்கிலைக்கொழுந்தும், அதனுடன் அதில் நாலில் ஒருபங்கு புகையிலையும் சேர்த்து அரைத்து, பெரிய நெல்லிக்காயளவு சாப்பிடவேண்டும். ஸர்ப்ப விஷம் தலையில் ஏறி, கண்பஞ்சடைந்து, பற்கள் கட்டிக்கொண்டு இருந்தபோதிலும், கட்டிய பற்களை மெதுவாக நீக்கி, மேற்படி ஔஷதத்தை உள்ளுக்குச் செலுத்தினால் குணமுண்டாகிறது. வேறுவிதமான பாம்பு விஷங்களிலும் இதை உபயோகிக்கலாம்.

* * * *

தேள்கொட்டின தக்ஷணமே விஷம் மேலுக்கு ஏறுமல் அவ்விடத்திற்கு மேல் ஒரு கட்டுப்போட்டு, புதியசுண்ணாம்பையும் உப்பையும் கலந்து நன்றாக அரைத்து, கொட்டியவாயில் சூடுண்டாகும்படி பத்து நிமிஷம் தேய்த்து சுண்ணாம்பையே கனமாகத் தடவிவிட்டு, குளிர்ந்த காற்று வீசுமிடத்தில் உலாவிக்கொண்டிருந்தால், ஈரம் காயக்காய விஷம் இறங்க ஆரம்பிக்கும்.

Women & sleep.

ஸ்த்ரீகளும் தூக்கமும்:—குடும்பப் பொறுப்பை முழுவதிலும் வஹித்து ஓயாமல் கஷ்டப்படும் ஸ்த்ரீகளின் ஸௌகர்யத்தை புருஷர்கள் கவனியார்களில்லை. வீட்டுக் கார்யத்தை முடித்து ஸமையல்செய்து வைத்து கார்த்திருந்தால் புருஷன் வெளிவேலை முடித்தவுடன் வீட்டுக்கு வருகிறது கிடையாது. வருதாப்பேச்சுபேசி விட்டு காலம் தப்பி வீட்டுக்குவந்து போஜனம் செய்த பிறகு தான் ஸ்த்ரீகள் சாப்பிட வேண்டிய வளாயிருக்கிறார்கள். இரா வேளையில் ஸாதாரணமாக ஸ்த்ரீ மணி 11 அல்லது 12-மணிக்குபடுக்கைக்குப் போக வேண்டியிருக்கிறது. தூக்கம் எளிதில் வருகிறது கிடையாது. உடன் காலை 4-மணிக்கு எழுந்திருக்க வேண்டியிருக்கிறது. வேளை தப்பி ஸாப்பாடும், அதிகக்கலையும், குறைந்ததூக்கமும் தான் தற்கால ஸ்த்ரீகளை வ்யாதியால் வருத்துகிறது.

Beetles.

வண்டு:—அரிசி, துவரை,கடலை முதலியதான்யங்களை சில காலம் சேர்த்துக்கொட்டிவைத்திருந்தால் அவைகளைவண்டு அடித்து நாசம் செய்துவிடுகின்றன.இதைத்தடுப்பதற்கு ஒரு நண்டைக்கொன்று தான்யங்கள் கொட்டியிருக்கு மிடத்திற்கு நேராகதட்டித்தொங்கவிட்டால் தான்யங்களுக்கு நாசமே கிடையாதாம். இதைக்காட்டிலும் வாரத்திற் கொருமுறை ஸ்த்ரீகள் தான்யங்களை கவனமாய்ப்பார்த்து வெய்யலில் காயவைத்து வாரி வைக்கிறது நலம்.

III

KITCHEN AND COOKERY.

சமையலறையும் சமையலும்.

Ravaconjee.

ரவைகஞ்சி:—நல்ல பட்டணம்ரவையை பாணியில் நெய்யிலை சிவக்க வருத்துக்கொண்டு, கொஞ்சம் சுத்த ஜலத்தைவிட்டு, நொட்டிக்கி மாவு பிசைவதுபோல (Called Towing), நன்றாகக் கையிலை பிசைந்து கொண்டு, சுத்த ஜலத்தில் இம்மாவை அலச, பால்போல், யிதின் ஸத்து யிறங்கும், இதை நன்றாக அடுப்பிலிட்டுக் காய்ச்சி,அதற்கு வேண்டிய அளவு பாலைச்சேர்த்து, இரண்டும் நன்றாக காய்ந்த பிறகு சீனி சர்க்கரையும், கொஞ்சம் எலரிசியும் போட்டு, நன்றாகக்கிளறி, எடுத்துக்கொள்ளவேண்டியது. வ்யாதிஸ்தர்களும், ஏனையோர்களும் சாப்பிட, மிக ருசிகரமாயிருக்கும்.

To Improve Flavour of Coffee.

காப்பியின் வாஸனையை அதிகரிக்க:—காப்பிப் பொடியின்மேல் வெந்நீர் ஊற்றுவதற்கு முன்னால் காப்பித்தூளின்மேல் கொஞ்சம் உப்பைத் தூவிப் பிறகு வெந்நீரை ஊற்றினால் காப்பிக்கு வாஸனை ரொம்ப அதிகமாக இருக்கும்.

Dried Vegetables.

வற்றல்:—காசவர்க்கங்களில் சில வகைகளை உலரவைப்பதனாலும் உப்பு சேர்த்து வேகவைத்து உலரவைப்பதனாலும், உலரவைத்து புளித்த தயிரில் உப்பு சேர்த்து ஊறவைத்து திரும்பவும் உலரவைப்பதனாலும் மூன்று,அல்லது நாலு மாதங்கள் நிற்கக் கூடியவைகளாயிருக்கும். இவைகளை வற்றல் என்னப்படும். அவரைக்காய், கொத்தவரக்காய், கத்திரிக்காய், பாவற்காய் சுண்டக்காய், சுக்கங்காய், மணத்தக்காளிக்காய், மாங்காய், முதலிய காய்கள் வற்றலுக்குரியவைகள். இவைகளை ஏராளமாய் கிடைக்கக்கூடிய காலங்களில் சேகரித்து வற்றலிட்டு வைத்துக்கொண்டால் காய்கள் கிடையாத காலங்களில் உபயோகித்துக்கொள்ளலாம். காய்களை பச்சையாக உபயோகிப்பதைவிட வற்றலாக உபயோகித்தால் வியாதியாளருக்கும் வயோதிகருக்கும் நல்லது. எல்லா வற்றலும் மணத்தக்காளிக்காய் வற்றல் மிகவும் சிறந்தது. அது சரீரத்துக்கு மிகவும் ஆரோக்கியமானது. ஒவ்வொரு குடும்பங்களிலும் அது தட்டாமலிருந்து வரவேண்டும். ஒவ்வொருவர் வீட்டிலும் பத்து மணத்தக்காளிசெடிகளாவது வைத்து காப்பாற்றி இலைகாய், வற்றல் இவைகளை உபயோகித்துவரவேண்டும். குழந்தைகளுக்கு விசேஷ குணத்தை கொடுக்கத்தக்கது.

Sheep Milk.

வெள்ளாட்டுப் பால்:—வெள்ளாட்டுப் பால் பசும் பாலுக்குள்ள எல்லா குணங்களும் இருப்பதுடன், அவைஉடல் சிறுத்து காரம் கசப்பு முதலிய பல சுவையுள்ள உணவுகளை மிதமாக உண்பதாலும், மிதமாக நீரைப் பருகுவதாலும், ஓடித்திரிவதாலும் அவற்றின் பாலுக்கு பசும் பாலுக்கில்லாத வேறு விசேஷ குணங்களுமுண்டு; அவையாவன, பசிதீபனமுண்டாகும், எளிதில் ஜீர்ணமாகும், அஜீர்ணத்தைப்போக்கி அஜீர்ண பேதியைக்கட்டும், சுவாஸகாஸம், ரத்த பித்தம் இவற்றைப் போக்கும்; க்ஷயரோகிகளுக்கு ஹிதமாயிருப்பதே இதற்குண்டான விசேஷ குணமாகும்.

IV

LAW.

சட்டம்.

Widow's Savings.

விதவையின் மிதமிப் பணங்கள்:- ஒரு விதவை ஒரு ஏஜண்டை நியமித்து தன் ஸொத்துகளைப் பார்க்கும்படி ஏற்படுத்தியிருந்தாள். அந்த ஏஜண்டு பணங்களை வசூல்செய்து விதவையின் ஆயுள் காலத்துக்குள் அவளிடத்தில் கொடுக்காவிட்டால் அந்தத் தொகைக்கு அந்தர வார்ஷுகளுக்கு கணக்கு ஒப்பு விக்கவேண்டும். விதவை செலவிடாமல் மீத்து வைத்திருக்கும் ஸொத்தெல்லாம் அவளுடைய ஸ்ரீதனம் ஆகாது. அவைகள எல்லாம் அவள் அனுபவித்து வந்த எஸ்டேட்டைச் சேர்ந்ததாகும்.

Minor Widow and Husband's Debt.

மைனர் விதவையும் புருஷன் பட்டிருந்த கடனும்:—ஒரு ஜட்ஜ்மெண்ட் டெட்டர், (Judgment debtor) அதாவது கடன் வாங்கியிருந்து கோர்ட்டால் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்த ஒருவர் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு இறந்துபோய்விட்டார். அதன்மேல் நிறைவேற்று நடவடிக்கையில் அந்த ஜெட்ஜ்மெண்ட் டெடரின் இரண்டு விதவைகளையும் அவருடைய லீகல் செப்ரெ ஸெண்டடிவ்வாக சேர்த்து நடவடிக்கை நடந்துவந்தது. விதவைகளின் ஒருத்தி மைனரா யிருந்தாள். மற்றவள் தனக்குள்ள பாத்யதையை ஒரு அன்யருக்குப் பராதீனம் செய்துவிட்டாள். மைனர் விதவை மேஜராக இருந்தால் எப்படி நடக்குமோ அப்படி நிறைவேற்று நடவடிக்கைகள் நடந்துவந்து ஜட்ஜ்மெண்ட் டெடருடைய ஸொத்துக்கள் கோர்ட்டில் எலத்தில் விற்கப்பட்டன. ஜட்ஜ்மெண்ட் க்ரெடிடர் அதாவது கடன் கொடுத்து டனுக்காக கோர்ட்டில் தீர்ப்பு வாங்கியிருப்பவருக்கும், கோர்ட் எலத்தில் ஸொத்தை வாங்கினவருக்கும், இரண்டு விதவைகளில் ஒருத்தி மைனரென்பதும் இன்னொருத்தி தனது பாத்யதையைப் பராதீனம் செய்திருந்தாள் என்பதும் தெரியும். அப்படியானால் அந்த கோர்ட் வலரிற்பனை செல்லாது. மைனர் விதவை ஸொத்தில் தனக்குச் சேரவேண்டிய பாகத்துக்கு வ்யாஜ்யம்போட அவளுக்கு பாத்யதையுண்டு. லிமிடேஷன் ஆக்ட் 12-வது ஸெக்ஷனும் 166-ஸெக்ஷனும் இந்தக்கேஸுக்கு ஏற்கமாட்டா.

Marriage & Partition of Joint Family.

கல்யாணமும் அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்துகொள்ளலும்:— ஹிந்துமதத்தைச்சேர்ந்த ஆண்பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்வதென்பது ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகும். ஒரு அவிபக்த குடும்பத்தின் பாகஸ்தர்களில் சிலருக்கு குடும்பச் செலவில் கல்யாணமா யிருந்தால், பாகமாகும் போது, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்குக் கல்யாணச் செலவுக்காக வேண்டிய ஏற்பாடு செய்து வைக்க வேண்டியது அவச்யமாகும். (ஜட்ஜ் ஸுந்தரய்யர், ஸ்பென்ஸர் ஆகிய இவர்களின் அபிப்ராயம்). கல்யாணமென்பது ஒரு ஹிந்துவுக்கு ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகாது. ஆகையால் அவிபக்த குடும்ப ஸொத்து பாகமாகுமுன், சில பாகஸ்தர்களுக்கு குடும்பச் செலவில் கல்யாணமாயிருக்கிறதென்பதை யாதாரமாகக் கொண்டு, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்கும் பாககாலத்தில் கல்யாணச் செலவுக்குப் பணம் எடுத்து வைக்கவேண்டுமென்று சொல்வதற்கு அவர்களுக்கு பாத்யமில்லை. ஜட்ஜ் (ஸதாசிவய்யருடைய அபிப்ராயம்.)

1911-ம்வரு எஸ். எ., நெம்பர் 355. மதராஸ் ஹைகோர்ட்.

பிழைக்கும்வழி.

V

VIEWS AND REVIEWS.

அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

Sri Ramayana sara sangraham.

ஸ்ரீராமாயண ஸார ஸங்க்ரஹம்:- இவ்வருமையான புஸ்தகத்தை நமது பார்வைக்கு அனுப்பிய எஸ். பி. வெங்கடேச சர்மாவுக்கு வந்தனம். ஸ்ரீமான் வெங்கடேசசர்மா மதுரை மீனாட்சி வித்யாசாலையில் தலைமை உபாத்தியாயர். ஸ்ரீ ராமாயணத்தை 3-வது, 4-வது வகுப்புகளில் படிக்கும் சிறுமி, சிறுவர்களுக்கு உபயோகப்படும்படி சிறு கதைகளாக வீட்டுத் தமிழில் எழுதி யிருக்கிறார். பாடசாலைகளில் மதஸம்பந்தமான போதனைக்கு இப் புஸ்தகத்தை டெக்ஸ்டு புக் கமிட்டியார் ஸிபார்சு செய்யலாம். இம்மாதிரியான புஸ்தகங்கள் தான் தற்காலம் தேவை. இன்னும் இதுபோன்ற புஸ்தகங்களை வெளியிடுவது நலம். நமது சந்தாதார்கள் பாடசாலைகளில் படிக்கும் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா 4.

Viradaparva Kirthanaigal.

விராடபர்வ கீர்த்தனைகள்:-இதை நமது பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமாலுக்கு வந்தனம். இது பைங்காநாடு என வழங்கும் துளஜேந்த்ரபுரம் ப்ர ஹ்மஸ்ரீ நகுநாத சாஸ்திரிகள் அவர்கள் மனைவி மாது ஸ்ரீ மீனாக்ஷியம்மாள் அவர்களால் இயற்றப்பட்டு ம-ா-ா ஸ்ரீ-, எஸ். எக்ஞஸாமி சாஸ்திரியாரால் மன்னார்குடி பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை அணா 2. வேண்டியவர்கள் மிஸ்டர் எஸ். எக்ஞஸாமி, பைங்காநாடு, மன்னார்குடி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ மஹாபாரதத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் விராட நகரத்தில் அஜ்ஞாதவாஸம் செய்ய ஆரம்பித்து பத்து மாதமானபின்பு ஒருநாள் கீசகன் த்ரௌபதையைக் கண்டு இச்சித்தான். அவள் மறுத்து பீமனுக்குத் தெரியப்படுத்தினாள். பீமன் பாஞ்சாலிவேஷம்பூண்டு தந்திரமாக சென்று கீசகனை கொன்றான். அவனுக்குப் பரிந்துவந்த உப கீசகர்களையும் வதைசெய்தான். இக்கீசக வதைப்படலத்தை ஸ்ரீ மஹாபாரதத்தில் நம் ஸஹோதரிகள் படித்திருப்பார்கள். இக் கதையை பைங்காநாடு மாது ஸ்ரீ மீனாக்ஷியம்மாள் பக்தி விசேஷத்தினால் கேட்டவைகளே இனிய பாடல்களாகச்செய்தது மிகவும் புகழத்தக்கது. இதில் ஒரு விசேஷமென்னவென்றால் பாடல்களை பல்லவி, அனுபல்லவிகளாகத் தகுந்தபடி பிரித்து ஸமயோசிதமான வர்ணமெட்டு ராகங்களை அமைத்து செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரியாக இதிஹாஸபுராணங்களிலிருந்து கதைகளை பாடல்களாக மாது ஸ்ரீ மீனாக்ஷியம்மாள் இயற்றிக் கொண்டிருக்கிறாரென்று கேள்விப்படுகிறோம். நம் ஸந்தாதார்கள் இதை வாங்கலாம்.

Happiness of Islam.

இஸ்லாம்மதத்தின் பேரின்பம்:— இஸ்லாம் மார்க்கத்தில் மன ஆறுதலும் ஸ்வாதீனமுமுண்டு. குருட்டு பக்தி, கொடுங்கோன்மை அதில்கிடையாது. நன்றியறிவு, விச்வாஸம், தெய்வபக்தி, காருண்யம் முதலிய அரிய ஸுகிர்த லக்ஷணங்கள் அம்மதத்தில் வேறூன்றியிருக்கின்றன. ஐக்யமே இஸ்லாம் மார்க்கத்தின் விசேஷ லக்ஷணம். ஒற்றுமையின்றி பிணக்கம், வேற்றுமையென்னும் சேற்றில் மூழ்கியிருக்கும் க்ரிஸ்தவர்கள் ஸத்யமூலமாகிய இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொள்வது அதிகாண்மையாயிருக்கும்.

VII

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Women's College in Madras.

சென்னையில் ஸ்த்ரீகள் காலேஜ்:— 1914 ஜூலை மீ முதற்கொண்டு ஒரு வருஷம் டெம்பரெரியாக சென்னையில் ஸ்த்ரீகள் காலேஜ் ஒன்று ஏற்படுத்த சென்னை கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். அந்த உத்தரவு பின் வருமாறு. எட்டு மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் சம்பளம் பெறும் ஒரு பிரின்ஸிபலுக்கு 4000 ரூபாய்.

200 ரூபாய் சம்பளத்தில் ஒரு அஸிஸ்டண்டுக்கு 1600 ரூபாய்.

60 ரூபாய் சம்பளத்தில் ஒரு பண்டிதைக்கு 8 மாதத்திற் 480 ரூபாய்.

40 ரூபாய் சம்பளத்தில் 8 மாதத்திற்கு ஒரு குமாஸ்தாவுக்கு 320 ரூ.

மாதம் ஒன்றுக்கு 9 ரூபாய் சம்பளத்தில் இரண்டு சேவகர்களுக்கு 8 மாதங்களுக்கு 144 ரூபாய்.

மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய் குடிக்கூலி வீதம் 8 மாதத்திற்கு 2800 ரூபாய் மொத்தம் ரூபாய் 9344 ஸாமான்கள் லேப்ரரி முதலியவைகளுக்கு 2000 ரூபாய். தற்போது இந்தியாவிலேயே ஒரு ஸ்த்ரீ பிரின்ஸிபாலையும் ஒரு ஸ்த்ரீ அஸிஸ்டண்டையும் மேற்கண்ட சம்பளங்கொடுத்து தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும். தாங்கம் பாகத்திலிலாவது எழும்பூரிலாவது மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய் வாடகையில் ஒரு இடம் சம்பாதிக்கவேண்டியது அவச்யம்,. இங்க்லாந்திலிருந்து லேடி பிரின்ஸிபாலையும் லேடி அஸிஸ்டண்டையும் வரவழைக்கிறதாயிருந்தால் அவர்களில் பிரின்ஸிபாலுக்கு 500-முதல் 750-ரூபாய் சம்பளம் வரையிலும் மற்றவருக்கு 400-முதல் 500-ரூபாய் சம்பளமும் கொடுக்கப்படும்.

A Gift.

ஒரு நன்கொடை :—விஜய நகரவராயியும் வால்டெர் எஸ்டேட்டின் சொந்தக்காரருமாகிய மிஸ்டர் P. ராமமூர்த்தி செட்டியார் விசாகப்பட்டணம் க்வீன்மேரி ஹைஸ்கூல் சிறுமிகளில் தக்க படிப்புள்ள சிறுமிக்கு ஒரு தங்கப்பதக்கம் வருஷாந்தோரும் கொடுக்க ரூ. 1000 மூலதனம் ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பதக்கத்திக்கு லார்ட் பெண்டலாண்டு பதக்கமென்று பெயர்.

(3) சினராஜ்யத்தில் மகாதந்திரிகளான புத்தமத பூசாரிகள் புத்த பகவானைபோல சிறிய உருவங்கள் செய்து முத்துச் சிப்பிகளுள் வைத்து ஒரு வருஷம் சும்மாவிட்டு விடுகிறார்களாம். நாளடைவில் நல் முத்து அந்த சிறு உருவங்களை யெல்லாம் மூடி, நல் முத்து இயற்கையினுலேயே அத்தகைய உருவத்தை அங்கீகரித்திருப்பதாகத் தோன்றுகிறது. சினதேசத்தார் புத்தபகவான் முத்து சிப்பியினுள் வாசம் செய்கிறாரென்று நினைத்து இத்தகைய முத்து சிப்பிகளிடத்தில் சொம்பவும் பக்தி பாராட்டி வருகின்றார்களாம். இம்மாதிரி ஒரு சிறிய முத்துருவம் நமது சென்னை மியூஸிய (Museum) த்திலும் இருக்கிறது. "பார்வேணுமானால் பார்க்கலாம்.

VII

WIT & HUMOUR.

தமாஷ்.

A Story.

பஸியால் ரொம்பவும் வருத்தி நீனி கிடைக்குமாவென்று அலைந்துகொண்டிருந்த ஒரு ஓனாய் காட்டில் ஒரு குடிசை வழியாகச் செல்லுகையில் ஒரு தாயார் தன் அழுகிற குழந்தையை பார்த்து "அழாதேடா! வாயை மூடு! இல்லாவிடில் உன்னை நான் ஓனாய்க்கு இரையாக போட்டு விடுவேன்" என்று அதட்டுவதை கேட்டது. அந்த குழந்தை இரையாக அகப்படுமென்று நினைத்து அந்த ஓனாய் குடிசைக்குப் பக்கத்திலே பகல் முழுதும் கார்த்திருந்தது. பொழுது போனதும் அந்த தாயார் "என் கண்மணி சமத்தல்லவே. அவன் அழவேமாட்டான். ஓனாய் இங்கே வந்தால் அதை தடியாலடித்து கொன்று விடுவோம்" என்று சொல்லி குழந்தையை சோட்டினள். இதை கேட்டதும் அந்த ஓனாய் ஓடி தன் வீடுபோய் சேர்ந்தது. அங்கே தன் மனைவியாகிய ஓனாய் கணவனை பார்த்து "தினம் நீங்கள் வெகு உல்லாசமாக வீட்டுக்கு வருவீர்லல்லவா. இன்றைய தினம் என் நீங்கள் இவ்வளவு களைத்தும் பஸியால் வருந்தியும் இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்கு அந்த ஓனாய் "அடி, அதை என் சொல்வேன்! நான் ஒரு பெண் வார்த்தையை நம்பி மோசம் போனேன்" என்று மறுமொழி கூறிற்று.

சில தட்டாரியல்பு.

கொடுத்தது திரும்பக்கொடார்மனது வந்திடில் குறையின்றி நிறை யீந்திடார்.

கொடுக்கிறேன் நீ நாளை வாவென்பார் போயிலுல் கோரி யொருதவணை வைப்பர்.

அடித்தடித்துக் கேட்கில் ஆகும்வேலையிலாகும் அல்லது செய்வது செய்என்பார்.

அணுவை மகமேரு போலாக்குவார் மேருவையும் அணுவா நிறுத்து விடுவார்.

எடுத்தடல் வளர்த்திட்ட தாய் தாலி என்னினும் எடாது முழுதும் கொடுக்கார்.

இட்டுரைத்தே மாற்றை ஏமாற்று வார்முழுதும் ஏப்பமிட்டாலுமிடுவார்.

வடுத்தொழில் பொற் கொல்லரால் சிவன்பணி பூண்ட வகையிதென ஒருவன் விண்டான்.

வரை ராஜ குமரிமடி மீது விளையாடல் புரிமணி கொண்ட வடிவேலனே.

வடிவேலர் சதகம்.

1. சாதாரணமாக நாம், குழந்தைகள் இரண்டு மூன்று வருஷமட்டுமே தாய்ப்பாலுண்பதைப் பார்த்துவருகிறோம். வட திருவத்தினருகேயுள்ள நாடுகளில் வசிக்கும் ஓர் ஜாதியாகிய எஸ்கிமோ வென்பவர்களின் குழந்தைகள், பதினைந்து பதினாறு வயதுள்ள பாலியர்களாகுமட்டும் அன்னைப் பாலருந்திவருகிறார்கள்.

2. ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் எறும்பைத்தின்று ஜீவிப்பதாகிய எகிட்னுவென்னும் ஓர்ம்ருகம் பகலிலைப்போல் முட்டையிடுகின்றதாம் முட்டையை வெடித்துக் குட்டிகள் வெளிப்பட்ட வுடனே அவைகளுக்கு ம்ருகங்களைப் போலப்பால்தந்து வளர்க்கிறதாம்.

3. உயிருள்ள பிராணிகளெல்லாவற்றிலும் வெகு காமதமாக விருத்தியாகும் பிராணியாகிய யானை ஜாதியில் பிறந்த யானைகள் ஒன்றேனும் இறக்காமலிருந்தால், 750 வருஷங்களுள் ஆதியிலிருந்த ஒரு ஆண் ஒரு பெண் யானைகளிருந்து 19, 000, 000 யானைகள் பூமியின்கண் இருந்து வளர்ந்து கொண்டிருக்குமாம்,

VIII

EVENTS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

மே '1914.

மேமீ 2-ந்தேதி:—பி. எஸ். அமராவதி அம்மாளின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்ட அமராவதி பிரிந்து வித்யாலயத்தின் பருஷாந்தரக் கூட்டம் நடைபெற்றது. மிஸஸ் லாலா குருஸாமி செட்டியார் அக்காலணம் வகிக்க பண்டிதை திருவ்ணவேணி அம்மாள் 'அன்பு' என்னும் விஷயமாகப்பேசினார்.

மேமீ 9-ந்தேதி:—சென்னை அபேத ஐக்கியமானந்த சங்கத்தின் ஆதரவின் கீழ் மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி சாந்தானந்த மௌனி மானஸோபதேசத்தைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார்.

மேமீ 10-தேதி:—தென் மலபாரில் தாழ்ந்த வகுப்பார்களுக்காக ஒரு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பள்ளிக்கூடத்தில் தாழ்ந்த வகுப்பு பெண்களும் படிக்கிறார்கள்.

மேமீ 11-ந்தேதி:—பெங்களூரில் ஸ்ரீனிவாச மந்திர ஸ்தாபகர்களின் ஆதரவின்கீழ் அறுதைக் குழந்தையாக பால்ய மூதல், வளர்த்து வந்த சௌபாக்கியவதி பத்மாவதி என்ற 14-வயதுள்ள ஸ்மார்த்தப் பெண்ணை, பெங்களூர் டிவிஷன் போலீஸ் எட்குவார்ட்டர் இன்ஸ்பெக்டரான மிஸ்டர் சாலிக் ராமம் ராஜாராவ் B. A. விவாகஞ் செய்துகொண்டார்.

மேமீ 16-ந்தேதி:—சென்னை அபேத ஐக்கியானந்த சங்கத்தி ஆதரவின்கீழ் மாலை 4-மணிக்கு, வேதாதாரத்தைப்பற்றி மிஸ் கந்தரம் என்னும் ஒரு வைத்ய ஸ்த்ரீ வித்யார்த்தி உபன்யாஸம் செய்தார்.

மேமீ 16-ந்தேதி:—இன்று கடலூரில் லார்ட் பென்டலாண்லோலி ஆஸ்பத்ரியைத் திறந்து வைத்தார். அதே மாலை மிஸ்டர் வெஸ்லாமி அய்யர் கவர்னரையும் லேடி பென்டலாண்டையும் ஒரு விருந்துக் கழைத்து உபசரித்தார்.

மேமீ 30-ந்தேதி:—சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தி ஆதரவின் கீழ் மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி தாராபாய் ஸ்த்ரீகளும் சைதொழில்களும் என்பதைப்பற்றிப் பேசினார்.

324

துண.—ஆ! என்ன ரொம்பப்பட்டேன். தப்பித்துவிட்டானே; அடே பயலே, அசங்கினையா, மண்டையைப் பிளந்துவிடுவேன். கல்லவேணே. அவன் விரல் நம்கையில் அகப்பட்டது. (குழல் ஊதுகிறவன் இன்ஸ்பெக்டர், போலிஸார் முதலியனர் வருகிறார்கள்).

இன்ஸ்.—நல்ல வேளை நீங்கள் உயிருடன் திரும்பினீர்களே. இக்கே பெரிய பலத்த சண்டை நடந்து நாங்கள் ஜயித்தோம், அவங்க ஓடிப்போய் விட்டார்கள்.

துண.—அப்படியா அதுதான் பாண்டி முழுகிற்றே, காயம் ஒருவருக்கும் படவில்லையே: உயிர்ச்சேதமில்லையே, ஆள்களைப்பிடித்தீர்களோ என்னான் வரும்போது நீங்கள் இல்லை இங்கு, தாத்திக்கொண்டு போயிருக்கீர்களோ.

பத்ம.—நம்மாட்கள் எவரும் அவர்களில் எவரும் இறக்தார்கள்.

துண.—ஆ! அய்யோ பாவம், காயம்பட்டவர்களை டிரெஸ்ஸரிடம் அனுப்பினீர்களோ, எங்கே அவர்கள்.

பத்ம.—அவர்களைத்தேடத்தான் பார்க்கிறேன், நாங்கள் ஓடும்போது அவர்கள் இக்கே விழுந்து கிடந்தார்களே.

கான்.—கஜபதியாட்கள் இவர்களெல்லாரையும் கொண்டுபோய் விட்டார்கள்.

துண.—என்னடா, நீங்கள் என்னடா பண்ணினீர்கள், மூட்டாள்களே.

கான்.—எசமாங்க வராட்டி, நாங்கள் ஓடின ஓட்டம் இப்போதென்தானிருப்போய்ச் சேர்ந்திருப்போம் (இன்ஸ்பெக்டர் உறக்குகிறார்.)

துண.—பேஷ், இன்ஸ்பெக்டரவர்கள் நல்ல ஜயம். இனி என்னிடம் பொய்பேசாதேயும், இப்படி உங்கள் நிலைமையிருக்க, நீங்களா எனக்கு உதவிக்கு வந்திருக்கக்கூடும். ஒருவன் துணைக்கு வந்திருந்தாலுமில் இன்ற கஜபதியை விலங்கிட்டிருக்கலாம். சரி, ரைட் அபொட்டர்ன் (பாண்டி கோஷிக்கிறது) அடே போறுமடா உங்கள் ஜயகோஷம். (போகிறார்கள்.)

ந்ரேவ.—ஆகா ஆண்பிள்ளையாய் பிறந்தால் இந்த குணபூஷணத்தைப் போலல்லவா பிறக்கவேண்டும். அபலைகளை யதட்டி அடிமைப்படுத்துவதில் தான் ஆண்பிள்ளைகள் இக்காலத்தில் சூரத்தனத்தைக் காட்டுகிறது வழக்கம். அதைவிட்டு இப்பேர்ப்பட்ட உத்தமமான சாகசமுள்ள வேலைகளில் ஊக்கம் வைத்து உழைத்தாலல்லவோ ஆண்மை விருத்தியடையும். நாட்டிற்கும் நன்மையுண்டாகும். (போகிறான்).

325

7

அங்கம் II.—களம் II.

இடம்.—குமாரபுவனத்தைச் சார்ந்த தோப்பில் ஆலயத்திற்கெதிரிலுள்ள வஸந்தமண்டபம். கிரிஸ்டீனுவும் ராஜமும் உலாவுகின்றனர்.

கிரிஸ்.—பிரதர். கிரிஸ்துமதத்தின் மேன்மைகளை முற்றிலும் உமக்கு உரைத்து அத்துடன் இந்து மதத்தின் பல கஷ்ட நிஷ்டூரங்களையும் தெளிவாய் சொன்னேனல்லவா.—

ராஜ.—இதேதடா சங்கடமா யிருக்கிறது. பரதராவது சக்ருன்னாராவது. எனக்கு இந்து மதமும் வேண்டாம் கிரிஸ்துமதமும் வேண்டாம். என் மதமே சம்மதம். மதம் பிடித்தவர் யார் லாபமடைந்திருக்கிறார்கள்.

கிரிஸ்.—அப்படியல்ல. மானிட ஜன்மமெடுத்தால் மதம் அவசியம்.

ராஜ.—ஆனால் எனக்கு வேண்டிய மதம் இருக்கிறது.

கிரிஸ்.—சகோதரரே நீர் வீணன.—

ராஜ.—இந்தப் பொய்தானே உம்மைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. உங்கம்மா எங்கப்பாவைக் கலியாணம் செய்துகொண்டாரோ. நான் எப்படி உமக்கு சகோதரராவேன்.

கிரிஸ்.—கர்த்தா ஒருவர், நாம் அனைவரும் அவர் குழந்தைகள். ஆதலால் சகோதரரே.

ராஜ.—அப்படியானால் நான் எப்படி உம்மை கலியாணம்செய்துகொள்வது சகோதரியாச்சே.

கிரிஸ்.—குறுக்குவழி பேசுவதைவிட்டு பக்தியாய் கவனியும். நான் பலமுறை கேட்டும் நீர் உமது ஜாதி யென்ன வென்று சொல்லவில்லையே.

ராஜ.—நானா, நான் ஆண் ஜாதி நீர் பெண் ஜாதி.

கிரிஸ்.—(கோபத்துடன்) நான் போகிறேன்.

ராஜ.—இல்லை உண்மையைச் சொல்லுகிறேன். நீர் இந்துமதத்திலிருக்கையில் என்ன ஜாதி.

கிரிஸ்.—நான்-பிராமின்.

ராஜ.—நான் பிராமின் இரண்டுக்கும் வித்தியாசம் எது.

கிரிஸ்.—ஸ்தோஷம் சகோதரரே நேற்று மலைமீது ஏதோ கொலை கேஸ் விசாரித்தார்களே உமக்குத் தெரியுமல்லவா? விபரமாய்ச் சொல்லும். பின் நம் விஷயம் பேசிக்கொள்வோம். (கையைப் பிடித்துக்கொண்டு இருவரும் உலாவுகின்றனர்).

ராஜ.—விபரமாய் சொல்லுகிறேன். பூச்சிய வருஷம், பிரட்டுமாதம், 42-ம் தேதி எங்க ஊர் பஞ்சாங்கத்திலே—உண்டி, சூனியங்கிழமை, 30-மணி சுமாருக்கு ஆகாயம் என்னும் ஊரில் பெரண்டைக்குளம் என்பவன் பெண்

ஜாதி அறப்புக்கோட்டை என்பவனை மயானம் என்பவன் தாக்கிப்போய் உயிரை விட்டுவிட்டு உடலை வெட்டி மணற்பாங்கு என்ற ஆற்றின் வெள்ளத்தில் போட்டதை—தெரிந்ததா கன்னுய்.—அபத்தம் என்ற போலீசான் கண்டுபிடித்து அநியாயம் என்ற தாலுகாவில் அக்கிரமம் என்ற மாஜின்றிரேட்டு முன் விசாரணைக்கு வந்து குற்றம் ருஜுவாகி புனல் கோட்டை மூவாயிரத்து இருபதாம் செக்ஷன்படி சேஷன் கோட்டுக்கு கோமுட்டி செய்யப்பட்டது. (கிரிஸ்டீனு கோபித்துக்கொண்டு போகிறாள்.) இவளைத் தூக்க இதுதான் வழி. அவள் சொல்வதெல்லாம் சரியாய்த்தான் இருக்கிறது. ஆனால் எங்கப்பா உயிரோடிருக்கும்வரை அமாவாசைதர்ப்பணம், சிரார்த்தம் முதலியது நான் செய்யவேண்டியது இல்லை. அவர் செத்துப்போவதற்குள் காப்பி சாப்பிட்டுவிட்டு எல்லாம் செய்யலாம் என்று வழக்கம் ஏற்பட்டுவிடும். மதமாவது தெய்வமாவது எது சவுகரியமோ அதுதான் மதம். கிரிஸ்டீனுவை விட்டால் வீண் ஆசாரமெல்லாம் தலைக்குவிடும். தலையை மொட்டையடித்துக்கொண்டு அல்லது ஷோக்காய் முன் குடுமை வைத்துக்கொண்டு புல்லாட் போட்டுக்கொண்டு...ஜோராய் இப்படி இப்படி நடக்கலாம். (கல்தூக்கி மேலே விழுகிறான். கிரிஸ்டீனு வருகிறாள். ராஜம் எழுந்து பாடுகிறான்.)

'சுவத்துகிரையை வழித்துப்போட்டி சுணைகெட்டவளே.'

கிரிஸ்.—சகோதரரே, நீர் சுவதந்திரமடைந்தவுடன் உம்மைக் கலியாணம் செய்துகொள்வதாக ஏற்கனவே உறுதிமொழி கூறியிருக்கிறேன்.

ராஜ.—ஆமாம் உறுதிதான் இப்படியே சொல்லி மூன்று பேரை ஏமாற்றிவிட்டீராம்.

கிரிஸ்.—அது பொய் நான் அவர்கள் ஆன்மாவை சன்மார்க்க சமயத்தில் சேர்த்தேனே தவிர.—

ராஜ.—ஆமாம், அவர்கள் கிரிசங்கு சுவர்க்கத்தில் இருப்பதாக கேள்விப்பட்டேன்—நான் கல்யாணமே செய்துகொள்ளப்போவதில்லை. சன்னியாசியாய்விடப்போகிறேன்.

கிரிஸ்.—யார்! நீரா!

ராஜ.—ஆம் சன்னியாசிக்கென்ன குறை. பட்டு வைத்துத் தைத்த பல்லாக்கு, திண்டு, தலையணை, பீதாம்பரம், நெய்யும் பாலும் நிறைய சாப்பிட்டு ஆறுமாதம் ஒரு இடத்தில் சொல்லி இருக்காம் ஆனால் என்ன. பப்ளிமாஸ் பழமும் எலுமிச்சம் பழம் மாதிரிதானே. பப்ளிமாஸ் மாதிரி மூன்று உண்டை சாப்பிட்டுவிடுகிறேன். ஆமாம் உங்கள் மதத்தில் இரண்டு பெண்டாட்டி கூடாதாமே. வப்பாட்டிகள் கூட ஆகாதாமே.

கிரிஸ்.—ஆம்.

ராஜ்.—ஆனால் உங்கள் மதம் தேவையில்லை எங்கள் மதத்தில் எத்தனையோ பெண்டாட்டியோடிருக்கலாமே—ஆனால் காலம் கெட்டுப்போய்விட்டது. எங்களில் கூட இப்பொழுது எல்லாரும் ஒரு பெண்டாட்டியையே தான் கட்டியழுகிறார்கள். (குணபூஷணமும் குமாரமும் வருகிறார்கள்).

கிரிஸ்.—அதுதான் உத்தமமானிட ஜன்மத்துகந்தது.

ராஜ்.—ஆம் எங்கப்பா வருகிறார், அதோ நீர் சீக்கிரம் போய்விடும். (இருவரும் போகிறார்கள்.)

பூஷ.—என்ன ஆச்சரியம். நீங்கள் ஆசாரி சீர்திருத்த சபையின் முக்கிய மெம்பரென்றே எண்ணி யிருந்தேன். தாங்கள் புனர்விவாகம் செய்துகொள்ளாமலிருப்பதும் தங்கள் புத்திரிக்கு இன்னம் விவாகம் நடவாததுமே நான் அப்படி நினைத்ததின் காரணம்.

தூமா.—தங்களுக்கு உலகானுபவம் போதாது. காரியமில்லாமற் தீர்த்தி சம்பாதிக்க வேண்டியவர்களல்லவா? அச்சபைகளுக்குரியவர்கள். வாத்தியார் பிள்ளை முட்டாள், வைத்தியன் பிள்ளை ரோகி என்பதுபோல ஸ்திரீசனின் கல்விக் கண்களை குருடாக்கி அடிமையாய் நடத்தும் பட்சத்தில் என்னை நீங்கள் அவ்வாறு நினைப்பது தகும். அதுவே தற்கால நடவடிக்கைக்குப் பொருந்தியதாகும்.

தூஷ.—ஆம் உண்மையே.

தூமா.—மேன்மையான குணங்களைப் படைத்த மனைவியை இழந்த உத்தமனெவனும் மறு மணம் செய்துகொள்ளான். சிலர் அந்த உயர்ந்த மனைவியை இழந்ததன்பொருட்டே உலகையே வெறுத்ததாகச் சொல்லிவிட்டு தன் போத்திக்குச் சமமாக பெண்களை சீக்கிரமே விவாகம் செய்துகொண்டும் அப்பெண் எதிரிலேயே முந்தி யவளைப் புகழ்ந்து இப்பெண்ணும் தன்னை வெறுக்கும்படி செய்கின்றனர். சாவித்திரி ஒரு பாடல் பாடுவாள்.

கண்ணனை மனையாட்டி காடேறுமுன்பாக
கணிகை வலையிற்சிக்கி கண்ணிய மிழந்தபின்
பெண்ணுளென்றனைமறு பெண்டாக வணைந்தவென்
கண்ணுளனே நந்தம் காதற்கோரெல்லையுண்டோ

என்றாளாம் ஒரு பெண். இவ்வித ஆடவர்கள், தங்களை மறுமணம் செய்துகொள்ளக்கூடாதென்று எங்கு கூறுவாரோவென அஞ்சி, ஸ்திரீகளையும் மறு மணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துகிறார்கள். பிறர் நகைக்க நம் இந்தியாவில் ஆடவர்கள் கற்பு கருப்பானதுபோல ஸ்திரீகளின் மேன்மையையும் குறைக்கத் தலைப்படுகிறார்கள்.

தூண.—(நகைத்து) நியாயமே உலகத்தில் சொற்படி நடப்பவர் சிலரே கேட்டதில்லையா தாங்கள் (பாடுகிறார்.)

பெண் சுதந்திரமெனப் பேசினேன் மேடையேறி
என்புதல்விக்கீந்திடவே யென்னிலே னென்னுளும்
எண்ணிலா வயல்மாதர்க் கீதுரைசெய்தேனன்றி
பெண்டாட்டிக்குரைத்திலேன் பிழைபொருத்தருள்வீரே.

தூமா.—இக்கவிக்கிலக்காகாதவர் சிலரே. பெண்களுக்கு விருப்பமில்லாப் புருஷனை மணம் செய்விக்கலாகாது. வெகு காலம் சேர்ந்து வாழவேண்டியவர்கள் அவர்களல்லவோ.

தூஷ.—(தன்னுள்) சாவித்திரீ என்னை விரும்பவில்லை இது இவருக்குத் தெரிந்தால் என்ன செய்வாரோ. (மதூன் வருகிறான்.)

மதூ.—யாரோ மதுரையிலிருந்து வந்திருக்கிறீங்க.

தூண.—சரீ நீங்கள் போய்வாருங்கள். பிறகு சாவகாசமாய்ப் பேசலாம். குமாரமும்.மதூனும் போகிறார்கள்.

ஐயோ.....என் நண்பனே எனக் கெதிரியாயினனே. சாவித்திரி சரியாயிருந்தால் அது எம்மாத்திரம்...என் இப்பொழுதும் அவளை கட்டாயமாய் மணம் புரியலாமே என்ன பயன்.

அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனிலும் கொடிது கொடிது இன்புற வவர்கையி
லுண்பது தானே என்றுள் ஔவையும்—உண்மையே.

சே நான் என்ன மிருகமா. அயலான்மீது அன்புற்றவளை மனையாளாக்கிக் கொள்வதிலும் வேசியை மணக்கலாகுமே. (ரகுநாதனும் சண்பகமும் வருகிறார்கள்.)

தூஷ.—இச்சமயம் ரகுநாதனைச்சந்தித்தால் என் முகம் உண்மையை வெளிவிட்டுவிடும் (குணபூஷணம் ரோஜாப் புதரில் மறைகிறான்).

சண்.—அவள் கோயிலில் பூஜைக்குத்தயாராயிருக்கும்படி பட்டரிடம் சொல்லச்சொன்னாள்.

ரகு.—அவளுக்கு கலியாணம் ஏற்பாடாகும் என்கிறீர்களே. வரன் எந்த ஊர்.

சண்.—அனந்த சயனம்.

ரகு.—ஆனால் குணபூஷணத்—

சண்.—அவருக்கும் தெரியும். அவர் தான் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ரகு.—(யோசனையுடன்) உங்களைக் கேட்கலாமோ. பெண் சம்மதம் கேட்டுத்தானே செய்கிறார்.

சண்.—என்னவோ. அனேகமாய் பெண்ணுக்கு அதிக ஆவலிருக்கிறதாகத் தெரியவில்லை.

ரகு.—ஏற்பாடாகும் வரை சம்மதித்திருக்கிறாளல்லவோ. என்னதியில்லையோ.

சண்.—(தன்னுள்) நல்ல கெட்டிக்காரன். என் மூலம் உளவறியப்பார்க்கி
கிறான் (வெளிப்படை) நான் அவசரமாய்ப்போகவேண்டும். (போகிறாள்.)

ரகு.—இவள் ஒளிக்கிறாள் என்பது நிச்சயம். நல்லவேளை அப்பெண்ணு
க்கு அவ்வரன்மீது ஆவலில்லை. பின் என் மீது அப்பார்வை...ஓ, சாவித்
திரி. இப்போது வருவாளென்று சொன்னாளே...ஆம்... ஆனால் பூமியை
நோக்கிய வண்ணம் பேசாமல் போய்விடுவாளே. நேரில் போய் ஏன் கேட்
கக்கூடாது. (மௌனம்) இவ்விஷயத்தில் எத்தகைய தைரியசாலிக்கும்
கால் நடுங்கி மனம் அஞ்சுகிறதே...மேலும் பெண்களை இவ்விஷயங்களில்
நம்பவே கூடாது. ஒன்றும் தெரியாதவர்போல நடிப்பார்கள். அவமானப்
படவேண்டியது தான். (மூக்குக்கண்ணாடியைக் கழற்றிவிட்டு, சட்டையிலி
ருந்து படத்தை எடுத்து பார்க்கிறான். பூஷணம் பின்னிருந்து கவனிக்கி
றார்).

பூஷ.—(தன்னுள்) அடே, இவன் கையிலா. அப்படம் சிக்கிக்கொண்
டது. இதென்ன விபரீதம். விதியே.

ரகு.—(தன்னுள்) ஆஹா! என்ன மனோபாவம். என்ன கம்பீரம். என்ன
அழகு. இதை அவளே எழுதியிருக்கவேண்டும். அவள் உருவே இதில்
உண்மையாய் விளங்குகிறது. ஆனால் இக்கண்கள் களங்க மின்றி என்னை
நோக்க, அவள் கண்களோ. ஒரு வினாடிக்குமேல் என்னைநிமிர்ந்து பார்ப்ப
தில்லை. அவள் மனோபாவமும், இளநகையும் என் மனத்தை விட்டகலவே
யில்லையே....ஆகா (பாடுகிறான்) திடனற்ற பூங்கொடி போல.

மேலும் அவள் அன்று பாடிய, கானமிருதம் ஆஹா! நினைக்க நினைக்க
என் உள்ளம் பூரிக்கின்றது. இப்பாடல்கள் மறந்துபோய் விடும். இச்சரித்
திரத்தின் கீழ் வரைகிறேன் (சித்திரத்தில் எழுதுகிறான். பூஷணம் கண்டு
பெருமூச்செறிகிறான். ரகுநாதன் பின்பு பாடுகிறான்.)

கர்ணாருந்து தமேவ கோகில ருதம் தஸ்யா : ச்ருதே பக்ஷிதே
சந்த்ராலோகரு கிஸ்தானனருகே : ப்ராகேவஸந்ததர் சனாத்
சட்சுர் மீலனமேவ தன்னயனரேயாயம்ரே ம்ருகீணாம் வரம்
ஹைமீவல்ல்யபி தாவதேவ லளிதா யாவன்னவா தருச்யதே.

இந்த. சுலோகம்உனக்கென்றே இயற்றியதுபோல பொருந்தியிருக்கி
ன்றதே. உன்னைக்கிட்டாய் பொருள் என்றெண்ணி விலகாமால், ஏழையும்
அனாதையுமான நான் உன்னை யடையலாமென் றெண்ணலாமோ (பாடு
கிறான்.)

கம்பன் போற்கவி பாடக் கருதிய மூடன் போலும்
அம்புலி தன்னை வேண்டி யழுதிடும் குழவி போலும்
செம் பொன்னை நிகர்த்திடுமிச் சாவித்திரி தனை நினைந்து
வெம்பி மன நைவதேன் வீணன்னோ விளம்பிடிலே.

ஐயோ. எனக்கு சக்தியிருப்பின் இச்சித்திரத்தை உயிர்ப்பித்து பேசச்
செய்தாவது என் வருத்தத்தை ஆற்றிக்கொள்வேனே (படத்தைப் பார்த்து
பாடுகிறான்)

மின்ன லொளி போன் முகமும், மீனயனம் புன்னகையோட
அன்ன நடையுங் காட்டி யன்பெலாங் கொள்ளை கொண்ட
பெண்ணின் மணியே. நீ பேசாமடந்தை போன்று
உன்னிதமாய் சித்திரத்து கந்திருப்ப தென்னே என்னே.

(படத்தை முத்தி யிடுகிறான்)

தூரத்தில் சாவித்திரி பூஜை திரவயங்களுடன் தட்டை கையிலேந்தி
வருகிறாள்.

பூஷ.—(தன்னுள்) இவன் இங்கிதங்கள் ஒவ்வொன்றும் நாராசம்போல
என் இருதயத்தைப் பிளக்கின்றது. அதோ வருகின்றாள் சாவித்திரீ: இப்பொ
ழுது அவர்கள் சந்தித்தால் தெரியும் என் விதி. (மறைந்து நிற்கிறார்)

ரகு.—(தன்னுள் ஆ. அதோ வருகிறாள். என் மனதை திருடிய
மனோரஞ்சிதம்...என் மனம் என்னைப்பின் தள்ளி அவள் முன்னே செல்கின்
றதே...இவள் மனதை யறிய வேறு வழி ஒன்றும் விளங்கவில்லையே. நித்
திரை செய்வது போல பாசாங்கு செய்வோம். (திண்ணையில் படுத்து கண்
மூடுகிறான். சித்திரத்தை காற்று தூரத்தில் கொண்டு போகிறது.) அடடா
இதென்ன கஷ்டம. மறுபடி அதை எடுக்க கூடவில்லையே. அதோ அவள்
அதன் அருகில் வருகிறாள் (சாவித்திரி வந்து சித்திரத்தை எடுத்து பார்க்கி
றாள்.)

சாவி.—சீ நம்மைப்பிடித்த சனியை விலக்க தெய்வத் தோற்றமும் பக்
தியுமே சிறந்த வழி யென்று நான் புறப்பட்டு வர, இச்சித்திரம் தென்படுகி
றதே. அதில் எழுதியிருக்கும் என் உருவையும் பாடல்களையும் காண...
இவைகளை...ஐயோ...அவரே எழுதியிருக்கவேண்டும். ஸ்திரீகளின் மனம்
உறுதியற்றது. சஞ்சலமானது என்று எழுதியிருப்பதைக்கண்டால் எனக்குக்
கோபம் வரும். ஆனால் தற்காலம். அது என் விஷயத்தில் நிஜமாயிற்று.
பாவை என்ற பேர் எனக்கே பொருந்தியது. உள்ளத்தில் கவலை யென்
பதே யின்றி நிர்மலமாயும் குதூகலத்துடனுமிருந்த நான் இரண்டு நாளாய்
பேய் பிடித்தவள்போல் மனம் வேறு செய்கை வேறு மாயிருப்பதைக்காண
ஏளனம் செய்கிறார்களே. என் தகப்பனாரும் உண்மை தெரியாது. மனம்
செய்து கொள்ளும் மகிழ்ச்சியால் இன்னிலைமையிலிருப்பதாக என்னுகிறா
ரே. அறிந்தால் என்ன செய்வாரோவென என் மனம் அஞ்சுகிறது. ஐயோ
நான் என்ன செய்வேன். இனிமேலும் எப்படி உண்மையைநடபடிக்கை
யால் காண்பிக்க முடியும்.....செ. (சித்திரத்தைக் கிழிக்கப்போகிறாள் நிதா
னித்து) இதை எழுதினது யாரென்றறியுமுன் ஒன்றும் செய்யலாகாது.
இங்கு மண்டபத்தில் யாராவது இருப்பார்களோ (மெல்ல பார்த்து ரகுநா
தத்தைக் கண்டு தலைகுனிகிறாள். மறுபடி பார்த்து) அவர் தூங்குகிறார்போ

விருக்கிறது. அவரிடமிருந்துதான் இச்சித்திரம் வந்திருக்கலாம் (சித்திரத்தை சந்தோஷமாய் பார்க்கிறாள்) சித்திரம் எழுதுவதில் சாமர்த்தியம் உள்ளவரே. (ரகுநாதத்தை உற்று நோக்குகிறாள்) சண்பகம் வருகிறாள்.

சண்.—(சாவித்திரியின் நிலைமையைக் கவனித்து தன்னுள்) இவள் என்ன காரியம் செய்யத்துணிந்தாள். இதை யாராவது கண்டால் அம்ம... வீண்பழிக்காளாக்கிவிடுவார்களன்றோ! உலகமெனும் காற்றினின்றும் கிளம்பும் அவதூராகிய தூசு பெண் எனும் மெலிய பட்டாடையில் படிந்தால் பிரிக்கக்கூடாதன்றோ. (மறைகிறாள்.)

குண.—(மறைவில்) ஆ தீர்ந்தது என் சந்தேகம். (சாவித்திரி சுற்றும் பார்த்துவிட்டு ரகுநாதம் அருகிற் சென்று பார்த்து பரிதபிக்கின்றாள்)

சாவி.—ஐயோ இந்த ரணங்கள் இன்னும் ஆரவில்லையே. என்ன தைரியமாய் அன்று புலியை எதிர்த்தார். இவருக்கு ஆதரவுடன் வளர்க்க வேறெவருமில்லையோ (சுற்றிப்பார்த்து விரைவாய் ஆலயத்துள் செல்லுமாறு படியிலேறி திரும்பி பார்க்கிறாள். ரகுநாதம் எழுந்து ஆழ்ந்த ஆவலுடன் நோக்குவதைக் காண்கிறாள். கையிலிருந்த தட்டும் பூஜை சாமான்களும் கீழே விழுந்து சிதருகின்றன. சாவித்திரி பிரமித்து நிற்கிறாள். சண்பகம் வெளியில் வந்து புன்னகை செய்ய சாவித்திரி தலை குனிகிறாள்.)

ரகு.—(தன்னுள்) சரி அவள் எண்ணம் நன்றாய்த் தெரிந்தது. இனி சீக்கிரம் பூஷணத்தைக் கண்டு அந்த கலியாணத்தை நிறுத்தி என் விஷயத்தை ஏற்பாடு செய்துகொள்கிறேன். (போகிறான்.)

குண.—(மறைவில்) ஆ என் இருதயத்தின்பேரில் மலைவிழுந்ததுபோல் இருக்கிறதே...முடிவாய் கேட்டு தெரிந்துகொள்ள இதுதான் சமயம் இதென்ன தட்டு சிதறி விழுந்தது. என் வளையல் ஒடிந்ததுபோல எதுவும் சகுனத்தடையோ. ஐயோ எனக்கும் இல்லாமல் ரகுநாதனுக்கும் கிட்டாமல் போய்விடுவாளோ.

சண்.—(புன்முறுவலுடன்) சாவித்திரீ போனதை நினைந்து வருந்துவதில் பயனென்ன. நீ மண்டபத்தில் உட்கார்ந்திரு. நான் மறுபடி பூஜா திரவ்யம் சேகரித்து வருகிறேன். (தன்னுள்) குழந்தையிலிருந்த சாயல் அவன் கன்னத்தில் அப்பொழுதுகண்ட ரோஜா மொட்டின் குறி அப்படியே இருக்கிறது.

சாவி.—அங்கு யாரோ இருந்தார் போலிருக்கிறதே.

சண்.—ஒருவருமில்லையே. யார் இருந்தது. திருடனோ. பயந்து கீழேபோட்டாயா (சிரிக்கிறாள் சாவித்திரி. தலைகுனிந்து கண்ணீர் வடிகிறாள். சாவித்திரியை அணைத்துக்கொண்டு.) இதென்ன. இதுதானா உன் மனஉறுதி. உன் புத்தி தடுமாறி யிருக்கிறது. நீ படித்தவளாயினும் அனுபமில்லாதவள். நிதானமாய் உன் கடமையை யோசித்துப்பார். அவன் போய்விட்டான் பயப்படாதே. (போகிறாள்.)

THE
FEMALE EDUCATION
AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லர் தவர்.—திருக்குறள்.

Editor:
Sister R. Thayarammah.

பத்ராதிபர்:
ஸஹோதரி ரேவு. தாயாரம்மா.

Vol. 3. தொகுதி 3 } ஆகந்த௵ { ஆனிமீ, June. 1914. ஆடிமீ, July. 1914. { No. 9/10. பகுதி 9/10.

The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72—0—0
Half yearly	1—8—0	40—0—0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

	சந்தா.	விளம்பரசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0;
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

பிரஹ்லாத சரித்திரக் கும்மி.

1-வது கட்டம்.

வீளக்கும்தோப்பில் உதித்தவரே—என்ற மெட்டு.

1. அண்டமெங்கும்புகழ் மண்டலத்திலொரு
தொண்டன்பிரகலாதன் சரித்திரத்தை
விக்னம்வாராதே காத்திடுஎன்தனே
வேதாந்ததேசிகர் பாதம்துணை.

2. அசுரகுலத்தில் அவதரித்தஅந்த
அண்ணன்தம்பிமார்கள் இருவர்கள்
அவரில்ஜேஷ்டன் இரண்யகசுவு
என்னும்ஒருடடி ராக்ஷஸனும்

3. அவனுக்கு ஒரு சகோதரனும் அவன்
பேரும்இரண் யாக்ஷதனும்.

4. மூத்தவனுக்கொரு பத்தினியா
மகாபதிவிரதை யவள்காயாது.

5. பாவிதம்பிசெய்யும் பாதகம்போக்கிட
பாரில்திருமால் படையெடுத்து
சித்தாசுரனை சிறைபிடித்துமே
சீர்பாதம்சேர்த்திட அவதாரம்செய்தார்.

2-வது கட்டம்.

பாரளந்தார் திருவடியை—என்ற மெட்டு.

1. தம்பிவதம்கேட்டுமவன் நம்பிக்கைகொள்ளாமல்
தம்பியைக்காணுமலே விம்மிவிம்மிகரைந்தான்.

2. சூளனவன்வீரங்கொண்டு செழுமுனையில்நின்று
தாபத்துடன்தவம்புரிய தண்டிவனஞ்சென்றான்.

3. தவச்சூட்டைதாங்காமல் தேவர்களும்மிளம்பி
இந்திரனைசேவித்து வந்தனம்செய்துரைத்தார்.

4. இரண்யனவன் தவம்புரிந்து எங்குங்கொடிகாட்ட
பரமனிடம்வரம்கொண்டால் அசுரருக்கதுசரியோ.

5. அதுவுமன்றி அவனுடைய அறியாள்கர்ப்பத்தரித்தாள்
அன்புடனே அசுரர்குலம் கடையுமன்றே.

6. பாரிலெங்கும்வீரியமாய் போரிலமைந்தானே
கருவுடனே வேருத்து வாரும் தேவாஜா. (வரும்)

சுந்தாம்மாள்.

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

The Late Lady Hardinge.

காலம் சென்ற லேடி ஹார்டிஞ்சு :—என்ன பரிதாபம்! என்ன துக்கம்! ஐயோ! எப்படித்தான் லார்ட் ஹார்டிஞ்சு தமது மனதுக் கிசைந்த மனைவியைப் பிரிந்து இருக்கிறாரோ! லேடி ஹார்டிஞ்சுக்கு திடீரென அகால மரணம் ஸம்பவிக்குமென்று ஒருவரும் நினைக்கவில் லையே! சென்ற மார்ச்சுமீ தான் லேடி ஹார்டிஞ்சு வைத்யம் செய்து கொள்ள இங்கிலாந்து சென்றார். அங்கு ஆபரேஷன் செய்யப்பட் டார். அப்போது ஸுகுயமாகத்தானிருந்தார். திடீரென ஜுலீமீ 11உ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு லேடி ஹார்டிஞ்சு இறந்தாரெ ன்ற ஸமாசாரம் இந்தியாவிற்கு எட்டவே ஸ்த்ரீகளும், புருஷர்களும் பொறுக்கமுடியாத துக்கத்தி லாழ்ந்திவிட்டார்கள். இந்தியர்கள் அனைவரும் ஆங்காங்கு கூடி தங்களது மிகுந்த அனுதாபத்தைத் தெரிவித்து வருகிறார்கள். நம்மை அன்புடன் சென்ற 3½ வருஷகா லமாகப் பரிபாலித்துவரும் ராஜப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சுக்கு இம் மாதிரி இடியைப்போன்ற துக்கம் வரவேகூடாது. இந்த துக்க ஸமாசாரம் வந்த தினத்தன்று லார்ட் ஹார்டிஞ்சின் மனம் எவ்வாறு இருந்திருக்குமோ! லார்ட் ஹார்டிஞ்சு மஹா உத்தம விவேகியான தால் "எதை ஸஹிக்க முடியாதோ அதைப் பொறுத்துத்தான் தீர வேண்டுமென்பதை" உள்ளத்தில் இருத்தி, தமது குழந்தைகளாகிய தெய்வபக்தி ராஜபக்தியுள்ள இந்திய ப்ரஜைகளின் அன்பினால் தமது துக்கத்தை சாந்தப்படுத்தி, மீதியுள்ள 17 மாத காலத்தைக் கழிப்பார் என்று எண்ணுகிறோம்.

லேடி ஹார்டிஞ்சு இந்திய ஸ்த்ரீகளின் முன்னேற்றத்தில் கருத் தாவைத்தவர். தம்மால் கூடிய உயர்ந்த நன்மைகளைச் செய்தார். இந்திய ஸ்த்ரீகள் இன்னும் அவரிடம் எவ்வளவோ நன்மைகள் எதிர் பார்த்திருக்க, அதற்குள் பகவான் ஸர்வேச்வரன் அவரை தம்மிடம் அழைத்துக்கொண்டார். இந்திய ஸ்த்ரீகள் தூர அதிர்ஷ்டவாஸிகள் என்றதற்கு இது ஒரு லக்ஷ்யம்.

லேடி ஹார்டிஞ்சின் பூர்வ நாமம் ஹனரபிள் மினிபெர்ட்ஸெலீனு. அவர் லார்ட் ஆலிங்டனின் குமாரத்தி. அக்குடும்பத்திற்கு ஸ்டார்ட்

குடும்பமென்று பெயர். அக்குடும்பத்தார், சென்ற நூற்றாண்டின் பல வருஷகாலம், பார்லிமெண்டில் பிரதிநிதியாய் இருந்துவந்தார்கள். லேடி ஹார்டிஞ்சுக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. முதல் குமாரர் 1892-ம் வருஷத்தில் பிறந்தவர். இரண்டாவது குமாரர் 1894-ம் வருஷத்தில் பிறந்தவர். ஆனரபிள் டயமண்ட் எலினின் வயோலெட் என்ற குமாரத்தி 1900-ம் வருஷத்தில் பிறந்தவர்.

லேடி ஹார்டிஞ்சு சாகும்பொழுது அவரின் குமாரத்தி லார்ட் ஹார்டிஞ்சிடம் இந்தியாவில் இருந்தார். பிள்ளைகள் இரண்டுபேரும் லண்டனில் தாயின் பக்கத்திலிருந்தார்கள். ஸர்வேசன் இவ்வுத்தம ஸ்திரீக்கு நல்ல பதத்தைக் கொடுப்பாரென்று ப்ரார்த்திக்கிறோம்.

லார்ட் ஹார்டிஞ்சு இந்திய ஜனங்களுக்கு விடுத்திருக்கும தந்தியின் ஸாராம்சம் பின்வருமாறு:—

சிம்லா, ஜூலை 16உ

"ஸர்வல்லமையுள்ள ஈச்வரன் என் மீதும் என் குடும்பத்தின் மீதும் சுமத்தியிருக்கும் துக்கத்தினிடையே, இந்தியர்கள் லேடி ஹார்டிஞ்சிடம் வைத்திருக்கும் ஆழ்ந்த அன்பினாலும், உண்மையான ப்ரியத்தாலும் எல்லாப் பாகங்களிலிருந்து கணக்கற்ற தந்திகள் மூலமாய் வந்துகொண்டிருப்பதற்காக நான் அவர்களுக்கு உருக்கமிகுந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். லேடி ஹார்டிஞ்சின் மரணத்தால் உண்மையிலேயே விசேஷ பக்தியுள்ள மனிஷியையும், மேன்மையுள்ள உயிர்த் தோழியையும் இழந்தேன். இந்திய ஜனங்கள் தங்களுடைய ப்ரிய நண்பரை இழந்துவிட்டார்கள். லேடி ஹார்டிஞ்சு இந்தியாவையும் அதன் ஜனங்களையும்—ஸ்த்ரீகள், குழந்தைகள், பிணியாளிகள், ஏழைகள்—நேசித்தார். இவர்களை எவ்வளவு தூரம் நேசித்தாரென்பது ஒருவராலும் அளவுபடுத்தியறியமுடியாது. லேடி ஹார்டிஞ்சு என்று மறியாத வீடுமேயில்லை; சேர்ந்தாலும் இந்தியாவிடம் அவருக்கிருந்த அன்பினால் மேலே இருந்து ஸகல நன்மைகளும் இந்தியர்களுக்குண்டாகுமென்பது எனக்குத் தெரியும்—ஹார்டிஞ்சு.

Progress of Education in the Madras Presidency. 1912—1913.

சென்னை ராஜதானியில் கல்வி யபிவருத்தி :—1912—1913-ஆம் கல்வி இலாகா ரிபோர்ட்வெளியிடப்பட்டிருக்கிறது. 1911-ஆம் சக்ரவர்த்தி பட்டாபிஷேகம் நடந்தபோது, இந்தியாவில் கல்வி அபி

வ்ருத்திக்காக வருஷம் 50 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படுமென்று சக்ரவர்த்தி அறிவித்தார். அதன் ப்ரகாரம் கொடுக்கப்பட்ட தொகையில் 8½-லக்ஷம் சென்னை ராஜதானிக்குக் கிடைத்தது. இந்தியா கவர்ன்மெண்டாரும் சில க்ராண்டுகள் கொடுத்தார்கள். முன்னின வருஷத்தைவிட ப்ரஸ்தாப வருஷத்தில் 800 பள்ளிக்கூடங்களும், 820,000 மாணவர்களும் அதிகரித்திருக்கிறார்கள். 1912-13-ஆம் வருஷத்தில் கல்விக்காக பல வழிகளில் செலவழிக்கப்பட்ட தொகை 157-லக்ஷத்து 62 ஆயிரம் ரூபாய். 1911-1912-ஆம் வருஷத்தில் 135 லக்ஷத்து 65 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று. மகாண கவர்ன்மெண்டு 65-68 லக்ஷ ரூபாயும் லோகல் போர்டு முனிஸிபாலிடிகள் 13-45 லக்ஷ ரூபாயும் செலவழித்தன. மீதித்தொகை மாணவர்களின் சம்பளத்தைக்கொண்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டுகொடுத்த உதவியால் 114 முனிஸிபல் ஸ்கூல்களும் 1665 போர்டு எலிமெண்டரி ஸ்கூல்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. ட்ரெயினிங் ஆயிருக்கிற உபாத்யாயர்களுக்கு 8 ரூ. சம்பளமிருந்ததை 10 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ப்ரைவேட் ஸ்கூல்களிலுள்ள உபாத்யாயர்களுக்கும் சம்பளம் உயர்த்தும்படி அந்தந்த ஸ்கூல்களுக்கு உதவிகொடுத்திருக்கிறார்கள். எலிமெண்டரி ஸ்கூல்களை சீர்திருத்தம் செய்வதற்காக லோகல் போர்டுகளுக்கு 7-லக்ஷ ரூபாய் க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள்.

எலிண்டரி ஸ்கூல்களில் 100-க்கு 7 பாகம் அதிகமாயிருக்கிறது. மொத்தம் 339 ஸெகண்டரி ஸ்கூல்கள். இவைகளில் மாணவர்களின் தொகை 106,396. பாலிகாபாடசாலைகளின் தொகை 100-க்கு ஏழு பாகமும் அவைகளில் வாசித்த பெண்களின் தொகை 100-க்கு 10 பாகமும் அதிகரித்திருக்கின்றன. சென்னையைச்சேர்ந்த திருவல்லிக்கேணியில் ஒரு ஸெகண்டரி ஸ்கூலும் அதோடு ஒரு ட்ரெயினிங் ஸ்கூலும், ப்ராமணரிதவா ஹாஸ்டலும் ஏற்படுத்தப்பட்டன. விசாகப்பட்டணத்தில் ஒரு ஸெகண்டரி ஸ்கூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்திய க்ரிஸ்தவ ஸ்த்ரீகளுக்கு ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்துவதாக கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள். மேலும் ப்ராமணர்களல்லாத ஹிந்து விதவைகளுக்கு ப்ரத்தியேகமாக ஒரு விதவாஹாஸ்டல் ஏற்படுத்துவதாக கவர்ன்மெண்டார் யோசனைசெய்து வருகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இவ்வருஷம் ஏற்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

Teaching Infant Management.

குழந்தை ஸம்ரக்ஷணபோதனை :—இங்கலாந்தில் 14 வருஷத்துக்குமுன் குழந்தை மரணம் 1000- க்கு 155 ஆக இருந்தது. இப்போது 95 ஆகயிருக்கிறது. இவ்வளவு குறைந்ததற்குக் காரணம் ஸ்த்ரீகளின் ஐக்கிய முயற்சிகளினால்தான் என்று சொல்லப்படுகிறது.

1906-ஆத்தில் மேர்லிபோன் என்ற இடத்தில் முதல் முதலாக குழந்தை ஸம்ரக்ஷணை ஸங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தார் கைதேர்ந்த வைத்ய ஸ்த்ரீகளை நியமித்து அவர்களைக்கொண்டு பத்ரிகை மூலமாகவும், ப்ரஸங்க மூலமாகவும் தெருதெருவாக ஏழைத்தாய்மார்களுக்கு ஸுகாதாரத்தைப்பற்றியும் குழந்தைப் பாதுகாப்பைப்பற்றியும், இல்லாண்மையைப்பற்றியும் போதித்து வந்தனர். மேலும் பிணியால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக வைத்யம் செய்து வந்தார்கள். இவர்கள் செய்யும் வேலையைக்கண்டு ஸர்க்கார் அந்த ஸங்கத்தை ஆதரிக்கத்தலைப்பட்டார்கள். இதைப்பார்த்து இங்கலாந்திலுள்ள ப்ரதானப்பட்டணங்களில் ஸுகாதார ஸங்கங்கள் அநேக நாமதேயங்களைக்கொண்டு பரோபகாரர்களால் ஸ்தாபிக்கப்பட்டன.

1909-ஆ இங்கலாந்திலுள்ள ஸுகாதார ஸங்க கார்ய நிர்வாகஸ்தர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டம் கூடி எல்லா ஸங்கங்களுக்குத்தலைமையாக ஒரு ஸென்ட்ரல் அஸோஸியேஷன் என்றதை ஸ்தாபித்தார்கள். இப்போது அதற்கு 217 கிளைச்சங்கங்கள் இருக்கின்றன. இவைகளின் முக்ய வேலை புதிது புதிதாக ஸங்கங்கள் ஸ்தாபிப்பதும் ஜனன மரண கணக்கெடுப்பதும், வீடு வீடாகச்சென்று ஸுகாதாரத்தைப்பற்றிப்போதிப்பதுமாக இருக்கிறது. ஏழைத்தாய்மார்களும் தங்கள் குழந்தைகளை மிகத்திறமையாகவும், ஜாக்ரதையாகவும் போஷித்து வருகிறதற்கு இடம் தருகிறது.

இந்தியாவிலோ 1911-ஆ ஜனன மரணக்கணக்கின்படி 4,457,551-பெண் குழந்தைகளும் 4,752,152, ஆண் குழந்தைகளும் பிறக்க, 873,677 பெண் குழந்தைகளும் 1,016,823 ஆண் குழந்தைகளும் இறந்துபோயிருக்கிறார்கள். அதாவது ஐந்தில் ஒரு பங்கு மர

ணமடைந்திருக்கிறார்கள். இவ்வளவு மரணம் ஒரு நாட்டின் அபிவ்ருத்திக்கு பெருத்ததடை. ஸர்க்கார் இது விஷயத்தில் ஜனங்களின் ஐக்யத்தைகைக்கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும். ஸர்ஜென்ஜெனரல் ஸர்பார்டிலூகிஸ், இந்திய ஸ்த்ரீகள் ஸுகாதார விஷயமாக போதிக்கப்படவேண்டுமென்று தமது அபிப்பிராயத்தை இந்தியா கவர்ன்மெண்டார் ஸுகாதார விஷயமாக ப்ரசுரம் செய்திருக்கும் பெரிய தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறார். ஸுகாதாரவிஷயத்தில் ஸ்த்ரீகள் போதிக்கப்படவேண்டியதற்கு ஆங்காங்கு பரோபகாரமுள்ள ஜனத்தலைவர்கள் முன் வந்து உழைப்பது அவச்யம். தற்காலம் சென்னையில் ஸுமார் 12 ஸ்த்ரீ ஸங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸங்கமும் இவ்விஷயத்தில் ஜாஸ்தி ஊக்கம் செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

Cure for Idleness.

சோம்பலுக்குச் சிகித்ஸை :—இவ்விஷயம் உபாத்யாயர்களும் மூக்யமாக கவனிக்கவேண்டிய விஷயமாகையால் 'விச்வகர்மன்' பத்ரிகையில் வெளிவந்ததை எடுத்து இங்கு ப்ரசுரித்திருக்கிறோம்.

பாரிஸ் நகரிலிருக்கும் ப்ரபல டாக்டரான மிஸ்டர் மார்கல் நேடியர் என்பவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

"பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலும் சில மாணவர்கள் படிப்பில் அக்கரையில்லாது சோம்பலுடன் சும்மா உட்கார்ந்திருக்கப் பிரியப்படுகிறார்கள். உபாத்தியாயர் ஒரு பையனை மிகவும் சோம்பேறியென்று அனுபவத்தில் நிச்சயித்து விடுவாரேயானால், உடனே திறமையுள்ள வைத்தியரைக்கொண்டு அப்பையன் உடம்பை நன்றாய்ப் பரீட்சை செய்யச் சொல்லவேண்டும். அவ்வாறான பையன்களை டாக்டர்கள் பரிட்சித்துப் பார்ப்பார்களாயின், பையனுடைய மந்தத்திற்குக் காரணம் அவன் உடலின் கூறுபாடே என்பது தெளிவாகும். தாராளமாய்ச் சுவாசிக்க முடியாததாலும், சரிவர உடலில் இரத்த ஓட்டமில்லாததாலும், மூளையில் சில கோளாறுகள் உண்டாகி, அதனால் ஒருவித மயக்கமுண்டாவதாலும், சில பையன்கள் சோம்பேறிகளாய் விடுகிறார்கள். 9 வயதாகியும் ஓரெழுத்துகூட அறியாதிருந்த சில பையன்களைப் பரீட்சித்துப் பார்த்ததில், மேலே கண்ட கோளாறுகள் அவர்கள் உடலிற் காணப்பட்டன. ஆகையால், சோம்பேறிப் பையன்களைப் பிரம்பு கொண்டடித்து மந்தத்தனத்தைப் போக்க முயலாமல், சரியான வைத்திய சிகிச்சை செய்வதே நலம்."

Turkish Women.

துருக்கி ஸ்த்ரீகள் :—துருக்கி ஸ்த்ரீகள் இப்போது சில காலமாக தங்களுடைய ஸ்வதந்தரங்களை அறிந்து படிக்கவும், ப்ரசங்கம் செய்யவும், உத்யோகங்களில் அமரவும் தலைப்பட்டுவருகிறார்கள். "ஸ்த்ரீ ஸ்வதந்தரங்களை பாதுகாத்துக்கொள்ளும் ஸங்கம்" என்ற ஒரு ஸங்கத்தை ஸ்தாபித்து அதன் கீழ் 'கடின்லார் டன்யாவி' அல்லது 'ஸ்த்ரீ ப்ரபஞ்சம்' என்ற வாரப்பத்ரிகையையும் நடத்திவருகிறார்கள்.

அந்தப் பத்ரிகையின் நோக்கங்கள் பின் வருமாறு:—

(1) கோஷா முறையை விலக்குவது; (2) கால தேசவர்த்தமானத்தை யறிந்து விவாகவிதிகளை உயர்த்திக்கொள்ளுவது; (3) ஸ்த்ரீகளை தகுந்த இல்லாளாகச்செய்வது; (4) பெண்களை, உபாத்தினி மார்களாகவும், தாதிமார்களாகவும் இன்னும் மற்ற உபயோக முள்ளவும் ஸ்த்ரீகளுக்கு உரித்தானவுமான தொழில்களில் பழகும் படிச் செய்வது; (5) பெண்களுக்கு வேண்டிய பாடசாலைகள் ஸ்தாபித்து, இருக்கிற பாடசாலைகளை வ்ருத்தி செய்வது; (6) பள்ளிக் கூடங்களில் தங்கள் தேசத்துக்கு தேவையான தொழில்களைக் கற்றுக்கொடுப்பது.

ஒரு தேசம் சில நூற்றாண்டுகள் தாழ்ந்த தசையிலும், சில நூற்றாண்டுகள் உயர்ந்த தசையிலும் இருப்பது ஸ்வபாவபரிணமத்தின் பலனாகும். அது தாழ்ந்ததசையிலிருந்து உயர்ந்த ஸ்திதிக்கு வருங்காலத்தில் ஸ்த்ரீகளின் முன்னேற்றத்தினால் தான் உண்டாக வேண்டும். இது சரித்ரப்ரமாணமாகும். ஒரு தேசத்தின் ராஜரீகம் கல்வி அபிவ்ருத்தி, தேசாபிமானம், ராஜபக்தி, தெய்வபக்தி முதலிய வைகளெல்லாம் அத்தேசத்து ஸ்த்ரீகளைக்கண்டுதான் தெரியவேண்டும். இப்போது துருக்கி ஸ்த்ரீகள் தங்கள் நிலைமையை கவனித்து, மற்ற தேசத்தார்களால் அறிந்து புகழும்படி செய்துகொண்டது, அவர்களின் தீவ்ர உணர்ச்சியையும் முன்னேற்றத்தில் ச்ரத்தையையும் குறிக்கிறது.

Students & Smoking.

மாணவர்களும் சுருட்டுப்பிடித்தலும் :—மாணவர்கள் ஸ்கூல்களிலும் அதை யொட்டியிருக்கிற மைதானத்திலும் சுருட்டுப்பிடிக்கக்கூடாதென்று மித்தை இலாகா டிரக்டர் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இது நல்லகாலத்தின் அறிகுறி. ஸ்கூல் அதிகாரிகள் இது விஷயத்தில் கொஞ்சம் தாக்ரதையாயிருக்கவேண்டும்.

FASTS & FEASTS.

By

Sri. M. Lakshmi Ammal,

(President, The Hindu Ladies Lakshmi Vilasa Saba, & The First lady Bagavathar

வ்ருதங்களும் பண்டிகைகளும்.

தற்காலம் நமது தேசத்தில் ஹிந்து ஜனங்களால் அனுஷ்டிக்கப்படும் வ்ருதங்களும் பண்டிகைகளும் கணக்கற்று இருக்கின்றது. இவைகள் எல்லாம் ஆதிகாலத்திலிருந்து உண்டானதல்ல. நாகரீகமுற்போக்கை அனுசரித்து காலக்ரமேண இவைகள் வ்ருத்தியடைந்திருக்கின்றன என்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது. இவைகள் ச்ரௌதம், ஸ்மார்த்தம், பௌராணிகம், லௌகீகம் ஆக நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குள் அநேகங்கள் பகலென்ன இரவென்ன ஆகிய இவைகளுக்கு அதிபதியாயிருக்கிற சூரிய சந்திரர்களுடைய சலனத்தை முன்னிட்டு, கணித சாஸ்த்ரத்தில் நிர்ணயித்தபடி யுகம், ஸம்வத்ஸரம், அயனம், ருது, மாஸம், பக்ஷம், வாரம், திதி, நக்ஷத்ரம் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு நடைபெறுகின்றன. சிலவைகள் நாம ரூபக்ரியாஸஹிதர்களாகிய தேவதைகளையும் அவர்களுடைய அவதாரங்களையும், கர்மார்த்தகாமமோக்ஷத்தைக் குறித்து, அனுஷ்டிக்கப் படுகின்றன. இன்னும் சிலவைகள் தேசோபகார மஹா புருஷர்களென்ன லோகோபகார பஞ்சபூதங்களென்ன, பசு, பக்ஷி ம்ருகாதிகளை பூஜிக்கும் தன்மையாயிருக்கின்றன. மற்றும் சிலவைகள் லோககண்டகர்களாயிருக்கப்பட்ட ராக்ஷஸர்களுக்கும், லோகத்தைப்பீடிக்கும் பிசாசு முதலிய க்ஷுத்ர தேவதைகளுக்கும், கோசாரீதிப்படி சுபாசுப பலன்களைக்கொடுக்கும் க்ரஹங்களுக்கும் சாந்தியாக இருக்கின்றன. இவைகளுக்குள் சிலவை குலத்துக்கு ஒத்ததுகள். சிலவை மதத்துக்கு அதிஷ்டானவைகள். சிலவை ஆச்ரமங்களுக்கு ஏற்பட்டதுகள். சிலவை வம்சபாரம்பரைக்கு சேர்ந்ததுகள். சிலகாலு வர்ணத்துக்கும் சேர்ந்ததுகள். இப்படி அநேகமாக இருக்கின்றனவென்று தெரியவருகிறது. இவைகளுக்குள் பண்டிகைகள் எவைகளோ, வ்ருதங்கள் எவைகளோ தெரிந்துகொள்ள முடியாத படி பஞ்சாங்கங்களில் வருஷாதி பண்டிகைகளாக கணிகர்கள் தெரி

யப் படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் வ்ருதங்கள் எவைகள், பண்டிகைகள் எவைகள் என்று அறிந்துகொள்ள வேண்டியது அவச்யம்.

வ்ருதங்கள்.

ஜனங்கள் ஸஹஜமாக வ்ருதங்களை பண்டிகைகளாகவும் பண்டிகைகளை வ்ருதங்களாகவும் பேதமில்லாமல் உபயோகிக்கிறார்கள். ஆனால் இவைகளின் உற்பத்தி அர்த்தத்தை யோசிக்கும் பொழுது இவைகள் அனுஷ்டிக்கப்படும் தன்மையையும் ஒப்பிட்டு பார்த்தால் ஒன்றுக்கொன்று விரோதபதங்களா யிருக்கின்றன. வ்ருதம் என்கிற ஸம்ஸக்ருத பதத்துக்கு நோம்பு என்று பெயர். வ்ருதமென்றால் தள்ளவேண்டியவை என்றர்த்தம், வ்ருதத்திற்கு ஸங்கல்பம் முதல் பாரணாந்தம் வரையிலிருக்கும் மத்ய காலத்தில் வ்ருததர்மங்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். வ்ருதங்களுக்கு கால பரிமாணமும் உத்யாபனமும் உண்டு. வ்ருதம் ஆரம்பித்து முடிவை அடையாவிட்டால் அபசாரம் ஸம்பவிக்கும். வ்ருதங்களுக்கு ப்ராயச்சித்தங்களுண்டு. இவைகளைப்பற்றி க்ரன்தங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முழுமையும் தெரியப்படுத்துவது அஸாத்யம். ஆகையினால் வ்ருதங்களில் தன் இஷ்டப்படியிருத்தல் கூடாது. நித்ய கர்மானுஷ்டானங்கள் வ்ருதநியமங்களுக்கு உட்பட்டவை அதாவது வ்ருதங்களென்றே சொல்லப்படுகின்றன. கீழ்ச்லோகங்களினால் தெரியவரும்.

1. ஸ்னானம் தானம் ஜபோஹோம: பூஜா
   ஸஜ்ஜன ஸங்கதி:।
   ப்ரஹ்மவி த்யா ப்ரபோத ஸ்சா முக்தி
   ஸோபான ஸப்தகம்॥

2. உக்தவ்ரதேஷு ஸர்வேஷு ஸர்வ
   ஸித்தாந்த ஸம்மதம்।
   வேத சாஸ்த்ர ப்ரமாணேஷு கீர்
   த்திதம் வ்ருதஸப்தகம்॥

பண்டிகைகள்.

பண்டிகை என்னும் பதம் ஸமஸ்க்ருதத்தில் கிடையாது. ஆயினும் பர்வ என்றால் உத்ஸவமென்றர்த்தம். பண்டிகையென்பது பர்வ என்ற பதத்தினின்று வந்திருக்கலாம் என்று ஊஹிக்கவேண்

டியிருக்கிறது. பண்டிகை என்றால் உத்ஸவம் என்றுபெயர். உத்ஸவமென்றால் பிறப்பது. அல்லது உத்ஹாகம் செய்வது. இது வ்ருதத்தைப் போலல்ல. பண்டிகையில் தன்னிஷ்டம்போல் ஸக்திக்குத் தகுந்தபடி அனுஷ்டிக்கலாம். வ்ருதத்தில் இந்திரிய நிக்ரஹமும் பண்டிகையில் ஸ்வேச்சையு மிருப்பதால் இவைகள் ஒன்றுக்கொன்று விரோத அர்த்தத்தைக்கொடுப்பன. ஆகையினால் வ்ருதங்கள் பண்டிகைகளல்ல, பண்டிகைகள் வ்ருதங்களல்ல.

வ்ருதாதிகாரம்,

பதிகாமம்ச பர்த்தாரம் ஸௌபாக்யம் சஸுவாஸனீம்।
விதவா பூஜயித்வாது வைதவ்யம் நாபுனுயாத் க்வசித்॥

பதியைக்கோரி கன்னிகைகளும் மாங்கல்யத்தைக்கோரி ஸுமங்கிலிகளும் இனி வைதவ்யம் கூடாதென்று விதவைகளும் வ்ருதத்தை அனுஷ்டிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீகள் சுதந்தரமாய் வ்ருதங்களை அனுஷ்டிக்கக்கூடாதென்றிருக்கிறது கன்னிகைகள் ஏதாவது வ்ருதத்தைச் செய்யவேண்டு மென்று இச்சைகொண்டால் கன்னிகைகள் தகப்பனாருடையவும், ஸுமங்கிலிபதியினுடையவும், விதவை புத்ரனுடையவும் [illegible]ஞையைப்பெற்றுச் செய்யவேண்டுமென்றும் கடைசியில் பதி[illegible]க ஆயுராரோக்கியத்துடனிருக்கச்செய்யும் வ்ருதம் கூட [illegible] உத்தரவு வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

பூர்வம் ஸ்த்ரீகள் ஸ்வதந்தரமாக வ்ருதங்களை அனுஷ்டித்ததினால் நிஷ்பலர்களாகி விட்டார்களென்று தெரியவருகிறது. குந்திதேவி கன்னிகையாயிருந்தபோது தன் பிதாவினுடைய க்ரஹத்தில் சூரியனை ஆராதித்து, கர்ணனைப்பெற்று பெட்டியில் வைத்து நதியில் எறிந்துவிட்டகதை ஸ்ரீமஹாபாரதத்தில்ஸ்பஷ்டமாய்த்தெரியவரும்

கவுண்டன் யரிஷியின் பார்யையாகிய சீலாதேவி பதியாக்ஞை பெறாமலே அனந்த வ்ருதத்தைச்செய்து ஸகல ஐச்வர்யத்தைப்பெற்றாளென்றும் அதை யறிந்த கவுண்டன்யர் நோம்புக்கயிற்றை அக்னியில் எறிந்தாரென்றும் தெரிய வருகிறது. கடைசியாக ஸ்த்ரீகள் எந்த வ்ருதத்தையும் புருஷர்கள் அனுமதியில்லாமல் செய்யக்கூடாது.

முன் சொல்லப்பட்ட ச்ரௌத ஸ்மார்த்தகர்ம ரூபகமாய் மந்த்ரங்களோடு கூடின வேதவ்ருதங்களுடையவும். வைதிக வ்ருதங்

களுடையவும் புராணத்தில் சொல்லப்பட்ட கல்பங்களுடன் கூடின பௌராணிக வ்ருதங்களுடையவும் அதிகாரம் ஸ்த்ரீகளுக்கு நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஸ்த்ரீகளினால் அனுஷ்டிக்கப்படும் வ்ருதங்கள் அநேக மிருக்கின்றன. பெண்ணாகப்பிறந்தவர்கள் வயது காரணமில்லாமல் விவாகமானவுடனே சிறு பெண்கள் கூட வ்ருதாதிகாரிகைகளாகின்றார்கள். பொதுவாக ஸௌபாக்யத்தைக் குறித்து கௌரியையும், ஸம்பத்தைக்குறித்து லக்ஷிமியையும், வித்தையைக்குறித்து ஸரஸ்வதியையும், பாபஹரனார்த்தம் துளசியையும் பூஜிக்கு தன்மையாயிருக்கின்றன.

பண்டிகைகளுக்கு நியமம் ஒன்றும் கிடையாது சக்திக்குத்தகுந்தபடி போகங்களை அனுபவிப்பதே இதன் நோக்கம். மொத்தமாகச் ரௌதஸ்மார்த்தாதி கர்ம ரூபகமாகிய வ்ருதங்கள் தவிர மீதி ஸமஸ்தமான உத்ஸவங்களும் க்ருஹராணிகளாகிய ஸ்த்ரீகளினாலேயே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. புருஷர்கள் இதற்கு சாக்ஷிகளாக மாத்ரமே நிற்கிறார்கள்.

தற்கால புருஷர்களில் அநேகர் நமது தேசபாஷையைவிட்டு, ஆங்கலேய [illegible]னுடைய வாஸனாபலத்தினாலேயோ, ப்ரகிருதி சாஸ்[illegible]ண்டித்யத்தினாலேயோ, இதரதேசத்தார்களுடைய ப்[illegible]மாஜம் போன்ற ஸமாஜங்களில் சேர்ந்தவர்களின் ஸக[illegible]த்தினாலேயோ, வித்யாதிகாரிகள் எல்லோரும் ஸேவகா வ்ருத்[illegible] இருப்பதனாலேயோ, மேனாட்டு நாகரீக ஆசாரப் போக்கில் புத்திமேலிட்டோ அல்லது மீதிதேசங்களைப்போல நம்முடைய தேசமும் நல்லதசைக்குவர வேண்டுமென்று ஸத்புததியினாலேயோ அல்லது எந்தக்காரணத்தினாலேயோ, இந்து மதாசாரத்திற்கு விரோதர்களாய் விக்ரஹ ஆராதனையை விட்டு இருப்பதனால் பூர்வாசாரங்களெல்லாம் இந்து தேச நாரீமணிகளினால் தாங்கப்பட்டிருக்கிறது. மேலும் நம்பெண்களை மேனாட்டுதுரைசானிகளாகமாற்றி விடவேண்டுமென்று வெகுபாடுபடுகிறார்கள். தெய்வம் எப்படி செய்யுமோ நாமறியோம்.

வ்ருத உத்தேசம்.

ஸ்த்ரீகளுக்கு விவாஹமென்றது மந்தரோப தேசம். பதியே மந்தராதிஷ்டான தெய்வம். அவர் தான் ஜெகமெங்கும் நிறைந்திருக்கும் பகவான். இவ்விஷயம் மனதில் திடமாகயிருக்கும் பொரு

ட்டு நோம்புகள் செய்யப்பட்டு வருகின்றன ஆதனால் தெய்வபக்தியும் அது வழியாக பதிபக்தியும் த்ருடப்படுவதேயல்லாமல் ஞானோற்புத்தியும் மோக்ஷஸாம்ப்ராஜ்யமும் அடையலாமென்பது முக்கிய அபிப்ராயம். இன்னும் அநேக உத்தேசங்களுமுண்டு.

வ்ருதங்கள் செய்யவேண்டிய இடம்.

பண்டிகைகளுக்குப் ப்ரதேச நிர்ணயம் கிடையாது. வ்ருதங்கள் சில இடங்களுக்குமாத்ர முண்டு. சில வ்ருதங்கள் வீட்டுக்கு முன்பாகத்திலேயும் சிலஅக்னிஹோத்தர சாலையிலேயும் பசுமாடுகள் தங்கும் இடத்திலேயும் சிலவை பிருந்தாவனத்துச் சமீபத்திலேயும் சிலவை தேவாலயங்களிலேயும் சில தோட்டங்களிலேயும் ஜலஸமீபத்திலேயும் செய்யவேண்டுமென்று காரணங்களுண்டு. சரீரத்தை ரோகமில்லாமல் செய்து கொள்ளவேண்டிய தன் பொருட்டும், தர்மத்தை ஆசரிக்கும் பொருட்டும் வ்ருதங்கள் செய்யப்படுகின்றன.

எம். லக்ஷ்மி அம்மாள்.

INFANT MORTALITY & INDIA'S DETERIORATION.

By

Mr. Rudrakotiswarar.

குழந்தை மரணமும் இந்தியாவின் கேடும். *

ஸகோதரர்களே !

இங்கு இவ்விரவு யான் ப்ரசங்கிக்க எடுத்துக்கொண்ட குழந்தை மரணமும் இந்தியாவின் கேடும் என்னும் விஷயம் எல்லா ஆடவரும் மகளிரும் மிகவும் அறிதற்பால தொன்றென்பது யான் உங்களுக்கு எடுத்து கூறல் வேண்டாம்.

பலவகைப்பட்ட மக்கள் நோய்களும், மரணமுமின்றி வாழ்ந்தாலொழிய, எந்த நாடும் க்ஷேமமாயிராது ; பிணியும் மரணமுமின்மையே நாட்டிற்கழகாகும் ; இந்திய நாட்டில் இப்போது ஸாதாரணமாக மக்களுள் பல புதிய புதிய நோய்களும், அகால மரணமும்

* இது சென்னைப் பௌத்தாசிரமத்தின்கண், மகாபோதி சங்கத்தில் ஜூலை 12௳ இரவு ஸ்ரீமான் M. சிங்காரவேலு B.A., B.L., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீ உருத்திரகோடீசுவரரால் உபந்நியாசிக்கப்பட்டது.

அதிகரித்து வருகின்றன. முக்கியமாகக் குழந்தைகளுள் மரணத் தொகை மிகுந்து வருகின்றது. ஓரு நாடானது இனிது கடைப்பதற்குப் பிரதான காரணம் குழந்தைகளாதலின், சென்னையில் குழந்தைகளுக்கு மரணஞ் சம்பவித்தற்குக் காரணங்கள் என்னை என்பதைக் குறித்தும், அக்காரணங்களை எவ்வாறு போக்குவது என்பதைக் குறித்தும் இப்போது அரசாங்கத்தாரும், குடிகளுள் அறிவுடையோர் சிலரும் நன்கு விசாரிக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் நம் விசாரணையினால் போதரும் உண்மைகளை யறிந்து குழந்தைகளின் மரணத்தை விலக்குவதற்குப் பெருமுயற்சிகள் ஊக்கத்துடன் செய்கின்றனர்

அருமருந்தன்ன அவ்விஷயங்களையே இவ்வுபந்நியாசத்தில் மிகச் சுருக்கமாக உங்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

சென்னையில் ஓரு வயதுடைய குழந்தைகள் பல மரணம் அடைவதற்கு முக்கியமான காரணங்கள் சிலவுள, அவற்றுள் முதலாவது காரணம் எளிய வகுப்பைச் சார்ந்த ஸ்த்ரீகள் பிரசவகாலத்தில் உதவிக்காக வரவழைக்கும் மருத்துவச்சிகளுடைய அறியாமையாகும். இவ்விஷயத்தைக் குறித்துச் சென்னை க்கார்பொரேஷனைச் சார்ந்த காப்டன் A. J. H. ரசல், I M. S, என்பார், ஆழச் சிந்தித்துச் சேர்ச்சியடைந்த மருத்துவச்சிகளை எழைவகுப்பு ஸ்த்ரீகளுக்காக ஏற்படுத்த முயல்கின்றனர்.

யூரோப் அமெரிக்கா கண்டங்களில் பல இடங்களில் சிசுமரணங்களைத் தடுப்பதற்குத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பம்பாயிலும் இத்தகைய குழந்தை மரணங்களை யறிந்து மருத்துவச்சிகளை முறையாகப் பயிற்சி செய்விப்பதில் பெருமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனபடியினால், சென்னையில் இம்முயற்சி நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. சென்னையில் பிரசவகாலத்தில் உதவிபுரிந்து வைத்தியஞ் செய்தற்குத் தேர்ச்சியடைந்த மருத்துவ மாதரும், கோயாளரைப் பரிபாலிக்கும் பெண்டிரும் இருப்பினும், அவர்கள் செல்வமுடைய வகுப்பைச்சார்ந்த ஸ்த்ரீகளுக்கே பயன் படுகின்றனர். மற்றைய எளிய ஸ்த்ரீகள் பழைய அபாயகரமான முறைகளைக் கைக்கொண்டுள்ள அம்பட்டச்சிகள் உதவியைப் பெற்றுக்கொண்டு பிரசவிக்கின்றனர். தகுதியற்ற அவ்வம்பட்டச்சிகள் குழந்தை பெறுங்காலத்தில் அளவற்ற

தீமைகளை விளைவிக்கும் முறைகளைக் கையாளுகின்றனர். பிரசவ வைத்தியசாலைகளிலிருந்தும், அவைகளில் சிற்சில சமயங்களில் ஏழைகளுக்கு இடங்கிடைப்பதில்லை.

இவைகளை நன்குணர்ந்த சென்னை எல்த் ஆபீஸர், மருத்துவத் தொழிற்கு இசையும் சில ஸ்த்ரீகளை இங்குள்ள கவர்ன்மெண்ட் மெட்டர்னிட்டி வைத்தியசாலையில் அத்தொழிலில் பயில்வித்து, அவர்களை முனிசிபல் வைத்திய சாலைகளில் வைத்து, சென்னை நகரில் ஏழை வகுப்பாருள் பிரசவிக்குங் காலத்தைச் சமீபித்துள்ள ஸ்த்ரீகளுக்கு யாதொரு கட்டணமுமின்றி அறிவு கொளுத்தவும் பிரசவத்துள்பத்தை யடைந்துள்ள ஸ்த்ரீகளுடனிருந்து சிகித்சை பண்ணவும் செய்வித்தல் வேண்டுமென்றும், மருத்துவக் கலையில் தேர்ச்சிபெற்ற பெண்கள் அவ்வாறு தேர்ச்சிபெறுதற்கு அம்பட்டச்சிகளுக்குப் பிரசவ வைத்தியத்திற் குரிய புதிய நன்முறைகளைக் கற்றுக்கொடுத்து அவர்கள் தொழிலையும் விருத்தியடையச்செய்ய வேண்டுமென்றும், இம்மருத்துவக்கலையில் கைவரப்பெற்ற ஐரோப்பிய மாதர்களும் இந்திய மருத்துவ மாதர் தொழிலை மேல்பார்த்து அவர்களுக்கும், மற்றைய மாதர்களுக்கும் பிள்ளைப் பேற்றைக் குறித்தும், மருத்துவத்தைக் குறித்தும், பிள்ளைகளை வளர்க்கும் முறைகளைக் குறித்தும் உபந்நியாசங்கள் புரியவேண்டுமென்றும் நினைக்கின்றனர்.

இவ்விஷயங்களில் அவர் பம்பாய் முனிசிபல் சங்கத்தார் சூழ்ச்சித்துள்ளமாதிரிகளைப் பின்பற்ற கருதுகின்றனர்.

இத்தகைய விஷயங்களில் பம்பாயில் முனிசிபல் சங்கத்தாரும், மனிதர் சுகத்தைப் பாதுகாக்குஞ் சங்கத்தாரும் ஒற்றுமைப்பட்டு பலகாரியங்கள் செய்வதுபோல, இங்கும் பரோபகாரக் கருத்துக்களை மேற்கொண்டுள்ள சோஷல் சேர்விஸ் சபையார் பிக்க ஊக்கங் கொண்டு முனிசிபல் சபையாரோடு ஒருங்கு சேர்ந்து உழைக்க முன் வந்திருக்கின்றனர் இதுபற்றி அச்சபையாரிடத்து நன்றி பாராட்டுவது சென்னை நகரவாசிகள் எல்லார்க்கும் கடமையாகும்.

சென்னை எல்த் ஆபீஸர் சிசுமரணங்களைத் தடுக்க தம்முடைய ஆழ்ந்த சில ப்ரேரணைகளை முனிசிபல் சபைக்கு அறிவித்திருக்கின்றனர். அச்சபையாரும் அவற்றை ஆமோதித்துள்ளாரென்று அறிகின்றது. இவ் விஷயங்களில் எல்த் ஆபீஸருடைய சூழ்ச்சியப்படியின்றது.

கள் சென்னை நகரத்தார் ஒவ்வொருவராலும் மெச்சப்படத்தக்கன வாய் இருக்கின்றன.

இனி, சிசு மரணங்களுக்கு இரண்டாவது காரணம் என்ன வென்றால், அசுத்தமான பால் உணவாகும் பால் தரும் பசுக்கள் உள்ள சாலைகளின் நிலைமை எல்லா விதங்களிலும் திருப்திகரமாக யில்லை; பெரும்பான்மையும் பசுக் கொட்டில்கள் நெருங்கிய உயர்ந்த வீடுகளின் இடையிலிருப்பதனால், அங்குப் பசுக்களுக்குச் சுத்தமான காற்று கிடையாது; மற்று அக்கொட்டில்களின் அமைப்பையும், அங்குள்ள அசுத்தங்களையும், பசுக்களின் தேக நிலைமையையும், அவைகளுக்குக் கொடுக்கப்படும் அழுக்குள்ள உணவுகளையும், கல்வியறிவில்லாத பாற்காரர்களின் அசுத்தப் பாத்திரங்களையும, அவர்கள் பால் கறக்கும் முறைகளையும், அவர்கள் அப்பாலில் அசுத்த நன்னீர் கலந்து அதைக் கெடிக்கும் வகையினையும் கவனிக்குமிடத்து, அவை நமக்கு மிக்க மனத்துன்பத்தை விளைக்கின்றன. அவைகளால் பசுக்களும், அவற்றின் பாலும் அசுசியடைந்து கெடுகின்றன. அவ்வசுத்தபாலைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதனால், அவைகளின் குடல்களில் வியாதியுண்டாகப் பெற்று இறக்கின்றன. சிசுமரணத்தின் மிகுதிப் பாடானது இக்குடல் வியாதியினாலேயே சேரிடுகின்றது கல்ல பால் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுமாயின் அநேக குழவிகள் உயிர் வாழும் என்பதில் சந்தேகமில்லை

பாலானது குழந்தைகளின் மிக முக்கியமான உணவாக விருத்தலின், சனங்களின் தேகாரோக்கியத்தைக் காக்கும் முனிசிபல் சபையார் சுத்தமான பால் கிடைப்பதற்கு முயற்சிகள் செய்யவேண்டியது அவர்களுடைய முக்கியமான கடமைபாதலின், இவ்விஷயத்திலும் அவர்கள் மிக முயல்கின்றனர்.

இதுவல்லாமலும், மேற்றிசையிலிருந்து இங்குள்ள சில வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்படும் தகரப் பாத்திரத்தில் அடங்கியுள்ள வடி நீங்கிய பால் (Condensed Skimmed Milk) குழந்தைகளுக்குப் பெற்றோரால் பகுத்தரிதலின்றி கொடுக்கப் படுவதனாலும் சில சிசு மரணங்கள் சம்பவிக்கின்றன.

இப்பாலில் குழந்தைகளைப் போஷித்ததற்குரிய பொருள் இல்லை; ஆதலின், இத்தகைய பாலை ஒரு வயதிற்குட்பட்ட குழந்

தைகளுக்குத் தரல் கூடாது. மற்று எடுள்ள பால் (Condensed whole cream milk) குழந்தைகளுக்குத் தக்க உணவாகும். அதை அவைகளுக்குக் கொடுக்கலாம். முன்னர் குறிப்பிடப்பட்ட பால் இங்கு வஞ்சகமாய் விற்கப்படாதபடியும் எல்த் ஆபீசர் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன் ரென்பதை அறிக.

நமக்கு கல்லபால் தரும் விஷயமாகவும் எல்த் ஆபீஸர் சூழ்ச்சிகள் செய்திருக்கின்றனர். இதற்காகப் பணமும் அரசாங்கத்தாரால் முனிசிபல் சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது சனங்கள் தேகசுகத்தைக் கருதி பல வழிகளிலும் இப்போது சிறந்த முயற்சிகள் செய்யும் காருணிய அரசாங்கத்தார்க்கு நாம் அன்பும், விசுவாசமும் பாராட்டல் வேண்டும். அவ் எல்த் ஆபீஸருடைய முயற்சிகளினால் பெரும் பலன்கள் சீக்கிரத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் சென்னையில் சிசுக்களின் உயிரைக் காப்பாற்ற முன் வந்திருக்கும் அக்காருணிய உத்தியோகஸ்தருக்குச் சென்னை நகரத்தார் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

இனி, சிசு மரணங்களுக்கு மூன்றாவது காரணம். கல்வியறிவில்லாத தாய்மார்கள் தம் இளங்குழந்தைகளை முறையாக வளர்ப்பதற்கு அறியாமல், சுத்த முழு மூடத்தனமாய் அவைகளுக்கு நியமமின்றி போஷணைகளைத் தருதலினாலும், வேறு காரணங்களினாலும் அவைகளை எத்தனையோ வகையான நோய்களுக்கு இடமாக்குகின்றனர். அதனால் சில அவ்விளம்பிராயத்திலேயே உயிர் துறக்கின்றன.

இனி, சிசு மரணங்களுக்கு நான்காவது ஏது கூறவேண்டும். சில காரணங்களால் தம் தேகம் சிக்குலுக்து போகப்பெற்ற சிலர் மணஞ் செய்துகொண்டு தமது சேர்க்கையால் தம் மனையிர் உடம்பையும் நிலைகுலையச் செய்து, குழந்தைகளைப் பெறுகின்றனர். அத்தகைய குழந்தைகளும் சீக்கிரத்தில் சிர்கெட்ட நிலைமையை அடைகின்றன.

மற்றுப் பால விவாகத்தாலும், முலைப்பால் தரும் வேறு ஸ்திரீகளாலும், அசுத்தமான சுற்றுப்புறங்களிலிருந்து சுக்கள் கொசுகளாலும்,

கள் முதலிய சிறு கிருமிகள் கொண்டுவரும் நோய்ப் புழுக்களினாலும் சிசுமரணம் அதிகப்படுகின்றது.

ஆ! அறிவாளர்காள்! மனிதர் இக்காரணங்களை யெல்லாம் சிறிதாயினும் அறிந்து தம் சிசுக்களைச் சரக்கிரதையாக வளர்க்காமையினலன்றோ கணக்கிறந்த சிசுக்கள் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றன! சிசுக்களின் அகால மரணத்திற்கு உண்மைக் காரணங்கள் இங்ஙனம் இருக்க, இவைகளை விடுத்து அந்தோ! மனிதர் முன்வினையென்றும் கடவுள் சித்தமென்றும், தீக்கிரகத்தின் கோபமென்றும், பிசாசின் செயலென்றும்; பொய்க்காரணங்கள் கூறுதல் என்னை? இதனைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்!

ஸகோதரர்காள், இதனைச் சற்று செவியிலேற்பீர்களாக! பலவகையான மக்கள் ஓர் அரசர்கீழ் குடிகளாக ஒருங்குவாழ்வதே நாடாவது. அதற்குக் காரணமாகிய சிறு குழந்தைகள் இவ்வாறு பல நோய்களுக்கு இறையாகி அகால மரணமடைவின், வாழுங் குடிகளேது; வாழுங் குடிகளில்லாமற்போயின், நாடேது? அவ்வாறு குடிகளில்லாமல் நாடு பாழாயின், அதனையாளும் அரசருமில்லாமற் போவர். ஆகவே இவ்வாறு நாட்டை முடிவில் கேடு செய்யும் அளவற்ற குழந்தை மரணங்கள் குறைவதற்கு ஆண்பாலரும் பெண்பாலரும் சரீரசுக விதிகளை வாசிப்பது இன்றியமையாததாகும். இதுவன்றியும், சனங்களின் நன்மைக்காக பாடுபடும் கல்வியறிவுடைய ஆடவரும் மகளிரும் தேகாரோக்கிய விஷயங்களை எடுத்து அவர்களுக்கு அப்போதப்போது உபந்நியாசங்களாலும், பத்திரிகைகளாலும் போதிப்பார்களாக.

ருத்திரகோட்டீஸ்வரர்.

பொருத்தல் இறப்பினை யென்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

குறிப்பு:—அன்னியர் நமக்குத் தீங்கிழைப்பின் அவரை ஏற்றவாறு தண்டிக்க கம்மால் முடியுமாயினும் அவர்மீது கோபங்கொள்ளாது பொறுமையோடிருத்தல் மிகவும் நல்லது. மேலும் அவர் நமக்குச் செய்த கெடுதியை அந் நிமிஷமே மறந்து விடுதல் அப்பொறையினும் மேன்மையுடைத்து.

TYPHOID FEVER.

By

A Lady Medical Student.

நெருப்புக்காய்ச்சல்.

அத்திசுரமென்னும் நெருப்புக்காய்ச்சலும், எலும்புருக்கிக் காய்ச்சலும் மிகவித்தியாசமான இருநோய்களாம். இந்நோய்களிரண்டையும் "அத்திசுரம்" என்னும் ஒரேசொல்லாற் பலமுறை குறித்தாலும் அவை தன்மையில் விகற்பமானவை. எலும்புருக்கிக்காய்ச்சல் சன நெருக்கமான, அழுக்கடைந்த, சுத்த ஆகாயஞ் செல்லச் சரியான வசதியில்லாத வீடுகளிலே குடியிருக்கிற ஏழைச்சனங்களுக்குள்ளே யுண்டாகும் ஓர் நோயாம். இது லேசாய்த் தொற்றக்கூடியவோர் நோய். இந்நோயையுடையவர்களிலிருந்து அவர்களுடைய இரத்தத்தைக்குடிக்கிற பேன்கள் இன்னொரு ஆளிடத்திற் சென்று இரத்தங்குடிக்கக் கடிக்கும்போது இப்பேன்களிலிருக்கும் வியாதிப் பூச்சிகள் அந்த ஆளின் இரத்தத்திற்செறிந்து கிரியை செய்யத்துவங்குகின்றன. மற்றப்பக்கமாக, நெருப்புக்காய்ச்சல் இராசா, பிரசையென வித்தியாசமின்றி எவரையும் பீடிக்கும். இந்நோயைப் பரப்பும் பூச்சிகள் சாக்கடைகள் மூலமாய்ச்செல்லும் அழுக்கிலேயேயுண்டாகின்றன. பலவகையாய் இவ்வியாதி பரவும். ஆனல் பெரும்பாலும் ஓர் பட்டணத்துக்கு வருந் தண்ணீர் இப்பூச்சிகளுள்ள சாக்கடைகளாலே தீட்டடையும்போது அத்தண்ணீரைக் குடிக்குஞ் சனங்களுக்குள்ளே இக்காய்ச்சல் அதிகமாய்ப் பரவும். சாக்கடைகளோடு சம்பந்தப்படுமெலும் இந்நோயைப் பரவச் செய்யும்.

நெருப்புக்காய்ச்சல், வைசூரி முதலிய வருத்தங்களைப்போல ஒரு ஆளிலிருந்து இன்னொரு ஆளுக்குத் தொற்றுகிறவொன்றல்ல. நெருப்புக்காய்ச்சலாற் பீடிக்கப்பட்ட ஓராளைப் பராமரித்தவர்களுக்கு (Nurses) அவ்வியாதி தொற்றினதரிது. இது ஏன் அப்படித் தொற்றுகிறதில்லையென்றால், இந்நோய்க்குரிய பூச்சிகளினிருப்பிடங்கள்தான் ஆகவே இப்பூச்சிகள் நோயாளியின் மலத்திலும், சலத்திலுமேயிருக்கின்றன. இம் மலசலாதிகள் உடனே புறம்பாக்கப்படுகிறபடியால், நாம் சுவாசிக்கிற காற்று இவற்றினின்றுஞ் சுத்தமாய்

யிருக்கின்றது. ஆகையால் நாம் கவனிக்கவேண்டியவோர் காரிய மென்னவெனில், இம்மலஜலாதிகளிலிருக்கும் பூச்சிகளை உடனே அழிக்கக்கூடிய மருந்துகளைப் பாவித்து அவற்றை நாசஞ்செய்ய வேண்டியதே.

நெருப்புக்காய்ச்சல் வருத்தமாயிருந்து சுகப்பட்டவர்களிடத்திலே சிலவேளைகளில் இப்பூச்சிகள் அவர்கள் பித்தாசயத்திலே வருஷக்கணக்காக இருக்குமெனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜெர்மனிதேசத்திலே அப்பஞ்சுடுமோர் சாய்ப்பிலே வேலைகொள்ளப்பட்ட எல்லாருக்கும் நெருப்புக்காய்ச்சல் வந்தகாரணமின்னதென ஆராய்ந்தவிடத்து, அச்சாய்ப்புக்காரிக்குச் சிலவருஷங்களுக்கு முன்னே இவ்வியாதி வந்ததென்றும், அவளே அவ்வியாதி பரவினதற்குக் காரணமென்றுங் கண்டுபிடிக்கப்பட்டது.

நெருப்புக்காய்ச்சல் பதினலுநாள் முதல் இருபத்தொரு நாள் வரைக்குமிருக்கும். அவ்வியாதி தோற்றும்போதுண்டாகு மடையாளங்களாவன: தலையிடி, ஆயாசம், சோர்பு, காலையிலும் பார்க்க இரவில் ஒருபாகை கூடேறுதல் முதலானவைகள். காய்ச்சல் துவங்கி ஏழு அல்லது எட்டுநாளானதின்பின் வயிற்றிலும், மார்பிலும், அவயவங்களிலும் சிவப்பான புள்ளிகள் காணப்படும். மூன்றுநாட்களால் அவை மறைய, வேறு புதிய புள்ளிகளுண்டாகும். குடலிலுண்டாகுக் துவாரங்கள் ஆபத்துக்கேதுவானவை.

நெருப்புக்காய்ச்சலுள்ள நோயாளியைப் பராமரிக்கிறதிலே மிகக் கவனம்வேண்டியது. பால்போன்ற சலபதார்த்தங்களே கொடுக்கப்படவேண்டியவைகள். வியாதி சிக்குமுக்கானதாய் வராதபடிக்கு வைத்தியர் கவனமாயிருக்கவேண்டும். இவ்வியாதியுண்டாகிறதற்குரிய காரணங்களையறிந்த நாம் இவ்வறிவினுலே அதைத் தடுப்பதற்குரிய எல்லா எத்தனங்களையும் கையாடவேண்டும்.

ஒரு வைத்ய ஸ்த்ரீ வித்யார்த்தி.

A GEM AMONG WOMEN.

By

Mr. T. S. Raj.

(A TRANSLATION.)

ஒரு ஸ்த்ரீ ரத்னம்.

வீரவழி போர்வீரர்கள் சிவந்த ஆடைதரித்து, பேரி சப்தம், வாத்யகோஷம் முதலானவை செய்துகொண்டு பவனிசெல்வதைப் பார்க்க நமக்கெவ்வளவு ஆநந்தமாயிருக்கிறது. ஒருவேளை நம்மிற் சிலருக்கு சாஹஸுவவீரர்களாக விருப்பமிருக்கலாம். நம்முடைய தேசத்திற்காக போரில் சண்டை செய்வது என்றுல் அதைவிட சந்தோஷமான காரிய மொன்றுமில்லையென்று நமக்குத் தோன்றக்கூடும். ஆனுல் அதில் புகுந்தபிறகு ஒரு யுத்தவீரன் அடிக்கடி சகிக்கமுயாத கஷ்டத்திற்கு ஆளாகிறுனென்றும், அவன் வாழ்நாட்கள் முழுதும் பெயரும் கீர்த்தியும் மாத்திரமில்லையென்றும் புலப்படும். போர்க்களத்தில் ஒருவேளை அவன் கொல்லப்பட்டு உயிர்துறப்பான். அல்லது பெரிதான காயம்பட்டு அநேக நாழிகை வரையில் துணையில்லாமலே வருந்துவான். பிறகு தன் வீடு, தன் கண்பார்களிவர்களை விட்டுத் தன்னந்தனியே ஒருவருமினியமொழி கூறுவதற்கில்லாமல் அநேக நாட்கள் வைத்திய சாலையில் சிகிச்சையிலிருக்க நேரிடும். யுத்தம் நடக்கும் சமயங்களில் வீரர்கள் அநேக ஆபத்துக்களுக்குத் தப்பிப்பிழைக்கவேண்டும்.

ஆனுல் சில வருஷங்களுக்கு முன்னிருந்த கஷ்டத்தின் கொடுமை இப்பொழுது கொஞ்சம் தணிந்திருக்கிறது. எனெனிலிப்பொழுது அநேக தாதிகள் ஏற்பட்டு அவஸ்தைப்படும் யுத்தவீரர்களுக்குப் பாடுபட்டு உதவி புரிந்து வருகிறார்கள்.

இத்தகைய மாறுதல் ஏற்பட்டது ஸ்திரீ ரத்தினமெனச் சொல்லவேண்டிய ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) அம்மையின் பிரயாஸைகளாலேயே. நாம் அவ்வம் மைக்கு வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏறக்குறைய நாற்பது வருஷங்களுக்குமுன் இங்கிலாந்துக்கும் ருஷ்யா தேசத்திற்கும் கடும் யுத்தம் நடந்தது. போர்வீரர்கள் சுரத்தினலும், காயங்களாலும்

சொல்லமுடியா வியதையனுபவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சரிவர உபசாரம் செய்யப்போதுமான மனிதர்களும் அங்கில்லை. இத்தருணத்தில் கைட்டிங்கேல் என்னும் பெண் தான் போர்களத்துக்குப்போய் அங்கேதன்னல் கூடியவரைக்கும் உதவியாயிருக்கவேண்டுமென நிச்சயித்து, மனதொப்பி இவளுடன் சேர விரும்பின ஸ்திரீகளையு மழைத்துக்கொண்டு சண்டை நடக்குமிடம் போய்ச்சேர்ந்தாள். அங்கே இவர்கள் செய்யவேண்டிய வேலை பலவிருந்தன. வியாதியஸ்தர்களுக்கு நல்ல காற்றும் போதுமான உணவுமில்லை சவுக்ரியமடைந்திருக்கவேண்டியவர்களுள் அநேகர் இறக்தும் விட்டனர். இதை யெல்லாங்கண்டு கைட்டிங்கேல் சிறிதும் மனங்கலங்காமல், காற்று, உணவு இவை சவுகரியமாய் கிடைக்கப்படவேண்டிய விதத்திற்கு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தி, அவைகளை யனுஸரித்துதான் எல்லோரும் நடக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினாள். இவளும் உடன்சென்ற தாதிகளும் வெகுப் பிரயாஸைப்பட்டு சீர்திருத்தங்கள் செய்ய, அங்குள்ள மனிதர்களும் சிக்கிரத்திலேயே ஸ்வஸ்த மடைந்தார்கள். வைத்தியர்கள் வந்து அவர்கள் புண்களை கீறி அறுகூலம் செய்யும்போது அவள் அருகிலிருந்து பிரிய மொழிகள் பேசுவாள். இவள் சமீபத்திலிருப்பதாலேயே பாதி பாதை அவர்களுக்கு நீங்கிவிடும்.

எல்லாவீரர்களும் அவளிடத்தில் அன்பு பாராட்டி நீடூழிவாழ்கவேண்டுமென ஆசீர்வதித்தார்கள். கைட்டிங்கேல் அவர்களுக்குச் செய்த இன்னுமநேக விஷயங்களைக்கவனித்துப்பார்த்தால் இது ஒரு பிரமாதமன்று.

அது முதல் யுத்தவீரர்களைக் கடுங்குளிர்காலங்களிலிருந்து நீக்கிக் காத்த அநேக மாதிலா ஸ்திரீ மணிகளிருக்கிறார்கள். ஆனல் யுத்த களத்தில் காயம்பட்ட வீரர்களுக்கு முதல் முதல் உதவி கொணர்ந்தது கைடிங்கேல் அம்மை. இப்போது ஐரோப்பிய யுத்தம் நடந்து வருகிறது. தற்சமயம் காயமடைந்த வீரர்கள் கைடிங்கேல் அம்மைபோன்ற தாதிரத்னங்களின் உதவிகளை வெகுவாக நோரு வார்கள்.

சீர்காழி.

T. S ராஜகோபாலன்.

PURITY OF MIND.

By

Mr. Sivadyananandam.

தூய்மை.

தூய்மை என்பது பரிசுத்தம். இது மூன்று வகைப்படும் மனத்தூய்மை மொழித்தூய்மை,மெய்த்தூய்மை என்பன மூன்றும். இவற்றுள் மனத்தூய்மையே மற்றிரண்டிலும் விசேஷமானது; மற்ற விரண்டிற்கும் காரணமானது; மற்ற விரண்டு தூய்மைகளையும் ஒழுங்கு படுத்துவது. அநேக கெட்டகாரியங்களைப் பலருஞ் செய்யக்காண்கிறோம். அப்படிச் செய்பவர்களைக் காணின் அவர்களைக் கைகூண்டவன், வாய்த்துடுக்கன், சுடுகண்ணன், கோட்செவியன் என்று சொல்லக் கேட்கிறோம். யோசித்துப் பார்க்குமிடத்து அவர்களது இந்திரியங்கள் அவ்வளவு கெட்டவையல்லவென்றும் அவர்களது மனமே கெட்டதென்றும் தெரியவரும். ஒவ்வொருவனுக்கும் கண், காது, வாய், மூக்கு, உடல் என்ற இந்திரியங்களில் ஏதோ ஒன்று கூர்ந்திருக்கும். அவ்வகைய இந்திரியம் சுகத்தை நாடும். கண் நல்ல காட்சிகளைக் காண அவாவும், காது இனிய கீத மொழிகளைக் கேட்க விரும்பும்; உடல் மிருதுவான வஸ்துக்களை யடையக்கோரும். இவ்விருப்பங்களை ஒருவன் வளர்த்துவருவானுல் அவ்வாசை முறைகடந்து நியாயாநியாயக் தெரியாமலும் செல்லும். அப்படி செல்லுவதற்கு மனமே காரணமாம். முதன் முதல், கண் ஒரு வஸ்துவைக் கண்டு மனத்துக்குச் சொல்ல, மனம் அவ்விந்திரியத்துவாரா அப்பொருளை யூன்றிப்பார்க்கும். அதனல் அது அப்பொருளினிடத்து ஆசையையுண்டுபண்ணும். அவ்வாசை யுண்டாகும்போது புத்தி அல்லது விவேகம் குறுக்கிட்டுமனத்தை நோக்கி நீ அப்பொருளைக்கண்டு ஆசைப்படுகிறாய், உன அப்பொருள் உன்னுடையதா, உனக்குக்கிடைக்கக்கூடியதா, உனக்கேற்றதா என்று யோசித்துப்பார் என்றுசொல்லும். மனத்துக் குச்சுபாவதருமம் தன்னிச்சையாய்த்திரிவது. ஆதலால் அதற்குப் புத்திசொல்லுவது பிடிக்காது. ஒரு குழந்தையை நீங்கள் கண்டிருப்பீர்கள். அக்குழந்தை கண்டதற்கெல்லாம் இச்சைப்படும் அதற்கு நன்மை தீமையறியுந்தாமில்லை. ஆனல் தாய்தந்தையர் அதற்குச் சரி பிசகு போதிப்பார்கள். அக்குழந்தை கேட்கா விடில் நியாயஞ் சொல்லிப்பார்ப்பார்கள். அநியாயம் அக்குழந்தைக்குப்படாது. ஆதலால் தன் பிடியைச்சாதிக்க முயன்று அழும். பின் அதற்குப் பாக்குக்காட்டி வேறு விஷயங்களில் நினைப்பூட்டி அதன் எண்

ணத்தை மறக்கடிப்பர் இன்னும் பிடிவாதமாயிருந்தால் அடித்துப் பயமுறுத்துவர். அதுபோலவே, மனம் தன்னிச்சையாயத்தி நிய ஆரம்பிக்கும்போது புத்தி அல்லது மனச்சாட்சி அம்மனத்தி க்கு கண்மை தீமை புகட்டும். அதனோடு நியாயம் பேசும் மனமவ் வுரையைக் கேளாவிடில் வேறு விஷயங்களை மனக்கண்முன் கொண் டுவந்து நிறுத்தி அந்நினைப்பை மறக்கடிக்கும் அப்படியும் மறக்கா விட்டால் ஒரு முறை அதன் துஷ்டச்செயலுக்காகத் தண்டனைய டைவிக்கும். இப்படியே மனச்சாட்சி பல முறையும் ஒருவனதி மனத்துக்குப் போதனையூட்டும். அவன் அப்புத்தி (மனச்சாட்சி) யினது போதனையைக்கேட்டு நடந்தால் பரிசுத்தவானுவான்.

அகத்துக்கு முகங் கண்ணாடியாம். ஒருவனது மனத்தாய் மையை அவனது முகத்தெளிவினால் அறியலாம். சுத்தமான மன தில்லாதவனது முகம் கலங்கின சேற்றுத் தண்ணீரைப்போல மலி னமடைந்திருக்கும். ஆனால் பரிசுத்த விதய முள்ளவனது முகம் தெளிந்தநீர்ப் பரப்பைப் போலவிருக்கும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் ஒருவன் துக்கத்தில் முழ்கியிருப்பதையும் ஆனந்த பூரி தனையிருப்பதையும் இலகுவாய்க்கண்டு சொல்லலாம். எப்படி அது சொல்ல முடிந்தது ? அவன் மனத்திலுள்ள உணர்ச்சிகளை முகம் கண்ணாடிபோல வெளிப்படுத்திற்று.

மனம் ஒரு விஷயத்தில் பற்றுவிடில் ஒன்றிலும் மனிதனுக்கு ஆசையுண்டாகாது. பெரியவர் பலரும் போதிக்கும்போது 'தீமை செய்யாதே' என்னுமல் 'தீமைசெய்யக் கருதாதே' என்றே சொல் லுவர், 'அறஞ்செய விரும்பு' என்றுள் ளவையும். ஒருவனது விருப்பம் பேச்சில் வரும். பேச்சில் வருவதெச்சிலகாலத்திற் செய் யத் தொடங்குவான். பின்வரும் பேச்சு, செய்கை யிரண்டிற்கும் இம்மனமே பிடமாவதை யறிவீர்கள். அதனால் மனத்தைப் பயிற்சி செய்யவேண்டியது அவசியம். பயிர்களைக் கத்தரித்து ஒரு வழி யிற் செலுத்தாவிடின் அப்பயிர்கள் காடாய் மண்டி விடும் அது போலமனத்தை நல்வழிப்படுத்தி ஒழுங்கு செய்யா விடிற் அது பல் வழியிலும் சென்று காடாகி இருட்டடைந்து கெட்டுப்போம். அநேக சிறந்த சாமர்த்தியவான்கள் இம்மனப்பயிற்சியினாலேயே மேனிலைக்கு வந்தார்கள். மனதையடக்கியொண்டவன் மகான். மனத் தையிஷ்டப்படி திரியவிட்டவன் மதியிலி.

சிவத்தியா காநந்தன்.

ROUSING DULL CHILDREN.

By
A Trained Headmistress.

மந்தமாலைகுழந்தைகளை சுறுசுறுப்புண்டாக்குவது.

நமது பாலிகா பாடசாலைகளில் ப்ரதிவருப்பிலும் மந்தபுத்தி யுள்ள குழந்தைகள் ஏறக்குறைய ஸரிபாதியிருக்கிறார்கள். ஸாதா ரண தீவ்ரபுத்தியுள்ள குழந்தைகள் கால் பங்கும் கல்ல புத்திசாலி யான குழந்தைகள் கால் பங்கும் இருக்கிறார்கள். உபாத்தினி பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும் பொழுது இந்த மந்த புத்தி யுள்ள குழந்தைகள் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்குமேயன்றி அவர்களுடைய ஞாபகம் வெளியே உலாவிக்கொண்டு தான்யிருக் கும். ஒரு பாடத்தை பல முறை சொல்லிக்கொடுத்துக்கேட்டா லும் இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகள் விரும்பார்கள். அப் போது உபாத்தினிக்குக் கோபம் வரும். சில ஸமயம் குழந்தை களை அடிக்கதோன்றும். பாடம் தெரியவில்லையே யென்று அடித்தால் குழந்தைகள் மிகவும் மந்தமாகிவிடும். குழந்தைகளை அடிக்கக்கூ டாது. பெற்றோர்கள் குழந்தைகளை உபாத்தினியினடைக்கலம் விட்டிருப்பது, அவர்களை கல்ல வழியில் திருப்பி மேலான நெறியை போதிக்கிறதற்காகவேயன்றி வேறல்ல. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடி மிடத்தில்' என்பதுபோல் குழந்தைகளுக்கு அன்புடன் கற்றுக்கொடுக்கவேண்டும். இன்று மந்தமான குழந்தைகள் நாளை புத்திசாலியாகிவிடும். பள்ளிக்கூடத்தில் மிகவும் மந்தமாயிருந்த குழந்தைகள் பிற்கால வாழ்க்கையில் கல்ல பதவியைப்பெற்று வந்தி ருக்கிறார்களென்பது தெரிந்த விஷயம். ஒரு குழந்தையை மந்த மாகச்செய்வதும், புத்திசாலியாகச் செய்வதும் உபாத்யாயரிடம் இருக்கிறது. சில உபாத்யாயர்கள் தங்கள் கஷ்டத்தை கவனித்து இந்த மந்தபுத்தியுள்ள குழந்தைகளை கேள்விகள் கேட்கமலும் அதிகமாக கவனிக்காமலுமிருக்கதோன்றும். ஒரு வகுப்பில் புத்தி சாலி குழந்தைகளை மாத்ரம் கவனித்து விட்டு தாங்கள் அதிகச்ர மத்துகு ஆளாகாமலிருக்க எண்ணமுமுண்டாகும்.

கீழ்க்கண்டவைகள் மந்தபுத்தியுள்ள குழந்தைகளை சுறுசுறுப் புண்டாக்கு வதற்கு அனுகூலமாயிருக்குமென்று நம்பி என் அனு போகத்தை இந்த அருமைப்பத்திரிகை மூலமாகத் தெரியப்படுத்து கிறேன்.

357

உபாத்யாயர் ஒரு வகுப்பில் தாம் சொல்லிக்கொடுத்து வரும் போதனை முறையை இந்த மந்தபுத்தியுள்ள குழந்தைகளின் மூளை யின் வலுவுக்குத்தகுந்தபடி அமைத்துக்கொள்ளவேண்டும். மந்த புத்தியுள்ளவர்கள் வகுப்பில் தூங்காதபடியும் அவர்களின் மனம் வேறு இடம் காடாமலிருக்கும்படியும் அவர்களை அடிக்கடித்தூண்ட வேண்டும். போர்டு பலகையில் அவர்களை எழுதச்சொல்லலாம். புத்தி சாலியாயுள்ள குழந்தைகளின் பக்கத்தில் மந்தமான குழந்தை களை உட்கார வைக்கலாம். ஒரு வகுப்பு மிகவும் சோம்பலாயிருந் தால் உடன் தேகப்பயிற்சிசெய்ய அழைத்துப்போகவேண்டும். அல் லது கெட்டிக்காரக் குழந்தைகளை பாடத்தைப் பார்த்துப்படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை அது மாதிரியாகவே உறத்துப்படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை கேள்விகள் கேட்கும்போது உட்காரவைத்துக்கேட்பது நலம். மனக் கணக்குப்போடவேண்டும். அதன் ஸரியான விடையை விரைவாய் ஒடி போர்டு பலகையில் முதல் எழுதுகிற குழந்தைக்கு ப்ரைஸ் கொடுத்து உற்சாகப்படுத்தவேண்டும். இப்படியாக பலமுறைகளி களினால் மந்தமான குழந்தைகளை சுறு சுறுப்பாகி வந்திருக்கிறார்கள். இது என் அனுபவம். குழந்தைகளை அன்பு என்கிற கயிற்றினால் கட்டி அவர்களுக்குப்போதித்து வந்தால் உபாத்யாயர்களின் ச்ரமம் வெகு தூரம் நீங்கும். குழந்தைகளும் சுறு சுறுப்புடன் படித்து வருவார்கள். பள்ளிக்கூடத்துக்கு வரும்போது குழந்தைகள் ஸந் தோஷமாக வந்து உபாத்யாயரைக்காண்பார்கள். பள்ளிக்கூடம் விட்டுப்போகும் போதும் குதூஹலமாக வீட்டுக்குப்போக இட முண்டாகும்.

மந்தபுத்தியுள்ள குழந்தைகள் மேற்கண்ட அனுபவ முறைக ளினால் சுறுசுறுப்பை அடையாமலிருந்தாலாவது அல்லது மந்தத்த னத்தை அதிகமாக யடைந்தாலாவது உபாத்யாயர்கள் மௌனமாக இருக்கக்கூடாது. உடன் இவ்விஷயத்தைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தி டாக்டரைக்கொண்டு குழந்தையின் மூளையை பரி க்ஷைசெய்யவேண்டும். தெரியாத பெற்றோர்களுக்கு ஸ்கூல் தலை மை அதிகாரி எடுத்துச் சொல்லவேண்டும். குழந்தையின் மூளைக் கோளாறுகளை நிபுண டாக்டர்களால் அறியமுடியுமேயன்றி ஸாமா ன்யர்களால் அறிய முடியாத கார்யம். மேனாடுகளில் மிகவும் மந்த மான குழந்தைகள் டாக்டர்களால் பரிக்ஷிக்கபட்டதற்குப் பிறகு

சுறுசுறுப்புள்ளவர்களாயும் நல்ல புத்தி சாலிகளாயும் ஆகியிருக்கிறார் கள். ப்ராந்தியாடசாலையை யொட்டி டாக்டர்கள் இருப்பது அவச்யம். ஸாதாரணமாக ஏழைப்பெற்றோர்கள் டாக்டர்களுக்கு பணம் கொடு த்து குழந்தையை பரிக்ஷிக்க முடியாதாகையால் ஸ்கூல் அதிகாரிகள் நிபுண டாக்டர்களை வைத்துக்கொள்வது நலமாகும்.

ஒரு மாஜி உபாத்யாயனி.

WEAVING INDUSTRY & OUR WOMEN.

By

Sri. P. Visalakshi Ammal.

நெசவுத் தொழிலும் தென் இந்தியா ஸ்த்ரீகளும்.

தென் இந்தியாவிலுள்ள அநேகவகை கைத்தொழில்களில் மனிதர் ஆடைக்குறிய கைத்தொழிலே பெரும்பான்மையாக உளது. இத்தொழிலை பட்டு நூல்காரர், சாலியர், சேணியர், கைக்களர் முத லிய வகுப்பினர் நடத்தி வருகிறார்கள். இவர்கள் தென் இந்தியாவி லுள்ள முக்கிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் வசிக்கிறார்கள். இவர்களின் பெருமையும், கீர்த்தியும், தொழிலின் நிறமையும் சுமார் 50 வருஷங்களுக்கு முன்னிட்ட காலங்களில் ஐரோப்பியாவி லுள்ள எத்தேசத்திலும் பாவியிருந்தது. இக்காலத்து இவர்களின் நிலைமை மிகவும் குன்றிவிட்டது. இதற்கு காரணம் என்னவென்று இதை வாசிப்போருக்கு நன்கு விளங்கும். இவர்களில் பெரும்பான் மையும் கஷ்ண நிலைமைக்கு வந்தவர்கள் நமது நாட்டு புருஷர்களின் ஆடைக்குறிய வெள்ளை வஸ்திரங்களை உத்பத்தி செய்தவர்களே. மேனாட்டார் சென்ற 50 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக புரு ஷர் உடுக்கத்தக்க, மல், திரைவு, காஸா கச்சை, லாங்கிளாத்து முத லிய துணிகளை யந்திர மூலமாக உண்டுபண்ணி நமது நாட்டில் ஏரா ளமாக குறைந்த விலைக்கு விற்பனை செய்துவரவே, வெள்ளை வேஷ்டி நெசவுகாரர்கள் தங்கள் கைத்தொழில்களை மேனாட்டு யந்திரங்க ளோடு போட்டிபோட முடியாமல், நாளாவட்டத்தில் தங்கள் தொ ழில் குன்றி பஞ்சத்தில் அடிபட்டு ஆயிரக் கணக்காய் மாண்டார் கள். இந்தத் தொழில் குன்றியதற்கு முக்கிய காரணத்தை விசா ரிக்கும்போது, நமது செல்வர்களுக்கு தொழிலாளிகளை ஆகரிக்கும் நிறமையும் தங்கள் பொருளை தொழில் விருத்தியிலும், காலத்தை

யனுசரித்து எவ்வகையில் தமது நாட்டு தொழில்களை விருத்தி செய்யவேண்டுமோ அவ்வகையில் செலவிடும் புத்தி நுட்பமும், விஸ்தாரமான படிப்பும், இல்லாமையே காரணமென்று நிச்சயமாய் தீர்மானிக்கலாம். மேலும் இந்த இந்தியா செய்த பாவமானது இந்தியர் ஒருவரை யொருவர் நம்பி, சுயநயத்தை முக்கியமாய் கவனியாமல், பொது நலத்துக்காகப் பாடு படும் வழியில் நுழையவிடுகிறதில்லை. சென்ற 50 வருஷகாலமாக படித்தபடிப்பு ஒருவருக்கொருவர் புத்திசொல்ல ஏற்பட்டதே யொழிய, ஒருவரை யொருவர் நம்பி, மனமும் செய்கையும் ஒத்து ஒரு காரியத்தை ஸாதிக்க முடியவில்லை. தெய்வீகமாய் இத்தேசத்தார் செய்த ஏதோ சில புண்ணியங்களை யொட்டி நமது கைத்தொழிலாளிகளுக்கு ஏதாகிலும் க்ஷேமமுண்டானால் உண்டானதேயொழிய மனித பிரயத்தனத்தில் முடியுமென்று சொல்ல ஏதுக்களில்லை. புருஷர் தினம் தரித்துக்கொள்ளும் ஆடைக்குறிய வஸ்திரங்கள் விசேஷமாய் மேல்நாட்டு உத்பத்தியாகவிருந்தாலும், கல்யாண முதலிய விசேஷகாலங்களில் உப யோகப்படுத்தும் பட்டுக்கரை வேஷ்டிகளும், சரிகைவேஷ்டிகளும் நமது நாடு கைத்தரிகளில் செய்யப்படுகின்றன. இவைகளுக்கு உபயோகப்படுத்தும் நூல் சீமை நூலே. இந்தியாவில் இப்போது தான் சில விடங்களில் நூல்யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய காரணங்களினால் வெள்ளை வேஷ்டி நெசவுகாரர்களின் கைத்தொழில் குன்றியதற்கு நமது நாட்டு புருஷர்களே காரணமென்று ஏற்படுகிறது.

நமதுநாட்டுஸ்திரீகளின் ஆடைக்குறியபுடைவைகளைஉத்பத்தி செய்யும்நெசவுகாரர்களின் நிலைமையைக்குறித்துச் சற்றுஆலோஜிப்போம். நமது நாட்டுப்பெண்கள் தரிக்கும் புடவைகள் பெரும்பாலும்பட்டும் நூலும் கலந்தவைகளாகவிருக்கின்றன. காஞ்சிபுரம் கொரனாடு, கும்பகோணம் முதலிய பட்டணங்களில் உத்பத்தியாகும் புடைவைகளைச் செல்வர்கள் நமது நாட்டில் உபயோகிக்கிறார்கள். கல்யாண முதலிய சுபகாரியங்களுக்கு இந்தப்புடைவைகளே அவசியமாக வேண்டியிருக்கின்றன. ஏதோ நமது நாட்டுகைத்தொழிலாளிகளில் சிலர் செய்த புண்ணியத்தால் மேற்சொல்லிய பட்டும் நூலும் கலந்த புடவைகள் மேனாட்டிலிருந்து இவ்விடம் வாக்காணும். இதற்குக் காரணத்தை ஆலோசிக்கும்போது மேல் நாட்டு யந்திரங்களில் பட்டும் நூலும் கலந்துபோடுவது அஸாத்தியமான

காரியமென்று தோற்றுகின்றன. அல்லது வேறு எந்தக்காரணத்தினால் இது விஷயத்தில் மேனாட்டு தொழிலாளிகளின் புத்தி பிரவேசக்க வில்லையோ தெரியவில்லை.

மேலும் நமது சகோதரிகள் ஆடையுடுப்பதில் பூர்வாசாரத்தை விடாமல், நமது முன்னோர் தரித்து வந்தவிதமாகவே ஆடையுடுத்தி வருவதினால் இதுவரையில் புடவை நெசவு செய்யும் தொழிலாளிகள் உயிர்பிழைத்து வருகிறார்கள். நமது ஸ்த்ரீகளுக்கு நமது கைத்தொழிலாளிகளை ஆதரிக்கவேண்டுமென்கிற எண்ணமிருந்து அதனால் தொழிலாளிகள் க்ஷேமப்படுகிறார்கள் என்று சொல்லிவிடமில்லாவிடினும், இதுவும் நம்மவர் செய்த புண்ணியமென்றே சொல்லவேண்டும். மேனாட்டார் அனுஷ்டானங்களை நமது சகோதரிகளும் இதுவரையில் அனுஷ்டித்திருப்பாரேயானால் நமது நெசவுத்தொழில் முழுமையும் அடியோடே தொலைந்து போயிருக்கும்--நெசவுகாரர் விஷயத்தில் நமது சகோதரிகள் புருஷரைவிட அதிக தயவு உடையவர்களாயிருக்கிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது.

இனியும் நமது சகோதரிகள் மேனாட்டு பகட்டைக்கண்டு மயங்காமல், உறுதியும் அறிவுகளும் தாளக்கூடியது மாகிய நமது நாட்டுத்துணிகளை வாங்கிக் கட்டி, அனுபவிப்பதனால் நமது தேசத்து கைத்தொழில் குன்றவிடமில்லை. ஏழை எளியவர் பிழைக்கவகை யுண்டு. இதுவும் ஒரு புண்ணியமாகும். இருந்தவிடத்தில் புண்ணியத் தேடுவதற்கு இதுவும் ஒரு வழியே. மூட்டை கட்டிக்கொண்டுபுண்ணியத் தேட ஊரூராகப் போகவேண்டாம்.

மேனாட்டுத் துணிகள் உடை தாங்காது, அழுக்குத் தாளாது, அதிகாலம் வராது. நமது நாட்டுத் துணியோ தினம் அழுக்குப் போகத் தோய்த்துக் கட்டினால் ஒரு வருஷம் தாராளமாய் கட்டலாம். நாட்டுப் புடவைகள் இரண்டை வைத்துக்கொண்டு தினம் துவைத்துக் ஒரு வருஷத்துக்குக் குறையாமல் கட்டிவரும் கிராம வாசிப் பெண்களுமிருக்கிறார்கள். சோம்பலினாலும், அலட்சியத்தினாலும், கர்வத்தினாலும், மூடத்தன்மையினாலும் எதையும் கவனிக்காமலிருப்பவர்களின் சங்கை எத்தேசத்தில் அதிகப்படுமோ அத்தேசம் என்றைக்கும் விருத்திக்கு வரமாட்டாது புத்தியுள்ளவர்

கள் பலவான்கள். அவர்களால் தனித்து ஒரு காரியத்தை முடிக்க எவராலும் அவர்கள் பலர்கூடி ஒற்றுமையினாலும் நம்பிக்கையினாலும், விடாமுயற்சியினாலும், பக்திரபலத்தினாலும் அதை சாதித்திருக்கிறார்கள். அவர்களே உலகில் நிலைபெறுகிறார்கள்.

காட்டர் ஹவுஸ்,
எழும்பூர்.

ப. லக்ஷ்மிகாந்தி அம்மாள்.

PADMAVATY.

By

Mr R. Sundara Raja Aiyer.

பத்மாவதி.

சௌகான் வம்சத்தைச்சேர்ந்த ஹமீரகிம்ஹன் என்னும் அரசன் சிம்ஹத்வீபத்தை ஆண்டுவந்தான். அவனுக்கு மிக அழகு வாய்ந்த புத்திசாலியான ஓர் பெண் இருந்தாள். அவளுக்குப் பத்மாவதி யென்று பெயர். இக்காலத்தில் (கி பி. 1275) மேவார் தேசத்து அரசன் லகும்ஸீ என்பவன் இளவரசாயிருந்த நாரணம்பற்றி அவனுடைய சிற்றப்பனை பீம்ஸி என்பவன் ராஜ்ய நிர்வாக கர்த்தாவாக ஏற்படுத்தப்பட்டான். கம்சதா நாயகி பத்மாவதியும் இவரையே மணம் பூண்டாள். பத்மாவதியின் அழகோ பூரி யெங்கும் பரவி, சக்கரவர்த்தியான அல்லாவுதீன் காதிலும் எட்டிவிட்டது. அல்லாவுதீனும் மன்மதராஜ்யத்தை அடைந்து பத்மாவதியைக்காணேனெப்படியாவது அபஹரித்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணிப் பெரிய சேனையுடன் பீம்ஸியரசனுடைய நகரமாகிய சித்தூரைவளைத்துக்கொண்டான்.

'உன் உயிரையும் உன்னைச்சேர்ந்தவர்களின் உயிரையும் நீ ஓர் பொருட்டாக வெண்ணினால் பத்மாவதியை எனக்குக்கொடு' என்று மகம்மதிய அரசன் துணிச்சலாய் பீம்ஸியைக்கேட்டதற்கு, ராஜபுத்திர அரசன் சண்டையைத்தவிர வேறு யாதொரு பதிலும் அளிக்கவில்லை. சக்கரவர்த்தியோ சண்டையில் தோல்வியடைந்து டில்லியை நோக்கித்திரும்பினன்.

அல்லாவுதீனுக்குக்கொஞ்சமேனும் மனது சமாதானப்படவில்லை. கண்ணுடியிலாவது அப்பேரழகியின் திருமுகக்கண்டுகளிப்போம் என்ற பேராவா அவன் மனதில் உதித்தது. உடனே தூத

னை பீம்ஸி அரசனிடத்திற்கு அனுப்பிப்பதிற்கேட்டுவரச்சொன்னன். தூதன் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட அரசன் முகம் சிவந்தது. கண்களில் நீப்பொறி பறந்தது. இருந்த போதிலும் தன் மனத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு பத்மாவதியின் யோசனையைக்கேட்கலானன். சரஸ்வதியை யொத்த அப்பெண்மணிக்கு உடனே ஓர் யுக்தி தோன்றியது. 'அரசன் எண்ணத்திற்கிசைக்கோம்' என்று சொல்லித்தூதனை யனுப்பிவிட்டாள்.

சக்கரவர்த்தியின் மனம் குளிர்ந்தது. மறுநாள் அப்படியே சக்கரவர்த்தியும் பீம்ஸியரசனரண்மனையை அடைந்தான். கண்ணுடியில் ராஜ புத்திரியாகிய பத்மாவதியின் பிம்பத்தைக்கண்டான். உடனே சற்று மயங்கினன். 'இவளை யெப்படியும் நான் மணஞ் செய்தே தீருவேன்' என்ற கொடிய வெண்ணம் அவன் மனதிலுதித்தது. ஆனாலும் அதை வெளிகாட்டாமல், பீம்ஸி அரசனிடம் பத்மாவதியின் அழகைப்புகழ்ந்து பேசிவிட்டு, தன்னிருப்பிடத்தை அடைந்தான். தந்திரமாய் கபடந்தோன்றுந பீம்ஸி மகாராஜனை உடனே கைதியாக்கினன். 'உன் புருஷன் கைதியாக என் கையில் அகப்பட்டுக்கொண்டான். நீ என் மனைவியாவதாக மாத்திரம் ஓப்புக்கொண்டால் அவனை விட்டுவிடுகிறேன்'. என்று சொல்லும்படி ஓர் தூதனையும் பத்மாவதியிடம் அனுப்பினன்.

பத்மாவதியும் 'எனக்கு அதில் சர்வசம்மதம் நானைக்குத்தல் களிருப்பிடத்திற்கு என்னுடைய, சகிஜனங்களுடன் வருவேன். என்னை வரவேற்பதற்காக மாத்திரம் ஓர் தனிக்கூடாரம் ஒன்று போடுப்படி. ஏற்பாடு செய்யவும்' என்று பதிலளித்துத்தூதனை யனுப்பிவிட்டாள்.

சக்கரவர்த்தியும் சகல சாமக்கிரியைகளையும் சேகரித்துத் தயாரிக்கும்பொருட்டு மந்திரிகளுக்குத்தாவிட்டு, மறுநாள் குறிப்பிடப்பட்ட அந்த நாழிகையை எதிர்பார்த்துக்கொண்டே காலத்தைக் கழித்தான்.

பத்மாவதியோ தன் போர்வீரர்களுக்கெல்லாம் சகி வேடத்தைப் போட்டு, அனைவருடனும் சிவிகையேறிச் சக்கரவர்த்தியினிருப்பிடம் சேர்ந்தனள். 'தங்களை மணம்புரியமுன்னம், என்னுடைய புருஷனிடத்தில் கடைசியாக விடைபெற்றுக்கொள்ள சக்கரவர்த்தி உத்தரவளிக்கவேண்டும்' என்று அல்லாவுதீனை வேண்டிக்கொள்ள அவனும் 'அப்படியே செய். ஆனால் துரிதப்படுத்து' என்றனன்.

பத்மாதிவதி தன் உயிர்க்காதலனிடம் தன்னுடைய யுக்தியைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்குமளவில் அவளுடைய சகிகளான போர்வீரர்கள் பல்லக்குகளிருந்தும் வெளியே குதித்து, அங்கிருந்த மகம்மதியர்களைத் தாக்கினர். ஓர் பெரும் போர் விளைந்தது. அச் சந்தடியில் காலனும் காதலியும் குதிரையேறித் தங்களூர் நோக்கி விரைந்தனர்.

மணக்கோலம் பூண்டிருந்த அல்லாவுதீன் போர்புரிய நேர்ந்தது இரஜ புத்திரர்களே வெற்றியடைந்தனர். அல்லாவுதீனோ பெண் பிள்ளை யொருத்தியால் அவமானத்தை அடைந்தோமே என்று தீராக் கோபம் கொண்டபோதிலும் தனக்கு மனித சகாயமில்லாத தால் மந்திரத்தால் கட்டுண்ட ஆதிசேடனை யொத்தவனாய் ஊர் போய்ச் சேர்ந்தான்.

சில நாட்கள் கழிந்தன. சித்தூர் கோட்டையில் வெற்றிக் கொடி பறந்துகொண்டிருந்தது. திடீரென்று ஒருநாள் கோட்டை க்கு வெகுதூரத்தில் செவ்வானம் தோன்றியது. உத்தரத்ருவத் தில் தோன்றும் வெளிச்சத்தைப்போல் இடையிடையே ஏதோ வெளிச்சம் மாத்திரம் காணப்பட்டது கொஞ்ச நேரத்திற் சித் தூர்க் கோட்டை சூழ்ந்துகொள்ளப்பட்டது. ஆனால் கோட் டையிலோ ஒரு விதமான விகாரமும் தோன்றவில்லை. உடனே ரஜபுத்திரர்கள் போருடைதரித்து எதிரியைத் தாக்கினார்கள்.

சமுத்திரம்போல் திரண்டுவந்துள்ள அல்லாவுதீனுடைய சே னையை எதிர்க்க இச்சிறு ரஜபுத்திரசேனை எம்மாத்திரம்? இருந் தாலும் ஒவ்வொருவனும் தன் பிராணன் போகுமட்டும், சண்டை செய்து பிறகே மரித்தான். பீம்ஸி யரசனும் மடிந்தான்.

கோட்டையினுள்ளே புகைசூழ்ந்தது. அங்கே சாம்பலைத் தவிர வேறொன்றும் காணவில்லை. பத்மினியோ தன்னுடைய சேடி மார்களுடன் அக்னிப் பிரவேசம் செய்தாள்போலும்? எந்த ரஜபுத் திரிதான் அன்யபுருஷனின் அந்தப்புரத்தை அலங்கரிக்கத் துணி வாள்? எந்த இரஜபுத்திரன்தான் ரணகளத்தினின்றும் புறங்காட் டியோட துணிவான்?

ஆர். சுந்தரராஜ ஐயர்.

364

THE WAR IN EUROPE.

By

The Editor.

ஐரோப்பாவில் யுத்தம்.

பூகோளத்தில் நம்ஸஹோதரிகள் ஐரோப்பாக்கண்டத்தைப் பற்றிப் படித்திருப்பார்கள். ஐரோப்பாவில் ஐந்துவல்லரசுகள் இரு க்கின்றன. அதாவது ருஷ்யா, ஜெர்மானி, இங்கலாந்து, ப்ரான்ஸ், ஆஸ்டிரியா. மற்ற சிறு ராஜ்யங்கள் பெல்ஜியம், ஹாலண்டு, இடாலி, போன்றவைகளுமிருக்கின்றன. இந்த ஐந்து வல்லரசுகளில் ருஷ்யா, ப்ரான்ஸ் இங்கலாந்து ஆகிய இம்மூன்றும் சில வருஷங்களுக்கு முன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றது. அதன் ப்ர காரம் ஆபத்துக்காலத்தில் ஒருவர்க்கொருவர் உதவிசெய்துகொள்ள வேண்டுவது அவச்யமாகும். இதேமாதிரியாக ஜெர்மனி, ஆஸ்டி ரியா, இடாலி இம்முன்றும் ஆபத்துக் காலத்தில் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்வதாக ஒரு உடன்படிக்கை செய்து கொண்டி ருக்கின்றது. இப்படிக்கெல்லாம் இருந்தும் ஸமீபத்தில் இந்த தேச ங்கள் சிலவற்றிற்கு மனஸ்தாபமுண்டாகி அது பெருகிச் செழித்து இதுவரையிலும் நேர்ந்திராத பெரும்போராய் ஐரோப்பாவில் ஓங்கி விளைந்திருக்கிறது. இதற்கு முக்கியமாயுள்ள சிற்சில காரணங்களை யும், அந்தந்த தேசங்கள் இருக்கும் நிலையையும் குறித்துச் சொல் வோம். ஐந்து வல்லரசுகளுள் ஒன்றாகிய ஆஸ்டிரியாதேசம் ஐரோ ப்பாக்கண்டத்தின் தென் பாகத்திலிருக்கிறது. அதற்குக் கீழ்புறமா யிருப்பது ஸெர்வியா வென்ற ஒரு சிறு தேசம். ஆஸ்டிரியா தேசத் தில் பல ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஸ்லாவ் என்ற ஜாதியாரைச் சேர்ந்தவர்கள் பெரும்பாகத்தவர். 1909-ஆ ஆஸ்டிரியா சக்ரவர்த்தி ஸெர்வியாவுக்குச் சொந்தமான ஹெரஸ கோவினா, போஸ்னியா என்ற மாகாணங்களை தம் தேசத்தோடு சேர்த்துக்கொ ண்டார். இப்படி இரண்டு தேசங்களைச்சேர்த்துகொண்டது மற்ற வல்லரசுகளுக்கு மனமொப்பவில்லை. புதிதாகச்சேர்த்துக்கொண்ட ஊர்களிலும் ஸ்லாவ் ஜாதியினர் அதிகமாக இருக்கிறார்களாகையால் ஆஸ்டிரியா சக்கிரவர்த்தியின் கீழ்வாழ விருப்பமில்லாதவர்களாய் அவர்கள் தேசத்தில் ஸமாதானத்தை அழித்துவந்தார்கள். ஸெர் வியா தேசத்து ஜனங்களும் ஸ்லாவ் ஜாதியர்கள். சில வருஷமா கவே ஸெர்வியர்களும் ஆஸ்டிரியாவுக்கு விரோதமாக சில சூழ்ச்சி கள் செய்து வந்ததாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்படியிரு க்க, ஆஸ்டிரியா தேசத்து இளவரசரும் அவர் மனைவியாரும் புதிதா கச் சேர்த்துக்கொண்ட தேசத்தின் ப்ரதானப் பட்டணங்களில் ஒன் றாகிய ஸராஜிவோ என்ற நகரில் பட்டணப் ப்ரவேசம் செய்தபொழுது

365

ஸ்லாவ்ஜாதியைச் சார்ந்த ஸெர்வியாதேசத்து மாணக்கன் ஒருவன் இவ்விரு ராஜதம்பதிகளையும் சுட்டுக்கொன்றான். இது நடந்தது. ஜூன்மீ இந்த ஸம்பவம் ஆஸ்டிரியா சக்ரவர்த்திக்கு எட்டவே, அவருக்கு உண்டான துக்கத்திற்கு அளவில்லை. சக்ரவர்த்திக்கு வயது 86. இவர் தம் குடும்பத்தில் வெகு துக்கங்களை அனுபவித்தவர். இந்தத்துக்கத்தை இவரால் சகிக்க முடியவில்லை. ஸர்வியா தமது தேசத்தில் வைத்திருக்கும் விரோதத்தால் இப்படிச்செய்தது என்று அபிப்பிராயப்பட்டு, ஆஸ்டிரியா சக்ரவர்த்தி இதற்கு ஸமாதானம் கொடுக்கும்படி ஸெர்வியாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்த ஸந்தர்ப்பத்தை முன்னிட்டு ஆஸ்டிரியா சக்ரவர்த்திக்கு ஸெர்வியாவை அடக்கவேண்டுமென்ற எண்ணமும் உண்டு. அக்கடிதத்தில் சில கடுமையான நிபந்தனைகளும் கேட்டிருந்தார். அவைகள் ஆஸ்டிரிய இளவரச ராஜதம்பதிகளைக் கொன்றவனையும் அவனுக்கு உடந்தையாயிருந்தவர்களையும் கடுமையாக தண்டிக்கவேண்டும். ஸெர்வியா தேசத்துப் பள்ளிக்கூடங்களில் ஆஸ்டிரியாவுக்கு விரோதமாக போதனைசெய்வதை நிறுத்தவேண்டும். ஆஸ்டிரியாவை அழிக்க வேண்டுமென்று வெடிமருந்து சுரங்கங்கள் உண்டாக்குவதை நிறுத்தவேண்டும். ஆஸ்டிரியாவுக்கு விரோதிகளாகக் கருதப்பட்ட ஸர்வியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை உத்யோகத்தினின்றும் நீக்கவேண்டும். இவ்வாறு செய்யாவிடில் இதையே யுத்தத்துக்கு முடிவுக் கடிதமாக பாவிக்கவேண்டியது. உடன் பதிலும் எழுதவேண்டுமென்றும் அக் கடிதத்தில் கேட்டிருந்தது. இக்கடிதத்தில் கண்ட நிபந்தனைகளெல்லாம் கொடுமையானவைக ளென்றும், அப்படி யுத்தம் செய்ய இஷ்டமிருந்தால் ஸெர்வியா யுத்தத்துக்கு தயார் செய்துகொள்வதற்கு சில நாள் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி ஆஸ்டிரியாவை மற்ற வல்லரசுகளும் சிறு ராஜ்யங்களும் கண்டித்தன. ஸெர்வியா இதற்கு நியாயமாய் பதில் சொல்லியும் ஆஸ்டிரியாவுக்கு அப்பதில் பிடிக்காததால் இரண்டு ராஜ்யங்களுக்கும் யுத்தம் மூண்டுவிட்டது. இது இப்படியிருக்க, ருஷ்யாதேசத்தார் இயற்கையாகவே ஸெர்வியர்களிடம் வெகு அபிமானம் வைத்தவர்கள். ஏனென்றால் ருஷ்யர்களும் ஸெர்வியர்களும் முன்சொல்லப்பட்ட ஸ்லாவ் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மேலும் வல்லரசைச் சார்ந்திருக்கும் சிற்றரசான ஸர்வியா மேற்சொன்னவாறு வேறோர் வல்லரசிடம் நசுங்கிப் போகுந்தருவாயிலிருப்பது ருஷ்யாவுக்கு ஸம்மதமில்லை. இவைகளையெல்லாம் முன்னிட்டு ஸெர்வியாவுக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால் பெரிய வல்லரசுகள் இவ்விவகாரத்தில் தலையிட்டு மத்யஸ்தம் செய்ய முடியுமென்றும், ருஷ்யா ஆஸ்டிரியாவுக்கு ஒரு கடிதம் எழுதியது. அக்கடிதத்திலேயே ஸெர்வியாவுக்கு ஸாவகாசம் கொடுக்கத் தவறினால் தான் ஸெர்வியாவுக்கு உதவிசெய்ய நேரிடுமென்றும் எழுதியது. இதைக்கண்ட ஜெர்

மெனி, ஆஸ்டிரியாவும் ஸெர்வியாவும் விவகாரங்களை ஒருவர்க்கொருவர் தீர்த்துக்கொள்ள இருக்க, மூன்றாவது ராஜ்யம் இக்காரியத்தில் ப்ரவேசிப்பது உசிதமல்லவென்றும் அப்படி ப்ரவேசித்தால் தான் சும்மா யிருக்கமுடியாதென்றும் ருஷ்யாவுக்குத் தெரிவித்தது. இந்த ஸந்தர்ப்பத்தில் நமது ஜார்ஜ சக்ரவர்த்தியின் அன்ய மந்திரி வல்லரசுகளுக்குள் ஒரு ஸமாதானம் செய்யவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்க, ஆஸ்டிரியா ஸெர்வியாபேரில் படையெடுத்துவிட்டது. இதைப் பொறுக்கமாட்டாமல் ருஷ்யா ஆஸ்டிரியாவோடு சண்டைசெய்வதாகத் தீர்மானித்ததைக்கண்டு ஜெர்மனி ருஷ்யாவோடு சண்டைசெய்வதாக முன்வந்துவிட்டது. முன்னதாகவே கடன்திருக்கும் உடன்படிக்கைப்படி ப்ரான்ஸ் ருஷியாவுக்கு உதவி கொடுக்க இசைய, ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை தீர்மானமாய்விட்டது. வல்லரசுகளுக்குள் விவகாரங்கள் இப்படி யிருப்பதைக் கண்டு இங்கலாந்து அக்யமந்திரியின் ஸமாதான முயற்சி நிறைவேறாமல் போய்விட்டது.

இவைகளையெல்லாம் பார்த்துஹாலண்டு பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்துபோன்ற சிறு ராஜ்யங்கள் ஒருவர் பக்கமும் சேராமல் நடு நிலைமையைப் பின்பற்றுவதே இச்சமயத்தில் க்ஷேமமென்று மதித்து தனியாக நின்றுவிட்டன. ப்ரான்சை எளிதில் அதாவது அதிக ச்ரமமில்லாமல் தாக்குவதற்கு பெல்ஜியத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும்; ஆகையால் ஜெர்மனி அது விஷயமாக பெல்ஜியத்தின் ஸம்மதத்தைக்கேட்டது. ஒரு விதத்திலும் வல்லரசுகளுக் குள்ளிருக்கும் மனத்தாங்கல்களில் பெல்ஜியம் ஸம்பந்தப்படாததனால் வழிவிட முடியாதென்று மறுக்க, ஜெர்மனி அதிக்ரமித்து பெல்ஜியத்தின் வழியே வேண்டுமென்பதாகப் பிடிவாதம் செய்து படைகளை அதற்குள் நடத்திக்கொண்டுபோயிற்று. உலகத்தில் வாதத்திற்கு மருந்துண்டு. பிடிவாதத்திற்கு எங்கிருந்து மருந்து தேடுவது? ஜர்மனியின் பிடிவாதத்திற்கு ரணகளமே மருந்து போலும். முன்னொரு ஸமயம் வல்லரசுகள் சிறு ராஜ்யங்களில் அக்ரமமாக தலையிடாதென்றும் அவர்களின் மதிப்பையும் கௌரவத்தையும் காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் அவர்களுக்குள்ளாக ஏற்கெனவே ஒரு உடன்படிக்கை நடந்திருக்கின்றன. இப்போது அந்த உடன்படிக்கையைவிட்டு ஜெர்மனி ஒன்றிலும் ஸம்பந்தப்படாத பெல்ஜிய ராஜ்யத்தில் நுழைந்தது இங்கலாந்துக்கு இது சுத்தமாகப்பிடிக்காகவேயில்லை. பேரும் பெருமையும் சீரும் சிறப்பும்வாய்ந்த வல்லரசானது ஸத்யத்தை மீறி நடப்பது அதர்மமென்றும், பெல்ஜியத்தின் மதிப்பையும் கௌரவத்தையும் காப்பாற்றவேண்டுமென்றும், ஜெர்மனி அப்ஜியத்தில் இப்போது நுழைந்திருக்கிற சேனைகளை ஜெர்மனி அப்புறப்படுத்தவேண்டுமென்றும், அப்படிக்கில்லாதபக்ஷத்தில் இங்கலாந்து பெல்ஜியத்திற்கு உதவிசெய்ய நேரிடுமென்றும் இங்கலாந்து

அன்ய மந்திரி ஜெர்மன் கவர்ன்மெண்டுக்கு தெரிவித்தார். ஜெர்மனி இதற்கு உடன்படாமற்போகவே அதற்கும் இங்கலாந்துக்கும் சண்டை ஆரம்பம் செய்யப்பட்டது. இப்போது ருஷ்யா, ப்ரான்ஸ், இங்கலாந்து, பெல்ஜியம் இவை காலும் ஒரு கக்ஷி. ஜெர்மனி ஆஸ்டிரியா இவை இரண்டும் ஒரு கக்ஷி. முன் உடன்படிக்கைப்படி இடாலி ஜெர்மனிபக்கம் சேரவேண்டியது. ஆனால் இடாலி ஸ்வாதீன கவர்ன்மெண்டையடைந்து இங்கலாந்தின் உதவியாகையால், அந்த நன்றியை அறிந்து ஒரு பக்கமும் ஸம்பந்தப்படாமல் ஒதுங்கி நின்றுயிருக்கிறது. இப்போது மேற்கண்ட கக்ஷிகளுக்குள் யுத்தம் நடந்து வருகிறது. இங்கலாந்துக்கு ஜப்பான் உதவிசெய்வதாக வாக்களித்திருக்கிறது. கிழக்கு,

இங்கலாந்து யுத்தம் செய்ய ஆரம்பித்தது பின்க்கண்டகாரணங்களினால் என்று அறியவேண்டும்.

(1) ருஷ்யா, ப்ரான்ஸ் இவைகளோடு செய்துகொண்டஉடன்படிக்கையை இங்கலாண்து கௌரவிப்பது. (2) சிறு ராஜ்யங்களின் கௌரவத்தையும் மதிப்பையும் கருதுவதுமன்றி, வல்லரசுகள் ஒருங்குகூடி சிறுராஜ்யங்களைக் காப்பாற்றுவது அவச்யமென்று ஸமாதான உடன்படிக்கை செய்துகொண்டபடி நடப்பது. (3) பெல்ஜியம் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டது. கடைசியாக ப்ரிடிஷ் ப்ரஜைகளையும் அவர்களது தேசத்தையும் காப்பாற்றும் கடமை. ஆக இந்த நான்கு காரணங்கள்.

இந்த ஸமயத்தில் ப்ரிட்டிஷாருக்கு செய்யவேண்டிய கடமையை நாம் நன்கு அறியவேண்டும். ப்ரிடிஷ் அரசாங்கியால் நமக்குச் சிடைத்திருக்கிற நன்மைகள் அளவற்றன. இன்னும் அதேக நன்மைகள் கொடுக்கப்படும் என்று அரசாங்கியார் வாக்களித்திருக்கிறார்கள். அவைகளையும் நாம் பெறுவது நிச்சயம். பக்தியும் விசுவாஸமும் நிரம்பிய இந்தியர்கள் யுத்தகாலத்தில் உபயோகிக்கக்கூடிய நிஷ்டை ராணத்திற்காக வேண்டி தங்களது உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் இச்சமயத்தில் கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்று வெகு உத்ஸாகத்துடன் அரசாட்சியாருக்குத் தெரிவித்திருக்கிறது இந்தியர்களின் தேசத்தோடு பிறந்திருக்கிற ராஜபக்தியையும் ஆத்மத்யாகத்தையும் குறிக்கின்றது. ஸ்த்ரீகள் இந்தியாவில் பல பாகங்களில் கூட்டம் கூடி பணம் சேர்க்கத் தீர்மானித்திருக்கிறார்கள். வெகு பணம் வசூலாகியும் வருகிறது. இந்திய மன்னர்களும் ப்ரபுக்களும் யுத்தபண்டுக்கு லக்ஷக் கணக்காய்ப் பணம் அனுப்பியும் வருகிறார்கள். ஜாஸ்தியாக யுத்த பண்டுக்கு தனம் சேருமென்றும் நம்புகிறோம்.

இந்த யுத்தத்தில் நமது சக்ரவர்த்தி ஜெயமடைய கடவுளை ப்ரார்த்திக்கிறோம்.

ப. ர்.

Interesting Items.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Children's Eye-Sight & School Work.

குழந்தைகளின் கண்பார்வையும் ஸ்கூல் வேலையும்:—இங்கலாந்தில் உபாத்தினிகளின் கான்பரன்ஸ் கடந்தபோது மிஸ் மார்கரெட் மெக்டானல்டு என்பவர் மேற்கண்ட விஷயமாக ஒரு வ்யாஸம் வாசித்தார். அதன் சுருக்கம் ஸாதாரணமாக இங்கலாந்திலுள்ள பாடசாலைகளில் 100-க்கு 30 குழந்தைகள் ஷார்ட்ஸைட், லாங் ஸைட் போன்ற கண்தோஷத்திலுல் வருந்துகிறார்களென்றும் 100-க்கு 2 குழந்தைகள் கண்வலிபோன்றவ்யாதியால் துன்பப்படுகிறார்களென்றும் அதற்கு அவச்யம் பரிகாரம் தேடவேண்டுமென்றும் வாசித்தார். மேலும் குழந்தைகளை உபாத்தினிகள் கண்களை பாதிக்கும்படியான வேலையையே கொடுக்கக்கூடாதென்றும் சொன்னார். 7-வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு பாடசாலைகளில் பகல் நேரங்களில்கு றைந்தது ஒரு மணியாவது தூங்குகிறதற்குத்தகுதியான வசதியிருக்கவேண்டுமென்றும் சொன்னார். பால குழந்தைகளை பெற்றோர்கள் உபாத்யாயர்களிடம் தினம் 8-மணி ஸாவகாசம் ஒப்பிக்கிறதிலுல் பெற்றோர்களுக்காட்டிலும் உபாத்யாயர்கள் குழந்தைகளின் வ்ருத்திக்கு வெகு ஜாக்ரதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

Music and School Children.

ஸங்கீதமும் ஸ்கூல் குழந்தைகளும்:—பாடசாலைகளில் குழந்தைகளுக்கு ஸங்கீதப்படிப்பு இருந்தால் மற்றப்படிப்புகள் வெகு லாலபமாகவரு மென்றும் ஸங்கீதம் பிறந்த இடமாகிய இந்தியாவில் ஸங்கீதத்தை அவட்சயம் செய்து பாடசாலைகளில் மற்ற படிப்புகளை சொல்லிக்கொடுத்து வருவது வீணென்றும் இந்திய ஜனங்கள் இதுவரையில் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்தது சோம்பேரித்தனமென்றும், இனியாவது கவர்ன்மெண்டை பாடசாலைகளில் ஸங்கீதப்படிப்பைக் கட்டாயமாக்கச்செய்யச் சொல்வது அவச்யமென்றும், ஸங்கீதப்பயிற்சி என்னும் பத்ரிகையில் ஒரு அமெரிக்கா தேசத்து ஸங்கீத வித்வாம்சனி எழுதுகிறார். மேலும் இந்துக்களின் வேதமூலமையும் ஸங்கீதம் நிறைந்திருக்கிறதாதலால் ஸங்கீதத்தை அலட்சியம் செய்து வருகிறது, ஸர்வேச்வரனே அலட்சியம்செய்ததாகும் என்றும் சொல்லுகிறார்.

Boy Suicides in Germany.

ஜெர்மனியில் குழந்தை தற்கொலைகள்:—1912-ம் வருஷத்து ஜெனனமரணக்கணக்குப்படி ஜெர்மனியில் 6604 தற்கொலைகள் நடந்திருக்கின்றன. இதில் 94-பேர் 10 வயதுமுதல் 15-வயது வரையிலுள்ள குழந்தைகள். குழந்தைகளிடம் வருஷா வருஷம் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றனவாம். இதற்கு முக்ய காரணம் பையன்கள் பள்ளிக்கூட வாஸப்பூவேலையோடு வீட்டிலும் கன்னூக வேலைசெய்யவேண்டுமாம். மேலும் பையன்கள் பள்ளிக்கூடம் விட்டவுடன் தொழிற்சாலைகளுக்குப்போய் கூலிக்கு வேலைசெய்வார்களாம். இதுவும் தவிர பரீக்ஷைகளில் தவறிவிட்டாலும் தற்கொலைகள் நடக்கிறதாம். பெற்றோர்கள் தான் இதற்கு ஜவாப்தாரியாக யிருக்கவேண்டுமென்று ஊஹிக்கிறார்கள். ஜெர்மன் கவர்மெண்டார் இது விஷயமாக ஒரு விசாரணை ஏற்படுத்தியிருக்கிறார்களாம்,

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Sago.

ஜவ்வரிசி:—மலாய்த் தீவில் சவ்வரிசி எடுக்கும் மரங்கள் ஈரம் பிடித்த சதுப்பு நிலங்களில் வளர்கின்றன. தாளிப்பனை, கூந்தல் பனை முதலிய செடிகளிலிருந்து மலையாளத்தில் சவ்வரிசி யெடுப்பதுண்டு மரம் நன்றாய் முற்றி பூவெடுக்கும் ஸமயத்தில் அடியோடு வெட்டி 3-4 அடி நீளத்துக்கு ஒரு துண்டாக வெட்டி அனேக நாள் ஜலத்தில் ஊறவைப்பார்கள். மேல் காரைப் பக்குவமாய்ச் செதுக்குவார்கள். மீதித்துண்டுகளை நன்றாய் யந்திரத்தில் சுரண்ட வாள் தூல் போலாகிறது. உயரமான முக்காலி அல்லது நாற்காலியில் ஒரு சாக்கைக்கட்டி அதில் ஷை தூளைப்போட்டு ஆள் ஒருவன் கோணிப்பைக்குள் ஏறி, ஜலம் விட்டு பிதித்துத்துவைத்து சுத்த ஜலத்தை அபிரிமிதமாய்க் கொட்டுவான். அடியில் வைத்திருக்கும் மூங்கில் தொட்டியில் மாவு இறங்கிவிட நார்மாத்திரம் சாக்கில் நிற்கும். சிலநாள் சென்ற பிறகு ஜலத்தை இறுத்து மாவை உலர்த்தி பைகளில் அடைத்து சுத்தி செய்யுமிடத்துக்கு அனுப்புவார்கள். தெ. வி.

Remedy for Bugs.

மூட்டுப்பூச்சிக்கு மருந்து:- மூட்டுப்பூச்சிகள் பதுங்கியிருக்கு மிடங்களிலெல்லாம் தேங்காயெண்ணெயை ஒரு சிறிதுரும்பால் எடுத்துவிட அவை அழிந்து போகுமென்று ஒரு வைத்யர் கூறுகிறார்.

To Manufacture Inks.

எழுதும் மை செய்தல்:—சூரத்துக்கடுக்காய்த் தூள் பலம் 15, கோந்து அல்லது கருவேலம் பிசினி பலம் 3½. அன்ன பேதி பலம் 8, மாசக்காய் பலம் 3, சுத்த ஜலம் பலம் 135, இவற்றுள் மாசக்காயை ஒரு சட்டியிற் போட்டு வறுத்துச்செவ்வனே சிவந்துபின் கறுப்பாகும் தருணம் பார்த்து இறக்கி ஆறவிட்டுத் தூள் செய்துகொண்டு கடுக்காய்த் தூளையும் சேர்த்து 125. பலம் ஜலத்திற் போட்டுக் கொதிக்க வைத்து பிறகு 10 பலம் ஜலத்தை ஷை பிசினையும் அன்ன பேதியையும் அரைத்துச் சிறுகச்சிறுக கொதிக்கும் கடுக்காய் ஜலத்துடன் கலந்து கொதிக்க வைத்திறக்கித் துணிவேடு கட்டி வைத்து மூன்று நாளைக்குப் பிறகு வடிகட்டிப் புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இது மிகக் கறுப்பாயிருக்கும்.

Effect of Vegetarian Diet.

மரக்கரி ஆகாரத்தின் பலன்:—ஸ்த்ரீகள் வரவர புதிது புதிதான அநேக வ்யாதிகளுக்குள்ளாகிறார்கள். ஸ்த்ரீகள் ப்ரஸவகாலத்தில் வெகு பாடு படுகிறார்கள். சரியான ப்ரஸவமில்லாமல் தாறு மாறான ப்ரஸவங்கள் உண்டாகின்றன. ஸ்த்ரீகள் மாம்ஸத்தை விலக்கி மரக்கரிகளை மாத்ரம் புசித்துவந்தால் ப்ரஸவமும் லகுவாகுமென்றும் அதனால் தேகமும் புஷ்டியை அடைகிறதென்றும் விபக் என்ற ப்ர பல டாக்டர் அறிவிக்கிறார். மேலும் மாம்ஸம் புசித்து மகா உக்ரமா வ்யாதிகளினால் வருந்தினவர்களெல்லாம் மரக்கரிகள் ஸாப்பிட்டுவர குணமடைந்திருக்கிறாரென்றும் தெரிவிக்கிறார்.

Essentials During pregnancy.

பிரஸவகாலத்திற் தேவையான சில ஸாமான்கள்:—பார்லி யரிசிப் பொடி, கோதுமைரவை, வெள்ளைச் சாக்கரை, காப்பிப் பொடி பால், தேயிலை, சோப்பு, சுத்தமான துண்டுவஸ்திரங்கள், கத்திரி, சன்ன நாடா, சண்ற்பிரிடுவயன், விளக்கெண்ணெய் சிற்றாமணக்கெண்ணெய், தேன், கஸ்தூரி, பிராந்தி, க்ளாரல் அயிட்ராஸ், ஏர்கட்மருந்து, துர்நாற்றத்தைபோக்கடிக்க பெரியில் இவைகள்தாம்.

III

KITCHEN AND COOKERY.

சமையலறையும் சமையலும்.

1-வினா—வடகம் என்றால் என்ன?

விடை—அவல், நெற்பெரி, அரிசிமா, செவ்வரிசி, வரகரிசி, உளுத்தம்பருப்பு, காராமணி, இவைகளில்உப்பு, மிளகாய், கொத்தமலி, பெருங்காயம் முதலியவைகள் சேர்த்து செய்யப்படும் உனவு பதார்த்தம். இது செய்யும் முறையை பெரியோரிடத்து கேட்டு தெரிந்துகொள்க. இது வருஷத்தில் இரண்டு அல்லது மூன்று விசை செய்து வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டிய முக்கிய பாதார்த்தம். இதை விசேஷமாய் மாரிகாலத்தில் உபயோகிக்கலாம்.

2-வினா—ஊறுகாய் என்பது என்ன?

விடை—உப்பில் ஊறி அதிகநாள் நிற்கக்கூடியதாயும் ஆகாரம் புசிப்பதற்கு பெரும் சாதகமாயும் காய் பழம் இவைகளினால் செய்யப்பட்டதாயும் உள்ள ஒரு பக்குவவகை. கிச்சிலி, நாரத்தை, துருஞ்சி கிடாரை, எலுமிச்சை இவைகளின் பழங்களும், மாங்காய், நெல்லிக்காய் இவைகளும், இஞ்சி, மலை நன்னாரி முதலிய கிழங்குகளும் ஊறுகாய்க்குறிய பதார்த்தங்கள். இவைகளை தக்க பாத்திரங்களில் தகுமான உப்பு சேர்த்து, வெந்தயம், மஞ்சள், மிளகாய், ஏண்ணெய், கடுகு, பெருங்காயம் முதலிவைகளை தட்டி ஊறவைக்கவேண்டும். பீங்கான் சாடிகளே ஊறுகாய் போடுவதற்கு உத்தமமான பாத்திரங்கள். மட்பாத்திரங்களில் ஊறுகாய் போட்டால் ஊறுகாயிலுள்ள நீர் வற்றிகெட்டுப் போவதுடன் பூச்சி, புழு முதலியவைகளும் அதில் உண்டாகும். ஊறுகாய் போடும் விஷயத்தில் பெண்கள் மிக்க சாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டியது. ஊறுகாய்களை கையால் தீண்டாமல், அகப்பை முதலிய கருவிகளைக்கொண்டு எடுத்தல் வேண்டும். ஊறுகாயோடு சாடிகளை அடிக்கடி வெயிலில் வைத்துவிடவேண்டும். இராக்காலங்களில் ஊறுகாய் சாடிகளை திறத்தலும், ஊறுகாய்களை எடுப்பதும் கூடாது. அப்போதப்போது உபயோகத்திற்கு வேண்டிய ஊறுகாய்களை எடுத்துக்கொண்டு சாடிகளை செம்மையாக மூடி மெழுகு துணிகளால் அவைகளின் வாயைக் கட்டி வைக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் ஊறுகாய்கள் எப்பொழுதும் கெட்டுப்போகாமலிருப்பது மன்றி ஒரு வருஷத்திற்கு குறையாமல் நிற்கும்.

3-வினா—அப்பள மென்பது என்ன?

விடை—உளுத்தமாவினால் உப்பு நீர், சீரகம், பெருங்காயம் இவைகளை சேர்த்து பிசைந்து இடித்து சிறு உண்டைகளாக்கி, மரப்பலகையில் சிறு மர உருளைகளால் வட்ட வடிவமாய் உள்ளங்கை அகலத்திற்கு மேலாகவே செய்யப்படும். ஒரு வித பதார்த்தம். இதை நெய், எண்ணெய் இதுகளில் பொரித்ததும் தீத்தணலில் காய்ச்சியும் உபயோகிக்கலாம்.

அரிசி அப்பளம்—துவரம் பருப்புகாற அப்பளம், தளிவடகம் முதலியவைகளையும் அப்பளத்தைப்போல் உபயோகிக்கலாம்.

IV

LAW.

சட்டம்.

Wife's Maintenance and creditor's Attachment.

மனைவியின் ஜீவனாம்சமுட், கடன் கொடுத்தவர் ஜப்தி செய்தலும்:—ஒரு ஹிந்துஸ்த்ரீ ஒரு அவிபக்த ஹிந்துக்குடும்பத்தில் மானேஜராக இருக்கும் தனது புருஷன்மேல் ஜீவனாம்சத்துக்கு வ்யாஜ்யம் போட்டு டிக்ரீ வாங்கிக்கொண்டாள். இந்த ஜீவனாம்சம் குடும்ப ஸொத்துக்களிலிருந்து கொடுக்கும்படியாகத் தீர்ப்பாயிற்று. இந்த டிக்ரீக்கு முன்னால், புருஷனுக்கு கடன் கொடுத்திருந்த ஒருவர் கொடுபடவேண்டிய கடனுக்காக அதேஸொத்துக்களை ஜப்தி செய்திருந்தார். ஜீவனாம்ச டிக்ரீக்குப் பிறகு ஷை கடனுக்காக ஸொத்துக்கள் விற்கப்பட்டன. இந்த ஸொத்துக்களுக்கு யாருக்கு முன்பாத்யதை யுண்டென்றால் கடன் கொடுத்தவரைவிட அந்த ஹிந்து மனைவிக்குத்தான் முன்பாத்யதை அதிகமாக இருக்கிறது.

மதராஸ் ஹைகோர்ட், 1912ஆம் எஸ். எ. நம்பர் 1270.

Adoption by Widow.

விதவை ஸ்வீகாரம் செய்துகொள்வது:—மிதாக்ஷர சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஸந்தானமில்லாமல் இறந்துபோனார். இறந்து போவதற்கு முன் ஒரு புத்ரனை ஸ்வீகாரம் செய்துகொள்ளத் தமது மனைவிக்கு அதிகாரம் கொடுத்திருந்தார். அதன்படியே விதவை ஒரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். கொஞ்ச காலத்துக்கெல்லாம் ஸ்வீகார புத்ரன் ஸந்ததியில்லாமல் இறந்துபோய் விட்டான். அவனது மனைவி அவனுக்குப் பிறகு விரோடிருந்தாள். அப்படியானால், தகப்பனாருடைய விதவை அவருக்காக இரண்டாவது தடவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

* * * *

C. R. P. 1014 of 1912—10
1914 ஜூலை.

ஒரு விதந்துவினால் செய்யப்படும் நிலவிக்கிறய நடவடிக்கை சட்டவிரோதமென்றும் செல்லத்தகாதென்றும் தீர்மானமடையும் பொருட்டு ஒரு அனந்தரவார்ஸ தாரன் டிக்லரேஷன தாவாவில் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பை நிரணயிக்கும்பொருட்டு பிராதில் காட்டும் மவுண்டு துகையை அந்த நிலங்களை ஸ்வாதீனமடைவதற்மாக தாவா செய்தால் எவ்விதமாய் மதிப்பிடவேண்டுமோ அதற்குமேலாகக் குறிக்கக்கூடாது. அதாவது நிலத்தின் காலக்ரயத்தை காட்டக்கூடாது. மதராஸ் ஸிவில் கோர்ட் ஆக்ட் 14-வது பிரிவின்படியும் கோர்ட் பீஸ் ஆக்ட் 7-வது பிரிவு 5-வது கிளாஸின்படியும் நிலத்தீர்வையின் குந்துமடங்கு துகையை பிராதின் மவுண்டு துகையாகக் காட்டி அதற்குத் தக்க அதிகாரமுடைய கோர்ட்டில் பிராதைத் தாக்கல் செய்ய வேண்டும்.

சதாசிவையர், நேபியர் ஜட்ஜிகள்.
A. S. 319 of 1913-10. ஜூலை 1914.

ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனாம்ச தாவா செய்யும் காலத்தில் அவள் புருஷனுடைய சொத்து பாகமதிப்பை ஆதாரங்கொள்ள வேண்டுமேயொழிய புருஷன் இறந்தகாலத்தில் அவனுடைய விகிதத்திற்குறிய சொத்துபாகத்தின் மதிப்பைக் கவனித்து ஜீவனாம்ச துகையை நிதானிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

சங்கரநாயர், ஸ்பென்ஸர் ஜட்ஜிகள்.

V

EDUCATION.

வித்யா விஷயம்.

The strength of the wind.

வீசும்காற்றின்வேகம்:—ப்ரதேசங்களின் வீசும் காற்றானது ஸமனற்ற ஸீதோஷ்ணத்தால் உண்டாகிறது. உஷ்ணப்ரதேசத்திலிருக்கும் காற்று குளிர்ந்த ப்ரதேசத்திலிருக்கும் காற்றை காட்டிலும் மிகவும் இலேசானது. காற்றானது பல நிலைமைகளில் மணிக்கு இவ்வுளவு மைல் தூரம் செல்லுகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மணிக்கு ஏழுமைல் தூரம் செல்லுகிறதற்கு சந்தாமான காற்று என்றும், 14 மைல் தூரம் செல்லுகிறதற்கு கனமற்ற ஸாகமான காற்றென்றும் 21 மைல் செல்லுகிறதற்கு ஸ்திரமான நல்ல காற்றென்றும், 40 மைல் செல்லுகிறதற்கு கடுங்காற்றென்றும், 60 மைல் செல்லுகிறதற்கு கடும்புயல் காற்று என்றும், 80 மைலுக்குப்ரசண்டமாருத மென்றும் பெயர்கள் வழங்குகின்றன.

Village Education.

க்ராமப்படிப்பு.

ஸர் பரெடரிக்லேலி மாஜி மத்ய மாகாண சீப்கமிஷ்னர்:—இந்தியாவை நன்றாய் ஆளுதல் என்னும் புஸ்தகத்தில் க்ராமப் படிப்பைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லா மாகாண கவர்மெண்டுகளும் குடிகளுக்குச் சாதாரணப் படிப்பை தாராளமாய்ச் சொல்லிவைக்கக்கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் செலவு விஷயந்தான் கஷ்டம். மராமத் இலாகா மூலமாய்ப் பள்ளிக் கூடங்களுக்கு சட்ட திட்டமாய் கட்டிவைக்கும் பெருங் கட்டிடச் செலவுகளை யொழித்தால் கல்விக்கு வேண்டிய பணம் வெகு சுலபமாய் கிடைக்கும். ஒவ்வொரு கிராமத்துக்கு வேண்டிய பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் வெகு சுலபமாய்க் கட்டிவைக்கலாம். சிறுவர்களின் பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்களை அவர்கள் தாய் தந்தையர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் வீடுகளைவிட பல மடங்கு மேலானதாகக் கட்டிவைப்பது வெகு அறிவுடைமையாகாது.

Women's Education in ancient India.

இந்தியாவில் ஸ்த்ரீகளின் படிப்பு:—"பெண்கள் ஆண் பிள்ளைகளைப்போல முறையாகக் கல்வி கற்றுப் புருஷர்கள் கூட்டத்தில் தடையில்லாது கலந்து அவர்களோடு மேலான விஷயத்தைப்பற்றி சம்பாஷணை செய்தார்களென்றும், இதிஹாஸங்களால் அறிகிறோம். ஆயினும் வரவர அவர்களது கல்வி குறைந்து காளிதாஸாதி கவிகள், ஸாகுந்தலம் முதலிய நாடகக் கிரந்தங்கள் செய்த காலத்தில் அவர்கள் பிராக்ருத பாஷையில் வாசித்தலும் எழுதலுமாயிருந்ததுமன்றி கவனஞ்செய்யவும் கற்றிருந்தார்களாயினும், சம்ஸ்கிருதப் பயிற்சியில்லாராயினர். கி-பி பதினோராம் நூற்றாண்டாகிய அவ்வளவு சொற்ப காலத்திலும் கூட் ஸ்த்ரீகள் புருஷர்கள் சங்கத்தினின்றும் விலக்கிவைக்கப்பட வில்லையென்பதும், ஒரு தாம்பிர சாசனத்தால் விளங்குகிறது. அச் சாஸனத்தில் தக்ஷிணதேசத் தரசரொருவருடைய மனைவி அந்த ராஜ்யத்திலும், அடுத்த ராஜ்யங்களிலும் உள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் முன்பு மிக இனிமையாகப் பாடியதற்காக அவள் கணவன் பிராமணர்களுக்குச் சில பூமியைத்தானஞ்செய்ய அவளுக்கு அனுமதி கொடுத்த விஷயம் கூறப்பட்டிருக்கிறது." ஸர்ராமம்ருஷ்ண பந்தர்க்கார்.

VII
WOMAN'S WORLD.
ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

Milk Bathing.

பால் ஸ்நானம்:— அமெரிக்காவி லுள்ள பல ஸ்த்ரீகள் ஸ்நானத்திற்கு பாலை உபயோகித்து வருகிறார்கள். நியூயார்க் என்ற நகரில் பால் ஸ்நான கட்டடங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. பால் ஸ்நானம் நிகழ்தல். அழகை அதிகரிக்கச் செய்கிறதென்று அவர்களுக்குள் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதாம்.

ஸெவஸ்டபூல்கிக்கு 600 முலேக்காம் புகலூர், திமிக்கு 12,000 சண்டலும், கம்பனிப்பூச்சிக்கு 15,000 கூற்றுப்பு கும் தினாரங்களுமிருக்கின்றனவாம்.

French Women.

ப்ரெஞ்சு ஸ்த்ரீகள் :— ப்ரெஞ்சு ஸ்த்ரீகள் புருஷர்களுக்கு பலவிதமான கைகளிலிருந்து பணிவிடைகள் செய்கிறதற்கு ரஸ்வும் ஸந்தோஷமுமாயிருப்பார்களாம். மிகுந்த சாஸ்த்ரப் படி நடக்கிறவளான புருஷனின்பாதிசரீரம் என்றதிலோல்ப்ரெஞ்சுதேசத்ஸ்த்ரீயினிடத்திலும் குடிகொண்டிருக்குமாம். ஸ்த்ரீயை விட்டு புருஷன் ஒரு காரியம் செய்யமுடியாதாம். ஸ்த்ரீகளின் படிப்பிலும் மேலான அறிவினாலும், செல்வாக்கினாலும் புருஷனை கல்லாவிட்டில் ப்ரெஞ்சுஸ்த்ரீ அவனுக்குப்புகழ்ந்து மேட முயற்சியெடுத்துக்கொண்டிருப்பார்களாம். ஸ்த்ரீயில்லாவிட்டால் புருஷன் இருக்கிற இடமே தெரியாதாம். புருஷனை முன்னுக்குக்கொண்டு வருவதும் அழிப்பதும் ஸ்த்ரீயே. ஸ்த்ரீயில்லாவிட்டால் மோக்ஷம் கிடையாது. என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். புருஷர்களும் ஸ்த்ரீகளுக்கு விசேஷமாகப் பணமளிக்கிறார்கள்.

Nurse's Characteristics.

நர்ஸ்களின் குணாதிசயங்கள்:— நர்ஸ்களின் அழகும் தைர்யமாகவும் மற்ற இடமாகவுமிருக்கவேண்டும். தன் தேகத்தை ஜாக்ரதையாகப்பார்த்துக்கொள்ளவேண்டும். நோயாளி எவ்விதமிலைமையிருந்தாலும் அவனுக்கு வேண்டிய உதவி செய்யுதயாராயிருக்கவேண்டும். சிரித்த முகத்துடன் குளுமையாய் நோயாளிகளிடம் பேசவேண்டும். நாகள் கொடுப்பு முதலிடம் இருந்தால் அவள் அந்த வேலைக்குத் தகுதியற்றவள். டாக்டரிடமும் நோயாளியிடமும் நடக்கவேண்டும். நர்ஸ்களின் தொழில் மிகவும் ப்ரயாசமானது, மேன்மையானது. பொறுமை புண்ணியர்களே இதில் கவலை பேர் பிரியப்படுகிறார்கள்.

Cattle slaughters.

கல்கத்தா, பம்பாய், மதராஸ் இந்த மூன்று முனிஸிபாலிடிகளிலும் 1912-ஆம் ஸம்வத்ஸரத்தில் மனித உபயோகத்திற்காக 1,215,438 ஆடுகளும், 12,872 மாடுகளும், 110,24 கன்றுகளும், 2860 பன்றிகளும் கொல்லப்பட்டனவாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

Triplicane Gosha Hospital.

ட்ரிப்லிகேன் கோஷா ஹாஸ்பிடல் :— 1913-வருஷாரம்பத்தில் ட்ரிப்லிகேனாவில் 1858ல் ஸ்த்ரீ வ்யாதியஸ்தர்கள் சிகித்ஸை செய்யப்பட்டார்களும் ஸ்வர்களில் 13501 இந்து ஸ்த்ரீகளும், 5080 முகமதியஸ்த்ரீகளுமுண்டாயிருந்தார்கள். 1913-ஜூன்மாஸம் வரை ஸேவகர்கள் 913; 1912-ஜூன்மாஸம் ஸேவகர்கள் 996; இந்த 1913 ப்ரஸவம் ஸேவகர்களில் 172 ஸ்வாபாவிக ப்ரஸவம் 18 ஸேவகர்கள் ஸ்ரீகாகரணம் ஆபரேஷனாலும் ப்ரஸவமாயிருக்கிறார்கள். 21-ஸேவகர்கள் மரணமாகப்போய்விட்டார்கள்.

VII
FUN.
வேடிக்கை.

A Marriage Market.

ஒரு கல்யாணச் சந்தை:—ஸிம்லாவுக்கு ஆறுமைல் தூரத்தில் உள்ள வலியென்னும் ஊரில் வர்ஷந்தோறும் ஒரு சந்தை கல்யாணச் சந்தை யொன்று நடக்கிறது; அங்கே கல்யாணங்கள் முடித்து வைக்கிறார்கள். மனைவிகளை மாற்றிக்கொள்ளவும் கூடுமாம். ஒரு மனைவியின் விலை சராசரியில் 80 ரூபாயாகும். அந்த ப்ரதேசத்தில் ஸ்த்ரீ ப்ருஷர்கள் ஒருவரை யொருவர் தன்னிஷ்டப்படியே தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்களாம்.

இந்த மாதிரியான கல்யான மார்க்கெட் (சந்தை) பேபிலோன் என்னும் பட்டணத்தில் முன்காலத்தில் நடந்து வந்ததாம். பேபிலோன் என்னும் பட்டணம் அஸியதுருக்கியில் உள்ள ஒரு பட்டணம். அது பூர்வீக காலத்தில் மிகவும் ப்ரபலமடைந்திருந்தது.

அந்த கல்யாணச்சந்தையில் நிறைய யௌவனமுள்ள பெண்களெல்லாம் கொண்டுவந்து ஏலம் போடுவார்களாம். மிகவும் அழகுவாய்ந்த பெண்ணை முதலில் ஏலம் போடுவார்கள். யார் அதிகப்பணம் கொடுக்கிறார்களோ அவன் அந்தப்பெண்ணை யடைவான். அந்தருப் பிறகு சற்று அழகு குறைவாயுள்ள பெண்ணையும் அதற்குப் பிறகு படிப்படியாக குறைந்த அழகுள்ள ஒவ்வொரு பெண்ணையும் ஏலத்தில் விற்பார்கள். அழகு மிகவும் குறைவானவர்களுக்கு 'தளுக்கு' கொஞ்சமுமில்லாதவர்களுமான பெண்களோ மிகவும் ஏழையாயிருப்பவர்கள் அடைவார்கள். விலைபோகாத பெண்களோ பின்னாளைக்கு இலவசமாகக் கொடுத்து விடுவார்களாம்.

Aerial Train.

அந்தரத்தில் ஓடும் வண்டித்தேர் :—பூமியில் எவ்வித ஆதரவுமில்லாமல் ஆகாயத்தில் செல்லக்கூடிய வண்டித்தொடர் ஒன்றை பாச்செலெட் என்னும் ப்ரெஞ்சுக்காரர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். மின்சாரத்தின் உதவியால் செல்லும் இந்த வண்டித்தொடரின் பாகங்கள் முழுவதும் அலுமினியம் என்னும் உலோகத்தால் செய்யப்பட வேண்டுமாம். இதற்கு உண்டாகும் செலவுகள் ரயில் வே கம்பனிகளுக்கு ஏற்படும் செலவுகளை விட மூன்றிலொருபங்கு குறைவாகவே ஏற்படுமென்று தெரியவருகிறது. இந்த வண்டி மணியொன்றுக்கு முந்நூறுமைல் வீதம் ஓடுமாம். இந்த வண்டிகளில் முதலில் தபால் மட்டும் கொண்டுபோகலாமென்று கருதப்படுகிறது. இதைக் கண்டுபிடித்தவர் இதற்காக தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டிருக்கிறாரென்று தெரியவருகிறது.

* * *

வக்கீல்.—உன் தகப்பனார் சாரும்போது உன்னிடம் என்ன சொல்லிவிட்டு இறந்தார்.

சாட்சி.—என்னல்லாமோ சொன்னார்.

வக்கீல்.—அவர் கடைசியாகச்சொன்ன வார்த்தை என்ன?

சாட்சி.—அது தங்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாதே.

வக்கீல்.—என்னால் ஸம்பந்தம் இடையாது. இந்த கோர்ட்டிலிருக்கிறவர்களுக்கெல்லாம் ஸம்பந்தம் உண்டு. சொல்.

சாட்சி.—உனக்கு எதாவது வழிக்கு நீரகேண்டுமானால் பஞ்சாயத்தாரிடம் நீர்த்துச்சொல். கோர்ட்வழி போகாதே.

VIII
EVENTS OF THE MONTH

மாஸ வர்த்தமானம்.

ஜூன், ஜூலை 1914.

ஜூன்மீ 20-ந்தேதி:—இன்று கோயம்புத்தூரில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் கூடிற்று. ஆனரபிள் ஸ்ரீனிவாஸ சாஸ்திரி அத்தாஸனம் வகித்து ஸ்த்ரீகளின் நிலைமை, ஜாதிமுறை, விவாக வயது, வரகல்கம் முதலிய விஷயங்களைப் பேசினார்.

22-ந்தேதி:—இன்று சக்ரவர்த்தி பிறந்தநாள் கொண்டாட்டம் நிந்தியாவில் உத்யோகமுறையில் குதூஹலமாகக் கொண்டாடப்பட்டது.

ஜூன்மீ 26-ந்தேதி:—லண்டனில் ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகள் பழைய மாளிகை ஒன்றைக் கொளுத்திவிட்டார்கள். மேலும் வெஸ்மினிஸ்டர் கோயிலுள்ள மகுடாபிஷேக நாற்காலியை வெடிகுண்டினால் சேதப்படுத்தி விட்டார்கள்.

ஜூன்மீ 28-ந்தேதி:—ஆஸ்டிரியாவின் இளவரசரையும் அவரது மனைவியையும் ஸராஜிவோ என்ற பட்டணத்தில் வெளர்ஸ்யாதேசத்து மாணாக்கன் சுட்டுக் கொன்றுவிட்டான்.

ஜூலைமீ 11-தேதி:—லேடி ஹார்டிஞ்சு லண்டனில் தமது வீட்டில் ஆபரேஷன் செய்யப்பட்டு இரண்டு நாளைக்குப் பிறகு அஸௌக்யமடைந்து இன்று இறந்துபோனார்.

ஜூலைமீ 18-ந்தேதி:—சென்னை மஹாராணி ஆபேத ஸ்கூல் ஆனரரி ஸெக்ரடரி விடுமுறை நாள்கழித்து முதன்முதல் இன்றுதான் திறக்கப்பட்டது.

ஜூலைமீ 25-ந்தேதி:—இன்று மாலை 4-மணிக்கு ஸ்த்ரீ அபேத ஸ்கூல் நடந்த சங்கத்தில் ஒரு பொது மீட்டிங் நடந்தது. லேடி ஹார்டிஞ்சு மரணமடைந்ததைக் குறித்து பேரி லார்ட் ஹார்டிஞ்சுக்கு அநுதாபபத்திரம் அனுப்பப்பட்டது.

ஜூலைமீ 28-ந்தேதி:—ஆஸ்டிரியா ஸெர்வியாவுடன் சண்டைசெய்வதாகத் தீர்மானித்துவிட்டது.

ஜூலைமீ 31-ந்தேதி:—ருஷ்யா ஜெர்மியாவுக்குத் துணைசெய்வதாக நிச்சயித்து ஆஸ்டிரியாவுடன் யுத்தம்செய்வதாகத் தீர்மானித்துவிட்டது.

சாவி.—இன்னேரம் எவ்வுலகத்தில் இருக்கேன். என் செய்கை எவ்வளவு புத்தியீனமானது. இருவர் அறிந்து கொண்டார்களே. குணபூஷணத்தின் மனைவியாய் நிச்சயிக்கப்பட்ட நான், ஐயோ! இவ்வெண்ணம் என்னை எதோ உறுத்துகிறதே. அவர் என்னை நினைப்பார்—ஹா! இவர் இப்படி எமாற்றி என் உளமறித்தாரே (உடல் சிலிர்க்கிறாள்) ஆம். கடைசியில் ஜெயம் பெற்ற அம்முகம், என் ஆயுளில் மறக்கத்தக்கதோ. என்ன அன்பு! வெகு மும்மாமாய் வளர்த்து செழித்தோங்கும் அன்புக்கொடியை வெகு கொரமாய் கடித்து சின்ன பின்னம் செய்ய வந்த குணபூஷணம் அணில் கூற்றென கார்த்திருக்கின்றதே. கொடியே, உன் கதி அதோ கதிதானே. (மௌனம்) ஓ! இவ்வளவு கபடு வாய்ந்தவர்கள் கூட இராகியம் வைத்துக்கொள்வது ஆச்சரியமே. பூஷணம் நாமல் வஞ்சகன் என்று வெளியிடவில்லை. இவரோ இங்கிர்பாக்கியை.. தனக்கு கிட்டாள் என்று யாரை உன் பல மறியாதது போல தன் வலிமை யறியாமல் வருந்துகிறார். இப்பாடலில், தேவலமாலை என்னை, இவ்வளவு அழகாயும் மேன்மை ஒலிக்கும்படிக்கும் எழுதி யிருக்கிறார் (சித்திரத்தை உற்று கவனித்த வண்ணம் மண்டலத்தில் போயுட்காருகிறார்.)

தூய.—(தன்னுள்) என்னை இகழ்ந்தாலும் என்னால் எழுதப்பட்ட சித்திரத்தையாவது புகழ்ந்தாளே. அது செய்த பாக்கியம் கூட எனக்கில்லை. சாவித்திரி. என் மனதில் மாணிக்கமே. உன் கடுஞ்சொற்களைச் செவியில் கேட்டும் என் இருதயம் பிளந்து போகாமல் இருக்கின்றதே. என் நெஞ்சு (கவனிக்கிறார்) சாவி. மெதுவாய் பாடுகிறாள்.)
கல்லா.—எதோ பாடுகிறாளே.

ராகம் சாவேரி. தாளம் சாபு.

பல்லவி.

மானிடனுய் ரதி மனாளனே இந்த
மானிலத்திற்றானே யானறியேன்.

அனுபல்லவி.

வானில் வாழ் மதியிவன் வதனம் தனைக்காணில்
தானிவளென்றே தானுரைத்தல் வேண்டுமோ.

சரணம்.

தானிலத்தென் போன்ற கன்னியர் இவருட
தயனத்தனைக்காணில் கனவிலும் கனவிலும்
பாசமுற்று மனத்துள் பூஜை செய்வாளென்பதும்
பொய்யோ, மணந்திடாமல் ஐயோ, யானுயிர்த்திடவோ.
முறுவலொன்றுலென் மனம் முற்றிலுங் கலக்கியே
கருவில்லையுடைய காமனுக்கிலக்காக்கிமீய.

ஐயோ. மண நாளுங்குறிப்பிட்டபின் இவ்வாறு எண்ணலாமா (முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு சாய்கிறான்.) என்ன முயன்றாலும் இவ்வெண்ணம் என் மனத்தைவிட்டகலவில்லையே. (குணபூஷணம் வருகிறான்.)

குண.—(தன்னுள்) ஐயோ, என்னால் சகிக்க முடியவில்லையே. இதுவே நரகம். வேறு வேண்டியதில்லை. (வெளி) சாவித்திரீ. (சாவித்திரீ திடுக்கிட்டெழுந்து நிற்கிறாள்)

சாவி.—(தன்னுள்) ஐயோ இவர் என் செய்கைகளை கவனித்திருப்பாரோ, அப்படி யிருப்பின் என்னை என்ன நினைப்பாரோ. இவர் கேள்விக்கப்படி பதில் சொல்வது (தலைகுனிகிறாள்.)

குண.—சாவித்திரீ, [illegible] நான் வந்தேன். ஏன் ஒருவித [illegible]கிறாய். [illegible]ற்போல கண்கள் சிவந்திருப்பதேன். (சாவித்திரீ [illegible] பெருக மௌனமாயிருக்கிறாள்) உன் தந்தை இஷ்டப்படி வாக்களித்தவன் சில நாள்களில் மணமகளாகப்போகும் நீ—என்னைக்காணும் போதெல்லாம் யாதுமறியாதவள் போல விலகிப்போவதற்கும், தனிமையில் இம்மாதிரி வருந்துவதற்கும் காரணம் என்ன? உண்மையைச்சொல்—சாவித்திரீ என் உடல்பொருள், ஆவியனைத்தினையும் நானுனக்கொப்பித்திருப்பது நீ யன்றேல் எத்தகைய பதவியும் பொருளும் எனக்கு துன்பத்தையே தரும் என்பதையும் உன் தந்தை போலவியும் அறிந்திருக்கிறாய்—உண்மையைத்தெரிவி அது என் மனதைச்சுடக்கூடிய தாயிருப்பினும் என்னிருதயத்தைப் பிளந்துவிட கூடியதாயிருப்பினும் அஞ்சாமற் சொல், ஏனெனில் நான் எவர்க்கும் தீங்கிழைப்பதில்லை: மேலும் இவ்வுடலைவிட்டு உயிர் நீங்கும் வரை—உன் மனம் வருந்தும்படியான செய்கையை, கடவுளறிய, நான் செய்வதில்லையென்று பிரமாணமாய் சொல்கிறேன்—உன் கோரிக்கைக்காக இவ்வற்பமாகிய என் உயிரையும் விடத்தயாராயிருக்கிறேன். இது சத்தியம்—உன் சந்தோஷமே எனக்குப் பேரின்பம்...நீ கண்ணீர் சிந்துவது என்ரத்தம் சிந்துவதுபோல் என் மனம் எறிகின்றது—இது உண்மையென்பதை ஈசன் அறிவான—நான் அருகில் இருக்க நீ யழுவானேன்—இப்படி உட்கார்ந்து பதில் சொல். (சாவித்திரீ கண்ணைத்துடைத்துக்கொண்டு உட்காருகிறாள்) சாவித்திரீ, சில நாள்களாய் நீ என்னைக்காணாது ஒளிந்துகொண்டு வருகிறாய. அல்லவா உண்மைதானே (சாவித்திரி தலை யசைக்கிறாள்) (பெருமூச்செறிந்து) ஹூம்:—ஆனால் என்னைக்கண்டால் அருவருப்பாயிருக்கிறதா, மனதில் உள்ளதைச்சொல்லிவிடு.

சாவி.—நான் அருவருக்கும்படி இதுவரை தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே.

குண.—ஆனால் இனிமேல் செய்வேன் என்பது உன் எண்ணமோ, சாவித்திரீ நீ இப்படி எண்ணினால் நம் வாழ்வில் எப்படி இன்பமுண்டாகும்.

சாவி.—(எழுந்து) ஐயா தாங்கள் வற்புறுத்துகிறபடியால் சொல்லிவிடுகிறேன் ஆதி முதலே. எனக்கு விவாகத்தில் திருப்திகிடையாது. தங்களை மணம் செய்துகொண்டாலும் தமக்கு சுகமே கிடையாது. எனக்கும் இன்பம் இராது. தாங்கள் வைத்திருக்கும் விசுவாசம் உலகம் மெச்சத்தக்கதே. விலை பெறாதது ஆயினும் அதை மெச்ச எனக்குத்திறமை வாய்க்கவில்லை. பதவியிலும் வீரத்திலும் செல்வத்திலும் தங்களைப்போன்ற உயர்ந்த மகான்களே எம்போன்றவரிடம் இத்தகைய அன்பு வைப்பது சரியல்ல. தங்கள் சொல்லை நான் நம்புகிறேன். தாங்கள் சொல்வது உண்மையாகில் என்னை மணம் செய்து கொள்வதை நிறுத்திவிடவேண்டும்—உங்கள் அன்புக்குப்பிரதியாக நான் மற்றெவரையும் வேண்டுமாயின் மணம் செய்து கொள்வதில்லை. (குமாரம் தூரத்தில் வருகிறார்.

குண (பெருமூச்செறிந்து கண்ணை மூடிக்கொள்கிறார். சிறிது நேரங்கழித்து.)'

சாவித்திரீ. என்பொருட்டு நீ மணம் செய்து கொள்ளாமலிருக்கவேண்டாம்—உன் மன நிலையை மாற்றி உன் சத்தியத்தையும் பிறழச்செய்த ரகுநாதனையே மணந்துகொள். அவனும் எனக்குயிருக்குயிரான நண்பன் தான் (சாவித்திரீ திடுக்கிட்டுப்பிறகு மூர்ச்சையாகிறாள். பூஷணம் ஜலத்தை தெளித்துவிட்டு அவள் முகத்தை உற்று பார்த்து கண்ணீர் வடிக்கிறார். குமாரம் ஓடி வந்து பெண்ணைத்தூக்கி மூர்ச்சை தெளிவிக்கிறார்.

குமா.—என்ன காரணம் இப்படி மூர்ச்சையாக.

குண.—(தீனமான குரலில்) விவாக விஷயமாய் ரகசியமாயிருக்கவேண்டுமென்பதற்குண்டான காரணமேதான்.

குமா.—என்ன, எனக்கு விளங்கவில்லையே.

குண.—அவள் மனம் மாறிவிட்டது. அவளிடம் பேசினேன். என்னை மணப்பதில் விருப்பமில்லை யென்று கண்டிப்பாய் கூறினாள். சூபரண்டண்டு ரகுநாதத்திடம் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒப்புவிக்க நிச்சயித்திருப்பதை நானறிந்து சுட்டிக்காண்பிக்க மூர்ச்சையடைந்தாள்.

குமா.—ஹா (பிரமித்து மௌனமாயிருந்து). நீங்கள் வருந்தவேண்டாம். அவள் குழந்தை தன் மனதே தனக்குத் தெரியாதவள், ஏதோ புத்திதடுமாறியிருக்கின்றாள். இதுவரை, என் இஷ்டத்துக்கு விரோதமாய் அவள் நடந்ததில்லை. தங்களையே மணம் செய்து கொள்ளச் செய்கிறேன்.

குண.—(பெருமூச்சுடன்) எனக்குத் தோன்றவில்லை. அவளுக்கு விருப்பமில்லாத விஷயத்தில் தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லை. அவள் தங்களுக்கு குழந்தைதான் என்றாலும் அறிவிற் குழந்தையல்ல. என்மேல் அன்பில்லாததும் தவிர பிறர் மேல் அன்பு கொண்டவளை. நான் மணந்து அனுபவிக்கும் இன்பம் துன்பமே (சாவித்திரீ மூர்ச்சைதெளி கின்றாள்.

சாவி.—ஹா...அம்ம...(கண்ணீர் மல்க மிரள மிரள விழிக்கின்றாள்.)

தும.—கண்ணே. சாவித்திரீ. உனக்கென்ன செய்கிறது. இங்கே வா உட்கார்.

சாவி.—அப்பா! எனக்கு மிகவும் தலைவலியுண்டாயிருக்கிறது நான் போகிறேன்.

தும.—அதிருக்கட்டும். கொஞ்சம் இரு. இந்தா உட்காரிப்படி.

சாவி.—(தன்னுள்) விதியே, விதியே, நான் இன்று விழித்த முகம் யார் முகமோ (உட்கார்கின்றாள்).

தும.—(குமாரத்திடம்) தனி இப்போது அவள் மிகவும் களைத்திருக்கிறாள். அவளைத்தொந்தரவு செய்யவேண்டாம்.

தும.—(குணபூஷணத்திடம் தனி) மூளையிற் கிள்ளி யெறிந்தால் தான் பலனுண்டு. (வெளி) இங்கு பார் சாவித்திரீ—நீ உன் கௌரவத்துக்கும் என் அந்தஸ்துக்கும் ஈனமுண்டாகும்படி பூஷணத்தை வேண்டாமென்று மறுத்து ரகுநாதத்தை விவாகம் செய்துகொள்ள இஷ்டமென்று சொன்னதுண்டா. குணபூஷணம் மகிமை தங்கிய வீரபுவாயினும் இவ்விஷயத்தில் அவர் கூறியதை நம்ப முடிய வில்லை. நீ சொல்லம்மா—உண்மையை.

சாவி.—(தன்னுள்) என்னஸாகஸம் என் தகப்பனையை அழைத்து வந்திருக்கிறார் (தன்னெண்ணம் நிறைவேற்ற) பூஷணம் நீர் என்ன தந்திரம் செய்தபோதிலும் என்னையடைவது முயற்கொம்புதான் (வெளி) மெதுவாய்தான் அப்படிச் சொல்லவில்லையே.

தும.—மாட்டாய், குழந்தை முதல் உன் குணத்தை நானறியேனோ. தீரனும், செல்வவானும் நிகரற்ற பதவியும், கீர்த்தியுமடைந்த இவரைவிட்டு—பாதி உயிருமாக அபாயத்திலிருக்கிற அனுதையான ரகுநாதத்தை சீமாட்டியான நீ விரும்பினையென்றுலகத்தையார் நம்புவார்.

சாவி.—முற்கூறிய யாவற்றிலும் அன்பே உயர்ந்தது என்பவர் இதை நம்புவார். அத்தகைய அன்பின் வலிமையை நன்கறிந்தோர் தாம் கூறிய ஏழ்மையை ஓர் பொருட்டாக மதியார். எல்லாம் குறைவுறப்படைத்த வர்க்கு வேறு எத்தனையோ கன்னியர் இசைவார். ஏழ்மையுற்ற அனுதைக்கே உயர்ந்த கன்னியர் இடைக்கிடார் பிராணபாயத்தில் இருந்தும் அன்பு வற்றாதவன் தலே வரிப்பதற்கு உத்தமமானவர். மேலும் போலீஸ் உத்தியோகத்திலிருந்தும் நீயகுணங்களற்ற அனுதைக்கிரங்கி கண் முழு ஊக்கத்துடனும் அபலையை கார்த்துவந்தவர் யார் அப்பா தாங்களே அவர் கேஸ் நடத்தி அந்த ஜமீன்தாரை நியாயத்துக்குகொண்டு வந்ததைப்பற்றி அடிக்கடி புகழ்ந்து பேசிவிட்டு இப்போது புகழ்கின்றீர்களே.—நான் இவரை மணக்க சம்மதமில்லை யென்று சொன்னது உண்மையே. மற்றது அவராக ஊகித்திருக்கின்றார்.

தும.—சாவித்திரீ நீ பெண் சுதந்திரமற்றவளென்பதை யோசிக்காமல் உன்கடமையையும் மறந்து பேசுகின்றாய்.

சாவி.—அப்பா நான் அவைகளை யறிந்தவளே. அவர் என் மனதில் உள்ள உண்மையைக் கூறவேண்டுமென்று வற்புறுத்தியதால் வெளிவிட்டேன்.

தும.—(கோபத்துடன்) உன்னையொரு பொருட்டா யெண்ணிக்கேட்டது என் புத்திஹீனம். தகப்பனுக்குள்ள சுவாதீனப்படி எனக்குச் செய்யத்தெரியும் போ.

சாவி.—(பெருமூச்சுடன்) இதற்கு என்னை நிறுத்திச்சொல்வானேன்: தெரியாதா உலகத்தை சீர்திருத்தக்காரரின் நடபடிக்கை. ஆள்வோர் ஆளப்படுவோர்க்கு சுயாதீனம் கொடுப்பதில்லையென்று மனதில் உறுதிசெய்து கொண்டே சீர்திருத்தியின் பொருட்டு அடிமைகளை வஞ்சிப்பது சகஜமே. அதை நம்பிய அடிமைகள் என் கதியையே அடைகிறார்கள். (போகிறாள்).

தும.—(உரக்க) நீ ஒரு காலும் அவனை யடையப்போவதில்லை உனக்கு க்ஷேமமுண்டாகவேண்டுமானால் அவ்வெண்ணத்தை விட்டுவிடு.

சாவி.—(மெதுவாய்) அது இருக்கலாம், அது இருக்கலாம். உம் எண்ணமும் நிறைவேறப்போவதில்லை. ஒருவேளை என் அருமைத் தந்தையே என்னை எதிர்க்கலாயிற்றே. என்தலை சுழல்கிறது. (போகிறாள்.)

தும.—தங்கள் எண்ணம் நிறைவேறுது. அவள் மனமாவது களிக்க அவனை ரகுநாதத்துக்கு மணம் செய்து விடுங்கள்.

தும.—தங்கள் மனமெறய இம்மணம் இனிதாய் நிறைவேறுமா—நிறைவேறினும் உயிர் நிலையில்லாதவளுக்கு மனையியாய் கொடுக்க என் மனம் ஒப்புமா.

தும.—அதைப்பற்றி தாங்கள் கவலைப்படவேண்டியதில்லை. ஏற்கனவே அவன் உயிருக்கும் வாழ்க்கைக்கும் நான் உத்தரவாதியாக இருக்கிறேன். அவற்றிற்கு நான் ஜாமீன்: நீங்கள் எனக்கு மணம் செய்வித்தாலும் என் மனம் ஒப்பாது. வாழ்க்கையில் இன்பமுமிராது. என் மனமறுத்து போகும்படியிருந்தாலும் சிரமப்பட்டு அவ்வாசையை அகற்றிவிட்டேன். ரகுநாதம் இது தெரிந்தால் மறுத்து விடுவான். அவன் என் கட்டையே பெரிதாக கருதுபவன். அப்படி நேர்ந்தால் எங்கள் மூவர் வாழ்க்கையும் இன்பமற்றுப்போகும்.

தும.—அப்படியாயின் நான் அவனிடம் தெரிவித்து. இவளுக்கு புத்தி வருவித்து உங்களையே மணம் செய்து கொள்ளும்படி செய்கிறேன் பாருங்கள் (போகிறார்).

தும.—[illegible]சாரதரிசனத்துக்காரர்களோடு தாவர்த்த இவரும் காரியம்வரும் போது அந்தாளாலத்துக்கு வந்துவிட்டார். சொல்லுதல் எளிதாம், அரியது அந்தாளாலத்துக்கு வந்துவிட்டார். சொல்லுதல் எளிதாம், அரிய வாம் சொற்படி செய்தல். இவர் மூடத்தனமாய அவனிடம் உண்மையைச்

சொல்லி ஏதாவது தீங்கு நேரிடப்போகிறதே. சாவித்திரியும் துக்கத்தில் ஆழ்ந்து தவிப்பாள். நான் ஒருவன் மனம் நொந்து வருந்துவது போதாதா. என் இருதய வாலியும் துன்புறவேண்டுமோ? சாவித்திரீ நீ என்னை உயிருடன் நரகத்தில் வீழ்த்தியதற்கு கண்டனை உன்னை அன் நரகத்தினின்றும் தப்பு விக்கிறேன். ஐயோ நான் மனம் புண்பட்டு அமைதியாய் ஒதுங்கியிருக்கவேண் டிய சமயத்தில், என் புண்ணேக்கிளறியே மற்றவர்க்கு நன்மை செய்யும்படி நானே முழு முயற்சி செய்யும்படி ஏற்படுத்தினுயே தெய்வமே. இதுவோ உன் லீலையாடல், நான் பிறப்பதும் இருப்பதும் கடமைக்காகவே யன்றி இன்பத்துக்காகவல்லவே (மௌனம்) பெருமூச்செறிந்து ஐயோ சாவித்திரீ (பாடுகிறான்) உன்னை.

இன்பத்தினெல்லையா யெண்ணி மகிழ்ந்தேனே
துன்பத்தலை வியாத்தோன்றியதால் நொந்தேனே
உடலே உயிரே நடுகா யகமே
கடலே றனைய கெடுவாள் விழியால்
சுடலா னுய்ந்த அடமாந் தீயினுல்
சடலம் வெந்தேன் மடமா தரசே.

போகிறான்.

அங்கம் II. களம் III.

இடம் மலையின் மேல் ஒரு அகன்ற பாதை.

தாசி சித்தாணியும், தாய்க்கிழவி யோகாம்பாளும்.

யோகா.—என்ன மொரச்சுகிட்டே போகுது. வேணுமா என்னமா வது பிள்ளா.

சித்தா.—என்ன சும்மா இங்கை பண்ணாத்தைலிட கொண்ணுடாத்தா. என்னேப்புருசனுடு சேர வெட்டாமே அடிச்சது நீதானே. நயை நகை என்னு எனக்கு என் ஆசை தானு சேவல் முசலுக்கிறது சமீதார்வரைக்கி வித்தியாசம் பாராமே என்னை அனுப்பிறதே பாரேன் வாய்னையை தலையிலே கொட்டி தலையெல்லா வலிக்குது. ரவைக்கி சட்சேரி மண்ண முடியாதாத்தா போதும் இத்தனே வருசமாய் நிண்டாடியாச்சு.

யோகா.—சே, சின்னக்கருதெ. சும்மா கெட ஒக்காத்தானே இதெ ல்லா இண்னேக்கி இன்னிவட்டரு அத்தரு பூகரு வா யிருவத்தைஞ்சு கொடுத் தாரு. நம்ம சாதிலேருந்தாக்கி. இதெல்லாம் சோக்கா கிடைக்குமா.

சித்தா —வேண்டவே வேணும் சோக்கு. கண்டவன்களுக்கெல்லா உத்த சவுசொல்ல என்னுல் மாளாது ஆத்தா,

யோகா.—என்னேக் கெடுத்தெல்லா ஆதானே. ஒன் தேகத்தை நெறு த்தா கொளுத்தப்போறே. பெரிய மனுசாங்க ஒன் காலலே கிடக்க கிடைக்க தேனுபவிசும் பெருமையும் வேண்டாமா பாரு இன்னேக்கி அருவியிலே சானம் செய்யப்போனியே எல்லாப்பொம்பளேங்களேயும் பாப்பாத்திகள் பண்ணக்காரிகளேக்கூட எட்டப்போச்சொல்லி ஒனக்குத்தனியா குளிக்க எடம் பண்ணிஞரே இன்சுவட்டரு.

சித்தா.—ஆமாத்தா பொறவு சுபாண்டு எசமானேக்கண்டதும் இன்சு வட்டரு தலேயைக் காட்டாமே ஓடிட்டாரே. நம்மூர் தெரவியம் ஏதிஞலே இவ் ஓடிப்போனவன் நாளே ஆவ குளந்தைகள் எல்லாம் முதலி வெள்ளா ளாள் எண்ணு வந்துவொங்க என்று எம் மானம் செத்தெல்லா போச்சு பாப் பாத்தியன் எல்லாம் படிச்சுப்போயிட்டாங்களே இந்த காலத்திலே பாப்பாரு தங்க பொம்பனேங்களே விட்டு நம்ம பக்கமே வராதில்லே முன்னேயாளுக்கி வக்க எசமாங்க ஆளுக்கு ரெண்டு மூணு குறைச்சலில்லாமல் நம்மளே பாத்து வந்தாங்க போ ஆத்தா மீசிக்காரங்களா வர்ராங்க எல்லாரும் எனக்குப்பிடிக் கல்லே.

யோகா —என்னடி சின்ன முண்டே சிறுக்கிக்கு கொளுப்பு எதிருச் சோ போயேன் பாப்பாரிட்டேபோ இப்பவே.

சித்தா.—அது முடியாதண்ணு தாலாவாய் குசாலேக்கிறதெல்லா.

யோகா.—நாளுடி குசாலைக்கிறே (அடிக்கிறாள்) சிறுக்கி இன்னிமே சொல் பார்ப்போம் (சிந்தாமணி அலறி கீழே விழுகிறாள் இன்ஸ் பெக்டர் ஆட்கள் ஜமீன்தார் வருகிறார்கள்.

உத்தண்ட.—ஆ என்ன கிளவி அக்கிரமம் [illegible] நாற்புறமும் பார்த்து விட்டு சிந்தாமணியை தூக்குகிறான். சிந்தாமணி எழுந்து சட்டென விலகி நிற்கிறாள் ஏய்கிளவி புத்தியில்லே உனக்கு மரமாட்ட [illegible] மூளைகெட்ட முண்டமே சாக்கிரதையா அளைத்துப்போராத்துக்கென்ன.

யோகா.—ஆமையா கூட நீங்க அளைச்சிக்குட்டுப் போப்படாதாக்கு ஓங்களுக்கு அதலே அவாமாணம் என் வவுத்துக் கொடுமை அதுக்கு நடக்க சீவன்யில்லே களுதைத்தொண்டெ சிறுக்கிபளெல்லாம் பொட்டிவண்டி யேறியடிக்கராக (மூக்கைச்சிந்தி பெண்ணைக்கட்டிக்கொள்கிறாள்.)

ஜமீன்.—(தன்னுள்) இவள் மிகுந்த அடக்க ஒடுக்கமாய் குல ஸ்திரீயைப் போலிருக்கிறாளே என்னவோ தேவடியாள் என்று சொன்னவுடன் ஏனோ தானோவென்று இருந்தேன். பார்த்த பிறகல்லவா தெரிகிறது. எனக்கென்னவோ மற்ற ஜமீன்தார்கள் பிரபுக்களைப்போல வேசிகளை நாடத்தோன்றவில்லை குல ஸ்திரீகள் மேல் கண் வைப்பது தான் எங்கள் வம்ச வழக்கம் இவள் குல ஸ்திரீதானோ (வெளி) நான் என்னுடைய ரிக்ஷாவை அனுப்புகிறேன் வேண்டுமானால் நம்ம பங்களாவிலேயே சவுகரியமாய் இருந்துகொள்ளலாம்.

யோகா.—சாமியவுகள் உத்திரவு அடிமை காத்துகிட்டிருக்கு.

உத்தண்ட.—சரீ நாளை முதல் அப்படி செய் சாக்கிரதையா யிட்டுப்போ (அவர்கள் போகிறார்கள்) என்ன பாருங்கள் சத்திரத்தில் இதுவரை தாராளமாய் தாசிகள் இறங்குவது வழக்கம். முந்தா நாள் பாளையங்கோட்டை பார்வதி வந்து ஒரு அறையில் வந்திறங்கிறாள் கூட்டம் எல்லா நாடகக்காரர்களும் ஜட்கா வண்டிக்காரங்களும் உள்ளே கூடி விட்டது. பாட்டுரொம்: ஜோர் நாங்கள் எல்லாரும் சீட்டாடினோம். இதென்ன அங்கு இன்னொரு அறையில் இருந்த ஒரு எம். ஏ. எல். டி. யாம் அவர் இதெல்லாம் பொது இடத்தில் செய்வது அசங்கியம் என்று ஆட்சேபித்தார். மணியகாரனை ஒரு பார்வை பார்த்தேன் கப்சிப்என்று அடங்கிவிட்டான். பாருங்களேன் இந்த பி யே பாஸ்பண்ணினால் தங்கள் ஸுதந்தரத்தைப்பற்றி அல்லவா பேசுகிறார்கள்.

ஜமீன்.—வாருங்கள் இதென்னத்திற்கு பாழும் சரித்திரம் தோட்டத்திற்குப்போய் மங்குஸ் தான் பழங்கள் தின்று போகலாம் (போகிறார்கள் கந்தன் வருகிறான்.)

கந்தன்.—என்ன எளவு எங்குட்டுபோனாலும் சேப்புதலைப்பாத்தா கண்ணாலே படாது சனியன் பிடிச்செளவு ரூவாயா இல்லாமே நோட்டாயிருக்கு மாத்தப்போனாக்கி நம்புரு பாத்துட்டாக்கி புடிச்சிக்கிடுவாங்களே கைபளகல்லை. எனக்கு இல்லாட்டி இந்தப்பயமா அடே அப்பா (மோப்பம்பார்க்கிறான்)

என்ன வாசனை இங்குட்டு மூக்கைப்பிடுங்குதே பிள்ளையோ செவ்வாத்தோ புளுகோ, பெரிய மனுசாங்கபோலிருக்கு ஒளிஞ்சுக்கிடுவாம் யாரோ வராங்க (மறைகிறான் கான்ஸ்டபில்கள் அம்பட்ட முனியன் சுந்தரம் ஆசாரி சவரபாலு நாயுடு வருகிறார்கள்.)

ஆசாரி.—என்ன சம்பளம் உசந்தாலென்ன செலவுக்கிட்டலை. நம்ம நாயுடுக்கு மீசைக்கு தைலம் போடர செலவுக்குக்கூட பத்தாது ஏன் முன்னூத்தெட்டு இந்த சன்ன சோமன் பட்டுகுட்டை எல்லாத்துக்கும் எங்கிருந்து வாது பணம்.

பாலு.—என்னடா மடையனாயிருக்கே நாங்களும் அம்பட்டப்பயன்னு பார்த்தேயோ நாங்க ராஷவம்சம் திருமலை நாயகன் கூட எங்க.—

அம்ப.—ஓங்க வீட்டுக்கொல்லை வீட்டுப்பக்கம் போனான். ஓமரு மாமேங்கூட வளைக்கடை வச்சிருக்காங்களே ஏன்மா எரனூத்தஞ்சு.

ஆசாரி.—என்னையா எங்களுக்கு சாத்துக்கர்னம் நாமகர்னம் குட்டிகர்னம் எல்லாம் கெஞ்சுபேர் வச்சாங்க போலீசுலே வந்ததும் நம்பராப்போச்சுது செயில் புள்ளியா ஆசுபத்திரி வியாதிக்காரனா எரனூத்தஞ்சாம் பேரைச் சொல்லிக்கூப்பிடே.

அம்ப.—என்ன கோபம் செனப்படாதேங்கோ ஆமாம், சுந்தரமாசாரியாரே, ஆமாம் என்ன ஆசாரம் அய்யா ஒனக்கு வெடிஞ்சா புட்டியில்லயே, கள்ளுயில்லயே என்ற வெசாரம்தானே நம்ம நாயுடுக்கென்ன வாத்தாக்குச் செல்லப்பிள்ளை ஏ அப்பா மூனாம்கிளாசு வரைக்கும் பள்ளிக்குப் போயாந்தாருன்னு என்ன சம்பளம் நம் சூப்பிரண்டு எசமாங்களுக்குக்கூட இந்த மயிமை யல்லே இந்தப்போலிசுக்கு வந்தப்பிரவு எல்லாச்சாதியும் ஒரு சாதி தான்லா நாயுடுகார் அதிட்டம் இனிசிபேட்டரை கைக்குள் வைத்து விசிக்கு விசிக்கு மண்ணாறு.

ஆசாரி.—(தனக்குள்) ஆமாம், அவர் தாசிக்குவேண்டியதொண்டு செய்தா ஏன் அவரு இவேன் சொன்னபடி ஆடமாட்டாரு. (வெளி) இந்தப் பொணம் பிடிக்கி வேலையிலிருந்து தேவடியா முண்டைகளுக்கெல்லாம் சப்ளை பண்ணரத்தை விட அம்பட்டன் வேலை கூட நல்லது.

அட்டே.—அதனமா பேசாதே, என்ன எங்கதொழிலுக்கு என்ன குறச்சல் கௌனோராகட்டும், மடாதிபதியாகட்டும், நாவாபு தான் ஆகட்டும் பாப்பார்லே மொட்டச்சி அம்மகங்களாட்டும் என்ன சம்பமிருக்கட்டே எங்கட்டே படதலைபணங்ரித்தானேயாகணும் எம்பிரானுக்காட்டும் தம்பிரானுக்காட்டும் தலை வணங்காட்டாலும் எங்களுக்குத்தலை வணிங்கித்தானே தீரணும் கன்னாணமாட்டும் எளவாட்டும் மங்களபாடலலே முதல்லே நிக்கணும்.

பாலு.—(தன்னுள்) முட்டா பயங்க நம்ம மாமே வளைக்கடேலேலே வெடிஞ்சி பொளுதுசாயும்வரே எத்தனெ பொம்பளெக சோரவராங்க வெளிடேய் போனலீவ்லே கோவில்கடெக்கு நான் தாண்டா வளை யடுக்கிவிட்

டேன் மொட்டச்சிகளுக்கல்லெடா எல்லா அளகா பணக்காரிங்கா எல்லா கையெயும் நம்மதான் பிடிச்சு கசக்கி விளையாடுவோம். பெரிய பெரிய மனுசங்களுக்குக் கூட கடைக்காதேடா.

ஆசாரி.—என்னயா பெருமாதம் பெருமை பேசரீங்களே நம்ம பட்டரைக்கு சிறு பொம்பளை மொதக்கிணு பெரியவகைவரே பழியா காலையிலே பந்தா சாயங்காலம் வரை கதை பேசிக்கிட்டு இருப்பாங்க புதுநாகரீகம் வந்தா ஒங்க தொழிலெல்லாம் மண் விழுந்துடும் எங்க தொழிலுக்கு என்னைக்குமோசமில்லே. அம்மாமாருக்கு வரவர நகைப்பயித்தியம் வளந்திட்டே வருது தாசில் சேச்சய்யர் வீட்டம்மா கெட்டிக்கொலுசு பண்ணிக்கொடுக்காட்டி சோறு பொங்க மாட்டேனு சாதிச்சாப்பிட்டாங்க ஏய்யா நாயடு, ஆம்பளையா ப்பிறந்து இன்னங்காப்புப் போட்டிருக்கயாமே.

பாலு.—டே, சமீந்தாரு, இனிசிபெட்டரு அல்லாமங்குஸ்தான் தோட்டத்தில் அதோயிருக்காங்க நாமும்போவோம் பளத்திங்கலாம் (போகிறார்கள்) கந்தன் வெளிவருகிறான்.

கந்தன்.—தொலைஞ்சாங்கடாப்பா (பையைக்கையில் எடுத்து) பணமும் நிறையத்தான் இருக்கு (சப் இன்ஸ்பெக்டர் பத்மநாபன் வருகிறான்) ஒருவரை யொருவர் கவனிக்கிறார்கள்.)

கந்தன்.—(தன்னுள்) இதேதடா சனியன் இவனும் போலீசு போலிருக்கான் உருத்து உருத்துப்பாக்கரானே அடே சப்பு இஞ்சி வட்டரல்லா, அம்பட்டுகிட்டேனே. இங்குட்டேவாரானே, ஓடிடட்டா இந்த பாலத்திலே கொளைஞ்சு பாறைக்குப்பின்னாடி ஒளிஞ்சுகிட்டா தெரியாது. (பாலத்தினுள் நுழைந்து பாறைக்குப் பின்பதுங்குகிறான்.)

பத்ம.—(பயத்துடன் தன்னுள்) என்ன சங்கடம் கால் பின்னுக்கு இழுக்கிறதே, யாரோ இங்கேபதுங்கிறானே. நம்மைக்கண்டு ஏன் ஒளிகிறான் திருடனோ கஜபதியின் ஆளோ. அடடே ஒருவேளை கஜபதியாய் இருக்குமோ. நம் நிலை விதி மாற்றிக்கொண்டு போக முடியவில்லையே. கையில் எதோ வைத்திருந்தானே. கத்திகித்தி இருக்குமோ நம் கையில் தான் துப்பாக்கி இருக்கிறதே. என்னபயம் (ஓரடி முன் வைக்கிறான்.) ஆனால் பாலத்தின் உள் இருந்து இருட்டில் நம்மேல் திடீரென பாய்ந்து குத்திவிட்டால் எங்கென்று துப்பாக்கியைச்சுடுகிறது. நமக்கென்ன இவனைப்பிடித்துத்தீர வேண்டியதா கேஸ் என்னுடையதுமல்ல பிடித்தால் எனக்கு என்ன இனும் கிடைக்கும் ஏன் வீண் ஆபத்தை விலைக்குவாங்கவேண்டும். (ஒரு அடி பின் வாங்குகிறான்) எதற்கும் இங்கிருந்து துப்பாக்கியை சுட்டுவிட்டு இந்த பாறையின்மேலேறி ஊது குழலுடன் தயாராயிருப்போம். (துப்பாக்கியைச்சுடுகிறான்.) முயல் இவன் கால்கள் நடுவில் ஓட இவன் மிரண்டு பாறையின்மேல் அவசரமாய் ஏறுகிறான். கால் தவறி கீழே கந்தன் மீது விழுகிறான். இருவரும் நடுங்குகிறார்கள். பத்மநாபன் திடீரென்று ஊதுகுழலை ஊத கந்தன் ஓடி வந்து காலில் விழுகிறான்.

பத்ம.—(தன்னுள்) நல்லவேளை. நம் உயிர் பிழைத்தது புனர் ஜன்மம். இவன் ஓடிவந்தது நம்மைக்கொல்லத்தான் என்று எண்ணினேன். (தைரியமாய் வெளி) அடே திருட்டுப்பயலே. அகப்பட்டுக்கொண்டாயா ராஸ்கல் எங்கேடா கையிலிருந்த கத்தி கீழேபோடு அதை.

கந்.—இல்லைங்க எசமான். கத்தி கித்தியொண்ணும் கிடையாது. நான் ஏழை: மன்னிக்கனும் (பையைக்கொடுக்கிறான். தூரத்தில் கான்ஸ்டேபில்களும் காளிசன் மாறு வேஷம் பூண்டும் வருகிறார்கள். இன்ஸ்பெக்டர் பையைப்பிடுங்கிக்கொண்டு.

பத்ம.—ஏண்டா. திருட்டுப்பயலே, எங்கடா திருடினே. இது—அடே நீ ஏண்டா மலையில் ஒளிந்து திரிகிறாய்...ஓ நீ. கஜபதியின் ஆள்தானே. உண்மையை ஒப்புக்கொள். சீக்கிரம், பிரம்பால் அடிக்கிறான்.

கந்.—(தன்னுள்) என்ன செய்வோம் கஜபதி ஆள் என்று இவர் கண்டுபிடிச்சிட்டாரே. இனிமே பொய் சொல்லி புரசனமில்லே. பத்மநாபன் மறுபடி அடிக்க, (அடிபொறுக்காமல்) ஆம் ஆம் எசமா ஐயோ. இல்லிங்க. ஆமாங்க, ஆமாங்க. (பத்மநாபன் பையிலிருந்த நோட்டுகளை தன் சட்டைக்குள் வைத்துக்கொள்கிறான். கான்ஸ்டேபில்களும் காளிசனும் வருகிறார்கள்.

பத்ம.—(கர்வத்துடன்) பாத்தீர்களா. நாம் இனிமேல் கஜபதியைப் பிடித்தாய்விட்டது என்று சொல்லலாம். இவன் வாயாலேயே ஒப்புக்கொண்டான். தான் கஜபதியின் ஆள் என்று அடி உதவுகிறதுபோல் அம்மாவும் உதவு மாட்டாள்; பார் அவன் திருட்டுமுழியை. கண்ணைத்தோண்டிப் பிடுவேன் படவா (கந்தனை விலங்கிடுகிறார்கள்.)

காளி.—(தன்னுள்) அடபிணமே. கஜபதியாள் என்றால் கின்னுக்கிரை என்று எண்ணிவிட்டான். இன்னேரம் உன்னைப்பேசும் ஸ்திதியில் வைத்திருப்பானு எங்க ஆள். ஐயோ இந்தப் பயல் புதிதாய்த்திருடப்போயிருக்கிறான் அதுதான் இப்படி விழிக்கிறான். இவன் கணபதிபிள்ளையின் ஆள் அல்லவோ. பேஷ் கஜபதி ஆள் என்று இன்ஸ்பெக்டர் மூக்கால் பேசியதை இந்தப்பையன் கணபதி ஆள் என்று எண்ணி ஏமாந்து ஒப்புக்கொண்டானே பேஷ். இன்ஸ்பெக்டரே நல்ல சாமாத்தியவான் நீர் மோர்குழம்பு மூண்டமே. இவன்களுக்குப் பிராயச்சித்தம் பின்னால் இருக்கிறது.

பாலுநாயுடு.—ஏண்டா திருட்டுப்பயலே யசமான் சொன்னது நிஜந்தானடா (காதைக்கிள்ள கந்தன் அலறுகிறான்.

கந்தன்.—ஆய். ஆம். மா...மா. மா. மா. (அழுகிறான்.)

பத்ம.—எத்தனை நாளாய் அவனிடம் இருக்கிறாய். இந்த ரூபாய் எங்கே திருடினாய்.

கந்.—இரண்டு வருஷசமா...இந்த ரூவா-இப்பத்தா ஒரு செட்டிக்கிட்டேருந்து பிடிங்கிட்டேன் மூணூறு ரூவா நோட்டு.

பத்ம.—(பிரம்பாலடித்து) அயோக்கிய ராஸ்கல் இருனூறு தானேடா உனக்கு இன்னும் நூறு ரூபாய் என்னடா செய்தாய்.

கந்.—ஐயோ, ஐயோ. எசமான் ஒங்கிட்ட இப்பத்தானே மூன்னூறும் கொடுத்தேனே. இப்பத்தானே திருடிக்கிட்டுவாரேன் நோட்டல்லா தான் என்னசெயலாம் எசமான் அதுக்குன்னே நூறு ரூவா நோட்டை (பத்மநாப ன் உதைக்க கந்தன் கீழே விழுகிறான்).

காளீ.—(தன்னுள்) அடபாவிப்பயலே நூறுரூபாய் நோட்டை இவன் எடுத்துக்கொண்டு பையில் வைத்திருக்கிறான் அவனை என்னபாடு படுத்தி னான், உண்மையை சொன்னதற்காக. கள்ளனுக்குள்ளன் பாய்கிறானே. சரி. இவனை காட்டிக்கொடுக்க இவனுக்கு மேலேதான் கள்ளன் இருக்கிறானே. (அருகில் செல்கிறான்.)

முனி.—இப்பத்தா ரூப்ரண்டசமாக்க நிம்பரு குறிச்சுத்தேடச் சொன் னுங்க.

காளீ.—என்ன நமஸ்காரம் இன்ஸ்பெக்டரவான், மறந்து போச்சா. பாலாமடை கல்யாண மல்லவா. இத்தப் பையலேக்கையுங்காளவுமாய் கண்டு பிடித்தீர்களே உங்கள் அதிர்ஷ்டம் யாருக்குமில்லே ஹார்.

பத்ம.—ஆமாம். என்ன பிரயோசனம் நமக்கு கீர்த்திகூட மிஞ்சுகிற தில்லே. இனும் எதாவது வந்தால் கூட பெரிய இன்ஸ்பெக்டர் பின்னாய வானே எடுத்துக்கொண்டிருப்பர். என் இருணூத்தஞ்சு.

ஆசாரி.—ஆமாங்க எசமான் : ஒங்கள் வரை மிஞ்சினாக்கூட எங்கவரை எங்கே வரும்.

காளீ —அடடா. இவனை ரத்தம் வரும்படி அடித்துவிட்டீர்களே இது தான் போலீஸார் கொடுமை யென்பது சரியாயிருக்கிறது.

பத்ம.—இந்த அடி விழாலிட்டால் ஒப்புக்கொள்வானேன். அவன் கஜ பதி ஆன் என்று.

காளீ.—ஐயையோ. எனக்குப்பயமாயிருக்கிறது. கஜபதி காதுக்கு எட்டித்தானால் கம்மை முதுகு தோல் உரிய இரத்தம் பெருக அடிப்பானே. (போலீஸார் சாத்புறமும் பயத்துடன் சுற்றிபார்க்கிறார்கள்.) எல்லாத்துக் கும் போவோம் வாருங்கள்.

பத்ம.—ஆமாம். நீங்கள் என் சாமர்த்தியத்துக்கு சாட்சியாக சொல்லி மாஜிஸ்ட்ரேட்டிடம் தான் கோரிவேயே இனும் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வளவு உதவி செய்வீர்களல்லவா. நாம் பழைய இனேதிமல்லவா.

காளீ.—ஆட்சேபணே யென்ன.—இதென்ன. உங்கள் பாக்கெட்டிலி ருந்துதொங்குகிறதே. சடடெனமற்ற நோட்டை இன்ஸ்பெக்டர் பாக்பெ ட்டிலிருந்து எடுத்து ஆசாரிகையில் கொடுக்கிறான்.

THE
FEMALE EDUCATION
AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடையது ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Editor :
Sister R. Thayarammah.

பத்ராதிபர் :
ஸஹோதரி ஆர். தாயாரம்மா.

Vol. 3. } ஆகஸ்டு ஆவணிமீ, Aug. 1914. } No. 11,12.
தொகுதி 3 } ஆகஸ்டு புரட்டாசிமீ, Sep. 1914. } பகுதி 11,12.

The "Female Education"

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

	Subscription.	Advertisement per page.
Yearly ..	2—8—0	72 0 0
Half yearly	1—8—0	40 0 0

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

"பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹித மாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல் யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதிவருகிறார்கள்.

	சுத்தா.	வினம்பாசார்ஜ் 1-பக்கம்.
வருஷம்	2—8—0	72—0—0
6 மாதம்	1—8—0	40—0—0

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேக மான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

ANTHEM ANTHOLOGY

கீதத் திரட்டு

சென்றமீ பத்திரிகையின் தொடர்ச்சி.

பிரஹ்லாத சரித்திரக் கும்மி.

3-வது கட்டம்.

(பாரளந்தார் திருவடியை) என்றமெட்டு.

1. அசுரபத்தினி கர்ப்பம்தன்னை
அழித்திடவும் எண்ணியந்த
அந்தபுரம்தன்னை நோக்கிசகியே
இந்திரனும்சென் றுனடிகேளடி.

2. கர்ப்பிணியைக் கையில்கொண்டு
கருவறுக்கக் கருதியவன்
அந்தரங்கம் அறியாதேசகியே
இந்திரனுஞ்சென் றுனடிசகியே.

3. அந்த சமயந்தனில்
நாரதரும் கண்டுகொண்டு
அடடாகூடாதடா இந்திரா
அன்புடனே கர்த்தருள்வாய் இந்திரா.

4. மகாமுனிவர் வார்த்தைகேட்டு
மாதுதன்னை பிரியவிட்டு
தேவரிஷி திருவடியில்பணிந்து
சேதிதன்னை யுரையுமென்றுனிந்திரன்.

5. அவளுடைய கர்ப்பந்தன்னில்
அன்பருக்கு அன்புடையான்
அசுரகுல கோடாலியாய் இந்திரா
அவதரிக்க போறனடா பிரகலாதன்.

4-வது கட்டம்.

(அஸ்தகிரிகாதலுக்கு) என்றமெட்டு.

1. தேவமுனிவர் வாக்கறிந்து
தேவராஜன் திருப்படங்கி

தேவிதன்னைப் பாதுகாத்து
தேவலோகம் தேடிச்சென்றான்.

2. பகுமுடன் பதிவிருதையை
ஓச்சமின்றி ஆதரித்து
அவளுக்குடன் ஹரிநாம
அக்ஷரத்தை உபதேசித்தான்.

3. மூலமந்திரம் உருக்கொண்டதும்
உந்தியிலுள்ள கருவரையில்
திருவருளால் நிறைந்துபரவி
சிசுவும்அதை சீருடன்பெற.

4. மந்திரமகிமை கொண்டுமவன்
மகிழ்ந்துமுகம் செழித்திடவே
தினந்தோறும் தேரிஊறி
தினநாதன் அடிபணிந்தான்.

5-வது கட்டம்.

(நாநாநன்னுனே) என்றமெட்டு.

1. கோரின கோரிக்கையை
கைகொண்டு தேவராஜன்
கோதையை வதையாமல்
குணாகலம் செய்தானே.

2. வேந்தனில்லா வேலையிலே
விளைந்ததோர் வினையெல்லாம்
சுந்தரி காயாதுவுக்கு
சுகம்பெற பாக்யமாச்சு.

3. கொஞ்சநாள் சென்றவுடன்
மிஞ்சின பருவத்தாலே
கொஞ்சி விளையாடவே
ப்ரகலாதனைப் பெற்றுனே.

4. கந்தர்வ தேவர்கூடி
கண்டு மகிழ்ந்துபாடி
பூலோக முழுதிலும்
பூமாரி பெய்திடவே.

5. தகப்பனும் தவம்புரிந்து
அரணியில் தன்னைவிட
யாருமில்லை என்றுசொல்லி
யாரவாரம் செய்தானே.

6. ராம்ராம் ராமராம
பஜனைகள் செய்தானே
ஹரிஹரி நாராயண
ஹரிஹரி நாராயணவென்று. (ராம்)

6-வது கட்டம்.

(ஆசிகைகொண்டி யேமிப்போ) என்றமெட்டு.

1. பக்திகொண்டப்ரகலாதன் பாலர்களைக்கூட்டி
இங்குமங்கும்பொங்கிடவே ஹரிபஜனைசெய்தான்.

2. ஆக்ஞைமீறிசேவைகொண்ட பாலனைபிதா அதட்டி
மிரட்டியவன் அன்புபுகழ்சொல்ல.

3. என்னசொல்லிகூறியுமே அன்னையருள்கொண்ட
சிறுவனேயுறுதியாக மின்னேவந்துநின்றான்.

4. வம்சஹானிவந்ததென்று இம்சைகொண்டசூரன்
பாலனைவதம்செய்திடவே சிலத்தையும்கொண்டான்.

5. வேலைக்காரரைக்கூவியே கண்டித்துபாலனை
பலவிததெண்டனைகள் செய்வித்திடவிட்டான்.

6. மன்னன்சொன்னசொற்களினால் அன்னைமனம்கன்னி
தன்னிடமேசின்னவனை உன்னியிழுத்தாளாம்.

7. பொன்னிலகுமின்னலைப்போல் சுந்தரனைஉன்னை
என்னமாய்ப்பிரிந்துமனம் சகித்திருப்பேன்கண்ணுவு.

7-வது கட்டம்.

(ஆரணியத்தில் ஓரசன்) என்றமெட்டு.

1 அசுரனும் அகங்காரங்கொண்டு
தாசனை யிகழ்ந்து
அரண்மனைக்குள் இருந்தவனை
சிகைபிடித் திழுத்தான். (வரும்.)

392

PROGRESS OF THE WORLD

ப்ரபஞ்சப்போக்கு.

Madras Women's College.

சென்னை ஸ்த்ரீகளின் காலேஜ் :—பின்வருமாறு ஹிந்துப்பத்ரிகைக்கு இந்தக் காலேஜில் படிக்கும் ஒரு ஸ்த்ரி இந்தக் காலேஜின் நிலைமையைப்பற்றி எழுதுகிறார் :—இந்தக் காலேஜ், பீச்சுரோட்டில் மைலாப்பூருக் கடுத்தார்போலுள்ள மூணுக்கு மெத்தை காப்பர் ஹவுஸ் ஹோஸ்டல் கட்டத்தில் வைத்து நடத்தப்பட்டுவருகிறது. சென்னை ராஜதானியில் ஸ்த்ரீகளுக்கு கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட முதல் காலேஜ் இதுதான். இந்தக் காலேஜுக்கு ஒரு ஹோஸ்டல் உண்டு. ஹோஸ்டலில் இருந்து படிக்கும் ஸ்த்ரீகள் ஸகலவிதத்திலும் சௌகர்யத்தை யடைந்து வருகிறார்கள். ஹோஸ்டலில் ஐரோப்பிய ஸெக்ஷன், இந்திய ஸெக்ஷன் உயர்குல வகுப்பு ஸெக்ஷன் என்ற மூன்று ஸெக்ஷன்கள் உண்டு. அதில் முதல் ஸெக்ஷனில் 7 பேர்களும் இரண்டாவதில் 5 பேர்களும் (அவர்கள் அனைவரும் கிறிஸ்துவர்கள்) மூன்றுவதில் 6 பேர்களும் (அவர்களில் 5 பேர் மலையாளிகள், ஒருவர் ப்ராமண ரல்லாதவர்) மெடிகல் காலேஜ் அபாதிகிரி பரிட்சைக்கு வாசிக்கும் இரண்டு மலையாள ஸ்த்ரீகளும், கடைசி ஸெக்ஷனில் இருந்து வருகிறார்கள். இந்தியர்களுக்கு ஒரு மாதத்திற்கு 20 ரூபாய் ஹோஸ்டலுக்குச் செலவாகிறது. ஹோஸ்டல் சுணக்கு வழக்குகளையும் அதிலிருக்கும் ஸ்த்ரீகளையும் மேற்பார்வை பார்ப்பதற்கு ஒரு ஐரோப்பிய ஸ்த்ரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உயர்ந்த ஜாதி ஸெக்ஷனில் ப்ராமணர்கள் சாப்பிடும் சாப்பாடு தான் தயார்செய்யப்படுகிறது. அதில் ப்ராமணப் பெண்கள் வந்து சேரலாம். இப்பொழுது காலேஜில் 40-ஸ்திரீகள் படித்து வருகிறார்கள். காலேஜில் ஜூனியர் இன்டெர் மீடியேட் வகுப்புவரை கற்பிக்கப்பட்டு வருகிறது. ப்ரவிடென்ஸி காலேஜ் ஸீனியர் இன்டெர் மீடியேட் வகுப்பில் படிக்கும் ஒரு ஸ்த்ரி இந்த ஹோஸ்டலில் இருந்து வருகிறார். சாஸ்திர ஸயன்ஸ் பாடத்தை இஷ்டமான பாடமாக எடுத்துக்கொண்டு படிக்கும் சில ஸ்த்ரீகள் ப்ரவிடென்ஸி காலேஜுக்குப்போய் அப்பாடத்தைப் படித்து வருகிறார்கள். ப்ரவிடென்ஸி காலேஜுக்குப் பாடத்தை படிக்கப்போகும் ஸ்த்ரீ

393

களே ஏற்றிக்கொண்டு போவதற்கும், அவர்களே மறுபடியும்கொண்டு வந்து விடுவதற்கும் 3-4 கவர்ன்மெண்ட் ரிக்ஷாக்கள் ஸ்த்ரீகள் காலேஜில் இருக்கின்றன.

ஒவ்வொரு ஸ்த்ரீக்கும் ஒரு ஸ்டிரிங்கு காட்டும், ஒரு படுக்கை ரூமும் ஸ்நான அறையும் உண்டு. டென்னிஸ், பாட்மிண்டன் விளையாட்டுகளுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறது ஸகல சௌகர்யங்களும் ஹோஸ்டலிலிருக்கும் ஸ்த்ரீகளுக்குண்டு. பகலில் வாசிக்கும் ஸ்த்ரீகளில் 6-பேர் பிராமணர்கள். அவர்களில் இருவர் கைம்பெண்கள் 4-பேர் கிரிஸ்துவர்கள். முதலியார் பெண் ஒருவர்; மற்றவர்கள் ஐரோப்பியர்களும், யுரேஷியர்களுமாம்

Emden in Madras.

சென்னையில் எம்டன்:—எம்டன் என்பது ஒரு சண்டைக்கப்பல். இது ஜெர்மனியாருக்குச் சொந்தமானது. திருட்டுத்தனமாக இங்கிலீஷ் கப்பலின் பெயரையும், கொடியையும் வைத்துக்கொண்டு வங்காளக்குடாக் கடலுக்குள் வந்தது. வந்ததுமுதல் தன்னுடைய சேஷ்டையைச்செய்ய ஆரம்பித்தது. கல்கத்தாவுக்கு ஸமீபமாக ஐந்து இங்கிலீஷ் வ்யாபாரக் கப்பல்களே தண்ணீரில் முழுக அடித்தது. தீடீரென்று செப்டம்பர்மீ 22-ந்தேதி ராத்திரி 9-மணி சுமாருக்கு தன்னுடை லெர்ச்சுலேட்டை கோட்டையின் பேரில் காண்பித்து சில வெடி குண்டுகளே எறிந்தது. தெய்வாதீனமாக கோட்டையின் பேரில் ஒன்றுவது விழவில்லே. கடற்கரையோரத்தில் சில கிமிணி எண்ணேத் தொட்டிகள் கட்டப்பட்டிருந்தன. இரண்டு தொட்டிகளின் பேரில் குண்டு விழவே அவைகள் எறிந்துவிட்டன. இன்னும் சில குண்டுகள் சென்னையில் பல இடங்களில்பட சிலர் இறந்தனர், சிலர் காயமடைந்தனர். ஆனல் அதிகச் சேதமில்லே. கோட்டையிலிருந்தும் காஸிமோட்டிலும் கட்டப்பட்டிருக்கிற அறையிலிருந்து எம்டனேப் பார்த்து குண்டுகள் சுட எம்டன் கப்பல் தலை மறைந்துபோய்விட்டது. ஸர்க்கார் ஸர்வஜாக்ரதையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பயத்துக்குக் காரணமே கிடையாது. எம்டன் கப்பலே நமது கப்பல்கள் துறத்திக்கொண்டு போயிருக்கின்றன. இனி எம்டன் சென்னைக்கு வராது.

The War in Europe.

ஐரோப்பாவில் யுத்தம்:—சென்றமீ பத்திரிகையில் ஐரோப்பாவில் வல்லரசுகளுக்குள் நடக்கிற யுத்தத்துக்குக் காரணங்களேப் பற்

றியும் அந்தந்த தேசங்கள் நிலேமையைப் பற்றியும் தெரிவித்தோம். மேலும் நமது சக்ரவர்த்தி ஜெர்மனியரசருடன் யுத்தம் செய்ய சேர்ந்ததற்கு அவச்யமான காரணங்களேயும் விபரமாகக்கண்டு இந்த ஸமயத்தில் இந்தியர்களின் கடமையையும் தெரிவித்தோம். இப்போது யுத்தம் எந்த நிலேமையிலிருக்கிற தென்பதை கவனிப்போம்.

யுத்தம் ஆரம்பம் செய்யப்பட்டு ஸுமார் இரண்டு மாதமாகிறது. யார் தோற்பார் யார் ஜெயிப்பார் என்று சொல்வதற்கில்லே. இப்போது ஒன்றும் சொல்லவும் முடியாது. இது வரையில் ஜெர்மனியாருக்கு இரண்டுமாத யுத்தத்தில் சேர்ந்திருக்கிற நஷ்டங்கள் கணக்கற்றவைகளாயிருக்கின்றன. பிரிட்டிஷ் ஸைன்யங்களும்ப்ரஞ்சு ஸைன்யங்களும் கடும் ஸ்நேகம் பாராட்டி வெகு உத்ஸாகத்துடன் ஜெர்மனியர்களே துறத்தியடித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது இந்திய ஸைன்யங்களும் பிரிட்டிஷாருக்கு உதவியாக யுத்தகளம் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இந்திய வீரர்கள் தங்கள் தாயநாட்டின் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் ஒரு ஹானிவராமல் முழுராஜ பக்தியுடன் பிரிட்டிஷ் வீரர்களுடன் பக்கத்தில் நின்று, ஜெர்மனியாருடன் யுத்தம் புரிவார்கள் என்று நாம் சொல்லவேண்டியதில்லே. ஜெர்மனியார் பல பக்கத்தில் இடிபடுகிறார்கள். இந்த இடிகளிலிருந்து ஜெர்மனியார் மீண்டுவருவது ஸாத்யமில்லே. நமது இந்தியச் சேனேகள் நாட்டுக்கும் ராஜாங்கத்தும் கல்ல கீர்த்தியைப் பெற்றுக் கொண்டு ஜயத்துடன் தாய் நாட்டை வந்து அடைவாரென்று கடவுளே ப்ரார்த்திக்கிறோம்.

சென்னே ராஜதானியிலிருக்கிற ஸ்த்ரீகளும் புருஷர்களும் ஒரே மனதாய் போட்டி போட்டு யுத்த நிதி சேர்த்து அந்த நிதியைக்கொண்டு சீமையிலிருந்து சென்னே ராஜானிக்கு ஸ்பெஷலாக ஒரு ஆஸ்பிட்டல் கப்பல் வரவழைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய ஸகல செலவுகளேயும் சென்னே ராஜதானியார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் யுத்தத்தில் காயமடைந்து வருந்தும் இந்திய ஸேனேகளுக்கு சிகித்ஸா உதவி கிடைக்கும் பொருட்டு சென்னேயிலிருந்து 'மதராஸ்' என்னும் புதிதாக வரவழைக்கப்பட்ட கப்பல் நாளே நவம்பர்மீ புறப்படும். இக்கப்பலில் இந்திய டாக்டர்களும் இந்தியத் தாதிகளும் சிலர் புறப்பட்டுப்போவார்கள்.

The Strength of the Powers.

வல்லரசுகளின் யுத்தபலம்.

வல்லரசுகளின் கப்பற்படை.

		வீரர்கள்.
இங்கலாந்து	....	146000
ப்ரான்ஸ்	....	63000
ஜெர்மனி	....	72000
ஆஸ்டிரியா	....	19000

தரைப்படை.

		வீரர்கள்.		பீரங்கிகள்.
இங்கலாந்து	....	380,000	....	640
ப்ரான்ஸ்	....	4000000	...	3000
ஜெர்மனி	....	5500000	....	4000
ருஷ்யா	....	4500000	....	5500
ஆஸ்டிரியா	....	2500000	....	2000
பெல்ஜியம்	....	300000	....	200.

Books Received.

புத்தக வரவுகள்:—1. காதலி. இது ஒரு நாவல். மிஸ்டர் வி. எம். ராஜுசெட்டியார் எழுதியது. விலை அணா 0-12-0 புஸ்தகம் கிடைக்குமிடம். மிஸ்டர் C. M. ராஜு 'ராஜன்டேல்' வால்டாக்ஸ் ரோட், சென்னை.

2. நோராமணி. ஒரு கற்பனைக்கதை. இரண்டு பாகமுள்ளது கும்பகோணம் மிஸ்டர் டி. எஸ். டி. சாமி எழுதியது. கிடைக்குமிடம். மிஸ்டர் டி. எஸ். டி. சாமி; எகுமம் லாட்ஜ், கும்பகோணம்.

3. சரகஸம் ஹிதா. என்னும் ஆதிவைத்ய நூலின் மூலமும் ஸுபோதினி என்னும் உரையும் ஸஞ்சிகையாக, ஐந்துகிடைத்தன இது ஆயுர்வேத பண்டிதர் த்ரிவேதி. ப்ரம்மஸ்ரீ. வி. கிருஷ்ணஸாமி சாஸ்திரி இயற்றிவருகிறார். வருஷசந்தா ரூ. 3-8-0. கிடைக்குமிடம்.

வி. கிருஷ்ணஸாமி சாஸ்திரிகள், 73, சைனபஜார் ரோட், சென்னை.

THE BEGINNING OF THE WORLD.

By

Mr. S. Anandan.

உலகம் தோன்றியகாலம்.

'கான்முகன் படைத்த நானுவகை யுலகி
லான்ற சிறப்பி னரும்பொருள் கூறுங்கா
லாண்முதிதோ பெண்முதிதோ வன்றியலி முதிதோ
காண் முதிதோ கோண் முதிதோ
செல்வஞ் சிறப்போ வறிவு சிறப்போ
தொல்லோமா ஞாலந் தோற்றமோ படைப்போ'

என்று ஆராய்தலின் முத்திப்பயனில்லையெனப் பல அறிஞரும் கூறினர். எனினும் இப்போது உலகந்தோன்றி இவ்வளவு காலமே யாயிற்று என்று சாதிப்பார் மதத்தைமாற்றி உண்மை வெளிப் படுத்த இதை யெழுதத்துணிந்தனன்.

உலகத்து அருளியலிக்கூறும் மதங்கள் பல. அவை அருட்குரு நாட்டத்தை ஏறக்குறைய ஒருதுணிபாகவே கூறும் இயல்புடையன. எல்லாமதமும் தம்வழியில் தெய்வ வழிபாட்டையும் அதற்கான நெறி களையுங் கூறுகிறகும்.

'எம்மதத்தோர் எவ்வகை நிட்டை கூறினும்
சம்மதமே எனக்கு உற்றபற
தற்போதம் மாய்க்குமேல் உற்றபற.'

இதுகாறுங் கூறியன யான் மததூடணஞ்செய்ய வந்தவனல்ல னென்பதை வெளிப்படுத்தற்கே.

கிறிக, யூதர்கள், தங்களது ஆகமங்களில் உலகந்தோன்றி இன்றைக்கு (5000) ஐயாயிர வருடங்களாயினவென வெழுதிவைத்தனர். மேல்நாட்டுக் கிறிஸ்தவசமயிகள் தங்களுக்கு மோட்சவேதுவைத்தந்த பிரபுவாகிய (Jesus) ரட்சகர் பிறந்த குலமதவானதுபற்றி, யூகரது ஆகமங்களைப் பூரணமாக நம்பலாயினர். இவ்விடத்து, அவ்விரட்ச கரே தமது பரிசுத்த வாவியூட்டுவதான ஞானஸ்நான முறையை யோவானிடத்துக் (John the Baptist) சற்றனென்றும் அவ்வி யோவான் அம்முறையை வரியரநாட்டுப் பிரசங்கிகளாயிருந்த புத்த

பிட்சுக்களிடத்துக் கற்றுக்கொண்டனரென்றும், தம்முடைய பிராசீன வழக்கங்களாகிய (circumcision) சுந்நத்துச்செய்தல், ஒழிவுநாள் காப்பாற்றுதல், பன்றியை விலக்குதல், நீசர்களையும், குட்டரோகிகளையும் ஊருக்கப்புறத்தோட்டுதல், முதலியவற்றை மாற்றப் பிரயத்தனித்ததற்காகவே கிறிஸ்துவை சிலுவையி லறைவித்தார்களென்றும் ரோமேச சந்நிரதத்தரது 'ஆரியாது புராதனாகாரீகம்' என்ற நூலும் விவிலியநூலும் (Bible) கூறும். இவ்வுண்மைகளைத் தேராத முற்கால ஐரோப்பியர், ரட்சகரது மோட்சவழிகள் நன்கெனப்பட்ட காரணத்தால், யூதரிடத்தே யம்முறைகள் சிறந்திருந்தனவெனக்கொண்டு, அவரது ஆகமங்களிற் கூறியயாவும் உண்மையென நம்பலாயினர். பெரும்பாலும் மதத்தைப் போதிக்குநூல்கள் பக்திப்பெருக்கத்தை மிகுத்துக் கூறுவனவே. அவை சரித்திரவளவை யான் ஆராயப்படும்போது பிறழ்ந்துகாட்டும் இயல்புள்ளன. ஏன்? அவற்றை யெழுதுபவர் பக்திகாரணமாகவே யெழுதுவதாலும் அவர்களுக்குச் சரித்திர வாராய்ச்சிசெய்யத் தடைகள் பலவுளவானதாலுமே. பத்திப் பெருக்கத்தைத் தோற்றுவிக்கும் திருவிளையாடற் புராணம் சரித்திர வளவை யான் பரிசோதிக்கக் கெட்டழியும் தன்மையை நம் நாட்டோரு முணர்வர். பின்னர் பண்டிதர்கள்தோன்றி (Ante deluvian fossils) ஊழிக்குமுந்திய பூதலவியற்கைச் சேடங்களையும் பிராணிகளது கங்காளங்களையும் கண்டு மதவாயிலாகக்கொண்ட கொள்கைகளுக்குமாறுக வியற்கையிற் றோன்றுவதையெண்ணி முட்குற்றுமயங்கலாயினர். தாலமி, கோபர்னிகஸ் மத சம்வாதமும் கலிலியோபட்ட பாடும் ஐரோப்பிய சரித்திரம் தெற்றெனக்கூறும்.

அதுபற்றி ஆரியர்களிந் நிலவுலகத் தோற்றத்தைப்பற்றிக் காலம் கணிக்கும் வகையையும், அதனது உண்மையையும் வெளிப்படுத்துவேன். நம்முன்னோர் வானசாஸ்திரகணிதத்தில் பண்டையகாலந் தொட்டுச் சிறந்தவர்கள். திரிகோணமிதி (Trigonometry) பஞ்சசித்தாந்தம்முதலிய நூல்கள் நம்மவரது கணிதசாஸ்திரத் திறமையை) வெளிக்காட்டுவன. மகாகணியாகிய கார்க்கர் 'யவனர்கள் (Greeks) மிலேச்சர்களே ; எனினும் சோதிடத்தில் அவர்கள் அதி நிபுணர்களாதலின் அவர்களை யவ்விஷயத்தில் நம்நாட்டு ரிஷிகளினும் சிறந்தவராகக் கொள்ளல்வேண்டும்." என்று கூறுவதனால், நம்மவர் யவனரிடத்திருந்து வானசாஸ்திர வியல்புகளைக் கற்றுக்கொண்டார்களென்று

எண்ண இடமுண்டு. மேலும் வடமொழியில் (Taburi, Patona) தாபுரீ, பாடோனு, முதலிய கிரேக்கபதங்களையமைத்து பிரகத்ஜாதமென்றநூல் செய்யப்பட்டிருக்கிறது. யவனசாரியரது சோதிடநூல் வெகு துல்லியமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் ஆரியரும் யவனரும் ஒருவர்க்கொருவர் தாழாத வானசாஸ்திரவறிவையுடையவரா யிருந்தார்களென்பதேயன்றி இருவரும் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டிருந்தார்களென்றும் தோன்றுகிறது.

நிற்க நம் வானசாஸ்திரத்தில் உலகத்தோற்றத்தைக்கூறும் வகையைக் கூறுவேன். புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், குரு, சனி, சந்திரன் முதலிய கிரகங்கள் முறையே சூரியனைச் சுற்றிவருகின்ற காலங்களுக்கு அதமப்பொதுமடங்கு எடுத்துநோக்கின் அது **நானூற்று முப்பத்திரண்டுகோடி** வருஷங்களெனக் கணக்காகிறது. இந்தக்காலந்தான் மேஷத்தைவிட்டு மீங்கின கிரகங்கள் மீண்டும் மேஷத்தில் அதே நிலையில்வந்து நிற்கும் காலம். இதையே ஒருகற்பம் என்பர். இக்கற்பம் ஆயிரம் சதுர்யுகங்களடங்கியது. ஆகவே ஒரு சதுர்யுகம் **நாற்பத்துமூன்றலட்சத்து இருபதினாயிரம் வருஷங்கள்** கொண்டதாகும். இதனுட் கலியுகம் பத்திலொருபாகம். துவாபரயுகம் கலியுகத்தினிருமடங்கும், திரேதாயுகம் கலியுகத்தின் மும்மடங்கும் கிருதயுகம் கலியுகத்தின் நான்குமடங்குமாம். எனவே

கலியுகம்	432000ஆம்
துவாபரயுகம்	864000 ,,
திரேதாயுகம்	1296000 ,,
கிருதயுகம்	1728000 ,,

ஆகச் சதுர்யுகம் 4320000ஆம் ஆம்.

இக்கற்பமே பிரமனுக்கு ஒருநாள் என்பர். இக்கற்பத்தின் இறுதியில் மகாப்பிரளயம் வரும். இப்போது கலியுகம்தோன்றி 5013ஆம் ஆயிற்று. ஆகவே, இக்கலியுகத்துக்கு முன்வந்த பிரளயமே யூதாகமத்தில் (Old Testament) குறிக்கப்பட்டது. ஒவ்வொருயுகத்தின் முடிவிலும் பிரளயம் ஏற்படும் என்பதும் பின்னர் நீர்வற்றி உலகு வெளிவந்தோங்குமென்பதும் ஜாம்புவான்போன்ற அனுபவசாலிகள் சொல்லுவர். இதுவே யுண்மையெனப் பூமிசாஸ்திரவதுபவக்காரரது (Geologists) துணிபு.

நம்முன்னோர் அநேகவிஷயங்களை அழியவொண்ணா வகையில் எழுதி வைத்திருக்கின்றனர். தற்காலம் பாடசாலைகளிற் படிக்கும் சிறுவர் சிறுமியருக்கு இவ்வரிய விஷயங்களை யெடுத்துக்காட்டும் வகையில்லை. சில இந்து பாடசாலைகளிலும் மேனாட்டுப் பாதிரிமார் கொள்கையை யநுஸரித்துச் சில மதக்கொள்கைகளைக் கற்றுக்கொடுக்கின்றார்களேயன்றி இத்தகைய இரகசியங்களையெல்லாம் எடுத்துக் காட்டுவதில்லை. மேனாட்டு மதபோதகர் ஒருவர் ஒருசிறுவனை விளித்து 'உங்களுள் ஒழுங்கென்பதில்லை. எங்களைப்போல் இந்தநாளில் இன்னதுசெய்வது என்ற நியதியைக் கற்பிக்கும் மார்க்கங்களில்லை. இது பிசகு இது சரியென்றுகூறும் நூல்களுமருமை' என்று சொன்னபோது, அவர்சொன்னது சரியென நம்பிவந்தான். அச்சிறுவனை யழைத்துப் பஞ்சாங்கத்தைக்காட்டி இதனுள் வருஷம் முழுவதும் செய்யவேண்டிய வுற்சவங்கள், பண்டிகைகள், விரதங்கள் முதலியன இல்லையாவென்று கேட்டபோது 'ஐயோ இந்தசங்கதி யெனக்கு அன்றுதெரியாமற்போயிற்றே' என்றான்.

மேலும் மேல்நாட்டவர் நம்சாஸ்திரங்களை இலகுவாக நம்புவதில்லை. மோட்சமூலர் Maxmuller, கிரிபித் (Griffith) முதலிய வித்தியார்த்திகள்தோன்றி யுண்மைகளை வெளிப்படுத்தினபின்னர் அநேக அருமைகளைக்கண்டு சிறிது கவனிக்கத் தலைப்பட்டுள்ளார். இதற்குக் காரணமும் நம்நாட்டுப் போலிப்பண்டிதரே. திருமுருகாற்றுப்படையில்,

'உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு' என்ற சொற்றொடருக்கு, சூரியன் மேருமலையை வலமாகவருமென்பது புராணக்கூற்று என்று தமிழாசிரியரும் கூறுவர். உண்மையில் நம்மாரியர்கள் (Altai Golden) பொன் மேருமலைப்பக்கத்துக் குடியிருந்தபோது ஆறுமாதம் இருளும் ஆறுமாதம் பகலுமாய் இருக்கும் உத்தரத்துருவப் பிரதேசங்களில் தாம் கண்டதையும், அப்பகல் ஆறுமாதமும் சூரியன் அத்தமிக்காமலே ஆகாயவட்டத்தைச்சுற்றிச் செல்வதையும், மேருவினது உச்சியினின்று பார்ப்பவனுக்கு அவ்வுண்மை தெரிவதையும் வடமொழியில் கூறினராக அதையே தமிழ்மொழிக்காரரும் உபசரித்துக் கூறினாரென்று ஒருசிறுவன் உணரின் அவனுக்கு எவ்வளவு இன்பம்விளையும். அதுபோலவே தேவாரத்திலும் கூட

400

'ஒன்பதோ டொன்றோடேழு பதினெட்
டொடாறு முடனாயநாள் களவைதாம்'

என்னும் கோளறு திருப்பதிகத்தின் இரண்டாவது பாட்டும் கார்த்திகைமுதல் நட்சத்திரமாகவைத்துப் பாடப்பெற்றதென்றும், அம்முறையும் வடமொழி வேதமுறையென்றும் பின்னர்ப்பிரகஜ்ஜிதகம் செய்தவராக மிகிரர்தாம் வானத்தைப் பரிசீலித்து அசுவதிமுன்னாக நிற்பதைக்கண்டு தற்கால நட்சத்திரகணித ஏற்பாட்டைச் செய்துவைத்தாரென்றும் உணர வகையுண்டு. மேற்கொண்ட விஷயத்தைவிடுத்து மற்றொன்று விரித்தகுற்றத்தை இதைப்படிப்பவர்கள் மன்னிப்பாராக.

ஆகவே யூதாகமங்களிற்கூறும் பிரளயம் (Deluge) நம்மவராற் கணிக்கப்பட்டதேயென்றும், இத்தகைய பிரளயங்கள் ஒவ்வொரு யுகமுடிவிலும் உண்டாகுமென்று நம்மனோர் நம்புவது சரியேயென்றும், யவனநாட்டுச் சரித்திரத்தில் கூறப்பட்ட (Deucalion & Pyrrah) பிரளயமும், (Noa) நோவாப்பிரளயத்துக்குமுன் இதுபோலவே நடந்த பிரளயமாகவே யிருக்குமென்றும் எண்ண இடமுண்டு. மேலும் இந்த யுகமுடிவிலும் பிரளயம் வருமென நம்புமிந்துக்களது கூற்றினை மேனாட்டு ஒரு சாரார் நம்பாதொழிவர். தவிரவும் இந்தயுகத்தை நாலாவது யுகமென உட்கொண்டு இதற்குமுன் சென்ற மூன்றுயுகங்களது காலசங்கியைகளையும் சேர்த்து நம்மவர் இந்நிலவுலகந்தோன்றி 195,5,8,85,013 வருடமாயிற்றென்பர். இதுவே இந்துவான சாஸ்திரக்கணக்கை யாதாரமாகக் கொண்டவுண்மை.

எஸ். ஆநந்தன்.

தர்மம் செய்; தர்மம் தலைகாக்கும்.

* * *

கர்மம் பெரிது, குழந்தையின் சைதன்ய ஸ்வபாவத்தைச் சுருங்கவைக்கிற தர்ய்தகப்பனை கர்மம் கண்டிக்காமல் விடாது.

* * *

ஊக்கமது கைவிடேல்.

* * *

401

THE NAIRS AND THEIR MARRIAGE CUSTOMS.

By

Sri R. Parvati Devi.

நாயர்களும் அவர்களின் விவாக வழக்கங்களும்.

கேரளதேசத்தில் நாயர்மார்களின் விவாக முறைகளை நம்ம ஹோதரிகள் அறிய விரும்புவார்க ளாகையால் ஸம்க்ஷேபமாக இங்கு வரைகிறேன். தென்னிந்தியாவில் வசிக்கும் மற்ற ஜாதிகளுக்குள்ளிருக் கும் விவாகவழக்கங்களைக் காட்டிலும் நாயர்களின் விவாக வழக்கங்கள் வெகுதூரம் வித்யாஸமுள்ளவைகளா யிருக்கின்றன. மலையாளத்துக்கு புதிதாகப் போகிறவர்கள் நாயர்களின் விவாகங்களைப் பார்த்து ஆச் சரியப்பட நேரிடும். நாயர் ஜாதியில் பிறந்த ப்ரதிபெண்ணும் தன் வாழ்க்கையில் இருதரம் விவாஹம் செய்துகொள்ளுகிறாள். முதல் விவாஹம் ருதுவாகிறதற்கு முன்னும் மறுவிவாஹம் ருதுவான பிற கும் நடக்கிறது. முதல் விவாஹம் செய்துகொண்டபெண் வழக்கப் படியாவது அல்லது சட்டப்படியாவது முதல்தாலி கட்டினவனுக்குக் கட்டுப்பட்டவளல்ல. அவனும் இவளுக்குக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் கல்யாணம் சாஸ்த்ரப்படி வெகு மும்முரமாக நடக்கும். இரண் டாவது விவாஹம் விமரிசையாக நடக்காது. இருந்தும் இரண்டா வது கல்யாணம்தான் வெகு முக்யம். ஏனென்றால், அது ஒரு பெண்ணை ஒருவனுக்கு மனைவியாகச் செய்கிறது. இதற்க, விவாஹம் எப்படி நடத்தப்படுகிறதென்று கவனிப்போம். முதல் கல்யாணம் தாலி விவாஹமென்று பெயர். பெண்ணுக்கு 9 அல்லது 10 வய தானவுடன் அவளின் பெற்றோர்கள் அவளுடைய விவாஹத்துக்கு ஏற்பாடுசெய்கிறார்கள். முகூர்த்தநாள் குறித்து, அந்த நாளில் விவா ஹச் சடங்குகள் ஏராளமாக நடைபெறுகின்றன. ருதுவாகாத பெண் கள் எவ்வளவுபேர் அந்த வீட்டிலிருக்கிறார்களோ அவர்களுக்குப் புது ஆடைகள் கட்டி கல்யாணப் பந்தலுக்குத் தங்களது மாமன்மார் களால் கொண்டுவரப்படுகிறார்கள். வயதுக்ரமப்படி பெண்கள் வரி சையாக உட்கார்ந்தபிறகு, க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்த திருமல்பத் என்ற பட்டப்பெயருள்ளவன் தயாராக இருந்து கல்யாணப் பெண் களில் வயதானபெண்ணுக்கு முதல்தாலியை சரியான [illegible] கட்டுகிறான். பிறகு தன் கையைச் சுத்தமாகக் கழுவிவிட்டு வயக்ரமப்

படி கடைசிவயதுபெண்கள் வரை முன்போல கட்டுகிறான். இப்படி ஒவ்வொருபெண்ணுக்கும் தாலி கட்டிவிட்டுக் கையைக் கழுவுவது தனக்கும் அதனால் தாலி கட்டப்பட்ட பெண்ணுக்கும் யாதொரு ஸம்பந்தமில்லை யென்பதைக் குறிக்கிறதாம். விவாஹ உத்ஸவம் மூன்றுநாள் நீடிக்கும். பந்து மித்ரர்களுக்கு ஏதேஷ்டமாக அன்ன மளிக்கப்படும். பூரிகள் கொடுக்கப்படும். காலாவதுநாள் ஊர் வலம் வெகு மும்முரமாக புறப்பட்டுவரும். அன்று ஆலயத்துக் குச் சென்று மண்டகப்படிகள் செய்வார்கள். கடைசி தினம் ஸமஸ்த ஜனங்களுக்கும் விருந்தளிக்கப்படும். ஏழையாயிருந்தாலும் கடனு வது கனத்தவட்டிக்கு வாங்கி செலவழிப்பான். முதல் விவாஹம் இப்படியாக முடியும்.

இப்போது இரண்டாவது விவாஹத்தைக் கவனிப்போம். இந்த இரண்டாவது கல்யாணம்தான் நாயர் பெண்களுக்கு மிகவும் அவச் யம். கடபுடலாக முதல் விவாஹம்மாதிரி கடன் வாங்கியாவது செலவழிக்கிறது கிடையாது. பெண் ருதுவானபிறகு அப்பெண் ணின் பெற்றோர்கள் தங்கள் பந்துக்களுக்குள் தகுந்தவும் மனதுக்குப் பிடித்தவுமான ஒருமாப்பிள்ளையை தேடுவார்கள். இந்த கல்யாணத் தில் பிள்ளையின் ஸம்மதத்தை யாவது பெண்ணின் ஸம்மதத்தையாவது கேட்கிறது கிடையாது. பெற்றோர்கள் இஷ்டப்படி ஒருதினம் குறிப் பிடப்படும். பிள்ளைவீட்டார் தங்கள் பந்துமித்ரர்களுடன் கல்யா ணப்பெண் கட்டிக்கொள்ள உயர்ந்த ஆடைகள் கொண்டுபோவார் கள். அன்றைய தினம் குறிப்பிட்ட லகனத்தில் பிள்ளை அந்த ஆடை களையும் நகைகளையும் பெண்ணிடம் கொடுப்பான். அப்போது பெண்வெகு மரியாதையுடன் கல்யாணத்துக்கு வந்திருந்தவர்கள் முன்னிலையில் அவன் கையிலிருந்து வாங்கி, அதைக் கொண்டு போய் அலங்கரித்துக்கொண்டு வருவாள். இந்த ஒரு சடங்கினால் தான் அப்பெண் இந்த பிள்ளைக்குக் கட்டுப்பட்டவளாகிறாள். இவன் தான் நாயகன். தெய்வமே இவன்தானென்ற எண்ணம் பெண்ணுக்கு போதிக்கப்படுகிறது. வாழ்க்கையில் இருவர்களும் கஷ்டஸுகங்களைப் பங்கிட்டுக்கொண்டு வெகு அன்புடன் வாழ்ந்துவரவேண்டும். இந்த விவாஹம் ஸுமுகச்சட்டத்தினால் ஆதரிக்கப் படுகிறதே யன்றி வேறில்லை. ஒருவருடன் ஒருவர் வாழ்நாளில் ஒத்து வாழவிருப் பமில்லாதவர்களாக இருந்தால் விவாஹத்தை ரத்துசெய்து கொள்ள

லாம். இப்படியாக அநேககேஸ்கள் நடைபெறுகின்றன. இங்கு ஒன்று மட்டும் கவனிக்கத்தக்கது. மற்ற ஜாதிகளில் புருஷன் பெண் ஜாதிக்குள் மனஸ்தாபமுண்டானால் ஒருவர் இறக்க ஒருவர்ப்ரார்த்திக்கிறதும் ஒருவரையொருவர் ஆயுள்வரை வெறுக்கிறதுமாக இருக்கின்றனர் ஆனால் நாயர் ஜாதியில் புருஷன் பெண்ஜாதிக்குள் கடுமையான மனஸ்தாபமுண்டானால் அவர்கள் வேறு விவாஹம் செய்துகொள்ளலாம் பருவமடைந்து நாயர்பெண்களுக்கும் புருஷர்களுக்கும் விவாஹமாகிறதால் இருவர்களின் ஸம்மதத்தைக்கேட்டு விவாஹம் செய்விப்பது மிகவும் மேன்மையானது. இப்போது படித்தவர்கள் ஒருவருடன் ஒருவர் ஸம்மதம் பெற்று விவாஹம்செய்து கொள்கிறார்கள். மற்ற ஜாதிகளைப்போல ஆயுள் முழுவதும் தக்காக்ராந்தாளாய் புருஷன் பெண்ஜாதி வாழ்க்கையில் கஷ்டப்படுகிறதில்லை. நாயர்கள் ஜாதி விவாஹம் மிகவும் ச்லாச்யமானமாகக் கருதப்படுகிறது. நாயர் ஸ்த்ரீயாவது புருஷனாவது தங்களுக்கு இருக்கும் ஸ்வதந்தரத்தைக் கொண்டு மதம் பிடித்து தப்புவழியில் நடக்கக்கூடாது. வெகு காலமாக விவாகமுறைகள் அமைக்கப்பட்டு நடைபெறுகிறதினால் அந்தமாதிரிவிவாஹமுறைகளை மாற்றப்ரயத்தனப் படுவது அறிவின்மையாகும்.

மலபார்
12-9-14

ஆர். பார்வதிதேவி.

MISS FLORENCE NIGHTINGALE.

By

Sri Meenatchi Ammal.

நைட்டிங்கேல் நாரீமணி.

வித்யாபிவ்ருத்தியிலும், நாகரீகத்திலும், செல்வத்திலும், பெருந்தன்மையிலும் தனக்கு நிகரான தேசம் இப்பிரபஞ்சத்தின் கண் ஒன்றுமே இல்லைஎன்று இடலி என்னும் நாடு விளங்காநின்றது அந்நாட்டு நீர் வளமும் நிலவளமும் குடிகொண்டு உறையாவிருக்கும்.

அந்த தேசத்தில் வஸிக்கும் ஜனங்கள், புருஷராயினும், ஸ்த்ரீயாயினும், நாணயம், பொறுமை, தாளாண்மை, மனவுறுதி ஸத்யம், கற்பு இவைகள் எல்லாவற்றினையும் ஒன்று சேர்ந்து உடல் எய்தியவர்கள் போலும்.

இடலிஎன்னும் மடைமைவாய்ந்த நாட்டிற்கு நெற்றியில் பொட்டு இட்டாற்போல் ப்ளாரென்ஸ் என்னும்ஒரு அழகிய பட்டினம் இருக்கிறது. அப்பட்டினத்தில் கல்லொழுக்கமும், நற்குணமும், சுவு, இரக்கம் அன்பு இவைகளே அங்கமாகக் கொண்ட ஒருஆங்கிலப் பிரபு வாழ்ந்து வந்தார்.

இவரது வாழ்நாள்கட்கு ஓர் அரும்பெரும் துணையாகக் கற்பிற் சிறந்தவளும், கார்முகிலென்ன கூந்தலும், பிறையென ஒளிரும் நுதலும், செவ்விய ரேகைகள் படர்ந்த நேத்திரங்களும் விண்படும் மின்னலென மிளிரும் இடையுமுடைய யௌவன மாது சிரோன்மணியான ஒரு பாவையை மணம்புரிந்து இருவர் மனதும் ஒரு மனதாய் தேக பிரண்டாய் இன்பசாகரத்தில் மூழ்கி வாழ்ந்து வந்தனர். இப்படி இருக்கும் சமயத்தில் 1820-ம் வருஷம் மேமீ 20 தேதியில் சுபலக்னத்தில் கோடி சூர்யப்பிரகாசமாயுள்ள ஒரு புத்ரீ ரத்னம் அவர்களுக்கு உண்டானாள். ப்ளாரென்ஸ் நகரில் பிறந்ததால் அப்பெண்ணிற்கு ப்ளாரென்ஸ்நைடிங்கேல் என்று நாமகரணஞ் சூட்டினர். நைடிங்கேலை அருமையினும் அருமையாய்ப்பாராட்டிச் சீராட்டித் தாலாட்டி நாளொருமேனியும் பொழுது ஒரு வண்ணமுமாய் சுக்லபக்ஷ சந்திரனைப் போல தினேதினே வளர்த்துவந்தனர்.

நைடிங்கேல் மடந்தை வித்தையில் தேற்சியடைந்தாள். அதனால் அறிவு ஒழுக்கம், அன்பு, திறமை, தயை, கூமை, மானம், ஸ்தியம், ஆகிய இவைகளே அவளுக்கு முக்கிய அங்கங்களாய் அமைந்தன. எவ்வளவிற்கு எவ்வளவு அழகு பொருந்தியவளோ அவ்வளவிற்கு அவ்வளவு நல்லகுணங்களும், நல்ல செய்கைகளும் சொற்சாதுர்யமும், ஸாமர்த்தியமும் உடையவள் நைடிங்கேல் அணங்கு.

"விளையும் பயிர்முளையிலே" என்ற ஆன்றோர் மொழிக்குத் தன்னையே சான்றாக்கிக் கொண்டனள். எவ்வித உயிர்களிடத்தும் அத்யந்தப்ரீதி கொண்டு அநுதாபம் உடையவளாய் அவைகளுக்கு நன்மை செய்வதே தன் கடமை என்று மனதில் தீர்மானித்தாள். அன்னன்மணியின் ஜீவகாருண்யத்திற்கு ஓர் உதாரணம் கீழ்வரும் விதம். ஒருநாள் மாலைப்பொழுதில் உலாவி வரும்போது அந்த அணங்கு ஓரிடத்தில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்த ஓர் இடையன் மிக வருந்துவதைக்கண்டாள். ஒருவர்கண்ணினின்றும் நீர் வரப்பார்த்து

ஸஹிக்க மாட்டாள் நைடிங்கேல். ஆகவே விரைந்து சென்று "நீ அழக் காரணம் என்னவென்று வினவ அந்த இடையன் ஐயோ என் கண்ணுக்குக் கண்ணுயிருந்த நாயின் காலை எந்த துஷ்டர் களோ காயப்படுத்திவிட்டார்களே! என் செய்வது. அதனது ஹிம்ஸைகளை கண்கொண்டுபார்க்க முடியவில்லையே. அவ்விதம் அவஸ்தைப்படுவதைவிட அந்நாயைக் கொன்றுவிடலா மென்றாலோ அந்தோ! எப்படி நான் என் உயிரைப்போன்ற நாயைக்கொல்லு வேன்" என்று வெகு உருக்கமாகச் சொன்னவைகளைக்கேட்ட தயா நிதியான நைடிங்கேல், விரைந்துசென்று நாயின் காயத்தை சிகித்ஸை செய்து பன்முறை இடையனை ஒத்தடங்கொடுக்கச் சொல்லி பிறகு சென்றாள். அது முதல் இந்த கருணை அநேக பிராணிகளுக்கு நேரும் ஆபத்துகளைக் கண்டு அவைகளுக்குவேற்றபடி பரிகாரம் செய்து வருவாள். அதனால் அவளுக்கு ஜீவகாருண்யம் நாளுக்கு நாள் விர்த்தி அடைந்து கொண்டே வந்தது.

மங்கைப்பருவம் கடந்து யௌவனம் எய்தியது. எவ்வளவு தனம் தனக்கு இருந்தும் ஓர் தக்க ஆடவனை மணம் புரிந்து தன் போன்றயுவதிகள் ஆட்டம், பாட்டு, ஆடை, ஆபரணம் இவைகளில் மனதைச் செலுத்தி இவ்வுலக இன்பத்தில் பற்று வையாது விவாக மும் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை. அவளுக்கு பரோபகார குணமே எல்லாவற்றினும் மேலிட்டுத் தன்னுயிரையும் மன்னுயிர் போல் பாவித்து அவர்களுக்கு நேர்ந்த ஆபத்தை நீக்கவேண்டு மென்கிற எண்ணமே கொண்டு அவ்வழியிலேயே தன் மனதைச் செலுத்தினாள். அதுவே அடைதற்கரிய மனித ஜன்மம் எடுத்ததின் பலன் என்று உண்மி உறுதியாகக் கடைபிடித்து நின்றாள். பரோப காரம் எவ்வழியில் செய்தால் தன் எண்ணம் ஈடேறும் என்று பல தடவை யோசித்தாள்.

ஆதரவற்ற நோயாளிகளுக்கு உயிர்ச்சேதம் நேரிடாது நிவர் த்திப்பதே மேலானது என்று எண்ணி 22ம் வயதில் கைஸர் ஓர்த் (Kaiser worth) என்ற கன்னிகாமாடத்தில் சென்று நோயாளி களுக்கு சிகித்ஸைசெய்யும் விதமும் வைத்தியமுறையும் கற்றாள்.

ஐசுவரியத்திற்கு அழகு நல்லகுணம், சூரனுக்கு அழகுவாய டக்கம், ஞானிக்கழகு சாந்தம், தபசிக்கழகு கோபம் இன்மை, வித்

தைக்கழகு வணக்கம், பிரபுவிற்கழகு பொறுமை, தருமத்திற்கு அழகு டம்பமின்மை, பணத்திற்கு அழகு கொடைஎன்றபடி நைடிங்கேல் நாரீமணி மனதில் எண்ணி, இவற்றில் முக்கியமானது தருமமே யாகையால் தருமகுணத்தையே கண்டு அதன் பயனை சீக்கிரத்தில் அடைந்தாள்.

1854 வருஷம் இங்கிலீஷ்காரருக்கும் ருஷியாகாரருக்கும் கிரி மியா என்னும் இடத்தில் ப்ரமாதமாக சண்டை நடந்துகொண்டிருந் தது. அதில் தினம் அநேகர் சிகித்ஸை யில்லாததால் மான நேர்ந்தது. சண்டை என்றால் என்ன. கணக்கற்ற உயிர்சேதம் அன்றே! தண் டிலே போனால் இரண்டிலே ஒன்று அல்லவா! நைடிங்கேல் நாரீ மணி இங்கிலாந்து தேசத்தவர் படும் கஷ்டத்தைப் பார்த்து மனமி ரங்கி தானே கிரிமியாவிற்குப் போக அனுமதிதரவேண்டும் என்று யுத்தயிலாகா மந்திரியான மிஸ்டர் ஸிட்னிஹெர்பர்ட் (Mr. Sidney (Herbert) என்பவருக்குத் தன் மனுவிஷ்டத்தைத் தெரிவித்தாள்.

அவர் அனுமதி தந்த பிறகு, தன்னுடன் 34 தோழிமார்கள் அவர்களது இஷ்டத்தின்பேரில் அழைத்து பாலாக்லாவா (Balack-lava) என்ற இடத்தை அணுகி அங்கு யுத்தத்தில் ரணகாயம்பட்டுக் கிடக்கும் வீரர்களுக்கு சிகித்ஸைசெய்ய ஆரம்பித்தாள். நோயாளிகளை விசாரிப்பது வெகு சுலபமான காரியமா? நோயாளிகளுக்கு ஹித மானவார்த்தைகள் பேசி அவர்களது உபத்ரவம் சற்று மறைந்திருக் கும்படி செய்வாள். காயம்பட்ட வீரர்கள் சிறிதுபொழுதும் நைடிங் கேல் நாரீமணியைவிட்டு இருக்க இஷ்டப்படார்கள். யாவரும் நைடிங்கேல் அம்மையாரை அம்மா என்றே கூப்பிடுவார்கள். இவ் விதம் ஆயிரக்கணக்கான வீரர்களை எமனுலகனுப்பாது இப்புவிதலத் திற்கே மீண்டும் தன் சிகித்ஸையால் உயிர்ப்பித்தாள். அவ்வளவு வீரர்களுக்கும் நைடிங்கேல் அம்மையே அன்னை.

இதுகாறும் நைடிங்கேல் மணம் புரியாது மாறாத கற்பிற்சிறந்த மாதசிரோன்மணியாகக் கழித்தாள். அவளது புகழ் எங்கும் பரி மளித்தது. உலகத்தில் அவளது காருண்யம் பரவாத இடமும் இல்லை. கிரிமியா யுத்தத்தில் செய்த உதவிக்காகவும் அநேக ஆங்கிலே வீரர்களை உயிர்ப்பித்ததற்கும் காலம்சென்ற மாக்ஷிமை தங்கிய விக்டோரிய மகாராணியார் நைடிங்கேல் அம்மையாருக்கு

வைரங்கள் இழைத்த ஒருமாலை பரிசளித்தார்கள். பூத உடம்பு அழியினும் புகழுடம்பு அழியாது. பரோபகாரதிலகம் என்று பெயர் பூண்டு தொண்ணூற்றிரண்டு ஆண்டளவும் தீர்க்காயுசு ஆக இருந்து 1910-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 13-ந் தேதி இந்நிலவுலகை நீத்து சுவர்க்கம் புகுந்தாள்.

தற்காலம் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் மாள்வோர் எத்தனைபேர்; அவர்களில் சிகித்ஸை யில்லாததது மரிப்போர் எவ்வளவோ? இது சமயத்தில் ஒரு கைடிங்கேல் அம்மையார்போல் ஓர் ஸ்திரீ நடந்து காண்பிப்பாளானால்கண்ணிறந்தவர்கள் ஒன்று சேர்ந்து உழைப்பவர்கள் இருப்பார்கள். கைடிங்கேலைவிட எத்தனையோ பங்கு அதிகமாகச் செய்யவல்லவர்கள் இப்பொழுதிருக்கும் ஸ்திரீ மணிகள். அவர்களெல்லாம் என்று தான் முன்வந்து சகாயம் புரிகிறோம் என்று உறுதிமொழி கொடுக்கப் போகிறார்களோ? எல்லாம் அறிந்த இறைவன் நமது ஸ்திரீமணிகளுக்கு முன்னம் அளித்திருக்கும் கற்பு அணியை காப்பாற்ற புத்தியை கொடுத்தவர் பரோபகார சிந்தையை அவர்களுக்கு அளிக்கும்படி ப்ரார்த்திக்கும்,

சேஷஸயனம்,
12th Sept. 1914.

மீனாக்ஷியம்மாள்.

LEARNING A LESSON IN THE WOODS.*

By

Mr. T. S. Rajagopalan.

அரண்யத்தில் அறிந்த பாடம்.

மூன்று சிறுவர்கள் கல்வியை இகழ்ந்து பாடசாலைக்குச் செல்லாமல் அங்கு மிங்கும் அலைந்து வந்தார்கள். அவர்கள் படிப்பைக் கடிவாளமாகவும், காட்டில் திரிந்து விளையாடுவதைக் கொள்ளாகவும் கருதினார்கள். இப்படி இருக்கையில் ஒருநாளவர்கள் கானகமடைந்து அக்கே சிலவிலங்குகளைக்கண்டு தங்களுடன் விளையாட வரும்படி வேண்டினார்கள். அதற்கு அவை தங்களுக்கு வரச் சவுகரிய மில்லை யென்று சொல்லி பிள்ளைகளைப் பார்த்து துக்கித்தன. பிறகு அவர்கள் வண்டுகளை யணுகிக் கேட்டபோது அவைகள் ஓரே குரலாய் "மெத்த அழகு! நாங்களும் உங்களைப்போல் சோம்பேரிகளாக வினை

யாடுவதாயிருந்தால் எங்கள் பழையவீடுகளை புதுப்பித்துக் கட்டுவது யார்?" என்று ரீங்காரம் செய்தன. பிறகு, சிறிதும் நிற்காமல் வேலை செய்துகொண்டிருந்த எறும்புகளுடையவும் தேனீக்களுடைய வும் சுறுசுறுப்பைக்கண்டு குழந்தைகள் தம்மிருப்பத்தை வெளியிடப் பயந்து அவைகளை விஷம்போல் வெறுத்து, கண்டெலி யிருக்கிடம் சென்றனர். சுண்டேலியோ "நாம் மாரிகாலத்துக்கு வேண்டிய உணவைத் தேடுகிறேன், இப்பொழுது என்னை மன்னித்துவிடுங்க" ளென்று பகர்ந்தது. வெண்புரு "நான என் கூடுகட்ட சிப்பிகள் பொறுக்கிக்கொண் டிருக்கிறேனே. நான் எவ்விதம் வருகிறது?" என்று மொழிந்தது. பின்பு ஒரு முயலை வருந்தியழைக்க அது தன் தலையை யசைத்துக்கொண்டு "நீங்கள் எது கொடுத்தாலும் நானிப்பொழுது வருதற்கில்லை. குழிதோண்டுகையில் என் முகத்தில் படிந்திருக்கும் மண்ணை நான்போய் சுத்திசெய்து கொள்ளவேண்டாமா?" வென்று சொல்லி ஓடிவிட்டது. அதை விட்டு புஷ்பங்களினிடம் போக அவைதாம் எஜமான் வந்து பார்ப்பதற்குள் பழங்களாகி விடவேண்டு மென்றும் தாமதப்படக் கூடாதென்றும் கூறி யனுப்பிவிட்டன. சற்றுநேரத்திற் கெல்லாம் அந்தவழியில் நடைபோட்டு நடந்துகொண் டிருந்த ஒரு சேவலை நோக்கி "மகாகனம் பொருந்திய சேவலாரே! உமக்கு என்ன வேலையிருக்கிறது? நீர் எங்களோடு வந்து கொஞ்சநேரம் விளையாடலாகாதா?" வென்றார்கள். அதற்கு சேவல் "அன்பர்காள்! இன்று என்னில்லத்தில் விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். நான் சட்டென்று போய் அவர்களுக்கு விருந்தூட்டவேண்டு" மென்று மொழிந்து நடந்துவிட்டது. பின் அப்பாலர்கள் அதிசயத்புதமாய் ஓடிக்கொண் டிருந்த சிற்றாற்றை யணுகி தங்களோடு சிறிதுநேரம் நின்று பொழுது போக்கும்படி ஆவலுடனழைத்தார்கள். சிற்றாறு ஆச்சரியங்கொண்டு "என் குழந்தைகளே! நான் என்ன செய்வதென்று எனக்கே தெரியவில்லை. நான் அல்லும் பகலுமிடைவிடாமல் சென்று கொண்டேயிருக்கவேண்டும். மனிதர், விலங்கு, தோட்டம், காடு, குன்று, வயல் இவைகளுக்கு நீர் கொண்டுபோய்க் கொடுப்பது என் பொறுப்பு. தவிர, பாத்திரம் முதலானவை சுத்தி செய்வதும், இயந்திரங்கள்

* Translated from *The Bairns' Magazine*, London, with the kind permission of the Editor.

சுற்றுவதும், மரமறுப்பதும், கம்பளம் நெய்வதும், என் வேலைக ளாகும். என் முதுகின்மேல் படகுகள் சுமக்கிறேன். அக்னியை யணைக்கிறேன். இன்னும் எவ்வளவோ நான் செய்வது கடவுளே யறிவன்! இப்படிப்பட்ட தொல்லைகளுடைய வெண்ணையா உங்க ளோடு விளையாடிப் பொழுதுபோக்க அழைத்தீர்கள்! நன்றாயிருக் கிறது!" என்றிறுத்திவிட்டு அதிவேகமாய்ச் சென்றது. குழந்தைகள் என்ன செய்வார்கள்! பாவம்! வரவர அதைர்யப்பட்டு வீடு திரும்ப உத்தேசித்தார்கள். அப்பொழுது அவர்கள் கண்ணில் ஒரு பறவை தென்பட்டது. அது ஒரு சமயம் தீனி தின்றுகொண்டும் ஒரு சமயம் உற்சாகமாய்ப் பாடிக்கொண்டு மிருந்தது. முன்போ லவே இதை நெருங்கியவர்கள் மன்றாடி யழைத்தார்கள். அதற்குப் பறவை "என்ன ஆச்சரியம்! குழந்தைகளே, நீங்கள் துக்கக்கடலில் மூழ்கி யிருப்பதாகத் தோன்றுகிறீர்கள். ஆயினும் எனக்கு உங்க ளோடு விளையாடவர நேரமில்லை. நான் இதுவரையில் பூச்சி புழுக் களைத் துறத்திப் பிடித்துக் கொணர்ந்துவிட்டு இப்போது என் குஞ்சு களை உறங்கச்செய்வதற்காக "**உழைப்பின் சிறப்பு**" என்ற இனிய விஷயத்தைப்பற்றி பாடிக்கொண்டிருக்கிறேன். நீங்களோ என்னை வேலையற்ற பறவையாக நினைத்தீர்கள் போலும்! எனக்கு பேசக்கூட சாவகாசமில்லை. இவ்வனத்திலிருக்கும் சுறுசுறுப்புள்ள மிருகங்களைத் தொந்திரை செய்யாமல் வந்தவழியேகுங்கள்" என்றுரைத்து மற படியும் கானம்செய்யத் தொடங்கிற்று.

இவ்விதம் பிராணிகளால் போதிக்கப்பட்டு, சிறுவர்கள் அன்று முதல் பிரதினமும் கலாசாலை சென்று "விளையாட்டென்பது, சுறுசுறுப்பு; கடமை இவ்விரண்டின் பலன் அல்லாது வேறில்லை" யென்றுணர்ந்து புத்திமான்களானார்கள்.

வடக்கு மடவிளாகம்,
சீர்காழி

T. S. ராஜகோபாலன்.

ஸமூக அபிவ்ருத்திக்காக பரோபகார முள்ளவர்கள் முன் வருவார்கள். பொது ஜனங்கள் கவனித்து முன் வருபவர்களை தேர்ச்சி செய்யாவிடில் அவர்களும் அதைர்யப்பட்டு விடுவார்கள். பொது ஜனங்கள் தங்கள் கடமை யறிந்து தங்களுக்காகப் பாடுபட வந்தவர்களை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

ஸ்வாமி விவேகானந்தர்.

* * *

PURITY OF BODY.

By

Mr. Sivadyananandan.

சரீரத் தூய்மை

தாம் நோயடையாதிருக்க வேண்டுமானால் சரீரசுத்தம் அவசியம். சரீர சுத்தமுள்ளவனுக்கே மனச்சுத்தமும் ஏற்படும். ஸ்நானம் பண்ணினவுடன் அழுக்கு வஸ்துக்களைத்தொட உங்கள் மனம் கூசுகிற தல்லவா? ஏன்? 'நாம் சுத்தமாயிருக்கிறோம். நமது தேகத்தை அழுக்குப் பண்ணிக்கொள்ளக்கூடாது' என்ற எண்ணமல்லவா? உங்களுள் பலரும் வாரத்துக்கு ஒருமுறைதான் தலை முழுகுவீர்கள். அந்தநாளை நீங்கள் எவ்வளவு பெரியநாளாக எண்ணி வேலை யொன்றும் செய்யாதிருக்கக் காணலாம். எண்ணை தேய்த்துக்கொண்ட அந்தநாளில் வேலைசெய்தால் நரம் புகள் தளர்ந்துபோய்விடும் என்ற எண்ணம். ஒருநாளும் குளிக்காதிருந்து அந்த ஒருநாள் மாத்திரம் குளிப்பதால் உங்களுக்கு அப்படிப் படுகிறது. ஆனால் நாள்தோறும் குளிக்கும் வழக்கத்தையாவது - வேறு சிலர்போல வாரத்துக்கு இரண்டுமுறை எண்ணை தேய்த்துத் தலை முழுகும் வழக்கத்தையா வது வைத்துக்கொண் டிருப்பவர் அப்படி ஒருநாளும் கருதார். தினம் சரீரத்தை வெந்நீரால் கழுவுவது தான் மிகச் சிறந்தது. குளிர்ந்த தேசங்களில் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதால் நரம்புவலியுண் டாகி நரம்புப் பிடிப்பு, பார்சவாயு, இடுப்புவலி முதலிய அநேக அபாயகரமான நரம்பு வியாதிகள் வரும். சில சமயங்களில் இருமல், நியூமோனியா முதலிய பெருவியாதிகளும் வரநேரும். அதனால் குளிர்ந்த தேசங்களில் வெந்நீரில்தான் முழுகவேண்டும். வெந்நீரா னது சரீரத்தில் படவே ரத்தநரம்புகளில் ஒருவித ஊக்கமுண்டாகி, அது அதிகரக்கத்தைமேல் தோலுக்குக் கொண்டுவரும். அதனால் குளிரால் சுருங்கி யிருந்ததோல் நன்றாகப் பருத்து விரியத் தேக வுரமுண்டாகும். அதிகம் கனக்க வேலைசெய்வார்களுக்கு வெந்நீர் ஸ்நானம் அனுபவை வாங்கும்.

அதிக உஷ்ண தேசங்களில் தோலதிகம் காய்ச்சப்படுவதால் மே லுடம்பிலுள்ளரத்தநரம்புகளில் இரத்தம் அதிகமாக ஓடுவதால் ஜீரண கருவி மூளை முதலிய விடங்களுக்கு ரத்தம் ஓட்ட குறைவுபடும்

அதற்காகக் குளிர்ந்த நீரில் முழுகுவதால் தோல்சுருங்க ரத்தத்தின் பெரும்பாகம் உள் கருவிகளுக்குப் போகும். அதனால்தான் "உஷ்ண தேசத்திலுள்ளவர் குளிந்த தண்ணீரில் ஸ்நானஞ் செயயவேண்டும்.

ஸ்நானஞ் செய்யும்போது கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. 'காய்ந்ததென்னும் தலையோழிந் தாடாரே, ஆய்ந்த வறி வினவர்' சரீரத்தத் தலங்களை நன்றுணர்ந்த பெரியோர் தலை குப் பிடித்து வாண்டியிருந்தாலும் கழுத்துக்குக் கீழ் குளிக்கமாட்டார் என்றார். கழுத்துக்குக் கீழ் குளிப்பது நோயான காலத்திலல்லாமல் இதர காலங்களில் ஒப்புக்கொள்ளப்பட வில்லை. முதலில் தலையை நனைத்துப் பிறகு மற்றைப்பாகங்களை நனைப்பதுதான் சரீர உஷ்ணத் தைத் தணிக்கும் என்று வயித்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

சாப்பிடுவது சரீரத்தை வளர்ப்பதற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு ஸ்நானஞ் செய்வது சரீரத்தை வியாதி வராமல் காப்பதற்கு அவசியம். மேல்நாட்டாரிற் சிலர் hip bath, foot bath, steam bath. முதலான பலவித ஸ்நான முறைகளால் அநேக பெரிய வியாதிகளை நீக்குகிறார்கள். ஒவ்வொரு அவயவங்களை வெந்நீரிலேயோ தண்ணீரிலேயே நனைப்பதினால் அவ்வுறுப்புக்களில் வந்துள்ள வியாதி நீங்குமானால் தேகமுழுதும் நனைப்பதன் பயனை யோசித்துப்பாருங்கள்.

ஸ்நானஞ் செய்வதற்கு காலையா மாலையா சிறந்தகாலம் என்ற கேள்வியைப்பற்றி விசாரிப்போம். காலையில் ஸ்நானம் செய்வதனால் பித்தம் சிலேத்துமம் (கோழை, கபம்) இவ்விரண்டு சம்பந்தமான வியாதிகளும் நீங்கி மூளை நரம்புகள் பலப்பட்டு மனோசக்தி செய்யச் சக்தி யதிகமாகிறது. அதனால் மூளை சம்பந்தமான வேலை யதிகமாக உள்ளவர்கள் காலையிலேயே ஸ்நானஞ் செய்யவேண்டும். தேகம்கஷ்டப்பட்டு வேலைசெய்பவரது உடல் வேர்த்து உடற்கழிவு களால் நிரம்பி யிருப்பதுடன், தேகமும் தளர்ந்து காணப்படுகிறுக்கும். அவர்கள் காள் முழுதும வேலைச் செய்துவிட்டுச் சாயங்கால வேளைகளில் ஸ்நானம் (ஸ்நானமென்பதைக் கவனிப்புங்கள், தலைமுழுகாதபோனால் குளித்துப் பயனில்லை) செய்வது அழுக்குகளைப் போக்கி தளர்ந்த நரம்புகளைப் பலப்படுத்தி இரவில் அவர்களுக்கு நல்லநித்திரையை யுண்டுபண்ணும். அதனால பாடு பட்டு வேலை செய்பவர்கள் சாயங்காலங்களில் குளிப்பதே நல்லது.

413

தேக சுத்தம் ஒருவனுக்கிருக்க வேண்டியது அத்தியாவசியம். சிலர் ஒருவரோடொருவர் கட்டிப்புரளுவதுதான் சிநேகத்துக்கு அடையாளம் என எண்ணுகிறார்கள். ஆனால் அது தவறான அபிப் பிராயம். நாகரீகமுள்ள எவனும் அத்தொழிலைச் செய்யமாட்டான். மேலும் சரீரத்துத் துவாரங்களிலிருந்துவரும் கூடி வாயுவில் கொஞ்ச தூரம் பரவும். அச்சூடானவாயு கெட்டதாகவே யிருக்கும். அவ்வாயு மற்றொருவனது சரீரத்தில் பட்டால் நிச்சயம் அது கெடுதலையுண்டு பண்ணும். அதனால்தான் ஒருவனுக்கு இவ்வளவுக்குக் குறைந்த இடம் இருக்கக்கூடாது என்று வித்தியா இலாகாக்காரர் விதியேற்படுத்தியிருக்கிறார்கள். ஒருவன் தோல் வியாதிகளான சிறங்கு, படை, வகுரி முதலியவற்றோடு கூடியிருந்தால் அவன் சரீரத்திலிருந்துவரும் காற்று நச்சுக் காற்றுதலால்தான் அவர்கள் சமீபத்தில் போகக்கூடாது என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அவ்வியாதிகளை ஒட்டுவார் ஒட்டியென்பர்.

இன்னும் ஒன்று சிலரிடத்து கின்று பேசும்போது வாய் நாறக் காணலாம். ஏன்? அவர்கள் பல்லைச்சுத்தமாய்த்தேய்க்காததனாலேயோ அல்லது அவர்களது குடல் அஜீரணத்தால் கெட்டிருப்பதினாலேயோ அப்படி காற்றம் வீசுகிறது. அக்காற்றை நாமுள்ளிழுத்தால் நமக்குத் தப்பாது வியாதிவரும். தேகம் சுத்தமாயிருந்தாலொழிய வியாதி வரா மலிருக்காது; மேல் தோலுக்கு ஸ்நானம் பண்ணுவதால் எவ்வளவு சுத்தம் ஏற்படுமோ அவ்வளவு சுத்தம் குடல்களுக்குப் பேதிக்கெடுத் துக் கொள்ளுவதால் வருகிறது. அதனால் மாதம் ஒருமுறை பேதிக்கு வாங்கிக் கொள்ளுவது நல்லது.

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல் எண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்டவர்தம்
பேருறைக்கிற் போமே பிணி.'

மேலும்,

'மருந்தென்பதொன்று வேண்டாவாம் யாக்கைக்
கருந்தியதற்றது போற்றியுணின்.'
'அற்றுலனறிந்துண்க வஃதுடம்பு பெற்றான்
கெடி துய்க்குமாறு.'

வியாதி வராதிருப்பதற்கு தேக பரிசுத்தமே முதற்காரணம். வியாதியாளாயிருந்தால் நம்மைப்பெற்ற தாய்கூட நம்மை அருவருப் பாள். நமக்கும் உலகத்தில் வாழ்வது ஒரு பெருஞ் சுமையாகத் தோன்றும்.

சிவத்தியாகராஜன்

413

VAIDYAM

By

Sri Balambal Ammal.

வைத்யம்.

கருணாநிதியாகிய ஈச்வரன் மானிடர்களை ச்ருஷ்டித்து அவர்கள் ஸுகாஸனங்யமா யிருக்கும்படி அனுக்ரஹம் செய்திருக்கிறார். ஆயினும் தேஹகர்மத்தை அனுசரித்துசரியானபடி கடவாமையினால் வ்யாதிகளுக்குட்பட்டு துக்கிக்கிறோம். ரோகம் மானஸிகமென்னும் சரீரகமென்னும் இருவகைப்படும். மனக்கவலை போன்றவைகள் மானஸிக ரோகங்கள். இவைக்கு கைகண்ட மருந்து வைராக்யம். கர்மஜங்கள் காலஜங்கள் பதார்த்தஜங்கள் என சரீர ரோகங்கள் மூவகைப்படும். பூர்வ ஜென்மாந்தர ப்ராரப்தத்தினால் வரும் ரோகங்கள் கர்மஜங்கள். அவைகளை அனுபவிக்காமல் போகாது, ஸீதோஷ்ணத்தினால் உண்டாகும் ரோகங்கள காலஜங்கள். இந்த ரோகங்கள் காலமாறுதல்களாலும் அல்லது ஸாதாரண சிகித்ஸைகளாலும் நிவர்த்திக்கப்படவேண்டும். அனுசித ஆஹாரங்களாலும் அதிக்ரம ப்ரவர்த்தனைகளாலும் உண்டாகும் ரோகங்கள் பதார்த்தஜங்கள். இவைகள் தகுந்த சிகித்ஸைகளாலேயே குணமாக்கப்படவேண்டும். பொதுவாக வ்யாதிகள் இன்னென்ன காரணத்தால் வந்ததென்று ஜனங்கள் அறிய சக்தியற்றவர்களா யிருப்பதினால் தகுந்த சிகித்ஸை செய்யவேண்டுமென்று சாஸனம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

தீபம் எண்ணெயும் வத்தியு மிருக்கும் காத்துப்படவே அசைகிறது. தீபத்தின்மேல் படும் காற்று வேகமாயிருந்தால் அது அணைந்து போகிறது. தீபத்தின்மேல் காற்றுப்படாமல் ஒரு மறைவை வைத்தால் தீபம் சலிக்கவும் சலிக்காது. அணையவும் அணையாது. தீபம்போலே தேஹத்திற்கும் எண்ணெயும் வத்தியும் கால நிர்ணயத்திற்கும், காற்று ரோகத்திற்கும் விளக்கு அசைக்க அணையாமல் வைக்கும் மறைவை சிகித்ஸைக்கும் ஒப்பிட்டிருக்கிறார்கள். வ்யாதிகள் வந்த காலத்தில் சிகித்ஸை செய்யாமலிருந்தால் அவை வ்ருத்தியாகி மரணத்திற்கு உள்ளாக்குகின்றன. ஆகையால் ரோகம் வந்தவுடன் தகுந்த பரிகாரம் செய்வது அத்யாவச்யம். எந்த ரோகத்திற்கு எந்த சிகித்ஸை அத்யாவச்யமோ பெரியோர்கள் இவ்விஷயத்தை தங்கள் அனுபவ

ஞானத்தால் நிரூபித்திருக்கிறார்கள். சிகித்ஸா முறைகள் பல விதமாயிருக்கின்றன. அவற்றில் இந்த தேசத்தில் பழக்கத்திலுள்ள முக்யமான சில முறைகளை விவரிப்போம்.

1. **ஜலசிகித்ஸா முறைகள்:**—நியமப்படி ஜலத்தை உபயோகிப்பதனால் ஸமஸ்தரோகங்களும் நசித்துவிடுமென்று மேற்சொல்லிய சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. **வர்ண சிகித்ஸா முறைகள்:**— ஸூர்ய க்ரணத்தைப்போல் வெவ்வேறு வர்ணங்கள் ப்ராணிகளுக்குண்டென்றும் ஒவ்வொரு வர்ணங்களின் ஆதிக்யத்தினால் ரோகங்கள் உண்டாகிறதென்றும் ஸூர்யரஸ்மியின் உதவியினால் அவ்வர்ணங்களை ஸமப்படுத்தி ரோகங்களை உபசாந்திசெய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

3. **வித்யுத் சிகித்ஸா முறைகள்.**—யந்த்ர ஸஹாயத்தினால் அதல சக்தியை தேஹத்தில் ப்ரவேசிக்கச் செய்து ரோகத்தை நிவாரணிக்கப்படுமென்றும் சொல்லப்படுகின்றன.

4. **ஹிதபதார்த்த சிகித்ஸா முறைகள்.**—எந்த பதார்த்தத்தை அதிகமாக போஜனம்செய்து ரோகங்கள் வருகின்றனவோ அந்த பதார்த்தத்தை ஸ்வல்பமாக உபயோகிப்பதால் அந்த ரோகங்கள் சொஸ்தமாகுமென்று சொல்லப்படுகின்றன.

5. **அஹிதபதார்த்த சிகித்ஸா முறைகள்.**—எந்த பதார்த்தம் எந்த வ்யாதிக்கு விரோதமோ அந்த வ்யாதிக்கு அப்பதார்த்தத்தை உபயோகித்தால் அது நிவாரணிக்கப் படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கடைசி முறைதான் நம் தேசத்தில் வெகு ப்ரஸித்தமாக வழங்கி வருகிறது. இது ஆயுர்வேத முறை, யூனானி முறை, மேனாட்டாரின் முறையென்று மூவகைப்படும். ஆர்யர்கள் அனுஷ்டிப்பது ஆயுர்வேத முறை. மஹமதியர்கள் அனுஷ்டிப்பது யூனானி முறை. ஆங்கிலேயர்கள் கையாடுவது மேனாட்டார் முறை என்று அறியவேண்டும். ஒரு வ்யாதியை சொஸ்தப்படுத்துவதில் ஆயுர்வேத முறையும் யூனானி முறையும் ஏறக்குறைய ஒன்றாகத்தானிருக்கும். மேனாட்டார் முறைமாத்ரம் சரியாயிருக்குமென்று காணப்படவில்லை.

ப்ராணிகளின் ஆரோக்யம் பித்தவாத கபதாதுக்களை அனுசரித்தே யிருக்குமென்றும் இவைகளில் எது அதிகமானாலும் ரோகம் ஜனிக்

க்குமென்றும் மேலும் மிதமிஞ்சிப்போனால் மற்ற இரண்டு தாதுக்களும் வெகு அதிகப்பட்டு மரணத்தை யுண்டாக்குமென்றும் ஆயுர்வேத முறையின் விந்தாந்தம். ப்ராணிகளின் ஆரோக்யம் மூளை ஹிருதயம் ஸ்வாசகோசம் ஆகிய இம்மூன்றைச் சார்ந்திருக்கிறதென்றும் இவைகளில் எது சிறிது கெட்டாலும் ரோகம் ஜனிக்குமென்றும் மேலும் எது அதிகமாகக் கெட்டாலும் மற்ற இரண்டும் கெட்டு மரணத்தை உண்டாக்குமென்றும் மேனாட்டு முறையின் விந்தாந்தம். ஆயுர்வேத முறைப்படி சொல்லும் பித்த ஆதிக்யமே மேனாட்டு முறைசொல்லும் ஹஸ்திஷ்கவிஷம். வாத ஆதிக்யம்தான் ஹிருதய விஷம். கபாதிக்யம்தான் ஸ்வாசகோசம். வாதபித்த ச்லேஷ மாதிகத்தால் ஜென்னி உண்டாகிறது. அதுபோல் ஹஸ்திஷ்க ஹிருதய ஸ்வாசகோசம் அதிகப்பட்டால் தேகம் கெட்ட தசையில் வந்து நிற்கும். இதினிருந்து ப்ராணி பிழைப்பதரிது.

வ்யாதியை ஒரு வைத்யன் பூர்ணமாக அறிந்து சிகித்ஸை செய்ய ஆரம்பிப்பானுகில் அது கட்டாயம் சொஸ்தமாகாமற் போகாது. ஒரு வ்யாதியை சிகித்ஸை செய்யப்போக பல வ்யாதிகள் வருகிறது அந்த வ்யாதியை முழுமையும் படித்து அறியாத தோஷமே. வெள்ளம் வந்து அணை கட்டுவதைக் காட்டிலும் வருமுன் கட்டுவது மேலாகும் போல் தேக தர்மத்தை அனுசரித்து ஒழுங்காக நடப்பதே வ்யாதி வராமல் தடுப்பதாகும்.

பாலாம்பாள் அம்மாள்.

A BENEFIT OBTAINED FROM RAJA RAM MOHUN ROY.

By

Sri J. Meenambal.

ஸ்ரீ ராஜாராம் மோஹன்ராய் அவர்களால் அடைந்த ஒரு நன்மை.

சகோதரிகளே, நான் ப்ரஹ்மஸமாஜத்தை ஸ்தாபித்த ராஜாராம் மோஹன்ராய அவர்களுடைய எண்பத்தி ரண்டாவது இறந்த நாள் திருவிழா கொண்டாடப்படும் தினத்தில் சிறிய விஷயம் ஒன்று எழுதி நமது அருமைச் சகோதரியார் தாயாரம்மாளால் நம் வகுப்

பார்க்கென்றே பிரசுரிக்கப்படும் **பெண்கல்வி** என்னும் பத்திரிகைக்கு அனுப்ப நினைக்கலானேன்.

இந்தியாவில் நம் வகுப்பார்களாகிய பெண்கள் பழைய காலத்தில் ஸர்வ சுதந்தரங்களையும் பெற்று மேன்மையை அடைந்து இருப்பினும், மத்தியகாலத்தில் சில காரணங்களால் பெண்களுக்கிருந்த அச் சுதந்தரங்கள் போய்விட்டன. அப்படிப்போன அச்சுதந்தரங்களை நாம் மறுபடியும்பெற்று வருவதற்குக்காரணம் விரிந்த கல்வியறிவும் பெருந் தகைமையும் உடைய சில புருஷர்களுடைய முயற்சி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அத்தகைய புருஷர்களுள் ராஜாராம் மோஹன்ராய் முதன்மையானவர். அவர் வங்காளத்தில் எண்பத்தாறு வருஷங்களுக்கு முன்பு பேர் அறிவும் பேர் ஆற்றலும் பெரும் வியாபகமும் உடைய ஒருபரம பொருளை மனதில் வழிபாடு செய்ய ப்ரஹ்மஸமாஜம் என்னும் பெயரில் ஒரு சபை ஸ்தாபித்தார். அவர் அந்த ஸமாஜத்தின் மூலமாக ஹிந்து ஜனங்களுடைய ஜாதி மதாசாரங்களைச் சீர்படுத்த முயற்சி செய்தார். அவர் பெண்களின் தாழ்ந்த நிலைமையைக் கண்டு, மிகவும் மனம் வருந்தி, அவர்களுக்குப் புருஷர்களோடு சமத்துவம் பெற உரிமைகளும், சுதந்தரங்களும் உண்டு என்று வாதித்தார். அவ்வாறு அவர்செய்த முயற்சிகளினால் ஹிந்து ஜனங்களுக்கும் முக்கியமாக பெண்களாகிய நமக்கும் அநேக நன்மைகள் உண்டாயின.

அவற்றுள் நமக்குண்டான ஒரு நன்மையைப்பற்றி மாத்திரம் நான் இந்தச் சிறிய உரையில் எழுதுகின்றேன்.

ராஜாராம் மோஹன்ராய் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ப்ரஹ்ம ஸமாஜத்தில் 1871-ஆம் வருஷத்தில் அங்கிகளாகச் சேர்ந்து இருந்த கல்வியாளர் சிலர் பெண்களைச்சன சமூகப்பந்தத்தினின்றும் விலக்க ஆரம்பித்தனர். பெண்கள் வாசித்திருப்பினும் வாசியாதிருப்பினும் எந்தச் சபையிலும் புருஷர்கள் முன்புவந்து இருப்பதும், அச்சபைகளில் ஏதேனும் விஷயங்களைக் குறித்து விவகரிப்பதும் ஆகிய வழக்கங்கள் கொடியன என்று விரிந்த அறிவில்லாதவைதிக ஜனங்களால் கடியப்பட்டிருந்தமை எல்லார்க்கும் தெரிந்தவிஷயமே யாகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சில சபைகளில்திரை அமைக்கப்பட்டு அதற்குள் சில பெண்கள் வந்திருப்பதுண்டு.

பெண்களின் பந்த விமோசனஞ் செய்யத் தொடங்கிய அவர்கள் ப்ரஹ்ம ஸமாஜக்கூட்டங்களில் தம்மோடு தம்மினவிகளும் புதல்விக களும் வந்து திரைகளுக்கு வெளியில் பீடங்களிலாவது அல்லது கம் பளங்களிலாவது தமக்குச் சமமாக உட்காரவேண்டுமென்றும், அப் படி உட்காருவதற்கு அவர்களுக்கு நியாயமான உரிமை உண்டென் றும் விசாலமில்லாத அறிவுடைய வைதிகப் பண்டிதர்களோடும் பிற ரோடும் வாதித்தார்கள். அதற்குமேல் அவ்வைதிகப் பண்டிதர்க ளும் பிறரும் பெண்கள் பந்த விமோசனஞ் செய்வாரோடு அல்வாறு செய்வது நவீனமானதென்றும், அவமான மானதென்றும், அபாய மானதென்றும் எடுத்துக்காட்டி மிக தீவிரமாயும், வைராக்கியமாயும் எதிர்வாதஞ் செய்தார்கள். ஆனல், பெண்களின் நிலைமையை உயர்த் தமுந்தின அறிவாளர் அவர்களுடைய நியாயங்களைக் கேட்கச் சம்ம திக்கவில்லை. அவ்வறிவாளருளள் டாக்ட்டர் அன்னெதசாரன் கஸ்ட் டகிர் என்பவரும், பாபு துர்க்க மோஹன்டாஸ் என்பவரும் வைதிகர் முதலானவர்களுடைய நியாயங்களை அலட்சியஞ்செய்து ஒரு பொதுக் கூட்டத்தின் மத்தியில் தம்முடைய மனைவிமார் முதலியவர்களோடு, அவர்களும் அங்கிகள் என்னும் சுதந்தரத்துடன், பிரத்தியக்ஷமாய் உட்கார ஆரம்பித்தனர். அது ஒரு பிரசண்டமாருதம் போன்ற குழப்பத்தினை விளைத்தது. விவிவான அறிவில்லாத வைதிகர்களும் அவர்களைச் சார்ந்த பிறஜனங்களும் ஸ்த்ரீகளின் பந்த நிவர்த்திசெய் வாரைப் பத்திரிகைகளில் மிகவும் தூஷித்தனர். ஆயினும், பெண் களின் பந்த நிவர்த்திசெய்வார் தம்முடைய கருமத்தில் உறுதியாய் நின்றனர். உடனே அவர்கள் ஒரு தனிச் சபையை ஸ்தாபித்து அதில் கடவுள் வழிபாடும் மதப் பிரசங்கங்களும் செய்து வருவா ராயினர்.

அச்சபையார் வேண்டுகையின்மேல் மஹா ரிஷி தேவேந்திர நாதர் என்பவர் அச்சபையில் சேர்ந்து காமே ஈசுரோபாஸனை செ ய்து அச்சபையாருக்கு ஊக்கம் உண்டாக்கினர். அவ்வீசுரோபாஸனை காலங்களில் அறிவில் முதிர்ந்த சில கனவான்கள் தம்முடைய மனைவி கள் சகோதரிகள் புதல்விகள் முதலியவர்களோடு அச்சபைக்குச் செ ல்லத் தொடங்கினர். அதைக்கண்ட வைதிகர்கள் சிலரும் பிறஜனங்கள் சிலரும் அச்சபையில்சேர ஆசை அடைந்து தம்முடைய ஸ்திரீகளை யுங் கூட்டிக்கொண்டு போய் ஈசுரோபாஸனையில் சேர்ந்திருக்க ஆரம்

பித்தனர். அதன்பின்பு தான் அந்த ப்ரஹ்ம ஸமாஜத்தாரைப் பார்த்து பிறரும் தம்முடைய ஸ்திரீகளைச் சனசமூக ஆசார சம்பந்தமான கூட் டங்களிலும், மத சம்பந்தமான கூட்டங்களிலும் அழைத்துக்கொண்டு செல்லத் துணிந்தனர். நாளடைவில், சபைகளின் பொதுக்கூட்டங்க ளில் மிக்க நாணமுடைய பெண்களுக்காகப் பிரத்தியேகமான இருப் பிடம் அமைக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த ப்ரஹ்ம ஸமாஜத்தில் மிகுந்த அறிவுடையோருள் உண் டான அம்மன வெழுச்சியினலும், தூண்டுகையினலுந்தான், சகோ தரிகளே! நாம் இப்போது பல சபைகளிலும் ஆண்மக்களோடு இரு ந்து பிறர் பிரசங்கிப்பதைக் கேட்கவும், சிற்சில சமயங்களில், நம் வகுப்பாருள் சிலர் பிரசங்கிக்கவும், ஆண்மக்களோடு சபை சம்பந்த மான பல காரியங்கள் செய்யவும் நாம் உரிமை பெற்றிருக்கின்றோம். இத்தகைய உரிமைகளும் சுதந்தரங்களும் நாம் பெற்றதற்குக் காரண மான ராஜர்ராம் மோஹன்ராய் என்னும் நம்முடைய காருணியத் தந்தையாரை நாம் என்றும் புகழ்ந்துகொண்டாடக் கடமைப்பட்டி ருக்கின்றோம்.

ஜ. மீனும்பாள்.

சென்னை
27-9-14

ANASUYA.

By

Sri Rangammal.

அனஸூயா.

ப்ரதிவ்ரத்யாதி குணங்களைப் பூண்டு பூராதன பௌராணிக பெண்களில் ப்ரவித்திபெற்ற இப்பெண்மணி கார்த்தமுனிவரின் குமா ரத்தி. இப்பெண்மணியின் ப்ரதிவ்ரத்யாதி மஹாத்மியத்தை அறி விக்கும் கதைகள் அனேகமுண்டு. த்ரிலோக ஸஞ்சாரியாகிய நாரத முனி ஒரு ஸமயம் இரும்பை நிலக்கடலை விதைகளைப்போல துண்டு துண்டாகவெட்டி அவைகளை த்ரிமூர்த்திகளின் பார்யைகளாகிய ஸரஸ் வதி, லக்ஷ்மி, பார்வதி ஆகிய மூவர்களிடம் கொடுத்து ஸமையல் செய்து கொடுக்கும்படி வேண்ட தங்களுடைய அசக்தியை மும் மூர்த்திகளின் பத்தினிகள் தெரிவித்து விட்டார்கள். உடன் நாரதர்

மனித உலகத்துக்கு வந்து அனஸூயைக் கேட்க அப்படியே அந்த இரும்புத் துண்டுகளை ஸமைத்துக் கொடுத்தார். நாரதர் ஸமையல் செய்தவைகளைக் கொண்டுவந்து மும்மூர்த்திகளிடம் காண்பித்து பரிஹாஸம் செய்தார். இந்த மூன்று தேவிகளும் ஒன்றுசேர்ந்து அனஸூயை மானபங்கம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

மும்மூர்த்திகள் வீட்டுக்கு வந்தவுடன் தேவிகள் மூன்றுபேரும் அவரவர்கள் பதிகளோடு பேசாமலிருந்தார்கள். காரணத்தை வினவி மும்மூர்த்திகள் தங்கள் தேவிமார்களின் இஷ்டப்படியே அனஸூயையின் பாதி வ்ருத்தியத்திற்கு பங்கம்செய்ய, மனுஷ உலகத்தையடைந்து அனஸூயை யிருக்கும் ரிஷி ஆச்ரமத்தையடைந்தார்கள்.

உடன் அர்க்ய பாத்ராதிகள் கொடுத்து போஜனத்துக்குத் தயாராகும்படி அனஸூயை மும்மூர்த்திகளை வேண்ட "ஏ பெண்ணே! நீ நிர்வாணமாக பரிமாறினாலொழிய நாங்கள் சாப்பிடோம். என்று சொல்ல, உடன் பர்த்தாவைக்கேட்டு ஸம்மதத்தைத் தெரிவித்தாள்." போஜனம்செய்ய உட்கார்ந்த மும்மூர்த்திகளும் அனஸூயையின் பாதிவ்ருத்ய ப்ரபாவத்தால் மூன்று சிசுக்களாக மாறினர்கள்.

அனஸூயை இம்மூன்று குழந்தைகளை வளர்த்துக்கொண்டிருக்க, மூன்று தேவிகளும் தங்கள் பர்த்தாக்கள் வராமையைச் சிந்தித்து அவர்களைத் தேடிக்கொண்டு பூவுலகில் அனஸூயை ஆச்ரமம் வந்தடைந்து தாங்களும் அனஸூயையிடம் பரிசாரகர்களானார்கள் சிலநாளுக்குப் பிறகு பரிசாரகர்களைப் பார்த்து என்னவேண்டுமென வினவ எங்கள் பர்த்தாக்களாகிய இம் மூன்று குழந்தைகளை தர வேண்டுமென்று கேட்க அப்படியே கொடுத்துவிட்டார். அனஸூயையின் பாதிவ்ருத்ய குணங்கள் உலகெங்கும் பரவின.

அத்ரி மாஹாமுனவரின் தவத்துக்கு மெச்சி த்ரிமூர்த்திகள் ப்ரத்யக்ஷமானார்களென்றும் அவர்களின் அம்சத்திலேயே சந்த்ரன், துர்வாஸர், தத்தாத்ரேயர் ஆகிய புத்ரர்கள் ஜனித்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமர் ஸீதையிடன் வனவாஸம் செய்யும்பொழுது ஒரு தடவை ஸ்ரீராமர் அத்திரிமுனி ஆச்ரமத்தை யடைந்தார். தம்பி லக்ஷ்மணருடன் ஷோடோசோபசாரம் செய்யப்பட்டார். பிறகு

அத்திரிமுனி பரமஸாத்வீகியாகிய ஸீதையை ஆத்ரி என்று அனஸூயைக்கு உத்தரவிட்டு, ஸ்ரீராமருக்கு தம்பார்யையின் மஹாதிமியத்தைச்சொல்லுகிறார். ஓ ராஜச்ரேஷ்டனே! "என்பார்யை அனஸூயை 1400 வருஷங்கள் அனஸூயா என்னும் வ்ருதத்தைச் செய்தாள். 19 வருஷங்கள் மழைத்துளிகள் பூமியில் விழாமலிருந்தன. தன் வ்ருத் பலத்தினால் மழையைப் பெய்யச் செய்து பூமியைக் குளிரப்பண்ணினாள். இந்த மஹாதபஸ்வியை கௌசலேயோல் நீனைத்து ஸீதைப் பூஜிப்பாளாக" என்று சொன்னர்.

ஸ்ரீராமர் ஸீதையைக் கூப்பிட்டு முனிவரின் வாக்கியங்களை கேட்டாயா? ஸீதை தபத்தால் மெலிந்திருக்கும் அனஸூயை நமஸ்கரித்து "ஏதாயே! நான் ஜனக சக்ரவர்த்தியின் புத்ரி. என்பேர் ஸீதை, தசரத சக்ரவர்த்தின் ஸீமந்தபுத்ரனாகிய ஸ்ரீராமருடன் வந்திருக்கிறேன்' என்றுசொல்ல அனஸூயையின்வருமறு போதிக்கிறாள். "ஹே ஸீதா! பதிப்ரியமாயிருந்தாலும் அப்ரியமாயிருந்தாலும் அவரையேபூஜிக்கும் நாரீமணிதான் இஹபரஸுகங்களைப் பெறுவாள். பர்த்தாவுக்கு ப்ரதிகூலமாக நடக்கும் ஸ்த்ரீகளுக்கு நரகப்ராப்தியைத் தவிர வேறொன்றுமில்லை. பதிபக்தி உன்னிடம் ஜாஸ்தியாகக்குடிக்கொண்டிருக்கிறது. இருந்தும் நான் சொன்னதையும் கேட்டுவை" என்று பிறகு ஆசீர்வாதம் செய்து ஸ்த்ரீகளுக்கு ஸர்வாபரணத்துக்கும் மேலானதாயிருக்கிற குங்குமத்தை கொடுத்தாள். அனஸூயை முன்னிலையிலேயே குங்குமத்தை இட்டுக்கொண்டு விடைபெற்று ஸ்ரீராமரை யடைந்தாள்.

STRANGE MEN.

நவீன மனிதர்.

கீழ்க்கண்ட விஷயம் நிள்ளான் வித்யா பாஸ்கரனில் வெளி வந்திருக்கிறது. அதை எடுத்து இங்கு பிரசுரிக்கிறோம்.

மலாய் தீபகற்பத்தின் ஓர் பாகமாகிய திரியங்காநு என்னும் நாட்டின் உட்பக்கங்களில் ஒருவகை மனிதர்கள் இருக்கிறார்களைக் தெரிகிறது. இவர்கள் காப்பிரிகளைப்போலவே கறுத்தமேனியும் குறுகின கூந்தலும், வெளுத்த பல்லும், தட்டையான மூக்கும் உடைய

421

வர்கள். ஆடையின்றி காட்டில் அலைந்து திரிவார்கள். சாதாரண மனிதர்களைக் கண்டால் வெருண்டோடி மறைந்துக்கொள்வார்கள். அறிவிற்குறைந்தவர்களென்றாலும் சிறிது சன்மார்க்கமாகவே அவர்கள் பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. விவாக சம்பவம் இச்சாதியாரிடம் நூதனமாக நடைபெறும்.

விவாகத்துக்கென நியமிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒரு சிறு மணற் குளியலை நடுவில்வைத்து அதைச்சுற்றிச் சுற்றி ஓடவேண்டும். இப்படி சுற்றி ஓடும்போது பெண்பிள்ளையை மாப்பிள்ளை பிடித்துக்கொள்ளவேண்டும். இதில் தவறுகிறதே கிடையாது. ஒரு போது அதிகம் தலைச்சுழற்சியால் எவராகுதல் தவறிவிழுந்து விட்டால் விவாகம் நிறுத்தப்படும். ஒரு மனுஷி உயிரோடிருக்குங்காலத்தில் வேறு விவாகஞ் செய்யக்கூடாதென்பது அவர்களின் கட்டுப்பாடுகளிலொன்று. பெண்களும் புருஷர்களைப்போலவே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கவேண்டும். சிறுவர்களைப்பார்த்தால் தேகவலிமை அப்பொழுது தெரியும். இந்தச்சாதியாரைப் பனகான்ஸ் என்று சொல்வார்கள். இவர்களுள் நிதானமான மார்க்கம் ஒன்று இல்லாதவர்களென்றாலும் மறுபிறப்பு ஒன்று உண்டென்ற விசுவாசமுடையவர்கள். திரியங்காடு காட்டில் புலிகள் அதிகம்.

ஒரு புலியைக்கண்டவுடன் தங்கள் சுற்றத்தாரென்று இருந்தவரின் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். அது உண்மையாயிருந்தால் உடனே அந்தப்புலி நினைத்த ஆளின்ரூபமாக மாறிவிடும். அவ்வாறு மாறுதலடைந்தபின் எதிரே நின்ற மனிதனை யடித்துக் கொன்றுதின்னும். இந்தச்சாதியார் ஒரே இடத்தில் இருப்பதே கிடையாது. நாடோறும் அலைந்து திரிவார்கள். நிதானமான இடங்கிடையாது. அலைந்து திரியுங்காலத்தே எப்பொழுதேனும் ஒரு பெண்ணுக்குள் பிரசவிக்க நேர்ந்தால் அவளைக் கவனிக்காமல் மற்றவர்கள் நடந்துபோய் விடுவார்கள். அவள் பிள்ளையைப் பெற்றுத் தரையில் கிடத்தி தனக்குணவுதேடிச் சென்றிருக்கும் சமயத்தில் புலியானதுவந்து குழந்தையைப் பட்சித்துவிடுமானால் அதற்கவள் மனஸ்தாபமடையாள். ஏனெனில், புலியானது தனது சுற்றத்தவர்களின் உருவம் என்று எண்ணுகிறாள்.

இனி, இவர்கள் மரித்தவளின் பிணத்தை இருந்த பாவனையாக வைத்து அடக்கம் செய்வார்கள். இடுப்பு வரையில் மண்ணுக்குள் புதைத்து எஞ்சியபாகம் வெளியில் தெரியும்படி செய்வார்கள். பிணத்துக்கருகில் சோறுந் தண்ணீரும் ஒரு பாரையையும் அருகில் வைத்துவிட்டுச் செல்வார்கள். வயோதிகனாய் நடந்துகொள்ளச் சக்தியற்றவனையும் இடுப்பு வரையில் குழிதோண்டி அவனை உயிருடன் புதைத்துவிடுவதும் வழக்கம். காட்டு மிருகங்கள் இவ்விதம் புதைப்பட்டிருப்பவனைக் கொன்று தின்னும். இவர்களின் தலையாரி தேகம் முழுதும் உரோமம் நிறைந்தவனாயிருப்பான். அப்படிப்பட்டவனுக்குத்தான் அவர்கள் வெகுமரியாதைச் செய்வதுண்டு. தலையாரியானவன் அரையில் ஒரு மணியைக் கட்டியிருப்பான்.—அதை அசைத்தால் யாவரும் ஒன்றாய் சேருவார்கள். பெரும்பான்மையும் கலகத்தை விரும்பமாட்டார்கள். திரியங்காடு சுவுத்தானைப்பற்றிப் பெரிய பயங்கரமாக எண்ணிடப்பார்கள்.

மாதுஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார்.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டாய்
இன்பநிலை தானேவந்தெய்து பராபரமே."

இந்தியாவின் வடக்கிலுள்ள ஹிமாசலத்தில் வஸிக்கின்ற மஹாத்மாக்களின் ஆக்ஞைப்படி, உலகத்திற்கு ஞானம் பயக்கும்படியான கருவியாக **பிரஹ்மக்ஞான** சபையை ஸ்தாபித்த புண்ணியரில் ருஷியா தேசத்தினராகிய மாதுஸ்ரீ **ஹெலிநாம்பாள்** அம்மையார் (H. P. B.) ஒருவர். மற்றவர் அமெரிக்காவில் ஐக்ய மாகாணத்தினரான ஸ்ரீமான் **ஆல்காட்டு** என்பவராவர். முன்னவர் **ஞானயோகினீ** என்றும் பின்னவர் **கர்மயோகி** என்றும் அறிஞர்களால் கருதப்பெறுவர். ஹெலிநாம்பாள் அம்மையார் 1831ஆம் ஜூலை 30-31உ இரவில் பிறந்தார். ஹான்ஸ் என்ற உயர்ந்த அந்தஸ்துள்ள குடும்பத்தினர். பிறந்த தருவாயில், மெலிந்த பல ஹீநமான குழந்தையாக இருந்தனர், அச்குழந்தை உடனேஇறக்கு மென்றே அநேகர் மதித்தனர். கிரேக் கிறீஸ்து சமய ஸம்பிரதாயப்படி, இறக்குமுன் ஞானஸ்நானம் (Baptism) ஒரு குழந்தை பெறுவிடில் அது நரகத்தைத்தான் அடையும் என்பது நம்பிக்கை. ஆகையால் அந்தப் பயத்துடன், உடனே இக்குழந்தைக்கு

முகஸ்நாகம் செய்யதார்கள். அக்காலத்தில் அதைச் செய்துவைத் துக்கொண்டிருந்த உபாத்தியாயருடைய வெளி அங்கியானது, அரு காமையில் இருந்த விளக்குச்சுடர் விழு, நெருப்புப் பட்டுஅழிந் தது. அவருக்கும் தீயால் புண் ஏற்பட்டது. இது ஒரு அபசகுன மாக அப்போதிருந்தவர்கள் நினைத்தார்கள். பின்பு பயந்திருந்தபடி குழந்தை இறக்காமல், மேன்மேலும் பலமுள்ள குழந்தையாகவிருத்தி யடைந்துவந்தது. ஆனல், மஹா துஷ்டத்தனமும் பிடிவாதமுள்ளவர். பால்யமுதல், திவ்ய திருஷ்டியும் (Clairvoyance) சில தேவதைகளு டன் (Nature Spirits) உறவும் உடையவராக இருந்து, அம்மையார் அற்புதமான வேடிக்கைகளும் விளையாட்டுகளும் செய்துவந்தனர். "இதோ பார், இந்த மரத்தைப் பட்டுப்போகும்படி செய்வேன்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது, அருகில் செழிப்பாய் பூ, காய், கனிகளுள்ள மரம் பட்டுப்போகும். அந்த வீட்டில் நெருப்புப் பிடிக்கிற தென்பார். உடனே அந்தவீடு நெருப்பால் வெந்து மடியும். குழந்தையில் மெல்லியதான தேகம் பின்பு இரும்புபோல கெட்டியாக ஏற்பட்டது. ஆண்மக்களைப் போலவே இருபுறத்திலும் காலைத் தொ ங்கவிட்டு, முரட்டுத்தனமான இராணுவக் குதிரைகள்மீது ஏறிச் சவாரி செய்ய மிகவும் பிரியமுடையராயினர். இவர் முரட்டுச் சுபாவ த்தையும், பிடிவாதத்தையும் கண்டு, இவருடைய பாதுகாப்பு ஸ்திரீ (Governess) ஒருத்தி, வேடிக்கையாக "ஒரு கிழவன்கூட உன்னை விவாகம் செய்து கொள்ளமாட்டான்" என்றனள். அப்போது வயது 17. உடனே, ஒரு கிழவனை 1848ஆம் ஜூலைமீ 7உ மணம் புரிந்த னர். விவாகக் கிரியைகள் மாத்திரம் நடந்தன. ஸ்திரீ புமான்களாக ஒரு நாள்கூட வாழ்ந்தாரில்லை. உடனே அந்த ஸம்பந்தத்தை அம்மை யார் வெறுத்தனர். விவாகமாகி மூன்று மாஸத்திற்குள் எல்லாம் மாறுவேஷம் பூண்டு வீட்டைவிட்டு வெளியேறி, கப்பல் யாத்திரை செய்தனர். குப்த சாஸ்திர விஷயங்களின் ஆராய்ச்சி செய்ய விரும் பினவராகி இவர் பலதேசம் சென்றனர். எகிப்துக்குப் போயினர். பின்பு 1857ஆம் தம்முடைய பிதாவை லண்டன் நகரத்தில் சந்தித் தனர். இருவரும் பேசிக்கொண் டிருக்கையில், தமக்கு அடிக்கடி காட் சியில் தோன்றிய மஹா புருஷனைக் கண்டனர். உடனே அவரை நோ க்கிச் செல்ல முயன்றனர். அவர் அவ்விதம் வேண்டாம் என ஸம்க் ஞை காட்டினர். மறுநாள் அம்மையார் முந்திய தினம் தாம் கண்ட

காட்சியைப்பற்றி ஏகாந்தமாகச் சிந்திக்கவேண்டுமெனக் கருதி ஹைட் பார்க்கு (Hyde park) என்ற தோட்டத்தில் உலாவினர். அப்போது அந்த மஹா புருஷர் திரும்பவும் தோன்றி விஸ்தாரமாக அம்மையாரு டன் ஸம்பாஷித்தனர். "நாம் நேரில் உம்மைச் சந்திக்க வேண்டு மென விரும்பினேம். பிரஹ்மஞான சபை ஒன்றை உலகாக்ஷணார்த்த மாக ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளோம். அதை ஸ்தாபிக்க உலகில் நீர் வெளிநின்று வேலை செய்யவேண்டும். அதில் சங்கடங்கள் உண் டாகும், அதை உத்தேசித்து, மூன்று வருஷம் திபேத்து என்னும் தேசத்தில் நீர் வஸிக்கவேண்டும். அப்போது, அச்சபையின் விஷ யங்கள் எல்லாம் நன்கு அறிந்து கொள்ளலாம். ஸங்மார்க்கமுறை சம் பந்தமான ரஹஸ்யங்களைத் தெரிந்து கொள்ளலாம். இவ்விதமாக வரப் போகும் கார்யத்திற்கு ஆயத்தமாகலாம்" என்று ஆக்ஞாபித்தார். "சந்நிதிகையுள்ள ஒரு இரவில் வெகுநாளாகக் காணவேண்டுமென விரும்பியிருந்த மஹா புருஷரை 1857ஆ ஆகஸ்டுமீ 8த்தில், லண் டன் பட்டணத்தின் பாம்பு வளவு (The Serpentine) என்ற இட த்தில்கண்ணுற்றேன்" என்பதாக, அம்மையார் வைத்திருந்த தினசரி ஜந்திரியில்வ ரைந்துள்ளது.

சில காலத்திற்குப் பின்னர் 1857ஆம்த்தில், பிதாவின் அநுமதி பெற்று, உலக யாத்திரை செய்தனர். 17 வருஷகாலம் அப்படி பல தேசங்கள் சுற்றினர். 1857ஆம்த்தில் திபேத்து போயினர். திடீரென 1858ஆம்த்தில் ருஷியாவுக்குத் திரும்பினர். பின்பு வெளி தேசங்களுக் குப் போகிறதும் வருகிறதுமாக 1863ஆ வரை திரிந்தனர். அதன் பிறகு 6 வருஷகாலம் அதாவது 1870ஆ வரை இன்ன விடத்திற் குப் போயினர் என ஒருவருக்கும் தெரியாமல் ஆகியாக் கண்டத்தி லுள்ள மலைப் பிரதேசங்களில் ஸஞ்சரித்தனர். அவர் மரணமாயினரெ ன்றே அவர் பந்துக்கள் நினைத்தார்கள். 1870ஆ நவம்பர்மீ 7உயில் ருஷியா தேசத்திலுள்ள ஒடிஸா நகரிலுள்ள அம்மையாரின், அத்தை (பிதாவின் சகோதரி) யினிடம் திபெத்து தேசத்தினின்று ஒரு ஆள் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்து உடனே மறைந்தான். அந்தக் கடி தத்தில் ஒரு பாகத்தில் அடியில் வருமாறு ஒரு குறிப்பு எழுதப் பெ ற்றிருந்தது. அதில் "K. H." என்று பெயர் வழங்கும் மஹாத்மா வின் கையெழுத்திருந்தது. "H. B. P." என்பாரின் பெருன்ம தங்

திய பந்துக்கள் கொஞ்சமேனும் கவலை கொள்ளவேண்டாம். அவரைப்பற்றிப் பயமும் வியஸனமும் கொள்ளற்க. H. P. B அம்மை ஜீவித்திருக்கின்றார். சௌக்கியமாக விருக்கின்றார் எனவும், தூரமானதும் அந்யமானதுமான தேசத்தில் இருந்தபோதிலும் சுகமாக வலிக்கிறாரென்றும், இதன் மூலமாய்த் தம்முடைய பிரியமுள்ள பந்துக்களுக்குத்தெரிவித்துக் கொள்ளுகின்றார். 18 அமாவாஸ்யைகள் கழியுமுன், தம்முடைய பந்துக்களை நேரில் பார்ப்பார்''

பின்பு இக்கடிதத்திற் கண்டபடி 1872ஆம் வருஷத்தில், ஓடிஸா நகரத்திற்கு அம்மையார் திரும்பி வந்தனர். இந்த யாத்திரையில் வந்த கப்பல்உடைந்து அபாயத்துக்காளாகி, கேய்ரோ பட்டணத்திலிறங்கி,சாப்பாட்டுக்கடை (hotel) வைத்திருந்த கூலாம்பு என்பவர்களுடன் தங்கியிருந்தனர். பின்பு தம்முடைய பந்துக்களையும் சிநேகிதர்களையும் பார்த்துவிட்டு, பிரான்க தேசத்துக்குப் போயினர். பின்பு தம்முடன் தொழில் செய்வதற்கு ஏற்பட்ட ஸ்ரீமான் ஆல்காட்டு என்பாரை சந்திக்க அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினர். ஐக்ய மாகாணத்தில் அவரைக் கண்டுகளித்து சிநேகம் செய்துகொண்டு அவருடன் பிரமஞ்ஞான சபையை 1875ஆ நவம்பர்மீ 17உயில் ஸ்தாபித்ததும், பின்பு அவருடன் இந்தியாவுக்கு வந்ததும், பின் நடந்த மற்ற விஷயங்களும், ஸ்ரீமான் ஆல்காட்டு என்பவர்களின் சரிதத்தில் விஸ்தாரமாக முன்னர் எழுதியுள்ளோம். அமெரிக்காவில் இருக்கும்பொழுதுதான் '' பிரஹ்மவித்யை வெளிப்படல்'' (Isis Unveiled) என்ற உயர்கலம் அமைந்த ஞாகக் களஞ்சியம் என்று சொல்லத்தகும் ஒரு நூலை வெளியிட்டனர். இதின்கண், ஆசியாக்கண்டத்தின் முக்கியமாக இந்தியர்களின் ஞாக உயர்வும், மஹா ரிஷிகளின் ஞாக உபதேசங்களும், சித்திகளும் இவைபோன்ற பல விஷயங்கள் விஸ்தாரமாகச் சொல்லப் பெற்றிருக்கின்றன. இது வெளிவந்த காலத்தில் உலகத்தில் முக்யமாக மேல் நாட்டிலுள்ள வித்வான்கள் இதின் கண்ணுள்ள ஞாக விஷயங்களின் பெருக்கத்தைக் கண்டு பிரமித்து வியந்தனர். தற்சமயம் மேல்நாட்டில் நாஸ்திகமதம் என்னும்

'' சண்ட மாருதம் சுழித்து அடித்தார்த்த
உலோகா யதன் எனும்
ஒண்டிறற் பாம்பின்
காபே தத்த கடுவிஷம் எய்தி''

எங்கும் வியாபித்திருந்தது. எல்லா அறிவும், எல்லா நலமும் தங்களிடமே இருந்திருக்கின்றன வென்று மேல் நாட்டினர் கருவங்கொண்டு மதிமயங்கித் திரிந்தனர். இந்த அற்புதமான ஞாகநூல் வெளிவரவே, ஆசியாக்கண்டத்தினரின் ஞாகப் பயிற்சியையும் மஹிமையையும் தெளிவாக யாவரும் அறிந்துகொள்ளும்படி ஏற்பட்டது. இவ்வருமை பெருமை தங்கிய நூலை உலகத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான எல்லைக் கல்லாக அறிஞர்கள் மதித்தார்கள்.

முன் பிரஸ்தாபித்த கூலாம்பு ஸ்த்ரீபுமாந் இருவர்களும் அம்மையாரைச் சரணமடைந்து அம்மையாரால் போஷிக்கப்பட்டனர். ஆசியாற்றில் இவர்கள் அம்மையாருடன் கூடவே வஸித்தார்கள். சில துஷ்டர்களின் போதனையின்மேல், சில திரவிய ஆசைக்குட்பட்டு, அம்மையார் இல்லாத காலதத்தில், சதியோசனை செய்து சில மோசமான கட்டுப்பாடான சங்கதிகளை உண்டுபண்ணியும், அக்கிரமங்கள் செய்யவும் துணிந்தார்கள். அதனால் இவர்கள் ஆசியாற்றின் பங்களாவினின்று துரத்தப் பெற்றார்கள். அதன்மேல் சில கிறீஸ்து பாதிரிகளுடன் சேர்ந்து சில அவதூறான விஷயங்களை அம்மையாரின் மேல் கற்பித்தார்கள். இவர்களின் அக்கிரமும், இவர் செய்துவந்த கபட நாட்டமான மோசங்களும், பிரஹ்மஞ்ஞான சபையாரால் வெளிவந்திருக்கின்ற புத்தகங்களில் பரக்கக் காணலாம்.

பின்பு தேஹ அஸௌக்யமா யிருந்தபடியால் இந்தியாவை விட்டு அம்மையார் இங்கிலாந்துக்குப் போய் சில வருஷங்கள் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலாலும் வஸித்தார். அக்காலத்தில் பிரஹ்மஞ்ஞான சபையின் முதல் நூலெனப் பிரக்யாதி பெற்ற '' குப்த சாஸ்திரம்'' (Secret Doctrine) என்ற ஒரு ஞாக நூலைத் தம்முடைய குருநாதனின் அநுக்ரஹத்தால் எழுதிப் பிரஸித்தம் செய்தனர். இப்புஸ்தகத்தின் உற்பத்தி வரலாற்றைப்பற்றியும், அம்மையாருடைய ஞாக முதிர்ச்சியையும் மஹிமையைப் பற்றியும், அம்மையாருடன் கூடப் பழகி வஸித்திருந்தவர்களும் ஸ்நேகிதர்களும் ஆங்கிலத்தில் பல புஸ்தகங்கள் எழுதியுள்ளார்கள் அவைகளினின்று பின் ஒரு சமயத்தில் முக்கியமான விஷயங்களை எடுத்து வெளிப்படுத்துவோம்.

கடைசியாக அம்மையார் இங்கிலாண்டில் லண்டன் நகரத்தில் வஸித்தனர். 1891ஆ ஏப்ரில்மீ 26 தேதியில் அம்மையாருக்கு ஜ்வரங்கண்டது. சிலகாள் ஜ்வரத்தால் கஷ்டப்பட்டு 1891ஆ மேமீ 8உ பகலில் தேஹ வியோகமானார்.

அதன்மேல் அம்மையார் சரீரம் அம்மையார் வேண்டுகோளின் படி தஹநஞ் செய்யப் பட்டது. அம்மையார் இரும்புபோன்ற சரீரத்தை உடையவர் ஸிம்ஹம்போன்ற மநோதீரர். எந்தக் கஷ்டம் வந்தாலும் எந்தத் துக்கம் நேர்ந்தாலும் மனம் சலியாதவராய்ப் பாறை போல் எதிர்த்து நிற்கும் ஸ்வபாவமுடையவர். ஸத்யத்தையேநாடி உலகம் நலம்பட வாழ வேண்டுமென்று தம்முடைய ஆயுள் நாள் முழுமையையும் தம்முடைய குருநாதனுக்கு அர்ப்பணம் செய்து அநேக நற்கர்மங்கள் செய்தனர். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தம்மால் நிறுவப்பெற்ற பிரஹ்மக்ஞாந சபைக்குத் தத்தம் செய்தனர். ஸந்மார்க்க முறையில் வ்யக்தமாய் உண்மை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த அநேகரை நல்வழிப் படுத்தினர். அவர்களுக்கு ஞாநோபதேசம் செய்தனர். இவர்களால் உலகத்திற்கு வெளிவந்த ஞாந நூல்கள் பல. அவையெல்லாம் போற்றத்தக்கவை. அவைகளுள் முன் பிரஸ்தாபித்த "பிரஹ்ம வித்யை வெளிப்படல்" (Isis Unveiled) என்ற புஸ்தகமும், "குப்தசாஸ்திரம்" (Secret Doctrine) என்ற ஞாநக்கருவூலமும் உலகத்தில் ஆங்கில பாஷையுள்ளவரையும் மஹிமைபெற்று விளங்குமென உறுதியாய்ச் சொல்லலாம். வெள்ளியம்பலம் என்பது ஹிமாசலத்தின்கண் உள்ள ஸித்தர்களின் கூட்டம் அதின் ஞாந தூதராக இக்காலத்தில் பிரகாசித்த புண்யர் இவர் தாம் ஸ்தாபித்த பிரஹ்மக்ஞான சபையை இன்னும் அதிக மேன்மை பெறும்படியாகச் செய்யும் பொருட்டு மறுபடியும் இப்போது ஒரு புருஷ சரீரம் எடுத்திருக்கிறாரென்றும் சீக்கிரம் வெளிப்படுவாரென்றும் அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வம்மையாரின் சரித்ரம் மதுரை ப்ரஹ்ம ஞான ஸபையாரால் வெளிப்படுத்தப் பட்டது. இவரின் சரித்ரம் நமது ஸஹோதரிகளும் அறிய வேண்டுமென்று அப்படியே ப்ரசுரித்திருக்கிறோம்.

428

Interesting Items.

I

CONCERNING CHILDREN.

குழந்தைகள் விஷயம்.

Children's Sleep.

குழந்தைகளின் தூக்கம்:—குழந்தைகளுக்கு ஸாப்பிடுவதும் தூங்குவதும் தவிர ஒரு வேலையும் கிடையாது. வயிற்றைப் பசிக்கும்பொழுது கத்த ஆரம்பிக்கும். இதை அறிந்து தாய்மார்கள் பால் கொடுக்க வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு குழந்தைகள் பகலிலும் இரவிலும் தூங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேகத்துக்கு நலம். குழந்தைபடுத்து உறங்கும் அரைக்குள் ஒருவரும் திடீரென்று நுழையக்கூடாது. பிசாசுமாதிரி கத்தவும் கூடாது. குழந்தை பயந்து விட்டால் மிகவும் தேகத்துக்கு அபாயம் உண்டாகும். நாயாவது பூனையாவது குழந்தை தூங்கும் அரையில் தனியாக இருக்கக் கூடாது. பூனையானது மிகவும் கபடமான ஜெந்துவாதலால் தனியாக விட்டு வைத்தால் குழந்தைக்குக் காலனாக வந்து முடியும். சில குழந்தைகள் திடீரென்று பாலை விழுங்கும் பால் கொடுக்கும்போது அரைவாய்ப்பால் தான் கொடுக்கவேண்டும். பால்கொடுத்தவுடன் குழந்தையை படுக்கவைக்கக்கூடாது. கொஞ்சநேரம் மடியில் வைத்து தாலாட்டி விட்டுப் பிறகு தூங்க வைக்கவேண்டும். பால் குடித்தவுடன் தூங்க வைத்தால் அஜீர்ணத்தை யுண்டாக்கும்.

A Substitute for Coffee.

காப்பிக்கு ஒரு மாற்று:—காப்பிக்குப் பதிலாக ஊசித்தகர விதையை உபயோகம் செய்வது நலமென்று கருதுகிறார்கள். அதில் காப்பியின் சாரமும் நல்ல மணமும் இருக்கின்றதாம். மலச் சிக்கலை போக்கடிக்கிறதாம். மேலும் கோதுமையை வறுத்துத் தூள்செய்து பால் சர்க்கரையுடன் சேர்த்துக் குடிப்பது நல்ல வழக்கமென்றும் அதனால் மூளைக்கு அதிக வலிவுண்டாகிறதென்றும் சகல ஜாதிகளுக்கும் இது பொருத்தமான ஆகாரமென்றும் டாக்டர் பழணியாண்டியவர்கள் தெரிவிக்கிறார்.

Reading when taking meals.

சாப்பிடும் பொழுது வாசித்தல்:—சாப்பிடும் பொழுது வாசித்தல் கடுமையான அஜீர்ணத்தைக் கொடுக்கிறதாம். ஆத்திரமாகச் சாப்பிட்டு வேகமாய் சாதம் விழுங்கும் போது ஜீர்ணக் கருவிகள் பலஈனப்பட்டு வருஷக் கணக்காய் உபாதியை உண்டாக்குகிறதாம். கஞ்சியோ கூழோ எது சாப்பிட்டாலும் ஸாவதானமாக இருந்து சாப்பிடுவதுதான் உத்தமம். குளிர் தடிமன் காமாலை இதுபோன்ற வ்யாதிகள் அஜீர்ணத்தாலென்று சொல்லுகிறார்கள்.

Causes for children's death.

குழந்தைகளின் மரணத்துக்குக் காரணம்:—(1) கர்ப்பிணிகளுடைய சரீரத்தைத் தகுந்தவாறு இரக்ஷிப்பதில் அஜாக்கிரதையும் அவ்விதம் செய்வதில் பரிச்சயமின்மையும். (2) பிரஸவ காலத்தில் குழந்தையையும் தாயையும் வெகு ஜாக்கிரதையாகப் பரிபாலிக்காமை.

429

II

DOMESTIC HINTS AND SUGGESTIONS.

க்ரகத்தியக் குறிப்புகள்.

Painless childbirth.

ஸுகப்ரஸவம்:—அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீகள் ஸுகப்ரவஸத்துக்கு ஒரு புதிய முறை கண்டு பிடித்திருக்கிறார்கள். இம்முறையினால் 5000 கேஸ்கள் ஒரு பழுதுமில்லாமல் குணமடைந்திருக்கின்றனவாம். குழந்தை மரணம் குறைகிறதற்கு இது ஸாதகமாயிருக்கிறதென்று டாக்டர் அபிப்பிராயப் படுகிறார்கள். அந்த முறையாவது, ஸந்தியா காலத்தில் ப்ரஸவ வேளையில் ப்ரஸவ ஸ்த்ரீகளை ஒரு கட்டிலில் படுக்க வைத்து இன்ஜக்ஷன் செய்தால் அரை தூக்கம் வருமாம். இன்ஜக்ஷன் சரியானபடி மூளையில் வேலை செய்கிறதாவென்று அறிய ஒரு வஸ்துவை அவள் முன் காண்பிக்கிறதாம். அரை மணி கழித்து இன்னுமொரு தடவை காண்பிக்கிறதாம். முதல் தடவை அவ்வஸ்துவைப் பார்த்தது ஞாபகமிருந்தால் இன்னும் ஒரு இன்ஜக்ஷன் செய்ய வேண்டுமாம். மறுபடியும் அவ்வஸ்துவைக் காண்பிக்க வேண்டும். தன் மெய்மறந்து ஸுகமாக இருக்கும் வேளையில் குழந்தை வயிற்றிலிருந்து சிரமமில்லாமல் வெளிவந்து விடுகிறதாம். தாயாருக்கும் குழந்தைக்கும் ஒருவித உபத்ரவம் கிடையாதாம். ஆயுதங்கள் உபயோகிக்க அவசியமே இல்லையாம். குழந்தை பிறந்து 5 வது நாளில் தாயார் வழக்கம்போல் வீட்டு வேலைகள் செய்யலாமாம். ஜெர்மெனியைச் சேர்ந்த ப்ரைபர்க் (Freiburg) ஆஸ்பத்ரியில் இந்த முறையை அனுஷ்டித்து 3600 கேஸ்கள் ஆயுதங்கள் உபயோகிக்காமல் ஸௌக்யமடைந்திருக்கின்றனவாம். இன்ஜக்ஷன் செய்கிறது மாத்ரம் அனுபவ சாலிகள் பக்கத்திலிருந்து செய்யப்படவேண்டுமாம். எப்பேர்ப்பட்ட சிக்கல் கேஸ்களும் இம்முறையில் குணமடைகின்றனவாம்.

Care after delivery.

ப்ரஸவமானபின் கவனிக்கவேண்டியவை:—ஸுகப்ரஸவ மானவுடனே கவனித்துச் செய்யப்படவேண்டியவைகளில் இரண்டு முக்யமானவை. (1) தொப்புட்கொடி அறுத்தல் (2) பிரஸவித்த ஸ்த்ரீயின் தேகத்தைப் பாதுகாத்தல், தொப்புட்கொடியை அறுத்த பின்பு, மிருதுவான வஸ்துவத்தினால் குழந்தையின் வயிற்றைச் சுற்றிவைக்க வேண்டும். குழந்தை குளிக்கப்படும்போது நாபியில் ரணமுண்டாகாமலிருக்கும் மாறு ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். இதில் அஜாக்கிரதையாயிருந்தால் குழந்தைக்கு அநேகவிதமான ஆரோக்கியக் குறைவுகள் உண்டாகின்றன. பிரஸவித்தபின் இரண்டு மூன்று மணி கழித்து ஸ்திரீயினிடமுள்ள எல்லா வஸ்திரங்களையும் (படுக்கையிலுள்ள வஸ்திரம் முதலானவற்றையும்கூட) அப்புறப்படுத்தி வேறு வஸ்திரங்களை உடுப்பதற்கும் படுப்பதற்கும் உபயோகிக்க வேண்டும். அரிஷ்டம் என்கிற சங்கா தோஷங்கள் உண்டாகாமலிருப்பதற்காக சாந்தி கர்மங்கள் செய்வது நலமே. பிரஸவித்த ஸ்த்ரீ நித்திரைபோகும் போது ஒருவித தடங்கலும் செய்யக்கூடாது.

III

KITCHEN AND COOKERY.

சமையலறையும் சமையலும்.

துவையல்-பச்சடி-ஊறுகாய் முதலியவைகள்

1. வினா—மேல் விவகரித்த காய் குழம்பு ரசம் முதலிய பதார்த்தங்களைத் தவிர தினம் ஆகாரத்துடன் சேர்த்துக்கொள்ளத்தக்க வேறு பதார்த்தங்களுண்டா?

விடை—உண்டு:-அவை துவையல் பச்சடி, ஊறுகாய் அப்பளம்-வடகம்-வீற்றல் முதலியவைகள்

2. வினா—துவையல் என்றால்என்ன அது எத்தனைவகைப் படும்?

விடை—துவையல் என்பது லேகிய ரூபமான ஆகார பக்குவம் அது பொரித்த துவையல் புளித் துவையல் என இரு வகைப் படும்.

3. வினா—துவையலினால் உண்டாகும் குணங்களென்ன?

விடை—துவையல் ஆகாரத்துடன் சேருவதினால் நாக்கிலுள்ள ஆரோகிகத்தை நீக்கி வாயில் உமிழ்நீர் ஊறி சீரணக் கருவிகளுக்கு தக்க குணத்தை உண்டாக்கும்.

4. வினா—துவையல்களில் பெரும்பான்மையாய் வழக்கத்திலுள்ளவைகள் எவை?

விடை—பருப்பு வருத்தத் துவையல் உளுத்தம் பருப்பு வறுத்த துவையல், இஞ்சித் துவையல் புளியாரைத் துவையல் கத்திரிக்காய் சுட்டதுவையல் தேங்காய்த் துவையல், பச்சக் கொத்தமல்லித் துவையல், கரிவேப்பிலைத் துவையல்முதலியவைகள். இவைகளில் புளிக்குழம்பு, ரசம் செய்த காலத்தில் பொரித்த துவையலும், பொரித்த குழம்பு ரசம் செய்தகாலத்தில் புளித் துவையலும் செய்யவேண்டும். இராபோசனத்துடன் பெரும்பான்மையும் துவையல்கள் உபயோகிக்கத் தக்கவைகள் புளிக்குழம்பு புளிக்கூட்டு முதலிய செய்திருக்கும் சமயத்தில் புளித்துவையல் செய்யக்கூடாது. அதே விதமாய் பொரித்து சமைத்த காலத்தில் பொரித்த துவையல் செய்யலாகாது.

5. வினா—பச்சடி என்பது என்ன?

விடை—பச்சடி என்பது வெல்லப்பாகிலும் இளகிய ரூபமான ஒரு ஆகார பக்குவம். இது துவையலைக்காட்டிலும் விரைவில் வாயில் உமிழ்நீரை சேகரித்து சீரணத்தை யுண்டாக்கக் கூடியது. பச்சடி கட்டிதயிரினாலும், புளி, வெல்லம் காரம் இவைகளினாலும், செய்யப்படும் தயிரில் இஞ்சிபச்சக்கொத்தமல்லி எலிமிச்சம்பழரசம் உப்பு இவைகள் சேர்த்து தாளிப்பு ஒருவகை. கிச்சிலிக்காயில் கொஞ்சம் புளியும், பச்சமிளகாயும், வெல்லமும் சேர்த்து செய்வது ஒருவகை. வேப்பம்பூவை கறுக்கி வெல்லம் புளிசேர்த்துச்செய்வது ஒருவகை. இவ்வித அறுசுவைகளையும் உண்டாக்கும் பச்சடி வர்க்கங்கள் பல உண்டு.

IV

LAW.

சட்டம்.

Adoption by a Widow.

விதவை எடுத்துக்கொண்டஸ்வீகாரம்:— ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட ஒரு விதவை ஸ்வீகாரப் புத்திரனின் பிதாவிடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டாள். அந்த எக்ரிமெண்டின் கூறாத்துகள் என்னவென்றால் விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டபோதிலும் அவளே எஸ்டேட்டை மானேஜ் மெண்டு செய்துவரவும் எஸ்டேட்டின் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் எஸ்டேட்டிற்கு வரவேண்டிய பணத்தை வசூல் செய்யவும் அவள் ஜீவதசையுள்ள பரியந்தமும் அவளுக்கே அதிகார மிருக்கவேண்டும். ஸ்வீகாரப் புத்திரன் அவள் இறந்து போன பிறகு இந்த அதிகாரத்தை அடையவேண்டும். இக்தமாதிரி ஒப்பந்தம் ஸ்வீகாரம் சமயத்தில் செய்துகொண்டு அவள் அந்தப் பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாள். இந்த ஒப்பந்தம் செலாவணியாகமாட்டாதென்று பம்பாய் ஐக்கோர்ட்டார். தீர்மானித்திருக்கிறார்கள். 16 Bom L. R.

Maintenance.

ஜீவனாம்சம்:—பாதிக்கப்பட்ட எஸ்டேட்டைச்சேர்ந்த இளையமைந்பருடைய விதவை எஸ்டேட்டிலிருந்து ஜீவனுப்சத்திற்கு மட்டிலும் பாத்திய முடையவள் என்று செண்ணப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 26 M·L· 7-205.

Restitution of conjugal rights.

பெண்ஜாதி புருஷனுடன் சேர்ந்து வசிக்கும் பாத்திதைகள்:—பெண்ஜாதி புருஷனுடன் சேர்க்து வசிக்கவேண்டுமென்று கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் அவள் தேக அசௌகர்யமா யிருக்கிறாள் என்று புருஷன் சாக்கி சொல்லுவது கூடாது அவள் நோயுள்ளவளாகவிருந்தபோதிலும் அவளே தன்னுடைய வீட்டில் தன்னோடு வசிக்கும்படி செய்ய கட்டுப்பட்டவன். புருஷனுக்கு வேண்டிய இன்பங்களையும் சௌகரியங்களையும் அவன் கொடுக்க அவளால் சாத்தியப் படாமற் போனபோதிலும் அவனுடன் சேர்ந்து வசிக்க அவன் கட்டுப்பட்டவன் என்று செண்ணப்பட்டணம் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

Marriage expenses of minors.

மைனர்களுடைய விவாகச் செலவுகள்:—ஒன்று சேர்ந்த குடும்பத்தாய் பாகப் பிரிவினை செய்துகொள்ளும்போது விவாக மாகாதவர்களுடைய விவாகச் செலவை குடும்பத்தின் பொதுச் செலவில் போடவேண்டும். ஏன் என்றால் விவாகம் என்பது "ஒரு சமஸ்காரம்" அந்த விதேஷத்திற்குச் செய்யப்படவேண்டிய செலவுகள் எஸ்டேட்டிலிருந்து செய்யப்படவேண்டு மென்று மதராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (1914) M. W. N. 28.

MAINTEANCE OF A CHILD.

குழந்தையின் ஜீவனாம்சம்:—தகப்பனார் ஜீவனாம்சத்திற்கு மறுசெய்துகொண்டாலும்சரி, செய்துகொள்ளாவிட்டாலும் சரி குழந்தையின் பிதா குழந்தையை ஆகரிக்க கடமைப்பட்டவன் என்று பர்மா ஜூடிகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. Bur. L. T. 34

V

EDUCATION.

வித்யா விஷயம்.

Writing dictation without mistakes.

பிழையில்லாமல் எழுதல்—வகுப்புக்களில் வழக்கமாகவே பெண்களை எக்தப் பாடங்களையும் செவ்வையாக உரத்துப் படிக்கச் சொல்லவேண்டும். படிக்கும்போதே உபாத்தினிகள் ஜாக்ரதையாகக் கவனித்து எக்தெந்த இடங்களில் நிறுத்தி நிருத்தமாகப் படிக்கவேண்டுமோ அந்தந்த இடங்களில் பெண்களுக்கு எடுத்துக் காண்பிக்கவேண்டும் டிக்டேஷன் போடுவதற்கு முன் உபாத்தினி டிக்டேஷன் பாடத்தை அழகாகப் படித்துக் காண்பிப்பது அவசியம். பதங்களைச் சரியாகமட்டும் உச்சரித்தால் எழுதும்போது பிழை ஏற்படாது. பேசும்போது பெண்கள் தப்பாகப் பதங்களை உச்சரித்தார்களேயாஞல் அப்போதப்போது அவைகளை நிருத்துவது நலம்.

Moral training in schools.

பள்ளிக்கூடங்களில் ஒழுக்கபோதனை—தற்சாலம் நமது பாடசாலைகளில் ஒழுக்க போதனை கற்பிக்கிறது வெகுசுலபமாதியமா யிருக்கிறது. உபாத்தினிகள் அன்பும் உயர்ந்த ஒழுக்கமும் தங்களது தினகருத்யங்களை க்ரமப்படிச் செய்யும் பழக்கமும் மேன்மையான சரித்ர நாரீமணிகளின் குணங்களை பின்பற்றுவதும் தேசாபிமானமும் உடைத்தாயிருக்காவிடில் பாடசாலை குழந்தைகளுக்கு உபாத்தினிகளிட மிருந்து ஒழுக்கபோதனை எதிர்பார்ப்பது கஷ்டமான கார்யம். மேலும் பாடசாலை குழந்தைகள் கொஞ்சகாலம் தான் ஒரு உபாத்தினியின்கீழ் வாசிக்கின்றன. உபாத்தினிகள் தங்கள் செய்யும் கார்யங்களை சரிவரச்செய்வது குழந்தைகளுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

Some hints to write composition.

வ்யாஸம் எழுத சில குறிப்புகள்:—உபாத்தினி ஒரு பாடத்தை போர்டு பலகையில் எழுதி அதைக் கொண்டு பாலிகைகளுக்கு வ்யாஸம் எழுதக் கற்றுக் கொடுத்தல் நலம். போர்டு பலகையில் நாயின் படம் எழுதப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். குழந்தைகளுக்கு முன் மாதிரி கேள்விகள் கேட்டு அவர்களைக்கொண்டு சொல்லச் சொல்லவேண்டும். நாயிக்கு எத்தனை கால்கள்? கண்கள் எத்தனை? காதுகள் எத்தனை? நாய் எப்படி நிற்கிறது நாயின் குணங்களென்ன? நாய் என்ன தின்னும்? இதுபோல பல கேள்விகள் கேட்டு பாலிகைகளை வெகு லகுவாகச் சொல்லும்படிச் செய்யவேண்டும். வாரத்துக்கு இரண்டு தடவை அப்படத்தை எழுதி வ்யாஸம் எழுதக் கற்றும் கொடுத்தால் உபாத்தினிகள் பாலிகைகளோடு சிரமப்பட வேண்டியதில்லை.

Gramatisation of our heroines.

நமது ஸ்த்ரீ ரத்னங்களின் சரித்ரத்தை நாடகமாக நடத்திக் காண்பித்தல்:—பாலிகா பாடசாலைகளில் வருஷகொண்டாட்ட தினத்தன்று பாலிகைகள் ஆங்கில நாடகங்களை நடத்திக் காண்பிக்கிறது வழக்கமாயிருக்கிறது. இந்திய ஸ்த்ரீ ரத்னங்களின் சரித்ரத்தை நாடகமாக நடத்திக் காண்பித்தால் பாலிகைகள் நமது பிதரத முன்னோர்களின் குணங்களையும் அவர்கள் சென்றிருக்கிற அடிகளையும் பின்பற்றுவார்கள்.

VI

WOMAN'S WORLD.

ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

A woman judge.

ஒரு ஸ்திரீநியாயாதிபதி.—ஐரோப்பாகண்டத்திலுள்ள ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் மத்திய மாகாணம் ஒன்றிலுள்ள காஸெல் ஜில்லாவைச் சேர்ந்த சுடாபிஷ்டாட் என்னும் நகரில் ஸ்திரீ ஒருத்தி நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறாள். இந்த ஸ்திரீ சென்ற வருஷத்தில் அதே நகரில் ஸ்தலத்தின் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டாளாம். அவள் செய்த வேலை சொல்லாம். இந்த நியமனம்பார்த்தவளாயிருந்தவளாம். அந்த நகரில் ஸ்தலத்தில் வக்கீல்களாயிருந்தவர்கள் (Vakil) களில் ஒருவர்கூட அவள் வேலையில் அதிருப்தி யடையவில்லையாம். எல்லாவரும் நிறமையும் வேகத்தையும் நிதானமாயிருத்தலும் ஸ்திரீயென்ற காரணத்தால் அந்த வேலையுத்தியோகம் கொடுக்கப்படாதென்றும் எல்லாவரும் நிறமைக் குறையும் அயோக்யதையும் நிறைந்தவராயிருந்தாலும் புருஷன் என்ற காரணத்தால் நியமனமும் உத்தியோகங்கள் கொடுக்கப்படுவதென்றும் தானியா.

Women suicides in calcutta.

கல்கத்தாவில் ஸ்திரீகள் தற்கொலைகள்:—கல்கத்தாவில் ப்ரதி வருஷம் 50-க்கு மேல் பெண்குழைகள் ஸ்திரீகள் தற்கொலைகள் நடப்பின்றனவாம். இவ்வருஷம் ஸ்திரீகள் தற்கொலைகளின் எண்ணிக்கை ஜாஸ்தியாக யிருக்குமென்று நினைக்கப்படுகிறது, இவர்கள் வக்கீல் கணவர்களுக்கு உரியவை.

Hints to family women.

நடுப்பு ஸ்திரீகளுக்கு சில தரிப்புகள்: குடும்ப ஸ்திரீகள் பணத்தை உபயோகிக்க வேண்டியபாடத்தை முதன்முதல் படிக்கவேண்டும். அவர்கள் தங்கள் பின்னாளுக்கு பணம் சொடுக்கம் வழக்கம் சரியானதாகாது. அவர்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொடு. வரும் சமயிட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் சமயிருந்து குடிமைக்காரருக்குப் பணம் கொடுத்திப்போல் வழக்கமிருக்கிறது. குடிமைக்காரர்களுக்குப் பணத்தை உபயோகிக்கும் முறையைக் கற்றுக்கொள்ளுதல் படித்தவளாயிருக்க வேண்டும். பணம் வாம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கி, வரும் பாதித்த பணத்தை தானுமறுபயோகமும் பிறரை அனுபவிக்கவிடாமலும் இருக்கிறவளே உலோபியென்று கூப்பிடுவோம். அதைக்காக்கும் குணத்துக்கு உலோபத்தினம் என்றழைக்கப்படும். இந்த இரண்டு குணத்தை நீக்கணம் என்ற கூப்பிடலாகாது. அதுக்கு மருந்து செலவழிக்கிறவன் தாதாரி என்று அழைக்கப்படுவான். இவன் குணத்துக்கு உதாரித்துவம் என்று பெயர். உலோபத்துவத்தைக் காட்டிலும் தாராளத்துவம் மிகுந்தது. தனக்குள்ள பணத்தை தாராளியைப்போல் வீதரம் செலவழிக்காமலும் உலோபியைப்போல் குவித்து வைக்காமலும் அப்பணத்தைத் தானும் அனுபவித்து மற்ற வெளியாக்களுக்கு கொடுத்து கொடுக்கிறவன் தாராளன் என்னும் நிதான குணத்தைப் பெறுவான்.

VII

FUN.

வேடிக்கை.

நண்பன்:—(தன் கண்பனைப் பார்த்து) 'என் பாட்டைப்பற்றி எல்லோரும் வந்தோஷ மடைத்தார்கள்.'

நண்பன்:—'முதலில் சந்தோஷ மடையவில்லை. கடைசியில் தான் நிரம்பவும் வந்தோஷ மடைத்தார்கள்.'

பாடகன்:—அந்தப் பாட்டைக் கேட்டு?

நண்பன்:—'பாட்டைக் கேட்டு வந்தோஷமடைய வில்லை, பாடி முடிந்தது. ஒரு விதமாய் நிம்மதி தப்பா வன்று சொல்லி அபரிமித மான வந்தோஷத்தை யடைத்தார்கள்.'

'நீ என் கலியாணம் பண்ணிக் கொள்ள வில்லை? என்று முத்தி யும் ஒருவன் தன் பண்பனுடைய பெண்ணு பன்பனைக் கேட்டான். 'நிற்கில் கபத்தங்களின்படி விருத்தான் தான் மணம் புரிகிறது சொல்லுதாக இருக்கின்றேன்' என்று பொன்னு.

முத்து—'என்ன நிபந்தங்கள்'

போர்ஷ்யா—'கலியாணப் பெண் கல்ல ரூபாயாயும், பணக்காரியாயும், முட்டாளாயும் இருக்கவேண்டும்.

முத்து—'அதாவது முட்டாள் பெண்ணை யிருக்கவேண்டுமென்பது விருப்புதி ஆச்சரியமாக இருக்கிறதே.

போர்ஷ்யா—'பணக்காரியாயும், ரூப முள்ளவளாயும் இல்லாமற்போனால் கலியாணம் பணணிக்கொள்ள தான் எம்மதிக்க மாட்டேன். மூட டாளாயிருத்தலல்லாமல் என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள அவன் எம்மதிக் மாட்டான்.

வ்நோதத் தரிப்புகள்.

யஜமானன்:—வேலைக் காரனைப் பார்த்து நீ வேன் இவ்வளவு நேரம் கழித்தி கூதாய்?

வேலைக்காரன்—தாங்களே ஏப் போதும் போல்லாமல் இன் றைக்கு இவ்வளவு நேரமாக வரு வீர்களென்று எனக்குத் தெரியாதி?

மரியாதைப்பிள்ளை—ஒரு அன் னதானத்துக்கு பெரியோ ரைக் கண்டால் மரியாதை செய்யும் படி பள்ளடமை சொல்லியனுப்பி னான். அவர்பெரியவராக இருக்கின்றபோ அவர்களுக்கு எல்லாம் மரியாதை செய்ய தொடங்கினான். ஒருவரன் தன் வீட்டிற்கு வரவிரும் சலனை செய்து கொண்டுவந்த வண்ணாருக்கு ஆசனமளித்து உட்கார வேண்டி னான். மற்றொருவன் இரவில் வந்த அவர்களிருந்த வீட்டில் நிருடன் புகுந்தான். ஒரு நிருடன் அந்தப் பின்னேயின் மேலில் போட்டிருந்த ஒரு பொன் சங்கிலியை யிழுத்துக்கொண்டான். பின்னேயின் விழித்துக்கொண்டான். நிருடனும் நிருடன் ஓட்டம் நிடிக்க ஆரம்பித்தான். அந்த புதிர் பின்னே பின்னே நிருடே! நில் நிருடே! மற்றொரு சங்கிலி எதற்கு கொண்டு மறந்திவிட்டாயே! என்று கூச்சலிட்டான். இந்த கூச்சலைக் கேட்டு வீட்டார் கண் விழித்துக் கொண்டார்கள்.

VIII

Events of the Month

மாஸ வர்த்தமானம்.

ஆகஸ்டு, செப்டம்பர்மீ 1914.

ஆகஸ்டுமீ 31-நீதேதி:=சென்னை யுத்த பண்டுக்குப் பணம் சேர்க்கிறதற்காகவே ஹிந்து மாதர்ல கிமிலாஸ ஸபையார் இன்று 11-வயதுக்குட்பட்ட பெண்களைச் சேர்த்து அவர்களுக்கு ஸ்ரீலிதர்பார் என்ற புதிய நாடகத்தைப் பழக்கிவைத்து விக்டோரியா ஹாலில் ஆட்பெண்களைக் கொண்டு அந்த நாடகத்தை நடத்தி வைத்தார்கள்.

செப்டம்பர்மீ 15-நீதேதி:=ஹிந்து மாதர்லக்ஷ்மிவிலாஸ ஸபையின் ப்ரெஸிடெண்டான ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் இன்றுமுதல் 19-ந்தேதி வரை ஸ்ரீ ஜயந்தி உற்சவத்திற்காக ஸ்ரீமஹா பாகவத காலக்ஷேபம் செய்தார்.

செப்டம்பர்மீ 22-நீதேதி:=இன்று ராத்ரி 9-30-மணி சுமாருக்கு எம்டன் என்னும் யுத்தக்கப்பல் சில குண்டுகளை சென்னையின்பேரில் எறிந்தன. அதனால் சில சேதங்கள் உண்டாயின.

18-நீதேதி: சென்னை ஸ்திரீ அபேத ஜ்யானந்த சங்கத்தின் ஆதரவின் கீழ் ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி ஸஹோதரி தாயாரம்மாள் பேசினார்.

செப்டம்பர்மீ 26-நீதேதி:=சென்னை அபேத ஜ்யானந்த சங்கத்தின் ஆதரவின் கீழ் ஸ்ரீமதி ஸாரதாநந்த மௌனை ஸ்ரீகிருஷ்ணன் பிறப்பைப்பற்றி ஒரு காலக்ஷேபம் செய்தார்.

செப்டம்பர்மீ 27-நீதேதி:=கவர்ன்மெண்டு ஹவுஸில் சென்னை ஸ்த்ரீகள் யுத்தபண்டுக்கு பணம் சேர்க்க பெரிய மீட்டிங்கு ஒன்று கூடினார்கள். லேடி பெண்டிலாண்டு அக்காஸனம் வஹித்தார்.

ஆகஸ்டுமீ 4-நீதேதி:=நமது சக்ரவர்த்திக்கும் ஜெர்மன் சக்கரவர்த்திக்கும் யுத்தம் நிர்மாணிக்கப்பட்டது.

436

அங்கம் II.—களம் IV.

சாவித்திரியின் படுக்கையறையும்
அடுத்த தாழ்வாரமும். காலம் முன்னிரவு.

சாவித்திரி கையில் சித்திரத்துடன் வருகிறாள்.

சா.—அம்மட்டும் அவரது காயங்கள் ஆறி குணமடைந்தாரே. அதுவே போதும். நான் அவரை விவாகம் செய்து கொண்டாலும் அல்லாவிட்டாலும். ஓகோ. (பெருமூச் செறிகிறாள்). சில தினங்களாய் அவரை பார்க்கவும் கொடுத்து வைக்கவில்லை. அறையைவிட்டு அசையவும் கூடாதென அப்பா கட்டளையிட்டதுமன்றி கண்டபோதெல்லாம் கடுகடுவென்று கரிக்கிறார். அவர் கோபத்தையும் பிடிவாதத்தையும் சகிக்க முடியவில்லை.

(டாக்டரும் தமாரும் வருகிறார்கள்).

தமா.—டாக்டர்! எனக்கொரே குமாரி அவளுக்கு எதோ பலமான வியாதிபிடித்திருக்கிறதே. அவள் தாயார் இளவயதிலேயே போய்விட்டாள். என் புத்திரியை எப்படியும் சொஸ்தமாக்கும். அவளாவது எனக்கு ஆதரவுக்கு இருக்கட்டும். பாருங்கள் சிரத்தையுடன்.

டாக்.—அம்மா! எங்கே இப்படிவா. உன்கையைகொடு. (கைபார்த்து ஸ்டெதாஸ்கோப்பை எடுத்து) எங்கே முதுகுபக்கம் கொஞ்சம் புடவையை.

சா.—(வெட்கத்துடன் தன்னுள்) இதென்ன அவமானம். தலையிலை முழுத்து புருஷ டாக்டர்களிடம் பார்த்துக்கொள்வது. என்ன அகௌரவம். (வெளி) அப்பா எனக்கு அந்த பக்கங்கள் எல்லாம் மிகவும் நோகிறது. அந்த கருவியை வைக்கவேண்டாம்.

டாக்.—நோகிறதா, அப்படியானால் அவசியம் வைத்துப்பார்க்க வேண்டுமம்மா.

சா.—ஐயோ என்னால் தாங்க முடியாது. வேண்டாம் அப்பா.

தா.—டாக்டர்! பிறகு வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம். என்ன டாக்டர் வியாதி. (மெதுவாய்) கூடியந்தாமினை இல்லையே.

டா.—இவள் அளவுக்கு மிஞ்சி பாடுவதுண்டோ?

தா.—பாட்டில் ஒரே பைத்தியம். பஞ்சமத்தில் எப்பொழுதும் பாடிக் கொண்டே யிருப்பாள்.

டா.—அதுதான் காரணம். இது ஹீரியஸ் கேஸ் இருந்தாலும் எனக்கு லட்சியமா?

தா.—என்ன ஸார்? எப்படி ஹீரியஸ்? மறுபடியும் பாருங்கள். அப்படியிராதே. ஐயோ!

டா.—அம்மா, உனக்கு அடிக்கடி மூச்சு திணறுகிறதோ அல்லவோ.

437

சா.—ஆமாம். (தன்னுள்) அடங்கா ஆவலால்.

டா.—பார்த்தீர்களா? நான் நினைத்தேன். கொய்ட் ரைட் ; வாஸ் அம்மா சில வேளைகளில் மயக்கமாய் வருகிறதல்லவா.

சா.—(தன்னுள்) காதல் மயக்கந்தவிர வேறு மயக்கம் இல்லை. (வெளி) ஆமாம்.

டா.—பார்த்தீர்களா. அதுதான் ஸார். இந்தமாதிரி ஒருகேஸ் எல்லா டாக்டர்களும் கைவிட்டார்கள். பட்டணம் ஐ. எம். எஸ். மேஜர் டௌடன், ராயப்பேட்டை ஹனுமந்தராவ், ஆயுர்வேதம் கிருஷ்ணமாச்சாரி எல்லாரும் பார்த்தார்கள். பிறகு நான்.

தமா.—ஸார், என்ன வியாதி என்று சொல்லவில்லையே.

டா.—பேரில் என்ன ஸார் இருக்கிறது. நான் குணமாக்குகிறேன். உங்களுக்கேன் கவலை. அம்மா, ஒருபக்கமாய் தலைவலிக்கிறதோ அல்லவோ.?

சா.—(தன்னுள்) என்னபொய் (வெளி) இல்லையே.

டா.—(அவமானத்தை மறைத்துக்கொண்டு) இராது. கொஞ்சம் டயேரியா?

த.—இல்லையே கான்ஸ்டிபேஷன். (டாக்டர் மேலும் கீழுமாக விழிக்கிறார்). ஒருக்கால் ஹார்ட் டிஸீஸ் ஆய் இருக்குமோ டாக்டர். (டாக்டர் திடீரென முகமலர்கிறார். சாவித்திரி நகைக்கிறாள் தன்னுள்). மறுபடி பாருங்கள் டாக்டர்.

டாக்டர்.—(தலையை சொரிந்து கடைசியில் முரட்டுத்தனமாய்) இது வெறும் இன்டைஜெஸ்சன்தான் ஸார். பில்ஸ் அனுப்புகிறேன். அம்மா, 3-மணி நேரத்துக் கொருதரம் சாப்பிடவேண்டும். மருந்தை.—ஆ. சாப்பாடா? காபி ஆகாது.

த.—காபி ஆகாதென்றால் எப்படி முடியும், ஸார்.

டா.—வியாதி போகவேண்டு மானால் காபி கூடாது. ஸோடா, ஐஸ் கொடுங்கள். (குமாரம் அதிருப்தியுடன் டாக்டரை அழைத்துச் செல்கிறார். சாவித்திரி நகைக்கிறாள்.)

சா.—நல்ல டாக்டர். இல்லாத வியாதியெல்லாம் சொல்லி கண்டமருந்தையெல்லாம் கொடுக்க பார்க்கிறார். வியாதி இன்னதென்று நானாய் சொன்னாலொழிய தெரியப்போகிறதில்லை. பில் சாப்பிடவா.? மாட்டுக்குப்போடு. (மௌனம்) ஐயோதன் இஷ்டப்படி மணம்செய்துகொள்ள வேண்டுமென்று பிரசங்கம் செய்த அப்பா இப்படி யானதும் என் விதிவசமேயல்லவோ. ஐயோ! மாட்டேனென்று எதிரிலேயே மறுத்துவிட்ட குணபூஷணத்துக் கென்னை மணம் செய்து கொடுப்பாராயின் என் ஆயுளளவும் அவர் என்னை எசுவது மின்றி என் ரகுநாதனும் என்னை வளனம் செய்வாரன்றோ.? அப்பா உமக்கிது அடுக்குமா.? (ஸோபாவில் உட்கார்ந்து மெதுவாய் கண்ணீருடன் பாடுகிறாள்)

ராகம் முகாரி. தாளம் ஆதி.

ஹலெல்லா முணர்ந்து மென்றந்தையும் மெனக்
கேலாதமணம் செய்ய விசைந்தாரே
பாலையான் மறுத்தலனீதமென்—றென்னை
மேலோரி கழ்ந்திடில் யானென் செய்வேன்.

விவாகநாளும் நெருங்கிவிட்டதே—இதை விதி என்பதா. என் தந்தையின் துன்மதி யென்பதா. ஏழை யானாலென்ன, படித்த பெண்மணிகள் அறிவையும் அன்பையுமன்றோ மேலாககருதுவார். கைநிறைந்த பொன்னினும் கண்ணிறைந்த கணவனையன்றோ சிறந்தவன் கன்னியற்கு—விவாகமோ நிறுத்தப்பட மாட்டாதென்பது நிச்சயம். இன்னாள் வரைதாமதித்தே வைக்குள் அபூர்வம். ஐயோ ஆதிகாலத்தில் எவ்வளவு பேர்கள் மணமேயின்றி கன்னிகையாயிருந்து தமது காலத்தை உலகோபகாரங்களில் உபயோகத்திருக்கின்றனர், பழையனவுமன்றி புதியனவுமின்றி சாஸ்திர ஸம்மதியுமின்றி வழக்கம் என்ற பேருக்கு கட்டுப்பட்டிருக்கும் காலம் என்று நீங்குமோ. இந்தியர்க்குள்—உஸ் (பாடுகிறாள்)

ராகம் நாத நாமகிரியை. தாளம் ஆதி.

பாழ் விதிக் கென் செய்வேன்—உள்ளம்
பதறியெனது உடல் உருகு தெவ்வாறுய்வேன்.
எழ்மையாயுதித்ததோரிவள் மேற் கொள்ளுங்காதல்
எலா தென எந்தை—இழித்துரைத்தாரய்யோ.
ஏழேழு பிறப்பினு மெரி நரகினில் வாழ்க
இழப்பேனோ கற்பினையான் ஏது மறிந்திலனே. (பாழ்)

(மௌனம்) சை. இனி இதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால் பைத்தியம் பிடித்துப்போகும். (ரகுநாதன் மெதுவாய் வந்து பின்னிருந்து கவனிக்கிறான்.)

சா.—இதென்ன சித்திரத்தின் கீழ் ஏதோ செய்யுள் எழுதியிருக்கிறதே. (படிக்கிறாள்) கம்பன் போற் கவிபாட என்ற பாடலுக்கும் பின்வரும் பாடலின் கருத்துக்கும் பொருந்தவில்லையே. ஐயோ! இவ்வளவு காதலுள்ளவர் எவ்விதத்தேனுமென்னை மணந்துகொள்ள மாட்டாரா?—எப்படி முடியுமது இன்னாளில்,—என்னாலவரை மறக்கவு முடியவில்லையே (பாடுகிறாள்.)

ராகம் இந்துஸ்தான் தோடி. தாளம் ஆதி.

தகுமோ காதல் தயாநிதியே
ரகு நாதனெனுங் கருணா நிதியே
வெகு வாயுனையே விழைந்தென் மனமே
சுகுமாரனே வாருமித்தினமே.

உஸ். சற்று படுத்துக்கொள்ளலாம். (திரும்பி ரகுநாதனைக்கண்டு திடுக்கிட்டெ

ழுந்து வெட்கி நிற்கின்றாள். ரகுநாதனும் அவளைப்பார்த்தவண்ணம் சிறிது நேரம் பிரமித்து நிற்கின்றான்).

ரகு.—சாவித்திரி. முன்னறி விப்பின்றி இவ்வேளையில் உன் தனிமையில் இங்கு நான் வந்ததைப்பற்றி மன்னிக்க வேண்டும்.

சா.—நீங்கள்—வந்து—வெகுநாழிகையாய்—விட்டதோ.?

ரகு.—ஆம் (சிரிக்கிறான் சாவித்திரி. தலைகுனிகிறாள்.)

சா.—என்ன—விசேஷம் — இவ்வேளையில்—(களங்கமற்றவள் போல் நடிக்கிறாள்.)

ரகு.—எவ்வளவு படித்தாலும், கௌரவம் வகித்தாலும் இயற்கை குணம் போவதில்லை. ஏது மறியாது போல் நீ கேள்வி கேட்பதானாலும்—நான் சொல்லத்தடையில்லை,—சற்று முன் நீ சொல்லியபடி எந்த விதத்திலும் உன்னை மணந்துகொள்ள வேண்டுமென்று நிச்சயித்து எவ்வளவு தான் உன் மனது தெரிந்திருந்த போதிலும் எதிரில்கேட்டு தெளிவது நல்லதென்று தைரியமாய் இங்குவந்தேன். நற்காலம் நல்ல சமயத்தில் வந்தேன். இன்னொருதரம் என்னை விவாகம் செய்து கொள்ள இஷ்டம்தானென்று என் எதிரில் கூறிவிடு. ஏனிப்படி பிரமித்து நிற்கிறாய். இப்படியுட்கார். (ரகுநாதன் அவள் கரத்தைப்பிடிக்க அவள் விடுவித்துக்கொண்டு விலகுகிறாள்.)

ரகு.—(பிரமித்து) சாவித்தரி—இனியுமென்ன வெட்கம். அல்லது நான் வந்தது உனக்குப் பிரியமில்லையோ. நான் என்னென்று எண்ணுவது.

சா.—இன்னிலைமையில்—யாராகிலும்—கண்டால் என்—

ரகு.—அதைப்பற்றி எனக்கும் கவலையுண்டல்லவா.? உன் தந்தையும், குணபூஷணமும் நித்திரை போய் விட்டார்கள். சாவித்திரி உன் தேகம் ஏன் இப்படி நடுங்குகிறது. தயவு செய்து உட்காரிப்படி (அருகில் சென்று) இனி மேலும் நான் உன்னைத்தொடக் கூடாதா என்ன.

சா.—(வெட்கி) நான் சுதந்திர மற்றவள்தானே. என் தந்தை என்னை வேறொருவர்க்கு விவாகம் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

ரகு.—அந்த கவலையினி வேண்டாம். எல்லாம் தெரியுமெனக்கு. அந்த அபிப்பிராயத்தையடியோடொழித்து, நமக்கு விவாகம் நடக்கும்படி செய்ய வேண்டிய கடைமை என் நண்பன் குணபூஷணத்தினுடையது.

சா.—(திடுக்கிட்டு) குணபூஷணமா—அவரிதற்கு சம்மதித்தாரோ.

ரகு.—ஏனிதிலென்ன ஆச்சரியம். அவன் என் உண்மையான நேசன். உன்னை எனக்கே மணம் செய்வித்து நம் வாழ்வில் எத்தகையதுன்பமும் வராமற் கார்ப்பதாக இன்றே உன் தந்தையிடம் உறுதிகூறினான். சாவித்திரி மெய்ம்மறந்து நிற்க ரகுநாதன் கை குட்டையால் அவள் வியர்வையைத் [illegible]து ஸோபாவில் உட்கார்த்தி தானும் அருகில் உட்கார்ந்துகொண்டு

440

விசிறுகிறான். இருவரும் சிறிதுநேரம் மௌனமாயிருக்கின்றனர். ரகுநாதன் சாவித்திரி கையிலிருக்கும் சித்திரத்தை கிரகித்து அதன் பின் வரைந்த பாடல்களை படிக்கிறான்.

சா.—(மெதுவாய்) எழுந்து அதில்—ஏதோ—கிறுக்கி வைத்தேன்—தாங்கள் அதை பார்ப்பது உசிதமாய் தோன்றவில்லை.

ரகு.—உசிதமோ அல்லவோ அதை பார்க்க எனக்கு சுதந்திரமுண்டு. என் விஷயமதிலில்லை யென்று சொல்லிவிடு (சாவித்திரி நிமிர இருவர் கண்களும் சந்திக்க ரகுநாதன் புன்னகைசெய்கிறான்). என் கண்ணே சாவித்திரி ஏழையாகிய என்னை மணந்துகொள்ள இஷ்டந்தானே. உன் கருத்தையுரைத்து விட்டால் மற்றதெல்லாம் நிறைவேறிவிடும் குணபூஷணத்தின் உதவியால்.

சா.—ஆம் அவர் மனம் வைத்தாலின்றி இது, நிறைவேறாது. என் இஷ்டத்தை—என் வாயால்—சொல்லவும்—வேண்டுமா.

ரகு.—அப்படி யல்ல. எனக்கு சொல்லத்தான் வேண்டும். சொல் என்னைப்பார்த்து—குனிந்து கொள்ளக்கூடாது. உம்.

சா.—மிகுந்த வெட்கத்துடன் இஷ்டந்தான் ஆ! அதென்ன சப்தம் (திடுக்கிடுகிறான்).

ரகு.—(முகத்தை நிமிர்த்தி) சாவித்திரி என் கண்மணியே. எனக்கிவ்வுலகில் என்னவேண்டும். உன் கண்ணே எனக்கிவ்வுலகப்பற்றை யுண்டாக்கிற்று. இனி யதினின்றும் மீள்வது முடியாத காரியம். மறுத்தால் இறந்து விடுவேனாக்கு மென்று அடிக்கடி முகமன் கூற நான் நாடகக் காரனல்ல—ஆனால் பூலோக அரங்கத்தில் நானோர் சிறந்த நடிகனென்பதை மறந்து விடக் கூடாது. (அவளை முத்தமிட அவள் விலகுகிறாள்) கயிற்றால் கட்டப்பட்ட பிறகுதான் சுதந்திரம் போலும். மனமொத்தபோதே மணம்தானே. ஓகோ உன் அத்தை வருகின்றாள்—கண்ணே விடைமளி. சாவித்திரி இனி எப்பொழுது சந்திப்பதுன்னை.

சா.—இன்று முடியாது (பதட்டத்துடன்). அதோ வந்துவிட்டாள் அத்தை.

ரகு.—காயம்பட்ட பொழுதுகூட இவ்வளவு கலங்கவில்லை மனம். காரியம் நிறைவேறும் வரை என் கண் உறங்காது. (ரகுநாதன் போகிறான்.)

சா.—என்னவோ செய்கின்றதே எனக்கு (முகத்தை மூடிக்கொண்டு) படுத்துக் கொள்கிறாள் (ஜானகம் பால் கொண்டுவர, வேலைக்காரன் வராண்டாவில் படுக்கை போடுகிறான்).

ஜா.—சாவித்திரி அம்மா அழறாளா என்ன—சாவித்திரி, எழுந்து பால் சாப்பிடு (சாவித்திரி பாலைக்குடிக்கிறாள்) பைத்தியமே. கண்ணெல்லாம் சிவந்

441

தாயிர் சே. இதற்குவாச்சோ. ஒண்ணு அப்படித்தான் சோபித்துக்கொள்வார். கடைசியில் உன் மனம்போல மருகாதலுக்கே மணம் செய்து கொடுப்பதாக சொன்னார், ஆன்று என்னிடம், பாப்படாதீர் பதித்துக்கொள், கவலைபில்லாமல். எல்லாம் பட்டுப்படவைக்கோயல்லாம் வெளியில் வைத்திருக்கிறார்.

க.:- இன்றிருக்கட்டும் காலையில் பேட்டியில் வைக்கிறேன் (கோட்டத்தில் வெளியே நடப்பில் ஜீன்ஸ் ஆன் கல. சிக்கிறான். கலி தரி தாழ்வாரத்தில் படுத்துக்கொள்கிறான். ஜானகம் போகிறாள்.)

ஜெ.:- (இருட்டிலிருந்து பெண்ணும், கல்லை கொலை வெறியில் தாழ்வாரத்தில் படுத்து விடுகிறான். ஜீன்ஸ் தாயிடம் போய் சொல்லிப் போய். (போகிறான்.)

க.:- (பெண்டு) என் வயிற்றுக்கு நீ சுத்தமா வைக்கிறா. இன்றுயார் முகத்தில் விழித்தேனென்று தெரிந்தால் காலையிலேயே விழிக்கலாம். அன்று நாரதரை பார்த்த பொழுதுக்கூட இப்பொழுது உங்கி மடி காய் காணப்படுகிறார். ஆ! என்ன இனிமையான முகம். கண்ணெனிசான் என்ன என் மனச்சஞ்சலமாக்கிவிட்டது. (போகிறான்.)

ராகம்: பியாக். தாளம் ஆதி.

ஜூவர் தாமென்கண் கண் மணம்
கவர்ந்த வினங்குயரன்
எவர் தானவர்தனி
லிவர்க்கினையாரு பலர்.

(பாடிக்கொண்டே எழுந்துலாவுகிறான். பிறகு உள்ளே சோபாவில் சயனித்து தூங்கிவிடுகிறான்—கஜபதி மெல்லென அவனது அடையாளத்தை வெடித்துப்போகிறான்—சிறிது நேரத்தில் அவ்வாடை கரிந்து நிரைபதிப்பு கஜபதியும் வருகிறார்கள்.

கஜ.—(மெதுவாய்) இப்பெண் கன்றாய் உருவிவிட்டான் (நர்ட்டியை எடுத்து சாவித்திரியை மறைக்கிறான்). உம்மையவளென்றே நினைப்பார்கள்.

தீனா —ஐயா, என் சபதத்தைமுடிக்க உதவி செய்யும், உமக்கு என்ன கைம்மாறு நான் செய்யப்போகிறேன்.

கஜ.—அம்மா நான் பிரதியுபகாரத்தை விரும்பினால் நீர் பதிந்துக் கொள்ளும். உண்மையாகவே நீர் ஒருவிதமும் பாதகமில்லை. விழித்திருந்து உம்மை காட்டிக்கொள்ளாதேயும். கருதி வந்திருந்த காரியத்தை முடித்துக் கொள்ளும்—நானும்—வருவேனிப் பொழுது (திடீரென பெரிய கட்டிலில் படுத்துக் கொள்கிறான். கஜபதி மறைந்து நிற்கிறான். நான்கு ஆட்கள் ஒளிந்துவந்து விருகிறார்கள்.

1-ம் ஆள்.—கப் சிப்புனுருக்குது. இதோ படுத்திருக்கிற பாரு. அச்சச் சிலைதான் இங்கட்டுக்கொண்டா அந்த மருக்கீரம் (மருக்கை நிரைபதி மூக்குக்கு நேரில் சட்டென பிடிக்கிறான் வளியிலே எதிரிச்ச சல்லியம் பண்ணுமே, ஏது. காணுசேவல் தா, இருப்பா பயமில்லாமே போங்க. நா போய் ஓரே குத்து—முடியாத்தர்மே.

2-ம் ஆள்.—அண்ணே ஒங்க வேலையே சாக்ரதையா முடிக்கணு, கண்டு விட்டாச்சி.

1-ம் ஆள்.—அடே அம்புட்டு சொரியாதா, லக்குப்பாத்து வச்சாச்சு அவரு மாங்கையிலே ஓரேகுத்து. முடியாத்துருவேனில்லா—நேரமாச்சு நீங்க போங்க (ஆட்கள் நிரைபதைக்கட்டியுடன் தூக்கிச்செல்கின்றனர்). இரண்டு ஆட்கள் மருகாதன் அறைப்பக்கமாய்ச்செல்ல கஜபதி வெளிவருகிறான்.

கஜ.—இந்தப்பசுங்க மருகாதனே மேலு லகனுப்ப போகிறான்கள் போலும். நாம் காப்பாற்றுவோமா, வேண்டாம் நம் கையிலும் இறக்காவிட்டாலும் எப்படியாவது இறக்கட்டும் அவன். இவ்வி ஹயத்தன் தலையிட்டுக்கொண்டதே வீண், ஆனால் யான் செய்த பாபங்களுக்கு அவர்களோக்கார்க்கும் புண்ணியமாவது இருக்கட்டும். என் மனம் உழல்கிறதே.

தீ.—(திடீரென கண் விழித்து எழுந்து) ஐயென்ன மறைவு, நட்டி யார் வைத்த நங்கே (தாழ்வாரத்தை பார்த்து) எங்கே! என்பக்கையைக்காமோம். நான் கனவு கண்டேனே. குணபூஷணம் என்னப்பக்கை டன் தூங்கி (கஜபதியைக்கண்டு) ஐயோ அவர்தான் இதோ—இல்லை யார் இது (நடப் பார்க்கிறான்).

கஜ.—பெண்ணே நடாதே; சப்தமிடாதே; நான் உன்னை காப்பாற்ற வந்தேனையாழி வேறல்ல. ஜமீன்தார் உன்னைத்தூக்கிப்போக எற்பாடு செய்திருந்தான் . ன் பஞ்சத்தில் வேறொரு ஸ்திரியை வைத்தனுப்பி விட்டேன். எனிப்படி நடங்குகிறாய், இனிபயமில்லை. நீ எவ்வித்தலும் யார் ஆ ஜாதிப் பெண்ணைகையால் துஷ்டர்கள் முன்னமே செல்லவாவது, அவர் ளை எனணம் செய்யவாவது கூடாது. உன் அறையில் நனியாய் படுக்காதே தெரியுமா (உள்ளே ஜாரைரம் பிடி பிடி என்ற சப்தமும் கேட்கிறது.)

தீனா.—(நடுங்கி) ஐயா, என் மானத்தைக் காப்பாற்றிய மகாலுத்தி யை உமது பேரென்ன? என் தகப்பனுரிடம் சொல்லி வேறும். சற்றிரும் கூப்பிடுகிறேன் அவரை.

கஜ.—பெண்ணே! நான் [illegible]. என்னைத்தான் சொல்வார்கள் கஜபதியென்று (சாவித்திரி [illegible] அலறிப்பின் வாங்க) கஜபதி வீரைத்து மறைகிறான் [illegible], மருகாதம் இரண்டு ஆட்களோ பிடித்துக்கொண்டு வருகின்றனர். குமாரமும் வருகின்றார்.

தும.—சாவித்திரி, சாவித்திரி எங்கேயிருக்கின்றாய், என் அறிவுயம்மா

சாவி.—அப்பா ஆ (கட்டிக்கொள்கிறாள்.

தும.—எனம்மா எனிப்படி பதறுகிறாய்.

சா.—கஜபதி வந்தான்.

குண.—ஹ! எங்கே, எங்கே. ரகுநாதம் நாள் சொல்லவில்லையா உன்னைக்கொலைசெய்யும்படி யவனே இவர்களை யனுப்பியிருக்கவேண்டும். (சாவித்திரி குமாரத்திடம் உண்மையை உரைக்க மற்றவர் கேட்கின்றனர்.)

ரகு.—பார்த்தாயா, இவை யெல்லாம் அந்த ஜமீன்தார், இன்ஸ்பெக்டர் இவர்களுடைய சதியாலோசனைதான். சாவித்திரிக்கு பதிலாயனுப்பப்பட்ட பெண் திரௌபதியாய்த்தானிருக்கவேண்டும்.

குண.—எல்லாம் இவன்களிடமிருந்தறியலாம். ரகுநாதர் நீ போய் உடுப்பு தரித்துக்கொண்டுவா, ஜமீன்தார் பங்களா பக்கம் போனால் துப்பு வினங்கும். (ஆட்களுடன் இருவரும் போகிறார்கள்.)

தும.—இன்று பூரண மில்லாவிடில் ரகுநாதன் இறந்து இரண்டு நாழிகையாயிருக்கும். இவனை மணம் செய்து கொண்டால் பெருங்கவலை தான் சதா. இன்றுடனாவது இவனுசையை யொழி "தக்கைசொன் மிக்க மந்திரமில்லை." (சாவித்திரி மௌனமாய் கண்ணீர் பெருக தக்கையின் பின் செல்கிறாள்.)

காட்சி முடிகிறது.